
ஜயம் தெளிதல்

3



தெளிவிப்பவர் :

ஸ்ரீ மத் சுவாமி சித்பவானந்த

ஐயம் தெளிதல்

(மூன்றாம் பகுதி)

प्रज्ञानं ब्रह्म

தெளிவிப்பவர்:
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை - 639 115
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
1998

தபோவனத் தொடர் 178

[illegible]

முதல் பதிப்பு 1998 3,000

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

விலை ரூ. 55-00

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

பொருளடக்கம்

☆ ☆
☆

40. சமுதாயச் சீர்திருத்தம்

கேள்வி: *(598)* சில நாட்களுக்கு முன்பு திருச்சியில் கூடிய மாதர் மாநாட்டில் விதவைகள் கூந்தலை வழித்தொழிக்கும் வழக்கம் கைவிடப்படவேண்டுமென்று தீர்மானம் இயற்றினர். ஆபரணங்களை அகற்றுவது, வெள்ளைப் புடவையை அணிவது, முடியை நீக்குவது முதலியன லௌகிக பாசத்தைக் கைவிட்டுச் சாதனை வாழ்க்கையை ஏற்பதின் சின்னங்களல்லவா? அவற்றை அநாகரிக அம்சங்களாகவா கருதுவது? இது இந்தியக் கலாச்சாரத்திற்கு முரணாகாதோ?

பதில்: சமுதாயத்திலுள்ள மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு புலனடக்கம் பழகுகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு அந்தச் சமுதாயம் மேலான நிலைக்கு வருகிறது. ஒரு நாட்டின் நாகரிகத்தை ஆடம்பரம் நிறைந்த பொருள்மிகப் படைத்திருக்கும் பெருமிதமான வாழ்விலிருந்து அறிந்துகொள்ள முயலுதல் லோகாயதர்களுடைய பாங்கு ஆகும். தெய்வீக இயல்பைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் நாகரிகம் எளிய வாழ்வையும், உயர்ந்த எண்ணத்தையும் அடிப்படையாகக் கொண்டது. அதற்குப் புலனடக்கம் முற்றிலும் அவசியமானது. பண்டொரு காலத்தில் ஒரு குடும்பத்திலுள்ள ஆண் மகவுகளுள் முதல் மகனே விவாகம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்கிற நியமனம் இருந்தது. மக்கட்பேறு ஒன்றை முன்னிட்டே ஒருவன் மணம் செய்துகொள்ள வேண்டும் என்னும் கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டது அது. மற்ற ஆண் மக்கள் பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டித்தே ஆகவேண்டும் என்னும் கோட்பாடு அதில் அடங்கியிருந்தது. இந்த லட்சியத்தினின்று இப்பொழுது நம் நாடு பல படிகள் கீழே இறங்கி வந்துவிட்டது. ஆண்

மக்கள் எல்லோரும் மணம்புரிந்து கொள்ளுதலில் முந்து கின்றனர். அவர்கள் பலதடவை மணம்புரிந்து கொள்கின்றனர். இது நம் நாட்டுப் பழைய பண்புக்கு முரண்பட்டது. ஆண்கள் அப்படி முந்துகின்றபொழுது பெண்களுக்கு மட்டும் கட்டு மானத்தைப் பலப்படுத்துதலில் பொருள் ஒன்றுமில்லை. விதவை ஒருத்தி தான் தூய எளிய வாழ்க்கை வாழ விரும்பு வாளாகில் அதற்கேற்ற கோலத்தைத் தானே வலிய எடுத்துக் கொள்வது உசிதம். மற்றவர்கள் பலவந்தமாக அதை அவள் மீது திணிப்பது கொடூரத்தன்மையாகும். வாழ்க்கைக்குரிய விதி ஆண் மகனுக்கு ஒருவிதமாகவும் பெண் மகளுக்கு இன்னொரு விதமாகவும் அமையவில்லை. நெறியான வாழ்க்கை என்றால் இருபாலார்க்கும் அது பொதுவானது. தன் பொறுப்பைப் பெண் ஒருத்தி உணர்ந்து தனக்கு உசிதமான வாழ்க்கை முறையைத் தானே நிர்வகித்துக்கொள்வாள். தன் மனநிலைக்கொப்பத் தனக்கேற்ற வாழ்க்கை முறையையும் அதற்கேற்ற புறச்சின்னத் தையும் அவள் தனக்குத்தானே அமைத்துக் கொள்வாள்.

கேள்வி: (599) **இந்தியாவில் முஸ்லீம்கள் கால்வைத்த நாளிலிருந்து ஹிந்து ஸ்திரீகளைக் கற்பழிப்பதும், மதம் மாற்றுவதும், கோயில்களை இடித்து மசூதி கட்டுவதும் சர்வ சகஜமாகிவிட்டது. யாராலும் வெல்ல முடியாத சிவாஜி, பிருதிவி முதலிய வீரர்களுடைய இராஜ்ஜிய நடவடிக்கை யிலும் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை. ஜகத்குரு ஆதிசங்கரர் அவர் காலத்திலெழுந்த மத எதிர்ப்புகளைத் தன் ஆத்ம சக்தியால் வென்றார். பின்னர் பாதுஷாவை ராமபக்தியால் ராமதாஸ் வென்றார். எனவே அட்டூழியத்தை வென்றுதான் ஆகவேண்டும். திருத்த முடியாது. இராமரால் இலங்கையை வெல்ல முடிந்ததே தவிர இராவணனைச் சன்மார்க்கனாக்க முடியவில்லையே? பின் ஏன் தற்போதைய மதத்தலைவர்களும் தெய்வ அருள் பெற்றவர்களும் தங்கள் சக்தியால் நவகாளி நிகழ்ச்சிகள் நிகழாமல் தடுக்கக்கூடாது? ஏன், ஆதிசங்கரர் காலத்தில் இருந்த தெய்வ சக்தியும் அருளும் இப்பொழுது மங்கிவிட்டதா?**

பதில்: சில பெரியோர்கள் தங்கள் ஆத்மசக்தியால் ஏதோ இரண்டொரு மனிதர்களைக் கொடூரத்தன்மையினின்று மாற்றியிருக்கிறார்கள். தவிர, ஜனசமூகம் முழுதையுமே மாற்றும் வல்லமை அவர்களுக்கு இல்லை. வாய்ப்பேச்சிலோ கைத்திறத்திலோ மதச்சண்டை உலகில் என்றென்றும் இருந்து வரும். மனிதனுடைய முன்னேற்றத்துக்கு அரசியல் சண்டைபோன்று மதச் சண்டையும் மறைமுகமாகத் துணைபுரிகிறது. இராமனுக்கு இராவணனைக் கொல்லமுடிந்தது. ஆனால் அவனுடைய மனதை மாற்ற முடியவில்லை. நாம் பெறவேண்டிய பாடம் முழுதும் அந்த ஒரு செயலில் அடங்கியிருக்கிறது. அவரவர் சக்திக்கு ஏற்பச் சமுதாயத்திலிருக்கும் எல்லோரும் தீமையை எதிர்த்துப் போராடக் கடமைப்பட்டிருக்கின்றனர். தெய்வமே பல அசுரர்களை அழித்ததாக ஐதிகம் உண்டு. ஆயினும் உலகினின்று அசுர இயல்பு அறவே அழிந்து போய்விடவில்லை. நல்லியல்புக்கும் கெட்ட இயல்புக்கும் இடையில் என்றென்றும் போராட்டம் இருக்கும். இப்போராட்டமே வாழ்வு என்னும் பெயர் பெறுகிறது.

41. ஹிந்து மதமும் அரசும்

கேள்வி: *(600)* **இப்பொழுது நம் நாட்டில் அமைந்துள்ள சமயப்பற்றில்லாத அரசாங்கம் (Secular Government) நம் தேசியப் பண்பாட்டுக்கு ஒத்ததா?**

பதில்: தேச சரித்திரத்துக்கும் தேசப் பண்பாட்டுக்கும் தொடர்புண்டு. வெறும் நிகழ்ச்சிகளை மட்டும் குறித்துவைப்பது சாமானியமான சரித்திரமாகும். தேசிய நிகழ்ச்சிகளுக்கு அடிப் படையாக உயர்ந்த நோக்கங்கள் இருக்குமானால் அது பாராட் டத்தக்க சரித்திரமாகும். இந்திய தேச சரித்திரத்தில் செயலற்ற இருள் சூழ்ந்த பகுதிகள் பல இருந்திருக்கின்றன. பெரு நிகழ்ச்சிகள் நிறைந்த பொற்காலங்கள் பல இருந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் தொகுத்து ஆராயுங்கால் உண்மை யொன்று வெளிப்படும். அதாவது இந்திய சரித்திரமும் இந்தியப் பண்பாடும் இணைபிரியாதவைகளாம். எப்பொழுதெல்லாம் சமய வாழ்க்கையில் சமுதாயம் முன்னேற்றமடைந்ததோ அப் பொழுதெல்லாம் அது ஏனைய துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. பழைய காலத்து இந்திய அரசாங்கங் களெல்லாம் சமயப்பற்று உடையவைகளாகவே அமைந்திருந்தன. நல்ல ஆட்சி முறைக்கு ராமராஜ்ஜியம் என்பது பொதுப் பெயர். கீழ்த்தரமான ஆட்சிமுறைக்கு அசுர அரசாங்கம் என்பதும் ராவண ராஜ்ஜியம் என்பதும் பொதுப்பெயர். ஆனால் ராவண ராஜ்ஜியத்திலும் சமயப்பற்று ஏராளமாக இருந்து வந்திருக் கிறது. சிறந்த சிவபக்தர்களில் ஒருவன் இராவணன். தொகுத்து உரைக்குமிடத்து இந்திய மக்கள் இயல்பாகவே சமயப்பற்று உடையவர்கள். சமயத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதி எதுவும் அவர்களுடைய ஜீவிதத்தில் இல்லை. ஆத்மிக வாழ்வே

அவர்களுக்கு ஜீவநாடி. அது அவர்களுடைய ரத்தத்தில் ஊறியுள்ளது. உப்பு தன் உவர்ப்பை இழந்துவிட்டால் அது உப்பு அல்லாது வேறு ஏதாவது பொருள் ஆய்விடும். அங்ஙனம் இந்தியர் அத்யாத்ம வாழ்வை விட்டுவிட்டால் அவர்கள் தங்கள் வியக்தியை இழந்துவிடுவார்கள். ஒரு சமூகம் தனது வியக்தியை இழந்துவிட்டால் அது அழிந்துபோனதிற்குச் சமானமாகும். அத்தகைய இந்தியர் இன்று அரசியல் சுதந்திரத்தைப் பெற்றிருக் கின்றனர். ஜனநாயக ஆட்சியையும் உண்டுபண்ணி இருக்கின்றனர். தங்களுக்குத் தாங்களே உண்டுபண்ணிக் கொண்ட ஜனநாயக ஆட்சியில் சமயப்பற்றின்மையை அவர்கள் எப்படிப் புகுத்தி னார்கள், ஏன் புகுத்தினார்கள் என்ற கேள்வி எழக்கூடும்.

சமயப்பற்றில்லாத அரசாங்கம் என்பதன் பொருள் சமயத்தில் நம்பிக்கை வைக்காத அரசாங்கம் என்பதல்ல. அரசாங்கத்துக்கு உரிய சமயம் (State Religion) என்பது ஒவ்வொரு நாட்டிலும் உண்டு. இந்திய ஜனநாயக அரசாங்கம் அப்படி எந்தச் சமயத்தையும் அரசாங்கத்துக்குரியதென்று எடுத்துக் கொள்ளவில்லை. அதற்குச் சில காரணங்கள் உண்டு. இந்தி யாவை இரண்டு நாடுகளாகப் பிரித்துப் பாகிஸ்தான், ஹிந்துஸ் தான் என்று அமைத்து வைத்துப்போன ஆங்கிலேயர் தாங்கள் இல்லாவிட்டால் இருதரத்தாரும் மதத்தின் பெயரால் சண்டை செய்துகொள்வார்கள் என்று உலகுக்குப் புகட்டி வந்திருக்கின் றனர். அவர்கள் புகட்டியது உண்மையல்லவென்று உலகுக்கு எடுத்துக்காட்டுவது இந்தியாவின் முதற்கடமையாகும். மத விஷயத்தில் நடுநாயகமாக நின்று ஆட்சிபுரிய இந்தியர்களுக்கு இயலும் என்று உலக மக்களுக்கு எடுத்துக்காட்டுவது இந்தியாவின் சிறந்த செயலாம். சர்வதேச மகாசபையில் அத்தகைய நடுநிலைக்குத் தனிமதிப்பு ஒன்று ஏற்படும். பாகிஸ்தானோ மதப்பற்றுடைய ஆட்சிமுறையைக் கையாண்டு வருகிறது. முஸ்லிம் அல்லாதாரிடத்துத் தாராள சிந்தனை உடையவர்களாக இருக்கமுடியாது என்பதை அவர்கள் தங்கள் செயலில் காட்டி வருகிறார்கள். இந்திய அரசாங்கமோ எல்லாச் சமயத்தவரிடத்தும் ஒரே பாங்குடையது என்பதை நிரூபித்து வருகிறது. அதனால் உலக மக்களது முன்னிலையில் இந்தியாவானது உயர்ந்ததொரு ஸ்தானம் பெற்றுவருகிறது. இந்தியாவில் வசித்து வரும்

முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகர்கள், யூதர்கள் ஆகிய மற்ற மதஸ்தர்கள் மனதில் இந்த ஏற்பாடானது நம்பிக்கையையும் ஆதரவையும் ஊட்டி வருகிறது. எல்லாச் சமயத்தவர்களுடைய சம்மதத்தையும் ஒற்றுமையையும் பெறுதற்கு நிகரான சமயக் கோட்பாடு எங்குமில்லை எனலாம். அத்தகைய பாங்கை இந்தியாவானது இப்பொழுது தனது பரந்த செயலின் மூலம் பெற்றுள்ளது. சமயத்தை ஆட்சி முறையுடன் இணைத்து வைக்காததே அதற்குக் காரணமாகும்.

ஆட்சிமுறையை அதன் போக்கில் விட்டுவிட்டு இந்திய மக்களாகிய நாம் சமய வாழ்க்கையை உறுதிப்படுத்துவதை நம் சொந்த அலுவலாக எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறோம். பிறர்க்கு இடுக்கண் செய்யாது மதத்தை வளர்ப்பதற்கு நம் அரசாங்கம் என்றைக்கும் ஆதரவு கொடுக்கும். ஆக, சமயத்தை உறுதிப்படுத்துவது மக்களாகிய நமது கடமையாகும். ஆட்சியை நடுநாயகமாகக் கொண்டு செலுத்துதல் அரசாங்கத்தின் கடமையாகும்.

கேள்வி: *(601)* நம்முடைய அரசாங்கம் மதச்சார்பற்ற அரசாங்கம் என்று சொல்லப்படுகிறது. இது நடைமுறைக்குச் சாத்தியமா?

பதில்: நமது அரசாங்கம் மதச்சார்பற்றது என்பதனுடைய பொருள் மதத்தில் நம்பிக்கை இல்லாதது என்பதல்ல. இந்தியாவில் பல மதங்கள் இருக்கின்றன. இவைகளுள் அரசாங்கத்துக்குரிய மதம் இன்னதென்று தனியாக ஒன்றைப் பொறுக்கி எடுத்துக்கொள்ள நமது அரசாங்கம் ஆயத்தமாய் இல்லை. ஒன்றைப் பொறுக்கி எடுத்துக்கொள்வது ஓரம் சார்வதற்கு ஒப்பாகும். மத விஷயத்தில் நடுநிலை வகிப்பதே நம் அரசாங்கத்தின் கொள்கையாகும். இப்பொழுது நம் சமுதாயத்தில் உள்ள மத வேற்றுமைகளை ஒழுங்குபடுத்துதற்கு இக்கொள்கை நாளடைவில் பெரிதும் துணைபுரியும். ★

42. ஹிந்து மதமும் பிற மதங்களும்

கேள்வி: *(602)* சில சமயவாதிகள் தாங்கள் வழிபடும் தெய்வம்தான் எல்லாம் வல்ல கடவுள் என்றும் அவரை வணங்கினால்தான் உயிர்கள் ரக்ஷிக்கப்படுவார்கள் என்றும் சொல்லுகிறார்கள்; ஏனைய தெய்வங்களை வணங்குவது பாபம் என்றும் பகர்கிறார்கள். பொய்யான தெய்வங்களைப் போற்றும் பாபிகளை ரக்ஷிப்பதற்காகவே ஓயாது பாடுபட்டு வருவதாகத் தங்களைப்பற்றி அவர்கள் பகர்ந்துகொள் கிறார்கள். அவர்களது போதனையை நாம் பின்பற்றுவதா அல்லது புறக்கணிப்பதா?

பதில்: மெய்யான தெய்வம், பொய்யான தெய்வம் - இப்படித் தெய்வத்தைப் பற்றிய பலப்பல கருத்துக்கள் கொண் டிருப்பது அக்ஞானத்தின் விளைவு. பல தெய்வங்கள் இருக் கின்றன என்று எண்ணுபவர்களெல்லாம் இன்னும் விவேகத்தைப் பெறாதவர்களேயாம். அண்டகோடிகளனைத்துக்கும் மூலப் பொரு ளாயிருக்கும் தெய்வம் ஒருவரே. அவரைச் சமயங்கள் கணக்கற்ற பெயர்களிட்டு அழைக்கின்றன. பெயர் வேற்றுமையை முன்னிட்டுப் பொருள்கள் பல இருக்கின்றன என்று நாம் ஏமாற்றம் அடையலாகாது. தாகசாந்தி செய்யும் பொருள் ஒன்று. அதற்கு நீர் என்றும், ஜலம் என்றும், பாணி என்றும், வாட்டர் என்றும் பெயர்கள் பல. அங்ஙனம் கடவுள் ஒருவர். அவருக்கு எண்ணிறந்த பெயர்கள் இருக்கின்றன. எப்பெயரிட்டு அழைத்தாலும் பரமனுக்கு அது சம்மதம். ஆனால் அப்பரம் பொருளை மனிதன் எப்படி வழுத்தக் கற்றுக்கொண்டிருக்கின் றான் என்னும் கேள்விதான் முக்கியமானது. மனிதன் செய்கிற பிரார்த்தனைக்கு ஏற்றவாறு அவன் முன்னேற்றமடைகிறான்.

"என் உயிருக்கு உயிராயிருக்கும் பேருயிரே, உன்னை அடைதற் பொருட்டு நான் பெருவாழ்வு வாழ்வேனாக" என்று ஒருவன் பிரார்த்திப்பானாகில் அது நல்ல பிரார்த்தனை. அதன் மூலம் அவன் முன்னேற்றமடைகிறான். "அன்புத் தெய்வமே, உயிர்கள் அனைத்திடத்தும் நான் அன்புவைக்கக் கற்றுக்கொள்வேனாக" என்று வணங்குவதும் நல்ல பிரார்த்தனை.

கருணாகரனாகிய கடவுள் மக்கள் உய்தற்பொருட்டுக் கணக்கற்ற சமயங்களைச் சான்றோர் மூலம் உலகில் நிறுவி உள்ளார். அவைகளுள் எந்தச் சமயத்தை அனுஷ்டித்தாலும் அதன் மூலம் மனிதன் மேன்மையடையலாம். விதவிதமான உணவு வகைகள் உடல் திட்பம் பெறுவதற்கு உதவுவது போன்று விதவிதமான சமயங்கள் மனிதன் மேன்மையுறுதற்கு உதவுகின்றன. இதை மறுக்கிற மனிதன் கடவுளின் பெருந் திட்டத்தை மறுக்கிறான். சமயத்தின் பெயரால் அவன் வியாபாரம் செய்கிறான். அத்தகைய மனிதனுடைய பிரசாரத்தைப்பற்றி மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உலகத்தை உய்விப்பது தங்கள் பொறுப்பு என்று எண்ணி வருபவர்கள் சுயநலத்திலும், ஆணவ அகங்காரத்திலும் ஊறியவர்களாவார்கள். ஆனால் நல்ல பக்தனோ எத்தனை எத்தனையோ முறைகளில் உயிர்கள் இறைவனைப் போற்றி வருகின்றன என்று சமரசம்பூண்டு இறைவனிடத்தும் எல்லா உயிர்களிடத்தும் அன்பே வடிவெடுத் திருக்கிறான்.

கேள்வி: *(603)* உயிர்களையெல்லாம் கடவுள் மனிதனுடைய நன்மைக்காகப் படைத்திருக்கிறார் என்றும் மனிதனைக் கடவுளுடைய வழிபாட்டுக்காகப் படைத் திருக்கிறார் என்றும் சில சமயவாதிகள் சொல்லுகின்றனர். இக்கொள்கை எல்லாச் சமயங்களுக்கும் ஒப்ப முடிந்ததா? ஹிந்து மதமும் இக்கொள்கையை ஆதரிக்கிறதா?

பதில்: உலகனைத்தையும் கடவுள் படைத்திருக்கிறார் என்னும் கொள்கை எல்லாச் சமயங்களுக்கும் ஒப்ப முடிந்ததே. ஆனால் எதற்காக உயிர்களைப் படைத்தார்? படைக்கப் பட்டுள்ள உயிர்களுக்கும் படைத்த கடவுளுக்கும் உள்ள இணக்கம் யாது? என்னும் கேள்வியில் மக்களுக்கிடையில்

கருத்து வேற்றுமை உண்டு. உயிர்களையெல்லாம் மனிதனுடைய சுகபோகத்துக்காகவென்று கடவுள் படைத்திருக்கின்றார் என்ற கொள்கை ஆசியாக்கண்டத்தின் மேற்குப் பகுதியில் தோன்றி யுள்ள (Semitic religions) சமயங்களுக்கிடையில் உண்டு. இந்தியா விலும் ஆசியாக்கண்டத்தின் கிழக்குப் பகுதியாகிய சீனாவிலும் தோன்றியுள்ள மதங்களுக்கிடையில் இக்கொள்கைக்கு ஆதர வில்லை. மனிதனுக்காகவென்று மற்ற உயிர்களையெல்லாம் கடவுள் படைத்திருக்கிறார் என்று மனிதன் பகர்கிறான். அவனுடைய சுயநலத்தினின்று இத்தகைய எண்ணம் அவனுக்கு வருகிறது. ஆனால் இந்த எண்ணத்திலும் அவன் பொருத்தமான நம்பிக்கை வைத்திருப்பதில்லை. பிளேக் நோய் போன்ற கொடிய நோய்களை உண்டுபண்ணும் கிருமிகளை மனித னுடைய நலத்துக்காகவா கடவுள் படைத்திருக்கிறார் என்னும் கேள்வியைக் கேட்டால் அவன் அதற்குத் தக்க விடை பகர்ந்தாக வேண்டும். அப்படிப் பகர அவனுக்கு இயலாது. புலி ஒன்றுக்குப் பேசும் வல்லமை வந்துவிடுமாயின் அது தனக்கு ஏற்றவாறு கடவுளின் சிருஷ்டியைப் பற்றிப் பேச ஆரம்பித்துவிடும். மனிதனையும் மற்ற ஜீவ ஜந்துக்களையும் தனக்கு உணவாதல் பொருட்டே கருணைகூர்ந்து கடவுள் சிருஷ்டித்திருக்கிறார் என்று புலி சொல்லும். ஆனால் இந்தப் பொல்லாத மனிதன் கடவு ளுடைய திட்டத்துக்கு மாறாகப் புலியையே கொல்ல ஆரம்பித்து விடுகிறான் என்றும் அது பகரும். ஆக, மனிதனுக்காகவென்று மற்ற உயிர்களைக் கடவுள் படைத்திருக்கிறார் என்னும் கொள்கை யுத்திக்கோ இயற்கையின் நடைமுறைக்கோ சிறிதேனும் ஒவ்வாது.

கேள்வி: *(604)* முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் செய்து வருவதுபோன்று ஹிந்துக்கள் ஒரே தெய்வத்தை நம்புவதும் வழிபடுவதும் நலம் தரும் அல்லவா?

பதில்: முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் கடவுள் தத்து வத்தை உள்ளபடி அறிந்து கொண்டவர்கள் அல்லர். அந்தந்த மதத்துக்குத் தனித் தெய்வங்கள் உண்டு என்று அந்த இரண்டு கூட்டத்தாரும் நம்பி வருகிறார்கள். அல்லா என்னும் தெய்வம் அலாதியாக முஸ்லீம்களுக்கு உரிய தெய்வம் என்றும், ஏசுநாதர் கிறிஸ்தவர்கள் வழிபடும் தெய்வம் என்றும் அவர்கள்

நம்புகிறார்கள். முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் பல நூற்றாண்டுகளாக மதத்தின் பெயரால் சண்டை போட்டவர்கள். அவர்களது நம்பிக்கைப் பிரகாரம் அவரவர் தெய்வம் அவரவர்க்கு மட்டும் அருள்புரிகிறது. இந்த நம்பிக்கையில் பிழை இருக்கிறது. மதவெறியை இது உண்டுபண்ணுகிறது.

ஹிந்துமதப் பிரகாரம் பரம்பொருள் ஒன்றே பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமாய் இலங்குகின்றது. உலகெங்குமுள்ள நீர் ஒன்று; அந்த ஒரே நீர் கடல் நீர், மழை நீர், ஓடை நீர், கிணற்று நீர், ஆற்று நீர் இப்படியாக வடிவெடுத்திருக்கிறது. விதை ஒன்று; அது முளைத்து வளர்ந்து வந்தான பிறகு அடிமரம் வேறு, கிளைகள் வேறு, இலைகள் வேறு, பூக்கள் வேறு, கனிகள் வேறு. இவையாவும் ஒரே போக்கில் பயன் படுபவைகள் ஆகமாட்டா.

பிறமதஸ்தர்கள் கொள்கைப்படி நல்லவைகளை உண்டு பண்ணியவர் கடவுள். கெட்டவைகளை உண்டுபண்ணியவன் சைத்தான். கடவுளுக்கும் சைத்தானுக்கும் எப்பொழுதும் சண்டை இந்தக் கோட்பாட்டை ஹிந்து மதம் ஏற்றுக்கொள்வதில்லை. ஆதிபகவன் ஒருவரே உலகிலுள்ள நலங்கேடு அனைத்துமாக வடிவெடுத்திருக்கிறார். ஒரு சூழ்நிலையில் ஒருவனுக்குக் கேடாயிருப்பது மற்றொரு சூழ்நிலையில் இன்னொருவனுக்கு நலனாக அமைகிறது. இது ஹிந்துமதக் கோட்பாடு. மற்ற மதஸ்தர்கள் சைத்தான் என்று சொல்லுவதை அக்ஞானம் அல்லது அறியாமை என ஹிந்துமதம் பொருள்படுத்துகிறது. ஒரே நீர்ஆவியாகவும், பாய்ந்தோடும் நீராகவும், உறைபனிக் கட்டியாகவும், மூடுபனியாகவும், மஞ்சு ஆகவும், ஆலங்கட்டியாகவும் இன்னும் என்னென்னவோ வடிவெடுத்து இருக்கிறது. ஒரு நிலையில் இருக்கும் அந்த வஸ்து ஒரு காரியத்துக்குப் பயன்படுவதுபோன்று மற்றொரு காரியத்துக்குப் பயன்படாது. அதேவிதத்தில் அனந்தங்கோடி உயிர்வகைகளாகக் கடவுள் பரிணமித்திருக்கிறார். பசுவாக வடிவெடுத்திருப்பதும் கடவுள். பாம்பாக வடிவெடுத்திருப்பதும் கடவுள். இது ஹிந்துமதக் கோட்பாடு. இந்தத் தத்துவம் புற மதஸ்தர்களுக்குத் தெரியாது.

ஒரே பரம்பொருள் எண்ணிறந்த மகிமைகளோடு இலங்கிக்கொண்டிருக்கிறார். அப்பெரிய பொருளைச் சூரிய

நாராயணனாகவோ, அக்னி தேவதையாகவோ, வாயு தேவதை யாகவோ, மழையை வாரிக்கொட்டும் வருணனாகவோ வைத்து வழிபடுவதில் தோஷமில்லை. அதே தெய்வத்தை ஆணாகவும், பெண்ணாகவும் வைத்து வணங்குவது ஹிந்துமத சம்பிரதாயம். இந்த இரண்டு பால்களைக் கடந்த நிலையிலும் பெரிய பொருள் இருக்கிறது.

நோய்களனைத்துக்கும் ஒரே ஒரு மருந்து உதவாது. நோய்க்கேற்ற பல மருந்துகள் இருக்கின்றன. அரசாங்கத்தில் இலாகாக்கள் பல இருக்கின்றன. ஓர் இலாகா ஒரு துறையில் உதவுவது போன்று மற்றோர் இலாகா இன்னொரு துறையில் உதவுகிறது. கடவுள் தத்துவமும் அத்தகையதே. பரம்பொருள் ஒன்று; அதன் சொரூபங்கள் எண்ணிக்கையில் அடங்காத வைகள். ஆற்றல் தெய்வம், அன்பு தெய்வம், அறிவுத் தெய்வம்— இங்ஙனம் மெய்ப்பொருளின் விபூதிகள் அல்லது மகிமைகள் பல இருக்கின்றன. முக்தியை நாடுகின்றவன் மூலப்பொருளை வணங்குகிறான். உலக சம்பத்தைத் தேடுகிறவர்கள் அவரவர் தேடுதலுக்கேற்ற தெய்வத்தை வணங்குவதே முறையாகும். நோயாளி டாக்டரிடம் போகவேண்டும். வழக்குத் தொடுப்பவன் வக்கீலிடம் போகவேண்டும். கட்டடம் கட்டுபவன் என்ஜினியரிடம் போகவேண்டும். கல்வி கற்பவன் ஆசிரியரிடம் போகவேண்டும். ஒரு தெய்வம் எண்ணிறைந்த மகிமைகளோடு இலங்குவதால் ஒவ்வொரு மகிமையும் தெய்வத்தின் ஒரு தனிச்சொரூபம் எனக்கருதுவது முறை. இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே ஒரே பரவஸ்து எண்ணிக்கையில் அடங்காத தேவர்களாக வடிவெடுத்து உலகுக்குப் பயன்பட்டு வருகிறது என்பது ஹிந்துமதக் கொள்கை. இதுவே யுக்திக்கும் பொருந் தியது. ஆன்றோர்கள் பலர் இயற்றியது இந்த ஹிந்துமதம். வாழ்க்கைக்கு இதுவே ஒத்தது. மற்ற மதங்களைச் சேர்ந்த அறிஞர்களும் ஹிந்துமதம் ஒன்றே தத்துவத்தை அடிப்படை யாகக் கொண்டது என அறிய வருகின்றனர். அதற்கு ஒத்தபடி தங்களுடைய வழிபாட்டு முறைகளையும் அவர்கள் மாற்றி யமைத்து வருகின்றனர்.

ஆதலால் உலகுக்கு முன்மாதிரியாயிருப்பது ஹிந்துமதம் ஒன்றே. அரைகுறைக் கோட்பாடுகளைக் கொண்டுள்ள மற்ற

மதங்களிடத்திருந்து ஹிந்துக்களாகிய நாம் அறிந்துகொள்ள வேண்டியதோ, பின்பற்ற வேண்டியதோ ஏதுமில்லை. சென்ற நூற்றாண்டிலே அமெரிக்காவில் நிகழ்ந்த சர்வமத மகாசபையில் சுவாமி விவேகானந்தர் புகட்டிய ஹிந்துமதமே மதங்கள் அனைத்துக்கும் தாய்மதமாகிறது என்னும் முடிவுக்கு அந்த மகாசபை வந்தது.

கேள்வி: *(605)* கிறிஸ்தவர்கள் ஏசுநாதரையும் முஸ்லீம்கள் அல்லாவையும் தெய்வமாக வழிபடுகிறார்கள். ஆனால் இந்துக்கள் ஈஸ்வரர், முருகக்கடவுள், விநாயகர், நடராஜர், வெங்கடாசலபதி மற்றும் பல பெயர்கள் உள்ள தெய்வங்களை (ஒரு தெய்வம் இல்லாமல் பல தெய்வங் களை) வழிபடுவது பற்றி மற்ற மதத்தினர் ஹிந்துக்களை ஏளனம் செய்கிறார்கள். இதற்குப் பதில் என்ன சொல்வது?

பதில்: "ஓர் நாமமும் ஓர் ஊரும் இல்லானுக்கு ஆயிரம் திருநாமம் சொல்லித் தெள்ளேணங்கொட்டாமோ" என்பது ஆன்றோர் வாக்கு. உண்மையில் பல தெய்வங்கள் இல்லை. உள்ளது ஒரே ஒரு தெய்வம். அந்த ஒரு தெய்வத்துக்கு ஹிந்து மதத்தில் கணக்கற்ற பெயர்கள் இருக்கின்றன. மற்ற மதங்களில் அத்தனை பெயர்களில்லை. ஆதலால் அவர்கள் ஒரு தெய் வத்தை வணங்குபவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஹிந்துக்கள் பல தெய்வங்களை வணங்குகின்றவர்கள் என்று குற்றம் சாட்டப் பெறுகிறார்கள். எல்லார்க்கும் பொதுவாக ஒரு தெய்வம்தான் இருக்கிறது என்று நம்புகின்றவர்களே உண்மையில் ஒரு தெய்வத்தை வணங்குகிறார்கள். ஒவ்வொரு மதத்துக்கும் தனித் தனித் தெய்வங்கள் இருக்கின்றன என்று கருதுகிறவர்கள் பல தெய்வங்களில் நம்பிக்கை வைக்கிறவர்கள் ஆகிறார்கள். இக்கோட் பாட்டின்படி ஹிந்துக்கள்தான் உண்மையில் ஓர் தெய்வத்தை வணங்குபவர் ஆகின்றார்கள். மற்ற மதஸ்தர்கள் பல தெய்வங்கள் இருப்பதாக நம்பிக் கடவுள் தத்துவத்தை அறியாதவர்கள் ஆகிறார்கள்.

கேள்வி: *(606)* ஹிந்து மதத்தை அழிக்க நம் நாட்டி னுள்ளே வந்துள்ள இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம்

ஆகிய இரண்டும் தீவிரமாகத் தங்கள் கொள்கையைப் பரப்பி வருகின்றன. இதன் விளைவு என்ன ஆகும்?

பதில்: இது இக்காலத்திய சரித்திர பூர்வமான நிகழ்ச்சியாக இருந்து வருகிறது. இதைக்குறித்து விவேகானந்த் சுவாமிகள் அமெரிக்காவிலே சர்வமத மகாசபையிலே விடை கொடுத்திருக் கின்றார். அவர் பகர்ந்ததாவது: "ஹிந்துமதம் உலகிலுள்ள ஏனைய மதங்கள் அனைத்துக்கும் தாய் மதமாக இலங்கி வருகிறது. இதைத் தாக்குதற்கு இயக்கங்கள் பல இடையிடையே தோன்றி வருகின்றன. அப்படி வந்த இயக்கங்கள் அனைத்தும் கடற்கரையை விழுங்குதற்குக் கடலினின்று தோன்றி வருகிற பெரிய அலைகள் போன்றிருந்தன. மோதிய அலைகள் பின் வாங்கிய பிறகு, சமுத்திரக்கரை அசையாதிருந்து பயன்படுவது போன்று ஹிந்துமதமும் சாஸ்வதமாயிருந்து வருகிறது. உண்மையை யாரும் அழிக்க முடியாது. பொய்யை நிரந்தரமாக நிலைநாட்டவும் முடியாது. இதுவே சனாதன தர்மத்தின் கோட்பாடாம். புதிதாக வந்து தாக்குகின்ற இஸ்லாமிய மதத்திலும் கிறிஸ்தவ மதத்திலும் உள்ள நலன்தரும் கோட்பாடுகளை ஹிந்துமதம் தனக்குரியதாக எடுத்துக்கொள்ளும். தத்துவத்தோடு முரண்படுகின்ற பொருந்தாத கோட்பாடுகளையெல்லாம் அது ஒதுக்கித் தள்ளிவிடும். ஹிந்து மதம் யாண்டும் உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் தாய்மதமாகவே இலங்கி வரும்.

கேள்வி: *(607)* கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளாமல் தங்கள் எண்ணிக்கையைப் பெருக்குகின்றனர். ஹிந்துக்களுக்கு மட்டும் குடும்பக்கட்டுப்பாடு அவசியமா?

பதில்: இன்று உலகெங்கும் மக்கள்தொகை பெருகிவரு கின்றது. அதைக் கட்டுப்படுத்துவது அவசியம். அதில் சிலருக்குக் குடும்பக்கட்டுப்பாடு செய்யவேண்டும் என்றும், இன்னும் சிலருக்குக் குடும்பக்கட்டுப்பாடு செய்யவேண்டியதில்லை என்றும் சட்டம் விதிப்பது பொருந்தாது. மக்களுக்குரிய சட்டம் என்றால் அது அனைத்து மக்களுக்கும் பொதுவாக இருக்கவேண்டும். ஹிந்துக்களுக்கு மட்டும் குடும்பக்கட்டுப்பாடு விதி உண்டு என்பதும், முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இல்லை

என்பதும் மதத்தில் பிரிவினைச் சக்தியை உண்டாக்குதற்குத் துணைபுரிகிறது. மதச்சார்பற்ற அரசாங்கம் என்று சொல்லிக் கொண்டு மதப் பிரிவினையை உண்டாக்கும் செயலில் இறங்கக் கூடாது. குடும்பக்கட்டுப்பாடு என்றால் எல்லா மதத்தினருக்கும் அது பொது விதியாகத்தான் இருக்கவேண்டும்.

இன்றைக்குக் குடும்பக்கட்டுப்பாட்டின் மூலம் கர்ப்பத் தடை செய்து மக்கள் தொகையைக் குறைக்க முயல்கின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மனிதனை மேலோனாக்குதற்குச் சிறிதும் பயன்படுவதில்லை. மனிதனுடைய விலங்குத்தன்மைக்கு வேண்டியவாறு அது அனுமதிக்கிறது. ஆகவே அந்தத் திட்டம் மனித சமுதாயத்தை உயர்த்துவதற்கு அமைந்த திட்டமன்று. மக்கள் தொகையைக் குறைக்க அமைந்த திட்டமாகும்.

பண்டைக்காலத்தில் மக்கள் மனதை உயர்நிலையில் செலுத்தி வந்தார்கள். அவர்களுடைய உள்ளத்தில் காமநுகர்ச்சி தலையெடுக்காமல் இருந்தது. ஆக்வே அப்பொழுது புத்திரனைப் பெறாதவர்கள் புத் என்னும் நரகத்துக்குச் செல்வார்கள் என்னும் விதி ஏற்பட்டது. அப்பொழுதாவது அவர்கள் மனதைச் சற்று கீழ்நிலைக்குக் கொண்டுவந்து சந்தான விருத்தி செய்வார்கள் என்று அந்த விதியை ஏற்படுத்தினார்கள்.

இன்றைக்கு மக்களுடைய உள்ளத்தில் காமநுகர்ச்சி தலை விரித்தாடுகிறது. சூழ்நிலையோ எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போன்று மக்களுடைய உள்ளத்திலுள்ள காமவெறியை வளர்ப்பதற்கே துணைபுரிந்து வருகிறது. பத்திரிகையில் வரும் செய்தியும், திரைப்படக் காட்சியும், மக்கள் சுகபோக வாழ்க்கையும் காமவெறியைத் தூண்டுவதற்கு வேண்டியவாறு துணைபுரிகின்றன. இதைப்பற்றி அரசாங்கம் சிறிதும் கவலைப்படுவதில்லை. அரசாங்கத்துக்கு வேண்டுவது மக்களுடைய ஓட்டும் பணமும்தான். “மாப்பிள்ளை செத்தால் என்ன, மணப்பெண் செத்தால் என்ன, எனக்கு வேண்டுவது மாலைப் பணம்” என்று கூறுவது போன்று மக்கள் எக்கேடு கெட்டுப்போனால் என்ன? எங்களுக்கு வேண்டுவது மக்கள் ஓட்டும் வரிப்பணமும்தான் என்ற நிலையில் இருக்கிறது இன்றைய அரசாங்கம். இதனால் அநீதியும், அக்கிரமமும், லஞ்ச ஊழலும் பெருகி மக்கள் மனம் மலினப்பட்டுக்கொண்டே

இருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டின் மூலம் மக்கள் தொகையைக் குறைப்பதனால் நல்ல சமுதாயம் உருவாகிவிடப் போவதில்லை. மக்கள் என்றைக்குப் பண்பட்ட மக்களாக மாறி அமைகிறார்களோ அன்றைக்குத்தான் சமுதாயம் சீரிய சமுதாயமாக மாறி அமையும். அப்பொழுது கருத்தடை மூலம் குடும்பக்கட்டுப்பாடு செய்வது அவசியமிராது. இனவிருத்தி செய்வதில் மக்கள் நாட்டம் கொள்ளாது, அவர்களுடைய சக்தியையெல்லாம் நற்பணி செய்வதிலும், பக்தி பண்ணுவதிலும், ஞானத்தைப் பெறுவதிலும் செலவழித்து வருவார்கள். மானுட உள்ளம் அத்தகைய உயர்நிலைக்கு மாறி அமையவேண்டுமென்று நாம் பிரார்த்தனை செய்வோம்.

கேள்வி: *(608)* இஸ்லாமிய மதங்களிலும் கிறிஸ்துவ மதங்களிலும், புத்த மதங்களிலும் பகவானிடத்தில் பக்தியைச் செலுத்தும்பொழுது மக்கள் அமைதியாகவும், முறையாகவும், தியானம் செய்து வருகின்றார்கள். ஆனால் ஹிந்துமதத்தில் பகவானுக்கு ஆராதனைக்குப் பாற்குடம் கொண்டு வரும்பொழுது, ஆட்டமும், ஆவேசமும் உடையவர்களாய்க் கண்களில் நீர் பெருக்குகின்றனர். இது எவ்விதம் ஏற்படுகிறது? ஏன், மற்ற மதத்தினர்களுக்கு ஏற்படுவதில்லை? அவர்களும் பக்தி முறையைத்தானே கையாளுகிறார்கள்!

பதில்: உலகிலுள்ள வெவ்வேறு மதங்கள் மனிதனுக்கு வெவ்வேறு ஐதிகங்களையும், பழக்கவழக்கங்களையும் கொடுத்து வருகின்றன. பலர் ஒன்றுகூடி அமைதியாய் இருந்து வணங்குவது இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும் பெற்றுவருகிற பயிற்சியாகும். பயிற்சியைத்தான் விதவிதமான வழிபாடு முறைகளுக்குக் காரணம் என்று சொல்ல வேண்டும். புத்தமதம் என்று சொல்லப்படுவது ஹிந்துமதத்தில் உள்ள யோகசாதனத்துக்கு ஒப்பானது. புத்தமதத்திலும் பெரும்பாலும் கூட்டுவழிபாடும் தனிவழிபாடும் அமைதியாக நிகழ்ந்து விடுகின்றன. பௌத்தர்கள் புத்தர் பெம்மானைப் பகவான் என்று சொல்லுவார்கள். அதற்குமேல் கடவுள் ஒருவரைப் பற்றித் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்பது அவர்களுடைய கோட்பாடு. ஆனால் சிறந்த வழிபாடு

என்பதும் மதத்தில் பிரிவினைச் சக்தியை உண்டாக்குதற்குத் துணைபுரிகிறது. மதச்சார்பற்ற அரசாங்கம் என்று சொல்லிக் கொண்டு மதப் பிரிவினையை உண்டாக்கும் செயலில் இறங்கக் கூடாது. குடும்பக்கட்டுப்பாடு என்றால் எல்லா மதத்தினருக்கும் அது பொது விதியாகத்தான் இருக்கவேண்டும்.

இன்றைக்குக் குடும்பக்கட்டுப்பாட்டின் மூலம் கர்ப்பத் தடை செய்து மக்கள் தொகையைக் குறைக்க முயல்கின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மனிதனை மேலோனாக்குதற்குச் சிறிதும் பயன்படுவதில்லை. மனிதனுடைய விலங்குத்தன்மைக்கு வேண்டியவாறு அது அனுமதிக்கிறது. ஆகவே அந்தத் திட்டம் மனித சமுதாயத்தை உயர்த்துவதற்கு அமைந்த திட்டமன்று. மக்கள் தொகையைக் குறைக்க அமைந்த திட்டமாகும்.

பண்டைக்காலத்தில் மக்கள் மனதை உயர்நிலையில் செலுத்தி வந்தார்கள். அவர்களுடைய உள்ளத்தில் காமநுகர்ச்சி தலையெடுக்காமல் இருந்தது. ஆகவே அப்பொழுது புத்திரனைப் பெறாதவர்கள் புத் என்னும் நரகத்துக்குச் செல்வார்கள் என்னும் விதி ஏற்பட்டது. அப்பொழுதாவது அவர்கள் மனதைச் சற்று கீழ்நிலைக்குக் கொண்டுவந்து சந்தான விருத்தி செய்வார்கள் என்று அந்த விதியை ஏற்படுத்தினார்கள்.

இன்றைக்கு மக்களுடைய உள்ளத்தில் காமநுகர்ச்சி தலை விரித்தாடுகிறது. சூழ்நிலையோ எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போன்று மக்களுடைய உள்ளத்திலுள்ள காமவெறியை வளர்ப்பதற்கே துணைபுரிந்து வருகிறது. பத்திரிகையில் வரும் செய்தியும், திரைப்படக் காட்சியும், மக்கள் சுகபோக வாழ்க்கையும் காமவெறியைத் தூண்டுவதற்கு வேண்டியவாறு துணைபுரிகின்றன. இதைப்பற்றி அரசாங்கம் சிறிதும் கவலைப்படுவதில்லை. அரசாங்கத்துக்கு வேண்டுவது மக்களுடைய ஓட்டும் பணமும்தான். "மாப்பிள்ளை செத்தால் என்ன, மணப்பெண் செத்தால் என்ன, எனக்கு வேண்டுவது மாலைப் பணம்" என்று கூறுவது போன்று மக்கள் எக்கேடு கெட்டுப்போனால் என்ன? எங்களுக்கு வேண்டுவது மக்கள் ஓட்டும் வரிப்பணமும்தான் என்ற நிலையில் இருக்கிறது இன்றைய அரசாங்கம். இதனால் அநீதியும், அக்கிரமமும், லஞ்ச ஊழலும் பெருகி மக்கள் மனம் மலினப்பட்டுக்கொண்டே

இருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டின் மூலம் மக்கள் தொகையைக் குறைப்பதனால் நல்ல சமுதாயம் உருவாகிவிடப் போவதில்லை. மக்கள் என்றைக்குப் பண்பட்ட மக்களாக மாறி அமைகிறார்களோ அன்றைக்குத்தான் சமுதாயம் சீரிய சமுதாயமாக மாறி அமையும். அப்பொழுது கருத்தடை மூலம் குடும்பக்கட்டுப்பாடு செய்வது அவசியமிராது. இனவிருத்தி செய்வதில் மக்கள் நாட்டம் கொள்ளாது, அவர்களுடைய சக்தியையெல்லாம் நற்பணி செய்வதிலும், பக்தி பண்ணுவதிலும், ஞானத்தைப் பெறுவதிலும் செலவழித்து வருவார்கள். மானுட உள்ளம் அத்தகைய உயர்நிலைக்கு மாறி அமையவேண்டுமென்று நாம் பிரார்த்தனை செய்வோம்.

கேள்வி: *(608)* இஸ்லாமிய மதங்களிலும் கிறிஸ்துவ மதங்களிலும், புத்த மதங்களிலும் பகவானிடத்தில் பக்தியைச் செலுத்தும்பொழுது மக்கள் அமைதியாகவும், முறையாகவும், தியானம் செய்து வருகின்றார்கள். ஆனால் ஹிந்துமதத்தில் பகவானுக்கு ஆராதனைக்குப் பாற்குடம் கொண்டு வரும்பொழுது, ஆட்டமும், ஆவேசமும் உடையவர்களாய்க் கண்களில் நீர் பெருக்குகின்றனர். இது எவ்விதம் ஏற்படுகிறது? ஏன், மற்ற மதத்தினர்களுக்கு ஏற்படுவதில்லை? அவர்களும் பக்தி முறையைத்தானே கையாளுகிறார்கள்!

பதில்: உலகிலுள்ள வெவ்வேறு மதங்கள் மனிதனுக்கு வெவ்வேறு ஐதிகங்களையும், பழக்கவழக்கங்களையும் கொடுத்து வருகின்றன. பலர் ஒன்றுகூடி அமைதியாய் இருந்து வணங்குவது இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும் பெற்றுவருகிற பயிற்சியாகும். பயிற்சியைத்தான் விதவிதமான வழிபாடு முறைகளுக்குக் காரணம் என்று சொல்ல வேண்டும். புத்தமதம் என்று சொல்லப் படுவது ஹிந்துமதத்தில் உள்ள யோகசாதனத்துக்கு ஒப்பானது. புத்தமதத்திலும் பெரும்பாலும் கூட்டுவழிபாடும் தனிவழிபாடும் அமைதியாக நிகழ்ந்து விடுகின்றன. பௌத்தர்கள் புத்தர் பெம்மானைப் பகவான் என்று சொல்லுவார்கள். அதற்குமேல் கடவுள் ஒருவரைப் பற்றித் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்பது அவர்களுடைய கோட்பாடு. ஆனால் சிறந்த வழிபாடு

அவர்களிடத்தும் உண்டு. இனி, ஹிந்துக்கள் இடத்தில் இருக்கின்ற வழிபாட்டு முறைகள் எண்ணிக்கையில் அடங்கா. அமைதியாய் இருந்து ஆத்ம விசாரம், தியானம், ஜபம் முதலியன பழகுபவர்கள் இருக்கிறார்கள். இடிமுழக்கம் போன்று இறைவனுடைய நாமத்தை உச்சரித்துக்கொண்டு கூத்தாடுபவர்கள் உண்டு. ஒரே அமளியில் ஈடுபட்டிருப்பது போன்று விதவிதமான ஆடல் பாடல்களுக்கும் ஹிந்துமதத்தில் இடமுண்டு. வெவ்வேறு பாங்குடைய மாந்தர் வெவ்வேறு முறைகளில் தங்களுடைய பக்தியையும், ஆர்வத்தையும் வெளியிடலாம் என்பது ஹிந்து மதத்தின் கோட்பாடு ஆகும். மிகப் பயங்கரமாக வழிபாட்டில் துவக்கி நிர்விகல்ப சமாதி ஈறு ஆக எல்லாவிதமான சாதனங்களும் ஹிந்துமதத்தில் இடம்பெற்றிருக்கின்றன. அவை யாவையும் ஆமோதிப்பதும், அவைகளுக்கு இடந்தருவதும் நமது கடமையாகும். ✪

43. ஹிந்து மதமும் கிறிஸ்தவ மதமும்

கேள்வி: *(609)* சர்வமதமும் சம்மதம் என்ற போக்கில் ஹிந்துக்களாகிய நாம் செல்லும்போது நம்மில் உறுதியான கொள்கை இல்லை என்னும் பலஹீனத்தினால் அவ்விதம் சொல்வதாகவும் பிற மதஸ்தர்கள் நினைக்கிறார்கள். என்னுடன் வாதித்த சில கிறிஸ்தவர்கள் இக்கருத்தை வெளி யிட்டார்கள். கிறிஸ்துநாதர் ஒருவர்தான் கடவுளுடைய புதல்வன் என்று அவர்கள் நம்புகிறார்கள். உண்மையில் ஹிந்து மதம் பலவீனமானதா?

பதில்: வெவ்வேறு நாடுகளில் மக்கள் வெவ்வேறு விதமான உணவுகளை உண்கின்றனர். அவ்வுணவுகள் எல்லாம் உடலுக்குப் புஷ்டியளித்து வருகின்றன. விதவிதமான உணவு வகைகள் உலகில் அமைந்திருப்பது முற்றிலும் அவசியமானது. ஏனென்றால் ஒருவனுக்கு ஒத்துக்கொள்ளும் உணவு மற்றொருவனுக்கு ஒத்துக்கொள்ளும் என்று உறுதிகூற முடியாது. யாருக்கு எந்த உணவு ஒத்துக்கொள்கிறதோ அதை உண்ணலாம். ஆனால் தான் உண்பது மட்டும் புஷ்டிதரும் உணவு, ஏனையவை வாழ்க்கைக்கு உதவமாட்டா என்று கருதுபவர் அல்லது வெளி யிடுபவர் உண்மையை அறிந்தவர்கள் அல்லர். மதத்தைப் பற்றிய உண்மையும் அதுவே. கடவுள் கிருபைகூர்ந்து விதவித மான மதங்களை வெவ்வேறு மதாசாரியர்கள் மூலம் உலகில் ஏற்படுத்தியுள்ளார். ஒரு மதத்தை அனுஷ்டிப்பதன் மூலம் மனிதன் மேன்மையடைந்து வருகின்றானா என்பதுதான் அடிப்படைக் கோட்பாடு. மனிதன் மேன்மையடைவதற்கு உதவும் மார்க்கங்கள் எல்லாம் நல்ல மதங்களேயாம். இதை ஹிந்துக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக அறிந்திருக்கின்றனர். ஒரு மதம்

பெரியது, மற்றது சிறியது என்று அறிவுடையோர்கள் வாதாடுவதில்லை. சமரச உணர்வு பலஹீனத்தின் விளைவு அல்ல, மெய்யறிவின் விளைவேயாம். கடவுளின் பெருந்திட்டத்தைப் பற்றிய உண்மையை அறிந்துகொள்ளாதவர்கள் வேண்டியவாறு பேசிக் கொண்டிருக்கட்டும். ஹிந்து மதத்தில் பிறந்து வளர்ந்து வருபவர்கள் தங்களுடைய உயர்ந்த நோக்கத்தினின்று யார் பேச்சைக் கேட்டும் பிசகவேண்டிய அவசியமில்லை.

கேள்வி: *(610)* கடவுள் மனிதரை மட்டும் தமக்குரிய சொந்த வடிவத்தில் தம்மைப் போன்றே சிருஷ்டித்து இருக்கிறாரென்பது கிறிஸ்தவ மதக்கொள்கை. ஹிந்து மதம் இதைப்பற்றி என்ன சொல்கிறது?

பதில்: சிருஷ்டிக் கிரமத்தைப்பற்றி ஹிந்து மதம் சொல்வதற்கும், கிறிஸ்துவ மதம் புகட்டுவதற்கும் பெரிய வேற்றுமை உண்டு. கிறிஸ்துவ மதத்தின் பிரகாரம் மனிதன் ஒரே பிறப்பு எடுக்கிறான்; மனிதனுக்கு மட்டும் ஆத்மா இருக்கிறது. செத்த பிறகு அந்த ஆத்மா பாப புண்ணியத்துக்கு ஏற்ப நரகத்துக்கோ சொர்க்கத்துக்கோ போகிறது. மற்ற உயிர்வகைகள் எல்லாம் மனிதனுக்காகவென்று கடவுள் சிருஷ்டி செய்து வைத்திருக்கிறார் என்பது கிறிஸ்துவ மதக்கொள்கை. ஹிந்துமதம் இதை ஏற்றுக்கொள்வதில்லை. சிற்றுயிர், பேருயிராகப் பரிணமித்து வருவது ஹிந்துமதக் கொள்கை. மரம், செடி, கொடிகளாக இருக்கின்ற ஸ்தாவரங்கள் படிப்படியாக ஜங்கமங்களாகப் பரிணமிக்கின்றன. பறவை, விலங்கு இனங்களைத் தாண்டி மனித நிலைக்கு நாளடைவில் அவைகள் வந்து சேருகின்றன. இப்படி முன்னேற்றம் அடைவதற்கு உயிர்கள் எண்ணிறந்த பிறவிகள் எடுக்க வேண்டியது அவசியமாகிறது. உடலமைப்பில் மானுட அமைப்பே உயர்ந்தது. அதற்கு இயற்கையே சான்று ஆகிறது. கடவுள் அந்த மானுட வடிவத்தில் இருக்கிறாரென்று கிறிஸ்துவ மதம் சொல்லுவது போன்று ஹிந்துமதமும் சொல்கிறது. எனவே கடவுளுக்கு ஒரு வடிவத்தைக் கொடுத்தவன் மனிதன். பிறகு அவர் அந்த வடிவத்தையும் கடந்திருக்கிறாரென்று ஹிந்துமதம் மேலும் தெளிவுபடச் சொல்கிறது. வடிவமில்லாத கடவுளுக்கு மனிதன் தனது சொந்த வடிவத்தைக்

கற்பித்திருக்கிறான் என்பதுதான் உண்மை. இதைக் கிறிஸ்துவ மதம் தலைகீழாக மாற்றிக் கடவுள் தமது சொந்த வடிவத்தில் மனிதனைப் படைத்திருக்கிறார் என்று சொல்லுகிறது. இந்தக் கொள்கையை நாம் ஏற்றுக்கொண்டால் அடுத்தபடியாக இன்னொரு பெரிய கேள்வி எழுகிறது. கடவுள் வெள்ளைக் காரரைப் போன்று வெளுத்து இருக்கிறாரா, மங்கோலியரைப் போன்று மஞ்சள் நிறமாக இருக்கிறாரா, இந்தியர்களைப் போன்று மாநிறமாக இருக்கிறாரா, நீக்ரோக்களைப் போன்று கன்னங்கரேலென்று இருக்கிறாரா? இக்கேள்விக்கு விடை கண்டுபிடித்தாகவேண்டும். இனி, உடலமைப்பில் மனிதனுக்கும், மனிதக் குரங்குக்கும் அதிக வித்தியாசமில்லை. கடவுளைப்பற்றி மனிதக் குரங்கு வாதிக்குமாகில் தான் கடவுள் வடிவத்தில் அமைந்திருப்பதாக அது சொல்லும். இதேபாங்கில் எல்லா உயிர்களும் ஏன் பகரலாகாது? பின்பு எதுதான் கடவுளைப் பற்றிய உண்மை? உலகனைத்துமாய் இருப்பவர் கடவுள். அதற்கு அப்பாலும் அவர் இருக்கிறார். ஆக, இதைப்பற்றிக் கிறிஸ்துவ மதம் புகட்டுகிற கொள்கை யுக்திக்கோ, இயற்கையின் அமைப்புக்கோ ஒவ்வாது.

கேள்வி: *(611)* கடவுள் தம்முடைய வடிவத்தில் மனிதனைப் படைத்தார் என்று கிறிஸ்தவ வேதம் பகர்கிறது. உலகையெல்லாம் படைப்பதற்கு முன்பே அவர் மானுட வடிவத்தில் இருந்தாரா? இப்பொழுதும் இருந்து வருகின் றாரா? இக்கோட்பாட்டை விளக்கும்படி வேண்டுகிறேன்.

பதில்: கிறிஸ்தவமதக் கோட்பாட்டுப் பிரகாரம் கடவுள் வேறு; அவரால் படைக்கப்பட்டுள்ள இவ்வுலகம் வேறு. இப் பொழுது தென்படுகிற இவ்வுலகத்தைக் கடவுள் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் படைத்தார் என்பதும் அதற்கு முன்பு கடவுள் வெறும் சூனியத்தில் இருந்து வந்தார் என்பதும் கிறிஸ்தவ மதத்தவர்களுடைய கொள்கை. அவருக்கு ஒரு வடிவம் இருக்கிறது என்பதும் அவர் தமக்குச் சொந்தமாயுள்ள வடிவத்திலேயே மக்களைப் படைத்தார் என்பதும் அவர்களு டைய நம்பிக்கை. ஆனால் இந்த நம்பிக்கை இயற்கையின் அமைப்புக்கும் வேதாந்தக் கோட்பாட்டுக்கும் ஒவ்வாதது.

இயற்கையின் உண்மையை ஆராய்கின்றவர்கள் உயிர்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதை நிரூபிக்கிறார்கள். சான்று எடுத்துக்கொள்கின்றபொழுது மனிதனுடைய எலும்புக்கூட்டை மனிதக் குரங்கின் எலும்புக்கூடு ஒத்திருக்கிறது; அதை ஒத்ததாகச் சாதாரணக் குரங்கின் எலும்புக் கூடு இருக்கிறது; அதை ஒத்ததாகப் பறவையின் எலும்புக்கூடு இருக்கிறது; அதை ஒத்ததாக மீனின் எலும்புக்கூடு இருக்கிறது; அதை ஒத்ததாகப் பாம்பின் எலும்புக்கூடு இருக்கிறது. இப்படிப் படிப்படியாக ஓர் உயிர் மற்றோர் உயிராகப் பரிணமித்து வருகிறது என்பதை அவர்கள் நிரூபித்து வருகிறார்கள். வேதாந்தமும் இதே கோட்பாட்டைச் சொல்கிறது. இதற்குப் பரிணாமவாதம் என்று பெயர். ஆங்கிலத்தில் 'Theory of Evolution' என்கிறோம்.

இனி, தோற்றத்துக்கு அப்பால் உள்ள கடவுள் இப்பிரபஞ்ச மாகத் தம்மைத் தோற்றுவித்துக் கொள்கிறார் என்று வேதாந்தம் பகர்கிறது. எனவே எண்ணிறந்த உயிர் வகைகளாக இறைவன் தம்மைத் தோற்றுவித்துக் கொள்கிறார். கல் ஆகி, புல் ஆகி, விலங்கு ஆகி, பறவை ஆகி, மக்கள் ஆகி எல்லா வடிவங் களிலும் ஈசனே இலங்குகின்றார் என்பது வேதாந்தக் கோட்பாடு. இத்தகைய தோற்றங்களை உண்டுபண்ணுவதும், திருப்பித் தம்மிடத்துக் கவர்ந்து கொள்வதும் ஆதியந்தமில்லாது யாண்டும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. வடிவமில்லாத அகண்ட சச்சிதானந்தப் பொருளாகிய அவர் எண்ணிறந்த வடிவங்களில் தோன்றிக் கொண்டிருக்கிறார் என்பது வேதாந்தக் கோட்பாடு. ஆனந்தத் திலிருந்து எல்லா உயிர்களும் வந்திருப்பதால் அவையாவும் திரும்பவும் ஆனந்தத்தினிடத்தே போய்ச்சேர சதா முயன்று வருகின்றன. எண்ணிறந்த தோற்றங்களில் மானுடத் தோற்றமும் ஒன்று. பரிபக்குவத்தில் இது மேலான நிலைக்கு வந்துள்ள தோற்றமாகும். இறைவனைப்பற்றிய ஞானத்தைப் பெறுதற்கு மானுடத் தோற்றம் மிகவும் பொருத்தமானது. இதுவே நாம் கொண்டுள்ள கொள்கையாகும். இறைவனைப் பற்றிய அடிப்படை உண்மை இதுவே என்பதைச் சுவானுபூதியில் ஆத்மசாதகன் அறிந்துகொள்ள முடியும். எனவே இக்கோட்பாடு வெறும் வாய்ப்பேச்சை அடிப்படையாகக் கொண்டதல்ல.

இயற்கையின் நடைமுறையையும் ஞானிகளின் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டது. எனவே அதைக் குறித்துக் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள கொள்கை நமக்கு ஏற்புடையதாகாது.

கேள்வி: *(612)* உயிர்கள் பிறப்பெடுப்பதும் விடுவதும் அதனதன் பாவபுண்ணியச் செயல்களைப் பொருத்ததெனின், உயிர்களின் ஆதித்தோற்றம் எத்தகையது? மேலும், உயிர்கள் இறைவனிடத்திருந்துதான் தோன்றியிருக்குமெனின் இறைவனைப் பிரிந்து பிறக்கவேண்டிய காரணம் என்ன? ஆதாம் ஏவாளிலிருந்து மக்கள் தோன்றியதாகக் கிறிஸ்தவ மதம் சொல்கிறது. ஹிந்து மதத்தில் உயிர்களின் ஆதித் தோற்றம் எத்தகையது? தக்க சான்றுகளுடன் விளக்க வேண்டுகிறேன்.

பதில்: உயிர்களின் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகிய நிலைகளை ஓர் உபமானத்தின் மூலம் விளக்கலாம். அலைகள் கடலிலே தோன்றுகின்றன. அவைகள் நிலைத்திருப்பதும் கடலிலே. இறுதியில் அவைகள் ஒடுங்குவதும் கடலிலே. கடலை விட்டுப்பிரிந்து அலைகள் இருப்பதில்லை. அதேபாங்கில் ஜீவர்கள் பிறப்பு இறப்பு ஆகிய மாறுதல்களை அடைந்து கொண்டிருப்பதற்கு இடையில் கணப்பொழுதும் கடவுளைவிட்டுப் பிரிந்திருப்பதில்லை. சிற்றலை, பேரலையாகக் கடலில் வடிவெடுக்கிறது. அதன் துவக்கத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டம். அதேவிதத்தில் கடவுளின் தோற்றமாகிய இயற்கையில் ஜீவாத்மாக்கள் உருவெடுத்து வருகின்றன. அவைகளுக்குத் துவக்கம் எது என்பதை வரையறுத்துச் சொல்லமுடியாது. அவையாவும் சச்சிதானந்தம் என்னும் கடலிலிருந்து இயற்கை மயமாக இயற்கையில் தோன்றிவந்தவைகளென்று பொதுவாகப் பகரலாம். மலையாக வடிவெடுத்துள்ள கல்லுக்கும் உயிர் உண்டு என்பது ஹிந்துமதக் கோட்பாடு. எனவே கல்லும் ஒரு ஜீவாத்மா ஆகிறது. அது படிப்படியாகப் பரிணமித்து பிரம்மஞானத்தை அடையக்கூடிய உயர்நிலைக்குப் போகக்கூடும். இயற்கை முழுதிலும் சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமித்துவரும் காட்சியைக் காண்கிறோம். ஆனால் இந்தச் சிற்றுயிர்

எப்பொழுது, எப்படி உண்டாயிற்று என்று இயம்பமுடியாது. பாபம், புண்ணியம் என்பதன் உட்பொருளையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். ஜீவாத்மாக்கள் அனைத்தும் தத்தம் இயல்புக்கு ஒப்பக் கர்மம் செய்துகொண்டிருக்கின்றன. ஒரு ஜீவன் இருக்கும் நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குப் போவதற்கு உதவுகிற கர்மம் புண்ணியம் என்று சொல்லப்படுகிறது. இருக்கிற நிலையிலிருந்து கீழ்மையடைவதற்கு ஏதுவாகிற கர்மம் பாபம் எனப் பகரப்படுகிறது. ஜீவாத்மன் பரிபூரண நிலைக்கு வருகின்ற பொழுது பாபம், புண்ணியமாகிய இரண்டையும் கடந்து கர்மத்துக்கப்பால் போய்விடுகிறது. அக்கோட்பாட்டை அடிப்படை யாகக்கொண்டே,

"இருள்சேர் இருவினையும் சேரா: இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

என்னும் குறள் வந்துள்ளது. இறைவனை அடைதலும், முக்தி பெறுவதும் ஒன்றே. ஜீவன் ஒருவன் ஜீவன்முக்தனாகிற நிலை மற்ற விவேகிகளுக்கு விளங்குகிறது. அதாவது ஜீவன் பரத்தில் கலக்கிற காட்சி ஞானிகளுக்கு நன்கு விளங்குகிறது. ஆனால் அந்த ஜீவனுக்குத் துவக்கம் எப்படி உண்டாயிற்று என்பது எந்த ஞானிக்கும் விளங்குவதில்லை. ஆத்ம சொரூபம் என்கின்ற நிலையில் ஜீவாத்மாக்களுக்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. ஜீவாத்மாக்கள் பெறுகிற ஜீவபோதத்துக்குத் துவக்கமும் முடிவும் உண்டு.

மேலும், கிறிஸ்தவ மதம் பகர்கிற ஆதாம் ஏவாள் என்னும் கொள்கையில் ஏகதேசம் உண்மை இருக்கிறது. அவர்கள் இருவரைத்தவிர ஏனைய ஜீவர்களெல்லாம் அவ்விருவருக்குச் சந்ததியாக வந்தது என்பது உண்மையல்ல. அவ்விருவர்கள் போன்று புதிய ஆதாமும், ஏவாளும் இயற்கையில் அப்போதைக்கப்போது தோன்றிக் கொண்டிருக்கி றார்கள். கடவுள் அவர்களை ஒருதடவை படைத்தார் என்பது உண்மையல்ல. அத்தகைய ஜீவ வியக்திகள் கடவுளிடத்திருந்து ஓய்வு ஒழிச்சலில்லாது யாண்டும் உண்டாகிக் கொண்டிருக் கின்றன என்பதுவே உண்மை. இயற்கை நடைமுறையே இவ்வுண்மையை நிரூபிக்கிறது.

கேள்வி: *(613)* கிறிஸ்தவமதப் பிரகாரம் ஆதி மனிதர்கள் ஆதம், ஈவ் என்று கூறப்படுகின்றனர். ஹிந்து மதத்தின் படைப்புக் கொள்கை யாது?

பதில்: கிறிஸ்தவமதக் கொள்கைப்படி கடவுள் சுமார் ஆறாயிரம் வருஷங்களுக்கு முன்பு இவ்வுலகைப் படைத்தார். ஆறு நாட்களில் அவர் படைப்பைப் பூர்த்தி பண்ணினார். ஏழாம் நாள் அவர் ஓய்வெடுத்துக்கொண்டார். ஆனால் இக் கொள்கை தத்துவத்துக்குப் பொருந்தாது. படைப்புக் கடவுளே படைப்பாகிய பிரபஞ்சமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கி றார். படைப்புக்குத் துவக்கமும் உண்டு; முடிவும் உண்டு. துவக்கத்தைச் சிருஷ்டி என்றும், ஒடுக்கத்தைப் பிரளயம் என்றும் கருதுவது முறை. இங்ஙனம் தோற்றமும் ஒடுக்கமும் ஆதியந்தமில்லாது சர்வகாலமும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன என்பது வேதாந்தத் கோட்பாடு.

இனி, கிறிஸ்தவமதப் பிரகாரம் பறவை, விலங்கு ஆகிய ஏனைய ஜீவ ஜந்துக்கள் மனிதனுக்காக என்று படைக்கப் பட்டிருக்கின்றனவாம். இதுவும் உண்மையன்று. இது உண்மை யானால் மனிதன் தன்னுடைய உணவுக்காகப் படைக்கப்பட்டிருக் கிறான் என்று புலி பகரும். வேதாந்தக் கோட்பாட்டுப் பிரகாரம் பரம்பொருள் என்னும் ஒரு பேருயிர் (Cosmic Life) அனந்தங்கோடி சிற்றுயிர்களாகத் தன்னை விளக்கிக்கொண்டிருக்கிறது. இச்சிற்றுயிர்கள் படிப்படியாகப் பரிணமித்துப் பேருயிர்களாக வடிவெடுக்கின்றன. மனித நிலையை எட்டுகின்றபொழுது பரிணாமம் பூர்த்தியாகிறது. இயற்கையின் நடைமுறை இதற்குச் சான்றாகும். ஆகையினால் ஆதம், ஈவ் என்னும் ஆதிமனிதர் களைப்பற்றிய கொள்கையும் சரியன்று.

கேள்வி: *(614)* கிறிஸ்தவ மதம் 'பிறவி ஒன்றே' என்று வலியுறுத்துகிறது. அந்த ஒரு பிறவியில் செய்யப்படும் வினைகளுக்கேற்பச் சொர்க்கம், நரகம் முதலியன உண்டு என்பது அம்மதக் கோட்பாடு. ஆனால் ஹிந்து மதமோ, பல பிறவிகள் எடுத்தபின் ஆத்மா பக்குவமடைந்து முக்தி பெறுகிறது என்று கூறுகிறது. இன்று ஜனத்தொகை மிகுதியாக உள்ளது. அப்படியானால் புதிய ஆத்மாக்கள்

தோன்றியிருக்கின்றனவா? இம்முரண்பாடுகளுக்கு விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: இக்கேள்வியில் இரண்டு முக்கியக் கூறுகள் அடங்கியிருக்கின்றன. ஒன்று ஜீவாத்மாவுக்குப் பிறப்பு ஒன்றா அல்லது பலவா என்பது. இரண்டாவது ஆத்மாக்களின் எண்ணிக்கையில் ஏற்றத்தாழ்வு இருப்பதற்குக் காரணம் யாது என்பதாம்.

கிறிஸ்தவ மதக்கொள்கைப்படி மனிதனுக்குத்தான் ஆத்மா இருக்கிறது. மற்ற உயிர்களுக்கு ஆத்மா இல்லை. மற்ற உயிர்கள் மனிதனுடைய சுக ஜீவனத்துக்காகக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவைகள். மற்று இக்கோட்பாடு ஹிந்து மதத்துக்குச் சம்மதம் அன்று. ஜீவாத்மா சிற்றுயிராகத் தோன்றி, கணக்கற்ற பிறவிகளில் படிப்படியாகப் பரிணமித்து மானுட நிலையை எட்டுகிறது. மானுடனாகப் பிறந்த பிறகும் பல பிறவிகளில் உலகிலுள்ள சுகதுக்கங்களை அனுபவித்துப் பார்த்து விட்டு அவைகளில் பற்றை ஒழிக்கிறது. பின்பு அவ்வாத்மா பரம்பொருள் நாட்டம் கொள்கிறது. அத்தகைய பரிபாகம் அடைந்த பின்பு அது கடவுளைச் சென்றடைகிறது. இது யுக்திக்கும் உலக நடைமுறைக்கும் ஒத்தது. இதற்கு மாறாகக் கிறிஸ்தவ மதம் புகட்டுகிற ஒற்றைப் பிறவி - ஏக ஜன்மவாதம்- யுக்திக்கு ஒவ்வாது. இது உலக நடைமுறையினின்று முரண் படுகிறது. ஆத்மாவுக்கென்று சரியான விளக்கத்தைக் கிறிஸ்தவ மதம் தருவதில்லை. மற்ற உயிர்கள் மனிதனுடைய சுகபோகத்துக் காகச் சிருஷ்டிக்கப்பட்டவைகள் என்பது தத்துவத்துக்கு ஒவ்வாதது.

ஜனத்தொகை அதிகரிப்பதை முன்னிட்டு புதிய ஆத்மாக்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன என்று கருதலாகாது. தோற்றத்துக்கு வாராது எண்ணிறந்த ஜீவாத்மாக்கள் காத்திருக்கின்றன. தோற்றத்துக்கு வந்துள்ளவைதான் சிருஷ்டியின் சொரூபம் என்று முடிவுகட்டுவது பொருந்தாது. தோன்றா நிலையிலிருப் பவைகளைக் கணக்கெடுக்க யாருக்குமே இயலாது. பிறப்பெடுப் பதில் ஏற்றத் தாழ்வு உண்டு. பிறப்பெடுத்த நிலையிலும் பிறப்பெடுக்காத நிலையிலும் எண்ணிறந்த ஆத்மாக்கள் யாண்டும் இருந்து வருகின்றன.

கேள்வி: *(615)* அறிவியல் நூல் சிற்றுயிர்களாகப் பிறப்பவைகள் பரிணமித்துப் பேருயிர்களாகின்றன என்று சிருஷ்டியைப் பற்றிக் கூறுகிறது. ஆனால் கிறிஸ்தவமதம் கடவுள் மனிதனை ஒரே நாளில் படைத்தார் என்று கூறுகிறது. சிருஷ்டியைப் பற்றிய உண்மை யாது?

பதில்: சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய முத்தொழில்கள் இயற்கையில் ஓயாது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. புதிய உயிர்கள் தோற்றத்துக்கு வருகின்றன. கொஞ்சநாள் நிலைத்திருந்து அவைகள் மடிகின்றன. இயற்கையின் இச்செயல்கள் வாயிலாக உயிர் வகைகள் கீழ்நிலையிலிருந்து படிப்படியாக மேல்நிலைக்குப் பரிணமித்து வருகின்றன. இயற்கை நூல் கூறுகிற இதே கோட்பாட்டைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஹிந்துமதம் கூறியிருக்கிறது. "உலகனைத்தும் ஆனாய் நீயே" என்பது ஹிந்துமதக் கோட்பாடு. கடவுள் தாமே உயிரனைத்தும் ஆயிருக்கிறார். ஆதலால் உயிர்கள் அனைத்தையும் கடவுள் சொரூபமாகக் கண்டு பழகுவது ஹிந்துமதக் கோட்பாடு. சிற்றுயிர்கள் பலகோடி பிறவிகளில் பேருயிர்களாகப் பரிணமித்துக் கடைசியில் மனிதனுடைய நிலையை எட்டுகின்றன. பிறகு மனிதன் பல பிறவிகளில் தன்னைப் பண்படுத்திக் கடைசியாகக் கடவுளைச் சென்றடைகிறான். இது ஹிந்துமதக் கோட்பாடு.

கிறிஸ்தவ மதம் சொல்லுகிற பிரகாரம் கடவுள் மனிதனை ஒரே நாளில் படைத்தார் என்னும் கோட்பாடு இயற்கையினுடைய நடைமுறைக்கு ஒத்து வராது. பிறக்கிற மக்களுக்கிடையில் இயல்பு வேறுபாடு எப்படி உண்டாயிற்று? கடவுள் சிருஷ்டி பண்ணுகிற மானுடன் ஒருவன் ஒரே வருஷத்தில் அல்லது ஐந்து வயதில் அல்லது பத்து வயதில் சாகிறான். அதற்குக் காரணம் யாது? ஒருவன் குருடனாகப் பிறக்கிறான். மற்றொருவன் செவிடனாகப் பிறக்கிறான். இன்னொருவன் நொண்டியாகவோ, முடவனாகவோ பிறக்கிறான். கடவுள் ஏன் இப்படிச் சிருஷ்டிக்கிறார்? என்னும் கேள்விக்குப் பொருத்தமான விடைகொடுக்கக் கிறிஸ்தவ மதத்திற்கு இயலாது. கிறிஸ்தவ மதக் கொள்கை வெறும் நம்பிகையை அடிப்படையாகக் கொண்டது. யுக்திக்கு அது ஒத்துவராது. முற்பிறப்பில் செய்த

வினைக்கேற்ப இப்பிறப்பு அமைகிறது என்னும் பரிணாமக் கோட்பாடு இயற்கையினால் நிரூபிக்கப்படுகிறது.

கேள்வி: *(616)* ஆண்டவனிடத்துப் பிரார்த்தனை பண்ணினால்தான் அவர் உன்னைக் காப்பாற்றுவார். அப்படிப் பிரார்த்தனை பண்ணாவிட்டால் அவர் உன்னை நரகத்தில் தள்ளிவிடுவார் என்று கிறிஸ்தவ மதம் சொல்கிறது. ஹிந்துமதம் இதைப்பற்றி என்ன சொல்கிறது?

பதில்: தன்னை வணங்காதவர்களையெல்லாம் நரகத்தில் தள்ளுவது கடவுளுக்குப் பொருந்தாது. ஹிரண்யகசிபு என்னும் அரக்கன் ஒருவன் இருந்தான். அவனை வணங்காதவர்களையெல்லாம் அவன் சித்திரவதை செய்தான். அப்படிச் செய்வது அரக்கனுடைய இயல்பு. அவன் செய்தது போன்று கடவுளும் தம்மை வணங்காதவர்களையெல்லாம் நரகத்தில் போட்டுவிடுவாராகில் அவர் மற்றொரு கொடிய அரக்கன் ஆய்விடுவார். ஆனால் அவருக்குக் கருணாகரக் கடவுள் என்று பெயர். உயிர்களை நிரந்தரமாகத் துன்புறுத்துவது அவருடைய திட்டமல்ல.

ஹிந்துமதக் கொள்கையின்படி கடவுள் ஒரு கற்பக விருக்ஷமாகிறார். கற்பக விருக்ஷத்திற்குக் கீழிருந்து நாம் விரும்புவதையெல்லாம் அது கொடுத்துவிடுகிறது. கடவுள் இயற்கை சொரூபமாக இருந்து வேண்டியவருக்கு வேண்டியதையெல்லாம் வழங்கி வருகிறார். சிலர் பொருந்தாததை வேண்டுகின்றனர். அதுவும் அவர்களுக்குக் கிடைத்துவிடுகிறது. அதனால் வரும் துன்பத்தைச் சகிக்க அவர்களுக்கு இயலுவதில்லை. பிறகு வேறொரு பொருளை நாடுகின்றனர். இத்தகைய ஆராய்ச்சிகள் எண்ணிறந்த பிறவிகளில் நிகழ்ந்து வருகின்றன. இறுதியில் நல்லறிவு வாய்க்கப்பெற்ற பிறகு நல்லார் கடவுளையே நாடுகின்றனர். ஈசுவரப் பிராப்தி அவர்களுக்கு உண்டாகிவிடுகிறது. அது வாய்ப்பதற்கு முன்பு பலவிதமான இன்ப துன்பங்களில் உழன்று உயிர் வகைகள் பக்குவமடைகின்றன. ஹிந்து மதம் இங்ஙனம் புகட்டுகிறது.

கேள்வி: *(617)* மக்களைப் படைத்த கடவுள் அவர்கள் எல்லாரையும் மரணத்துக்கு ஆளாக்கியிருக்கிறார். ஏதோ

ஒரு எதிர்காலத்தில் செத்தவர்கள் எல்லாரையும் அவர் ஒரு நொடிப்பொழுதில் எழுப்புவார். எழுப்பியபின் அவர்களின் பாபபுண்ணியத்தைப் பற்றி அவர் ஒரே நாளில் விசாரணை பண்ணி முடிப்பார். புண்ணியம் செய்தவர்களைச் சொர்க்கத்திற்கும், பாபம் செய்தவர்களை நரகத்திற்கும் அனுப்புவார். அந்தத் தீர்ப்புத் தினத்தினின்று யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. அவரவர் வினைக்கேற்ப நிரந்தர சொர்க்கமோ, நிரந்தர நரகமோ வாய்க்குமென்று சில மதவாதிகள் நம்பி வருகின்றனர். மற்றவர்களுக் கிடையில் மத மாற்றத்திற்கு இக்கொள்கையைப் போதித்தும் வருகின்றனர். வேதாந்தம் இக்கொள்கையைப்பற்றிப் பகருவது யாது?

பதில்: ஆசியாக் கண்டத்தின் மேற்குப் பகுதியில் யூதமதம் (Judaism) என்பது யூதர்களுக்கிடையில் உருவெடுத்தது. அந்த மதத்தினின்று கிளைகளாகப் பிரிந்து வந்தவைகள் கிறிஸ்தவ மதமும், இஸ்லாமிய மதமும் ஆகும். யூதர்களுடைய தெய்வீக நூல் (The Old Testament) பழைய ஏற்பாடு ஆகும். இந்த மூன்று மதத்தவர்களுக்கும் இது பொதுவானது. பிறகு வந்த (The New Testament) புதிய ஏற்பாடு என்பது அலாதியாகக் கிறிஸ்தவர்களுக்கு உரியது. அதேவிதத்தில் குர்ஆன் என்பது இஸ்லாமியர்களுக்குரிய நூல் ஆகும். இந்த மூன்று மதவாதிகளுக் கிடையில் சமரசம் கிடையாது. அவரவர் மதமே மேலானது என மூன்று மதத்தவர்களும் நம்பி வருகின்றனர். ஆனால் இக்கேள்வியில் எழுந்துள்ள தீர்ப்புத்தினத்தைப் பற்றிய கொள்கை மூவர்க்கும் பொதுவானது. இந்த மூன்று மதங்க ளோடு எந்தவிதமான தொடர்புமில்லாத புற மதஸ்தர்களும் நாஸ்திகர்களும் உலகில் ஏராளமாக இருக்கின்றனர். இன்னும் ஒரு பெருங்கூட்டத்தார் மதம் என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ளாமலேயே உலகில் எல்லா நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். எவ்வளவுதான் மதபோதனை பண்ணினாலும் அதை அறிந்துகொள்ள முடியாத மாக்கள் கூட்டமும் உலகில் ஏராளமாக உண்டு. இத்தனைவிதப் பாங்குடைய இத்தனைவித மனிதர்களைப் படைத்தது ஒரு தெய்வமா அல்லது பலப்பல தெய்வங்களா என்னும் கேள்விக்குச் சரியான விடை யாரும்

தந்ததில்லை. யுக்தி பூர்வமாக ஒரு உண்மையை நாம் காண்கிறோம். மக்கள் எல்லார்க்கும் உடல் அமைப்பு ஒரே விதமானது. ஒரு மனிதனுடைய உடலில் எத்தனை எலும்புகள் இருக்கின்றனவோ, அத்தனை எலும்புகள் எல்லாருடைய உடலிலும் இருக்கின்றன. மானுட சரீரத்தின் வெப்பம் 98.4°F. இது எல்லாருக்கும் பொதுவானது. ஒரு மானுட சரீரத்தினுடைய ரத்தத்தை மற்றொரு மானுட சரீரத்திற்குப் பயன்படுத்தலாம். மருந்து வகைகள் இத்தனை பேருக்கும் பொதுவானவை. இவர்களுக்கிடையில் கலப்பு விவாகம் பண்ணிக்கொண்டு மகப்பேறு எடுப்பதும் சாத்தியம். சற்று ஏறத்தாழ உணவு வகைகளை எல்லார்க்கும் பொதுவாக எடுத்து வழங்கலாம். இறைவனுடைய சிருஷ்டியில் உள்ள நிலம், நீர், காற்று ஆகிய பூதங்கள் எல்லாருக்கும் பொதுவானவை. இதினின்றே சிருஷ்டிகர்த்தா ஒருவர்தான் இருக்கிறார் என்று யூகிக்க இடமுண்டு.

மக்களைப் படைத்த கடவுள் ஓர் உயிர் பிறக்கும்பொழுது அல்லது பிறந்தவுடன் சாகும்படி செய்கிறார். பிறகு பிறந்தநாள் முதற்கொண்டு என்றைக்கு வேண்டுமானாலும் யாருக்கும் மரணம் நேரிடும். ஆயுளை நிர்ணயிக்க மனிதனால் முடியாது. ஒன்று குருடாகப் பிறக்கிறது. மற்றொன்று செவிடாகப் பிறக்கிறது. அங்கங்களில் குறைபாடுடைய உயிர்கள் கணக்கற்றவை பிறக்கின்றன. ஜடம் போன்று அறிவற்றவை பிறக்கின்றன. முன்னது பின்னதாக இவை யாவும் மடிகின்றன. தீர்ப்புத் தினம் என்றைக்கு வரும் என்று யாருக்கும் தெரியாது. மனிதன் அமைத்து வைத்துள்ள நீதி ஸ்தலத்தில் விசாரணைக்கு நாள் குறித்துத் தெரிவிக்கின்றனர். படைத்த கடவுளோ அப்படித் தீர்ப்புத் தினத்திற்கு நாள் குறிக்கக் கிடையாது. இந்த ஜெஹோவா ஆதிகாலத்தில் மக்களைப் பார்வையிட அடிக்கடி நிலவுலகுக்கு வந்து கொண்டிருந்தார். இப்பொழுது ஏனோ அவர் எட்டிப் பார்ப்பதே கிடையாது. இக்காலத்தில்தான் அவருடைய வருகைக்கு அவசியம் மிக உள்ளது. ஜெஹோவா என்பது யூதமதம் கடவுளுக்குக் கொடுத்துள்ள பெயராகும். பரலோகத்தில் இருக்கும் பிதா என்பது கிறிஸ்தவ மதம் கடவுளுக்குக் கொடுத்துள்ள பெயராகும். அல்லா என்பது இஸ்லாமிய மதம் அவருக்குக் கொடுத்துள்ள பெயராகும்.

இனி, இயற்கையின் பாங்கைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு அன்னம், பானம், காற்று ஆகியவைகள் இன்றியமையாதவைகள். அன்னத்தை மலமாகவும், நீரைச் சிறுநீராகவும், காற்றை நச்சுக் காற்றாகவும் தன் அன்றாட வாழ்க்கைச் செயலின் மூலமாக மனிதன் மாற்றுகிறான். அப்படி மாறியமைந்தவை ஏனைய ஸ்தாவர ஜங்கமங்களுக்கு உணவாகின்றன. இங்ஙனம் இயற்கையின் அமைப்பில் உண்ணும் உணவும், பருகும் நீரும், சுவாசிக்கும் காற்றும் ஒரே அளவில் இருந்துகொண்டு நிலைமாறி அமைந்துகொண்டு வருகின்றன. பத்தாயிரம் வருஷங்களுக்கு முன்பு மக்களுக்குப் பயன்பட்ட உணவும், நீரும், காற்றும் அதே அளவில் இருந்து கொண்டு இன்றைக்கும் இப்பொழுது இருப்பவர்களுக்குப் பயன்பட்டு வருகின்றன. சுருங்கச் சொல்லின் இயற்கையில் அமைந்துள்ள உண்டியும், பானமும், பிராணவாயுவும் எல்லையில் அடங்கியவைகளாம்.

இனி, திடீரென்று தீர்ப்புத் தினத்தன்று பலகோடி மக்கள் தோற்றத்திற்கு வருவார்கள் என்று வைத்துக் கொள்வோம். பழங்காலத்தவர்களுக்கு எலும்பாகவும், சதையாகவும், இரத்தமாகவும் இருந்த பொருள்கள் இக்காலத்தவர்களுக்குப் பயன்பட்டு வருகின்றன. எட்டிய முன்னோர்களுக்குக் கடவுள் எங்கிருந்து கோடிக்கணக்கான உடல்களை எடுத்துக்கொடுப்பார்? ஒரு நாளைக்கு முன்பு செய்த செயல்களில் பலவற்றை ஒரு நாளைக்குப் பின்பு நாம் மறந்து விடுகிறோம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நல்வினை தீவினை ஆற்றியவர்கள் அவை யாவையும் மறந்துவிட்டு ஜடநிலை எய்தினர். அன்னவர்களுக்கு உடலங்களைக் கொடுப்பதுமல்லாது மறைந்துபட்டுப் போன ஞாபக சக்தியையும் புதுப்பிக்கக் கடவுள் கடமைப் பட்டிருக்கிறார். அப்படிப் புதுப்பிக்கும்பொழுது உண்மையில் புதுப்பிக்கப்பட்ட மனிதன் வேறு, அன்று அழிந்துபட்ட மனிதன் வேறு ஆகிறான். பிறந்தவுடனே செத்த உயிர்களுக்குக் கடவுள் என்ன தீர்ப்புக் கொடுப்பார்? குருடு செவிடாயிருந்த உயிர்களுக்குக் கடவுள் என்ன தீர்ப்புக் கொடுப்பார்? நலன் கேடு ஒன்றுமறியாது அப்பாவியாயிருந்தவர்களுக்கு அவர் என்ன தீர்ப்புக் கொடுப்பார்? எண்ணிக்கையில் அடங்காத பேர்களுக்கு ஒரே நாளில் தீர்ப்புக்

கொடுப்பதும், தங்குதற்கு இடம் கொடுப்பதும், உண்ண உணவு தருவதும், பருகுவதற்கு நல்ல நீர் தருவதும் சாமானியமான செயலன்று. இப்பொழுது இருப்பதுபோன்று பல்லாயிரம் உலகங்களை உண்டுபண்ணினால்தான் ஓரளவு அவர்களுக்கு இடவசதி பண்ணித்தர முடியும்.

மக்கள் எல்லோரும் பாபம் புண்ணியம் ஆகிய இருவினைகளில் ஈடுபட்டவர்களே. முற்றிலும் பாபி என்று சொல்லுதற்கோ, முற்றிலும் புண்ணியவான் என்று சொல்லுதற்கோ யாருமில்லை. நூறு செயல்களில் ஐம்பத்தொரு செயல்களைப் பாபமாகவும், நாற்பத்தொன்பது செயல்களைப் புண்ணியமாகவும் செய்துள்ள, இருபத்தைந்து வயது வாலிபனொருவன் செத்துப் போகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். ஜெஹோவா அன்னவனை நரகத்துக்கு அனுப்புவார். அவன் சாசுவதமாக நரகத்தில் திணறிக் கொண்டிருக்கவேண்டியது. இது அந்த ஆண்டவனுடைய ஆணையாகும். மற்றொரு யுவன் ஐம்பத்தொரு மடங்கு புண்ணியமும், நாற்பத்தொன்பது மடங்கு பாபமும் செய்தபின் மடிந்து போனான் என்று வைத்துக் கொள்ளுவோம். இதே தெய்வத்தின் தீர்ப்புப்படி பிறகு இவன் சாசுவதமாகச் சொர்க்கத்தின் இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பான். மானுட நியாயாதிபதிகள் குற்றத்திற்கேற்ற தண்டனையை விதிக்கிறார்கள். ஆனால் இத்தெய்வம் காலமெல்லாம் கஷ்டப்படுவது அல்லது காலமெல்லாம் இன்புறுவது என்னும் பொருந்தாத தீர்ப்பைத் தருகிறார். நரகத்திற்குப் போகிற கூட்டம்தான் எண்ணிக்கையில் மிகமிக அதிகமாக இருக்கும். அத்தனை பேருடைய நரக வேதனையை ஆண்டவன் பார்த்துக் கொண்டு ஆனந்தமாக இருப்பார். இத்தகைய தெய்வத்தைக் கருணாகரன் என்று கருதுவது எப்படி? இத்தகைய சொர்க்க நரக திட்டத்தில் யாருக்கு என்ன பிரயோஜனம்? ஆக, இக் கொள்கை இயற்கைத் தத்துவத்தை அறியாத அறிவிலிகளால் கற்பிக்கப்பட்டது என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டும்.

இனி, வேதாந்தக் கோட்பாட்டை ஆராய்வோம். யூத மதப்படி சிருஷ்டி ஒரே தடவை நடந்திருக்கிறது. மனிதனுக்கு ஒரே பிறவிதான் அமைந்திருக்கிறது. ஆனால், வேதாந்தக் கோட்பாட்டின்படி சிருஷ்டியும் பிரளயமும், பகலும் இரவும்

போன்று இடையறாது நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இச்செயலுக்குத் துவக்கமுமில்லை முடிவுமில்லை. பிரபஞ்சத்தைக் கடந்தவராகவும், பிரபஞ்சமயமாக அதனுள் ஊடுருவியும் இருக்கிறார் என்று கடவுள் என்ற சொல் பொருள்படுகிறது. கடந்த நிலையானது கடலின் அடிப்பகுதிக்கு நிகர். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலைச் செய்கிற பகுதி கடலின் மேற்பரப்புக்கு நிகர். அதீதத்திலிருக்கும் வஸ்து நிர்க்குணப் பிரம்மம் எனப்படுகிறது. அதே வஸ்து கிருத்தியங்களில் ஈடுபட்டிருக்கிறபொழுது சகுணப் பிரம்மம் அல்லது ஈசுவரன் எனப்படுகிறது. ஈசுவரன் தானே உலகங்களாகவும், உயிர் வகைகளாகவும் தோன்றிக் கொண்டிருக்கிறான். அவன் சத் சித் ஆனந்த சொரூபி. பேருயிர், பேரறிவு, பேரின்பம் என்பது அதன்பொருள். அத்தகைய ஈசுவரன் ஜெஹோவாவைப் போன்று ஒரு வடிவம் தாங்கியிருப்பவன் அல்லன். அவன் இயற்கை சொரூபமானவன்.

தீர்ப்புத் தினம் என்பது மனிதனுடைய உள்ளத்தில் இருக்கின்றது. அதனுள் மனச்சாட்சியாக இருந்துகொண்டு கடவுள் நலனையும் கேட்டையும் காட்டியருள்கின்றார். மனச்சாட்சிக்கு விரோதமாகத் தீங்குசெய்து துன்பப்படுகிறவன் அவ்வேளையில் நரகிலிருக்கிறான். பிறகு அவன் தன்னைத் தானே திருத்தியமைத்துக் கொள்ளுகிறான். இடையறாது இச்செயல் உலகெங்கும் மக்களுக்கிடையில் நிகழ்ந்து வருகிறது. அவர்களும் பண்பட்டு வருகின்றனர். இதைத்தவிர தீர்ப்புத்தினம் என்கின்ற கற்பனைக் கொள்கைக்கு இயற்கையின் நடைமுறையில் சிற்றுயிர்கள் பல கோடி பிறவிகளில் பரிணமித்துப் பேருயிர்களாகின்றன. மனிதன் அவைகளுள் உச்சநிலையில் இருக்கிறான். தத்துவ விசாரம் செய்து பிரபஞ்சத்துக்கு அப்பாலிருக்கிற நிர்க்குணப் பிரம்மத்தில் லயமாவது வாழ்க்கையின் குறிக்கோள். பண்பட்ட மனிதன் இந்த நிலையை எட்டுகிறான். இப்பிரபஞ்சத்தில் சொர்க்கம், நரகம் என்பன அடங்கியிருக்கின்றன. அவையிரண்டும் தற்காலிகமானவைகள். தான் செய்த தீவினைக்கேற்ப ஜீவாத்மன் ஒருவன் துன்பப்படுகிறான். அது நரகம். நல்வினைக்கேற்ப அவன் இன்புற்று இருக்கிறான். அது சொர்க்கம். அவரவர்க்குரிய சொர்க்க நரகத்தை வினைக்கேற்ப அவரவரே அமைத்துக்

கொள்கின்றனர். வேறு யாரும் இதில் தலையிடுவதில்லை. சிற்றுயிர்க்கும் பேருயிர்க்கும் இடையில் வித்தியாசம் பரிபாகத்தில் இருக்கிறதேயொழிய அவைகளைப் பிரித்துவைத்துக் கடவுள் அமைத்திருக்கிறார் என்பது தத்துவமாகாது. இத்தனை கோடி உயிர்களும் ஈசன் என்னும் பேருயிரின் தோற்றங்களாக இருப்பதால் ஜீவகோடிகள் அனைத்தையும் நேசிக்க மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். உடலுக்கேற்ற உணவு வேற்றுமை இருப்பதுபோன்று, மன பரிபாகத்திற்கேற்பச் சமயங்கள் பல இருக்கின்றன. முறையாக அனுஷ்டித்தால் சமயங்கள் யாவும் மனிதனை அதீத நிலைக்கு எடுத்துச்செல்லுகின்றன. சகுணப் பிரம்மம் அல்லது ஈசனுக்கு மகிமைகள் பல இருப்பதால் அம்மகிமைகளை முன்னிட்டு அவன் பலப்பல தெய்வங்களாகக் கருதப்படுகிறான். பொருள் ஒன்று. அதற்குப் பெயர்கள் பல. சமயச் சண்டையும், என் தெய்வம், உன் தெய்வம் என்று தெய்வத்தைப்பற்றிய சண்டையும் அக்ஞானத்தினின்று உதித்தவைகளாம். இவ்வுண்மையை அறிகிற மனிதன் சண்டை சச்சரவுக்கு இடம்தராது சமரசத்தையே நிலைநாட்டுவான். வேதாந்தம் மதங்களுக்கிடையில் சமரசத்தை நிலைநாட்டுகிறது. மேலும், வேதாந்தம் ஒவ்வொருவருக்கும் அவரவர் நிலை யிலிருந்து மேலே வர உதவுகிறது.

கேள்வி: *(618)* செத்தவர்களெல்லாம் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றும்; தீர்ப்புத் தினத்தன்று கடவுள் அவர்களை எழுப்பி அவருடைய பாப புண்ணியத்துக்கு ஏற்பத் தீர்ப்புச் சொல்லி அவர்களை நரகத்திற்கோ சொர்க்கத்திற்கோ அனுப்புவார் என்றும் கிறிஸ்தவ மதம் புகட்டுகிறது. ஹிந்துமதம் இக்கோட்பாட்டைப் பற்றிப் பகர்வது யாது?

பதில்: கிறிஸ்தவ மதம் புகட்டுகிற இக்கோட்பாட்டை ஹிந்துமதம் ஆமோதிக்கிறதில்லை. இக்கொள்கை யுக்திக்கும் இயற்கையினுடைய நடைமுறைக்கும் ஆன்றோர்களுடைய அனு பவத்துக்கும் ஒருபொழுதும் ஒத்துவராது. பாடுபடுவதன் மூலம் ஒருவன் முன்னேற்றமடைகிறான். அதுவே இயற்கையின் திட்டம். சில உயிர்கள் பிறந்தவுடன் செத்துப்போய் விடுகின்றன.

ஐந்து, ஆறு வயதில் சாகின்ற உயிர்கள் உண்டு. நாற்பது ஐம்பது வயதில் சாகின்றவர்கள் உண்டு. தீர்க்காயுசாக இருந்து சாகின்றவர்களும் உண்டு. இத்தனைபேரும் தீர்ப்புத்தினத்தை எதிர்பார்த்துக்கொண்டு சும்மா காத்திருப்பதால் அவர்களடையும் நலன் யாது?

மனிதனுக்கு ஒரு பிறவிதான் உண்டு என்பது கிறிஸ்தவ மதக்கொள்கை. பரிபூரண நிலையடையும் பரியந்தம் மனிதனுக்குப் பல பிறவிகள் உண்டு என்பது ஹிந்துமதக் கொள்கை. வாழ்க்கைக்கு ஒரு சரீரம் தகுதியற்றதாய்ப் போய் விடுங்கால் அதைக் களைந்துவிட்டு ஆத்மா புதியதொரு சரீரம் எடுத்துக்கொள்ள முயலுகிறது. தீர்ப்புத் தினம் என்பது ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. எது நல்லது, எது கெட்டது என்பதை மனசாக்ஷியானது மனிதனுக்குப் புகட்டிக்கொண்டே இருக்கிறது. நல்லதைப் பின்பற்றுகிறவன் மேன்மையடைகிறான். கெட்டதைப் பின்பற்றுபவன் கீழ்மையடைந்து நாளடைவில் நல்வழிக்கு வந்து விடுகிறான். இங்ஙனம் தீர்ப்புத் தினமும் தன்னைத் திருத்தியமைக்கும் செயலும் பாபபுண்ணியத்துக்கு ஏற்ப இன்பதுன்பத்தை அனுபவிப்பதும் இடையறாது இயற்கையில் நடைபெற்று வருகிறது என்பது ஹிந்துமதக் கோட்பாடு. ஹிந்துமதக் கோட்பாடும் இயற்கை நடைமுறையும் ஒன்றேயாம். இதைத்தான் இறைவனுடைய திட்டம் என்று நாம் கூறுகிறோம்.

கேள்வி: *(619)* செத்துப்போன ஜீவர்கள் கல்லறையில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், எட்டிய பிற் காலத்தில் தீர்ப்புத்தினம் ஒன்று வரும் என்றும், அந்தத் தீர்ப்புத் தினத்தன்று கடவுள் தூங்குகின்ற உயிர்களை எழுப்பி அவர்களுடைய பாபபுண்ணியங்களை விசாரித்துச் சொர்க்கத்திற்கும் நரகத்துக்கும் ஜீவர்களை அனுப்புகிறார் என்றும் கிறிஸ்தவ மதவாதிகள் நம்புகின்றனர். ஹிந்து மதத்தில் செத்த ஜீவர்கள் வேறு பிறப்பெடுக்கப் போகின் றார்கள் என்பது கோட்பாடு. வாழ்க்கைமுறை இங்ஙனம் இரண்டு மதவாதிகளுக்கு இரண்டு போக்கில்

அமைந்திருக்கிறதா? அருள்கூர்ந்து விளக்கம் தருவிக்க வேண்டுகிறேன்.

பதில்: வாழ்க்கையின் நடைமுறை மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதல்ல. நாஸ்திகர்களும், சூன்யவாதிகளும் மனிதன் செத்த பிறகு ஒன்றும் மிச்சமிருப்ப தில்லை, அணைந்து போன தீபம் போன்று மனிதன் மறைந்து போகிறான் என்கிறார்கள். வாழ்க்கையின் நடைமுறை நம்பிக் கையை அடிப்படையாகக் கொண்டிருக்குமாகில் அந்தக் கொள்கை உடையவர்களுக்கு அது ஒரு அலாதியான உண்மை யாக இருக்கவேண்டும். இங்ஙனம் ஒவ்வொரு மதவாதியும் தனது நம்பிக்கையை வாழ்க்கையைப் பற்றிய உண்மை என்று ஸ்தாபிப்பானாகில் பலதரப்பட்ட உண்மைகள் பலபேர்க்கு இருக்கின்றன என்பதாகும். இது உண்மையல்ல. மதங்களுக் கிடையில் மாறுபடும் கருத்துக்களுக்கிடையில் எது உண்மையாய் இருக்கக்கூடும் என்று முடிவுகட்டுதற்கு மனிதனுக்குத் தனி மதத்தில் பற்று இருக்கலாகாது; உண்மையை அறிதலில் அவனுக்கு ஊக்கம் இருக்கவேண்டும்.

பௌதிக விஞ்ஞானம் பௌதிக உலகைப் பற்றிய உண்மை களை எடுத்து இயம்புவது போன்று வேதாந்த தர்சனம் வாழ்க்கையைப்பற்றிய உண்மைகளை எடுத்துப் புகட்டுகிறது. அக்கோட்பாடுகளை ஆராய்ந்துபார்ப்பதும் அனுபவத்தில் கண்டறிவதும் வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் என்கிறது வேதாந்தம். ஜீவன் படிப்படியாகக் கீழ்நிலையிலிருந்து மேல் நிலைக்குக் கணக்கற்ற ஜனன மரணங்கள் வாயிலாகப் போய்க் கொண்டிருக்கிறான் என்பது வேதாந்தக் கோட்பாடு. அதற்கேற்ற சாதனங்கள் சிலவற்றைச் செய்தால் தனது முற்பிறப்புகளை மனிதன் அறிந்துகொள்ளக்கூடும் என்றும் வேதாந்தம் புகட்டு கிறது. செத்துப்போன மனிதன் அதே உடலில் தீர்ப்புத் தினத்தன்று கடவுளால் தட்டி எழுப்பப்படுவது யுக்திக்கும் அனுபவத்துக்கும் ஒவ்வாதது. ஐந்து வயதுக் குழந்தை ஒன்று சாகிறது. புதிய அனுபவம் ஒன்றும் பெறாது தீர்ப்புத்தினம் வரையில் அது தூங்கிக் கொண்டிருப்பதில் யாருக்கு என்ன லாபம்? எனவே இக்கொள்கை இயற்கையின் அமைப்புக்கோ, மானுட முன்னேற்றத்துக்கோ ஒத்ததன்று. மனிதனுக்கு ஒரே

ஒரு ஜன்மம்தான் இருக்கிறது என்று இம்மதவாதிகள் நம்புகின்றனர். வேதாந்த தர்சனம், இக்கொள்கையை ஏற்றுக் கொள்ளாது. பண்பாடடைவதற்குப் பல பிறவிகள் தேவை, இன்பதுன்பங்கள் தேவை, நீண்ட முயற்சி தேவை. அங்ஙனம் எல்லா உயிர்களும் பண்பாடு அடைதற்கு இறைவனுடைய பெருந்திட்டம் இடந்தருகிறது. இதுவே வேதாந்தத்தின் கோட்பாடு.

கேள்வி: *(620)* தீர்ப்புத் தினத்தன்று இறைவன் உயிர்களை எழுப்புவாரென்றும் அவரவர் பாபபுண்ணியத்துக்கு ஏற்ப மக்களைச் சாசுவத சொர்க்கவாசத்துக்கு அல்லது சாசுவத நரகவேதனைக்கு அனுப்புவார் என்றும் கிறிஸ்தவ மதத்தை அனுஷ்டிப்பவர்கள் நம்பி வருகிறார்கள். இக்கொள்கையை நமது ஹிந்துமதம் ஆமோதிக்கிறதா?

பதில்: கிறிஸ்தவ மதக் கொள்கைப்படி தீர்ப்பு தினம் எதிர்காலத்தில் எப்பொழுதோ வரப்போகிறது. அதற்கு முன்பு மடிந்துபோன உயிர்களெல்லாம் வெறும் உறக்கநிலையில் இருந்து வருகின்றன. அந்த நிலையிலிருக்கும் ஜீவர்கள் இன்னும் சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போகவில்லை என்று அவர்கள் கருதிவருகிறார்கள். இக்கருத்தில் ஒரு விபரீதமிருக்கிறது. பிரபஞ்சத்தைச் சிருஷ்டி பண்ணிய கடவுள் சொர்க்க நரகத்தையும் சிருஷ்டிபண்ணி அவைகளை இப்பொழுது சும்மா வைத்திருக்கிறார். குடிபுகாத வீடுகள் போன்று அவை இரண்டும் காலியாகக் கிடக்கின்றன. என்றைக்குத் தீர்ப்புத்தினம் வருகிறதோ அன்றைக்கு சொர்க்கத்தினுள்ளும், நரகத்தினுள்ளும் அவரவர் பாபபுண்ணியத்துக்கு ஏற்ப மக்கள் புகுவார்கள். சொர்க்கத்துக்குப் போகிறவர்கள் பிறகு சாசுவதமாக அங்கு இன்புற்றிருப்பார்கள். நரகத்துக்குப் போகிறவர்கள் சர்வகாலமும் துன்பத்தில் இடர்ப்பட்டுக் கொண்டிருப்பர். இப்படி அம்மதத்தவர் கொண்டுள்ள கொள்கையை ஹிந்துமதம் அங்கீகரிப்பதில்லை. இக்கொள்கை யுக்திக்கு ஒவ்வாதது. இயற்கையினுடைய நடைமுறைக்கும் இக்கொள்கை முற்றிலும் மாறுபட்டது. இயற்கையினுடைய நடைமுறையையே இறைவனுடைய செயல்கள் என்று ஹிந்துமதம் பகர்கிறது. கிறிஸ்துவமதப் பிரகாரம் சிருஷ்டி ஒரே ஒருதடவை உண்டாயிருக்கிறது. ஹிந்துமதக் கொள்கைப்படி

சிருஷ்டியும் பிரளயமும் இரவு, பகல் போன்று திரும்பத்திரும்ப நிகழ்ந்துகொண்டே இருக்கும். உயிர்களுக்கு மறைவு தோற்றம் என்பன உண்டு. மறைவை மரணம் என்கிறோம்; தோற்றத்தை மறுபிறப்பு என்கிறோம். உயிர்கள் திரும்பத் திரும்பப் பிறக்கவும், மாய்ந்துபோகவும் செய்கின்றன. பிறப்பெடுத்து இருக்கும்பொழுது அவரவர் வினைக்கு ஏற்ப இன்ப துன்பங்களை உயிர்கள் அனுபவித்து வருகின்றன. இன்பம் அதிகரித்திருக்கும் வாழ்வு சொர்க்க வாழ்வு; துன்பம் அதிகரித்திருக்கும் வாழ்வு நரகவாழ்வு. ஆனால் இன்பம் கலவாத துன்பம் இல்லை; துன்பம் கலவாத இன்பமில்லை. சொர்க்கமோ, நரகமோ சாசுவதமானவைகளல்ல; அவரவர் வினைக்கேற்ப அவை இரண்டும் தாற்காலிகமாக அமைபவைகள். திரும்பத் திரும்பப் பிறந்து வினைப்பயனை இன்பதுன்ப மயமாக அனுபவித்து இறுதியில் வினைகளை யெல்லாம் கடந்து இறைவனைப் பற்றிய ஞானத்தைப் பெற்று இறைவனில் இரண்டறக் கலத்தல் அல்லது முக்தியடைதல் வாழ்க்கையின் குறிக்கோள் என்று ஹிந்துமதம் புகட்டுகிறது. பின்பு தீர்ப்புத்தினம் என்பது அப்போதைக்கப்போது உயிர்கள் அனுபவித்து வரும் வினைப்பயன்களேயாம். ஒவ்வொரு நொடிப் பொழுதும் தீர்ப்புத் தினமேயாம்.

கேள்வி: *(621)* சாதாரண மக்கள் தங்களிடமுள்ள குறைகளை நீக்குமாறு இறைவனிடம் வேண்டுகின்றனர். ஆனால் பக்தர்களோ இறைவனிடம் ஒன்றுமே கேட்பதில்லை என்பது பக்தியின் கோட்பாடு. பின்பு ஏசுநாதர் "கேட்டால் கிடைக்கும்" என்று கூறியுள்ளார். அக்கூற்று பொதுமக்களுக்கு என்று அமைந்ததா அல்லது பக்தியின் பாங்கா? சரியான வேண்டுதல் எது?

பதில்: பக்தியும் அன்பும் ஒன்றே. உலக நிலையில் வைத்து எதை அன்பு என்கின்றோமோ அதைப் பாரமார்த்திகத்தில் வைத்துப் பக்தி என்கிறோம். உலக இயல்பை ஆராய்ந்து பார்ப்போம். பச்சைக் குழந்தையொன்று பெற்றோர்களிடம் எதையும் கேட்பதில்லை. அதற்குத் தேவையானதைப் பெற்றோர் யூகித்து வழங்குகின்றனர். வயது வரவரக் குழந்தை தனக்கு இது வேண்டும், அது வேண்டும் எனக் கேட்கிறது. நன்கு

வளர்ந்து காளையானபிறகு அவன் பெற்றோர்களிடம் எதையும் கேட்பதில்லை. பெற்றோர்களுக்கு விருத்தாப்பியம் வரும்பொழுது அவர்களுக்குத் தேவையாய் இருப்பவைகளை மைந்தன் யூகித்தறிந்து வழங்குகிறான். இந்நிலையில் வழங்குதல் ஒன்றே அவனுடைய செயலாகிறது. வேண்டுதல் அவனுடைய செயல் அன்று. பக்தி இக்கோட்பாட்டை ஒட்டியதாய் இருக்கிறது.

கடவுள் தத்துவத்தை அறிகின்றவர்கள் அவரைப் பிரார்த் திக்கின்றனர். இது வேண்டும், அது வேண்டும் என்று விண்ணப் பிக்கின்றனர். இப்படிக் கோரிக்கை பண்ணுதற்கே பெரும்பாலர் கோயிலுக்குப் போகின்றனர். அவர்கள் கேட்பதில் பலவற்றைப் பெறுகின்றனர். சிலவற்றைப் பெறுவதில்லை. நல்லறிவு வந்தான பிறகு இச்செயலின் அடிப்படைத் தத்துவம் அறிஞனுக்கு விளங்குகிறது. மனிதனுக்கு நலம் தருபவைகள் வேண்டுதலுக் கேற்றவாறு வந்து வாய்க்கின்றன. கேடு தருபவைகள் அப்படி வந்து வாய்ப்பதில்லை. சில வேளைகளில் கேடு தருவதும் வாய்க்கிறது. அதைப்பெற்றுக் கஷ்டப்பட்டான பிறகு வேண்டா மென்று மனிதன் ஒதுக்குகிறான். அந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ளுதற்குக் கேடு பயன்படுகிறது. ஆக, பொருளைப் பெறுதலும் அறிவைப் பெறுதலும் பிரார்த்தனையின் பயன்களாம்.

பக்தியிலும் ஞானத்திலும் முதிர்ந்து மேல்நிலைக்கு வருகிற ஆத்மசாதகன் சமுத்திரத்தை எட்டியுள்ள நதிக்கு நிகராகிறான். வழிநெடுக உபநதிகளைப் பெறுகிற மகாநதி இறுதியில் தன்னை முழுதுமே கடலுக்குக் கொடுத்து விடுகிறது. நல்லறிவின் விளைவாக யான், எனது என்பன தொல்லைக்கு முதற்காரணம் என்று விவேகி அறிகிறான். யான், எனது என்பனவற்றை அவன் கடவுளுக்குச் சொந்தமாக்குகிறான். “உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்” என்பது அவனுடைய முடிந்த துணிபு. ஆக, பக்தன் ஒருவன் தான், தனது என்பனவற்றைச் சர்வகாலமும் தெய்வத்துக்கே கொடுத்துக்கொண்டு இருக்கிறான். கொடையாளி வள்ளல் எனப்படுகிறான். வள்ளல்களுள் பெரிய வள்ளலாய் இருப்பவன் பக்தன். சர்வகாலமும் கடவுளுக்குப் பணிவிடை பண்ணுவதும் யாவையும் அவருக்கே படைப்பதும் அவனுடைய செயலாகிறது. ஒருவிதத்தில் பகவான் பக்தனிடம்

கடன்பட்டவர் ஆகின்றார். நதி கடல் மயம் ஆவதுபோன்று பக்தன் பகவான் மயம் ஆகின்றான். கடன்பட்டுள்ள பகவான் தம்மையே பக்தனுக்குக் கொடுத்துவிடுகிறார். ஆக, முடிந்த நிலையில் பக்தனும் பகவானும் ஒன்றேயாம்.

ஏசுநாதர் "கேட்டால் கிடைக்கும்" என்று கூறியது மலையின் மீது இருந்துகொண்டு பொதுமக்களுக்குச் செய்த உபதேசமாம். கேட்கும் நிலையில் இருப்பவர்கள் பொதுமக்கள். குழந்தை களுக்குப் பெற்றோர் வழங்குவது போன்று கேட்கின்ற நிலையில் இருக்கும் பொதுமக்களுக்குக் கடவுள் வழங்குகின்றார். ஆதலால் அவரிடம் கேட்டுப் பழகுவது சாதனத்தின் ஆரம்ப தசையாகிறது. முடிவில் தன்னை முற்றுமே கடவுளிடம் கொடுத்துவிடுவது சாதனத்தின் முடிந்த நிலையாகிறது. அங்கு சாதனம் சாத்திய மாகப் பூர்த்தியாகிறது.

கேள்வி: *(622)* மக்கள் எல்லோரும் ஆதிபாபத்துக்கு (Original Sin) உட்பட்டிருக்கிறார்கள் என்றும் அத்தகைய பாபத்தை அகற்றுதற்கு ஏசுநாதருடைய அனுக்ரஹம் ஒன்றே உற்ற உபாயம் என்றும் கிறிஸ்தவ மதவாதிகள் சாதிக் கின்றனர். இக்கோட்பாட்டை வேதாந்தம் எப்பாங்கில் கருதுகிறது?

பதில்: கிறிஸ்தவமத சம்பிரதாயப்படி மக்கள் இனத்தைக் கடவுள் முதன்முதலாகத் தம்பதிகள் இருவர் வாயிலாகச் சிருஷ்டித்தார். அத்தம்பதிகளின் பெயர் ஆதாம், ஏவாள் (Adam Eve) ஆவார்கள். ஆண்டவனுடைய ஆணையை மீறி ஒரு மரத்திலிருந்த கனியை அவர்கள் இருவரும் புசித்தார்களாம். அது மன்னிக்க முடியாத பாபமாயிற்று. அந்த ஆதி தம்பதி களுடைய சந்ததிகளாக உலக மக்கள் எல்லாரும் வந்திருப்பதால் அந்தப் பாபம் மக்கள் எல்லாரையும் வளைத்துப் பிடித்திருக் கிறதென்றும், அந்தப் பாபத்திற்கு விமோசனம் தருவதற்கு ஏசுநாதர் ஒருவர்க்கே ஆண்டவன் அருகதை கொடுத்திருக்கிறார் என்றும் கிறிஸ்தவ மதவாதிகள் மக்களுக்குப் போதித்து வரு கின்றனர். வேதாந்த தர்சனம் இக்கொள்கையை ஏற்றுக்கொள்ளு கிறது இல்லை. ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய பாப புண்ணியத்துக்கு அவ்னவனே பொறுப்பாளியாகிறான். தந்தை

செய்த குற்றத்துக்கு உலக அரசாங்கங்கள் மைந்தனைத் தண்டிப்பதில்லை. ஒருவன் குற்றத்திற்கு இன்னொருவனைத் தண்டிப்பது பொருளற்ற காட்டுமிராண்டித்தனமான ஆட்சிமுறை என்று உலகநடை அதை ஒதுக்கித்தள்ளுகிறது. அது பொருத்த மான நியாயம். அதற்கு மாறாகப் பல்லாயிரத்தாண்டுகளுக்கு முன்பு யாரோ ஒரு ஆதி தம்பதிகள் செய்த அல்பமான குற்றத் திற்குத் தண்டனையாக வழிமுறை வழிமுறையாக வருகிற மானுட வர்க்கம் முழுவதும் அழிந்துபட்டுப் போகாத நரகத்தீயில் காலமெல்லாம் வருந்திக்கொண்டிருக்க வேண்டும் என்னும் கடவுளுடைய நியதி எத்தகைய புல்லியது என்பது சொல்லாமலே விளங்குகிறது. சமயத்தின் பெயரால் பொய்யான கோட்பாடு ஒன்றை மக்களுக்கு எடுத்துப் புகட்டுவது பொருந்தாது.

காலக்கிரமத்தில் பிறவியிலிருந்தே தூய்மையும், நல்லொழுக்கமும் வடிவெடுத்துள்ள சான்றோர்கள் உலகத்தில் வந்திருக்கிறார்கள். அன்னவர்களில் பலருக்கு ஏசுநாதரைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அதை முன்னிட்டு அன்னவர்களுக்குத் தண்டனை விதிப்பதும் யுக்திக்கு ஒவ்வாது. அது கொடுங் கோலாட்சிக்கு நிகராகும்.

மனிதன் தெய்வீகத்தினின்று வந்தவனென்றும், மூல நிலையில் மனிதனுக்கும் பாபத்திற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பதும் வேதாந்தக் கோட்பாடு. அறியாமையின் விளைவாக ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு போக்கில் தீய வழியில் செல்லுகிறான். அதன் விளைவாக அவன் துன்பத்துக்கு ஆளாகிறான். ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் அப்போதைக் கப்போது அனுபவிக்கும் துன்பத்திற்கு அவனே பொறுப்பாளி என்பது வேதாந்தத்தின் கோட்பாடு. துன்பத்தில் அழுந்தித் தன்னுடைய தீச்செயலைத் தானே திருத்தியமைக்கிறான். தன்னைத்தானே திருத்திக் கொள்வதற்கே இன்ப துன்பங்கள் இயற்கையின்கண் அமைந்துள்ளன. இதற்குப் புறம்பாகக் கடவுள் அமைத்துள்ள நரகவேதனை என்பது எங்குமேயில்லை. நரகவேதனையைப் பற்றிப் போதனை பண்ணுகிற மதவாதியின் உள்ளத்தில்தான் அத்தகைய நரகவேதனை அமைந்திருக்கிறது.

மனிதனுக்குச் சொந்தமாயுள்ள தெய்வீகத்தை அவனுக்கு

எடுத்துப் புகட்டுவதே மனிதனுக்கு மனிதன் செய்கின்ற பேருபகாரம் ஆகும். பிறகு மனிதன் தெய்வீகத்திற்குச் சொந்தம் என்பதே சத்தியம். மாசு படிந்துள்ள நீர் மீண்டும் ஆவியாக மாறித் தூய நிலையடைவதற்கு நிகராக அறியாமையினால் தீச்செயலையும், துக்கத்தையும் வரவழைத்துக்கொண்ட மனிதன் விவேகத்தால் நல்வினை ஈட்டிப் பழைய தூய நிலையை எய்தலாம் என்பதே வேதாந்தக் கோட்பாடு. இதற்குப் புறத்தில் இரட்சகர்கள் யாரும் தேவையில்லை.

கேள்வி: *(623)* மனிதன் தன்னைத்தானே மேலோனாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்னும் கோட்பாடு 'மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு' என்று வகுத்து வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்தவ மதமோ தன்னை ஒரு பாபியாகக் கருதவேண்டும் என்றும், தான் செய்த பாபத்தைக் குறித்து ஒருவன் வருந்திக்கொண்டே இருக்க வேண்டும் என்றும் புகட்டுகிறது. இவ்விரண்டுவிதப் போதனைகளுள் முரண்பாடுகள் இருக்கின்றன அல்லவா?

பதில்: சமயங்களனைத்தும் மக்களை மேலோராக்குவதற்கே அமைந்திருக்கின்றன. சமயங்கள் புகட்டுகின்ற நெறிகளுள் முரண்பாடு இருப்பதும் உண்டு.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பது கோட்பாடு. உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் மக்களுள் சிலர் இடையிடையே நெறிவழுவிப் போவதும் உண்டு. அதைக்குறித்து மானுடனொருவன் தன்னுடைய ஆயுள்காலம் முழுதும் வருந்திக்கொண்டே இருப்பானாகில் அன்னவன் உய்வடையமாட்டான். மேலும் மேலும் அவன் கீழ்மைக்கே உரியவனாவான். "இறைவா, என்னுடைய அறியாமை யினால் இப்பிழையைச் செய்துவிட்டேன். என்னை மன்னித் தருள்வீராக." மேலும் இத்தீமைக்கு ஆளாகமாட்டேன் என்று பிரார்த்தனை பண்ணவேண்டும். அடுத்தபடியாகப் பண்ணிய பிழையை மறந்துவிடவேண்டும். அதற்கு மாறாக அப்பிழையைப் பற்றியே திரும்பத்திரும்ப எண்ணுவதால் அதை மானசீகமாக

அவன் சிருஷ்டி பண்ணிக்கொண்டே இருக்கிறான். கேடு அங்ஙனம் வளர்கிறது. அதற்கு மாறாக, தான் ஆத்ம சொரூபம்; பரமாத்மாவிடத்திருந்து வந்தவன் ஆதலால் நல்ல பாங்குகள் பலவற்றிற்குத் தான் உறைவிடம். இப்படியெல்லாம் தெய்வீக எண்ணத்திலேயே ஊறியிருப்பது உசிதம். அதன்மூலம் மனிதன் நிச்சயமாகவே மேன்மையுறுகிறான்.

கேள்வி: *(624)* கடவுள் நம்முடைய பாபத்தை மன்னித்து விட்டாலொழிய நமக்கு விமோசனமில்லை என்கின்றனர் கிறிஸ்தவர்கள். பாபமன்னிப்பு ஏசுநாதர் மூலமாகத்தான் நிகழமுடியும் என்றும் அவர்கள் சொல்லுகின்றனர். இதைப் பற்றி ஹிந்து மதம் என்ன சொல்லுகிறது?

பதில்: இயற்கைத் தத்துவம் எப்படி உயிர்களனைத்துக்கும் பொதுவோ அங்ஙனம் பாரமார்த்திக வாழ்க்கைத் தத்துவமும் உயிர்களனைத்துக்கும் பொதுவானது. சமயங்களெல்லாம் பார மார்த்திக வாழ்வை விளக்குபவைகளாக இருக்கவேண்டும். அந்நிலையில் எல்லாச் சமயங்களும் சமரசமடைந்து விடுகின்றன.

அவரவர் வினைப்பயனை அவரவர் அனுபவித்தே ஆக வேண்டும். வினையில் பாபம் என்பது ஒரு பகுதி. புண்ணியம் என்பது மற்றொன்று. கடவுளுடைய அருளை உள்ளன்போடு நாடுகிறவர்கள் பாபம், புண்ணியம் ஆகிய இரண்டையும் கடந்து விடுகின்றனர். ஏசுநாதர் கடவுளின் அவதாரம். அவருடைய அருளை நாடுவது முறை. அதேபாங்கில் இராமர், கிருஷ்ணர் போன்ற ஏனைய அவதார புருஷர்களின் அருளை நாடுகின்ற வர்களும் கர்மத்தினின்று விடுபடுகிறார்கள். இதுவே இயற்கை யினுடைய நியதிக்கு ஒத்திருக்கிறது. ஒரு சமயத்தைச் சார்ந் திருப்பவனுக்கு விடுதலை உண்டு. மற்றொரு சமயத்தைச் சார்ந்திருப்பவனுக்கு விடுதலை இல்லை என்பது இயற்கை யினுடைய நியதிக்கோ, இறைவனுடைய திட்டத்துக்கோ ஒத்ததல்ல.

கேள்வி: *(625)* பாபமன்னிப்பு என்னும் கொள்கை கிறிஸ்தவ மதத்தில் பழக்கத்தில் இருந்து வருகிறது. வினைப் பயனைத் தவிர்க்க முடியாது என்னும் கோட்பாட்டோடு

இக்கொள்கையை இணைக்க முடியுமா? விளக்கம் தருவிக்க வேண்டுகிறேன்.

பதில்: வினைக்கேற்ற வினைப்பயன் என்பதும், அப்பயனை மாற்ற யாருக்குமே இயலாது என்பதும் ஹிந்துமதக் கோட்பாடு. கிறிஸ்தவர்களுள் சமய அனுஷ்டானத்தில் மேலாம் ஸ்தானம் வகிப்பவர்களிடம் பொதுமக்கள் தனித்தனியாகச் சென்று தாங்கள் புரிந்த பாபத்தை எடுத்துப் பகர்ந்து மன்னிப்புக் கேட்பது (confession) அன்னவர்களின் சமய அனுஷ்டானங்களுள் ஒன்று ஆகும். மத அதிகாரி அப்பாபம் செய்தவனுக்கு மன்னிப்புக் கொடுக்கிறார். அதன் விளைவாக அம்மனிதன் தண்டனையினின்று தப்பித்துக் கொள்கிறான். கடவுளின் பிரதிநிதியாயிருக்கிற மத அதிகாரியின் மன்னிப்புக்கு அத்தகைய மகிமை இருக்கிறதென்பது அம்மதவாதிகளின் கொள்கையாகும். இக்கொள்கையை நாம் அங்கீகரிப்பதில்லை. பிராரப்த கர்மத்தை மனிதன் அனுபவித்தே ஆகவேண்டும் என்பது வேதாந்தக் கோட்பாடு. பிராரப்த கர்மம் புண்ணியமாகவும் இருக்கலாம், பாபமாகவும் இருக்கலாம். அவைகளின் விளைவு விலக்க முடியாதது. ஆனால் ஞானோதயத்திற்குப் பிறகு கர்மத்தின் வேகத்தை ஞானி பொருள்படுத்துவதில்லை. ஆதலால் பழைய கர்மத்தின் விளைவு நோய் நொடியாகவோ, சுகஜீவனமாகவோ வாய்க்கலாம். அந்த இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டவனாக ஞானி இருக்கிறான். இது வேதாந்தக் கோட்பாடு. கிறிஸ்தவ மதக்கொள்கையை யுக்தி பூர்வமாக ஆராய்ந்து பார்த்தால் அது வெறும் குருட்டு . நம்பிக்கை என்பது வெளியாகும். மானுடனொருவன் சாம்பல் குவியல் ஒன்றில் குதித்தான். அதன் உள்ளிருந்த தீ அவன் கால் வெந்துபோகும்படி செய்தது. நான் அறியாமையினால் செய்த இந்தக் குற்றத்தை மன்னித்துக் கால் வெந்துபோகா திருக்கும்படி சீர்படுத்துங்கள் என்று மத அதிகாரியிடம் விண்ணப்பித்தால் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு அத்துயரத்தை அவர் துடைத்து வைத்தால் அவரிடத்துப் பாப மன்னிப்பு வல்லமையிருக்கிறது என்று நம்பலாம். தீயில் கால் காந்திப்போவதைவிடக் கொடிய பாபச் செயல்கள் இருக்கின்றன. சாமானியமான தீமையாகிய கால் வெந்துபட்டுப் போதலைச் சரிப்படுத்த இயலாத சமய ஆச்சாரியர் கொடிய

பாபங்களுக்கு எப்படி மன்னிப்புத்தர வல்லவராவார் என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும். ஆகவே செய்த பாபத்தை ஒப்புக்கொள்ளுதலும் (confession) அப்பாபத்தை மன்னிப்பதும் (pardoning the sin) ஆகிய இரண்டு செயல்களும் ஆதரவு அற்றவை களாம். பாபச் செயலின் விளைவாக வருகிற துன்பத்தை அமைதியாக ஏற்றுக்கொண்டு அதைச் சகித்துப் பழகுதல் ஓர் ஆத்மசாதனமாகிறது. வரம்புக்கு உட்பட்ட பாபத்துக்கு நரகத்தில் வரம்புகடந்த தண்டனை என்பது கிறிஸ்தவ மதக்கொள்கை. இக்கொள்கையையும் வேதாந்தம் ஆமோதிப்பதில்லை. உலக நீதிமன்றத்தில் குற்றத்துக்கேற்ற தண்டனை அமைந்திருப்பதில் ஒழுங்குப்பாடு இருக்கிறது. அதேவிதத்தில் இயற்கையின் நியதியில் சிறிய பாபத்திற்குச் சிறிதுகாலத் துயரமும் பெரிய பாபத்திற்கு நெடுங்காலத் துயரமும் அமைந்திருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். பிறகு மகா பாபங்களைச் செய்கிறவர்களும் பெரும் துன்பங்களுக்கு ஆளாகிப் பிறகு விமோசனம் அடை கின்றனர் என்பது வேதாந்தக் கோட்பாடு. (Eternal hell) முடிவில்லாத நரகவேதனை என்பதற்கு இயற்கையில் இடமில்லை.

கேள்வி: *(626)* மனிதன் பாப சொரூபமானவன் என்றும் அவனுடைய பாபத்தைக் கடவுள் மன்னிக்காவிட்டால் அவனுக்கு விமோசனம் இல்லை என்றும் கிறிஸ்தவ மதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்களுடைய பாபத்தை மட்டும் அக்கடவுள் மன்னிக்கிறார் என்றும் கிறிஸ்துநாதரை நம்பாதவர்களுக்குப் பாப விமோசனம் இல்லை என்றும் அவர்கள் போதிக்கிறார்கள். அப்படி யானால் மற்ற மதஸ்தர்களுடைய கதி என்ன ஆவது?

பதில்: சமுதாயத்தில் குற்றவாளிகளைச் சிறையில் அடைத்து வைக்கிறார்கள். தேசியவிழா ஒன்றை முன்னிட்டுச் சில குற்றவாளிகளுக்கு மன்னிப்புக் கொடுத்துச் சிறையினின்று அவர்களை வெளியே அனுப்புகிறார்கள். இந்தப் பாங்கில் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் கடவுள் பாப மன்னிப்பு கொடுக்கிறார் என்று அந்த மதத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பான்மையோர் நம்பி வருகின்றனர். அத்தகைய நம்பிக்கை தங்களுடைய

சொந்தத் திருப்திக்கு ஓரளவு பயன்படும். ஆனால் அந்நம்பிக்கை யுக்திக்கும் இயற்கையின் நடைமுறைக்கும் ஒவ்வாது. அத்தகைய நம்பிக்கை கொண்டிருக்கிறவர்கள் கடவுள் பக்ஷபாதமுடையவர் என்பதை மறைமுகமாக விளம்பரம் பண்ணுகின்றனர்.

வினைப்பயன் முறை பிறழாதது. அது முறைதவறாது நடப்பதைத்தான் நாம் கடவுளின் அருள் என்று சொல்லுகிறோம். கிறிஸ்தவர்கள் நம்புகிற பிரகாரம் ஒவ்வொரு மதத்துக்கும் ஒவ்வொரு தனித்தெய்வம் இருக்கிறது என்பது உண்மையல்ல. சூரிய வெளிச்சமும், சுவாசிக்கும் காற்றும், பருகும் நீரும் எல்லார்க்கும் பொதுவானது. அங்ஙனம் மெய்ப்பொருளாகிய கடவுள் அகிலாண்டத்துக்கும் பொதுவானவர். தமக்கு உற்றாராகச் சிலரையும் வேற்றாராகச் சிலரையும் கடவுள் கருதுவதில்லை. நல்வினை செய்கின்றவர்களுக்கு நலன் வினைப்பயனாக வந்தமைகிறது. தீவினை செய்கின்றவர்களுக்குக் கேடு வினைப்பயனாக வந்தமைகிறது. இந்த விதியினின்று யாரும் தப்பித்துக் கொள்வதில்லை. பாப மன்னிப்பு செய்யும் சக்தி தங்களுடைய கடவுளுக்குத்தான் இருக்கிறதென்று ஒருசிலர் கருதிவருவதன் மூலம் தங்களுடைய குறுகிய மனப்பான்மையையும் மதிமயக்கத்தையும் வெளியிடுகின்றனர். கடவுளைப் பற்றிய மெய்ஞ்ஞானம் வருகிறபொழுது மனிதனுடைய வினைப் பயன்கள் எல்லாம் அழிந்துபோய்விடுகின்றன. அப்பொழுது பாபபுண்ணியம் இரண்டையும் கடந்த நிலைக்கு மனிதன் போய்விடுகின்றான். பாபி ஒருவனுக்கும் தீவிரமான கடவுள் பக்தி வந்துவிட்டால் அந்தப் பக்தியின் விளைவாகப் பாபச் செயலின் விளைவு பெரும்பகுதி தீப்பட்ட பஞ்சுபோன்று அகன்று போய்விடுகிறது. கடவுளுடைய தயவையும் அவருடைய புதல்வனுடைய சிபாரிசையும் முன்னிட்டு மனிதன் பாபத்தினின்று தப்பித்துக்கொள்ளுவது உண்மையன்று. தான் நல்வாழ்க்கையில் முன்னேற்றமடைந்து ஞானத்தையும் பக்தியையும் பெருக்குவதன் மூலமாகவே மனிதன் வினைப்பயன்களைக் கடந்தவனாகின்றான்.

"இருள்சேர் இருவினையும் சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

என்னும் மறைமொழியினின்று மனிதன் அடைகின்ற

பரிபக்குவத்தை முன்னிட்டே அவன் வினையைக் கடந்தவனா கிறான் என்பது வெளியாகிறது. பாபமன்னிப்பை நாடுகிறவர்கள் கோழைகள். வினைக்கப்பாலுள்ள பரிபூரண நிலையை அடைய முயலுகின்றவர்கள் சான்றோர்கள். நாம் சான்றோர் ஆக முயலவேண்டும்.

கேள்வி: *(627)* கிறிஸ்தவப் பாதிரிமார்கள் (Bishops) நோய்வாய்ப்பட்டவர்களுக்கெனக் குறித்த தினத்தில் ஜபம் செய்வதும் அதனால் நோயாளிகளுக்கு நோய் நீங்கப் பெறுவதாகவும் சொல்லுகிறார்கள். சாராவின் பொருட்டு அன்னையின் சாந்திப் போர்வை அனுப்பும்படி நிவேதிதை கேட்டிருக்கிறார்கள். இப்பொழுதுள்ள இராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் நோயால் துன்புறுபவர் பொருட்டு ஜபமும் வழிபாடும் செய்தால் பெரிய சேவையும் உலக உபகாரமும் ஆகும். இது இப்பொழுது நடந்து வருகிறதா?

பதில்: ஜபம், பிரார்த்தனை போன்ற ஆத்ம சாதனங்களில் இரண்டு கூறுகள் இருக்கின்றன. ஒன்று காமியப் பிரார்த்தனை. மற்றொன்று நிஷ்காமியப் பிரார்த்தனை. இவ்வுலக சம்பந்தமான நலன்களையெல்லாம் கேட்பது காமியப் பிரார்த்தனை. ஒரு நாட்டில் போர் நிகழ்கிறபொழுது எதிரிகள் தோல்வியுற வேண்டும், தாங்கள் வெற்றிபெற வேண்டுமென்று கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றும் நாடுகள் தங்களுடைய தேவாலயங்களில் பெருங்கூட்டங்களாகக் கூடிக்கொண்டு அடுத்தடுத்துப் பிரார்த் தனை பண்ணுவதுண்டு. ஹிந்துமதச் சான்றோர்கள் அதை ஆமோதிக்கமாட்டார்கள். உலக மக்களுக்கிடையில் வெறுப்பு, வேற்றுமை, போராட்டம் ஒழியவேண்டுமென்றும், அமைதியும், அன்புமே நிலவவேண்டுமென்றும் பிரார்த்திப்பது ஒவ்வும். நமக்கு எதிரிகளாக வருகிறவர்களும் கடவுளுடைய குழந்தைகள் என்பதைப் பொதுவாகக் கிறிஸ்துவர்கள் ஞாபகத்துக்குக் கொண்டு வருவதில்லை. உலக மக்கள் எல்லோரும் நலமடையட்டும் என்பது நிஷ்காமியப் பிரார்த்தனை. தங்களுக்குரியவர்கள் மட்டும் நலமடையட்டும், மற்றவர்கள் தோல்வியடையட்டும் என்பது கீழ்த்தரமான காமியப் பிரார்த்தனை. மேலோர்கள் இதை ஆமோதிக்கமாட்டார்கள்.

இனி செல்வம், ஆயுள், ஆரோக்கியம் முதலியன வேண்டு மென்று வணங்குவதும் காமியப் பிரார்த்தனை. எல்லா மதங் களைச் சேர்ந்தவர்களுக்கிடையில் காமியப்பிரார்த்தனை பண்ணும் கூட்டத்தார்களே பெரும்பான்மையோர் இருக்கின்றனர். பரிபாகத்தில் பெரும்பான்மையோர் கீழ்த்தரத்திலிருப்பதால் அவர்கள் செய்யும் காமியப் பிரார்த்தனைக்கு நாம் தடை செய்யாதிருக்கலாம். ஆனால் அது மேல்தரமான பிரார்த்தனை யென்று அங்கீகரிக்கலாகாது. ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் பாமர மக்களுக்குரிய காமியப் பிரார்த்தனைக்கு இடம் தருவதில்லை. பாமரர்கள் மனதிற்குகந்த கீழ்த்தரமான கருத்துக்களைப் பொது மக்களுக்கிடையில் போதிப்பதில்லை. இதை ஒரு சான்றின் மூலம் விளக்குவது அவசியம். ஆஸ்பத்திரிகள், வைத்திய சாலைகள் போன்றவைகளைக் கிறிஸ்தவப் பாதிரிமார்களும் பொதுமக்கள் சேவைக்காக வைத்திருக்கிறார்கள். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தாரும் அத்தகைய வைத்தியசாலைகளை வைத்திருக் கிறார்கள். மருந்து கொடுக்கும்பொழுது "ஏசுநாதரை நம்பி இம்மருந்தை ஏற்றுக்கொள். அவரை வணங்கு. அவர் உனது நோயைக் குணப்படுத்துவார்" என்று சொல்லுவது அவர்களுடைய வழக்கம். ஆனால் இராமகிருஷ்ண மடத்தார் கடவுள் வழிபாட்டைப் புகுத்துதற்கு நோய்வாய்ப்பட்டிருக்கும் நெருக் கடியைப் பயன்படுத்தமாட்டார்கள். "வினைக்கேற்றபடி நோய் வருகிறது. நோயை நீக்குதற்கான முறைகளைக் கையாளுதற் கிடையில் நோயைப் பற்றிக் கவலையுறாதிருந்து பழகு" என்பதைத் தான் இவர்கள் புகட்டுகிறார்கள். நோயோடு இணைத்து வைக்காது கடவுள் பக்தி கொள்ளுவது அறிவுடையோரது மேலாம் இயல்பு என்பது புகட்டப்படும். ஆக, சமய அனுஷ் டானத்தைக் கையாளுதலில் கிறிஸ்தவர்களுக்கும் நம்மவர் களுக்கும் இடையில் வேற்றுமை உண்டு.

தமது இறுதிக் காலத்தில் கொடிய தொண்டை நோய்க்கு உட்பட்டு ஸ்ரீராமகிருஷ்ணர் வருந்திக்கொண்டிருந்தார். அந்நோயை நீக்குதற்பொருட்டு அம்பிகையிடத்தில் அவர் பிரார்த்தனை பண்ணவேண்டுமென்று சிஷ்யர்கள் பணிவுடன் வேண்டினார்கள். ஆனால் அத்தகைய காமியப் பிரார்த்தனை பண்ண ஸ்ரீராமகிருஷ்ணர் அறவே மறுத்துவிட்டார். சிஷ்யர்களும்

அத்தகைய காமியப் பிரார்த்தனை செய்யலாகாதென்று ஸ்ரீராம கிருஷ்ணர் அவர்களுக்குப் புகட்டினார். வினைப்பயனுக்கு ஏற்ப சரீரம் இருக்கிறது. நோய்வாய்ப்படுகிறது. பிறகு மறைகிறது. சரீரத்திலிருக்கும் ஆத்மாவுக்கும் நோய்க்கும் ஒரு தொடர்பு மில்லை. நோய்வாய்ப்பட்டிருப்பதற்கு இடையிலும் அதைப் பொருட்படுத்தாது ஜீவாத்மன் பரமாத்மனையே சார்ந்திருப்பது தான் நல்ல மனநிலை. அத்தகைய சீரிய மனநிலை ஆத்ம சாதகர்கள் யாரோ சிலர்க்குத்தான் அமைகிறது. ஆயினும் அச்சீரிய மனநிலையை ஏற்க வல்லார்க்கிடையில் புகட்டுவதுதான் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் லக்ஷியம்.

சகோதரி நிவேதிதை சுவாமி விவேகானந்தரின் சிஷ்யை ஆவதற்கு முன் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவ ஐதிகத்தில் ஊறி வளர்ந்தவர். அந்த ஐதிகத்துக்கு ஒப்ப அவர் அன்னை சாரதாதேவியாருக்குக் கடிதம் எழுதியபொழுது சாராவுக்குச் சாந்திப் போர்வை அனுப்பும்படி தெரிவித்திருக்கிறார். அந்த நெருக்கடியில் அவருடைய விருப்பத்தை அன்னையார் ஒருவேளை நிறைவேற்றி இருந்திருக்கலாம். ஆனால் அது சீரிய ஆத்ம சாதனத்தோடு ஒவ்வாது.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்கள் நோயாளி களுக்குப் பணிவிடை செய்கின்றபொழுது கடவுளின் குழந்தை களுக்கான பணிவிடை என்று கருதிச்செய்கின்றனர். “கடவுளே, நோயாளியின் இந்நோயை நீக்கு” என்று அவர்கள் காமியப் பிரார்த்தனை செய்யமாட்டார்கள். நோய் நீங்குவது அல்லது நோய்க்கு உட்பட்டு நோயாளியின் உடல் மறைவது ஆகிய செயல்களெல்லாம் வினைப்பயனை ஒத்தவைகள். இறைவனு டைய அருள் வினைப்பயனுக்கு முரண்படுவதில்லை. ஆகையால் தான் சான்றோர்கள் காமியப் பிரார்த்தனை பண்ணுவதில்லை. நல்லறிவும், பக்தியும், ஞானமும் வேண்டுமென்று இறைவனிடம் தாராளமாகப் பிரார்த்தனை பண்ணலாம். அதைத்தான் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தார் செய்தும், பிறர்க்குப் புகட்டியும் வருகின்றனர்.

பிறர்க்காகப் பிரார்த்தனை பண்ணுவது நிஷ்காமியப் பிரார்த் தனைதானே என்று யாராவது சொல்ல முன்வரலாம். உலக இயல்பில் மருத்துவர்கள் கையாளும் முறைக்கு மாறாக யாரும் அவரிடத்தில் ஒன்றும் சொல்லலாகாது. இனி சர்வேசுவரன்

சர்வக்ஞன். அவர் முற்றும் அறிந்தவர். எந்த உயிர்க்கு எது நல்லது என்பதை நாம் அறிந்து கொண்டிருப்பதைவிடப் பன்மடங்கு நன்றாக அவர் அறிகிறார். ஓர் எறும்பின் காலடி ஓசையும் அவருடைய காதுக்குக் கேட்கிறது என்பது கோட்பாடு. ஆகவே, அவருடைய திருவுளத்தின்படி நடக்கட்டும் என்பது முறை. இன்னாருடைய நோயை நீக்கு என்று அவரிடத்தில் விண்ணப்பிப்பது முறையன்று. ✩

44. கிறிஸ்தவமதக் கோட்பாடு

கேள்வி: (628) ஏசு கிறிஸ்துவைப் பற்றி வெளிவந்துள்ள நூல்களில் சில அவர் வாழ்ந்ததற்கு சரித்திரச்சான்றே இல்லையென்று சாதிக்கின்றன. வேறுசில அவர் ஒரு சர்வ சாதாரண அறப்பிரசாரகர் என்று பகர்கின்றன. இது உண்மை யாயின் ஏசுகிறிஸ்துவின் பெயரால் இப்படி நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்துள்ள ஸ்தாபனங்களுக்கும் சாதனை முயற்சி களுக்கும் அருள் சக்தி எங்கிருந்து வந்தது? அருட்சக்தி யில்லாமல் கிறிஸ்தவ மெய்யடியார் பலர் இவ்வளவு சித்தி களையும், அரும்பணியையும் சாதித்திருக்க முடியாதே?

பதில்: இதுபோன்ற கேள்விகளைப் பலதடவைகளில் அவதார புருஷர்களாகிய பெருமக்களைப்பற்றியே பலர் கிளப் புவதுண்டு. ஏசுநாதர் சரித்திரபூர்வமான புருஷர்தானா என்பது தான் ஈண்டு எழுந்துள்ள கேள்வியின் முக்கியமான பகுதியாகும். அவர் சரித்திரபூர்வமான புருஷர் அல்லர் என்று ஒருசாரார் கருதி வருகின்றனர். கற்பனைப் புருஷர் ஒருவரை நடுநாயகமாக வைத்துக்கொண்டு ஓர் இயக்கத்தைத் துவக்கிவிட முடியுமா என்னும் கேள்வியும் இதை ஒட்டியதாகும். ஆசாரிய புருஷர் ஒருவர் கற்பனையாக உண்டுபண்ணப் பெற்றவராயிருந்தாலும் அவர் எந்த லக்ஷியத்துக்காக உயிர் வாழ்ந்திருந்தார் என்று கற்பிக்கப்படுகிறதோ அந்த லக்ஷியம் என்றென்றும் உள்ளது. லக்ஷியம் ஒன்று மனிதனால் கற்பிக்கப்பட்டது என்பது பொருந் தாது. லக்ஷியம் என்றென்றுமே மாந்தர் உள்ளத்தில் இருந்து வருகிறது. அப்படி லக்ஷியம் ஒன்று உள்ளத்தில் எழுந்து கொண்டிருப்பவர்க்குக் கற்பனைப் புருஷன் ஆனாலும் சரி, சரித்திர பூர்வமான புருஷரானாலும் சரி, யாரோ ஒரு ஆசாரிய

புருஷரைப் பின்பற்றுவதுதான பக்தர்களுடைய இயல்பு ஆகும். கற்பனைப் புருஷர் ஒருவரைப் பின்பற்றுவதில் தோஷம் ஒன்று மில்லை. ஏனென்றால் அப்புருஷர் கற்பிக்கப்பட்டவரென்றாலும் அந்த லக்ஷியம் கற்பிக்கப்பட்டதன்று. அது என்றைக்கும் நித்யமாயுள்ளது.

ஆனால் உலக நன்மையின் பொருட்டு அவதார புருஷர்கள் ஆங்காங்குக் குறிப்பிட்ட காலங்களிலே தோன்றுவதுண்டு. அப்படித் தோன்றிய மகான்களில் ஒருவர் ஆகின்றார் ஏசுநாதர். அவரைக் கற்பனைப் புருஷர் என்று வாதாடுபவர்களோடு அவர்களை மறுத்து நாம் சம்வாதம் செய்யவேண்டிய அவசியமில்லை. ஏசுநாதர் சிறந்ததொரு தியாகமூர்த்தி. உயிர்களிடத்து அன்பே வடிவெடுத்தவர். அப்படி அவரைப்பற்றி நாம் சிந்திக்கும்பொழுதெல்லாம் நமது மனது இயல்பாக உயர்நிலைக்குப் போய்விடுகிறது. விவாதம் செய்வது வெறும் ஆராய்ச்சியாளரது பாங்கு. பெரியாரைப்போற்றி உயர்நிலைக்குப் போவது பக்தர்களின் இயல்பு. ஐதிகமாக இப்பொழுது உலகில் வந்துள்ள ஏசுநாதரின் வரலாறு கணக்கற்ற ஆத்ம சாதகர்களுக்கு உற்சாகமூட்டவல்லது. அப்படி உற்சாகம் தோன்றிக் கொண் டிருக்கும் பரியந்தம் ஏசுநாதரின் சொரூபம் மக்களது மனத்தை விட்டு அகன்றுவிடாது. பரமலக்ஷிய புருஷராகவே மாந்தர் உள்ளத்திலே அவர் திகழ்ந்து வருவார். நாம் பக்தரின் கண்கொண்டு அவரைக் காண்போம். சரித்திர ஆராய்ச்சியாளரின் பாங்கு நமக்குத் தேவையில்லை.

அவதார புருஷர் ஒருவர் உலகில் வரும்பொழுது அருள் சக்தி ஒன்றை அவர் உண்டுபண்ணுகிறார். அவருடைய ஸ்தூல உடல் மறைந்த பின்பும் அந்த அருள் சக்தி மாந்தர்க் கிடையில் இயங்குகிறது. நெடுங்காலத்திற்கு அந்த இயக்கம் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். தோன்றியவர் அவதார புருஷர் என்பதற்கு அதுவும் ஒரு அறிகுறியாகும். ஏசுநாதர் ஜீவியத்தில் அந்த அறிகுறியையும் காண்கிறோம்.

கேள்வி: *(629)* பாபமன்னிப்பு கிறிஸ்தவ மதத்தின் தனிச்சிறப்பு என்று அம்மதபோதகர்கள் சொல்லுகிறார்கள். பாபத்தை மன்னிக்கும் பெருங்கருணை தாங்கள் வணங்கும்

தெய்வத்திடத்து இருக்கிறதென்று அவர்கள் சிறப்பித்துச் சொல்லுகிறார்கள். அக்கடவுளின் ஏகபுதல்வர் ஆகிய ஏசுநாதருக்கும் மக்களின் பாபத்தை மன்னித்தருளும் அதிகாரம் இருக்கிறதென்றும் அவர்கள் புகட்டி வருகின்றனர். இன்றைக்கு அந்த ஏசுநாதரின் சரீரமாக அமைந்துள்ள கிறிஸ்தவ சமய சங்கத்தார்க்கே பாபத்தை மன்னிக்கும் அதிகாரத்தையும் ஏசுநாதரின் மூலம் கடவுள் கொடுத்திருக்கிறாராம். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் அனுபவிக்கும் தனியுரிமை இது என்று அவர்கள் போதிக் கிறார்கள். அம்மதத்தைச் சேராதவர்களுக்கு இத்தகைய அனுக்ரஹம் கிட்டாதாம். இந்த ஓர் எண்ணமே தங்கள் மதத்தைப் பற்றிப் பிரசாரம் செய்வதற்கும் அவர்களைத் தூண்டுகிறதாம். இக்கொள்கையை நாம் எங்ஙனம் ஏற்றுக் கொள்வது?

பதில்: பாபம் புண்ணியத்தைப் பற்றிய நம்பிக்கை எல்லா மதங்களுக்கும் பொதுவானது. பாபத்தை விலக்க வேண்டு மென்றும் புண்ணியத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் உலகிலுள்ள சமயங்கள் அனைத்தும் போதித்து வருகின்றன. கடவுளிடத்து நம்பிக்கை வைக்காதவர்களும் பாபத்தைத் தவிர்க்க வேண்டுமென்றும் புண்ணியத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்றும் சொல்லிவருகின்றனர். இதினின்று உண்மை ஒன்று வெளி யாகிறது. உலகிலுள்ள எந்த மனிதனும் பாபத்தை விரும்புவ தில்லை. புண்ணியத்தையே விரும்புகின்றான். புண்ணியத்தை விரும்புகின்ற மனிதன் பின்பு ஏன் பாபம் செய்கிறான் என்னும் கேள்வி எழலாம். அவனுடைய கீழான இயல்பு மனிதனைப் பாபத்தில் தள்ளுகிறது. மனிதனைக் கீழ்மைப்படுத்துவது எதுவோ அது பாபம். மனிதனை மேன்மைப்படுத்துவது புண்ணியம். மேன்மையடைவது எல்லார்க்கும் குறிக்கோள். மானுடவர்க்கம் முழுதும் மேன்மையை நாடி முயன்று கொண்டிருக்கிறது. அதற்கு வழிகாட்டுவது சமயம். ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு பாங்கில் மேன்மையடைவதற்கு வழிகாட்டுகிறது.

பாபமன்னிப்பு என்னும் கோட்பாட்டை இக்காலத்திய கிறிஸ்தவமதப் போதகர்கள் தங்கள் போக்கில் புகட்டு கிறார்கள். அவர்கள் புகட்டுவதுதான் உண்மை என்பதற்குத்

தக்க பிரமாணங்களை அவர்கள் காட்டமுடியாது. அவர்கள் புகட்டுவதை நம்பவேண்டும், அப்படி நம்பாவிட்டால் நரகப் பிராப்திதான் கதி என்று அவர்கள் போதிப்பார்கள். பாப புண்ணியத்தைப் பற்றிய அடிப்படைத் தத்துவத்தை அவர்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை என்பதற்கு அத்தகைய கொள்கையே சான்று ஆகிறது. அவர்கள் அப்படிப் புகட்டுவதால் தான் பல அறிஞர்கள் மதம் என்னும் குருட்டு நம்பிக்கை தங்களுக்கு வேண்டாம் என்று அதைப் புறக்கணிக்கின்றனர். பாபத்தை மன்னிப்பதற்கு அதிகாரத்தைப் பெற்றிருக்கின்ற தாங்களே எல்லா விதங்களிலும் பாபத்தினின்று விடுபட்டவர்கள் என்று தங்கள் வாழ்க்கையின் மூலம் அவர்கள் நிரூபிக்க முடியாது. பாப மன்னிப்பை மத பிரசாரத்துக்கும் பொருள் சம்பாதிப்பதற்கும் ஏதுவான ஒரு தொழிலாக அவர்கள் வைத் திருக்கிறார்கள். இதை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள் மட்டுமல்ல, மற்ற மதங்களிலும் பாபத்தைத் தவிர்க்க வல்லவர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் கூட்டத்தார்கள் இருக்கிறார்கள். ஹிந்து மதத்தில் உள்ள புரோகிதர்களில் பலர் அங்ஙனம் பகர்ந்து பொருள் சம்பாதித்து வருகிறார்கள். ஆங்கிலத்தில் இத்தொழிலுக்கு (Priestcraft) என்று பெயர். புரோகிதத் தந்திரம் என அதைப் பொருள்படுத்தலாம். தெய்வத்தின் பெயரால் சில சடங்குகளை மக்களுக்கிடையே புகுத்தி அதன் மூலம் பொருள் சம்பாதிப்பது புரோகித தந்திரத்தின் போக்காகும். ஒவ்வொரு மதத்திலும் இது ஒவ்வொரு வடிவெடுக்கிறது. சட்டதிட்டங்கள் போட்டு ஒருவிதமான புரோகிதத் தந்திரத்தைத் தடுத்தால் அது சாமர்த்தியமாக இன்னொரு வடிவெடுத்துவிடும். யார் எதைச் சொன்னாலும் அதை நம்பிக்கொள்கின்ற எளிய இயல்புடைய மக்கள் சமுதாயத்தில் இருக்கும் பரியந்தம் புரோகிதத் தந்திரம் தழைத்துக்கொண்டே வரும். எவ்வளவுதான் தடுத்தாலும் அதை அழித்துவிட முடியாது.

பாபமன்னிப்பு என்னும் கோட்பாட்டை தத்துவபூர்வமாக ஆராய்ந்து பார்ப்போம். பாவம், புண்ணியம் ஆகிய இரண்டும் கர்மபலன் எனப் பெயர் பெறுகின்றன. ஒன்று நல்வினை, மற்றது தீவினை. நல்வினையாற்றுபவன் நன்மையடைகின்றான்.

தீவினையாற்றுபவன் கேடு அடைகின்றான். இது இயற்கையின் அமைப்பு. இதைத் தடுக்கவோ, மாற்றவோ யாருக்கும் இயலாது. தீவினையை நல்வினையாக மாற்றிக்கொள்ள முடியும். அப்படி மாற்றிக்கொண்ட பிறகு மனிதன் விரைவில் தீமையினின்று மீண்டு நன்மையில் நிலைபெற்றவன் ஆகின்றான். கடவுளின் அருளைப் பெற்ற சில சான்றோர்க்குப் பிறருடைய தீவினைப் பயனைத் தடுத்து அவர்களை நல்வினையிலே நடத்த இயலுகிறது. அவர்களின் அத்தகைய அதிசயச் செயலே பாப மன்னிப்பு என்னும் பெயர் பெறுகிறது. யாரோ சிலரைத்தான் அவர்கள் அங்ஙனம் மாற்றியமைத்தார்கள். உலகத்தில் மேலும் வரப்போகின்ற பாபம் அனைத்தையும் அவர்கள் தங்களுடைய தாக ஏற்றுக் கொண்டார்கள் என்றும் அத்தகையவர்களைப் பெயர்ளவில் நம்புபவர்களுக்குப் பாபமன்னிப்பு என்னும் சலுகை கிடைக்கிறது என்பதெல்லாம் பொருளற்ற பிரசாரம். இயற் கையின் நியதிக்கு அது மாறுபட்டது. காரணத்துக்கேற்ற காரியம். சிறிய காரணத்தினின்று பெரிய காரியம் வந்துவிடாது. சான்றோர் காட்டியுள்ள செந்நெறியை மனிதன் உணர்ந்து தனது கீழான வாழ்க்கையைப் புறக்கணித்து விட்டு மேலான வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபடுவானாகில் அதைப் பாபமன்னிப்பு என்று சொல்லலாம். உண்மையில் தனது மனச்சாட்சியே தன்னை மன்னித்துவிடுகிறது. அம்மனிதன் மேன்மையடைகின்றான். ஆக, ஒவ்வொரு மனிதனும் தன் முன்னேற்றத்துக்குத் தானே பொறுப்பாளியாகின்றான்; தான் கீழ்மையடைவதற்கும் தானே பொறுப்பாளி. கீழ்மையை அகற்றி மேன்மையை நாடிச் செல்லு தற்குத் தெய்வ நெறி நம்மைத் தூண்டுகிறது. எந்தச் சமயத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் தெய்வ நெறியைக் கடைப்பிடித்து, வாழ்க்கையைச் செப்பனிட்டு மேலான மனிதன் ஆக ஒவ்வொரு வனும் கடமைப்பட்டிருக்கிறான்.

கேள்வி: *(630)* கிறிஸ்தவர்கள் தாங்கள் செய்த பாபங்களைச் சாமியாரிடம் சொல்லிவிட்டால் பாபம் நீங்கி விடுமாம். இது உண்மையா?

பதில்: பாபமன்னிப்பு என்பது கிறிஸ்தவ மதத்திலுள்ள முக்கியமான சம்பிரதாயங்களில் ஒன்று. மனிதர் செய்கின்ற

பாபத்தைக் கடவுள் மன்னிக்கிறார் என்றும், கடவுளினுடைய பிரதிநிதியாக இருக்கின்ற குருமார்கள் அதை மன்னிக்கிறார்கள் என்றும் கிறிஸ்தவர்கள் நம்பிவருகிறார்கள். குருமார்கள் பாபமன்னிப்புக் கொடுத்துவிட்டால் கடவுளே மன்னிப்புக் கொடுத்ததற்குச் சமானமென்றும் அவர்கள் நம்பி வருகிறார்கள்.

அவர்களுடைய நம்பிக்கையை நாம் முழுவதும் ஏற்றுக் கொள்வதில்லை. அதில் ஏகதேசம் உண்மை இருக்கிறது என்று ஏற்றுக்கொள்கிறோம். பாப மன்னிப்பு என்னும் கொள்கைக்குப் பதிலாகப் பாப விமோசனம் என்பது நமது கோட்பாடு. பாபச் செயல்கள் அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் அறியாமை அல்லது அக்ஞானம். நல்லறிவு பெற்றுவிட்ட மனிதன் திரும்பவும் பாபம் செய்யமாட்டான். சாம்பல் குவியலில் தீ இருப்பது ஒருவனுக்குத் தெரியவில்லை, அதனுள் நடந்தான். அது காலைச் சுட்டுவிட்டது. அந்த வலியை அவன் அனுபவித்தே ஆக வேண்டும். அந்த வலியை மன்னித்து விடுகிறேன் என்று யாரும் சொல்லமுடியாது. அந்த வலியின் வேகத்தை மருந்து முதலியன இட்டுத் தணிக்கலாம். ஏற்கனவே செய்த பாபச் செயலின் விளைவை விவேகம், திதிக்ஷை முதலிய சீரிய மனப்பான்மைகளைக் கொண்டு தணித்து விடலாம். பாப மன்னிப்பு என்பதற்குப் பதிலாக ஹிந்து மதத்தில் பிராயச்சித்தம் என்னும் கோட்பாடு இருக்கிறது. தாற்காலிகமாக மறைந்துபோன நல்லறிவைத் திரும்பவும் பெற்றுவிடுவது என்பது அதன் கோட்பாடு. அக்ஞான நிலையில் இருக்கும் ஒருவன் உடலைத் தன்னுடைய யதார்த்த சொரூபம் என்று நினைக்கின்றான். அப்படி நினைத்துக்கொண்டிருப்பவன் தன் வினைப்பயனை அனுபவித்தே ஆகவேண்டும். பிராரப்த கர்மத்தைக் கடவுளாலும் மாற்றமுடியாது என்பது ஹிந்துமதக் கோட்பாடு. பின்பு குருக்கள் அதை மன்னித்து விடுகிறார்கள் என்பது பொருளற்ற நம்பிக்கை. குருடன் குருடனுக்கு வழிகாட்டுதற்கு அது ஒப்பாகும். ஆனால் கடவுள் கிருபையால் அல்லது ஒரு நிறைஞானியின் அனுக்ரஹத்தால் மனிதன் ஒருவன் ஞானத்தைப் பெறமுடியும். ஞானம் வருகிறபொழுது உடல் உணர்வு போய்விடுகிறது. அப்பொழுது உடலை வாட்டும் துன்பம் ஆத்மாவை வந்து தொடுவதில்லை. குளோரோபாம் முதலிய மருந்து வகைகள்

உடலுக்கும் உள்ளத்துக்கும் உள்ள தொடர்பைத் தாற்காலிக மாகப் பிரித்துவைத்து விடுகின்றன. மேலும் அம்மருந்து வகைகள் மனதுக்கு ஒருவித மயக்க நிலையை உண்டுபண்ணுகின்றன. ஆனால் நிறைஞானமோ தெளிந்த நிலை, தன்னையும் தன் தலைவனையும் முற்றிலும் உணர்ந்த நிலை. உடலுக்குத் தான் அந்நியமாக இருந்து உடலிலிருந்து வரும் உபாதிகளையெல்லாம் சாக்ஷியாகப் பார்த்திருக்கும் பெருநிலை ஞானிக்கு வருகிறது. இதுவே வேதாந்தத்தின் கோட்பாடு. வெறுமனே பாபமன்னிப்பு என்னும் சடங்கு மனிதனை மேலோனாக மாற்றுவதில்லை. குருட்டு நம்பிக்கையோடு இதைச் சேர்த்துவிடுவது மிகையாகாது. உண்மையான மத அனுஷ்டானத்தில் இது இடம்பெறாது. Confession அல்லது பாபத்தைப் பெரியோரிடம் மனம் நொந்து சொல்லிவிட்டுத் திரும்பவும் அச்செயலில் ஈடுபடுவதில்லை என்ற தீவிரமான உணர்வு ஒருவனுக்கு உண்டாகுமானால் அதில் பயன் உண்டு. உண்மையாகவே அவனுடைய வாழ்வு பிறகு நல்வாழ்வாக மாறிவிடும். ஆதலால் பாபமன்னிப்புச் சடங்குக்குப் பிறகு அம்மனிதன் எத்தகைய வாழ்க்கை வாழ்ந்து வருகிறான் என்பதைப் பார்த்துத்தான் அச்சடங்கின் சிறப்பை நாம் உறுதிகட்ட முடியும். இன்றைக்கு நாம் உலகில் பார்த்து வரும் பாபமன்னிப்புச் சடங்கு பெரிதும் பொருளற்றது. தகுந்த சான்றோர்களிடத்தில் தன் குற்றத்தை எடுத்துச்சொல்லி மேலும் அத்தகைய செயலில் இறங்குவதில்லை என்று தீர்மானிப்பது ஒரு நல்ல முறையாகும். நேர் கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணித் தனது குறைபாடுகளையெல்லாம் நீக்கிவிட வேண்டு மென்று மனமார அவரை வேண்டிக்கொள்ளுதல் அதைவிடச் சிறந்த முறையாகும். எப்படியும் மனிதன் நல்லவனாக வேண்டும்.

கேள்வி: *(631)* ஹிந்துப் பத்திரிகையில் போப்பாண்டவர் ஐந்து பெரியாருக்கு முனிவர் பட்டம் வழங்கியதாக (Canonisation) ஒரு செய்தி வெளியாயிற்று. அந்தப் பஞ்ச முனிவருள் ஒருவர் இத்தாலியைச் சேர்ந்த பையன். டாமினிகோ சேவியோ என்ற பெயருடையவர். கிறிஸ்தவ முனிவருள் மிக இளைஞர் இவர்தானாம். இவர் 1842-இல் பிறந்து 1857-இல் உயிர்த்தார். இவர் ஜான்பாஸ்கோ

என்பவருடைய சீடர். இந்த இளைஞரைப் புனித வர்க்கத்தில் சேர்ப்பதற்குக் காரணமாயிருந்த செயல்களுள் ஒன்று 1928-ஆம் ஆண்டில் இவருடைய மகிமை காரணமாக ஏழு வயதுக் குழந்தையொன்று சொஸ்தப்படுத்தப்பட்டதாம். பதினைந்து வயதான பெண் ஒருத்தியும் வெகு நாட்கள் நோயுற்றிருந்து குணமடைந்ததற்கும் இவருடைய அருள் காரணமாயிருந்ததாம். இத்தகைய அற்புத நிகழ்ச்சிகளைக் காரணமாகக்கொண்டு புனிதத்தன்மையை நிர்ணயிப்பது புராதன வேதாந்தத்திற்கோ, நவீன மனப்பான்மைக்கோ சரியெனத் தோன்றவில்லையே?

பதில்: வேதாந்தக் கோட்பாட்டின்படி மனபரிபாகம் அடைந்துள்ள மேன்மகன் ஒருவனை முனி என்று மொழியலாம். முற்றிலும் மனபரிபாகம் அடைந்துள்ளவன் மெய்ப் பொருளைக் காணத் தகுதியுடையவன் ஆகின்றான். வேதாந்தம் பகர்ந்துள்ள இக்கோட்பாடு கிறிஸ்தவ மதத்துக்கும் ஒப்பமுடிந்ததாகும். `Blessed are the pure in heart for they shall see God' என்பது கிறிஸ்தவ மறைமொழியாகும். நோய்களை அகற்றுவது பாரமார்த்திகச் செயல் என்று வேதாந்தம் அங்கீகரிப்பதில்லை. ஒரு ஜீவனுக்கு நோய் வருவது அவனுடைய வினையின் விளைவு. இந்த நோயை அகற்ற முயலுபவன் அவன் வினைப் பயனைத் தன் சொந்த வினைப்பயனாக எடுத்துக்கொள்ள வேண்டும். கருணை நிறைந்த யாரோ சிலர் அங்ஙனம் செய்கின்றார்கள். ஆயினும் அது சான்றோருடைய சிறந்த செயல் என்று அங்கீகரிக்கப்படுவதில்லை. இக்காலத்தில் faith cure என்பது உலகறிந்த விஷயமாகும். மந்திர சிகிச்சை என அது அழைக்கப்படுகிறது. மனதின் துணையைக்கொண்டு மனதை ஒழுங்குபடுத்துவதால் அது நிகழ்கிறது. அது ஒருவித பரோப காரமேயாகும். சாமான்ய மக்கள் பலர் அத்தகைய செயல்களைச் செய்து வருகின்றனர். தங்களுடைய பெருமையின் பொருட்டு அத்தகைய செயல்களைச் செய்தால் அவர்கள் ஆணவம் படைத்த கீழ்மக்கள் ஆய்விடுகின்றனர். பரநலத்தின் பொருட்டுச் செய்தால் அவர்கள் நல்லவர்கள் என்று அங்கீரிக்கப்படுகிறார்கள். ஆனால் அச்செயலை முன்னிட்டு அவர்களை முனிவர்கள் என்று அழைப்பது பொருந்தாது.

பிறகு முனிவர் பட்டத்தை மக்கள் வழங்குவது உலக சம்பிரதாயத்தில் நல்லது ஒன்றாக இருக்கலாம். இவர்கள் அத்தகைய பட்டத்தை வழங்கியதின் விளைவாக அவர்கள் முனிவர்கள் ஆய்விட்டார்கள் என்ற நம்பிக்கையானது தத்துவத் துக்கு முரண்பட்டது. வியவகாரிக உலகுக்கு ஏதோ ஓரளவு அது நன்மை செய்கிறது என்று அச்செயலின்கண் நாம் உதா சீனர்களாக இருந்துவிடலாம். ஆனால் ஆத்மபரிபாகத்துக்கும் அத்தகைய செயலுக்கும் வெகுதூரம் என்பதை உறுதி கூறுகிறோம்.

கேள்வி: *(632)* ஆதாம் என்ற ஆதி மனிதன் அறிவு மரத்தைச் (Tree of Knowledge) சுவைத்ததும் வீழ்ச்சியுற்றதாகக் கூறுவதின் பொருள் என்ன? அறிவு, மனிதனை உயர்த்தும் சாதனமல்லவோ?

பதில்: இவ்விஷயம் விவிலிய நூலில் சொல்லப்பட்டிருக் கிறது. வேதாந்தபூர்வமாக இதை ஆராயுங்கால் இது முற்றிலும் மெய் என்பது நமக்கு விளங்கும். பிரம்மதேவன் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்க முற்பட்டார். அப்படி அவர் செய்த முயற்சியில் முதலில் இரண்டு மூன்று தடவைகளில் அவர் ஒருவாறு தோல்வி யுற்றார். ஏனென்றால் அவருடைய மானச புத்திரர்களாக வந்த மக்கள் நிவிருத்தி மார்க்கத்திலேயே பரம்பொருளை நாடிப் போய்விட்டனர். பிரஜாவிருத்திக்கு அவர்கள் பயன்படவில்லை. அதன்பிறகு இன்னும் கொஞ்சம் கீழ்நிலையில் இருந்த பிரஜாப திகளைச் சிருஷ்டி பண்ணியபொழுதே உலகில் சந்தான விருத் தியும், உயிர்களின் பெருக்கும் நிகழ்வனவாயின. விவிலிய நூலில் சொல்லப்பட்டிருக்கும் அறிவுமரம் பஞ்சேந்திரியங்களுக் குரிய விஷய ஞானமாகும். பஞ்சேந்திரியங்களை அடக்கியிருப் பவர்கள் பெறுவது பரம்பொருளின் காட்சி. அதற்கு மாறாகப் பஞ்சேந்திரியங்களைப் பயன்படுத்தி அவைகள் வாயிலாக விஷய நுகர்ச்சி பெறுகிறவர்களுக்குப் பிரகிருதியின் காட்சி வருகிறது; ஆதாம் என்னும் ஆதிமனிதன் ஆரம்பத்தில் பரம்பொருளைக் காண்கிற நிவிருத்தி நிலையில் இருந்தான். பிறகு ஐம்பொறி களைப் பயன்படுத்துதல் என்னும் பிரகிருதி ஞானப்பழத்தை அறிவு மரம் என்னும் பிரகிருதியினிடத்திருந்து ஏற்று உண்டான்.

அவனுக்கு விஷய ஞானம் வந்தது. பரஞானம் மறைந்தது. பாரமார்த்திகப் பெருநிலையினின்று பிரபஞ்ச ஞானம் என்னும் கீழ்நிலையில் வீழ்வானாயினன். பிறக்கும் குழந்தைகளெல்லாம் துவக்கத்தில் ஐம்பொறிகளை உபயோகப்படுத்தாது தெய்வீக நிலையில் இருக்கின்றன. ஐம்பொறிகளை உபயோகப்படுத்த ஆரம்பிக்கும்பொழுது அவைகள் படிப்படியாகக் கீழ்நிலைக்கு வந்துவிடுகின்றன. ஆக, ஆதாமுக்கு உண்டான வீழ்ச்சி இன்றைக்கும் மக்களுக்கு நேர்ந்துகொண்டிருக்கிறது. ஐம்பொறிகளைக் கட்டி ஆண்டு வருகிறவர்கள் மீண்டும் பாரமார்த்திகத் தூய நிலைக்குப் போய்விடுகின்றனர். என்ன செய்தால் மேன்மையுறலாம், எதினின்று வழுவினால் மனிதன் கீழ்மையுறுகிறான் என்னும் வேதாந்தக் கோட்பாடு இந்த நிகழ்ச்சியில் அடங்கி இருக்கிறது. ✯

45. புத்தமதம்

கேள்வி: (633) தர்மசக்கர இதழ் ஒன்றில் ஆத்மாவின் முக்திநிலை என்ற கட்டுரையில் "பௌத்தர்களுக்கிடையில் ஒரு கூட்டத்தார் ஆத்மா என்பது இல்லை என முடிவு கட்டுகின்றனர்" எனக்கூறிப் பின் "ஆத்மா ஒன்றுதான் உள்ளது என்கிற கட்சியைத்தான் முடிவில் நாம் சேர்ந்தாக வேண்டும், யுக்திக்கும் அனுபவத்துக்கும் பொருத்தமானது அது ஒன்றே" என்றும் கூறியிருக்கிறீர்கள்.

பின்னர் வரும் புத்தர் வேள்விகளை விலக்கியவிதம் என்கிற கட்டுரையில் "கௌதமர் கூற்று முற்றிலும் மெய். நிறைமொழியின் வேகத்தை அளக்க யாரேவல்லவர்" என்று புத்தர் பெம்மானின் பெருமையைப் புகழ்ந்திருக்கிறீர்கள்.

(1) இவ்விரு கட்டுரைகளும் என்போன்றோர்க்கு மலைப்பை உண்டுபண்ணுகின்றன. புத்தர் பெம்மானுடைய வாக்கு நிறை மொழியாயின் அவரது சமய, தத்துவஞானம் யுக்திக்கும் அனுபவத்துக்கும் பொருத்தமற்றது ஆதல் எங்ஙனம்? புத்தர் கூற்று ஒருபுறம் இருக்கப் பௌத்தர்களுக் கிடையில் ஒரு கூட்டத்தார் எனத் தாங்கள் குறிப்பிடுபவர்கள் வேறொரு நெறியில் தத்துவ வாதம் புரிகின்றனர் என்பது தங்கள் கருத்தா? புத்தர் ஆத்மா இல்லை என்று சொல்ல வில்லை என்று கருதுகிறீர்களா?

(2) அத்வைத வாதிகள் - வேதாந்திகள் வேதத்தை நிந்தியார் என்று எண்ணுகிறேன். வேதத்தை இகழ்ந்த புத்தரை வேதாந்திகள் எக்காரணங்களுக்காகப் போற்று கின்றனர்?

(3) யாகத்தில் கொல்லப்பட்ட ஜீவன் மேலாம்

நிலைக்குப் போகிறது என்று உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கௌதமர் கேட்டார். போகவில்லை என்பது உங்களுக்கு எப்படித்தெரியும் என்று எதிர்வினா வேதியர் விடுத்திருந்தால் புத்தர் என்ன சொல்லியிருப்பார்? இவற்றிற்கான விளக்கத்தைத் தருவிக்க வேண்டுகிறேன்.

பதில்: உலகில் மத ஸ்தாபகர்கள் பலர் வெவ்வேறு காலங்களில் தோன்றியிருக்கின்றனர். இனியும் மத ஸ்தாபகர்கள் தோன்றுவார்கள். இந்த மத ஸ்தாபகர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பார்களானால் அவர்களுக்கிடையில் கருத்துவேற்றுமை வந்துவிடாது. ஆனால் இவர்களைப் பின்பற்றுகின்ற மதவாதிகளுக்கிடையில் என்றைக்குமே கருத்து வேற்றுமை இருக்கும். அதற்குத் தகுந்த காரணமும் இருக்கிறது. மதவாதிகள் நாளடைவில் சான்றோர் மொழிந்த மேலாம் தத்துவங்களுக்குத் தங்கள் அறிவுக்கு எட்டும் வியாக்கியானங்களைக் கொடுத்துவிடுகின்றனர். அத்தகைய சங்கடத்தில் புத்தர் பெம்மானும் இருக்கின்றார். அக்காலத்திய சூழ்நிலையை அனுசரித்துப் புத்தர் ஆத்மாவைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ ஒரு பேச்சும் பேசவில்லை. அவர் ஒன்றும் பேசாததினால் அவரைப் பின்பற்றுகின்றவர்களில் ஒரு கூட்டத்தார் ஆத்மா இல்லை என்கின்ற முடிவுக்கும், கடவுள் இல்லை என்கின்ற முடிவுக்கும் வந்துள்ளார்கள்.

நல்வாழ்வு வாழ்வதைப் புறக்கணித்து விட்டு மக்கள் மறுமையைப்பற்றி மனக்கோட்டை கட்டுபவர்களாக இருந்தார்கள். அதற்கு நேர்மாறாக இம்மையைப் பற்றியே புத்தர் வற்புறுத்தினார்.

நாளடைவில் தோன்றிய பௌத்தர்களுள் ஒரு கூட்டத்தினர் க்ஷணிக விஞ்ஞானவாதம் என்னும் ஒரு கோட்பாட்டைப் புகட்டி வந்தார்கள். எரியும் தீபத்தில் ஒரு க்ஷணத்துக்கு முன்பு எரிந்த பகுதிக்கும், ஒரு க்ஷணத்துக்குப் பின்பு எரிகின்ற பகுதிக்கும் தொடர்பு இல்லை - தொடர்பு இருப்பதுபோன்று தென்படுகிறது. அந்தத் தீபம் போன்றது ஆத்மப்பிரக்ஞை என்று அவர்கள் வாதித்து வந்தார்கள். இந்தக் கோட்பாடு வேதாந்தத்துக்குச் சம்மதமல்ல. புத்தரும் இந்தப் பேச்சை எடுத்துக்கொள்ளக் கிடையாது. ஆகவே, மலைப்புக்கு இடமில்லை.

(2) இக்கேள்வி கேட்கின்றவர் அத்வைதிகள் என்பவர் களுக்குத் தம்முடைய சொந்த விளக்கம் கொடுக்கின்றார். விஷயம் தெரிந்தவர்களுக்கு அது ஏற்புடைய விளக்கமன்று அத்வைதிகளுக்குச் சர்வகாலமும் முன்மாதிரியாக இருப்பவர் ஜகத்குரு ஆதிசங்கரர். அவர் ஷண்மதங்களை ஸ்தாபிக்க வந்தவர். சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், காணா பத்யம், சௌரம் ஆகிய இந்த ஆறும் வேதத்தைத் தழுவிய வைகள் என்று அவர் நிரூபித்திருக்கிறார். ஆகமங்கள் வேதத்தைத் தழுவியவைகள் என்றும் அவர் நிரூபித்திருக்கிறார். ஆக, வேதம் என்னும் அஸ்திவாரத்தில் அவர் வைதிக வாழ்க்கை யைத் துவக்கிவைக்கிறார். வேதாந்தம் என்னும் முடிவுக்கு அதைக் கொண்டு சேர்க்கிறார். வேதத்தின் முடிவு வேதாந்தம். வேதமும், ஆகமமும் நெறிகள். வேதாந்தம் குறி. ஜீவாத்மா பரம்பொருளில் இரண்டறக்கலத்தல் அத்வைதம். இது வேதத்தின் முடிவு. ஆதலின் வேதாந்தம் எனவும் பகரப்படுகிறது. வேதம், ஆகமம் ஆகியவைகளின் பயனை உள்ளபடி அறிகின்றவனே வேதாந்தி. ஆறு சமயங்களுக்கிடையில் உள்ளபடி சமரசத்தை முறையாகக் காண்பவன் அத்வைத வேதாந்தி ஒருவனே. ஆதிசங்கரருடைய வாழ்க்கையே அதற்குச் சான்றாகும். அத்வைதிகள் வேதத்தை நிந்திப்பது யுவன் ஒருவன் தன் குழந்தைப் பருவத்தை நிந்திப்பதற்கு ஒப்பாகும். வேதத்தை நிந்திக்கிற அத்வைதிகள் இல்லை.

க்ஷீணதசை அடைந்த புத்தமதத்தை நிராகரிக்க வந்த ஆதிசங்கரர் புத்தர் புகட்டிய பெருநெறியிலுள்ள மேலாம் கோட்பாடுகளையெல்லாம் அங்கீகரித்துக்கொண்டார். தத்துவத் துக்கு ஒத்திருக்கும் நன்னெறிகளை ஏற்றுக்கொள்வதும் தத்துவத் துக்கு முரண்படும் தீய நெறிகளை அகற்றுவதும் சான்றோர் செயல் ஆகும். அதைத்தான் சங்கரர், விவேகானந்தர் போன்ற வேதாந்திகள் செய்து வந்தார்கள். அன்றைக்குப் புத்த மதத்தி லிருந்த நல்ல பகுதிகளைச் சங்கரர் எடுத்துக்கொண்டது போன்று கிறிஸ்துவ மதத்திலுள்ள நல்ல பகுதிகளை இன்றைக்கு விவேகானந்தர் எடுத்துக்கொண்டுள்ளார்.

புத்தருடைய ஜீவிதத்தையும் போதனைகளையும் ஆராய்ச்சி செய்யும் கூட்டத்தார் இன்றைக்கு உலகெங்கும் இருக்கிறார்கள்.

தத்துவ ஆராய்ச்சிக்காரர்கள் அனைவரும் புத்தர் பெம்மானை (Agnostic) அக்னாஸ்டிக் என்று ஒத்துக்கொள்கிறார்கள். அக்ஞேய வாதி என்பது அதன் பொருள். கடவுளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்பதுதான் அதன் பொருள். நாஸ்திகம் அதனுடைய பொருள் ஆகாது. புத்தர் நாஸ்திகர்கள் கூட்டத் தைச் சேர்ந்தவர் அல்லர். அத்வைத வேதாந்தம் புகட்டும் நிர்விகல்ப சமாதியை அடைந்தவர் அவர். நிர்வாணம் என்னும் பதத்தை அவர் அதற்குப் பிரயோகிக்கிறார். நிர்விகல்ப சமாதி யைக் குறித்து அதை அடைந்துள்ள தாயுமான சுவாமிகளும் விளக்கியிருக்கிறார். "அன்றென்றும் ஆமென்றும் உண்டோ" என்கிறார் தாயுமானவர். அந்த நிலையைச் சொல்லில் விளக்க முடியாது என்பது கருத்து. மறைமுடி அல்லது வேதாந்தங் களாகிய உபநிஷதங்களும் அதைச் சொல்லால் விளக்கமுடியாது என்கின்றன. ஆதலால் புத்தர் அதைக்குறித்து ஒன்றும் பேசாது விட்டுவிட்டதில் வியப்பொன்றுமில்லை.

(3) வேதியர்களுக்குப் புத்தர் என்ன பதில் சொல்லி யிருப்பார் என்பது இக்கேள்வி. புத்தர் பெம்மானுடைய வரலாற்றை சாமான்யமாக ஆராய்ந்திருப்பவர்களும் இதற்கு எளிதில் விடைகொடுத்து விடுவார்கள். முற்றிலும் யுக்திக்குப் பொருத்தமான நிலையைப் புத்தர் பகவான் எடுத்துக்கொண்டார். "வேள்வியில் மறைந்த உயிர்களுக்கு மறுமையில் நலம் வருவதா யிருந்தால் அதற்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. உண்மையில் என்ன நிலை அவ்வுயிர்களுக்கு மறுமையில் வருகிறது என்பது எனக்குத் தெரியாது. மறுமைச் சுகத்தை முன்னிட்டு இம்மையில் எவ்வுயிர்க்கும் துன்பம் விளைவிக்க நான் ஒருப்படேன். கண்கூடாகத் தெரியும் இவ்வுலகில் உயிர்களுக்கெல்லாம் இன்பம் விளைவிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் நான் எடுத்துக் கொள்வேன். அதனால் எனக்கு விளையும் இன்னல்களை நான் பொருள்படுத்தேன். மற்ற உயிர்களின் நலத்தை முன்னிட்டு என் வாழ்வை அறவே ஒப்படைப்பதைவிட உயர்ந்த பதவி ஒன்றை எவ்வுலகிலும் நான் அறியேன்." இக்கோட்பாட்டைத் தான் அவர் ஆயுட்காலமெல்லாம் கடைப்பிடித்து வந்தார். ஆக, அவருடைய வாழ்க்கையே இக்கேள்விக்கு விடையாக வந்தமைகிறது.

கேள்வி: *(634)* வேதங்களை நிந்தித்ததின் காரணமாகப் பகவான் புத்தர் அவதாரம் எடுத்து நிந்திக்கப்பட்டார் என்று மகான் துளசிதாஸர் கூறுகிறார். பகவான் வேதங்களை நிந்தித்தது எங்ஙனம்? புத்த அவதாரம் எடுத்து நிந்திக்கப் பட்டது எங்ஙனம்?

பதில்: இக்கேள்வியில் அடங்கியுள்ள கருத்து புராணங் களைப் படித்திருக்கிறவர்கள் சிலருக்கிடையில் இருந்துவருகிறது. வேதம் எது, அதை நிந்தித்தல் என்றால் என்ன என்னும் கோட்பாடுகளைத் தத்துவபூர்வமாக ஆராய்ந்து பார்க்கின்றவர் களுக்கு இக்கேள்வியும் அதில் அடங்கியிருக்கிற பொருளும் பொருளற்றவைகள் என்பது புலப்படும். மேலும் சரித்திர பூர்வமாகப் புத்தரையும் அவருடைய பேரியக்கத்தையும் ஆராய்ந்து அறிந்திருப்பவர்களுக்கு இக்கேள்வி பொருளற்றது என்பது நன்கு விளங்கும். இயற்கையின் நடைமுறையை உள்ளபடி விளக்குவது எதுவோ அது வேதம். வேதம் என்னும் பெயர் படைத்து மக்களுக்கிடையில் நெடிது காப்பாற்றி வைக்கப் பட்டிருந்த நூல்கள் அனைத்தும் வேதங்கள் ஆய்விடமாட்டா. மக்கள் வேதங்கள் என்று நம்பிவந்த சில நூல்களில் பூமியைச் சுற்றிக்கொண்டு சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் சஞ்சரிக் கின்றனவென்று எழுதி வைத்திருக்கிறார்கள். இக்கோட்பாட்டை வேதவாக்கியம் என்று நம்பிவந்த கூட்டத்தார் ஒருகாலத்தில் இருந்தார்கள். வேத நூல்களில் உண்மைக்கு ஒத்துள்ள மேலாம் கோட்பாடுகள் பல இருக்கின்றன. அதே வேத நூல்களில் உண்மைக்கு ஒவ்வாத சிறுநெறிகள் பலவற்றைச் சுயநலம் படைத்திருந்த மக்கள் செருகி வைத்தார்கள். உலகிலுள்ள எல்லா சமுதாயங்களிலும் இத்தகைய பொருந்தாத செயல்கள் நிகழ்ந்திருக்கின்றன.

வேதத்தில் பொருளற்ற பகுதிகள் புகுந்திருந்தன. புத்தர் பெம்மானுடைய வாழ்க்கை அப்பொருந்தாத பகுதிகளைப் புறக்கணிப்பதற்கென்றே வந்து அமைந்தது. வேதத்தை நேரடி யாக எதிர்க்காது வேதத்தின் பெயரால் நிகழ்ந்த வேள்விகள் போன்ற பல பொருளற்ற செயல்களைப் புத்தர் துடைத்து விட்டார். எனவே சரித்திர பூர்வமாக அவருடைய ஜீவிதத்தையும் அவர் செய்திருந்த அரும்பெரும் செயல்களையும் ஆராய்ந்து

பார்த்தால் வேதத்தில் புகுந்திருந்த கசடுகளைப் புறக்கணிப் பதற்கென்றே அவதரித்தவர் என்று அவரைப் பற்றிச் சொல்ல வேண்டும். வேதத்தை அவர் நிந்தித்தார் என்பது உண்மைக்கு ஒவ்வாத கூற்று ஆகும். அவருடைய ஜீவிதத்தைப் பல பாங்கு களில் பல சிஷ்யர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்துச் சமயத்தின் பெயரால் சமுதாயத்தில் பழக்கத்தில் இருந்துவந்த பொருந்தாத சடங்கு களையே அவர் நிராகரித்தார் என்பது தெளிவுபட விளங்கும்.

க்ஷீணதசை அடைந்திருந்த பௌத்த மதத்தைப் பிற்காலத்தில் நாட்டினின்று அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்பொழுது நூலாசிரியர்கள் பலர் தங்களுக்குத் தோன்றிய சில கருத்துக்களைப் புராணங்களில் புகுத்தி வைத்தார்கள். அவர்கள் புகுத்திவைத்த கருத்துக்களுள் புத்தர் வேதத்தை நிந்தித்தார், ஆதலால் அவர் மக்களால் நிந்திக்கப்பட்டார் என்னும் கொள்கை பிற்காலத்தில் உண்டானது. இதைப் பகர்ந்தது யாராக இருப்பினும் அது பொருளற்றது என்று புறக்கணித்து விடுவதே உசிதம். பொதுமக்களுக்குப் புத்தர் பெம்மான் செய்திருக்கின்ற பெருநன்மையை வேறு எந்த அவதார புருஷரும் செய்யவில்லை என்று தேச சரித்திர பூர்வமாக நாம் எடுத்துக் காட்ட முடியும்.

புத்த மதத்தைப் புறக்கணித்திருக்கிற வைதிக மதஸ்தர்களே புத்தரை ஓர் அவதாரமாக அங்கீகரித்திருக்கின்றனர். இன்றைக்கு உலக முழுதிலும் இருக்கிற ஜனத்தொகையைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால் புத்தரைப் போற்றுகின்றவர்கள் உலக மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் என்பது விளங்கும். எனவே புத்தர் தூற்றப்படுவதற்குப் பதிலாக யாண்டும் போற்றப்பட்டு வருகிறார் என்றே பகரலாம். மதத்தின் உட்கருத்தை உள்ளபடி அறிந்துகொள்கின்ற பெருமக்கள் அனைவரும் புத்தரைப் போற்றாது இருக்கமுடியாது. அவரைத் தூற்ற முயலுகின்றவர்கள் வெறுமனே தங்களிடத்துள்ள அறியாமையையே விளம்பரப் படுத்துகின்றனர்.

கேள்வி: *(635)* புத்தர் இறைவனைப்பற்றி ஏதும் கூறாமல் ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்றும் பிறவிப்

பிணியிலிருந்து விடுபட எட்டு விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கூறுகிறார். அதன்படி இறைவனை வழிபடாமல் அந்த எட்டு விதிகளைக் கடைப்பிடித்தால் போதுமா?

பதில்: புத்தர் பெம்மான் கடவுளைப்பற்றி உண்டு என்றோ இல்லை என்றோ யாதும் பகராதிருந்ததற்குக் காரணம் அக்காலத்திய சூழ்நிலையேயாம். கடவுள் வழிபாட்டின் பெயரால் மிகைபட உயிர்ப்பலியிடுவது அக்காலத்தில் இருந்துவந்த பெரிய கொடுமையாம். அக்கொடுமையை அகற்றுவது புத்தர் பெம்மானுடைய முக்கியமான கடமையாய் இருந்தது. கண் கூடாகத்தென்படும் உயிர்களை முதலில் நேசித்துப் பழகுங்கள். அவைகள் வைத்திருக்கின்ற உயிர்ப்பற்று விவேகிகள் வைத்திருக் கின்ற உயிர்ப்பற்றை விட அதிகமானது. அவைகளை அன்புடன் நேசித்து அவைகள் வாழ்ந்துவரும் வாழ்க்கைக்கு உறுதுணை யாவது மனிதனுடைய மேலான கடமை என்று புத்தர் வற்புறுத்துகிறார். கண்கூடாகத் தென்படுகின்ற உயிர்வகைகளை நன்கு நேசிக்கத் தெரிந்துகொள்ளாதவன் தனக்குத்தானே கற்பனை பண்ணிக்கொள்ளும் தெய்வத்தை நேசிப்பதாக அவன் பாசாங்கு பண்ணுகின்றான். அப்படிப் பாசாங்கு பண்ணுவதை விட வாழ்ந்திருக்கும் உயிர்வகைகளின் இன்பத்தை வளர்ப் பதன் வாயிலாக மனிதன் மேன்மையுறுகிறான். அவன் அடை கின்ற மேன்மையும் வெளிப்படையாக விளங்குகிறது. சுயநலம் படைத்துள்ள மனிதன் தான் கற்பனை பண்ணிக்கொள்ளும் தெய்வத்துக்கு உயிர்ப்பலியின் வாயிலாகச் செய்யும் வழிபாட்டில் அவன் எந்த நன்மையும் அடைவதில்லை என்பது வெளிப்படை. புத்தர் புகட்டிய எட்டு விதிகளைக் கையாளுவதன் வாயிலாக மனிதன் மேன்மையடைவது வெளிப்படை. இங்ஙனம் புத்தர் புகட்டியது நம்முடைய யுக்திக்கும் அனுபவத்துக்கும் ஒத்ததாம்.

மற்ற எந்த விதத்திலும் பிற உயிர்களைக் கடவுள் வழி பாட்டின் பெயரால் வதை செய்யாதிருப்பது பாராட்டத்தக்க பெரிய செயலாம். உயிர்களோடு மனிதன் வைக்கின்ற நல்லி ணக்கத்தின் வாயிலாக அவனுடைய அந்தக்கரணம் சுத்தி அடைகின்றது. சுத்தி அடைந்த அந்தக்கரணத்தில் மெய்ப் பொருள் தானே விளங்குகின்றது. அங்ஙனம் தானே

விளங்குகின்ற பொருளைப்பற்றி ஒன்றும் பேசாமல் புத்தர் பெம்மான் மௌனமாயிருந்ததும் பொருந்தியதேயாம்.

நாம் தீவிரமாகக் கடவுள் வழிபாட்டிலும் இறங்கலாம்; புத்தர் பெம்மான் புகட்டிய எட்டு விதிகளையும் தீவிரமாகக் கையாளலாம். அவைகளுக்கிடையில் முரண்பாடில்லை.

கேள்வி: *(636)* புத்த மதம் இந்தியாவில் அழிந்தது ஏன்?

பதில்: புத்த மதம் இந்தியாவில் அழிந்துபட்டுப் போக வில்லை. இப்பொழுது நம் நாடெங்கும் அனுஷ்டித்து வருகின்ற ஹிந்து மதம் என்பதில் முக்கால் பகுதி புத்த மதமாகவும் எஞ்சியிருக்கின்ற கால்பகுதி மட்டும் பழைய வைதிக மதமாகவும் இருந்து வருகிறது. ஆகமம் என இயம்பப்பெறுகிற ஹிந்துமதக் கோட்பாடுகள் உண்மையில் புத்தமதமாம். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் கோட்பாடு புத்த் மதத் தினின்று வந்ததாம். புத்தர் பெம்மான் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு அவதரித்தவர். அவர் புகட்டிய மதத்தில் இரண்டு கூறுகள் உள்ளன. பொதுமக்களுக்கென அமைக்கப்பட்டது பஞ்சசீலமாம். அவையாவன அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், அபரிக்ரஹம் என்பனவாம். இந்த ஐந்துவித ஒழுக்கங்களைத் தமிழ் மொழியில் எடுத்து இயம்புங்கால் அவை கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பொறிபுலனில் செல்லாமை, பொருள்மிகப் படையாமை எனப் படுகின்றன. மற்றுத் தீவிரமாக மத அனுஷ்டானத்தில் ஈடுபடு கின்ற பண்பட்டுள்ள அதிகாரிகளுக்கு அவர் நிர்வாணம் என்னும் கோட்பாட்டைப் புகட்டினார். இரண்டாவது இயம்பிய கோட் பாட்டைச் சரியாக அறிந்துகொள்ள முடியாத ஒரு இயக்கத்தில் அது சூனியவாதமென வடிவெடுத்தது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் கீழ்நிலைகள் அனைத்தும் அதனின்று வடிவெடுத்தன. அது லோகாயதம் எனப் பெயர் பெற்றது. அந்த லோகாயதத்தை நாட்டினின்று கிளப்பிய பெருமை ஆதிசங்கராச்சாரியருக்கே உண்டு. அவர் புத்தமதத் திலுள்ள நன்மைகளனைத்திற்கும் ஆகமம் என்னும் பெயர் கொடுத்து வைதிக மதத்தோடு இணைத்தார். நாஸ்திக மதத்திற்குப் புத்தமதம் என்னும் பெயர் கொடுத்து நாட்டினின்று

விரட்டியோட்டினார். அத்தகைய நாஸ்திகத்திற்கு மட்டும் புத்தமதம் என்னும் பெயர் கொடுத்து அதை ஒதுக்கித் தள்ளுமாறு போதித்தார்.

கேள்வி: *(637)* இராமன், கிருஷ்ணன், புத்தன் ஆகிய மூர்த்திகளே சரித்திர ஆதாரம் உள்ள அவதாரங்கள் என்றால் சங்கரர் குமாரிலபட்டரைக்கொண்டு புத்தமதத்தை நாட்டைவிட்டு விரட்டியது ஏன்?

பதில்: புத்தமதம் நாட்டினின்று விரட்டப்படவில்லை. புத்தமதத்தில் ஒரு சிறு பகுதியினர் நாஸ்திகர்களாக வடிவெடுத் தார்கள். அதன் விளைவாகப் பௌத்த மதமும் நாஸ்திகமும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பாங்கில் மக்கள் அறிந்து கொண்டார்கள். ஆதலால் அந்தப் பெயர் நீக்கப்பட்டதே யொழியப் புத்த மதத்தினின்று வடிவெடுத்த மேலான கோட்பாடு களெல்லாம் ஹிந்து மதத்தில் நன்கு காப்பாற்றி வைக்கப்பட்டு வருகின்றன. சான்றுகள் சில எடுத்துக்கொள்வோம். வேதாகம விதிகளும் வழிபாடுகளும் என்று நாம் சர்வ சாதாரணமாகச் சொல்லி வருகிறோம். வேதத்தில் அமைந்திருந்த பகுதிகளெல்லாம் வேதவிதிகளாக அமைந்திருக்கின்றன. இன்று சைவ ஆகமம், வைஷ்ணவ ஆகமம், சாக்த ஆகமம் இப்படியெல்லாம் பெயர் பெற்றிருக்கின்ற பகுதிகளனைத்தும் புத்த மதத்தில் வடிவெடுத்த வைகளாம். அவைகளுடைய தலைப்பை மட்டும் மாற்றி ஆகமங்கள் என்று இன்றைக்கு நாட்டில் நாம் வழங்கி வருகின்றோம். பௌத்தர்கள் இலங்கையில் பௌத்தக் கோயில் களில் கையாளுகிற முறைகளையும் திபேத்தில் அவர்கள் கையாளுகிற முறைகளையும் ஆராய்ந்து பார்த்தால் பௌத்த மதம் வேறு, ஆகம விதிகள் வேறு அல்ல; இரண்டும் ஒன்றே என்கின்ற முடிவுக்கு நாம் வருகிறோம். எனவே சங்கரர் புத்தமதத்தில் இருக்கும் மேலான கோட்பாடுகளுக்கெல்லாம் ஆகமம் என்கின்ற பெயர் கொடுத்து ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொண்டார். சிலர் அவரைப் பிரசன்ன பௌத்தர் என்பர். அவர் விரட்டியோட்டியது பௌத்தமதம் எனும் பெயரில் இருந்துவந்த நாஸ்திகவாதம், சூன்யவாதம் ஆகியவைகளை மட்டுமேயாம்.

46. மதமாற்றம்

கேள்வி: *(638)* ஹிந்துக்களின் சாந்தகுணம், சகிப்புத் தன்மை, சமரசபுத்தி இவற்றைப் பயன்படுத்திக்கொண்டு சென்ற சில தலைமுறைகளாகக் கிறிஸ்தவப் பாதிரிகள் மதமாற்றம் செய்து வந்தனர். அதன் வேகம் ஓரளவு இப்பொழுது குறைந்துள்ளது. அதற்குப் பதிலாக அதே மதமாற்றக் கைங்கரியம் இப்பொழுது புத்த மதத்தினரால் இயற்றப்பட்டு வருகிறது. சில மாதங்களுக்கு முன்னர் டாக்டர் அம்பேத்காரின் முயற்சியால் பலர் புத்தமதத்தில் சேர்ந்தனர். 18-1-57 பத்திரிகையில் 3,30,000 யாதவர்கள் ஆக்ராவில் புத்த மதத்தில் சேர்ந்தனர் என்ற செய்தி வந்துள்ளது. நமது அரசாங்கமோ சமயச் சார்பற்றது. இத்தகைய பெரும் சிதைவுகளினின்றும் ஹிந்து மதத்தைக் காப்பது யாரோ? முன்பு பிரிட்டிஷ் அரசாங்கம் கிறிஸ்தவ மதமாற்றத்திற்குப் பக்க பலமாக இருந்தது. 2500-வது ஆண்டு புத்த ஜயந்திக்கொண்டாட்டத்தில் நேரு அரசாங்கத்தார் காட்டிவரும் பெரும் பரிவு காரணமாகப் புத்தமத மாற்றத்திற்குப் பக்கபலம் கிடைத்துள்ளது. ஹிந்து சனாதன தர்மத்திற்குப் பக்கபலம் எங்கு உளதோ?

பதில்: ஹிந்து மதத்தின் உள் வலிவைப் பற்றியும் அதனுடைய சகிப்புத் தன்மையைப் பற்றியும் சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவில் சிகாகோ நகரில் நிகழ்ந்த சர்வமத மஹா சபையில் விவேகானந்த சுவாமிகள் எடுத்தோதினார்கள். அவர் பகர்ந்ததின் கருத்தை இப்போது ஞாபகத்துக்குக் கொண்டு வருவோம். புறமதங்கள் என்று சொல்லப்படுபவைகள் கடலில் தோன்றுகின்ற பேர் அலைகள்போன்று கரையை நோக்கிப்

புரண்டோடி வருகின்றன. கரையையே எடுத்து விழுங்கி விடுபவைகள் போன்றும் அலைகள் காட்சி கொடுக்கின்றன. சிறிது நேரத்துக்கு அலைகள் கரையையும் அறவே மூடிவிடு கின்றன. ஆனால் அவ்வலைகள் பின்வாங்கிய பின்பு கடற்கரை பழையபடி மிளிர்ந்து கொண்டிருக்கிறது. கடற்கரைக்கு ஒப்பானது ஹிந்துமதம். அதை விழுங்கவரும் அலைகளுக்கு ஒப்பானவை புறமதக் கிளர்ச்சிகள். அவைகளைக் குறித்து உறுதியாயிருக்கும் பொழுது கவலைப்பட வேண்டியதில்லை.

ஹிந்து மதத்தில் மற்றொரு சிறப்பு இருக்கிறது. தன்னை விழுங்கவரும் புறமதங்களை எடுத்து அமைதியாக ஜீரணம் செய்து தன்மயம் ஆக்கிக்கொள்ளும் சிறப்பு ஹிந்து மதத்துக்கு உண்டு. முன்பு பலதடவைகளில் இச்செயலை ஹிந்துமதம் செய்திருக்கிறது; இனியும் அப்படிச் செய்யப்போகிறது. ஹிந்து மதத்தின் உள்வலிவே அதற்கு ஆதரவு. ஹிந்துமதத்தை விழுங்க வந்த கிறிஸ்தவ மதம் சிறிது சிறிதாக ஹிந்துமத சொரூபமாக மாறியமைந்து வருவதைத் துருவி ஆராய்கின்றவர்கள் அறிந்து கொள்ளக்கூடும். மேல்நாடுகளில் நாகரிக மயமாய் இருந்த கிறிஸ்துவ மதம் இப்பொழுது இந்திய நாட்டுக்குரிய கிறிஸ்துவ மதமாக மாறியமைந்து வருகிறது. இன்னும் சில வருஷங்களில் ஹிந்துமதத்தின் ஒரு கிளையாகவே அது இடம்பெறப்போகிறது. கிறிஸ்துநாதரை ஓர் அவதார புருஷராக நாம் ஏற்றுக் கொள்கி றோம். கிறிஸ்துநாதரை நம் மயம் ஆக்கிய பிறகு அவரைப் பின்பற்றுகிறவர்கள் நம்மைவிட்டு எங்கே ஓடிப்போய் விடுவார்கள்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் புத்தமதம் வேறு, ஹிந்துமதம் வேறு என்கிற பாகுபாடு உண்டாகவில்லை. ஹிந்து மதத்துக்குள்ளேயே ஒரு சீர்திருத்தக் காட்சியாகப் புத்தமதம் கிளம்பியது. அந்தத் திருத்தங்களில் பல பகுதிகளைத் தாய்மத மாகிய ஹிந்துமதம் ஏற்றுக்கொண்டது. நாளடைவில் கடவுள் இல்லை என்கிற ஒரு கோட்பாட்டை மட்டும் நிராகரிக்க வேண்டி வந்தது. விலக்கப்பட்ட அந்த ஒரு பகுதிக்குப் புத்தமதம் என்கிற பெயர் கொடுத்து நாட்டினின்று அக்கொள்கை அப்புறப்படுத்தப்பட்டது. அந்த மதத்தில் இருந்த ஏற்புடைய சிறந்த பகுதிகளையெல்லாம் ஆதிசங்கரர் போன்ற ஆச்சாரியர்கள்

ஹிந்து மதத்தினுள் வைத்துப் பாதுகாத்தனர். அதை முன்னிட்டே ஆதிசங்கரருக்குப் பிரச்ன்ன பௌத்தன் என்னும் பெயர் வந்தது. அந்தரங்கமாகப் பௌத்த மதத்தைப் போற்றுபவர் என்பது அதன் கருத்து. நலம்தரும் அனைத்தையும் போற்றிப் பாராட்டுவது ஹிந்து மதாசாரியர்களுடைய இயல்பு.

வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்ட புத்த மதத்தைத் திரும்பவும் நாம் முறையாக ஏற்றுக்கொண்டாக வேண்டும். கீழ் ஆசியாக் கண்டவாசிகள் அனைவரையும் ஒற்றுமைப் படுத்துதற்கு இதற்கு நிகரான உபாயம் வேறு ஒன்றும் இல்லை. இன்று புத்த மதத்தையே இன்னொரு பாங்கில் நாம் புதுப்பிக்க வேண்டும். அதைப் புதுப்பிக்கும் பொறுப்பு ஹிந்து மக்களாகிய நம்முடையதாகும். புதுப்பிக்கப் பெற்றுள்ள புத்த மதத்தைத் திரும்பவும் ஆசியாக்கண்ட வாசிகளுக்கு எடுத்து வழங்குவதும் நம்முடைய கடமை. இதன் வாயிலாகவே நம் தாய்நாட்டுக்கு மதங்களுக்கெல்லாம் தாயகம் என்னும் சிறப்பு நிலை வந்து அமையப்போகிறது.

புத்தமதம் நம்முடையது என்று நாம் உரிமை பாராட்டுகிற பொழுது புத்தமதத்தைப் பின்பற்றுகிற ஒரு கூட்டமும் இந்த நாட்டில் இருப்பது அவசியமாகிறது. பின்பற்றுதற்கு ஒருவரும் இல்லாத ஒரு மதத்தை நம்முடையது என்று சொல்லுவதில் பொருள் இல்லை. உண்மையாகவே புத்தர் பெம்மான் புகட்டிய தூய நன்னெறி நமக்குச் சொந்தமானது. அந்தத் தூய நன்னெறியைத்தான் திரும்பவும் உலகுக்கு எடுத்துப் புதுப்பித்து வழங்க வேண்டும். இதைப் பரப்புதற்கு ஒரு கூட்டத்தை நம் நாட்டில் ஒதுக்கிவைப்பது நம்முடைய கடமையாகும். எனவே சில லக்ஷக்கணக்கானபேர் புத்தமதத்தைப் பின்பற்றுபவர்களாகத் தீர்மானம் செய்திருப்பது நமக்கு முற்றிலும் சம்மதம். அவர்கள் தூய நல்ல பௌத்தர்களாவார்களாகில் ஹிந்து மதத்திற்கே அது ஒரு அணிகலமாகும். தூய நல்ல சைவர்களும், வைஷ்ணவர்களும், சாக்தர்களும், கௌமாரர்களும், காணாபத்யர்களும் நம் ஹிந்து மதத்தில் இருப்பதுபோன்று தூய நல்ல கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் நமக்கே உரியவர்கள் ஆவார்கள். பிறகு இந்தியாவில் பிறந்து, இந்தியாவில் வளர்ந்து உலகெங்கும் பரவியுள்ள புத்தமதத்தை நாம் ஏன் புறக்கணிக்க

வேண்டும்? இந்தியாவின் நலத்தின் பொருட்டுப் புத்தமதமும் இந்தியாவில் ஓங்குக.

கேள்வி: *(639)* நாகர்கோவில் பிராந்தியத்தில் சைவ சமயத்தை விட்டு மக்கள் கிறிஸ்தவ மதத்திற்குச் சென்று விட்டதாகவும் அவ்வாறு சென்றவர்களுக்கு விபூதி கொடுத்தும் பஞ்சாட்சரம் ஓதுவித்தும் சைவத்திற்குத் திருப்பப்படுகிறதாகவும் பத்திரிகைகளில் பார்த்தேன். இப்படி சைவத்தை விட்டுச் சிலர் சென்றுவிட்டதால் சைவத் திற்குக் குறைபாடோ, அல்லது அவர்களை மறுபடியும் திருப்பிக் கொள்வதால் ஏற்பட்ட குறைபாடு நீங்கியும் விடுமா? கிறித்தவ சமயத்தில் சேர்ந்துவிட்டால் என்ன? சைவ சமயத்தில் இருந்தால் என்ன? விவேகானந்த சுவாமிகள் சொல்லுவதுபோல் "If you are a Hindu be a true Hindu; if you are a Christian be a true Christian" இருந்தால் மதம் மாறவோ அப்படி மாறிவிட்டால் பிறகு அவர்களைத் திருப்பவோ வேண்டியதில்லையே? மதம் மாறவோ, மாறியவர்களைத் திரும்பவும் மாற்றவோ செய்யும் முயற்சிகளில் ஏதாவது பயன் இருக்கிறதா?

பதில்: மதம் மாற்றும் செயலில் கிறிஸ்துவ மதப் பிரசார கர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடைய முயற்சிகளெல்லாம் பாமரர்களாக இருக்கும் ஹிந்துக்களுக் கிடையில் நடைபெற்று வருகின்றன. மதக்கோட்பாடுகளை நன்கு அறிந்திருக்கும் விவேகிகள் முன்னிலையில் மதபோதனை செய்ய அவர்கள் வருவதில்லை. முறையாக மதங்களைச் சீர்தூக்கி ஆராய்ச்சி செய்வதற்கும் அவர்கள் முன்வருவதில்லை. கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்கிறவர்களில் பெரும்பான்மையோர் சம்பளத்துக்காக உழைப்பவர்கள். எனவே மதப்பிரசாரம் அவர் களுக்குப் பிழைப்புக்கு ஒரு வழியாகிறது. கல்வியில்லாத பாமரர்களுக்கிடையில்தான் அவர்களுடைய முயற்சி ஓரளவு வெற்றி தருகிறது. வர்த்தகம் பண்ணுகிற முறையில் நம் நாட்டுப் பொதுமக்களின் மனப்பான்மையைக் கெடுத்து வருகிற கிறிஸ்தவமதப் பிரசாரக் கூட்டத்துக்கு நாம் ஆதரவு தரலாகாது. பின்பு அறியாமையினால் சொல்பவர்களுடைய பேச்சைக்

கேட்டுக்கொண்டு மதம் மாறிப் போகின்றவர்களை மீட்டெடுப்பது அறிவுடையோர் கடமையாகும். எனவே சைவ நெறியினின்று விஷயம் தெரியாது புறமதத்துக்குப் போனவர்களுக்கு மெய்யறிவு புகட்டி பரம்பரையாக வந்துள்ள சமயத்தின்கண் அவர்களைத் திருப்பிக்கொண்டு வருவது முற்றிலும் அவசியமாகிறது

விவேகானந்த சுவாமிகள் பகர்வது இப்படி மதம்மாறிப் போகின்ற பாமரர்களைப் பற்றியது அல்ல. தலைமுறையாக ஹிந்துக்களாக இருக்கிறவர்களும், கிறிஸ்துவர்களாக இருக்கிறவர் களும், அவரவர் சமயங்களை முறையாக அனுஷ்டித்து மேன்மை யடையலாம் என்பது அவருடைய கோட்பாடு. ஆனால் முறைக்கு மாறாக ஹிந்துமதத்துக்குரிய பொதுமக்களை வேறு மதத்துக் குரியவர்களாக மாற்றியமைக்க முயலுபவர்களுடைய இயக் கத்துக்கு நாம் ஆதரவு கொடுக்கலாகாது. சரியான முறையில் பொதுமக்களுக்கு மதப்பாதுகாப்பு அளிக்க நாம் கடமைப்பட்டிருக் கிறோம். பணம் கொடுத்து மதம் மாற்றுவது, வைத்தியம் செய்து மதம் மாற்றுவது, கல்வி வழங்கி மதம் மாற்றுவது, வாழ்க்கை வசதிகள் செய்து கொடுத்து மதம் மாற்றுவது போன்ற செயல்களெல்லாம் முறையாக மதம்மாற்றும் செயல் களாகாது. அத்தகைய முறைதவறிய முயற்சிகளுக்குத் தடை செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அறியாமையினாலோ, அல்லது வாழ்க்கை வசதிக்காகவோ புறமதம் போனவர்களை மீண்டும் அவர்களுக்குரிய சொந்த மதத்துக்குத் திருப்புவதில் சமுதாய நலன் மிக உண்டு. புறமதம் புகுவதால் அருள்துறையில் நலனோ கேடோ ஒன்றும் வந்து விடுவதில்லை ஆனால் சமுதாய ஒற்றுமைக்கும் சமுதாயத்தின் கட்டுப்பாடான வாழ்க்கைக்கும் அவர்களை மீட்டெடுப்பது பெரிதும் பயன்படுகிறது. ஆதலால்தான் வழிதவறிப் போனவர் களை மீட்டெடுப்பது அவசியமாகிறது.'The perverted or the misguided have to be reclaimed' என்னும் கருத்துப்பட விவேகானந்த சுவாமிகளே அன்னவர்களைக் குறித்துப் பகர்ந்திருக்கிறார்.

கேள்வி: *(640)* ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு ஒருவன் மதம் மாறிப்போவது அவசியமா?

பதில்: மதம் என்பது கொள்கை எனப் பொருள்படுகிறது.

அறிவு வளர்ச்சிக்கேற்ப மனிதனுடைய கொள்கை தெளிவடைந்து வருகிறது. பிழையான கொள்கைகளைச் சரியான கொள்கை களாகத் திருத்தியமைக்க மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். பள்ளிப் பிள்ளைகள் சொற்களைப் பிழைபட எழுதுகின்றனர். அதைத் திருத்தியமைப்பது முற்றிலும் அவசியம். அதேபாங்கில் சில மதங்களில் தவறான கொள்கைகள் ஏராளமாக இருக் கின்றன. அவைகளைத் திருத்திக்கொள்வதற்கேற்ப மனிதன் தானே திருந்தப்பெறுகிறான். இந்த முறையில் அறிவை வளர்ப்பது அவசியம்.

இதற்கு மாறாகச் சில மதஸ்தர்கள் பட்டாளத்துக்கு ஆள் சேர்ப்பது போன்று தங்கள் கூட்டத்தைப் பெருக்குவதற்கு மதமாற்றம் பண்ணுகின்றனர். அதில் பயன் ஒன்றுமில்லை. பெரும்பாலும் மத மாற்றத்தின் மூலமாகத் தங்களுடைய பெயரை மட்டும் மாற்றிக்கொள்கின்றனர். கடவுள் ஒருவர்; அவருக்குப் பெயர்கள் பல. தாங்கள் வழிபடும் தெய்வத்தின் பெயரை மதம் மாறியவர்கள் மாற்றியமைத்துக் கொள்கின்றனர். பெயரளவில் மதம் மாறுகிறவன் சமுதாயப் பழக்கவழக்கத்தை மாற்றி அமைத்துக்கொள்ளுகிறான். வழிபாட்டு முறையையும் அவன் மாற்றியமைத்துக் கொள்ளுகிறான். ஆனால் அந்த ஆள் பண்பிலே திருந்தி அமைகிறதில்லை. அத்தகைய மதம் மாறுதல் வெறும் கேலிக்கூத்தாகும்.

ஒரு குடும்பத்துக்குரிய மனிதன் அந்தக் குடும்பத்தினின்று எக்காரணத்தை முன்னிட்டாவது வேறொரு குடும்பத்திற்குப் போவதில்லை. அதேவிதத்தில் சரியான பக்தன் தான் எந்த மதத்தில் பிறந்தானோ அதை அனுஷ்டித்து வருகிறான். அனுஷ் டானத்தில் பிழையிருந்தால் அதைத் திருத்திக்கொள்கிறான். இதுவே சரியான மத அனுஷ்டானமாம். மதம் மாறுதல் என்பது பொருளற்றதாம். ☆

47. அவதாரம் / அவதாரமூர்த்திகள்

கேள்வி: *(641)* இறைவனே, அனைத்து உயிர்களுமாய் விளங்குகின்றார் என்றால் இராமன், கிருஷ்ணன் போன்றோர்களை மட்டும் ஏன் அவதாரமாகக் கொள்ள வேண்டும்?

பதில்: இயற்கையிலுள்ள அனைத்தும் பரம்பொருளின் ஸ்தூலத் தோற்றங்களாம். 'உலகனைத்தும் ஆனாய் நீயே' என்பது மறைமொழி. ஸ்தாவர உலகை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டால் அதில் பயன்படுவன, பயன்படாதவை, பாழ் படுத்துபவை ஆகிய யாவும் அமைந்திருக்கின்றன. பயன்படாத காட்டுச் செடிகளை ஏராளமாகக் காண்கிறோம். விஷம் நிறைந்த முட்களுடைய செடி வகைகளைக் காண்கிறோம். விஷம் நிறைந்த கனிகளை உண்டுபண்ணுகிற மரம், செடி, கொடிகளும் உண்டு. வாழை, தென்னை போன்றவை கற்பக விருக்ஷத்துக்கு நிகரானவை. அவைகளை மட்டும் பாதுகாப்புடன் வளர்த்து வருகிறோம். அப்படிச் செய்வது முறை.

பூமியில் கல் வகைகள் பலதரப்பட்டவைகள் இருக்கின்றன. அவைகளுள் பிரகாசிக்கும் பாங்குடைய ரத்தினங்களை மட்டும் ஆபரணங்கள் பண்ணுவதற்கு எடுத்துக்கொள்கிறோம்.

மக்களுள் நல்லவர்கள், கெட்டவர்கள் ஆகிய எல்லாப் பாங்குடையவர்கள் இருக்கிறார்கள். கொடூர விலங்கினும் கொடிய மக்கள் இருக்கிறார்கள். அவர்களோடு இணக்கம் பூணலாகாது. இராமன், கிருஷ்ணன் போன்ற மூர்த்திகள் தெய்வீகப்பெற்றி வாய்க்கப் பெற்றவர்கள். அன்னவர்களைப் பின்பற்றினால் நாம் மேன்மையுறுகிறோம். பிரபஞ்சம் முழுதும் இறைவனுடைய அவதாரம் என்றாலும் இராமன், கிருஷ்ணன் போன்றவர்களைச்

சிறப்பாக அவதார புருஷர்கள் என்கின்றோம். வணக்கத்துக்குரிய பெருமக்களையே அவதாரங்களாகக் கருதுவது முறை. அன்னவர் களைப் போற்றுவதற்கேற்ப உபாசகர்கள் பக்தியிலும், ஞானத் திலும், சீலத்திலும் மேன்மையுறுகின்றனர். பரிபூரணத்துடன் கூடியிருப்பவர்களே வழிபாட்டுக்கு உரியவர்கள் ஆகின்றனர். மக்கள் எந்த மூர்த்தியை உபாசிக்கிறார்களோ அந்த மூர்த்தியின் மகிமைகள் உபாசகர்களுக்குச் சொந்தமாகின்றன. இக்கோட்பாட் டின்படி இராமன், கிருஷ்ணன் போன்றவர்களை அவதார மூர்த்திகளாக ஏற்றுக்கொண்டு உபாசிப்பதே பொருத்த முடையதாகும்.

கேள்வி: *(642)* ஸ்ரீராமகிருஷ்ணர், சைதன்யர் போன்றோரை அவதாரம் என்று குறிக்கும்பொழுது மாணிக்கவாசகர், இராமானுஜர் போன்றோரை ஏன் அவ்வாறு குறிப்பதில்லை?

பதில்: சான்றோர்களைப் பாராட்டுதலில் ஒவ்வொரு மாகா ணத்துக்கும் ஒவ்வொரு தனிப்போக்கு இருக்கிறது. தெய்வீகம் வாய்க்கப்பெற்றவர்களையெல்லாம் அவதார புருஷர்கள் என்று இயம்புவது அலாதியாக வங்காள மாகாணத்துக்குரிய போக்கு ஆகும். இன்றைக்கும் வங்காளத்தில் ஆங்காங்கு சுற்றிப் பார்த் தால் ஆத்மீக வாழ்வு வாழ்ந்து வருகிறவர்களுக்கெல்லாம் யார் யாரோ பழைய புருஷர்களுடைய அவதாரம் என்னும் பட்டம் கொடுத்துவிடுவார்கள். கிட்டத்தட்ட அதையொட்டிய கொள்கை ஒன்று தமிழ்நாட்டில் ஒரு சிலர்க்கிடையில் இருந்து வருகிறது. மஸ்தான் சாஹிப் என்னும் இஸ்லாமிய சான்றோர் ஒருவர் தமிழ்நாட்டில் வசித்து வந்தார். அவர் தாயுமான சுவாமிகளுக்குப் பிறகு தோன்றியவர். கிட்டத்தட்ட தாயுமான சுவாமிகளின் பாங்கிலேயே மஸ்தான் சாஹிப் பாடல்கள் பாடியிருக்கிறார். அதை முன்னிட்டு அவரைத் தாயுமான சுவாமி களின் அவதாரம் எனக் கருதுபவர்கள் சிலர் இருக்கின்றனர். ஆனால் இக்கருத்து ஆதரவற்றது. வங்காளத்துப் பெருமக்களை அவதார மூர்த்திகளெனக் கருதுவது வங்காளிகளின் போக்கு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் நமக்குப் பிரச்னைகள் ஒன்றுமில்லை. அண்மையில் தமிழ்நாட்டில்

வாழ்ந்திருநத ரமண மகரிஷி வங்காளத்தில் தோன்றியிருந்தால் அவரைச் சிவனார் அவதாரம் என்று அன்னவர்கள் போற்றியிருப் பார்கள். பக்தியில் மாணிக்கவாசகர், கிருஷ்ண சைதன்யருக்குப் பின்வாங்கியவர் அல்லர். ஆயினும் தமிழ்நாட்டு ஐதிகப்படி மாணிக்கவாசகரைத் தலைசிறந்த பக்தர் என்றே போற்றி வருகின்றோம். அதற்குமேல் அவர் சைவசமய ஆச்சாரியர்கள் நால்வருள் ஒருவராகப் போற்றப்படுகிறார். இந்தப் போற்றுதல் தான் பொருத்தமானது. வங்காளத்து ஐதிகப்படி ஸ்ரீராமானுஜ ஆச்சாரியரை ஓர் அவதார புருஷராகப் போற்றுவது பொருந்தும். ஆனால் தமிழ்நாட்டு ஐதிகத்துக்கேற்ப நாம் அவரை உடையவர் எனப் போற்றுகிறோம். தகுதி வாய்ந்த ஜீவாத்மாக்களைத் திருமாலிடம் எடுத்துச்செல்லத் தகுதி வாய்ந்தவர் என்னும் கருத்துக்கொப்ப அவரை உடையவர் என்கிறோம். பின்பு அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகிய மூன்று சம்பிரதாயங்களில் விசிஷ்டாத்வைதத்துக்கு முடிவான விளக்கம் கொடுத்தவராக ஸ்ரீ ராமானுஜரை நாம் போற்றுகிறோம். இப்போற்றுதலே பொருத்தமானது.

கேள்வி: *(643)* "இதிகாசங்களில் இடம்பெற்றுள்ள இராமனும், கிருஷ்ணனும் தத்துவ விளக்கத்துக்காக ஏற்படுத்தப்பட்டவர்கள்; அவதரித்தவர்கள் அல்லர்" என்று ஒரு சாரார் கூறுகின்றனர். மற்றொரு சாரார், "அவதார மூர்த்திகள் நம் போன்று உடல் தாங்கி வந்தவர்கள்" என்று இயம்புகின்றனர். எது உண்மை?

பதில்: அவதார புருஷர்கள் பலபேர் பல காலங்களில் உலகில் தோன்றி வந்திருக்கின்றனர். உலகில் தர்மம் குறைந்து, அதர்மம் தலையெடுக்குங்கால், அதர்மத்தைக் களைந்து, தர்மத்தை நிலைநாட்ட அன்னவர்கள் உலகில் அவதரிக்கின்றனர். அவதார புருஷர்களிடத்துச் சிறப்பொன்று தென்படுகிறது. ஆயுட்காலம் முழுதிலும் அவர்களுடைய வாழ்வு பரதத்துவத்துக்கு விளக்கமாகிறது. குறை எதையும் அன்னவர்கள் ஜீவிதத்தில் காணமுடியாது. நிறைநிலைக்கு அவர்கள் எடுத்துக்காட்டாக இருப்பதனால் அவர்களின் ஜீவிதம் கற்பனையாக அமைந் திருக்கக் கூடுமோ என்று சிலர் ஐயம் கொள்கின்றனர். ஆனால்

அவர்களுடைய ஜீவிதத்தைக் கற்பனையாகக் கருதுகிறவிடத்தும், அது நிறைநிலைக்குப் பொருத்தமான விளக்கமாகிறது. மனதால் எது கற்பனை பண்ணப்படுகிறதோ, அது ஸ்தூலமாக வடிவெடுக்கவல்லது என்பது கோட்பாடு. ஆதலால் அவதார மூர்த்திகள் நிறைநிலைக்கு விளக்கமாகக் காலந்தோறும் உருவெடுத்து வருவது இயற்கையின் பேரமைப்பாம். உலகில் தோன்றி வந்துள்ள பெருமக்களுள் பரிபூரணமே உருவாய் இருப்பவர்களை அவதார மூர்த்திகள் என்றுதான் இயம்ப வேண்டும். உலகில் வனப்பு நிறைந்த சில இடங்களைப் பார்த்து, இத்தகைய எழிலும் இயற்கையில் இருப்பது சாத்தியமா என்று மக்கள் ஐயம் பூணுகின்றனர். அதேவிதத்தில் இராமன், கிருஷ்ணன் போன்ற பரிபூரண மூர்த்திகள் மானுட வடிவெடுப்பது சாத்தியமா என்னும் ஐயம் மக்கள் உள்ளத்தில் உதயமாகிறது. அது சாத்தியம் என்பதற்கு இம்மூர்த்திகளே சான்று ஆகின்றனர். இப்பிரபஞ்சத்தில் அனைத்தும் சாத்திய மாகிறது. அவ்வமைப்பினுள் அவதார மூர்த்திகளும் இடம் பெறுகின்றனர். இராமனும், கிருஷ்ணனும் நம்போன்று பூதவுடல் தாங்கி உலகில் பிறந்தவர்கள் என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஞானக்காட்சியாகக் கண்டார். பூதவுடல் தாங்கியிருக் கிறவர்கள் பரிபூரணத்துக்கு விளக்கம் ஆகமுடியும் என்னும் உண்மை அவர்கள் மூலம் வெளியாகிறது. எவ்விதமாகக் கருதி னாலும் இம்மூர்த்திகள் வழிபாட்டுக்கு உரியவர்கள் ஆகிறார்கள்.

கேள்வி: *(644)* "கண்ணன் வாழ்வும் போதனையும்" என்ற கட்டுரையில் ஒன்பதாவது அவதாரமாகப் புத்த அவதாரம் அமைகின்றது என்று பகர்ந்துள்ளீர்கள். நான் நினைப்பதாவது, 'பண்பும் உழைப்பும் கொண்டதாகக் கலப்பை ஏந்திய பலராம அவதாரம் எட்டாவது அவதாரம்; ஒன்பதாவது அவதாரம் விவேகத்தின் சிகரமான கிருஷ் ணாவதாரம். தாங்கள் புத்தாவதாரம் ஒன்பதாவது என்று கூறியுள்ளது சந்தேகமாக உள்ளது. அருள்கூர்ந்து விளக்க வேண்டுகிறேன்.

பதில்: அவதார மூர்த்தி ஒருவருடைய வாழ்க்கையும் செயலும் தர்மத்துக்கு விளக்கமாக அமைகின்றன. தசரத

இராமனுடைய தம்பிமார் மூவரும் தமையனுடைய வாழ்க்கையைத் தெளிவுபடுத்துதற்கும் அவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் கருவிகளாக இருந்தார்கள். தசரதராமன் தர்மத்தினின்று சிறிதும் பிசகவில்லை. ஆகையினால் அவன் நரோத்தமன் எனப் போற்றப்படுகிறான். வரிசைக்கிரமத்தில் அவன் ஏழாவது அவதாரம். எட்டாவது அவதாரமாக வருவது ஸ்ரீ கிருஷ்ணன். அவன் பரமாத்மாவாகவே போற்றப்படுகிறான். கிருஷ்ணனை அறிவதும், பரதத்துவத்தை அறிவதும் ஒன்றேயாம்.

இனி, கிருஷ்ணனுடைய தமையன் பலராமன் அதர்மமே வடிவெடுத்திருந்த கம்சனைக் கொல்லுதற்கு மட்டும் தன் தம்பியாகிய கிருஷ்ணனுக்குத் துணைபுரிந்தான். அடுத்தபடியாகக் கௌரவர்களைத் துன்மார்க்கத்தினின்று நல்வழிக்குத் திருப்ப முயன்றதும், அம்முயற்சி சாத்தியப்படாதவிடத்து அக்கொடிய கௌரவர்களைக் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் துடைத்துத் தள்ளியதும் கிருஷ்ணனுடைய முக்கியமான செயலாயின. அவனுடைய தமையனாகிய பலராமனோ முற்றிலும் கௌரவர்களுக்குத் துணைபுரிபவனாக இருந்தான். கௌரவர்கள் சூதாடிப் பாண்டவர்களுடைய இராஜ்ஜியத்தை அபகரித்துக்கொண்டதில் குற்றம் ஏதும் இல்லை என்று விராட நகரத்தில் தன் தம்பியோடும், மற்றவர்களோடும் வாதாடினான். உதவியை நாடிக் கௌரவர்களுள் மூத்தவனாகிய துரியோதனன் பலராமனிடம் சென்றான். அப்பொழுது அவன் விராட நகரத்தில் துரியோதனனுக்குச் சாதகமாகப் பேசியதைத் தம்பி கிருஷ்ணன் ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், கிருஷ்ணன் பாண்டவர்களுக்குத் துணைபுரியத் தீர்மானித்திருப்பதால் தன் தம்பிக்கு விரோதமாகப் போருக்குப் போகப் பலராமன் மறுத்துவிட்டான். பின்பு யுத்தத்தின் கடைசிப் பகுதியில், கிருஷ்ணனால் தூண்டப்பட்டுப் பீமன் செய்துள்ள சபதப்படி துரியோதனனைத் தொடையில் அடித்து வீழ்த்தியது பிசகு என்று ஆட்சேபித்தான். இங்ஙனம் பலராமன் வாழ்ந்த பூவுலகவாழ்வு அதர்மத்துக்கு ஆதரவு தருகிற பாங்கில் இருந்ததால் அன்னவனை ஓர் அவதார மூர்த்தியாக ஏற்றுக்கொள்வது பொருந்தாது.

பத்து அவதாரங்கள் பிரபஞ்ச வாழ்க்கையில் ஜீவர்கள் பரிணமித்து மேல்நிலைக்கு வருவதற்கு விளக்கங்களாக

அமைந்திருக்கின்றன. அக்கோட்பாட்டின்படி புத்தாவதாரம் முற்றிலும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. அவருடைய வாழ்க்கை முழுதும் தத்துவத்துக்கு விளக்கமாகிறது. ஜீவாத்மா வாகிய மனிதன் முறையாக முயன்றால் அவன் தன்னிடத்தி லுள்ள கீழ்மைகளை வென்று, நலத்தில் நிலைபெற்றிருந்து, பிரபஞ்ச வாழ்வைக் கடப்பது சாத்தியம் என்பதற்குப் புத்தாவதாரம் யாண்டும் நல்ல பிரமாணமாகும். இந்த அமைப்பே தர்மத்துக்கும் தத்துவத்துக்கும் ஒத்திருக்கிறது.

கேள்வி: *(645)* பலராமனும், கண்ணனும் சேர்ந்து அவதரிக்கின்றனர். ஆயினும் குணவேறுபாடு இருக்கிறது. காரணம் யாது?

பதில்: தசரதராமன் அவதரித்தபோது அவனுக்குத் தம்பிமார் மூவர் அவதரித்தனர். இந்த நான்கு சகோதரர்கள் வடிவத்தில் நால்வர் எனினும், பாங்கிலே அவர்கள் ஒரே மூர்த்திபோன்று இருந்தனர். ஆதலால் தசரத ராமனுடைய அவதாரத்தில் தம்பிமாருடைய அவதாரம் அடங்கியிருக்கிறது. ஆனால் இக் கோட்பாடு பலராமனுக்கும், கண்ணனுக்கும் சேர்ந்து அமையாது. பலராமன் மூத்தவன். கண்ணன் இளையவன். தந்தை ஒருவர்; இருவருக்கும் தாய்மார்கள் வெவ்வேறானவர்கள். குணவேறுபாடு இவ்விருவருக்கும் இடையில் ஏராளமாயிருக்கிறது. உபசாரத் துக்காகப் பலராமன் அவதார மூர்த்தியாகக் கருதப்படுகிறான். ஆயினும் அவதார மூர்த்தியின் மகிமை அவனிடத்துக் காணப் படுவதில்லை. தர்மம் பிசகாதிருந்த பாண்டவர்களுக்குச் சகாய மாகக் கண்ணன் இருந்தான். தர்மத்தினின்று பிசகிய கௌரவர் களுக்குச் சகாயமாகப் பலராமன் இருந்தான். கெட்டவர்களாகிய கௌரவர்களைத் துடைத்துத் தள்ளுவது கண்ணனுடைய செயலாயிற்று. தம்பிக்கு எதிர்க்கட்சியில் இருந்து போர்புரிவது பொருந்தாது என்று கருதிய பலராமன் மகாபாரத யுத்தம் நிகழ்ந்தபொழுது சங்கடத்தினின்று தப்பித்துக் கொள்ளுதற்காகத் தீர்த்தயாத்திரை போய்விட்டான். ஆதலால் கண்ணனை அவதார மூர்த்தியாக ஏற்பது போன்று பலராமனை ஏற்க இயலாது. சகோதரர்களுக்கிடையில் அபிப்பிராய ஒற்றுமை இருப்பது அரிதினும் அரிது. தசரதகுமாரர்களுக்கே அது சாத்தியமாயிற்று.

அறங்காக்க அவதரித்தவன் கண்ணன். அச்சிறப்பு பலராமனுக்கு அமையவில்லை. இதுவே அவ்விருவருக்கும் இடையிலுள்ள வேறுபாடு ஆகும்.

கேள்வி: *(646)* இராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதரித்து வந்த மூர்த்திகள் காத்தல் கடவுளாகிய திருமாலின் அவதாரங்கள். அன்னவர்கள் அழித்தல் தொழிலை ஏன் மேற்கொண்டார்கள்? அதற்கான காரணம் யாது?

பதில்: படைத்தல், காத்தல், துடைத்தல் ஆகிய மூன்று கிருத்தியங்களுக்கும் மூன்று தனித்தனித் தெய்வங்கள் இருக் கிறார்கள் என்று நாம் எண்ணி வருகிறோம். அப்படி எண்ணுவது பிழையாகும். கடவுள் ஒருவரே. அவரே மூன்று கிருத்தியங் களையும் செய்கிறார். அவர் மூன்று கிருத்தியங்களுக்கு அப்பாலும் இருக்கிறார். அதை முன்னிட்டே அவருக்குக் கடவுள் என்னும் பெயர் வந்துள்ளது. பிரபஞ்சத்தைக் கடந்தும் இருக்கின்றார். அதனுள் ஊடுருவிப் பாய்ந்தும் இருக்கின்றார். இயற்கையாக இலங்குபவர் அதே கடவுள். அவர் இயற்கை மயமாக இருந்துகொண்டு மூன்று கிருத்தியங்களையும் ஏககாலத்தில் செய்து வருகிறார். பூமியில் விதை போட்டு முளைத்து வருவது சிருஷ்டித் தொழில். அந்தப் பயிருக்கு வேலிகட்டுவது காத்தல் தொழில். பயிரோடு முளைத்து வருகிற பயனற்ற செடிகளைக் களைவது அழித்தல். ஆக, பயிரிடும் ஒரே செயலில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய மூன்று தொழில்களும் அடங்கியிருக்கின்றன. மற்றொரு சான்று ஒன்றை எடுத்துக் கொள்வோம். ஆசிரியர் ஒருவர் பாடம் புகட்டுகின்றார். அது அறிவின் சிருஷ்டி. படித்த பாடம் மறந்துபோகாதிருக்கும்படி பரீட்சை பண்ணுகிறார். அது காத்தல் தொழில். ஆண்டுப் பரீட்சையில் தேறாதவர்களைக் கீழ் வகுப்பிலேயே வைத்து விடுகிறார். அது அழித்தல் தொழில் போன்று தென்படுகிறது. அது முற்றிலும் அவசியம். இராமனும், கிருஷ்ணனும் நல்லாரைக் காக்க வந்தார்கள். பொல்லாரை அழித்தால்தான் நல்லாரைக் காக்கமுடியும். நலத்தை நாட்டுதல் பொருட்டுக் கேட்டை அழித்தல் முற்றிலும் அவசியமாகிறது.

கேள்வி: *(647)* பரசுராமனும் தசரத ராமனும் அவதார மூர்த்திகள் ஆவார்கள். இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்துப் போர்செய்தது முறையா?

பதில்: பரசுராமன் க்ஷத்திரியர் ஒருவரால் தம் தந்தை கொல்லப்பட்டதற்கு க்ஷத்திரிய குலத்தையே ஒழித்துவிடவேண்டும் என்ற அளவிற்குச் செருக்கு உடையவராக இருந்தார். தசரத ராமன் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தமையினால் அவரைப் பரசுராமன் வலியச் சண்டைக்கு இழுத்தார். "மிதிலையில் ஒடித்த வில் சொத்தை வில். என் கையில் உள்ள விஷ்ணுதனுசைப் பெற்று என்னுடன் போரிட்டு உன் பராக்கிரமத்தை வெளிப் படுத்து. உன்னை ஒழிப்பது என் திட்டம். வீரனாக மடிந்துபோ அல்லது கோழையாக மடிந்துபோ" என்று பரசுராமன் மிதிலை யிலிருந்து அயோத்திக்குச் சென்று கொண்டிருந்த இராமனை வலியப்போருக்கு அழைத்தார். தசரதராமன் அவருடைய உத்தர வுக்குக் கீழ்ப்படியும் முறையில் பணிவுடனும் அடக்கத்துடனும்; பரசுராமன் கையிலிருந்த வில்லை வாங்கி நாணேற்றி அம்புக்கு இலக்குக் கேட்டார். பரசுராமன் தம் ஆணவ அஹங்காரத்தின் மீது செலுத்தும்படி கூறினார். தசரதராமன் அங்ஙனமே செய்து பரசுராமனுடைய அஹங்காரத்தை ஒழித்து அவரைத் தவத்துக்கு அனுப்பி வைத்தார்.

அஹங்காரம் படைத்த மனிதனுக்கும் நிறை மனிதனுக்கு மிடையே உள்ள போராட்டத்தை விளக்குவதே பரசுராமன் தசரதராமன் போராகும். மஹாவிஷ்ணுவினுடைய அவதாரம் படிப்படியாக ஜீவன் பரிணமித்து வருவதைக் குறிப்பதாகும். ஜீவன் ஒரு நிலையிலிருந்து அதற்கு மேலான நிலையை அடைவதற்குப் போராடியே ஆகவேண்டும். கீழ்மையைப் போராடி வெல்லுகின்ற பொழுதுதான் அவன் மேலாம் நிலையை அடைகின்றான்.

கேள்வி: *(648)* தசரத ராமனும் பரசுராமனும் திருமாலின் அவதாரங்கள் ஆவார்கள். பரசுராமர் வாழ்ந்திருக் கையிலேயே தசரதராமன் அவதாரம் நிகழ்ந்தது. இது பொருந்துமா?

பதில்: தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கும்பொழுது

அவதாரமூர்த்தி ஒருவர் வந்து தர்மத்தை நிலைநாட்டுகிறார். அதர்மத்தை அவர் அகற்றுகிறார். அந்தப் பாங்கில் தசரத ராமருடைய அவதாரம் நிறைவேறியது. தசரத ராமருக்கும் பரசுராமருக்கும் இடையில் ஒரு சிறிய போராட்டம் நிகழ்ந்தது. அந்தப் போராட்டத்தில் தசரதராமருக்கு வெற்றி. பரசுராமருக்குத் தோல்வி. தசரதராமர் அப்பொழுதுதான் மணம் புரிந்திருந்த இளைஞர். அவருக்கு வயது பதினேழு. பரசுராமரோ வயதில் மிக முதிர்ந்தவர். விருத்தாப்பியர் என்றே சொல்லலாம். தோல்வி யடைந்த அம்முதியவர் தாம் செய்த பிழையை உணர்ந்தார். தம்மைத் திருத்தியமைக்க அவர் விரும்பினார். நன்கு திருந்துதல் பொருட்டு அவர் ஹிமாசலம் சென்று தவம்புரிய வேண்டும் என்று தசரதராமர் சொல்லியனுப்பினார்.

பரசுராமரை அவதார புருஷர் என்று புராணம் கூறுகிறது. ஒரு தத்துவத்துக்கு விளக்கம் சொல்லுகிற பாங்கில் அக்கூற்று மெய்யானது. ஆனால், சரித்திரபூர்வமாக இரண்டு மூர்த்திகள் ஒரே காலத்தில் தோன்றி ஒருவரோடு ஒருவர் முரண்படுகிற பொழுது அவ்விருவரும் மஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் ஆகமாட்டார்கள். ஆதலால் பரசுராமரை உபசாரத்திற்காக அவதாரமூர்த்தி என்று புராணம் பகருகிறது. சரித்திர பூர்வமாக அது ஒத்துவராது.

மற்றோர் உண்மையை நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். தசரதராமன், கிருஷ்ணன், புத்தர் போன்ற வர்கள் சரித்திர பூர்வமான மூர்த்திகள், தசரதராமனுக்கு முன் வந்த மத்ஸ்ய அவதாரம் முதல் பரசுராமர் அவதாரம் வரையில் உள்ள மூர்த்திகள் கற்பனைப் புருஷர்களாம். சரித்திரபூர்வமாக அவர்கள் மேனிதாங்கி வந்தவர்கள் அல்லர். தத்துவ விளக்கத் துக்கு அத்தகைய மூர்த்திகள் கற்பனையாக அமைக்கப் பெற்றிருக் கின்றனர். அவர்கள் எக்காலத்திலும் தத்துவத்துக்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றனர். நீர் வாழ்வன அனைத்தும் இன்றைக்கும் மத்ஸ்ய அவதாரங்களாம். ஆதலால் மத்ஸ்ய அவதாரம் சிருஷ்டி இருக்கிற காலமெல்லாம் இருந்து வருகிறது. நீர், நிலம் ஆகிய இரண்டிலும் வாழ்பவைகள் கூர்ம அவதாரங் களாம். அக்கோட்பாட்டின்படி ஆமை, நண்டு, தவளை, முதலை ஆகியவைகள் யாண்டும் கூர்ம அவதாரமாக இருந்துவருகின்றன.

நிலத்தில் வாழ்ந்திருப்பதற்கிடையில் நீரில் விருப்பங்கொள்ளுகிற பன்றி, எருமை, நீர்யானை, கல்யானை ஆகியவைகள் வராஹ அவதாரமாம். மனுஷத்தன்மையும் விலங்குத்தன்மையும் கூடியிருக்கிற உயிர்வகைகள் நரசிம்ம அவதாரமாம். வடிவத்தில் மட்டும் மனிதன். ஆனால் இன்னும் பண்படாத நிலையில் இருக்கும் மாக்கள் வாமன அவதாரமாம். சினம், தற்பெருமை முதலியன படைத்திருக்கும் மக்கள் பரசுராம அவதாரமாம். இப்படித் தத்துவத்தோடு இணைத்துப் பொருள்படுத்துமிடத்துப் பரசுராமருக்கும் தசரதராமருக்கும் இடையில் உண்டான பிணக்கு பொருத்தமுடையதாம். கீழ்நிலையில் இருக்கும் உயிர்களை மேல்நிலைக்கு மீட்டெடுப்பது இயற்கையின் பெருஞ்செயல். அப்பெரிய செயலை அவதார மூர்த்திகளின் செயல் என்று புராணம் கூறுகிறது. தத்துவ விளக்கமாக நாம் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பத்து அவதாரங்களும் யாண்டும் இயற்கையில் இருந்து வருவது தத்துவத்துக்குப் பொருந்துகிறது. நீர் வாழ்வன அனைத்தும் மத்ஸ்ய அவதாரம். நீர், நிலம் ஆகிய இரண்டிலும் வசிப்பவை கூர்ம அவதாரம். நீர்ப்பற்றுடன் நிலத்தில் வசிப்பவை வராஹ அவதாரம். பண்பாட்டுக்கு ஏற்ப மனிதன் மற்ற ஆறு அவதாரங்களில் இருக்கிறான். கல்கி அவதாரம் பிரளயத்தைக் குறிக்கிறது.

கேள்வி: *(649)* அவதார புருஷர்கள் நோய்க்கு ஆளாகிறார்களா?

பதில்: நோய் எப்படி, ஏன் வருகிறது என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும். பொருந்தாத உணவு, பொருந்தாத வாழ்க்கை முறை, பொருந்தாத சூழ்நிலை ஆகியவைகளை முன்னிட்டு உடல் நோய்க்கு ஆளாகிறது. பிராரப்த கர்மத்தை முன்னிட்டும் மனிதனுக்கு நோய் வருகிறது. முதலில் சொல்லிய காரணங்களைத் தவிர்த்து மனிதன் நோய்வாய்ப்படாது இருக்கலாம். ஆனால் பழவினைப்பயனாக வருகிற நோயைத் தவிர்க்க முடியாது.

அவதார புருஷர்கள் வினைப்பயனின் விளைவாக உடல் எடுப்பவர்கள் அல்லர். பிறவிப்பிணியில் கட்டுண்டிருக்கிற

ஜீவாத்மாக்களே பழவினைகளைப் பூர்த்தி பண்ணுவதற்கும் புதிய வினைகளைப் பெருக்குவதற்கும் பிறவி எடுக்கின்றனர். அவதார புருஷர்கள் ஈசுவரனுடைய தோற்றம். மாயாசக்தியின் துணைகொண்டு உடலை வேண்டுமென்றே அவர்கள் தங்களுக்குத் தாங்களே உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். மக்களை நல் வழியில் நடாத்திக் காட்டுவதற்கே அவர்கள் பிறப்பெடுக்கின்றனர். எவ்வினைக்கும் அவர்கள் அடிமைகளல்லர். வேண்டுமென்கின்ற அறச்செயல்களில் ஈடுபட்டு மக்களை நல்வழியில் நடாத்து கின்றனர். பிராரப்த கர்மம் அவதார மூர்த்திகளுக்கு இல்லை. அவர்கள் எடுத்துள்ள சரீரம் பஞ்ச பூதங்களால் ஆகியிருப்பதால் சீதம் அல்லது உஷ்ணத்தை முன்னிட்டு அவர்களுடைய உடல் நோயால் பாதிக்கப்படலாம். ஆனால் அவர்கள் அதிவிரைவில் அந்நோயிலிருந்து மீளுகின்றனர். யோகபலத்தால் ஒரு சிலர்க்குச் சூழ்நிலையைக் கடந்த நிலையிலிருக்க முடியும். அன்னவர்களுக்கு நோய் வாராது தடுக்க இயலும். ஹடயோகத்தில் ஈடுபடுகிற சாதாரண ஜீவாத்மாக்களும் நோய் வாராது தடுக்க வல்லவர் களாகிறார்கள். பிராரப்த கர்மத்தின் வேகத்தையும் தணிக்க அவர்களுக்கு இயலுகிறது.

அவதார புருஷர்களுடைய மகிமையை அறிந்துகொள்ளு வதற்கு அவர்களுடைய சரீரத்தின் ஆரோக்கிய நிலை முக்கிய மானதொரு அறிகுறியாகாது. நல்லானொருவன் அணிந்திருக்கும் உடையின் மீது அழுக்குப்படிவது சாத்தியம். அப்படி உடை அழுக்குப் படிந்தாலும் நல்லானுடைய நலனுக்குக் கேடு ஒன்று மில்லை. அதேவிதத்தில் அவதார மூர்த்திகளுடைய அறச்செயல் உடல் உபாதியை முன்னிட்டுத் தடைபடுவது இல்லை. ஏவலின் வாயிலாக எந்த மனிதன் மீதும் நோயைத் தோற்றுவிக்கலாம். அவ்தார மூர்த்திகளுடைய உடல் அந்த விதிக்கு விலக்காகாது. ஆதிசங்கரர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்றவர்கள் ஏவலின் வாயிலாக அவர்களின் மீது சுமத்தப் பெற்ற நோய்க்கு ஆளானார்கள். ஆனால் அதை முன்னிட்டு அவர்களுடைய சொரூபமோ, தர்மத்தை நிலைநாட்டும் செயலோ எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. கேடு போன்று தென் பட்ட ஏவல் நோய்கள் அவர்களுக்கு மறைமுகமாக நலனை உண்டுபண்ணுபவைகள் ஆயின. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா

ஒரு வேடனுடைய அம்புக்கு இலக்காகி யோகநிலையிலிருந்து உடலை உகுத்தார். அத்தகைய நிகழ்ச்சிக்கு அவர் ஆள் ஆனது எந்த விருஷ்ணி வம்சத்தில் அவர் பிறந்தாரோ அந்த விருஷ்ணி வம்சத்திற்கு வந்த சாபக்கேடாக மற்ற விருஷ்ணிகள் மடிந்துபோனது போன்று அவரும் உடலை உகுத்தார். அத்தகைய வினை எவ்விதத்திலும் அவருடைய அவதார மகிமையைப் பாதிக்கமாட்டாது.

தீவிரமாக ஆத்மசாதனத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு உடலைப் பிணிக்கும் நோயைச் சகித்திருப்பதும் ஒரு சாதனமாகிறது. தீர்க்கதரிசிகளாக இருக்கிறவர்கள் உடலுக்கு உண்டாகிற நோய் களைப் பொருள்படுத்துவதில்லை. உலக இன்ப துன்பங்களில் கட்டுப்படாதிருப்பது போன்று உடலைப் பிடித்துள்ள நோய்க்கும் ஆத்ம சொரூபங்களாய் உள்ள அவர்கள் ஆளாவதில்லை. உடலைப் பிடித்துள்ள நோயைச் சாட்சியாய் இருந்துகொண்டு அவர்கள் பார்த்து வருகிறார்கள். ஆக, நோயின் கொடுமையைப் பெருமிதப்படுத்துவது அவர்களுடைய செயலன்று. ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சருக்கு வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் தொண்டையில் புற்றுநோய் உண்டாகி அவருடைய உடல்நிலை முடிவடைந்தது. ஆனால் அச்செயல் இரண்டு பெரிய கோட்பாடு களுக்கு உறுதுணையாயிற்று. நோய்வாய்ப்படுதலிலும் நலன் உண்டு என்னும் கோட்பாடு அவருடைய ஜீவிதத்தின் வாயிலாக வெளியாகிறது. நோய்வாய்ப்படுதலுக்கு இடையில் உடல் உணர்வைத் தாண்டிச் சமாதி நிலை எய்துவது அவருக்கு வழக்கம்போல் இருந்து வந்தது. நல்ல நிலையிலிருந்த உடலைத் தமது அறச்செயலுக்கு அவர் பயன்படுத்தியது போன்று நோய் வாய்ப்பட்டிருந்த அதே உடலையும் கடைசிவரையில் அறச் செயலுக்கே பயன்படுத்தினார். நோய்வாய்ப்படுவது உடலின் கூறு என்றும், ஆத்ம சொரூபம் அதனால் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை என்றும் அவர்களுடைய நோய்வாய்ப்பட்ட ஜீவிதம் உலகத்தவர்களுக்குப் புகட்டுவதாயிற்று. இரண்டாவதாக அவர்களுடைய ஆத்மீக இயக்கம் உருவெடுப்பதற்கு அவரைப் பிடித்திருந்த நோய் நன்கு பயன்பட்டது. அந்நிலையிருந்த அவருக்குப் பணிவிடை செய்வதற்காகச் சிஷ்யர்கள் தங்களுக் கிடையிலே முறை வைத்துக்கொண்டு அல்லும் பகலும்

பாடுபட்டனர். அவ்விதத்தில்தான் அவருடைய அடியார்கள் ஓர் அருள்சங்கமாக வடிவெடுக்கலாயினர். எனவே அவதார புருஷர்களும் பரஞானிகளும் நோய்வாய்ப்படுவது உடல் அளவிலேயாம். அவர்களுடைய சொரூபத்தை நோய் எந்த விதத்திலும் வந்து தாக்குவதில்லை. இதுவே நாம் அறிந்துகொள்ள வேண்டிய பாடமாகிறது.

கேள்வி: *(650)* செத்தவரைப் பிழைக்க வைத்தனர் என்று ஏசுநாதர், ஞானசம்பந்தர் ஆகியோருடைய சரித்திரம் கூறுகின்றது. ஆனால் மகனை இழந்த தாய் ஒருத்தி புலம்பிக்கொண்டு வந்தபொழுது அந்த மகனை எழுப்பித் தரவில்லை கருணாமூர்த்தியான புத்தர். அபிமன்யு இறந்து தாங்கமுடியாத துயரம் ,அடைந்த அர்ஜுனனுக்கு அபிமன்யுவை மீட்டுத்தந்தாரில்லை கிருஷ்ணன். அவதார புருஷரிடையே இவ்விரு மாறான போக்குகள் இருப்பது ஏன்? எந்தப் போக்கு சரி, எது சரியாகாது?

பதில்: சித்த புருஷர்களும், அவதார புருஷர்களும் ஆகிய மேலோர்கள் செய்த அதிசயச் செயல்களை (miracles) இரண்டு பிரிவுகளாகப் பிரித்து விடலாம். ஒன்று இயற்கையினுடைய நடைமுறைக்கு முரண்பட்டது. மற்றது இயற்கையினுடைய நடைமுறையை ஒத்துப்போவது. இயற்கையின் நடைமுறைக்கு முரண்பட்ட செயலை முதலில் ஆராய்வோம். பெரியோர்கள் செய்துள்ள இயற்கைக்கு முரண்பட்ட செயல்கள் எண்ணிக் கையில் அடங்கா. அவைகளுள் செத்தவர்களுக்கு உயிர் கொடுத்தல் என்னும் ஒரு செயலை மட்டும் இப்பொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளலாம். செத்தவர்களுக்கு உயிர் தர முடியுமா? சிறிது நேரத்திற்கு உயிர்தரமுடியும் என்பதை இக்காலத்திய மருத்துவ சாஸ்திரம் நிரூபித்து வருகிறது. செயற்கை முறையால் ஹிருதயம் திரும்பவும் வேலை செய்யும் படி தூண்டுகிறார்கள். சில மணி நேரத்துக்கு உயிர் திரும்பி வந்துவிடுகிறது. செத்தவனுக்கு ஞாபகம் வந்துவிடுகிறது. சில வார்த்தைகளையும் பேச அவனுக்கு இயலுகிறது. பிறகு வாழ்வு ஒடுங்கிவிடுகிறது. யோக சித்தியைப் பெற்றிருக்கிறவர்கள் வாழ்க்கைக்குத் தகுதியல்லாத உடலைத் தகுதியுடையதாகத்

தங்களுடைய மனோசங்கற்பத்தால் செய்கிறார்கள். அந்த உடலைவிட்டு விலகிக்கொண்ட ஜீவாத்மன் திரும்பவும் அந்த உடல் ஞாபகத்தைப் பெற்று அதில் கொஞ்சகாலம் அவன் ஜீவித்திருக்கும்படி தூண்டுகிறார்கள். ஒரு வீட்டைவிட்டுக் குடிபோனவனைத் திரும்பவும் அதில் வந்து வசித்திருக்கும்படி மற்றவர்கள் ஏவலாம். அதன்படி அவன் அங்கு வந்து வசித் திருக்கவும் முடியும். அதே பாங்கில் உடலைவிட்டுப் பிரிந்த ஜீவாத்மா யோக பலத்தால் பழுதுபார்க்கப்பட்ட அந்த உட லினுள் திரும்பவும் வந்து கொஞ்ச காலம் வாழ்ந்திருக்கிறது. இந்தச் செயலைப் பெரியவர்கள் சிலர் செய்திருக்கின்றனர். இதனால் உலகுக்குப் பெரிய நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்பது கேள்வி. நன்மை ஒன்றுமே ஏற்படவில்லையென்று சொல்லலாம். திரும்பவும் உயிர்பெற்று எழுந்தவர்கள் கொஞ்ச காலத்துக்குப் பிறகு மறுபடியும் மாண்டுபோயினர். அவர்களுக்கு உயிர்கொடுத்த பெரியவர்களும் தங்கள் தேகங்களை நீத்துவிட்டு மறைந்து போயினர். அவர்கள் செய்த அதிசயச் செயல்களைக் கேட்டு அல்லது வாசித்து நாம் வியப்படைகிறோம். ஆனால் அதுபோன்ற செயல்களை நமது ஆயுட்காலத்தில் நாம் காண்ப தில்லை. அச்செயல்கள் நமக்கு நம்பிக்கைக்குரிய விஷயங்களாகப் போய்விட்டன.

இனி, புத்தரும், அவர்போன்ற பெருமக்களும் செய்த செயல்கள் முற்றிலும் இயற்கையை அனுசரித்தவைகளாம். இயற்கைக்கு முரண்பட்ட பாங்கில் அவர்கள் ஒன்றும் செய்ய வில்லை. மாது ஒருத்தி தனது அருமைப் புதல்வனைக் கூற்றுவனுக்குப் பறிகொடுக்கும்படி நேரிட்டது. அத்துயரத்தைச் சகிக்க அவளுக்கு இயலவில்லை. கதறிப் பதறிக்கொண்டு புத்தர் பெம்மானிடம் சென்று அவர் காலில் விழுந்து தன் தனையனுக்கு உயிர் கொடுத்து அருளவேண்டுமென்று விண்ணப் பித்தாள். அவர் அதன் பொருட்டு யாராவது ஒருவர் வீட்டி லிருந்து கடுகு கொஞ்சம் வாங்கிக்கொண்டு வரும்படி கட்டளை யிட்டார். புத்துயிர் பெற்றவள் போன்று அதன் பொருட்டு அவள் புறப்படுகையில் அப்பெம்மான் மற்றொரு நிபந்தனை யையும் விதித்தார். யார் வீட்டில் அவள் கடுகு பெறுகின்றாளோ அந்த வீட்டில் அல்லது குடும்பத்தில் யாரும் செத்துப்

போயிருக்கலாகாது. அதுவே அவர் இட்ட நிபந்தனை. துயரத்தில் அழுந்திய மாது, வீடு வீடாகச் சென்று விசாரித்தாள். ஆனால் மரணம் நிகழாத குடும்பம் எதையும் அவள் காணவில்லை. தனது ஏமாற்றத்தை அவள் புத்தரிடம் வந்து தெரிவித்தாள். "உலகில் எல்லாக் குடும்பங்களிலும் நிகழ்கின்ற நிகழ்ச்சிதானே உன் குடும்பத்திலும் நிகழ்ந்திருக்கிறது. நீயும் மரணத்தை நோக்கித்தானே போய்க்கொண்டிருக்கிறாய். முன்னது பின்னதாகப் பிறந்தவர்கள் எல்லோரும் இறந்தாக வேண்டும். இதினின்று யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. உன் மகனை மட்டும் இவ்விதிக்கு விலக்காக்குவது எங்ஙனம்?" இதைக் கேட்டதும் அந்த மாதுவுக்கு நல்லறிவு பிறந்தது. புத்தரை வணங்கி மனத்தெளிவு பெற்றுத் தன் வீடுபோய்ச் சேர்ந்தாள். புத்தர் செய்த செயல் எக்காலத்திலும் எல்லார்க்கும் பயன்படும். மற்ற பெரியவர்கள் செய்த செயல்களைக் கேட்க வியப்பாயிருக்கிறது. மற்றவர்களுக்கு அவை பயன்படமாட்டா. நல்ல விவேகத்தை மக்களுக்கு வழங்குவதற்குப் புத்தர் செய்த செயலே நன்கு பயன்படுகிறது. கண்ணபிரான் பிள்ளைப் பருவத்தில் சிலர்க்கு உயிர்கொடுத்து அவர்களை எழுந்திருக்கச் செய்தான். ஆனால் மஹாபாரத யுத்தத்தை நடாத்தியபொழுது இயற்கையின் நடை முறையையொத்தே செத்தவர்களை எழுப்ப அவன் முயல வில்லை. தன் தங்கையின் புதல்வனாகிய அபிமன்யு வயதில் மிகச்சிறியவன். எனினும் கால கதியை அனுசரித்து மறைந்து போய் விடுவதே முறையாயிற்று. எனவே ஸ்ரீகிருஷ்ண பகவான் அவனுக்கு உயிர் கொடுத்து எழுப்பவில்லை. அதுமட்டுமல்ல; உலகத்தில் மானுடரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. ஜனத்தொகை பெருகினால் மக்களின் தரம் கீழே போய்விடுகிறது. அப்பொழுது எண்ணிக்கையைக் குறைக்க இயற்கையில் சில சம்பவங்கள் நேருகின்றன. அவைகளில் யுத்தமும் ஒன்று. புல்லிய உயிர்களைப் பெருக்குதற்குப் பதிலாகக் கண்ணன் அவைகளைக் கரந்தெடுத்தது உலகுக்குப் பயன்படுகிற அதிசயச் செயலாகும்.

கேள்வி: *(651)* ஸ்ரீ ராமகிருஷ்ணர் பன்னிரு வருஷ காலம் கடுந்தவம் இயற்றினார் என்று அறிகிறோம். அவதார

புருஷராயினும் அவர் அதைச் செய்ததேனோ? ஆனால் அவதார புருஷர்களான இராமரும் கிருஷ்ணரும் எவ்விதத் தவமும் சாதனையும் புரிந்ததாக வரலாறு கூறவில்லை. அவர்கள் அவ்வாறு செய்யாதது ஏன்?

பதில்: அவதார புருஷர்கள் கூட்டத்தில் புத்தர், ஏசுநாதர் போன்றவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். யுகந்தோறும் அவதார புருஷர்கள் பலர் உலகில் தோன்றி வருகின்றனர். காலத்துக்கும், சூழ்நிலைக்கும் ஒப்ப அவர்கள் விதவிதமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். தாங்கள் உலகுக்குக் கொண்டு வந்திருக்கும் செய்தியைத் தங்கள் வாழ்க்கையின் வாயிலாக அவர்கள் வெளியிடுகின்றனர். எந்தக்காலத்துக்கு எத்தகைய நெறி தேவையோ அதை அக்காலத்தில் தோன்றி வந்திருக்கும் அவதாரமூர்த்தியின் வாழ்வில் காணலாம். மனிதன் ஒருவன் நல்ல மனிதனாக உலகில் எப்படி வாழ்ந்திருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டு ஆகிறது ஸ்ரீ தசரதராம சரித்திரம். பிறப்பெடுத்திருப்பதற்கிடையில் உடலிலோ, பிரபஞ்சத்திலோ கட்டுப்படாதிருப்பது ஆத்ம சொரூபம் என்பதை விளக்கிக் காட்டுதற்கு ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் பயன்படுகிறது.

புத்தரும், ஏசுநாதரும் துறவறத்தின் சிறப்பை விளக்குதற்கென்று அவதரித்தவர்கள். தவமும் ஆத்மசாதனங்களும் துறவறத்துக்கு இன்றியமையாதவைகள். எனவே அவர்கள் விதவிதமான சாதனங்களில் ஈடுபடவேண்டியதாயிற்று. ஆத்மசாதனங்கள் போன்று தென்படுகின்ற முறைதவறிய சாதனங்கள் பல இருக்கின்றன. அத்தகையவைகளையும் கையாண்டு அவைகளால் ஆத்மசாதகனுக்கு நன்மை ஒன்றும் ஏற்படாது என்பதைப் புத்தர் தாமே அம்முறைகளில் ஈடுபட்டு விளக்கிக் காட்டியுள்ளார். அதன் பிறகு நெறியான சாதனங்களையும் அவர் கையாண்டு இருக்கிறார். சாதகன் ஒருவன் எத்தகைய சாதனங்களை அனுஷ்டிக்க வேண்டும், எத்தகைய சாதனங்களை அனுஷ்டிக்கலாகாது என்பதற்குப் புத்தருடைய வாழ்வே நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தமது வாழ்வில் இல்லறம், துறவறம் ஆகிய இரண்டையும் சமரசப்படுத்திக் காட்டுகிறார். இல்வாழ்பவன் ஒருவன் உயர்ந்த லக்ஷியத்தைக்

கடைப்பிடிக்கின்றபொழுது அவன் துறவிக்கு ஒப்பானவன் ஆகிவிடுகின்றான். எந்த விதத்திலும் அவன் துறவிக்குப் பின்வாங்கியவன் அல்லன். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜீவிதம் இக்கோட்பாட்டை விளக்குகிறது. நேர்மையான ஆத்ம சாத னங்கள் பலதரப்பட்டவைகள் இருக்கின்றன. அவையாவையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அனுஷ்டித்தார். சாதன வகைகளை உலகத் தவர்க்கு விளக்கிக்காட்டுதற்கென்றே அவர் அவதரித்துள்ளவர் என்று இயம்பலாம். புத்தர் புரிந்த சாதனங்களுக்கும், ஸ்ரீகிருஷ்ணர் புரிந்த சாதனங்களுக்கும் இடையில் வேற்றுமை ஒன்று உண்டு. பயன்படாத சில சாதனங்களைச் செய்து அவைகள் பயனற்றுப் போய்விட்டன என்பதையும் சாஸ்திரங் களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற நல்ல சாதனங்கள் சிலவற்றைச் செய்து அவைகள் நலந்தரக்கூடியவைகள் என்பதையும் புத்தருடைய ஜீவிதம் விளக்குகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணரோ சாஸ்திரங்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற நல்ல சாதனங்களை மட்டும் எடுத்துக்கொண்டார். அவைகளில் ஒன்றையும் பாக்கி விடாது அத்தனைவிதச் சாதனங்களையும் அவர் வெற்றிகரமாகச் செய்து சாதித்தது அவருடைய ஜீவிதத்திலுள்ள சிறப்பாகும்.

இங்ஙனம் ஒவ்வொரு அவதார மூர்த்தியும் பாரமார்த்திக வாழ்வு சம்பந்தமான தனிச்செய்தி ஒன்றை உலகுக்கு வெளியிடு கின்றனர். சாதன வகைகளை விளக்கியது ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய சிறப்பு ஆகும். ஒவ்வொரு அவதார மூர்த்தியும் ஒவ்வொரு பாங்கில் உலகுக்குப் பயன்பட்டு வருகிறார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இராமரும், கிருஷ்ணரும் வாழ்ந்து வந்த வாழ்க்கை வகைகளே தத்தம் போக்கில் சாதன வகைகள் ஆகின்றன என்று சொல்லலாம். அவைகள் இவ்வுலகில் மக்கள் வாழ்வாங்கு வாழவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகின்றன. ஸ்ரீராமகிருஷ்ணர் புரிந்த சாதனங்கள் கடவுளை அடைதற்கு மனிதன் என்ன செய்யவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகின்றன. ஆனால் அவர் புரிந்த அத்தனை சாதனங்களையும் ஒவ்வொரு சாதகனும் அனுஷ்டிக்க வேண்டும் என்னும் அவசியமில்லை. ஏதேனும் ஒரு சாதனத்தை மட்டும் ஒருவன் தீவிரமாகக் கையாண்டால் போதுமானது. அவன் நிச்சயமாகவே இறைவனை அடையலாம். ✪

48. முனிவர்கள்

கேள்வி: *(652)* துர்வாச மஹா முனிவர் போன்ற மஹா தபஸ்விகள் ஐம்புலன்களையும் அடக்கி அடிமைப்படுத்தியவர்கள். ஆயினும் மஹாபாரதம் முதலிய நூல்களில் வரும் கதைகளில் மேற்படி தபஸ்விகள் கோபத்திற்குத் தகுந்த காரணங்கள் இல்லாமலேயே மஹா கோபமாகி மற்றவர்களைச் சபிக்கிறார்கள். அப்படிப்பட்ட தபோதனர்களுக்கும் அவ்வளவு ஆத்திரம் வரவேண்டியதற்குரிய காரணம் என்ன?

பதில்: துர்வாச மஹரிஷியைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யும்பொழுது அவருடன் சேர்த்து நாரத மஹரிஷியையும் எடுத்துக் கொள்ளலாம். இவ்விருவரும் சரித்திர பூர்வமான புருஷர்களா அல்லது ஒரு தத்துவம் உருவகப்பட்டு எழுந்த மூர்த்திகளா என்பது சந்தேகம். சரித்திர பூர்வமான புருஷர்களென்றால் பல காலங்களில் அவர்கள் இருந்திருக்கமுடியாது. ஏதேனும் ஒரு காலத்திலிருந்த மூர்த்திகள் என்றால் மற்ற காலங்களிலும் அவர்கள் குறிப்பிடப்படுவது உருவகப்படுத்திய முறையில் இருக்கலாம். ஆக, அவர்கள் ஏதேனும் ஒரு காலத்தில் இருந்தவர்கள் அல்லது உருவகப்படுத்திய மூர்த்திகள் ஆக வேண்டும். அவர்கள் சரித்திர பூர்வமான மூர்த்திகளாக இருந்தாலும் சரி, வெறும் கற்பனாமூர்த்திகளாக அமைந்திருந்தாலும் சரி; அவர்களுடைய ஜீவிதத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள.

கோபமே வடிவெடுத்தவர் துர்வாசர். பக்தியும் ஞானமும் நிறைந்தவராய் மூவுலகங்களிலும் சஞ்சரிக்கும் பாங்குடையவர் நாரதர். சில வேளைகளில் நாரதர் கலகமூட்டிவிடக் கூடியவர்.

இங்ஙனம் இவ்விரு மூர்த்திகளும் இரண்டு தத்துவங்களுக்கு இலக்காகின்றனர்.

மானுட முன்னேற்றத்துக்குச் சாந்தம் அவசியமாக இருப்பது போன்று கோபமும் வேண்டப்படுவதே. தக்க இடத்தில் தக்க காரணத்தை முன்னிட்டு ஒருவர் சினந்து கொள்ளுவது நலத்தை விளைவிக்கும். சரீர வாழ்க்கையில் ஒரு சந்தர்ப்பத்தில் கட்டி களும் கொப்புளங்களும் வெளிக்கிளம்புகின்றன. அந்தச் சரீரத்தின் ஆரோக்கியத்தை முன்னிட்டு அவைகள் வெளிக்கிளம்புவது முற்றிலும் அவசியமானது. உடல் அமைப்பில் அவைகள் இடம்பெற்றிருப்பது போன்று உள்ளத்தின் அமைப்பில் குரோதம் இடம் பெற்றிருக்கிறது. துர்வாசருக்கு எப்பொழுதாவது யாரிடத் திலாவது கோபம் மூண்டுவிட்டதை நாம் காண்போமானால் அது இறுதியில் அம்மனிதருடைய முன்னேற்றத்துக்கே ஏதுவானதாக அமையப்பெற்றது என்பதை நாம் ஓர்ந்து அறிந்து கொள்ளலாம். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். இராமனிடத்துத் தனித்திருந்து ஏதோ ஓர் விஷயத்தைப் பேச வேண்டும் என்று அவர் அயோத்திக்கு வந்தார். அப்படி அவர்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது ஒரு நிர்ப்பந்தத்தால் அவர்கள் முன்னிலையில் லக்ஷ்மணன் வரவேண்டியதாயிற்று. அதை முன்னிட்டுத் துர்வாசருக்குப் பெரும் கோபம் கிளம்பி விட்டது. ஸ்ரீராமன் பூவுலக வாழ்க்கையை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அவரது சினமே காரணமாயிற்று எனலாம். வாழ்வின் பேரமைப்பை ஆராயுங்கால் சரீரத்தில் காலமெல்லாம் கட்டுண்டு கிடப்பது ஓர் ஆத்மாவின் நோக்கமல்ல. சரீரம் ஒன்றை எடுத்து அதன்மூலம் செய்து முடிக்கவேண்டிய காரியத்தை நிறைவேற்றிவிட வேண்டும். அதன் பிறகு காயத்தைக் களைந்துவிட்டு அதிலும் உயர்ந்த நிலைக்குப் போவதே குறிக்கோள். ஸ்ரீராமன் உடலை உகுப்பதற்குத் துர்வாசரின் கோபம் பயன்பட்டது. எப்பொழுதெல்லாம் அவருக்குக் கோபம் கிளம்பிற்றோ அப்பொழுதெல்லாம் மறை முகமாக அந்தக் கோபத்துக்கு இலக்கானவர்களுக்கு நலம் விளைவதைக் காணலாம்.

நாரதரைக் காண்பதே பக்தியின் உருவத்தைக் காண்பதற்கு ஒப்பாகும். சர்வகாலமும் இறைவனுடைய திருநாமத்தை

உச்சரித்துக்கொண்டே இருப்பது அவரது இயல்பு. சென்றவிட மெல்லாம் பக்தியைப் பெருக்குவதும் அவருடைய போக்கு. அவர் கிளப்பிய கலகங்கள் நன்மையை விளைவிப்பன ஆயின. சரீர நலத்தை நாடுபவர் சில வேளைகளில் பேதிக்குக் கொடுக் கின்றனர். அது உள்ளே ஒரு கலகத்தை உண்டுபண்ணுகிறது. அழுக்கு யாவும் அகற்றப்படுகிறது. கேடுபோன்று தென்படும் அச்செயல் உண்மையில் உடல் நலத்துக்கேயாம். இங்ஙனம் துர்வாசர் போன்ற தபோதனரிடம் திகழ்ந்த குரோதம் பொது நன்மையின் பொருட்டே அமைந்ததாயிற்று. ஆக, அதைக் குறித்து அச்சமோ, வியப்போ, ஏமாற்றமோ கொள்ள வேண்டியது அவசியமில்லை.

கேள்வி: *(653)* முனிவர்கள் துறவியர். ஆனால் சிலர் கிருஹஸ்தர்களாயிருந்து மக்கட்பேறும் அடைந்திருக் கிறார்கள். கோபதாபங்கட்கும் உட்பட்டிருக்கிறார்கள். முனிவர்கள் ஏன் மற்றவர்களைப்போல் கீழ்நிலைக்கு வருகிறார்கள்?

பதில்: இவ்வுலக வாழ்க்கைக்கு இரண்டாந்தரமான இடம் கொடுத்துப் பாராமார்த்திகப் பெருவாழ்வுக்கே முதன்மை கொடுத் திருப்பவர்கள் முனிவர் எனப்படுகின்றனர். மேலான பெரு வாழ்வைச் சதா மனதில் எண்ணிக்கொண்டிருப்பவர்கள் முனிவர்கள் எனப்படுகின்றனர். நாளடைவில் ஞானிகள், பக்தர்கள், யோகிகள் எனப் பாகுபடுத்தப்பட்டவர்கள் பண்டைக்காலத்தில் முனிவர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்களுள் பண்பில் மேல்நிலைக்கு வந்தவர்கள் ரிஷிகள் ஆகிறார்கள்.

மனிதனுடைய மனப்பான்மைக்கு ஏற்ப அவன் துறவியா கவோ, இல்வாழ்பவனாகவோ இருக்கலாம். இவற்றுள் எதை வேண்டுமானாலும் கடைப்பிடித்து மனிதன் பண்பாட்டில் மேல்நிலைக்கு வரலாம். ஆதலால் முனிவர்களுள் ஒரு சிலர் துறவியர்களாகவும், மற்றும் சிலர் இல்வாழ்பவர்களாகவும் இருந்து வந்தது இயல்பே. இல்வாழ்பவர்கள் இரண்டொரு மகப்பேறு பெறுவது உலகுக்குச் செய்யும் கடமையாகிறது. அதன்பிறகு அவர்களுடைய நாட்டம் முற்றிலும் பரத்திற்கு உரியதாகிறது.

பரநாட்டத்தில் ஈடுபட்டதினாலேயே அவர்கள் கோபதாபங்களை வென்றுவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. பரநாட்டத்தில் ஈடுபட்டிருப்பதற்கு இடையில் அவர்களுக்குப் பிடிக்காத விஷயங் களைக் குறித்து அவர்கள் கோபித்துக்கொண்டது இயல்பே. சில பதவிகளையோ, பொருள்களையோ பெறுதற்கு அவர்கள் அவாக்கொண்டதும் உண்மையே. கோபதாபங்களைத் தாற்காலி கமாகப் பெறலாம். பிறகு அவைகளை வென்றவர்கள் மேல் நிலைக்குப் போனார்கள். கோபதாபங்கட்குத் திரும்பத் திரும்ப அடிமையானவர்கள் கீழ்நிலைக்கு வருகிறார்கள். மானுட முயற்சியில் மேன்மைக்கும் இடமுண்டு; மேன்மையினின்று வழுவுகிறவர்கள் கீழ்மையும் அடைகிறார்கள் என்பதற்கு முனிவர்களுடைய வாழ்வே சான்றாகிறது. ✪

49. ஞானி

கேள்வி: *(654)* அவதாரபுருஷர் தோன்றுவது வட இந்தியாவில், ஆசாரிய புருஷர் தோன்றுவது தென்னிந்தி யாவில் என்ற முதுமொழியொன்றை முன்னாள் ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் டில்லியில் நடந்த பட்டமளிப்பு விழா ஒன்றில் கூறியிருக்கின்றார். மகான்கள் தோன்றுவதற்கும்கூட பூகோள வரம்புகள், விதிகள், எல்லைகள் உண்டோ?

பதில்: உலக சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் மத ஸ்தாபகர்களைப்பற்றிய உண்மை ஒன்று நமக்கு விளங்கும். மத ஸ்தாபகர்கள் எல்லாரும் ஆசியாக் கண்டத்திலேயே தோன்றி யவர்கள் ஆவார்கள். இதுபரியந்தம் உலகத்தில் ஆசியாக் கண்டத்தைத் தவிர வேறு எந்தக் கண்டத்திலும் சமய ஆசாரியர்கள் தோன்றியது கிடையாது. ஒருவேளை எதிர் காலத்திலும் அப்படியேதான் வந்து அமைந்துவிடலாம். இதற்குக் காரணம் யாது என்று நாம் முழு உண்மையைத் தெரிந்து கொள்ளமுடியாது. ஒன்று மட்டும் நமக்கு வெளிப்படை யாகின்றது. பூவுலகில் ஒவ்வொரு பகுதியும் ஏதேனும் ஒரு சிறந்த காரியத்துக்கென்றே அமைந்தது ஆகின்றது. அதற்கு வேறு ஒரு உபமானம் எடுத்துக் கொள்வோம். மானுட உடல் இருக்கின்றது. உடலிலே ஒவ்வோர் அவயவத்துக்கும் தனிச் செயல் உண்டு. ஓர் உறுப்பு செய்கின்ற செயலை மற்றோர் உறுப்பு செய்யமுடியாது. நடப்பதற்கென்றே கால்கள் அமைந் திருக்கின்றன. பிடித்து வினைகள் பல ஆற்றுவதற் கென்றே கைகள் அமைந்திருக்கின்றன. கைகள் செய்கின்ற செயல்களைக் கால்கள் செய்யமாட்டா. கால்களின் அலுவலைக் கைகள்

செய்யமாட்டா. அதனதன் வினைக்கே ஒவ்வோர் அங்கமும் தகுதியுடையதாகின்றது. அங்ஙனம் உலகிலுள்ள பல கண்டங்களில் ஒவ்வொன்றுக்கும் ஏற்ற செயல்கள் இருக்கின்றன. அவைகளுள் ஆசியாக்கண்டம் சமயப்பெருமக்களை உண்டு பண்ணுதற்கென்றே சிறப்பாகத் தோன்றியுள்ளதாக இருக்கலாம். உலக சரித்திரம் இக்கோட்பாட்டை நிரூபிக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று நாம் சொல்லமுடியாது. அப்படி இதுபரியந்தம் நிகழ்ந்து வந்துள்ளதுதான் நமக்கு விளங்குகிறது.

ஆசியாக் கண்டத்திலும் நமது இந்தியாவுக்குத் தனிச்சிறப்பு ஒன்றுண்டு. பாரமார்த்திக வாழ்வை உலக மக்களுக்கிடையில் வழங்கவந்த பெருமக்கள் இந்தியாவில்தான் அதிகம் தோன்றி இருக்கின்றனர். ஆகவே ஆசியாக் கண்டத்தினுள்ளும் இந்தியா வுக்குத் தனிச்சிறப்பு ஒன்று இருக்கின்றது. இனி, இத்தேசத்துக் குள்ளே மாகாணவாரியாக ஆராய்ந்து பார்த்தால் சிறிது வேற்றுமை புலப்படும். அத்தகைய வேற்றுமைகளுள் ஒன்று ஆசாரியர்களைப் பற்றியதும், அவதார புருஷர்களைப் பற்றியது மாம். மக்களுடைய மனப்பான்மையும் ஒருவிதத்தில் இதற்குத் துணைபுரிகிறது. அவதார புருஷர்களிடம் பெரும்பற்று வைக்கின்றார்கள் ஒரு சிலர். ஆசாரியர்களிடத்து அபிமானம் வைக்கின்றனர் மற்றொரு சாரார். தென்னிந்திய மக்களாகிய நமக்கு ஆசாரிய புருஷர்களிடத்திலேயே அதிகம் பற்றுதல் உண்டாகிறது. நமது மனப்பான்மைக்கு ஏற்ப இங்கு சமயாச் சாரியர்கள் ஏராளமாகத் தோன்றியிருக்கின்றனர். வட இந்தியாவில் இருப்பவர்களுடைய இயல்புக்கு ஒப்ப ஆங்கு அவதார புருஷர்கள் தோன்றி இருக்கின்றனர். தேசத்தின் இயல்பு இத்தகையது என்று சொல்லுவதற்குமேல் வேறு எக்காரணத்தையும் எடுத்து இயம்ப நமக்கு இயலாது. ஆக, இது நம் மாகாணத்தைப் பற்றிய ஓர் பேருண்மை என்றுதான் நாம் முடிவுகட்ட வேண்டும். இதை அடிப்படையாகக் கொண்டு ஒருவிதத்தில் நம்மைப்பற்றி நாம் பெருமை கூறிக்கொள்ளலாம். அதாவது தர்மம் குறைந்துபோய் அதர்மம் தலையெடுக்கின்ற இடத்திலேதான் அவதார புருஷர்கள் வருகிறார்கள். வாழ்க் கையில் நாம் செய்யக்கிடப்பது எது என்கின்ற ஐயம் உண்டா கின்ற இடத்தில் ஆசாரிய புருஷர்கள் வருகிறார்கள். தர்மம்

கெட்டுப் போய்விடுகின்ற அத்தகைய பெரிய கேடு எதையும் தென்னிந்தியா செய்துவிடவில்லை. ஆகவே இங்கு அவதார புருஷர்கள் வரவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால் எத்தகைய பாங்கில் ஒழுகவேண்டும் என்ற ஐயம் இடையிடையே நம்மவர்களுக்கிடையில் தோன்றுவதாகிறது. அதை அகற்றுவதற்கான உபாயங்களையும் நாம் தேடிக்கொள்கின்றோம். தென்நாட்டவர்களாகிய நாம் ஆசாரிய புருஷர்களையும் நன்கு பின்பற்றுகிறோம். அவதார புருஷர்களுடைய ஜீவித்தையும் போற்றிப் பின்பற்ற முற்படுகிறோம். ஆதலால் நம் இயல்பு பரந்தது என்றும், சாலச் சிறந்தது என்றும் நாம் சொல்லத் துணியலாம். வாழ்க்கைக்குரிய நலம் எவரிடத்திருந்து எப்பாங்கில் நமக்கு வருவதாயிருந்தாலும் நாம் அதைப் பூரண ஆதரவுடன் ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே நமக்கு ஆசாரிய புருஷர்கள் இருந்தால் போதுமானது. கட்டாயப்படுத்தி, வற்புறுத்தி மனிதனைத் திருத்தியமைப்பதற்குத் தெய்வசக்தியோடு கூடிய அவதார புருஷர்கள் வருவது அவசியமாகிறது. இதுவும் ஒருவிதத்தில் இயற்கையின் அமைப்பையே வெளிப்படுத்துகிறது என்றுதான் நாம் இயம்பவேண்டும். தென்னிந்தியாவின் இயல்பு ஆசாரிய புருஷர்களுக்கு ஏற்றதாகும்.

கேள்வி: *(655)* ஜீவன் முக்தரை அறிவது எப்படி?

பதில்: ஜீவன் முக்தரை அறியும் உபாயத்தை ஒரு உபமானத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம் என்று பரமஹம்ச தேவர் பகர்ந்திருக்கிறார். பணக்காரன் ஒருவன் தான் பணம் படைத்தவன் என்று தன்னைப்பற்றி ஒன்றும் சொல்லிக் கொள்வதில்லை. ஆயினும் அவனுடைய வீட்டைப் பார்த்தால் அவனுடைய பாங்கு அதன்மூலம் வெளியாகிறது. இரவில் அறைகள் எல்லாவற்றிலும் தீபம் எரிந்து கொண்டிருக்கும். அவ்வீட்டில் எப்பகுதியும் இருள் படிந்து இராது. அதே விதத்தில் நிறைஞானி ஒருவன் ஜீவன் முக்தனாகிறான். சரீரத்தில் இருக்கின்றபொழுதே சரீரத்தின் கூறுகளில் ஜீவன் முக்தன் கட்டுண்டு போவதில்லை. உடலைத் தான் என்று கருதுகின்றவன் தேகாத்ம புத்தி படைத்திருப்பது மட்டுமன்று; அந்தத் தேகத்தின்மீது அவன் அணிந்திருக்கும் ஆடை

ஆபரணங்களுக்கேற்ற ஆடம்பரமான மனப்பான்மையும் அவனுக்கு உண்டாகிறது. இதற்கு நேர்மாறாகப் பேராசிரியர் ஒருவர் நேர்த்தியாகத் தூய ஆடை அணிந்திருந்தும் அந்த ஆடையைப் பற்றிய உணர்ச்சி அவருக்குச் சிறிதேனும் வருவதில்லை. அதே விதத்தில் ஜீவன் முக்தன் ஒருவனுக்கு உடலைப்பற்றிய அபிமானமோ, பற்றுதலோ உண்டாவதில்லை. வெயிலில் நடந்து செல்லுகிற மனிதன் ஒருவன் தன் உடல் உண்டுபண்ணும் நிழலை எங்ஙனம் பொருள்படுத்தாது போகிறானோ அங்ஙனம் ஜீவன் முக்தன் ஒருவனை அவனுடைய உடல் நிழல்போன்று சார்ந்திருக்கிறது. உடலை தான் என்று அபிமானிப்பதால் காமக்குரோதாதிகள் உருவெடுக்கின்றன. ஜீவன் முக்தன் ஒருவனுக்கு அங்ஙனம் மனோவிகாரங்கள் உண்டாவதில்லை. நிந்தையும் ஸ்துதியும் அவனை எந்த விதத்திலும் பாதிக்கமாட்டா. வாழ்க்கையில் வந்து அமைகின்ற வெற்றியும் தோல்வியும் எந்தவிதமான மனமாற்றத்தையும் அவனிடத்து உண்டுபண்ணமாட்டா. தாமரை இலை தண்ணீரில் தோயாது தண்ணீரில் நிலைத்திருப்பது போன்று ஜீவன் முக்தனொருவன் உலகில் கட்டுப்படாது உலக வாழ்க்கையை நடாத்தி வருகிறான். உடலில் வாழ்ந்திருப்பதையும் உடல் அழிந்துபட்டுப்போவதையும் ஒரேபாங்கில் ஜீவன் முக்தன் பொருள்படுத்துகிறான்.

கேள்வி: *(656)* ஒரு ஞானி அல்லது ஜீவன் முக்தனுடைய உலக வாழ்வு முடியும்போது அவனுடைய உடல் ஜோதியில் கலக்கிறது என்கின்றனர். இதைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

பதில்: ஜீவாத்மன் பரமாத்மனில் லயமாவது முக்தி என்று சொல்லப்படுகிறது. நதியானது நெடுந்தூரம் பாய்ந்து தனது மூலநிலையாகிய கடலில் ஒடுங்குகிறது. ஜீவாத்மன் பல பிறவிகளில் நெடும் பயணம் புரிந்து தனக்கு மூலப்பொருளாகிய பரமாத்மனிடம் சேருகிறான். இதுவே முக்தி எனப்படுகிறது. பஞ்சபூதங்களால் ஆகிய உடலைத் தான் என்று கருதுவது அக்ஞானம். அக்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு ஆசைகள் எழுகின்றன. அவ்வாசைகளை நிறைவேற்றுதற்குப்

பிறவிகள் பல தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. தன்னை உடல் என்று எண்ணி வந்த ஜீவன் தன்னை ஆத்ம சொரூபம் என்று கேள்விப்படுவது சாஸ்திரஞானம். தன் ஆசைகளை யெல்லாம் விட்டொழிப்பது பரிபாகத்தின் அறிகுறி. ஆசைகள் முற்றிலும் அகலுமிடத்து தான் உடல் சொரூபம் அல்ல; ஆத்ம சொரூபம் என்னும் சுவானுபவம் உண்டாகிறது. அந்த அனுபவத்துக்குப் பிறகு பிராரப்த கர்மம் இருக்கும் வரையில் அந்த ஞானி உடல் வாழ்க்கை வாழ்ந்து வருகிறான். அப்பொழுது அவன் ஜீவன் முக்தன் என்று சொல்லப்படுகிறான். வெளித் தோற்றத்துக்கு மற்ற ஜீவர்களைப் போன்று ஞானியும் உடலில் கட்டுண்டவன் போன்று தென்படுகிறான். ஆனால் உடலில் இருக்கும்பொழுதே உடலில் சம்பந்தப்படாதவனாக அவன் இருக்கிறான். தனக்கும் தன் தலைவனுக்கும் உள்ள மாறாதத் தொடர்பை அவன் மறவாது நினைவில் வைத்திருக் கிறான். பிராரப்த கர்மம் முடிந்ததும் அவன் உடல் மாய்கிறது. அப்படி அது சாவது ஞானியின் நினைவுக்கு வருவதில்லை. நம்முடைய நிழல் மறைவது நம் நினைவுக்கு வருவதில்லை. அது மறைவதால் நமக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. அதே விதத்தில் ஞானியின் உடல் வினையின் வேகம் முடிந்து வீழ்வதால் ஞானிக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. அவன் பரத்தில் ஒன்றுபட்டவனாக இருக்கிறான். வீழ்ந்த உடலை உலகத்தவர்கள் அவரவர் கொள்கைக்கு ஒப்பச் சமாதியில் வைக்கின்றனர்; அல்லது ஜலத்தில் போடுகின்றனர்; அல்லது அக்னிக்கு இரையாக்குகின்றனர். இதுவே ஞானி ஒருவனது உடல் வாழ்க்கையைப்பற்றிய வரலாறு. ஞானி ஒருவன் பரம்பொருளில் ஐக்கியமாகும்பொழுது பஞ்ச பூதங்களால் ஆகிய அவனுடைய உடலும் ஜோதியில் கலக்கிறது என்று சிலர் கருதி வருகின்றனர். இக்கொள்கைக்கு ஆதாரம் எந்தச் சாஸ்திரத்திலும் இல்லை. ஞானியர்கள் இக்கூற்றுக்கு ஆதரவு கொடுத்திருப்பது எங்கும் காணப்படுவதில்லை. பஞ்ச பூதங்கள், பூதங்கள் மயமாகவே சிருஷ்டி இருக்கும்பொழுது இலங்கி வருகின்றன. பஞ்ச பூதங்கள் தம்மளவில் ஆத்ம சொரூபம் ஆகமாட்டா. பின்பு பிரளய காலத்தில் நிலம் என்னும் பூதம் நீரில் ஒடுங்குகிறது. நீர் நெருப்பில் ஒடுங்குகிறது. நெருப்பு

காற்றில் ஒடுங்குகிறது. காற்று வானில் ஒடுங்குகிறது. வான் மூலப்பிரகிருதியில் ஒடுங்குகிறது. மூலப்பிரகிருதி பரமனில் ஒடுங்குகிறது. இதுவே பிரகிருதியைப் பற்றிய உண்மை. இதற்கு மாறாகப் பஞ்சபூதங்களால் ஆகிய ஞானியின் உடல் ஆத்ம ஜோதியில் ஒன்றுபடுகிறது என்னும் கூற்று உண்மைக்குச் சிறிதேனும் ஒவ்வாததாகும்.

கேள்வி: *(657)* இராமலிங்க சுவாமிகள் போன்றவர் தேகம் ஜோதியில் கலந்துவிட்டதாகவும், புத்தர், இயேசு, ஸ்ரீராமகிருஷ்ணர் போன்றவர்கள் சரீராவஸ்தைப்பட்டுத் தேகத்தை விட்டதாகவும் இருக்கிறது. முன்குறிப்பிட்டவர்கள் ஞான சித்தர்கள் என்றும், அவர்களே பரிபூரண நிலையை அடையப்பெற்றவர்கள் என்றும் அவர்கள் ஞானசித்தர் நிலையை அடைந்தே பரிபூரண நிலையை அடைவது சாத்தியம் என்றும் சிலர் கூறுகின்றனர். இதன் உண்மைத் தத்துவார்த்த விளக்கம் யாது? சித்தர்கள் உடலை மறைத்து விடும்பொழுது அவர்களது பூதவுடல் என்ன ஆகிறது?

பதில்: பூமி சூரியனிடத்திருந்து சிதறி வந்து ஆறிப்போய் நம்போன்ற உயிர்கள் வாழ்ந்திருப்பதற்குத் தகுதியான கோளமா யிருக்கிறது. இந்தப் பூமியைத் திரும்பவும் சூரியனுள் போட்டு விட்டால் அது நொடிப்பொழுதில் பழையபடி அக்னிக் குழம் பாய்விடும். சூரியனிடத்திருக்கும் அளப்பரிய வெப்பமே அதற்குக் காரணமாகும்.

சங்கல்பத்தின் விளைவாக உயிர்கள் பஞ்ச பூதங்களாகிய உடல்களை எடுத்திருக்கின்றன. சங்கல்பத்தால் யோகி ஒருவன் நொடிப்பொழுதில் உடலைப் பஞ்சீகரணம் செய்யவல்லவன். அதாவது பஞ்சபூதங்களாலாகிய உடலைத் திரும்பவும் பஞ்ச பூதங்களாகப் பிரித்து விடுகிறான். அவன் அதற்கேற்ற சங்கல்பத் திறன் அமையப் பெற்றவனாகவேண்டும்.

அப்படி உடலைப் பஞ்சீகரணம் பண்ணுவதால் அவனுக்குப் புதிய மகிமையொன்றும் வந்துவிடுவதில்லை. சங்கல்பத்துக்கு உள்ள சக்தியை விளக்குதற்கு மட்டும் அப்படிப் பஞ்சீகரணம் பண்ணுவது உதவுகிறது என்பது ஆன்றோர் கொள்கை.

இராமலிங்க வள்ளலார் மிக அண்மையில் மறைந்தவர்.

அவர் உடலைப் பஞ்சீகரணம் செய்துவிட்டு ஜோதியில் கலந்து விட்டார் என்னும் கொள்கை அவருடைய அடியார்களுள் ஒரு சிலர்க்கிடையில் இருக்கிறது. மற்றொரு சிலர் அவர் பூதவுடலை ஜோதியில் கரைத்துவிடவில்லை; மற்றவர்கள் போன்று உடலை உகுத்துவிட்டுப் பரஞ்சோதியில் கலந்தார் என்று பகர்கின்றனர். இப்பொழுது வடலூரில் கட்டுவிக்கப் பட்டிருக்கும் ஞானசபைக்கு அருகிலுள்ள மேடையினுள் அவர் உகுத்த பூதவுடலை இரகசியமாக அடக்கம் செய்து விட்டனர் என்று பலர் பகர்ந்து வருகின்றனர். இதன் மர்மம் எதுவாயினும் நமக்குக் கவலையில்லை. இராமலிங்க வள்ளலார் உலகு அறிய வெளிப்படையாகத் தமது உடலை ஜோதியில் கலக்கவில்லை என்பது உண்மை.

முன்னாளைய பெரியோர்கள் பூதவுடலை ஜோதியில் கரைத்தது போன்று அரவிந்தகோஷ் தமது உடலை ஜோதியில் கரைக்கப்போகிறார் என்று 'சித்தன்' என்னும் ஒரு பத்திரிகை நெடுநாளாக விளம்பரம் செய்து வந்தது. ஆனால் அவ்விளம் பரப்படி அரவிந்தகோஷ் பூதவுடலை ஜோதியில் கரைக்க வில்லை; அதை உகுத்துவிட்டுப் பரத்தினுள் லயமானார் என்பது யாவரும் அறிந்து விஷயம்.

ஜடம், சித் என்கின்ற இரண்டு பொருள்கள் அஞ்ஞானிக்கு இருக்கின்றன. நிறைஞானம் அடைந்திருப்பவனுக்கு ஜடம் என்பது இல்லை. நமக்கு ஜடப் பொருள்களாகத் தென்படு பவைகளெல்லாம் நிறைஞானிக்குச் சித் சொரூபமாகவே இருக் கின்றன. நவீன பௌதிக விஞ்ஞானமும் இவ்வுண்மைக்கு மிகப் பக்கத்தில் வந்துவிட்டது. நம் உடல் உண்டுபண்ணுகின்ற நிழல் ஒன்றுக்கு நாம் எவ்வளவு மதிப்புத் தருகிறோமோ அவ்வளவு மதிப்பை இந்தப் பூதவுடலத்துக்கு ஞானி தருகிறான். உடல் என்பது எண்ணத்தின் புறத்தோற்றம். எண்ணம் மன தினின்று வருவது. மனதையே முற்றிலும் ஒடுக்கியவன் நிறை ஞானி. மனம் ஒடுங்கியவிடத்துப் பிரபஞ்சமே இருக்குமிட மில்லாது ஒடுங்கிவிடுகிறது. ஆக, ஞானியின் காட்சியில் பிரபஞ்சம் இல்லை. அப்பிரபஞ்சத்தில் ஒரு அணுவிலும் சிறியதாக மனிதனுடைய உடல் இருக்கிறது. தன் உடல் என்ற ஒன்று இருக்கிறது என்னும் உணர்வு ஞானிக்கு வருவதில்லை. ஆதலால்

அந்த உடலை ஜோதியில் கலத்தல் என்கிற எண்ணம் அவன் உள்ளத்தில் எழச் சிறிதேனும் இடமில்லை. அகண்ட சச்சிதானந்தத்தில் தனது ஜீவ வியக்தியை ஒடுக்கியவன் ஞானி. நாம் நிழலை நினைப்பதும், மறப்பதும் செய்வதில்லை. அதுபோன்று ஞானி தனக்குச் சொந்தமாக ஒரு உடல் இருக்கிறது என்று அபிமானிப்பதில்லை. ஆக, அந்த உடலை என் செய்வது என்கின்ற கேள்வியும் ஞானியின் விஷயத்தில் எழ இடமில்லை.

ஞான சித்தன் என்றும், வெறும் ஞானி என்றும் பாகுபடுத்துவது முறையன்று. இத்தகைய பாகுபாட்டுக்கு முடிந்த நூல்களாகிய பிரஸ்தானத்திரயத்தில் பிரமாணம் இல்லை. சங்கரர், ஏசுநாதர், புத்தர் போன்ற நிறைஞானிகள் உடல் என்பதைப்பற்றிய எண்ணமே இல்லாது பரத்தில் கலந்ததுதான் முடிவான நிலை. அதைவிட உயர்ந்த நிலை ஒன்று இருக்கிற தென்று விவாதிப்பவர்கள் தாங்களே அவ்வுயரிய முறையில் தங்கள் உடலங்களை உலகறிய விளம்பரம் செய்து பரஞ் சோதியில் கரைத்துக் காட்டட்டும். அதன் பிறகு அவர்களுடைய கூற்றுக்கு நாம் மதிப்புக் கொடுக்கலாம். அப்படி யாருமே செய்யாதிருக்கும் வரையில் உடலை ஜோதியில் கலப்பதாகக் கூறுவது வெறும் உபசார வார்த்தை என்று மட்டுமே வைத்துக் கொள்ளவேண்டும்.

கேள்வி: *(658)* கர்ம வசப்பட்டவருக்கே அகால ம்ருத்யு, துர்மரணம் முதலியன சம்பவிக்கும் என்று கூறுவர். அங்ஙனமிருக்க மகா பரிசுத்தரும் தபஸ்வியும் சித்த புருஷருமான சிருங்கேரி மடாதிபதி போன்ற பெரியார் நீரில் மூழ்கி உடலை உகுப்பதை எவ்வாறு பகவத் சித்தமென ஏற்றுக் கொள்ளுவது?

பதில்: அக்ஞான நிலையில் இருப்பவர்களுக்குக் கர்மமும் கர்மபலனும் மிக வல்லமை வாய்ந்ததாகத் தோன்றுகிறது. ஞானம் அடைந்தவர்களுக்கோ கர்மமும், கர்மபலனும் பொரு ளற்றது. ஜீவன்முக்தன் ஒருவனுடைய நிலையை ஆதிசங்கரர் இங்ஙனம் பகர்கின்றார்: 'மனிதன் ஒருவனுடைய சிரசில் எண்ணிறந்த ரோமங்கள் முளைத்திருக்கின்றன. அவைகளில்

ஏதேனும் ஒரு ரோமம் சிரசினின்று வழுவிக் கீழே விழுகிறது. அப்படி விழுகின்ற ரோமம் நீராடும்பொழுது நீரில் விழலாம், நிலத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றபொழுது நிலத்தில் விழலாம், அக்கினிக்கு அருகிலிருக்கிறபொழுது அக்கினியினுள் விழலாம். தேவாராதனை செய்துகொண்டிருக்கும்பொழுது ஆராதனைக்குரிய ஆலயத்தினுள் விழலாம். இத்தனை விதமான இடங்களில் இடவேற்றுமையை முன்னிட்டு வீழ்ந்துபோன ரோமத்துக்கு சிறப்போ, சீர்கேடோ வந்துவிடுவதில்லை. அந்த ரோமம் வீழ்ந்ததினால் அதை உடைத்திருந்த மனிதனுக்குக் குறை ஒன்றும் வந்துவிடுவதில்லை. ஜீவன் முக்தனுடைய நிலை இத்தகையது. சரீரம் இருக்கும் வரையில் பரோபகாரத் துக்கு அது பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. எவ்வளவு காலம் இருந்து, என்ன பாங்கில் அது பயன்படவேண்டும் என்பதைப் பற்றிய சங்கற்பம் ஜீவன் முக்தனுக்கு இல்லவே இல்லை. ஜீவன் முக்தனுடைய காட்சியில் காலம் நிறைவேறிய மரணம் என்பதும், அகால மரணம் என்பதும் இல்லவே இல்லை. காலம் என்பதே வெறும் மனோ கற்பிதம். மனமற்ற இடத்தில் காலம் இல்லை. ஆதலால் இது காலத்தில் வந்த மரணம், அல்லது அகாலத்தில் வந்த மரணம் என்பது பொருளற்றது.

பிரபஞ்சத்தில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளெல்லாம் பகவத் சித்தத்துக்கு உட்பட்டவைகள். பகவத் சித்தத்துக்கு உட்படாத நிகழ்ச்சிகள் உலகில் சில இருக்கின்றன என்று வைத்துக் கொண்டால் பகவத் ஆதிக்கத்துக்கு அந்நியமான ஆதிக்கம் ஏதோ ஒன்று இருக்கிறது எனப் பொருள்படும். எல்லாம் ஈசன் செயல். ஆதலால் அதை அறிந்தவர்களுக்கெல்லாம் புண்ணியச் செயல்களே ஆகின்றன. விசுவரூப தரிசனம் கண்ட அர்ஜுனனுக்கு அவ்வுண்மை விளங்கிற்று. போர் வீரர்கள் பலர் மடியும் செயலும் ஈசனுடையதே. அண்டங்கள் அடிபட்டுப் போவதும் ஈசனுடைய செயல். உயிர் வகைகள் ஏதேனும் ஒருவிதத்தில் ஒடுங்குதல் ஈசன் செயல். இத்தகைய ஞானக்காட்சி உடையவர்களுக்குத் துர்மரணம் என்பது பொருளற்றது. தனக்கு மரணம் வரப்போகிறது என்பதை ஞானி முற்கூட்டியே அறிந்திருக்க வேண்டும், அதற்கு ஆயத்தப்படுத்த வேண்டும், அதன் பொருட்டு நிஷ்டையில் உட்கார்ந்து உடலை உகுக்க

வேண்டும் என்கின்ற நியமனமும் நிறைஞானி ஒருவனுக்குப் பொருளற்றது. தலையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் ரோமம் எந்த வேளையில் எப்படி உதிர்ந்து போனாலும் தன் சொரூபத்தில் குறை வந்துவிடுவதில்லை. அங்ஙனம் ஞானியின் சரீரம் எந்த வேளையில் எப்படி அழிந்துபட்டுப் போனாலும் ஞானியின் சொரூபத்தில் குறை ஒன்றும் வந்து விடுவதில்லை. இக்கோட்பாட்டை நிறை ஞானியே அறிகின்றான். சரீரத்துக்குப் பிராதான்யம் கொடுக்கின்ற அக்ஞானியினுடைய காட்சியில் இது விபத்தாகவும், துர்மரணமாகவும் தோன்றுகிறது. ஞானியின் உடல் எப்படி வேண்டுமென்றாலும் எந்த வேளையில் ஆயினும் ஒடுங்கும். அதனால் ஞானியின் நிறைநிலைக்கு ஒருவிதமான மானபங்கமும் இல்லவே இல்லை. பகவத் சித்தம் கீழ்மைக்கு இடம் கொடுத்துவிட்டது என்பது உண்மையல்ல.

தம் உடலை வெட்டி எடுத்துக் கொள்ளுதற்கு ஆதிசங்கரர் காபாலிகன் ஒருவனுக்கு அனுமதி கொடுத்தார். அந்நிகழ்ச்சி நிறைவேறி இருந்திருக்குமானால் ஆதிசங்கரருக்கு அதனால் ஒரு குறையும் வந்திருக்காது. அவருடைய இயக்கத்திற்கும் குறை வந்திருக்காது. நெல் உமியின் அக்னிக்குள் உடலைக் கொடுத்து அது அணு அணுவாகத் தகனமாகிப் போகும்படி விட்டுவிட்ட ஞானிகள் இந்நாட்டில் இருந்திருக்கின்றனர். உடலெங்கும் அம்பு தைத்திருந்த வேளையில் அதைப் பொருட்படுத்தாத ஞானிகளும் இந்நாட்டில் இருந்திருக்கின்றனர். ஆகவே ஞானியின் உடல் எப்படி மறைகிறது என்பது ஒரு பிரச்னை அல்லவே அல்ல.

கேள்வி: (659) **ஸ்ரீராமகிருஷ்ணர் தீயவர்களிடமிருந்து நீர் அருந்தவும் மறுத்தார். தீயவர்களைத் திருத்துவது சான்றோர் செயல். அதற்கு மாறாக ஸ்ரீராமகிருஷ்ணர் செய்தது பொருந்துமா?**

பதில்: ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மேனியின் அமைப்பில் தனிப்பாங்கு ஒன்று இருந்தது. அந்தப் பாங்குக்கு ஒப்ப நல்லவர்கள் கைப்பட்ட அன்னத்தையும் பானத்தையும் அவர் ஏற்று வந்தார். கெட்டவர்கள் கைப்பட்ட அன்னத்தையோ பானத்தையோ ஏற்க அவருக்கு இயலவில்லை. இனி, சுவாமி

விவேகானந்தருடைய பாங்கு அதனின்று வேறுபட்டது. எவரிடத்திலிருந்து எவ்வுணவை ஏற்றாலும் அதனால் விவேகானந்தர் சிறிதேனும் பாதிக்கப்படவில்லை. இங்ஙனம் குருவும் சிஷ்யரும் உணவு ஏற்கும் முறையில் ஒருவரோடு ஒருவர் முரண்பட்டிருந்தனர். இந்த முரண்பாட்டைச் சன்மார்க்கத்தில் செல்கிறவர்கள் எப்படிப் பாகுபடுத்துவது என்பது கேள்வி.

இதற்கு விடை பரமஹம்சர் தாமே கொடுத்திருக்கிறார். விவேகானந்தர் சென்றது ஞானமார்க்கம். ஞானத்தீயில் எந்த உணவைப் போட்டாலும் அது பஸ்பமாகும். ஆதலால் நல்லார் கைப்பட்ட நல்லுணவு என்னும் கேள்வி விவேகானந்தரின் வாழ்க்கையில் எழவில்லை. பின்பு ஸ்ரீ ராமகிருஷ்ணர் பின்பற்றியது பக்தி மார்க்கம். பக்தி மார்க்கத்தில் போகிறவர்கள் ஆகார விவேகம் படைத்தவர்களாய் இருக்கவேண்டும். எது சாத்வீக ஆகாரம், எது அதற்கு முரண்பட்டது என்னும் பாகுபாடு பக்தனிடத்து இருக்கவேண்டும். நலன் நிறைந்த நல்லுணவையே பக்தன் ஏலவேண்டும். இனி, உணவைக் கையாளுகிற மனிதனுடைய பாங்கு உணவிலும் ஏறுகிறது. கெட்டவன் சமைக்கிற அல்லது கையாளுகிற உணவில் அவனுடைய கேடு நிறைந்த பாங்கு தன்மாத்திரையாக ஏறுகிறது. பக்தியில் செல்லுகிறவன் அத்தகைய உணவை ஏலலாகாது என்பதற்குப் பரமஹம்சருடைய வாழ்க்கை எடுத்துக்காட்டாக அமைகிறது.

ஆனால் இக்காலத்திய மக்களுடைய போக்குக்கும் பரமஹம்சருடைய போக்குக்கும் பெரிய வேற்றுமை ஒன்று உண்டு. மனிதனுடைய ஜாதியை அடிப்படையாகக்கொண்டு உலக மக்கள் உணவை ஏற்கவோ, அல்லது ஒதுக்கவோ செய் கின்றனர். தன் சொந்த ஜாதியைச் சேர்ந்தவர்களையெல்லாம் மேலானவர்களாக உலகத்தவர் கருதுகின்றனர். அதற்கு மாறாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் பரிபாகத்தை முன்னணியில் வைத்தார். பிறப்பைப் பின் அணிக்குத் தள்ளிவிட்டார். எந்த ஜாதியில் பிறந்தவன் என்பது அவருக்குப் பிரச்னை ஆகாது. எத்தகைய பாங்கை உடையவன் என்பதே அவருடைய கேள்வியாகும். நல்லார் கைப்பட்ட நல்லுணவையே அவர் ஏற்றார். பக்தி

மார்க்கத்தில் செல்லுகிறவர்களுக்கு அது முன்மாதிரி.

உணவு ஏற்பதில் பரமஹம்சர் மிகக் கண்டிப்பாக இருந்தார் என்றாலும் தீயவர்களைத் திருத்தியமைப்பதில் அவர் ஒரு போதும் பின்வாங்கவில்லை. கெட்டவர்களை நல்லாராக மாற்றியமைப்பதிலேயே அவர் கண்ணுங் கருத்துமாய் இருந்தார். மருத்துவர் ஒருவர் தனக்கு நோய் வராது பாதுகாப்பு போட்டுக் கொண்டு மற்ற நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதுபோன்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மோடு தொடர்புகொண்ட மக்கள் எல்லாரையும் நல்லவர்களாகத் திருத்தியமைக்கவே காலமெல்லாம் முயன்று வந்தார். திருத்தியமைக்கிற செயல் வேறு; தனக்குப் பொருந்திய தூய உணவையே அருந்துகிற செயல் வேறு.

கேள்வி: *(660)* ஸ்ரீ ராமகிருஷ்ணரை அடைந்தவர்கள் மறுபடியும் பிறக்கவேண்டியதில்லை என்று சொல்லியிருக் கிறார். அக்கூற்று அவர் காலத்தில் இருந்தவர்களுக்கு மட்டுமா அல்லது அவரை வணங்கும் இக்காலத்தவருக்கும் பொருந்துமா?

பதில்: எதை லக்ஷியமாகக் கொண்டு ஸ்ரீராமகிருஷ்ணர் கடுந்தவங்கள் புரிந்தாரோ அந்தப் பரமாத்மா சொரூபமாக அவர் தாமே ஆய்விட்டார். ஒரு சான்றின் மூலம் இக் கோட்பாட்டை விளக்குவோம். சிற்றோடை ஒன்று மலையின் பள்ளத்தாக்கில் உற்பத்தியாகிறது. பாய்ந்து போய்க்கொண்டு இருக்க இருக்க அது பெருநதியாகிறது. கடலை எட்டுகின்ற பொழுது அது ஆழமும் அகலமும் உடைய மகாநதியாய் விடுகிறது. அந்த நதியில் செல்லவல்ல பெரிய கப்பல்கள் கடலிலும் செல்ல வல்லவைகள் ஆகின்றன. சமுத்திரத்தில் சங்கமமாகின்ற இடத்தில் அந்த மகாநதியும் சமுத்திரமும் ஒரே அந்தஸ்து உடையவைகள் ஆய்விடுகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய நிலை அத்தகையது. முற்றிலும் பரிபூரணம் அடைந்துள்ள அவரை அறிந்துகொள்ளுவதும் பரம்பொருளை அறிந்துகொள்ளு தலும் ஒன்றே. எனவே அவர் பகர்ந்துள்ள கூற்று அவருடைய உடல் சொரூபத்தைக் குறிக்காது. அவர் அடைந்திருந்த பரநிலையை அது குறிக்கும். எந்த உயர்ந்த லட்சியத்துக்காக அவர் வாழ்ந்திருந்தாரோ அந்த உயர்ந்த லட்சியசொரூபமாக

அவரே ஆய்விட்டார். எனவே அவரைச் சார்தலும் உயர்ந்த லக்ஷியத்தைச் சார்தலும் ஒன்றேயாம். இந்த உயர்ந்த லக்ஷியம் காலத்திலோ இடத்திலோ தடைப்படுவதன்று. ஆக, ஸ்ரீராம கிருஷ்ணரைச் சார்வதும் பரம்பொருளைச் சார்வதும் ஒன்றே.

கேள்வி: *(661)* வெறுப்பு விருப்பு இரண்டும் ஞானி களுக்குப் பொருந்தாது. இருப்பினும் இராமகிருஷ்ணர் பணத்தை வெறுத்தது ஏன்? பண்டமாற்றும் முறையைச் சுலபமாக்கிக் கொள்வதற்காகவே பணம் ஏற்பட்டது. வேறு பண்டங்களை வெறுக்காதவர் பணத்தை மாத்திரம் வெறுப்பானேன்? இராமகிருஷ்ணருக்குப் பொருளாதாரத் துறையில் அதிக ஞானம் கிடையாது என்று சொல்லுதல் பொருந்துமா?

பதில்: "வேண்டுதல் வேண்டாமை இலான்" என்பது கடவுளுக்குக் கொடுத்துள்ள விளக்கங்களில் ஒன்று. அனைத் துக்கும் அவர் நடுநாயகமாய் இருப்பதால் இன்னது வேண்டும், இன்னது வேண்டாம் என்னும் கோட்பாடு அவருக்கு இல்லை. கடவுளை அடைந்த ஞானிகளுக்கும் அதே நடுநிலை வந்து விடுகிறது. ஆதலால் ஞான சாதனத்தில் செல்லுகிறவர்கள் தங்கள் மனதுக்குள் விருப்புக்கோ, வெறுப்புக்கோ இடந்தர லாகாது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பணத்தை வெறுத்தார் என்று பகர்வது பொருந்தாது. இக்காலத்திய மக்கள் பணத்தின் மீது மிகைபட்ட பற்றுதல் வைத்து வருகின்றனர். உலகத்தவர் போகிற போக்குக்கு முற்றிலும் மாறாக அவர் நடந்துகொண்டார். 'நான் பணத்தை நாடேன். அதில் கருத்துச் செலுத்தேன். அதைக் கையால் தீண்டவும் மாட்டேன்" என்று உறுதியான விரதம் எடுத்துக் கொண்டார். பணத்தைப் பற்றிச் சிறிதேனும் சிந்தியாது இருக்கின்றவனும் இம்மண்ணுலகிலே இனிது வாழ்ந் திருக்கலாம் என்னும் கோட்பாட்டை அவர் தமது வாழ்விலே காட்டியிருக்கிறார். பணம் படையாதவன் பிணம் என்பது உலகத்தவர் கொள்கை. பணத்தை நாடுமளவு ஒருவனுக்குப் பக்தி குறைந்து விடுகிறது என்று பரமஹம்சர் தமது வாழ்வின் மூலம் விளக்கியுள்ளார். படகு தண்ணீரில் மிதக்கலாம். ஆனால் படகுக்குள் தண்ணீர் புகுந்துவிடலாகாது. அதேவிதத்தில்

உலகப்பொருள்களை மனிதன் கையாளலாம். ஆனால் அப் பொருள்களைப் பற்றிய ஆசை அவனுடைய உள்ளத்தினுள்ளே புகுந்துவிடலாகாது என்பதே அவருடைய போதனை. இப்படி அவர் புகட்டியிருப்பது புதிய கோட்பாடு அன்று.

அருளையே நாடியிருப்பவனுக்கு இறைவன் அருள், பொருள் ஆகிய இரண்டையும் நல்குகின்றார். ஆதலால், இக்கோட்பாட்டை அனுஷ்டிக்கும் பக்தனுக்கு இரண்டுவித லாபமுண்டு. கடவுளை அடைவது அவன் பெறுகிற பெரிய லாபம். அதற்கு அனுசரணையாக இவ்வையக வாழ்வும் குறை யொன்றுமில்லாது பக்தனுக்கு அமைந்து விடுகிறது. இராம கிருஷ்ண பரமஹம்சரின் வாழ்வே அதற்கு எடுத்துக்காட்டு ஆகும். அவருக்குப் பொருளாதார ஞானமும் வேண்டியவாறு இருந்தது. குடும்ப வாழ்வு வாழ்கின்றவன் நேர்மையான முறை களில் பொருளைச் சம்பாதித்தே ஆகவேண்டுமென்று அவர் வற்புறுத்தியிருக்கிறார். கடையில் இரும்புச்சட்டி ஒன்று விலைக்கு வாங்கப்போன சிஷ்யர் ஒருவர், கீறல் விட்டிருந்த இரும்புச் சட்டிக்கு அதிக விலை கொடுத்துவிட்டு ஏமாற்றமடைந்து வந்ததை அவர் கண்டித்தார். பக்தி மார்க்கத்தில் செல்லுபவன் மடையன் ஆகிவிடலாகாது என்றார் அவர். ஒரு கடைக்குப் பதிலாக நான்கு கடைகளில் பண்டங்களையும் அவைகளின் விலை வேற்றுமையையும் சீர்தூக்கிப் பார்த்த பிறகே ஒரு பொருளுக்கு விலை கொடுத்து வாங்க வேண்டுமென்று அவர் புகட்டினார். எனவே அவர் உலக விவகாரத்தில் நிபுணர். இவ்வையக வாழ்வுக்குப் பணம் தேவை என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். ஆனால் பணப்பற்று பகவத் பற்றுதலிலே குறுக்கிடலாகாது என்பதைத் தமது வாழ்வின் மூலம் அவர் தெளிவுபட விளக்கியிருக்கிறார்.

கேள்வி: *(662)* ஸ்ரீ ராமகிருஷ்ண உபதேச மஞ்சரியில் 932-வது உபதேசத்திற்கும் 1193-வது உபதேசத்திற்கும் முரண்பாடு உள்ளதே? ஒன்றன்படி கடவுளுக்குப் படைக்கிற பாபம் தனக்கே திரும்பிவந்து சேருகிறது. மற்றதின்படி தன் பாபத்தையும் பரமஹம்சதேவர் அம்பிகைக்கு ஒப்படைக் கின்றார். இதில் முரண்பாடு இல்லையா?

பதில்: இரண்டுக்கும் இடையில் முரண்பாடு இருப்பது போன்று தென்படுகிறது. முதலில் நிகழ்ந்த நிகழ்ச்சிப்படி தமது பாபத்தை மட்டும் கிருஷ்ண பரமாத்மாவுக்குப் படைக்கப் பாண்டவர்களுள் மூத்தவன் யுதிஷ்திரன் எண்ணினான். அது பொருந்தாது என்று தம்பி பீமன் எச்சரிக்கை செய்தான். இரண்டாவது நிகழ்ந்த நிகழ்ச்சிப்படி பரமஹம்சதேவர் தம்மிட மிருந்த அனைத்தையும் அம்பிகைக்கு ஒப்படைத்தார். அதைச் சிறிது ஆராய்ந்து பார்த்தால் உடல், பொருள், ஆவி அனைத் தையும் ஒப்படைத்தார் எனப் பொருள்படுகிறது. அச்செயலில் உடலில் அடங்கியுள்ள மலமும் அடங்கப் பெறுகின்றது. அது தோஷமாகாது. மற்று உடலில் அடங்கியுள்ள பொருந்தாத பகுதிகளை அர்ப்பணம் பண்ணினால் அது தனக்குக் கேடாய் வந்து முடியும். தர்மன் பாபத்தை மட்டும் எடுத்துக் கண்ணனுக்கு வழங்க முயன்றது பொருந்தாத செயல். பரமஹம்சர் புரிந்த செயலில் தமது அனைத்தும் அடங்கியிருக்கின்றன. அனைத்தில் புண்ணியங்களே அதிகம். பாபம் என்னும் சொல் உபசாரத்திற் காகச் சொல்லப்பட்டது. ஆக, தெய்வத்துக்கு ஏதாவது ஒன்றை மட்டும் படைக்க முயலுகின்றவன் தன்னிடத்திலுள்ள மிக மேலானதையே படைக்கவேண்டும். அப்படியல்லாது தன்னிடத் திலுள்ள அனைத்தையும் ஒப்படைக்கின்றபொழுது அதில் பொல்லாங்கு சிறிது இருக்குமாகில் அது பக்தனுக்குத் தோஷத்தை உண்டுபண்ணாது.

கேள்வி: *(663)* "உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்" என்று வள்ளுவர் பெருந்தகை கூறுகிறார். ஆனால் சிறந்த ஞானிகள் அனைவரும் தங்களைத் தாங்களே இழிவாகவும் தாழ்வாகவும் எண்ணிக்கொள்வது அவர்கள் மொழிந்துள்ள பாடல்கள் மூலமாகத் தெரிகிறது. "புன்மையேன் ஆவன், அந்தோ!" என்று தாயுமான சுவாமிகளும், "யானும் ஓர் பேயனே எவர்க்கும்" எனக் குலசேகரரும், "பாவிக்குள்ளும் படுபாவி" என்று இராமலிங்க அடிகளும், "ஏழை, ஏதலன், கீழ்மகன்" என்று பெரிய திருமொழி ஆசிரியரும் பாடியுள்ளனர். இப்பாடல்களுக்கிடையேயுள்ள முரண் பாட்டின் உட்கருத்து யாது?

பதில்: தன் எண்ணம் எப்படியோ அப்படியே மனிதன் மாறியமைகிறான். உயர்ந்த எண்ணங்களை எண்ணுபவன் உயர்வு அடைகிறான். கீழான எண்ணங்களை எண்ணுபவனும், தன்னைக் கீழ்மைப்படுத்திக் கொள்பவனும் கீழோன் ஆய்விடுகிறான். இது வாழ்வைப் பற்றிய உண்மை. சமயங்களும் இக்கோட்பாட்டை நன்கு தெளிவுபடுத்தி இருக்கின்றன. இக்கேள்வியில் குறிப்பிடப் பட்டிருப்பவர்கள் எல்லோரும் மேன்மையையும், இறைவனுடைய அருளையும் அடையப்பெற்ற மேன்மக்கள் ஆகின்றனர். தத்துவத் துக்கும், பெருவாழ்வுக்கும் மாறாக அவர்கள் ஏன் தங்களைத் தாங்களே சிறுமைப்படுத்திக் கொண்டார்கள் என்பது கேள்வி. அவர்கள் பகர்ந்துள்ள இக்கூற்றுக்களை மட்டும் பிரித்தெடுத்து ஆராய்ச்சி பண்ணுவது பொருந்தாது. அன்னவர்கள் இயற்றி யிருக்கும் நூல்களைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து பார்த்தால் இப்புல்லிய கூற்றுகளுக்கு அடிப்படையாயுள்ள பேருணர்வும், அருள்நாட்டமும் நன்கு விளங்கும். தாங்கள் அடைதற்கு இருந்த உயர்நிலையை அவர்கள் யாண்டும் ஞாபகத்தில் வைத் திருந்தனர். அந்த உயர்நிலைக்காகவென்றே அவர்கள் ஓயாது அரும்பாடுபட்டு வந்தனர். சிற்சில வேளைகளில் அவர்களுடைய மனது தளர்வுற்றிருப்பதுண்டு. அருள்நாட்டத்திலே பேரூக்கம் கொள்ளாத சிற்றியல்பு அவர்களின் மனதில் தலையெடுத்து விடுவதுண்டு. அத்தகைய சிற்றியல்பைத்தான் ஞானியர் களுடைய கொடிய சத்துரு என்று ஞானியர்களே பகர்ந்திருக் கிறார்கள். ஊக்கம் குன்றிய நிலையில் இருந்த வேளைகளில் அவர்கள் தங்களைத் தாங்களே நொந்து கொண்டனர்; தங்களைத் தாங்களே தாக்கித் தீவிரமான குற்றச்சாட்டைச் செய்துகொண்டனர். அப்படி அவர்கள் செய்ததெல்லாம் தங்களைத் திரும்பவும் பேரூக்கத்தில் தூண்டுதல் பொருட்டேயாம். நடக்க மறுதலிக் கின்ற மாட்டை வண்டிக்காரன் அடித்து ஓட்டுகிறான். ஆத்ம சாதனத்தில் பேரார்வத்துடன் போகாத மனதைத் தண்டித்தும், திரஸ்கரித்தும், நொந்தும், விரட்டியும் லக்ஷ்யத்தின்கண் ஓட்டுவது ஆத்மசாதகர்களின் இயல்பு. எனவே சர்வ காலமும் அருள் நாட்டத்திலேயே இருக்கிற பெருமக்கள் ஏதோ சில சமயங்களில் தங்களின் சிறுமைகளை எடுத்து இயம்புவது மேலும் பெருநெறியில் விரைந்து செல்லுதற் பொருட்டேயாம். ✪

50. ஞானம்

கேள்வி: *(664)* ஞானயோக விளக்கத்தில் ஞான மார்க்கம் உயர்ந்ததாகவும் ஆராய்வுடையதாகவும் போற்றப் பட்டுள்ளது. பக்தி யோகத்தின் இயல்பை வெளியிடும் கட்டுரையில் "நல்ல விவேகத்தை அடிப்படையாகக் கொண் டில்லாததும் குயுக்தியைக் கையாளுவதுமாகிய ஞான மார்க்கமோ" என்ற மொழித்தொடர் கையாளப்பட்டுள்ளது. இதனால் ஞான மார்க்கம் நல்ல விவேகத்தைப் பெற்றிருக்க வில்லை என்பதாகிறது. அப்படியாயின் ஞானமார்க்கத்தின் பண்புதான் என்ன?

பதில்: ஞான மார்க்கம், பக்தி மார்க்கம் ஆகிய இரண்டும் பண்புமிக வாய்க்கப்பெற்றவைகளே. இவ்விரண்டினுள் பக்தி மார்க்கம் மிக எளியது. அன்பை மெய்யன்பா, அல்லது அன்புபோன்று அமைந்துள்ள பாசாங்கா என்பதை யாரும் எளிதில் கண்டுபிடித்து விடலாம். சிற்றுயிர்களிடத்தும் மெய்யன்பு இருக்கிறது. அது செயலாகப் பரிணமித்துத் தன் இயல்பை விளக்கி விடுகிறது. ஆகவே, "அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்?" என்னும் கோட்பாடு உண்டாயிற்று. ஆனால் ஞான மார்க்கம் அவ்வளவு எளியதன்று. ஏதேனும் ஒரு கொள்கை அல்லது கோட்பாடு ஞானத்தையோ, நல்ல விவேகத்தையோ அடிப்படையாகக் கொண்டதுபோன்று மேல் தோற்றத்தில் தென்படலாம். பின்பு முறையாக ஆராய்ச்சி செய்து பார்த்தால் விவேகம் போன்று தென்படுவது உண்மையில் விவேகமல்ல என்பதும், மெய்ஞ்ஞானம் போன்று தென்படுவது மெய்ஞ்ஞானம் அல்ல என்பதும் வெளியாகும். அதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். அர்ஜுனன் போர்க்களத்துக்குப் புறப்பட்டுப் போனான். அங்கு யாரையெல்லாம் எதிர்த்துப் போராடவேண்டும்

என்பது வெளியாயிற்று. உடனே அவனுக்கு மனதில் ஒரு மாறுதல் வந்தது. அதற்கு ஒப்ப அவன் ஞானமொழிகளைப் பேச ஆரம்பித்தான். பகவத் கீதையில் முதல் அத்தியாயத்தைப் படித்துப் பார்த்தால் அவனுடைய ஞானமொழிகள் நமக்கு விளங்கும். அவன் பேச்சு யுக்திக்கு முற்றிலும் பொருத்தமானது போன்றும் நல்லறிவு அல்லது விவேகம் உதயமாகிவிட்டது போன்றும் தென்படுகிறது. அவன் பேசிய பேச்சையெல்லாம் கிருஷ்ண பகவான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். பின்பு பகவானே பேச ஆரம்பித்தபொழுது அர்ஜுனனிடத்திருந்த குறைஞானம் நமக்குத் தென்படுகிறது. தராசு ஒன்றை வைத்துக் கொண்டு பண்டங்களை நாம் எடை போடுகிறோம். அந்தத் தராசு குற்றமுடையது என்பதைத் தெரிந்துகொண்டால் போட்ட எடையெல்லாம் தவறானது என்று சொல்லாமலே விளங்கி விடுகிறது. அர்ஜுனனைப் பிடித்திருந்தது மனக்குழப்பம் என்பதைப் பகவான் விளக்கிக்காட்டினார். மனக்குழப்பம் கொண்டிருப்பவனுக்கு மெய்ஞானமும், நல்ல விவேகமும் உண்டாவதில்லை. ஆனால் மனக்குழப்பம் கொண்டிருப்பவனும் உள்ளன்போடு பிறரை நேசிக்கமுடியும். இங்குதான் பக்திக்கும், ஞானத்துக்கும் இடையில் வித்தியாசமிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ண பகவான் தாம் சிறுவனாயிருந்தபோது பக்தி மார்க்கத்தை ஆட்டு இடையர்களுக்கும் இடைச்சிகளுக்கும் காட்டியருளினார். அது அவ்வளவு சுலபமானது. அன்பு நெறியில் அவர்களுக்குப் புரியாதுபோன பகுதி எதுவுமில்லை. போர்க்களத்தில் அவர் ஞான தத்துவங்களை விளக்கியபோது பண்பாடு அடைந்திருந்த அர்ஜுனனே ஞானமார்க்கத்தில் பல பகுதிகளை முறைதவறி அர்த்தம் பண்ணிக் கொண்டான். அவனுடைய தப்பான அபிப் பிராயத்தைத் திருத்தியமைக்க வேண்டிய கடமை பகவானுக்கு ஏற்பட்டது. ஆதலால் பக்திமார்க்கம் ஞானமார்க்கத்தைவிட சுலபமானது. மெய்யன்பு எல்லா நிலைகளிலும் மெய்யன்பே. ஆனால் மெய்ஞானமோ நல்ல மனநிலையினின்று வருவதாகும். ஓரம் சாராததும், தெளிந்ததுமாகிய மனநிலை ஞானமார்க்கத்துக்கு முற்றிலும் அவசியமானது. அதை அடையப்பெறாதவனுக்குத் துன்மார்க்கம், சன்மார்க்கம் போன்று தென்பட்டு விடுவதுண்டு. அன்புத்துறையில் அந்த ஆபத்து இல்லை. ✪

51. பக்தி / பக்தன்

கேள்வி: *(665)* மதுரபாவம் என்றால் என்ன?

பதில்: பக்தி சாதனத்தில் ஐந்து பாவங்கள் அல்லது ஐந்துவித மனநிலைகள் இருக்கின்றன. கடவுளை ஆண்டவனாக வைத்துத் தன்னை அடிமையாக வைத்துக்கொள்ளலாம். இது தாஸ்யபாவம் எனப்படுகிறது. இதற்கடுத்தபடி வருவது சகா பாவனை. கடவுளைத் தோழனாகக் கருதுவது இதன் நோக்கம் ஆகும். வாத்சல்ய பாவனை என்பது அடுத்தபடி வருகிறது. தெய்வத்தைத் தன் தாயாகவோ தந்தையாகவோ வைத்துக் கொள்வது இதன் நோக்கம் ஆகும். சாந்த பாவனை என்பது மற்றொன்று. போற்றுதற்குரிய மெய்ப்பொருளாக இலங்குபவர் தெய்வம். ஆதலால் உள்ளன்போடு அவரைப் போற்றிவருவது சாந்தபாவனையாகும். மதுர பாவனை என்பது இந்த நான்கு பாவன்னகளுக்கும் மேலானது. நாயகன் நாயகி முறையில் இறைவனோடு இணக்கம் பூணுதல் மதுரபாவனையாகும். தெய் வத்தைத் தனக்குத் தலைவனாகவும், தன்னை அத்தலைவனுக் குரிய தலைவியாகவும் வைத்துப் பக்திபூணுவது மதுரபாவம் ஆகும். மதுரபாவத்தை அனுஷ்டிக்கிறவன் ஆண்பாலாக இருந்தாலும் தன்னைப் பெண்பாலாகக் கருதித் தெய்வத்துடன் பேரன்பு பூண்டிருப்பது மதுரபாவம் ஆகும். இத்தகைய பக்தி சாதனத்தில் ஈடுபடுகிறவன் ஜீவர்கள் எல்லோரையும் பெண்பாலர் களாகவே கருதுகிறான். தன்னுடைய நாயகனாகிய கடவுள் ஒருவரே ஆண்பால் ஆகிறார். இம்முறையில் மக்கள் எல்லோ ரையும் தோழிமார்களாகக் கருதுகிறவன் எளிதில் காமநோயை வெல்லுகிறான். சாதகன் தானே ஆண்பால் பெண்பால் என்னும் வேற்றுமையைக் கடந்து அதீத நிலைக்குப் போகிறான்.

இதில் சிறப்பு ஒன்று உண்டு. நாயகனும், நாயகியும் பரஸ்பர நட்புப் பூணுகின்றனர். பேரன்பில் அவர்களிடமிருக்கும் ஆண்பால் பெண்பால் உணர்ச்சி அறவே அடிபட்டுப்போகிறது. ஆண்டான் அடிமை பாவத்திலிருக்கும் தொண்டுபுரியும் பாங்கு இருவரிடத்திலிலும் உயர்நிலை எய்தி இருக்கிறது. வேற்று மைக்கு இடந்தராது இருவரும் ஒருவருக்கொருவர் பணிவிடை செய்துகொள்கின்றனர். வாத்சல்ய பாவனையிலிருக்கும் பெற்றோர் இயல்பும், பிள்ளைப்பேறு அதனிடத்திலிருக்கும் இயல்பும் நாயகன் நாயகியிடத்துத் தலைதூக்கித் திகழுகின்றன. சகாபாவனையை அனுசரித்து இருவரிடத்தும் தோழமை சதா திகழ்ந்துகொண்டு இருக்கிறது. சாந்தபாவனையை அனுசரித்து நாயகனும் நாயகியும் ஒருவரையொருவர் போற்றும் பாங்குடையவர்களாய் இருக்கின் றனர். ஆக, ஐந்துவித பாவனைகளுள் மதுரபாவனை ஒப்பு உயர்வு அற்றதாக மேலோங்கியிருக்கிறது. பக்தர்களுள் யாரோ சிலர்தாம் அப்பெருநிலையை அரிதிலும் அரிதாக வாய்க்கப் பெற்றவர் ஆகிறார்கள்.

கேள்வி: *(666)* கண்ணீர்விட்டுப் பாடுவது பலஹீனமா? மன உறுதியா?

பதில்: உறுதிப்பாட்டுக்கு அறிகுறியாகக் கண்ணீர் சிந்துதல் சாத்தியம். பலவீனத்துக்கு அறிகுறியாகக் கண்ணீர் சிந்துதல் சர்வசாதாரணம். துன்பத்தைச் சகிக்கமுடியாத உயிர்வகைகளில் பெரும்பான்மை கண்ணீர் சிந்துகின்றன. அகத்தில் இருக்கும் வேதனைக்குப் புறச்சின்னமாகக் கண்ணீர் வடிகிறது. பிற உயிர்கள் கண்ணீர் சிந்திக் கதறும்படி யாரும் செய்யலாகாது. அப்படிச் செய்தால் தன் வினையே தன்னை வந்து சூழும்.

மடிந்துபோனவர்களைக் குறித்து மக்கள் கண்ணீர் சிந்திப் பாடுகின்றனர். அது துன்பக் கண்ணீர். உற்றார் உறவினர் மடிந்துபட்டுப் போனால் அதைக் குறித்து வருந்துதற்கிடையில் அந்த வருத்தத்தை வெளியில் யாருக்கும் காட்டிக்கொள்ளாத உறுதிப்பாட்டோடு சிலர் இருக்கின்றனர். அது பாராட்டுதற்குரிய மனநிலை. ஆனால் பெரும்பான்மையோர் வருந்திக் கண்ணீர் சிந்துகின்றனர். அச்செயலை ஏழை நெஞ்சத்துக்கு அறிகுறி

என்று கருதலாகாது. ஆனால் நிகழ்கின்ற சிறு இடுக்கண்களை முன்னிட்டுக் கண்ணீர் கொட்டிக் கதறிப்பதறி அழுபவர்கள் இருக்கிறார்கள். அன்னவர்களிடத்து உறுதிப்பாடு ஏதும் இல்லை. ஏழை நெஞ்சம் படைத்தவர்கள் அவர்கள். அந்நிலையை மீண்டு மேல்நிலைக்கு வர மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். இனி, அருள் நாட்டத்துக்கு அறிகுறியாகக் கண்ணீர் சிந்து பவர்கள் இருக்கிறார்கள். "வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்று மாணிக்கவாசகர் பகர்கிறார். இது உறுதிப் பாட்டுக்கும், பண்பாட்டுக்கும் அறிகுறியாகும். பரநாட்டத்தில் சிந்துகிற கண்ணீர் மனிதனைத் திண்ணியனாக்குகிறது. உலக வைபவங்களைக் குறித்துக் கொட்டுகிற கண்ணீர் மனிதனைக் கோழையாக்குகிறது.

அருளாளர்கள் அருள்துறையில் மேன்மையடைவதற்குக் கண்ணீர் சிந்துதல் நன்கு பயன்படுகிறது. சீதாபிராட்டி சிறை கிடந்தபொழுது சிந்திய கண்ணீர் அவளைப் பன்மடங்கு புனிதம் வாய்ந்தவளாகத் திருத்தியமைத்தது. ஆகவே கண்ணீர் சிந்துதல் வாயிலாக மனிதன் மேன்மையுறுதலும் உண்டு; கீழ்மையடைதலும் உண்டு. மேன்மையடைவதற்கேற்ற பாடல் களைப் பாடிக் கண்ணீர் சிந்தி மனிதன் மேன்மை அடைதல் வேண்டும். கோழைத்தனத்தை வளர்க்கின்ற உலக இன்னல் களைக் குறித்துப் பாடிச் சிந்துகின்ற கண்ணீர் மனிதனை மேலும் கீழ்மையில் ஆழ்த்தும்.

> **"துன்பக்கண் ணீரிற் றுளைந்தேற்குன் ஆனந்த**
> **இன்பக் கண் ணீர்வருவ தெந்நாள் பராபரமே"**

இது தாயுமானவர் வாக்கு. 'உலக விஷயங்களைக் குறித்து எண்ணித் துன்பப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு அவ்வெண்ணம் ஒழிந்தால் துன்பம் தொலைகிறது. உள்ளம் உன்னை நினைந்து உருகி உருகி என் கண்ணில் நீர்ப்பெருக்கெடுத்து வரவேண்டும். அது இன்பக் கண்ணீர் ஆகும். அத்தகைய இன்பக் கண்ணீர் பெருகி என் உள்ளம் ஆனந்தம் அடைவது எந்நாளோ' என்கிறார் தாயுமானவர். இறைவனைக் குறித்துக் கண்ணீர் சிந்துவது மன உறுதியைத் தருகிறது. உலகைக் குறித்துச் சிந்துகின்ற கண்ணீர் பலஹீனத்தைத் தருகிறது.

கேள்வி: (667) பக்திப் பாடல்களைக் கேட்டுக்கொண் டிருக்கும் போதோ, பக்தியை விளக்கும் திரைப்படக் காட்சியைப் பார்க்கும்போதோ மனம் உணர்ச்சி வசப் படுகிறது. அப்பொழுது கண்களினின்றும் கண்ணீர் வருகிறது. இது ஆத்மசாதனையின் முன்னேற்றத்தின் அறிகுறியா?

பதில்: மனம் அறிவு சொரூபமாகவும், உணர்வு சொரூப மாகவும் இருக்கிறது. ஆராய்ச்சித் துறையில் மனது ஈடுபடும் பொழுது அம்மனது அறிவு சொரூபத்தில் நாட்டம் உடையதாக இருக்கிறது. தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு உண்மையை அறிவதில் இன்பம் காண்கின்ற மனது அறிவு சொரூபத்தில் செல்லும் இயல்புடையது என்பதை விளக்கிக் காட்டுகிறது. இறைவனுடைய மகிமைகளைக் கேட்கும்பொழுதும் பக்தி சம்பந்தமான நிகழ்ச்சிகளைக் காணும்பொழுதும் மனது உணர்ச்சி வசப்படுமானால் அம்மனது உணர்வு மயமானது என்பதை வெளிப்படுத்துகிறது. இன்னும் சிலருடைய மனது காரியங்களைத் திறம்படச் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. அம்மனது ஆற்றல் சொரூபத்தில் நாட்டம் உடையதாக இருக்கிறது. மனதின் பாங்கை அறிந்து அதற்கேற்ற சாதனை முறையை நாம் மேற்கொள்ள வேண்டும்.

தத்துவ ஆராய்ச்சியில் இன்பம் காண்கின்ற மனதுக்கு ஞானயோக மார்க்கமும், பகவத் விஷயங்களில் உணர்ச்சி வசப்படுகின்ற மனதுக்குப் பக்தியோக மார்க்கமும், திறம்படச் செயல்புரிவதில் மகிழ்ச்சி அடையும் மனதுக்குக் கர்மயோக மார்க்கமும் சாதனைக்குரிய மார்க்கங்களாகின்றன. எனவே மனம் பகவத் விஷயங்களில் ஈடுபடும்பொழுது உணர்ச்சி வசப்பட்டுக் கண்களில் நீர் வடியுமானால் அம்மனதுக்குப் பக்தியோக மார்க்கமே சிறந்ததாகும். அத்தகைய மனம் படைத் தவர்கள் பக்தியோக மார்க்கத்தை மேற்கொள்ளலாம். பக்தி யோகத்தை முதன்மையாக வைத்துக்கொண்டு ஞானயோக மாக்கத்தையும், கர்மயோக மார்க்கத்தையும் அதற்கு உதவிமார்க் கங்களாக வைத்துக் கொள்ளலாம்.

மனம் உலகில் வரும் இன்ப துன்பங்களுக்கு வசப்படாது நடுநிலையில் எந்த அளவுக்கு நிற்கிறதோ அந்த அளவுக்கு அது ஆத்ம சாதனையில் முன்னேறியதாகும். மனம் காமத்துக்கு

வசப்படாது காம உணர்ச்சியை வென்று பழகும்பொழுது அது ஆத்ம சாதனையின் முன்னேற்றமாகும். மனது துயரத்துக்கு ஆளாகாது மகிழ்ச்சியுடையதாய் இருக்கும்பொழுது சாதனையில் முன்னேறி வருகிறோம் என்பதற்கு அது அறிகுறியாகும். மனதில் உறுதிப்பாடும், அச்சமின்மையும், ஆசையின்மையும், அகங்காரமின்மையும், தடுமாற்றமின்மையும் நிலவி வருமானால் அவை சாதனையின் முன்னேற்றத்திற்கு அறிகுறிகளாகும். மனம் தெளிவடைந்து தனிமையில் இன்பம் காணும் நிலையை அடைகிற பொழுது சாதனையில் முன்னேறி வருகிறோம் என்பதை அறிந்து கொள்ளலாம். மனது மாண்புடையதாக மாறி அமையும் பொழுதுதான் நாம் சாதனையில் முன்னேறியவர்கள் ஆகின் றோம். நாம் சாதனை செய்வது சித்திகளைப் பெறுவதற்காக அன்று. நாம் சாதனை செய்வது பேரும் புகழும் பெறுதற்காக அன்று. நாம் சாதனை செய்வது மனதைப் பண்படுத்து வதற்கேயாம். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் நாம் சாதனையில் முன்னேறி வருகிறோமா இல்லையா என்பதை நாமே அறிந்துகொள்ளலாம்.

கேள்வி: *(668)* பக்தி, தொண்டு இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன? இரண்டிலும் மனிதன் பின்பற்றச் சிறந்தது எது?

பதில்: கோயிலைத் துப்புரவுப்படுத்துவது தொண்டு. மனிதனோடு மனிதன் அன்புடன் வைக்கின்ற நல்லிணக்கத்தைத் தெய்வத்திடம் திருப்புவது பக்தி.

இனி, பக்திக்கும் தொண்டுக்கும் இடையில் முரண்பாடு இல்லை. தாய் தன் குழந்தையினிடத்து வைக்கும் அன்பைப் பணிவிடையின் வாயிலாக விளக்குகின்றாள். உலகெங்கும் உயிர்களுக்கிடையில் நாம் காணும் காட்சி இதுவேயாம். தாய்ப்பறவை உணவு தேடிப் புசித்துப் பாதி ஜீரணம் பண்ணிக் குஞ்சின் அலகில் ஊட்டுகிறது. அது அன்புக்கு அறிகுறியாம். தெய்வத்துக்குப் பணிவிடை புரியும் தொண்டர்களை அன்பர்கள் என்கிறோம். தெய்வத்தினிடத்தும் அன்பர்களிடத்தும் அவர்கள் கொண்டுள்ள அன்பைத் தொண்டின் வாயிலாகத் தெரிவிக் கின்றனர். அன்பு ஓங்குதற்கேற்பச் சலித்துப்போகாது

தொண்டுபுரியும் வல்லமை தொண்டனுக்கு வந்தமைகிறது. தொண்டன் புரிகிற தொண்டின் வாயிலாக அவனுடைய அன்பு மேலும் மேலும் வளர்கிறது. இதுவே தொண்டுக்கும் பக்திக்கும் இடையிலுள்ள இணக்கமாம். தொண்டர்களெல்லாரும் பரம பக்தர்களாகவும் பக்தர்கள் நல்ல தொண்டர்களாகவும் திகழ்கின்றார்கள்.

கேள்வி: *(669)* பக்தனுக்கும் தொண்டனுக்கும் வேறுபாடு யாது?

பதில்: கடவுளிடத்துப் பேரன்பு வைக்கின்றவன் பக்தன். கடவுளுக்கென்றே பணிவிடை பண்ணுபவன் தொண்டன். ஒருவன் பக்தியோகத்தில் ஈடுபடுகிறான். மற்றவன் கர்ம யோகத்தில் ஈடுபடுகிறான். பக்தியானது பராபக்தியாக வடிவெடுக்குமிடத்து ஆத்ம சாதகன் அந்தப் பேரன்பிலேயே ஊறிக்கிடக்கிறான். பகவானுக்காகப் பணிவிடை பண்ண வேண்டும் என்னும் கருத்து எழுதற்கு ஆங்கு இடமில்லை; பேரன்பின் விளைவாக உடல் சிலிர்க்கிறது. மேனி முழுதும் நடுங்குகிறது. கைகூப்பி வணங்கிய வண்ணமாக அந்தப் பக்தன் இருக்கின்றான். கண்களினின்று தாரை தாரையாகக் கண்ணீர் வடிகிறது. உள்ளத்தினுள் இறைவனைத் தவிர வேறு சிந்தனை ஏதும் இடம் பெறுவதில்லை. இறைவனைப் பற்றிய பேருணர்ச்சி யால் பக்தன் முற்றிலும் தன்னை மறந்தவனாக இருக்கின்றான். அவனுடைய நாவில் எழுகின்ற சொற்களெல்லாம் இறைவனைப் பற்றியதாகவே இருக்கின்றன. இத்தகைய அதீதநிலையில் ஊறிக் கிடப்பவனுக்குப் பணிவிடை பண்ணுவதைப் பற்றிய எண்ணம் உள்ளத்தில் எழுதற்கோ அது செயலாக வடிவெடுப்பதற்கோ அவகாசம் இல்லை.

மற்று, தொண்டனுடைய பாங்கை உலகத்தவர்களுடைய வாழ்க்கையோடு ஒப்பிடலாம். பூ விற்று வாழும் மனிதன் ஒருவன் தன்னுடைய வயிற்றுப் பிழைப்பிற்காகப் பூக்கொய் கிறான். தொண்டன் ஒருவனும் பூக்கொய்கிறான். ஆனால் அவனுடைய மனப்பான்மை இவ்வுலக வாழ்வோடு சம்பந்தப் பட்டதன்று. கடவுளுக்காகவென்றே அவன் பூக்கொய்கிறான், மாலை தொடுக்கிறான். கோயிலில் விக்கிரகத்தில் எழுந்தருளப்

பண்ணியிருக்கும் தெய்வத்திற்கு அதைச் சாத்துகிறான். அதில் அவன் பரமானந்தம் அடைகின்றான். பிறகு உயிர்கள் அனைத்தையும் தான் வழிபடுகிற தெய்வத்தின் சொரூபங்களாகக் கருதுகின்றான். அன்னவர்களுக்கு அவன் அரும்பணி ஆற்றுகின்றான். ஆருயிர்களுக்குச் செய்கின்ற பணிவிடைகள் அனைத்தும் ஆண்டவனுக்கு உரியவைகளாக அவன் கருதுகிறான். உயிர்களுக்காக அரும்பணி ஆற்றுதலில் அவன் சலிப்படைவதில்லை. தன் சொந்த நலனைப் பற்றி அவன் நினைப்பதில்லை. உயிர்களுக்குப் பணிவிடை பண்ணுதலிலேயே அவன் பரமானந்தம் அடைகிறான்.

பக்தன், தொண்டன் ஆகிய இருவருக்குமிடையில் பொது நிலை ஒன்று உண்டு. உலகத்தவர்கள் அல்லும் பகலும் தங்கள் சொந்த நலனிலேயே, அல்லது ஜீவிதத்திலேயே கருத்தைச் செலுத்தி வருகிறார்கள். மற்று பக்தயோகியும் கர்மயோகியும் அவரவர் செயலின் வாயிலாகச் சுயநலத்தை ஒழித்துத் தள்ளுகின்றனர். பரமனிடத்து வைத்த அன்பில் பக்தன் தன்னுடைய ஜீவபோதத்தைத் துடைத்துத் தள்ளுகின்றான். ஆருயிர்களுக்குச் செய்கின்ற அரும்பணியே ஆண்டவனுக்குரிய அரும்பணியெனக் கருதி அந்த எண்ணத்தில் தன்னுடைய ஜீவபோதத்தைத் தொண்டன் துடைத்துத் தள்ளுகிறான்.

ஜீவபோதத்தைப் பரபோதத்தில் கரைத்து ஒடுக்குவது ஆத்ம சாதனத்தின் குறிக்கோளாகிறது. பக்தன் ஒருவன் இறைவனிடத்து வைத்துள்ள பேரன்பின் வாயிலாகத் தன் ஜீவவியக்தியை ஒடுக்குகிறான். தொண்டனோ ஆருயிர்களைப் பரமன் மயமாகப் பொருள்படுத்தி அவர்களுக்குச் செய்யும் பணிவிடையில் தன்னை முற்றிலும் மறந்தவனாகிறான்.

கேள்வி: *(670)* கடவுள் பக்திக்குக் காரணம் அச்சம் என்று கூறுகிறார்களே. இது சரியா?

பதில்: அச்சத்திற்குப் பிறப்பிடம் அஞ்ஞானம். பக்திக்குப் பிறப்பிடம் அன்பு. எங்கு அன்பு இருக்கிறதோ ஆங்கு அச்சத்திற்கு இடமில்லை. சிலர் பயபக்தி என்னும் பதத்தைக் கையாளுகிறார்கள். அது பொருந்தாததாம். எது உள்ளத்தைக்

கவர்கிறதோ அதனிடத்து அன்பு தானாக வளர்கிறது. அந்த அன்பு தூயதாகிறபொழுது பக்தியாகிறது.

கண்ணன் உலகில் தோன்றி வந்தபொழுது பக்தியும் வடிவெடுக்கலாயிற்று. அது கண்ணனிடத்தில் வைத்த அன்பின் விளைவாக அங்ஙனம் வளர்ந்தது. கண்ணன் உள்ளங் கவர் கள்வனாகப் பிறந்தான். காந்தம் இரும்புகளைக் கவர்ந்து இழுப்பது போன்று கண்ணன் உயிர்களனைத்தையும் தன்பால் கவரலாயினன். அவன் படைத்திருந்த மேனியின் அழகு, புன்முறுவல், இனியசொல், அவன் கிளப்பிய புல்லாங்குழல் ஓசை ஆகியவை யாவும் ஒன்றுகூடி மக்களை மட்டுமல்ல, மற்ற சிற்றுயிர்களையும் கண்ணனிடத்தில் கவர்ந்திழுத்தன. அதன் விளைவாக அவர்கள் உள்ளத்தில் ஊற்றெடுத்த அன்பானது பேரன்பாகப் பரிணமித்தது. அதன் விளைவாக அவனோடு தொடர்பு வைத்த மக்களனைவரும் தங்களுடைய சுயநலனை ஒதுக்கிவைத்தார்கள். அதன் விளைவாக அவர்கள் உள்ளத் தெளிவடைந்தார்கள். தெளிந்த உள்ளத்தில் எழுந்த அவர்களுடைய அன்பு பேரன்பாகப் பரிணமித்தது. இந்தப் பேரன்புதான் பக்தி எனப் பகரப்பெறுகிறது. இத்தகைய பேரன்புக்கும் பயத்திற்கும் வெகுதூரமாம்.

சில மதவாதிகள் மக்களுக்குப் புகட்டுவது கடவுளைப் பற்றிய பயம். மனிதன் தப்புச் செய்தால் அவனை நரகத்தில் போட்டு அவர் துன்புறுத்துவார். அப்படிச் செய்ய வேண்டாம் என்று கடவுளைக் கெஞ்சிக் கேட்பதைப் பக்தி என்று அந்த மதவாதிகள் கூறுகின்றனர். தண்டனைக்கு அஞ்சி ஒருவரிடம் மன்னிப்புக் கேட்பதும் அவரோடு தொடர்புகொள்வதும் பக்தி யாகாது. எனவே அச்சத்திற்கும் தெய்வ பக்திக்கும் வெகுதூரம்.

கேள்வி: *(671)* பக்தியும் ஞானமும் ஒன்று சேரமுடியாது என்பது ஒரு அன்பருடைய கருத்து. இது உண்மையா? பக்தியில் நாம் எல்லாவற்றையும் ஈசுவரனிடம் ஒப்படைக் கிறோம். அதனால் நம் உண்மை அறிவுக்கு இடமில்லாமல் போய்விடுகிறது. இதில் உங்கள் கருத்து என்ன?

பதில்: பக்திக்கும் ஞானத்துக்கும் இடையிலுள்ள தொடர்பைப் பற்றிச் சான்றோர்களுக்கிடையில் மூன்றுவிதமான

அபிப்பிராயங்கள் இருக்கின்றன. பக்தியின் மூலம் மனது சுத்தியாகின்றது; பிறகு அது ஞானத்துக்குத் தகுதியுடையதாகிறது என்பது ஒருசாரார் கொள்கை. இக்கொள்கையின்படி பக்தியை விட ஞானம் சிறந்தது. சாதகனைப் பக்குவப்படுத்துதற்கே பக்தி பயன்படுகிறது என்பது அவர்களின் கோட்பாடு.

மற்றொரு சாரார் ஞானத்தின் விளைவு பக்தி என்கின்றனர். கடவுளை அறிந்துகொள்கின்ற அளவு கடவுளிடத்து அன்பு அதிகரிக்கிறது. வேற்றான் ஒருவனை நாம் நேசிப்பதில்லை. உற்றார் என்று ஒருவரை அறியுமிடத்து அவர்மீது அன்பு வளர்கிறது. இங்ஙனம் ஞானம் பெருகுமளவு பக்தி வளர்கிறது. கடைசியில் எல்லாம் ஒரே பிரேம பக்தியாய்ப் போய்விடுகிறது. இது இன்னொரு சார்பாரது கொள்கை.

உயந்த நிலையில் பக்தியும் ஞானமும் ஒன்றுபட்டு விடுகின்றன என்பது மூன்றாவது கொள்கை. அன்பானது அறிவை வளர்க்கிறது. அறிவு ஓங்குமிடத்து அன்பும் வளர்கிறது. அன்பின் விளைவாகச் சாதகன் தன்னைப் பரம்பொருளிடத்துக் கொடுத்து விடுகின்றான். விறகுக் கட்டை தீக்குரியதாக்கப்படும் பொழுது அது தானே தீ ஆய்விடுகிறது. பக்தன் தன்னைத் தெய்வத்துக்கு உரியவன் ஆக்கிவிடுகின்றான். அதனால் தானே தெய்வ சொரூபம் ஆய்விடுகின்றான். அன்பும் அறிவும் அளப்பரிய பாங்கில் கடவுளிடத்து மிளிர்கின்றன. அவர் பரம பிரேமை சொரூபம். அவர் சர்வக்ஞன். எல்லையில் அடங்காத அன்பும் அறிவும் அவரிடத்து உண்டு. ஆதலால் ஒன்றை உயர்த்தியும், மற்றொன்றைத் தாழ்த்தியும் பகர்வது பொருந்தாது. கடவுளை அறியும் மனிதன் அவரை நேசிக்கிறான்; அவரை நேசிப்பவன் கடவுளை அறிகிறான். ஆதலால் சான்றோர் ஒருவரிடம் உண்மையான அன்பையும் உண்மையான அறிவையும் காணலாம். தன்னைக் கடவுளிடம் கொடுத்து விடுவதால் சாதகன் கடவுள் மயம் ஆய்விடுகின்றான். கடவுள் மயம் ஆய்விட்டவனிடத்து அறிவு போய்விடுகிறது என்று எப்படிப் பகர்வது? கடவுளிடத்து ஒருவன் தன்னைக் கொடுத்து விடுமளவு அவன் அறிவு சொரூபியாகிறான். ஆங்கு அறிவு இல்லை என்று எங்ஙனம் பகர்வது? ஆதலால் பக்தியும் ஞானமும் ஒன்றே.

கேள்வி: *(672)* அனுஷ்டான வேதாந்தத்தில் "கற்பனைத் தேவதைகளை நோக்கி நீ விண்ணப்பிப்பதும் அழுவதும் குருட்டு நம்பிக்கையென நீ மனமார அறிவாய்" எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சிஷ்யர்களுக்கு அவரவர் வழிபடும் தெய்வத்திடம் அழுது புலம்பி வரம் கேட்கும்படியாகப் பகர்ந்துள்ளார். இவ்விரண்டும் முரண்பாடுடையனவாகத் திகழ்கின்றனவே?

பதில்: அனுஷ்டான வேதாந்தம் விவேகானந்தர் புகட்டியது. அதில் வரும் கோட்பாடுகள் முழுதும் ஞானசாதனங்களாகும். பரமஹம்சருடைய உபதேசமொழி பக்திசாதனமாகும். தூய ஞானமும் தூய பக்தியும் ஒன்று என்பது ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் விவேகானந்தருக்கும் ஒப்பமுடிந்தது. சாதனத்தின் ஆரம்பதசையில் இரண்டும் முரண்படுவன போன்று தென்படலாம். உண்மையில் முரண்பாடு இல்லை. இங்கே கற்பனைத் தெய்வம் என்று சொல்லப்படுவது சொர்க்கம் போன்ற தொலைவில் உள்ள லோகங்களில் வீற்றிருக்கும் தெய்வங்களைக் குறிப்பதாகும். பக்தன் ஒருவன் தன் உள்ளத்தையே கோயிலாகக் கருதவேண்டும். தெய்வம் அதனுள் வீற்றிருப்பதாக உணர வேண்டும். ஞானி ஒருவன் தான், தனது என்பதை அறவே மறந்துவிடவேண்டும். இதுதான் பக்திக்கும் ஞானத்துக்கும் உள்ள தொடர்பு. நமக்கு அந்நியமாகப் புறவுலகில் எங்கேயோ இருந்து நமக்குத் துணைபுரிவதற்குத் தெய்வம் வரவேண்டும் என்று எண்ணுவதெல்லாம் வெறும் கற்பனையாகும். அத்தகைய கற்பனை வேண்டாம் என்பதே கோட்பாடு. எங்கும் நிறை தெய்வம் நம் மனத்தகத்து இருக்கிறது என்று உணரவேண்டும்.

கேள்வி: *(673)* "ஏழு பிறவிகளிலும் உனக்குப் பணிவிடை செய்வேன்" என்றாள் ஆண்டாள். ஏன் முக்திவேண்டுமென்று அவள் சொல்லவில்லை?

பதில்: "எற்றைக்கும் ஏழு ஏழு பிறவியிலும் உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம், மற்றை நம் காமங்கள் மாற்று ஏல் ஓர் எம்பாவாய்" என்பது ஆண்டாளின் கூற்று. ஆண்டாள் படைத்திருந்த பக்தியின் உச்சநிலை இக்கூற்றின் வாயிலாக வெளியாகிறது. பக்தியில் சிறப்பு ஒன்று உளது.

பக்தன் ஒருவன் அல்லது பக்திமதி ஒருத்தி தெய்வத்திடமிருந்து எதையும் கேட்பதில்லை. தங்களிடத்திலுள்ள அனைத்தையும் தெய்வ வழிபாட்டுக்கென்றே அவர்கள் பயன்படுத்துகின்றனர். முக்தி வேண்டுமென்று கேட்டால் அது தன்னைப்பற்றிய உணர்ச்சியாகிறது. அதற்கு மாறாகப் பக்தி பண்ணிக்கொண்டே இருந்தால் அது பகவத் சிந்தனையை வளர்க்கிறது. தன்னைப் பற்றிய சிந்தனையை அது ஒழிக்கிறது. பக்தியின் வாயிலாகப் பக்தன் பகவானைக் கடன்பட்டவன் ஆக்குகின்றான். பகவானுக்கு அனைத்தையும் படைக்கிற பெருநிலைக்குப் பக்தன் போய் விடுகிறான். தன்னிடமிருந்து ஒன்றையும் கேளாத பக்தனுக்குத் தான் எதை எடுத்து வழங்குவது என்று தெரியாது பகவானே திகைத்துப் போகின்றான். பக்தனுடைய மனப்பான்மையோ நான் யாண்டும் பகவானுக்குப் பணிவிடைகள் பண்ணிக் கொண்டே இருக்கின்றேன், அவனிடமிருந்து நான் எதையும் கேளேன் என்பதாம். இந்த மனப்பான்மையின் விளைவாகவே பக்தன் பகவானுக்கும் மேலோன் ஆகிறான். ஆண்டாள் படைத் திருந்ததும் அந்த மனநிலையே. முக்தியைப் பற்றி நினைக்க அவளுக்கு நேரமில்லை. முக்தி கேட்பதிலும் மேலானது பக்தியை வழங்குவது.

கேள்வி: *(674)* பக்தி மார்க்கத்தில் ஸ்ரீமதி ராதை அடைந்திருந்த பரவச நிலையைப் பக்திமதி மீராபாய் அடையவில்லை என்று சொல்லுவதற்குக் காரணம் யாது?

பதில்: பக்தி மார்க்கத்தில் மகாபாவம் என்னும் பார மார்த்திகப் பெருநிலையொன்று உண்டு. சரித்திர பூர்வமாக அதை முதன்முதலில் அடையப்பெற்றவள் பாலகிருஷ்ணன் மீது பக்திபூண்டிருந்த ஸ்ரீமதி ராதையாவாள். பராபக்தியின் கிளைகள் ஐந்து உள. அவை முறையே சாந்த பாவம், தாஸ்ய பாவம், சகா பாவம், வாத்சல்ய பாவம், மதுர பாவம் எனப்பகரப்படுகின்றன. பரம்பொருள் போற்றுதற்குரிய பெரிய பொருள் எனக்கருதுவது சாந்த பாவம். ஏனைய நான்கு பாவங்களும் மக்களுக்கிடையில் உள்ள இணக்கங்களுக்கு நிகரானவைகள். இறைவன் ஆண்டவன். அவனுக்குப் பணிவிடை பண்ணும் பாங்கில் ஒரு தொண்டனாகப் பக்தனிருக்கிறான்

என்பது தாஸ்ய பாவம் அல்லது ஆண்டான் - அடிமை இணக்கம். கடவுளை மேலான நண்பனாகக் கருதுவது சகா பாவம் அல்லது தோழமை இணக்கம். தெய்வத்தோடு தாய் தந்தை இணக்கம் பண்ணுவது வாத்ஸல்ய பாவம். தெய்வத் தைத் தன் தந்தையாகவோ, தாயாகவோ கருதிக்கொள்ளலாம். இதில் மற்றொரு பகுதி; பால கணபதி, பால முருகன், பாலாம்பிகை, பாலராமன், பாலகிருஷ்ணன் ஆகிய மூர்த்தி களைப் பக்தன் தன்னுடைய செல்வர்களாகக் கருதி வழிபடு கின்றான். தெய்வத்தைத் தன் கணவனாகவும், தன்னைத் தெய்வத்தின் மனைவியாகவும் கருதிப் பக்தி பண்ணுவது மதுரபாவம்.

ஸ்ரீமதி ராதை கையாண்டது வாத்ஸல்ய பாவம். பால கிருஷ்ணனைத் தான் பேணும் செல்வனாக அவள் வைத்துக் கொண்டாள். அத்தகைய தெய்வீக இணக்கத்தில் அவள் உச்சநிலை அடைந்தாள். அவள் மேனி முழுவதுமே தெய்வப் பெற்றி வாய்ந்ததாக மாறியமைந்தது. ஐம்பொறிகளும் ராதையினிடம் பரஞான நிலையை எட்டியிருந்தன. ஆதலால் ஏதேனும் ஓர் இந்திரியம் தன் செயலையும் செய்யும்; ஏனைய நான்கு இந்திரியங்களின் செயலையும் செய்யும். அதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். கண் வடிவங்களைப் பார்க்கிறது. அதே கண்ணுக்கு வடிவத்திலுள்ள ஓசையை நுகருகிற வல்லமையும், மணத்தை மோப்பவல்ல வல்லமையும், சுவையை ரசிக்கவல்ல திறனும் வந்தமைகின்றன. இது ஒரு அலாதியான பேறு. சரித்திர பூர்வமாக இந்தப் பேற்றினை அடையப் பெற்றவர்கள் மிகச் சிலரேயாம். ஸ்ரீமதி ராதை அடைந்திருந்த மகாபாவம் என்னும் இப்பெரிய பேற்றினை மாணிக்கவாசகர், ஆண்டாள், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் ஆகிய பெருமக்கள் அடையப் பெற்றிருந்தனர். இக்காலத்தில் அவதரித்து வந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்கும் இந்த மகாபாவம் வாய்த்திருந்தது என அவருடைய சிஷ்யர்கள் கூறுகின்றனர். இந்த நிலையை மீராபாய் எட்டவில்லை என்பதில் குறையொன்றுமில்லை. இந்த நிலையை அடையப்பெறாமலே அனைவரும் முக்திக்கு அருகதை உடையவர்கள் ஆகலாம். அலாதியான இந்தப் பாரமார்த்திகப் பெருநிலை அரிதினும்

அரிதாக யாரோ சிலர்க்குத்தான் வாய்க்கிறது. நமக்கு இத்தகைய பெரியபேறு வாய்க்கவில்லையே என்று நாம் யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. ஈசனுடைய லவலேசான அருளைக்கொண்டு நாம் அனைவரும் உய்வு அடையலாம்.

கேள்வி: *(675)* சபரியைப்போல் நாமும் பழங்களை ருசிபார்த்து இறைவனுக்குப் படைக்கலாமா?

பதில்: கடவுள் வழிபாட்டில் லோகாசாரம், தேசாச்சாரம் என்பன முக்கியமான இடம்பெற்று வருகின்றன. ஒரு தேசாச் சாரப்படி ஒரே தட்டிலிருந்து பலபேர் உணவு எடுத்து உண்டு வருகின்றனர். ஒருவர் எச்சில் பட்டதை மற்றொருவர் உண்ணலாகாது என்னும் கோட்பாட்டில் அவர்கள் ஊறி வளர்ந்தவர்கள் அல்லர். எச்சில்படுதலில் தோஷம் எதையும் அன்னவர்கள் அறிந்திலர். அத்தகைய ஐதிகத்தில் ஊறியவர்கள் தங்கள் எச்சில்பட்ட உணவைத் தாங்கள் வழிபடும் தெய்வத் துக்கும் படைக்கலாம். அப்படிச் செய்வது பக்திக்கு இடைஞ் சலாகாது. ஆனால் நம்நாட்டு ஆசாரம் அத்தகைய செயலுக்கு அனுமதி கொடுக்காது. எச்சில் படாத உணவையே நம்மவர்கள் தெய்வத்துக்கு நைவேத்தியமாகப் படைத்துப் பழகி வரவேண்டும். பக்தியில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததினால் சபரிக்குத் தான் செய்த செயல் சதாசாரத்துக்கு ஒத்துவராது என்னும் எண்ணம் அவள் உள்ளத்தில் உதிக்கவில்லை. ஆதலால் அவள் சுவைத்துப் பார்த்துவிட்டு நல்ல கனிகளை மட்டும் இராமனுக்குப் படைத்தது அவளுடைய பக்திச் செயலாகும். அவள் படைத்திருந்த பக்தியை நாம் இன்னும் படைக்கவில்லை. நம்முடைய தேசாச்சாரம் என்ன என்பது நமக்குத் தெரியும். ஆதலால் மேற்போக்காக நாம் சபரியைப் பின்பற்றலாகாது.

கேள்வி: *(676)* பிரஹலாதன் தந்தையின் சொல்லை மீறி நடந்தது முறையாகுமா? அருள்கூர்ந்து விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: நீதி நெறிப்படி அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்களாகிறார்கள். அவர்கள் சொற்படி நடந்துகொள்ள மக்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். தாய்க்கும் தந்தைக்கும்

அடிபணிதற்கேற்ப மைந்தன் மேலோன் ஆகிறான். சில வேளைகளில் தாய் தந்தையர் ஆணை இவ்வுலக வாழ்க்கையில் முன்னேற்றத்துக்கு இடைஞ்சலாக அமையலாம். அத்தகைய இடைஞ்சலையும் பொருள்படுத்தாது பெற்றோர் சொற்படி நடந்துகொள்பவன் பண்பாட்டில் மேலே வருகிறான். எனவே இவ்வையக வாழ்வைப் பொறுத்தவரையில் தாய்க்கும் தந்தைக்கும் அடிபணிந்து நடப்பதால் மைந்தனுக்கு நஷ்டம் ஏதும் வராது. ஒருபோக்கில் நஷ்டமாகத் தென்படுவதற்கு ஈடாக மற்றொரு போக்கில் அடிபணிதல் வாயிலாக மைந்தன் அடைகின்ற மனபரிபாகம் பெரியவாய்ப்பு ஆகும்.

இத்தகைய நெறியான வாழ்க்கை முறைக்கு விலக்கு ஒன்று உண்டு. மானுடப் பிறப்பெடுத்திருப்பவனுக்கு அருள்தாகம் வாய்ப்பது அரிதிலும் அரிது. அருள்தாகம் மனிதனைத் தெய்வீகப்பெற்றி வாய்ந்தவனாகத் திருத்தியமைக்கிறது. அருள்தாகம் என்பதும் கடவுள் நாட்டம் என்பதும் ஒன்றே. மானுட ஜன்மம் எடுத்திருக்கிற ஒருவன் படைத்திருக்கிற அருள் நாட்டத் துக்கு இடைஞ்சலாகப் பெற்றோர்கள் குறுக்கிடுவார்களானால் அவர்கள் ஆணையை மீறி மைந்தன் பரநாட்டத்தில் ஈடுபடுவா னாகில் அது இழுக்கு ஆகாது. பெற்றோர் போடும் கட்டுப் பாட்டை மீறிப் போவது பிழையாகாது. அருள்தாகம் பிடித் திருக்கிற ஒருவன் உலகில் யாருடைய அனுமதிக்காகவும் காத்திருக்க வேண்டியது அவசியமில்லை. பெற்றோரின் தடையை மீறிப் போவதும் பிழையாகாது.

பிரஹலாதனுக்கு வரம்புகடந்த அருள்தாகம் உண்டாகி இருந்தது. அவன் தந்தையாகிய ஹிரண்யகசிபு அதற்கு முட்டுக் கட்டை ஏராளமாகப் போட்டான். அந்த முட்டுக்கட்டையையும் சமாளித்துக்கொண்டு தந்தையின் சொல்லை மீறிக் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டான். அதனால் அவனுக்குக் கேடு ஒன்றும் வரவில்லை. நலனே வந்து அமைந்தது. ஆகக் கடவுள் நாட் டத்தை முன்னிட்டு உலகத்தவர்களுடைய கட்டுப்பாடுகளை மீறிப்போவதில் பிழை ஒன்றுமில்லை. அறிவு படைத்தவன் செய்யவேண்டிய செயல் அதுவேயாம். அப்படிச் செய்ததினால் பிரஹலாதன் பக்தராஜன் எனச் சான்றோர்களால் போற்றப் பெறுகிறான்.

கேள்வி: *(677)* காரைக்கால் அம்மையார் தம் உடல் அழகை மாற்றிக்கொண்டதன் காரணம் என்ன?

பதில்: காரைக்கால் அம்மையார் மேனி அழகுடன் பிறப்பெடுத்தவர். தக்க தருணத்தில் மணம் புரிந்துகொண்டு கணவனோடு வாழ்ந்தவர். பிறகு இவருடைய பக்தியின் சிறப்பைக் காணலுற்ற கணவன் பக்திபூர்வமாக இவரிடமிருந்து பிரிந்து கொண்டார். மனைவி என்கின்ற எண்ணத்தை அவர் மாற்றிக் கொண்டு தெய்வமாக இவரைக் கருதிப் போற்றிவந்தார். இந்தச் சூழ்நிலையில் கணவனுடைய ஆதரவில் மேலும் வாழ்ந்திருப்பது பொருத்தமற்றது என இவர் உணர்ந்தார். துறவறம் போன்ற பாரமார்த்திகப் பெருவாழ்வில் இவர் தீவிரமாக ஈடுபட்டார்.

பெண்பால் ஒருத்திக்குப் பேரிடைஞ்சலாயிருப்பது உடல் அழகு. தன்னந்தனியளாய் வாழ்ந்திருப்பவளுக்கு மேனி அழகு பேரிடைஞ்சலாகும். அக்காலத்திய சூழ்நிலையில் காரைக்கால் அம்மையாருக்கு வேறு யாருடனும் கூடி வாழ்ந்திருக்கும் வசதி வாய்க்கவில்லை. எனவே சிவனாரிடம் அவ்வம்மையார் பிரார்த்தனை பண்ணிக் கவர்ச்சிகரமான தம் உடல் அழகை யெல்லாம் மாற்றியமைக்கும்படி வேண்டினார். அது பொருத்த மான பிரார்த்தனை. இறைவனாரும் அங்ஙனமே செய்தருளி னார். பார்ப்பதற்கு அருவருப்பாயிருந்த வயது முதிர்ந்த உடலை அவர் படைக்கலானார். புறத்தில் ஆபாசமும், அகத்தில் அண்ணலின் அன்பும் அதற்கேற்ற திண்ணிய மன உறுதியும் அவருக்கு அமைவனவாயின. உடலில் தென்பட்ட அலங்கோலத் தால் அவருக்கு இடுக்கண் ஏதும் வரவில்லை. அகத்தில் ஓங்கி வளர்ந்து வந்த கடவுள் பக்தி பிறவிப் பிணியைக் கடப்பதற்குப் பேருதவியாயிற்று. காரைக்கால் அம்மையார் வாழ்வு பக்தியில் ஓங்கி வளர்ந்துவரும் பெண்பால்ர்களுக்கு நல்லதொரு எடுத்துக் காட்டு ஆகும்.

கேள்வி: *(678)* சங்கநிதி பதுமநிதி என்ற தலைப்புடைய தாண்டகத்தில் "அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோய ராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்னும் அப்பர் சுவாமிகளின் கருத்தையும்

"புற்றில் வாளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன் கற்றைவார் சடையெம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மாற் கற்றிலாதவரைக் கண்டாலம்ம நாமஞ்சுமாறே" என்ற மணிவாசகர் திருவாக்கையும் தெளிவுபடுத்தி விளக்குங்கள்.

பதில்: அப்பர் சுவாமிகளுடைய மனப்பான்மையும் மாணிக்க வாசகருடைய மனப்பான்மையும் ஒன்றையொன்று அனுசரித்தே இருக்கின்றன. மனிதன் ஒருவன் எத்தகைய உணவை உண்கிறான் என்பது முக்கியமானதல்ல. கடவுளிடத்து எத்தகைய பக்தி ஒருவன் கொண்டிருக்கிறான் என்பதே முக்கியமானது. பொருந் தாத உணவை உண்டு வாழ்ந்திருந்த கண்ணப்பர் பெற்றிருந்த பராபக்தியைப்பெறப் பெரியோர்கள் பலர் அரும்பாடுபடுகின்றனர். உண்ணும் உணவிலும் உயர்ந்தது மனிதன் கொள்ளும் பக்தி என்பது அப்பர் சுவாமிகளின் கருத்து.

நாம் காணும் ஒளிப்பிழம்புகளுள் சூரியனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அப்படிச் சூரியனுக்கு ஒப்பானதோ, உயர்ந்ததோ ஏதேனும் தன் காட்சியில் இருக்கிறதென்று மண்ணுலகில் வாழ்பவன் மொழிவானாகில் அவன் மனதில் ஏதோ கோளாறு இருக்கிறதென்றே நாம் முடிவுகட்டுவோம். மாணிக்கவாசகர் சிவ பக்தியின் சிறப்பை எடுத்து இயம்புகிறார். சிவனாருடைய பெருமைகளையெல்லாம் அறிந்தான பிறகு அவருக்கும் மிக்க தொரு தெய்வம் இருக்கிறதென்று முடிவுகட்டுகிறவன் உண் மையை உள்ளபடி அறிந்தவனல்லன். அத்தகைய மனிதனோடு இணக்கம் கொள்ளுதலிலோ, சொல் கேட்பதிலோ சிவபக்தன் சிந்தையைச் செலுத்தலாகாது என்று மாணிக்கவாசகர் எச்சரிக்கை செய்கிறார். பக்தன் ஒருவன் தான் போற்றும் தெய்வத்துக்கு ஒப்பானது வேறு எதுவும் இல்லையென்று எண்ணுவதுதான் முறை. சைவன் ஒருவன் சிவமே பெரியது என்று எண்ணலாம். வைஷ்ணவன் ஒருவன் விஷ்ணுவே பெரிய பொருள் என்று எண்ணலாம். அந்த எண்ணம் நிறை ஞானமாக முதிர்ச்சி அடையும்பொழுது சிவம் என்று சொல்லப்படுவதும் விஷ்ணு என்று சொல்லப்படுவதும் ஒரே முழுமுதற்பொருள்தான் என்னும் சித்தாந்தம் வந்துவிடுகிறது. உண்மையான பக்தனைப்

போற்றுவதும், பரம்பொருளைப் போற்றுவதும் பக்தர்களுடைய இயல்பு. அத்தகைய இயல்பைத்தான் அப்பரிடத்திலும், மாணிக்கவாசகரிடத்திலும் நாம் காண்கிறோம்.

கேள்வி: *(679)* கடவுளையே நினைந்திருப்பது உயர்ந்த மனநிலையில் இருப்பவர்களுக்குத்தான் இயலுகிறது. "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரம்தர வேண்டும்" என்று அப்பர் சுவாமிகள் பிரார்த்திக்கிறார். புழுவாய்ப் பிறந்து கடவுளை நினைப்பது எப்படிச் சாத்தியமாகும்.

பதில்: கடவுளைப்பற்றிய சிந்தனை எது என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். கடவுள் என்னும் சொல்லுக்கு அடிப்படையாயுள்ள கருத்தை இரண்டு பேர் ஒரேவிதத்தில் அறிந்து கொள்வதில்லை. உலகில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை விதமான கருத்துக்கள் கடவுள் என்னும் சொல்லுக்கு அவர்கள் மனதில் உண்டாகின்றன. இரண்டு ஞானிகள் கடவுளை ஒரேபாங்கில் கருதுவதில்லையென்றால் பிறகு மற்றவர்களைப் பற்றிய பேச்சு எதற்கு? இந்த வேற்றுமைக்கிடையில் ஒரு ஒற்றுமையும் உண்டு. கடவுள் மீது நம்பிக்கை இல்லையென்று சொல்லுகிறவனும் உண்மையில் நம்பிக்கையற்றவனல்லன். எல்லா உயிர்களும் தாம் தாம் அடைந்துள்ள நிலையைவிட ஓர் உயர்ந்த நிலையை உணர்கின்றன. கை விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு இரவில் நடக்கின்றவனுக்குப் பாதையின் பக்கத்திலுள்ள பகுதி தென்படுகிறது. உணர்வு என்னும் விளக்கு உயிர்கள் அனைத்திடத்தும் இருக்கிறது. தான் அடைந்துள்ள நிலைக்குச் சற்று உயர்ந்ததை ஞானி உணர்கிறான். தான் அடைந்துள்ள நிலைக்குச் சற்று உயர்ந்ததை அக்ஞானி உணர்கிறான். தான் அடைந்துள்ள நிலைக்குச் சற்று உயர்ந்ததை நல்லவன் உணர்கிறான். தான் அடைந்துள்ள நிலைக்குச் சற்று உயர்ந்ததைக் கெட்டவன் உணர்கிறான். இப்படி மக்கள் அனைவரும் உணர்கின்றனர். விலங்குகள் தமது பக்குவத்துக்கு ஏற்றவாறு மேன்மையை உணர்கின்றன. பறவைகளும் அப்படியே செய்கின்றன. புழு, பூச்சிகளுக்கும் அவைகளின் நிலைக்கேற்றபடி மேலான உணர்வு

இருக்கிறது. ஸ்தாவரங்களிடத்திலும் அது இருக்கிறது. அண்டம் முழுதிலுமே அவ்வுணர்வு பல படித்தரங்களில் இருக்கிறது என்கின்றனர் ஆன்றோர். ஆகையினால்தான் உயிர்களனைத்தும் அறிந்தும், அறியாமலும் இறைவனையே போற்றி வருகின்றன என்று பக்தர்களும், ஞானிகளும் பகர்கின்றனர். அப்படி மேன்மையடைவதற்கான உணர்வே கடவுளைப் போற்றுதல் என்னும் பெயர் பெற்றுள்ளது.

இத்திருக்காட்சியில் வைத்துக்கொண்டு அப்பர் சுவாமி களின் கூற்றை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். எப்பிறவி தமக்கு வாய்க்கிறது என்பதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. மக்களுள் பலர் மறுபிறப்பைப் பற்றி எண்ணுகிறபொழுது தாங்கள் எவ்வுலகில் எந்த நாட்டில், எவ்வினத்தில், எக்குடியில் பிறக்க வேண்டும் என்பதையெல்லாம் பற்றி அவாவுறுகின்றனர். குறுகிய மனப்பான்மையினின்று வருகிற அவா அது. நல்லறிவு படைத் திருப்பவர்கள் தாங்கள் எங்குப் பிறந்தாலும் நல்லவராக இருந்தால் போதும் என்று நினைக்கின்றனர். பக்தியின் மிகுதியால் அப்பர் சுவாமிகள் மக்கட் பிறவிக்கும், புழுவின் பிறவிக்கும் இடையில் வேற்றுமை காணவில்லை. இறைவனு டைய திருவுளப்படி மிகக் கீழான பிறவி வாய்த்தாலும் அதை மேலானதாக எடுத்துக்கொள்ள அவர் ஆயத்தமாயிருந்தார். ஆனால் அவர் வேண்டியது ஒன்றே. இறைவனிடத்துத் தாம் கொண்டிருந்த பக்திமட்டும் குன்றிவிடலாகாது. அப்படி அவர் செய்த விண்ணப்பத்தின் மூலம் அவரது பரந்த மனநிலை வெளியாகிறது. உயிர்களனைத்தையும் ஒரே தரத்தில் வைத்துக் காணும் பக்குவமும் அவருக்கு அமைந்திருந்தது. எனவே அவர் செய்த விண்ணப்பத்தின் மூலம் அவருடைய பெருமை நமக்கு விளங்குகிறது.

நமக்கிடையில் கடவுளைப்பற்றிய கருத்து ஓரளவு மேல் நிலைக்கு வந்திருக்கிறது. அக்கருத்துக்கு ஒப்ப மனது அப்பேருணர்வில் அடங்கியிருக்க மாட்டேன் என்கிறது. சிற்றியல்பு படைத்ததாய்ச் சிறிய எண்ணங்களில் மனது அடிக்கடி விரைந்து ஓடிவிடுகிறது. பக்தியைத் தீவிரமாக வளர்ப்பதன் மூலமாகவே அடங்காத மனதை அடக்குவது நமக்குச் சாத்திய மாகிறது. நெடுங்காலத்துக்குப் பிறகாவது மனது முற்றிலும்

அடங்கியிருக்குமாகில் அப்பர் சுவாமிகள் அடைந்த நிலையை நாம் எட்டிவிட முடியும்.

கேள்வி: *(680)* மாணிக்கவாசக சுவாமிகளுக்கு ஆலவாய் அண்ணலே குருவாய் வந்து உபதேசித்ததாக இருக்கிறது. பின்பு அவரே திருவாசகத்தில் அருள் பத்தில் "நிருத்தனே! நிமலா!... உன்னை, ஓலமிட்டு அலறி உலகெலாம் தேடியும், காணேன்!'' என்றும் பாடியுள்ளார். குருவாய் வந்த அண்ணலைக் கண்டவரே காணேன் என்று பாடியுள்ளதின் கருத்து என்ன?

பதில்: மாணிக்கவாசகர் இறைவனால் ஆட்கொள்ளப் பட்டார். அதன் பிறகு இறைவனைத்தேடி அவரைக்காண முடியவில்லை என்று வருந்தி விண்ணப்பிப்பது முரண்படுவது போன்று தென்படுகிறது. ஆனால் இதற்கு நிகராக மற்றொரு நிகழ்ச்சியை எடுத்துக்கொண்டால் அதன் உட்கருத்து நன்கு விளங்கும். பிருந்தாவனத்தில் அவதரித்த கிருஷ்ணன் தனது காட்சியைக் கோபியர்களுக்குக் கொடுத்தருளினான். அவனை அவர்கள் திரும்பவும் காணமுயன்றபோது தென்படாது அவன் மறைந்துவிட்டான். பிறகு தங்களுடைய துயரத்தைக் கோபியர்கள் பலவாறு பரிந்து வெளியிட்டார்கள். அவன்மீது அவர்கள் கொண்டிருந்த அருள்தாகம் அவர்களுடைய பக்தியை மேலும் வளர்த்தது. கடவுள் பக்தர்களுக்குக் காட்சிகொடுத்து அருள் கின்றார். அதனால் கடவுளிடத்து அவர்களுக்குப் பெரும் பற்றுதல் வந்துவிடுகிறது. பிறகு காட்சிக்கு அகப்படாதவராக அவர் மறைந்திருக்கிறார். அவ்வேளையில் பக்தர்களுடைய பக்தி பன்மடங்கு அதிகரிக்கிறது. ஆர்வம் மிகக் கொண்டவர்களாக கடவுளை நாடி அலைந்து திரிகின்றனர். பித்துப்பிடித்தவர்கள் போன்று அவர்கள் நடந்துகொள்கின்றனர். அத்தகைய நிலை அவர்களுக்கு முற்றிலும் அவசியமாகிறது. பக்தியின் பெருக்கு அதன் மூலம் உச்சநிலைக்கு வந்துவிடுகிறது. இங்ஙனம் மன பரிபாகத்தில் அவர்கள் பூர்த்தியடைதல் பொருட்டு இடை யிடையே கடவுள் தமது திருக்காட்சியைப் பக்தர்களிடத்திருந்து மறைத்து வைத்துவிடுகின்றார். பல பக்தர்களுக்கு நிகழ்ந்துள்ள அதே நிகழ்ச்சி மாணிக்கவாசகருக்கும் நிகழ்ந்திருக்கிறது.

கேள்வி: *(681)* கிருஷ்ணனாகவும், சத்தியபாமையாகவும் இருந்தவர்கள், அனுமான் சென்று தரிசித்தபொழுது இராம னாகவும் சீதையாகவும் காட்சி கொடுத்தனர். அனுமான் அவர்களைத் தரிசித்து அமைதியடைந்தான். அப்படி யென்றால் தெய்வங்கள் பல உண்டா?

பதில்: இந்நிகழ்ச்சியானது பக்தியின் பிரபாவத்தை விளக்கு வதற்கு ஏற்றதாகிறது. அனுமான் யாண்டும் சீதாராம சொரூபத் தின்பால் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒப்படைத்தவன். அத்தகைய அனுமான் பகர்ந்ததாவது: ஸ்ரீநாதனும், ஜானகிநாதனும் ஒன்றே. ஆனால் எனக்கு உற்றவன் ஜானகிநாதன். அவன் அப்படிப் பகர்ந்ததற்குக் காரணம் உண்டு. அவனுக்கு இஷ்ட தெய்வமாயிருந்தது சீதாராமன். கடவுள் ஒருவர். அவருக்கு வடிவங்கள் பல. அதே கடவுள் மாயாரஹித னாய் இருப்பாராகில், அதாவது தன்னிடத்துள்ள சக்தியை ஒதுக்கி வைத்துவிட்டு, முற்றிலும் தன்மயமாயிருப்பாராகில், அவருக்கு நிர்க்குணப் பிரம்மம் என்று பெயர். அந்நிலையில் அவர் ஆண் அல்ல, பெண் அல்ல, அலி அல்ல. இவை யாவுக்கும் அப்பாற்பட்டவர். பின்பு அதே பரவஸ்து மாயா சஹிதன் ஆவாராகில் அவருக்கு வடிவங்கள் பல. வடிவங்கள் பல எடுத்துள்ள நிலையில் அவர் பார்வதி பரமேசுவரனாகவும், லக்ஷ்மிநாராயணனாகவும், சீதாராமனாகவும், சத்தியபாமை கிருஷ்ணனாகவும் இலங்குகின்றார். ஒரே மனிதன் நாடக மேடையின்மீது பலப்பல வேஷங்கள் தரித்துக்கொண்டு நடிக்க முடியும். பரவஸ்து ஒன்று எனினும் வடிவெடுத்துள்ள நிலையில் பலப்பல மூர்த்திகளாக அவர் மிளிர்கின்றார். ஜலம் ஒன்று; அது மழை நீர், ஆற்றுநீர், கிணற்றுநீர், கடல்நீர் இப்படிப் பலப்பல நிலைகளில் உள்ளது. அங்ஙனம் பரவஸ்துவுக்கு உருவங்கள் பல இருக்கின்றன. உருவம் எடுத்துள்ள நிலையில் தெய்வங்கள் பலவென்று நம்முடைய வசதிக்காக நாம் வைத்துக் கொள்கிறோம்.

திரேதாயுகத்தில் அவதரித்தவர்கள் ஸ்ரீராமனும், சீதையும் ஆவார்கள். அந்தச் சீதாராமனுக்குத் தாஸனாக ஆஞ்சநேயன் வாய்த்தான். ஸ்ரீ ராமன் வைகுண்டத்துக்குப் போனபிறகும் ஆஞ்சநேயன் சிரஞ்சீவியாக மண்ணுலகில் வாழ்ந்திருக்கிறான்

என்பது ஐதிகம். பிறகு துவாபர யுகத்தில் கிருஷ்ணன் அவதரித்து வந்தான். அக்கிருஷ்ணன் சத்தியபாமை சமேதனாகத் துவாரகையில் வாழ்ந்திருந்தான். அத்தகைய மூர்த்தியைப்பற்றி அனுமான் கேள்விப்பட்டான். அந்த அனுமானுக்குச் சீதாராம னுக்கு நிகராக இன்னொரு மூர்த்தி இருக்கமுடியுமா என்னும் ஐயம் உண்டாயிற்று. புருஷோத்தமனாக உலகம் போற்றுகிற கிருஷ்ணன் எத்தகைய பாங்குடையவனாக இருக்கிறான் என்பதைப் பார்த்து வருவோம் என்று எண்ணிக்கொண்டு அனுமான் வந்தான். அவன் வந்துகொண்டிருந்ததைக் கிருஷ்ண பரமாத்மா முற்கூட்டியே அறிந்துகொண்டார். கிருஷ்ண வடிவத்தில் தன்னைப் பார்த்தால் அனுமானுக்குத் திருப்தி யுண்டாகாது. தன்னுடைய இஷ்டமூர்த்தியாகிய சீதாராமனைப் பார்த்தால்தான் அவனுக்குப் பரமானந்தம் உண்டாகும். அது பக்தனுடைய போக்கு. தன்னுடைய இஷ்டமூர்த்தியையே பக்தன் யாண்டும் காண விரும்புகிறான். பக்தனொருவன் அத்தகைய பான்மை படைத்திருப்பது கடவுளுக்கு முற்றிலும் ம்மதம். ஆகவே அனுமான் தம்முடைய முன்னிலைக்கு வருவதற்கு முன்பே கிருஷ்ணபரமாத்மா ஸ்ரீ ராமனாக வடிவெடுத்துக் கொண்டார். சத்தியபாமை சீதா தேவியாக வடிவெடுத்துக் கொண்டாள். ஆக, அனுமான் கண்டது தன்னுடைய இஷ்ட மூர்த்தியாகிய சீதாராமன். பக்தன் ஒருவனுடைய விருப்பத்துக் கேற்ற வடிவத்தில் கடவுள் அவனுக்குக் காட்சி கொடுக்கிறார் என்னும் கோட்பாடு இந்நிகழ்ச்சியின் வாயிலாக நிரூபிக்கப்படுகிறது.

கேள்வி: *(682)* கடவுள் பக்தரோடு பேசுவாரா?

பதில்: இந்தக் கேள்விக்குப் பரமஹம்சதேவர் பல தடவை விடைகள் கொடுத்துள்ளார். நாம் ஒருவரோடு ஒருவர் உரையாடுவதுபோன்று கடவுளோடும் உரையாடலாம் என்பது அவருடைய கருத்து. ஆனால் அதற்கேற்ற தகைமையைப் பெறுவது நம் பொறுப்பாகிறது.

பிரபஞ்சத்தில் நாம் கொண்டுள்ள இணக்கங்கள் அனைத்தும் உண்மையில் தெய்வத்தோடு கொண்டுள்ள இணக் கமாம். ஏனென்றால் அவர்தாம் உலகனைத்துமாய் ஆயிருக்கிறார்.

ஆனால் அந்த உண்மை நம் உள்ளத்தில் இடம்பெறுவதில்லை. இது இடம்பெறவேண்டுமானால் உள்ளத்தை நாம் பக்குவப் படுத்தவேண்டும். பிறகு அவரவர் பக்குவத்துக்கேற்ற பிரகாரம் உலகம் பொருள்படுகிறது. நல்லவனுக்கு இவ்வுலகத்திலுள்ள அனைத்தும் நலன் நிறைந்தவைகளாகத் தென்படுகின்றன. கெட்டவனுக்கோ இது கேடுடையதாகத் தென்படுகிறது. பக்தியில் ஊறியிருப்பவனுக்கு அவனுடைய ஆத்ம பரிபாகத்திற்கேற்றவாறு உலகத்திலுள்ள அனைத்தும் தெய்வீகம் நிறைந்தவைகளாகத் தென்படுகின்றன. அதற்குமேல் பரமஹம்சதேவர் போன்ற பக்தர் களுக்கு விக்கிரகங்களும் அருள் நிறைந்தவைகளாகக் காட்சி தருகின்றன. அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பொருத்தமான வைகளும் உண்மையானவைகளுமான விடைகளே வந்தன. ஆக, கடவுள் நம்மோடு பேசுவது நம்முடைய பரிபாகத்தை ஒட்டியதாம். திருத்தொண்டர், திருவிளையாடல் புராணங்களிலும், மஹாபக்த விஜயத்திலும் கடவுள் உரையாடும் நிகழ்ச்சிகளைக் காணலாம். காந்தியடிகள் மௌனவிரதமும், உபவாசமும் இருந்தபோது அந்தராத்மாவில் ஒலித்தது ஆண்டவன் குரலே என்று நம்பினார்.

கேள்வி: *(683)* இக்கலியுகத்தில் ஈசனுடன் நேராகப் பேசமுடியுமா?

பதில்: கலியுகம் என்பது கேடுகள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமாம். இது புராண வரலாறு. மற்று தத்துவ பூர்வமாக ஆராயுமிடத்துக் கலியுகம், துவாபரயுகம், திரேதாயுகம், சத்தியயுகம் அல்லது கிருதயுகம் ஆகிய நான்கும் அவரவர் மனப் பண்பாட்டின் விளைவாம். இக்கலியுகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் வாழ்ந்து வந்தது கிருதயுகம். அவர் அம்பிகையுடன் பேசிய பேச்சுக்களே பல நூல்களாக வடிவெடுத்து உள்ளன. நம் போன்ற சாதாரண மனிதர்கள் பரமஹம்சதேவர் படைத் திருந்த தகைமையைப் படையாதிருந்தபோதிலும் அவர் அம்பிகையின் அருளைப் பெறுதற்கு அம்பிகையோடு கொண் டிருந்த இணக்கத்தை நாம் நன்கு கடைப்பிடிக்கலாம். அத்துடன் அம்பிகையுடன் அவர் கொண்டிருந்த இணக்கத்தையும் நாம் பின்பற்றலாம். இத்தகைய சன்மார்க்கங்களை ஊக்கத்துடனும்

உள்ளன்போடும் கடைப்பிடிக்கின்றவர்கள் பாக்கியவான் களேயாம்.

கேள்வி: *(684)* கடவுளைப் போற்றுவோரால் பக்தி வளர்கிறதா? அல்லது தூற்றுவோரால் பக்தி வளர்கிறதா?

பதில்: நல்லது ஒன்றை நிலைநாட்டுதற்கு இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று உடன்பாட்டு முறை. மற்றது எதிர்மறை முறை. உடன்பாடு, எதிர்மறை ஆகிய இரண்டும் நல்லதை நிலைநாட்டுதற்கும் கெட்டதை நிலைநாட்டுதற்கும் உதவுகின்றன. இரண்டு சான்றுகள் எடுத்துக்கொள்வோம். பிரஹலாதன் பகவானைப் போற்றினான். அவனுடைய தந்தை ஹிரண்யகசிபு பகவானைத் தூற்றினான். ஹிரண்யகசிபுவின் ஆட்சியில் அவனுடைய மைந்தனாகிய பிரஹலாதன் ஒருவன் நீங்கலாக ஏனைய தைத்யர்கள் அனைவரும் பரமனுக்கு விரோதிகளாக இருந்தார்கள். தங்களுடைய வெறுப்பை அவர்கள் தங்கள் செயலில் வெளிப்படுத்தினார்கள். பக்தர்களைத் துன்புறுத்துவது, வழிபாட்டுக்கு விக்னம் விளைவிப்பது, பகவானுக்கு விரோதமாகப் பிரகடனம் பண்ணுவது - இப்படி எதிர்மறை முறையைக் கையாண்டார்கள். அதன் வாயிலாக அவர்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டையும் அழிவையும் தேடிக்கொண்டார்கள். ஆக, நல்லதை நிராகரிக்கிறவர்கள் அதன் வாயிலாகத் தங்களுக்குக் கேடு சூழ்வதால் நலனுடைய சிறப்பை எதிர்மறையில் விளக்கினார்கள். (Sinners are teachers in disguise) பாபிகள் பாபத்தின் பாங்கை எதிர்மறையில் விளக்குகிறார்கள்' என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். ஆக, ஹிரண்ய கசிபுவின் கூட்டம் பக்தியின் நலனை எதிர்த்து அழிந்து போவதின் வாயிலாகப் பாபம் மனிதனுடைய முன்னேற்றத்துக்கு உதவாது என்று விளக்கினார்கள். பின்பு பிரஹலாதனோ பிறந்தது முதற்கொண்டு தீவிரமாகப் பக்தியில் ஈடுபட்டான். அவனுக்கு வந்த விக்னங்களையெல்லாம் அவன் விக்னமாகக் கருதவில்லை. பகவானிடமிருந்து தனக்கு வந்த அருள் பிரசாத மென்றே அல்லல்களை அவன் பொருள்படுத்தினான். அவனைக் கொல்லுதற்குத் தந்தை கொடிய விஷத்தை வழங்கினான். அதைப் பகவத் பிரசாதமாகப் பிரஹலாதன் ஏற்றான். விஷம்

அவனுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. பக்தியின் வல்லமைக்கு அது எடுத்துக்காட்டு ஆகிறது.

இனி, தசரத ராமனுடைய ஜீவிதத்தை ஆராய்ந்து பார்ப்போம். அவன் பரமாத்மாவின் அவதாரமூர்த்தி. அவ்வுண்மை அயோத்திவாசிகள் எல்லோருக்கும் தெரியாது. ஆயினும் அவர்கள் எல்லாரும் ஸ்ரீராமனிடம் பேரன்பு பூண்டிருந்தனர். அனைவருடைய அன்புக்கு இலக்காயிருந்த அக்குமாரனிடம் கைகேயிக்குத் திடீரென்று வெறுப்பு வந்துவிட்டது. அந்த வெறுப்பை அவள் தன் செயலின்மூலம் நிரூபித்தாள். தனக்குக் கணவன் கொடுத்திருந்த இரண்டு வரங்களுள் ஒன்றன் விளைவாக அவனை அன்றைக்கே காட்டுக்கு ஓட்டிவிடவேண்டுமென்று தசரதனிடம் வற்புறுத்தினாள். அவள் செய்தது பக்திக்கு எதிர் மறை நடவடிக்கை. ஆனால் அதன் விளைவு என்ன ஆயிற்று? மன்னனுக்கும் மக்கள் எல்லோர்க்கும் ஸ்ரீ ராமனிடம் அன்பு பன்மடங்கு அதிகரித்தது. துரத்தி ஓட்டுதல் வாயிலாகப் பக்தியை அவள் வளர்த்தாள். அவளுடைய மைந்தனாகிய பரதனுக்கு ராமபக்தி பன்மடங்கு அதிகரித்ததற்குக் காரணம் தாய் அவனைத் தூற்றி வெளியே அனுப்பியதின் விளைவாம். 'தெய்வம் இகழேல்' என்பது கோட்பாடு. ஆனால் தெய்வத்தை இகழுகிறவர்களும் எதிர்ப்பவர்களும் மறைமுகமாகத் தெய்வ பக்தியை வளர்க்கிறார்கள். கைகேயி அதற்குச் சான்று ஆகிறாள். சமீபத்தில் ஒரு நிகழ்ச்சி நேர்ந்தது. கொஞ்ச காலத்துக்கு முன்பு கணபதி விக்கிரகங்களையெல்லாம் எடுத்து நீர்நிலைக்கு அருகே குப்புறப் போட்டுத் துணி துவைக்கவேண்டும் என்ற பிரச்சாரம் வந்தது. ஆனால் அதன் விளைவு என்ன ஆயிற்று? வழிபாடு இன்றிச் சும்மாகிடந்த கணபதியின் விக்கிரகங்களுக்கெல்லாம் புதிய புதிய வந்தனை வழிபாடுகள் வடிவெடுக்கலாயின. நல்லதைச் செய்ய வேண்டாம் என்று தடுத்தால் நல்லார் அதை ஊக்கத்துடன் செய்கின்றனர்.

கடவுளைப் போற்றுகிறவர்கள் ஒரு போக்கில் கடவுளின் மகிமையை வெளிப்படுத்துகின்றனர். கடவுளைத் தூற்றுகின்றவர்கள் அவருடைய மகிமையை மற்றொருபோக்கில் வியாபகப் படுத்துகின்றனர். தூற்றுவதால் கடவுளின் மகிமை ஒருபொழுதும் குறைவதில்லை. உச்சிவேளை சூரியனை நோக்கி எச்சிலைத்

துப்பினால் சூரியனுக்கு ஒருகேடும் வருவதில்லை. அங்ஙனம் கடவுளை இகழ்வதால் அவருடைய மகிமை மங்குவதில்லை. அது யாண்டும் தன்மயமாயிருக்கிறது. தூற்றுதலானது ஒரு போக்கில் மற்றவர்கள் உள்ளத்தில் மறைந்துகிடக்கிற பக்தியை வளர்க்கிறது.

கேள்வி: *(685)* இறைவனைப் பகைவனாக எண்ணியவர்களும் அவனை அடைவார்களானால் நாஸ்திகர்கள் கூட எளிதில் கடவுளை அடையலாமோ?

பதில்: மனிதன் மனதில் எதை ஆழ்ந்து எண்ணுகின்றானோ அந்த மயமாக அவன் விரைவில் அல்லது நாளடைவில் மாறியமைகிறான். மனிதனுக்குச் சிருஷ்டி கர்த்தாவாக அமைந் திருப்பது அவனுடைய மனது. மனதோ எண்ணம் மயமாகவும் உணர்ச்சி மயமாகவும் உள்ளது. அது சதா எண்ணிக்கொண்டிருக் கிறது; அல்லது உணர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது. எதைக் குறித்து அது எண்ணுகிறதோ எண்ணுகிற வேளையில் அந்த எண்ணம் மயமாக மனது இருக்கிறது. மனது எத்தகையதாக இருக்கிறதோ அத்தகையதாக அந்த மனதைப் படைத்துள்ள மனிதனும் இருக்கிறான். உணர்ச்சிக்கும் அதுவே கோட்பாடாம். எண்ணமும் உணர்ச்சியும் மேலானவைகளாய் இருக்குமாகில் மனிதன் மேன்மையுறுகிறான்; அவைகள் புல்லியவைகளாய் இருக்குமாகில் மனிதனும் புன்மையுறுகிறான்.

மானுடன் ஒருவன் தன்னுடைய நண்பனைப் பற்றி நினைப்பதைவிட அதிகமாகத் தன்னுடைய பகைவனைப்பற்றி நினைக்கிறான். பகைவனைப் பற்றிய நினைப்பிலும் பேச்சிலும் ஆர்வம் அதிகமாக அமைந்திருக்கிறது. பகைவனைப் பற்றிய உணர்ச்சி வெறுப்பு ஆகிறது. நண்பனைப் பற்றிய உணர்ச்சி விருப்பு ஆகிறது. பெரும்பாலும் நண்பனைப் பற்றிய விருப்பத்தை விடப் பகைவனைப் பற்றிய வெறுப்புக்கே வேகம் அதிகம்.

ஒரு மனிதன் மீது வெறுப்புக் கொள்ளுதற்கேற்ற காரணம் வந்தமையவேண்டும். காரணமில்லாது யாரையும் மனிதன் வெறுப்பதில்லை. பகைவன் தனக்கு இன்னின்ன பாங்குகளில் தீங்கு செய்திருக்கிறான் என்னும் புள்ளிவிபரங்கள் மனிதனுக்கு எட்டுகின்றன. பகைவன் செய்த தீங்கை முன்னிட்டு அவன்மீது

மனிதன் வெறுப்பை வளர்க்கிறான். பகைவன் இன்னின்ன பாங்குகளிலே பொல்லாதவன் என்று அவனைக் குறித்து முடிவுகட்டுவது அவனைப்பற்றிய ஞானமாகும். ஒருவனைப் பற்றி நல்லவன் என்று அறிவதும் ஞானம், கெட்டவன் என்று அறிவதும் ஞானம். ஈண்டு ஞானம் என்னும் சொல் பரஞானத்தைக் குறிப்பதன்று. அது உலக வியவகார ஞானமாம்.

மானுடன் ஒருவன் இறைவனோடு பகைமை கொள்ளுதற்கு முன்பு அதற்கேற்ற காரணத்தை மனதில் ஓர்மைப் படுத்துகிறான். இன்னின்ன காரணங்களை முன்னிட்டுத் தான் கடவுளுக்குப் பகைவன் ஆகவேண்டுமென்று அவன் புள்ளி போடுகிறான். அப்படிப் புள்ளி போடுவதெல்லாம் இறைவனைப் பற்றிய அறிவு அல்லது ஞானமாகிறது. இன்னின்ன பாங்குகளிலே இறைவன் குணக்கேடன் என்னும் அறிவை அடிப்படையாக வைத்துக்கொண்டு இறைவனை அவன் சினந்து கொள்ளுகிறான்.

சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். கம்சனுக்குக் கிருஷ்ணன் மீது சகிக்கமுடியாத வெறுப்பு. கிருஷ்ணனாக வடிவெடுத்து வந்திருக்கிற நாராயணன் தனக்கு எவ்விதத்திலும் ஒவ்வாதவன் என்னும் எண்ணத்தில் ஊறியவன் கம்சன். ஆதலால் கம்சனுக்குக் கிருஷ்ணனைப்பற்றிய எதிர்மறைப் புள்ளிவிபரங்களும், எதிர்மறைக் கருத்துக்களும், உணர்ச்சிகளும் உள்ளத்தில் ஊறிக் கிடந்தன. அது கிருஷ்ணனைப் பற்றிய எதிர்மறை ஞானமாகும். ஆதலால் வெறுப்பு ஓயாது அவனுடைய உள்ளத்தில் உருவெடுத்துக்கொண்டிருந்தது. கிருஷ்ணனை வெறுப்பதன் வாயிலாகக் கிருஷ்ண சிந்தனை சர்வ காலமும் அவனுடைய சிந்தையில் ஊசலாடிக்கொண்டிருந்தது. அந்தச் சிந்தனை வலுத்தபொழுது கம்சன் எங்குத் திரும்பி எதைப் பார்த்தாலும் அது கிருஷ்ணனாகக் காட்சி கொடுத்தது. ஆதலால் யோகியர்களுக் கெட்டாத கிருஷ்ண ஸ்மரணை கம்சனுக்கு வாய்த்தது. அது வெறுப்பின் விளைவு. ஆதலால் வெறுக்கும் பாங்கு உன்னிடத்தில் இருக்குமாகில் நீ கடவுளைக் குறித்து வெறுப்புக்கொள். அது உனக்குப் பெருநலன் விளைவிக்கும் என்னும் கோட்பாடு வந்துள்ளது. கடவுளை வெறுப்பதன் வாயிலாகவும் கடவுளை அடையலாம் என்னும் கோட்பாடு மாறாத உண்மை.

இனி, நாஸ்திகனைப் பற்றி ஆராய்வோம். கடவுளைப் பற்றி ஒன்றும் அறியாதவன் நாஸ்திகன். கடவுளைப்பற்றி ஒன்றுமே அறிந்துகொள்ள விருப்பம் இல்லாதவன் நாஸ்திகன். "கடவுள் என்று ஒரு பொருள் இருக்குமாகில் அது தன்போக்கில் இருந்துகொள்ளட்டும். நான் என்போக்கில் இருந்து கொள்கிறேன். அதற்கும் எனக்கும் யாதொரு தொடர்பும் இல்லை." இது நாஸ்திகனுடைய மனப்பான்மை. மனிதன் எண்ணியதை எண்ணியாங்கு எய்துகிறான் என்றால் கடவுளைப் பற்றி ஒன்றுமே எண்ணாதவன், அதைக் குறித்துச் சிந்தனை கொள் ளாதவன் அதை எப்படி அடையமுடியும்? அவன் தன்னைப் பற்றியே எண்ணித் தன்னுடைய ஜீவ வியக்தியை வளர்க்கிறான். ஆதலால் நாஸ்திகன் இறைவனை அடையமாட்டான்.

கேள்வி: *(686)* பக்தியில் ஈடுபடுவோர்க்குப் பெரும் சோதனைகள் ஏற்படுவது ஏன்?

பதில்: இக்கேள்விக்கு விடையாகக் கல்வி உலகின் பாங்கைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். கற்றிருக்கும் கல்வியைச் சோதனை பண்ணிப்பார்ப்பது கல்வி உலகின் திட்டமாகும். முதல் வகுப்பில் படிக்கிறவனுக்கு அவனுடைய தரத்துக் கேற்றபடி பரீட்சை அல்லது சோதனை. பள்ளி இறுதி வகுப்பில் படிக்கிறவனுக்கு ஏற்றவாறு பரீட்சை அல்லது சோதனை. கல்லூரியில் படிக்கிறவர்களுக்குத் தரத்துக்கேற்றவாறு சோதனை. ஏதேனும் ஒரு கலைத்துறையில் ஆழ்ந்து படிக்கிறவர் களுக்கேற்றவாறு சோதனை அமைகிறது. இத்துறையில் கடின மான சோதனை எதற்கு என்னும் கேள்வியைத் தலைமாணாக் கர்கள் கேட்கமாட்டார்கள். கடினமான சோதனைகளை அன்னவர்கள் வரவேற்பார்கள். பக்தி உலகின் பாங்கும் அத்தகையது. பக்தி பண்ணுகிறவனுக்கு உலகிலுள்ள இன்பத்தை நாடவும், துன்பத்தைத் தவிர்க்கவும் நேரமில்லை. அவன் பக்தியை வளர்த்துக்கொண்டே போகிறான்.

மற்றொரு சான்று, இரும்பின் தாது மண்ணிலிருந்து வெட்டியெடுக்கப்படுகிறது. மண்கலந்த இரும்பாக அது இருக் கிறது. உலையிலிட்டு அதை உருக்குமளவு மண் முதலிய மாசுகள் அகன்றுபோய் விடுகின்றன. இனி, இரும்பில் பலபடித்

தரங்கள் இருக்கின்றன. மேலான இரும்பு அமைப்பதற்கு அதை அதிகம் உருக்கியாகவேண்டும். இரும்பின் மேலான நிலை உருக்கு என்று இயம்பப்பெறுகிறது. இரும்பை உருக்காக ஆக்குவதற்கு ஏற்றவாறு அதை உலையிலிட்டு உருக்கவேண்டும். பக்தனுடைய பாங்கும் அத்தகையது. சோதனை அதிகரிப்பதற்கு ஏற்ப அவனுடைய பக்தி மேலோங்குகிறது. உலகப்பற்றுடையவன் பக்தி பண்ணுவதால் தனக்குக் கஷ்டம் வரலாகாது என்று எண்ணுகிறான். கஷ்டம் வந்தால் கடவுளை நொந்து கொள்கிறான். பெரும்பாலும் பக்தி பண்ணுவதையும் அவன் நிறுத்தி விடுகிறான். உண்மையான பக்தனுக்கோ உலகில் எதுவும் கஷ்டமாகத் தென்படுவதில்லை. உலகத்தவர் துன்பமாகக் கருதுகின்றவைகளை, மெய்யன்பன் துன்பமாகக் கருதுவதில்லை. அப்பர் சுவாமிகளுக்குத் துன்பத்துக்குமேல் துன்பம் வந்தது. நம்முடைய காட்சியில் அது துன்பம். அவருடைய அனுபவத்தில், "இன்பமே எந்நாளும் துன்பமில்லை." பக்த ராஜனாகிய பிரஹலாதனுக்கு வந்த துன்பமும் சோதனையும் வேறு யாருக்கும் வந்ததில்லை. ஆனால் பிரஹலாதனோ துன்பத்தைத் துன்பமாகப் பொருள்படுத்தவில்லை. தான் வணங்கும் தெய்வமாகிய பரமன் அந்தந்த விதங்களில் தன்னோடு விளையாடிக் கொண்டிருந்ததாக அவன் உணர்ந்தான். ஆதலால் பக்தியில் ஈடுபடுகிறவர்களுக்குச் சோதனை ஏற்படுவது ஏன் என்னும் கேள்வியை அதில் ஈடுபடாத நம்மவர்கள் கேட்கிறோம். மற்று பக்தியில் மூழ்கியிருப்பவர்களுக்குப் பக்தி ஒன்றுதான் ஓங்கி நிற்கிறது. எச்செயலும் துன்பமாக அவர்களுக்குத் தென்படுவதில்லை. அத்தகைய அதீத நிலையே அவர்கள் படைத்திருக்கிற பக்திக்கு விளக்கமாகிறது. ✪

52. குரு பக்தி

கேள்வி: *(687)* குரு இல்லாமல் ஞானம் பெற இயலாதா?

பதில்: ஞானம் என்பது பரந்த சொல். ஏதேதோ விஷயங்களைப் பற்றி ஏதேதோ ஞானங்கள் ஏராளமாக இருக்கின்றன. கணக்குப் போடுதலில் சில பகுதிகளை யூகத்தால் அவரவர் தமக்குத்தாமே அறிந்துகொள்ள முடியும். மற்றும் சில பகுதிகளைக் குருவின் துணைகொண்டு அறிந்துகொள்வதுதான் சாத்தியமாகிறது. மொழியைப் பற்றிய ஞானத்தையும், கணித ஞானத்தையும் குருவின் துணையில்லாது பெறமுடியாது. சில கலைஞானங்களை யாராலும் புகட்டப்பெறாமல் தாங்களாகவே அறிந்துகொள்ளும் திறமை சிலரிடம் இருக்கிறது. ஆனால் பெரும்பான்மையோருக்குக் குருவின் உதவி அவசியமாகிறது. ஞானங்களுள் முடிந்த ஞானம் ஆத்ம ஞானமாகிறது. ஆத்ம ஞானத்துக்குச் சாதகன் ஒருவன் தன்னைப் பக்குவப்படுத்துவதற்கான முறையைக் குரு புகட்டுகிறார். அவர் புகட்டியபடி தன்னைப் பக்குவப்படுத்தினால் ஆத்ம ஞானம் தானாக வந்தமைகிறது. தான் உடல் அன்று, உடலுக்கு அப்பாலுள்ள ஆத்ம சொரூபமே தன்னுடைய நிஜசொரூபம் என்னும் உண்மை தனக்குத்தானே அனுபவத்தில் வருகிறது. அது பிறரிடமிருந்து பெறுவதன்று.

இராமதீர்த்த சுவாமிகள், ஸ்ரீரமணமகரிஷி போன்ற பெருமக்கள் குரு இல்லாமலேயே பெரிய நிலைக்குப் போக முடிந்தது என்றால் அதற்கேற்ற பக்குவம் அவர்களிடம் இருந்தது. அந்த மனப்பக்குவமும் பூர்வ ஜன்மத்தில் குருவின் துணையோடு ஆத்ம சாதனம் பண்ணியதன் விளைவாகத்தான் இருக்க வேண்டும். பாரமார்த்திக வாழ்வு என்பது மலர்தூவிய பாதையில்

நடப்பது போன்றதன்று. அது கூர்மையான க்ஷவரக் கத்தியில் நடப்பதற்கு நிகர். எந்த நேரமும் வழுவி வீழ்ச்சியடைய வாய்ப்புண்டு. ஆகவே குருவின் துணை யாண்டும் தேவை.

கேள்வி: *(688)* குரு அவசியம் என்றால் அவரைத் தேடி அடைய வேண்டியதா? அப்படியென்றால் இவரைக் குருவாக அடையலாம், இவரை அடையக்கூடாது என்று நாம் எதைக்கொண்டு நிர்ணயிப்பது? அல்லது நமக்குப் பரிபாகம் வந்தவுடன் ஞான குரு ஒருவர் தானாக ஏற்பட்டு ஆத்ம ஞானத்தை உபதேசிப்பாரா?

பதில்: குருவைத்தேடி நாம் அலையவேண்டியதில்லை. நல்வாழ்வு வாழவேண்டும் என்று ஊக்கங்கொண்டிருக்க வேண்டும். தக்க தருணத்தில் குருவை நாம் அடையவேண்டிய அவசியம் ஏற்படும்பொழுது சர்வேசுவரனே அச்செயலை நிறைவேற்றி வைப்பார். உணவு பசியைப் போக்குவது போன்று யார் நமது வாழ்வைச் செப்பனிடுகின்றாரோ அத்தகையவரைச் செப்பனிடுதல் என்னும் செயல் நிறைவேறியான பிறகு குரு என்று அங்கீகரித்துக் கொள்ளலாம். விவேகானந்த சுவாமிகள் அதைத்தான் செய்தார்.

கேள்வி: *(689)* குரு கூறுவதை ஏற்றுக் கொள்; குரு கூறியதாயினும் ஆராய்ந்து ஏற்றுக்கொள். இவற்றுள் எது பொருத்தமுடையது?

பதில்: இவ்விரண்டு மனப்பான்மைகளும் ஒன்றோடொன்று முரண்படுகின்றன. ஆயினும் இவைகளுள் மேலாம் கருத்துக்கள் புதைந்திருக்கின்றன. சிஷ்யனொருவனுக்குக் குரு பக்தி இன்றியமையாதது. குரு பக்தியில் மேலோங்குதற்கு ஏற்பச் சிஷ்யன் மனபரிபாகம் அடைகிறான். குரு கூறுவதை அப்படியே ஏற்றுக் கொள்ளுவது பக்தி மார்க்கத்தில் செல்லும் ஒருவனுடைய பான்மையாகும். தத்துவவிசாரம் பண்ணுவது ஞானமார்க்கத்தில் செல்லுபவனுடைய பான்மையாகும். தத்துவ விசாரம் பண்ணுகிறவனுக்கு "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது கோட்பாடு. அதைத் தொடர்ந்து "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்

அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் கோட்பாடும் வந்துள்ளது. பகரப்பெறுகிற கூற்று பரமனிடத்திருந்து வந்திருந்தாலும் அதை ஆராய்ச்சி பண்ணுதலில் இழுக்கு ஒன்றுமில்லை. முறையாக ஆராய்ச்சி பண்ணுவதற்கேற்ப அறிவு தெளிவுறுகிறது. ஆனால் அந்த ஆராய்ச்சி பணிவுடன் கூடியதாய் இருக்கவேண்டும். மற்றவர்களைவிடத் தான் அறிவில் சிறந்தவன் என்னும் செருக்கு இருக்கலாகாது. செருக்குற்று இருப்பவனுக்கு நுண்ணறிவு வாய்ப்பதில்லை. மெய்ப்பொருளை ஆராய்ச்சி பண்ணுதற்கேற்ப அறிவு தெளிவுறுகிறது என்னும் எண்ணத் துடன் ஆராய்தல் வேண்டும். அப்படி ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஆன்றோர்கள் கூற்றில் மெய்ப்பொருள் ஒன்றே வெளியாகும். அதை ஆராய்வதன் வாயிலாக ஆத்மசாதகன் தன்னுடைய அறிவைத் தீட்டுகிறான். குரு பக்தியையும் அவன் வளர்க்கிறான். பணிவுடனும் ஊக்கத்துடனும் அத்தகைய ஆராய்ச்சியில் பிரவேசிப்பது உசிதம். தேகப்பயிற்சி பண்ணுதற்கு ஏற்ப உடல் உறுதிபெறுகிறது. அங்ஙனம் முறையாகத் தத்துவ ஆராய்ச்சி பண்ணுதற்கு ஏற்ப விவேகமும் ஓங்குகிறது. ஆதலால் சாஸ்திரங்களின் உட்பொருளையும் குரு வாக்கியத்தின் உட்பொருளையும் அறிவுத்தெளிவின் பொருட்டு ஆராய்ச்சி பண்ணுவது நல்ல ஆத்மசாதனமாகும். ஆராய்ச்சி ஓங்குதற்கு ஏற்ப ஆன்றோர் கூற்றில் பரந்தபொருள் புதைந்து கிடப்பது புலப்படும்.

பக்தனொருவன் ஆராய்ச்சியில் இறங்குவதில்லை. திட நம்பிக்கை பூணுவது அவனுடைய பாங்கு. குரு வாக்கியத்தில் அவன் முழு விசுவாசம் வைக்கிறான். குரு இயம்பியது தத்துவத்துக்கு ஒத்ததா, ஒவ்வாததா என்னும் ஐயம் அவன் உள்ளத்தில் எழுவதில்லை. ஒருவேளை குரு கூறியது தத்து வத்துக்கு ஒவ்வாததாக இருக்கலாம். அப்படியிருந்தும் குரு வாக்கியத்தை அவன் உறுதியாகக் கடைப்பிடிக்கிறான். தன்னு டைய சொந்தச் சிந்தனைக்கு அவன் சிறிதேனும் இடம் கொடுப்பதில்லை. குருமூர்த்தியின் சொரூபத்தில் தன்னை முற்றிலும் ஒப்படைத்துவிடுகிறான். ஆணையிடுவதன் வாயிலாக அல்லது புகட்டுவதன் வாயிலாகக் குரு நன்றே செய்யலாம், அல்லது தீமை செய்யலாம். தீமையைத் தீமையாகச் சிஷ்யன்

கருதுவதில்லை. குரு பகர்வது எதுவாயினும் அதில் முழு விசுவாசம் வைத்துச் சிஷ்யன் ஏற்றுக்கொள்கிறான். குருவின் கட்டளைப்படியே நடந்துகொள்கிறான். விசுவாசத்தின் வலிவால் சிஷ்யன் நலனையே பெறுகிறான். பூரண விசுவாசம் வைத்துக் கெட்டுப்போன சிஷ்யன் இல்லை. ஆதலால் விசுவாசத்தின் உச்ச நிலையும், ஆராய்ச்சியின் உச்ச நிலையும் ஒரே குறியின்கண் சாதகனை எடுத்துச் செல்கின்றன. விசுவாசமும் பகுத்தறிவும் முரண்படுபவைகள் போன்று தென்படுகின்றன. இரண்டும் வல்லமை வாய்ந்தவைகள். குறியை அடைவதற்கு இரண்டும் உற்ற உபாயங்கள். அரைகுறை விசுவாசமும், செருக்குடன் கூடிய ஆராய்ச்சியும் சாதகனை லட்சியத்தின்கண் எடுத்துச் செல்லமாட்டா. பண்பட்ட நிலையிலுள்ள பக்தன் குரு வாக்கியத்தில் விசுவாசம் வைத்து மேன்மையுற்று மிளிர்கிறான். தெள்ளியெடுத்த நுண்ணறிவு படைத்துள்ள ஞானசாதகன் பிழைபோகாது மெய்ப்பொருளை அடையப்பெறுகிறான். ஆதலால் விசுவாசமும், நுண்ணறிவும் சாதகனை நல்நிலையின்கண் எடுத்துச்செல்லும் நல்ல கருவிகளாம். சாதகர்களுள் ஒருசிலர் பக்தி விசுவாசத்தையும் ஞர்னவிசாரத்தையும் இணைத்துப் பயன்படுத்துபவர்கள் இருக்கின்றனர். குரு வாக்கியத்தை ஆப்த வாக்கியமாக ஏற்பது ஒருபக்கம் இடம்பெறுகிறது. அந்த வாக்கியத்தில் புதைந்துள்ள உட்பொருளை முறையாகச் சிந்தனை பண்ணுவது மற்றொரு பக்கம் நிகழ்கிறது. இந்த முயற்சி ஞானம் கலந்த பக்தி என்னும் பெயர் பெறுகிறது.

கேள்வி: *(690)* குருவின் உபதேசப்படி நடக்க நமக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை விட்டுவிட்டு வேறு குருவினிடம் உபதேசம் பெறலாமா?

பதில்: குரு ஸ்தானத்தில் இருக்க விரும்புகின்றவர்களை வேண்டியவாறு காணலாம், ஆனால் சிஷ்யர்களாக இருக்க விரும்புகின்றவர்களைக் காண்பது அரிது என்று ஸ்ரீ ராம கிருஷ்ணர் பகர்ந்திருக்கிறார். தாம் குரு ஸ்தானத்தில் இருக்க அவர் அறவே மறுத்துவிட்டார். கடவுள் ஒருவர்தான் உயிர்களுக்கெல்லாம் குரு என்று அவர் பகர்ந்திருக்கிறார். நெடுநாள் ஒருவருடன் பழகி அவருடைய பாங்கு தன்னுடைய

முன்னேற்றத்துக்கு முற்றிலும் பொருத்தமானதாய் இருந்தால் அவரைக் குருவாக ஏற்றுக்கொள்ளலாம். அப்படியல்லாது தகுதியற்ற ஒருவரை அவசரமாகக் குருவாக ஏற்றுக் கொண்டபின் அவருடைய தன்மையைத் தெரிந்துகொண்டால் பிறகு அவரை விட்டு விலகிக் கொள்ளுதல் ஒன்றே உத்தமமானது. குருபக்தி என்கின்ற பெயரால் தகவில்லாத ஒருவரைப் பின்பற்றுவதால் குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போன்று இருவருக்கும் தீங்கு விளையும். நல்ல ஆத்ம சாதகர்கள் கடவுளையே குருவாக வைத்துக்கொண்டு மற்ற நன்மக்களையெல்லாம் உபகுருக்களாக ஏற்றுக் கொள்வது முற்றிலும் பொருத்தமானது. அப்படிச் செய்தால் ஏமாற்றத்துக்கோ, வழிதவறிப் போவதற்கோ இடம் இராது.

கேள்வி: *(691)* மெய்க்குரு ஒருவருடைய உபதேசம் நேரடியாக இல்லாமலேயே நாமஜபம், வேதாந்த விசாரம், தூய வாழ்க்கை முதலியவைகளாலேயே ஒருவர் ஆத்ம ஞானத்தை அடைவது சாத்தியம்தானா?

பதில்: பெரியோர்களுடைய பாரமார்த்திக வாழ்வினின்று இக்கேள்விக்குப் பொருத்தமான விடையைப் பெறலாம். எரிகின்ற ஒரு தீபத்திலிருந்து மற்றொரு தீபத்தை ஏற்றி வைக்கலாம். அல்லது இரண்டு மரக்குச்சிகளை ஒன்றன்மீது ஒன்றை விரைந்து உரைத்துத் தீயை உண்டுபண்ணலாம். தீயைப் பெறுதற்கு இரண்டு முறைகளும் சரியானவைகளேயாம். அதே பாங்கில் ஞான குரு ஒருவரிடமிருந்து பரிபாகம் அடைந்துள்ள சிஷ்யன் ஞானத்தைப் பெறலாம். குரு ஸ்தானத்தில் இருப்ப வரிடம் ஞானம் இல்லாது போய்விட்டாலோ, அல்லது சிஷ்யன் சரியான பரிபக்குவம் அடையாதிருந்தாலோ ஞானத்தைக் குரு சிஷ்ய பரம்பரை முறையிலே வளர்க்க முடியாது.

மரக்கட்டைகளை உரைத்துத் தீயை உண்டுபண்ணுவது போன்று சுயப் பிரயத்தனத்தினாலேயே ஒருவன் ஞானத்தைப் பெறலாம். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், இராமதீர்த்த சுவாமிகள், ஸ்ரீரமணமஹரிஷி ஆகிய இக்காலத்திய பெரியவர்களையே இதற்குச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். குருவின் துணை யின்றி நேர்மையான பாரமார்த்திக வாழ்வினின்று இவர்கள்

ஞானத்தைப் பெற்றார்கள். சுயப்பிரயத்தனத்தால் தெய்வதரிசனம் அடையப்பெற்ற பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் சில குருமார்களை ஒருவர்பின் ஒருவராக ஏற்று அவர்கள் சொற்படி நடந்து விதவிதமான அனுபவங்களைப் பெற்றார். குருவைத் தேடி வீணே அலைந்து திரியவேண்டாம். சாதனத்தை முறையாகச் செய்துகொண்டுபோ. அப்படி முறையாகச் செய்து கொண்டு போகின்றவனுக்குக் கடவுள் கிருபையும் குருவின் துணையும் தாமே வந்தமைகின்றன. இக்கோட்பாடுதான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஜீவியத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடமாகும்.

கேள்வி: *(692)* ஞானகுருவை நாடிவரும் சிஷ்யனுடைய குலம், கோத்திரம் இவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகே அவனை ஏற்பதா புறக்கணிப்பதா என்ற தீர்மானத் திற்கு வருவார் குரு என்று பண்டைய நூல்களினின்றும் அறிகிறோம். பரமஹம்சதேவரோ சிஷ்யருடைய குலம், கோத்திரத்தை அதிகமாக விசாரித்து அறிய முற்படவில்லை. அவர் பண்டை முறையைக் கையாளாது போனதில் தத்துவம் ஏதேனும் உள்ளதோ?

பதில்: பண்டைக்காலத்தில் ஏற்பட்டிருந்த குரு சிஷ்ய இணக்கத்தில் சிறப்பு ஒன்றிருந்தது. நல்ல குடியில் பிறந்து நல்ல பாங்கில் பெற்றோர்களிடம் முதலில் பெறவேண்டிய பயிற்சிகளைப் பெற்றிருந்தவனையே குரு ஒருவர் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். அது அக்காலத்திலிருந்த பொதுவிதி ஆகும். எனினும் அவ்விதிக்கு விலக்கு அக்காலத்திலும் இருந்து வந்திருக் கிறது. சிஷ்யன் ஒருவன் முற்றிலும் தகுதி வாய்ந்தவன் என் பதை குரு அறிந்து கொண்டால்; பின்பு அவனுடைய குலம், கோத்திரம் முதலியவைகளையெல்லாம் பொருள்படுத்தாதும் அவனை மாணாக்கனாக ஏற்றுக்கொள்வதுண்டு. அதற்குச் சான்று ஒன்று சொல்லலாம். ஜாபாலா என்னும் பணிப்பெண் ஒருத்தி யார் யார் வீட்டிலேயோ வேலைக்காரியாக இருந்து ஜீவித்து வந்தாள். அவளுக்கு மகன் ஒருவன் பிறந்தான். அவனுக்குச் சத்தியகாமன் என்னும் பெயர் சூட்டப்பட்டது. தகுந்த குரு ஒருவரிடம் போய்ச் சிஷ்யன் ஆக அவன் விரும்பினான்.

ஆதலால் தாயிடம் தன் குலம், கோத்திரத்தைப் பற்றிக் கேட்டான். அவள் விஷயத்தை உள்ளபடி சொல்லிவிட்டாள். உண்மையில் அவனுக்குப் பிதா யார் என்பதை அவள் சொல்லமுடியாது என்றும் பலருடன் கூடித் தான் வாழ்ந்திருந்த தாகவும் அவள் விளக்கிவிட்டாள். சத்தியகாமன் குருவிடம் போய்த் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி விண்ணப்பித்தான். அவனுடைய வரலாற்றை வெளியிடும்படி குரு கேட்டார். தாய் சொன்னதை அப்படியே அவனும் சொல்லிவிட்டான். தன்னையே அவமானப்படுத்திக்கொள்ளுகிற பாங்கில் உண்மை பேசும் துணிவு அந்த இளைஞனிடம் இருந்ததைக் குரு மிக மெச்சினார். சத்தியத்தில் அவன் கொண்டிருந்த உறுதியான விசுவாசத்தை முன்னிட்டு அவனை சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். எனவே மனபரிபாகத்தை முன்னிட்டு ஒருவனைச் சிஷ்யனாக ஏற்றுக்கொள்கிற பழக்கம் எக்காலத்திலும் இருந்து வந்திருக்கிறது. ஆனால் பொதுவாகப் பண்டைக்காலத்துப் பழக்கம் குலம், கோத்ரம் முதலியவைகளை அறிந்த பிறகே குரு சிஷ்யனை ஏற்றுவந்தார்.

நாளடைவில் அத்தகைய குரு சிஷ்ய இணக்கம் தவறிப் போய்விட்டது. குரு ஸ்தானத்துக்கு தகுதி வாய்ந்தவர்கள் இல்லாது போய்விட்டனர். சுவானுபூதி அடையப்பெற்ற ரிஷி களே மிகமிகப் பண்டைக்காலத்தில் குருஸ்தானம் வகித்து வந்தார்கள். இக்காலத்திய கல்விமுறை முற்றிலும் மாறிவிட்டது. கல்லூரிகளுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் ஆசிரியராக வர விரும்புகின்றவர்களின் தகுதியைப் புதிய முறைகளைக்கொண்டு இக்காலத்தவர் ஆராய்கின்றனர். மாணாக்கர்களாக வர விரும்பு கின்றவர்களையும் புதியமுறைகளை அனுஷ்டித்துக் கல்விச்சாலை களுக்கு ஏற்றுக்கொள்கின்றனர். இங்ஙனம் சூழ்நிலை முற்றிலும் மாறி இருக்கின்ற இக்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தோன்றியுள்ளார். அவர் பண்டைக்காலத்து ரிஷிகள் கையாண்ட முறையில் சிஷ்யர்களைத் தேர்ந்தெடுத்தார். ஆனால் பண்டைக் காலத்து ரிஷிகள் செய்ததுபோன்று குலம், கோத்ரம் முதலிய வைகளை அவர் கேட்டது கிடையாது. இக்காலத்தில் அத்த கைய கொள்கையே பொருளற்றதாகப் போய்விட்டது. ஏனென் றால் குலாசாரம் என்பதும் இக்காலத்தில் மறைந்துபோய்விட்டது.

வழிமுறை வழிமுறையாகப் பண்டைக்காலத்தில் மக்கள் கையாண்டு வந்திருந்த நல்ல பழக்கவழக்கங்கள் பலவற்றை இக்காலத்தவர்கள் அறவே மறந்துவிட்டனர். அத்தகையவர் களுக்கிடையில் குலம், கோத்ரம் முதலியவைகளைப்பற்றி விசாரிப்பதில் பயனொன்றுமில்லை. தம்மிடம் வந்து சேர்ந்த சிஷ்யர்களின் மனபரிபாகத்தையே ஸ்ரீராமகிருஷ்ணர் கணக்கில் எடுத்துக்கொண்டார். நல்ல மனப்பான்மை படைத்தவனை அவர் ஏற்றுக்கொண்டார். அவன் எக்குடியில் பிறந்தவன் என்பதைப்பற்றி அவர் விசாரிக்கவில்லை. தமது பிரதம சிஷ்யராகிய விவேகானந்தருடைய தாய் தந்தையரைப் பற்றியே ஸ்ரீராமகிருஷ்ணருக்கு ஒன்றும் தெரியாது. அவர்களைப்பற்றி அவர் விசாரித்ததும் இல்லை. எனவே மாறியமைந்துள்ள காலநிலைக்கு ஏற்ப அவர் சிஷ்யர்களைத் தேர்ந்தெடுத்தார். தகுதி வாய்ந்தவர்களை மட்டும் அவர் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்.

கேள்வி: *(693)* தனக்கு வில் வித்தை கற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஏகலைவன் துரோணாச்சாரியரிடம் போனான். அவர் அதைக் கற்றுக்கொடுக்க மறுத்து அவனை அனுப்பிவிட்டார். பிறகு துரோணரையே குருவாகப் பாவித்துக் குருபக்தியினால் ஏகலைவன் வில் வித்தையில் தேர்ச்சியடைந்தான். அதைக் கண்டறிந்த துரோணர் ஏகலைவனுடைய வலக்கையின் கட்டைவிரலைக் குரு தக்ஷிணையாக வாங்கிக் கொண்டார். அதனால் அவனுடைய வித்தையே பாழாய்ப் போயிற்று. ஈஸ்ட் இந்தியா கம்பெனிக் காரர் இந்தியாவுக்கு வந்தபொழுது மெல்லிய நூல் நூற்று ஆடைச் செய்ய வல்லவர்களாய் இருந்தவர்களின் விரல்களை வெட்டிவிட்டார்கள் என்று கேள்விப்படுகிறோம். வெளிநாட்டவர் செய்த அக்கிரமத்தை நாம் குருவாகப் போற்றும் ஒருவர் செய்திருக்கிறார். ஒருவேளை அவருக்கு ஜாதித்துவேஷம் இருந்திருக்கவேண்டும். அவர் செய்தது நியாயமா?

பதில்: ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்காரர் என்பவர் இந்தியாவுக்கு வியாபாரத்துக்காக வந்த ஆங்கிலேய வர்த்தகர்.

அவர்களுக்கு வியாபாரம் வலுப்பதற்கிடையில் இந்தியாவில் இராஜ்ஜியமும் அகப்பட்டு வந்தது. இந்திய சிற்றரசர்களுக் கிடையில் ஒற்றுமை இல்லாதிருந்ததே அதற்குக் காரணமாயிற்று. படிப்படியாக நாடு முழுதையும் அவர்கள் கைப்பற்றினார்கள். பிறகு இந்நாட்டை ஆங்கில அரசாட்சிக்கு அவர்கள் ஒப்ப டைத்துவிட்டார்கள். இது சரித்திர வரலாறு. இதற்கிடையில் இந்தியாவில் இருந்த பல கைத்தொழில்களை அவர்கள் வெவ்வேறு விதங்களில் அழித்துவிட்டார்கள் என்றும் பகரப் படுகிறது. பெயர்பெற்ற டாக்கா மஸ்லின் என்பது நம் நாட்டில் நெய்யப்பட்ட உயர்ந்த ஆடையாய் இருந்தது. வெளிநாடுகளிலும் அதற்கு மதிப்பு மிக இருந்தது. அத்தொழிலை அழிக்க அவர்கள் சிலருடைய கைவிரல்களை ஒருவேளை வெட்டியிருக்கலாம். சுயநலம் படைத்த மனிதன் வசதி வாய்த்தால் தன் சுயநலத் துக்காக எதை வேண்டுமானாலும் செய்வான் என்பதை உலகில் எக்காலத்திலும் எல்லா நாடுகளிலும் கண்டுவருகிறோம். ஆக, ஆங்கிலேய வியாபாரிகள் அந்நாளில் அக்கொடுமையில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் அதில் வியப்பொன்றுமில்லை.

துரோணச்சாரியருக்குச் சுயநலம் ஒன்றும் கிடையாது. தமக்காக என்று அவர் பொருள் தேடியவரும் அல்லர். ஆயுட்கால முழுதிலும் அவர் ஏழையாகவே வாழ்ந்திருந்தார். அரச குமாரர்களுக்கு வில்வித்தை கற்பித்த அவர் வேண்டிய அளவிற்குத் திரவியத்தையும் ஏராளமாகத் திரட்டியிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் ஒரு தீர்க்கதரிசி. உலகின் நடைமுறையை நன்கு அறிந்தவர். மந்திர சக்தியோடு கூடிய வில்வித்தை அவரிடமிருந்தது. அவ்வித்தையை நன்கு பயன்படுத்தக்கூடிய அரசகுமாரர்களுக்கு அதைப் புகட்டவேண்டு மென்று அவர் எண்ணியிருந்தார். அதன்படி பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் அவ்வித்தையைப் புகட்ட அவர் முன்வந்தார். அதேவேளையில் வேட இராஜகுமாரனாகிய ஏகலைவனும் அவரிடம் வில்வித்தை பயில வந்தான். அத்தகைய உயர்ந்த அவனுக்கு வில்வித்தை தேவையில்லை என்பது அவருடைய துணிபு. ஆகையினால் அவனுக்கு அதைப் புகட்ட மறுத்து விட்டார்.

துரோணாச்சாரியருக்கு ஜாதி வேற்றுமை இருந்தது என்பது

பொருந்தாது. அஸ்வத்தாமன் என்பவன் அவருடைய புதல்வன். அர்ஜுனன் க்ஷத்திரியன். துரோணர் பிராமணர். தம் சொந்த மகனுக்குப் புகட்டிய வில்வித்தையைவிட அதிகமாக அவர் அர்ஜுனனுக்குப் புகட்டியிருந்தார். ஜாதிப்பற்று அவரிடத்து இருந்திருக்குமாகில் சொந்த மகனுக்கு அதிகம் புகட்டிவிட்டு அர்ஜுனன் போன்றவர்களிடத்திருந்து அவர் அதை மறைத்து வைத்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. மற்றவர்களுக்கெல்லாம் விட அதிகமாகவே அவ்வித்தையை அவர் அர்ஜுனனுக்குப் புகட்டியிருந்தார். எதிர்காலத்தில் அக்கிர மத்தை ஒழித்து நீதியை நிலைநாட்டுதற்கு அர்ஜுனன் கிருஷ்ண பகவான் கையில் கருவியாக இருக்கப் போகிறான் என்பதை ஒருவேளை அவர் அறிந்திருக்கலாம். அதை அறியாதிருந்தாலும் அர்ஜுனனுடைய குணாதிசயங்களையும் அரசாளும் திறமை களையும் அவர் நன்கு அறிந்திருந்தார். உலகத்தைப் பரிபாலிப் பதற்கு அவனிடம் அத்தகைய வில்வித்தைகளெல்லாம் இருக்க வேண்டும் என்று அவர் எண்ணிவந்தார் போலும்.

ஏகலைவன் குருபக்தியால் வில்வித்தையில் அர்ஜுனனுக்கு நிகராய்விட்டான் என்பதைத் துரோணர் கண்டறிந்தார். ஏகலை வனையும் அவர் சந்திக்கும்படி நேரிட்டது. அவ்வித்தைகளை யெல்லாம் அவன் எப்படி யாரிடமிருந்து கற்றுக்கொண்டான் எனக்கேட்டார். துரோணர் மீது ஏகலைவன் வைத்திருந்த குருபக்தியால் அவ்வித்தைகள் தனக்குக் கிட்டின என்று அக் காட்டு வேந்தனின் குமாரன் விடைவிடுத்தான். "அப்படியாயின் நீ எனக்குக் குருதக்ஷிணை தரக் கடமைப்பட்டிருக்கின்றாய் அல்லவா?" என்று துரோணர் ஏகலைவனிடம் கேட்டார். "என்னிடமிருக்கும் எதைத் தாங்கள் கேட்டாலும் குரு தக்ஷிணை யாகப் படைத்து விடுகிறேன்" என்றான் வேட இளைஞன். "உனது வலக்கையின் கட்டை விரலை வெட்டி எனக்குத் தக்ஷிணையாகத் தரவேண்டும்" என்று துரோணர் ஆக்ஞாபித்தார். ஏகலைவனும் மகிழ்ச்சியுடன் விரலைத் துண்டித்து அவர் முன்னிலையில் வைத்தான். அத்துடன் அவன் வில்வித்தை முடிவுற்றது. துரோணர் அவனை மனமுவந்து ஆசிர்வதித்தார். இது ஒரு கொடூரச் செயலாகத் தென்படுகிறது. ஆனால் இயற்கையின் நடைமுறையில் ஒவ்வொரு ஜீவனுக்கும் ஒரு

ஸ்தானம் உண்டு. அந்த ஸ்தானத்துக்குக் கீழே போய்விடாமல் அவனுக்குப் பயிற்சி கொடுத்து மேல்நிலைக்கு எடுப்பது பெரியோர் கடமை. ஆனால் அதே ஜீவனால் நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லாத ஒரு பெரிய கடமைக்குத் தகுதியுடையவனாக அந்த ஜீவன் தன்னைச் செய்துகொண்டால், அத்தகுதியை அவனிடமிருந்து திருப்பி எடுத்துக் கொள்ளுதல் இயற்கையின் செயல். இவ்விதிக்கு உட்பட்டே சான்றோரும் சில சமயங்களில் பொருந்தாதவைகள் போன்று தென்படும் செயல்களைச் செய்கின்றனர். துரோணர் செயலும் அத்தகையது.

யாரிடத்தில் துப்பாக்கி முதலிய அக்னி அஸ்திரங்கள் இருக்கலாம், யாரிடத்தில் அது இருக்கலாகாது என்பதை அரசாங்கம் தீர்மானம் பண்ணுகிறது. அரசாங்கத்தின் உத்திர வின்றி யாராவது அத்தகைய ஆயுதங்களை வைத்திருந்தால் அவைகளைப் பறிமுதல் செய்வது அரசாங்கத்தின் கடமை. அதே பாங்கில்தான் துரோணரும் ஏகலைவனிடமிருந்து அந்த உயர்ந்த வில்வித்தையை எடுத்துக்கொண்டார். உலக நன்மையின் பொருட்டு அவர் அதை அர்ஜுனனுக்கே புகட்டி வைத்தார்.

கேள்வி: *(694)* துரோணாச்சாரியர் அர்ஜுனனுக்குச் சிறப்பாகப் பயிற்சி கொடுத்தார். ஏகலைவனிடம் கட்டை விரலை வெட்டித்தருமாறு கூறினார். இது பொருந்துமா? இத்தகைய ஆசிரியர்கள் இக்காலத்தில் இருந்தால் கல்வி கற்பவர்களின் கதி என்னாவது?

பதில்: துரோணாச்சாரியர் புகட்டிய வில்வித்தை அலாதி யாகப் போருக்கு உரியது. போர் ஒன்று ஏற்பட்டால், அதில் ஈடுபடுவதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தியவர்களுக்கே, துரோ ணாச்சாரியர் தனுர்வேதம் புகட்டி வந்தார். ராஜகுமாரர்களே அவ்வித்தைக்காகவென்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். சில வேளை களில் அஸ்வத்தாமா போன்ற பிராம்மண இளைஞர்களும் போர்க்கலை பயில்வாராயினர். துரோணாச்சாரியர் படைத்திருந்த கலை முழுதும் போருக்கு உரியதாயிருந்தது. ஆதலால் போர் வீரர்களுக்கு மட்டும் அவர் அதைப் புகட்டிவந்தார். இக் காலத்திய கல்வி முறையில் சிலர் மருத்துவக் கலைக்கு ஏற்ற பாடங்கள் கற்று வருகின்றனர். அத்தகையவர்கள் பொறியியல்

துறையில் மாணாக்கர்களாக எடுத்துக்கொள்ளப்படமாட்டார்கள். அதேவிதத்தில் பொறியியல் துறைக்கேற்ற பாடங்களைக் கற்று வருகிறவர்கள் மருத்துவத் துறையில் மாணாக்கர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். இது இக்காலத்திய கல்விமுறை யிலுள்ள கோட்பாடு ஆகும். இக்கோட்பாட்டில் குறை கூறுதற்கு ஒன்றுமில்லை. அக்காலத்தில் துரோணாச்சாரியர் மந்திரசக்தி வாய்ந்திருந்த அஸ்திர சஸ்திரங்களை நன்கு கற்றிருந்தார். அந்த ஞானத்தை க்ஷத்திரியர்களுக்குப் பெரிதும் வழங்கி வந்தார். க்ஷத்திரியர்களுள்ளும் எல்லோர்க்கும் ஒரேவிதமான பயிற்சியை அவர் தரவில்லை. மாணாக்கர்களின் தகுதிக்கேற்ற படியே கலைகளை அவர் வழங்கி வந்தார். அர்ஜுனனுக்குப் புகட்டிய சில நுட்பமான கலைகளை அவர் தம்முடைய சொந்த மைந்தன் அஸ்வத்தாமாவுக்கும் கற்பிக்கவில்லை. அதற்குத் தக்க காரணம் ஒன்று இருந்தது.

வரப்போகிற தர்ம யுத்தத்தில் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கையில் கருவியாக இருக்கப் போகிறான் என்பதை ஞானியாகிய துரோணாச்சாரியர் அறிந்திருந்தார். ஈசன் தன்னுடைய கிருத்தியங்களைப் பலப்பல கருவிகளைக் கொண்டு நிறைவேற்றி வைக்கிறார். அரிய பெரிய காரியங்களை நிறைவேற்றுவதற்கான கருவிகளாக முற்றிலும் பண்பட்ட பெருமக்களைப் பயன்படுத்துகிறார். வருவதற்கிருந்த அறப்போரில் அக்கிரமசாலிகளின் பெருங்கூட்டத்தைத் துடைத்துத் தள்ளுவது கிருஷ்ணாவதாரத்தின் நோக்கமாயிருந்தது. அதற்குக் கருவியாக அர்ஜுனன் ஆயத்தமாகிக்கொண்டு வந்தான். துரோணாச்சாரி யரும் அதற்காகவென்றே அர்ஜுனனை ஆயத்தப்படுத்தி வந்தார்.

ஏகலைவன் ஒரு வேடனுடைய மகன். வேட்டையாடி ஜீவனம் பண்ணுவதைவிட வேறு நோக்கம் அவனுடைய வாழ்க்கையில் இல்லை. அத்தகைய மாணாக்கன் வந்து ராஜ குமாரர்களோடுகூடி வில்வித்தை பயில விருப்பங்கொண்டிருப் பதாகத் துரோணாச்சாரியரிடம் தெரிவித்தான். துரோணர் அவனை ஏற்க மறுத்தார். அவர் படைத்திருந்த கலைகள் சாதாரணமான வேட்டைக்குரியவைகள் அல்லவென்றும், வேட்டைக்காரனிடம் அந்த அரிய பெரிய தனுர்வேதத்தை ஒப்படைப்பது முறையன்று என்றும் அவர் மறுத்துவிட்டார். துரோணர் அவனை

மாணாக்கனாக எடுத்துக்கொள்ளாததற்கு அவனுடைய வாழ்க்கை முறையே காரணமாயிற்று.

ஆயினும் ஏகலைவன் துரோணாச்சாரியாரிடம் மற்றொரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தான். துரோணாச்சாரியரைத் தன் குருவாக வைத்து வழிபாடு செய்வதற்கு அவன் அனுமதி கேட்டான். அங்ஙனம் அனுமதி தருதற்கு ஆச்சாரியருக்கு ஆக்ஷேபம் இல்லை. ஏகலைவனும் விடைபெற்றுக் கொண்டு போய்க் குரு உபாசனையில் கருத்தைச் செலுத்தினான். துரோணாச்சாரியர் போன்று களிமண்ணில் விக்கிரகம் ஒன்று செய்தான். அந்த விக்கிரகத்தின் முன்னிலையில் பக்திபூர்வமாக வந்தனை வழிபாடு செலுத்தினான். அதன் பிறகு அவன் தன் போக்கில் சுயப்பிரயத்தனத்தைக் கொண்டு வில்வித்தை பயின்று வந்தான். அதில் பெரிதும் முன்னேற்றமும் அடைந்து வந்தான்.

ஒருநாள் அர்ஜுனன் முதலாகிய இராஜகுமாரர்கள் உல்லாசப் பயணமாக ஏகலைவன் வசித்துவந்த வனத்துக்கு வந்தார்கள். இராஜகுமாரர்கள் வளர்த்து வந்த நாயில் ஒன்று அவர்களோடு வந்திருந்தது. வனத்துக்குள் மகிழ்வுடன் சுற்றித் திரிந்த அந்த நாய் ஏகலைவனுடைய குடிசைப்பக்கம் வந்தது. அப்பொழுது அவன் வில்வித்தை பயின்றுகொண்டிருந்தான். அந்த வேட குமாரனைப் பார்த்து நாய் குலைத்தது. அந்த நாயின் வாயைக் கட்டுதற்கு அவன் ஓர் அம்பு எய்தான். ஏகலைவன் பெற்றிருந்த வில்வித்தை நுட்பத்தை அவன் தானே அறிந்திலன். எய்த ஓர் அம்பு ஒருகத்தை அம்பாக வடிவெடுத்து நாயின் வாயை நிறைத்துவிட்டது. ஆனால் நாய்க்குக் காயம் ஏதும் உண்டாக வில்லை. தொண்டை வரையில் திணிக்கப்பட்டிருந்த அம்புக் கத்தையோடு நாய் அர்ஜுனனிடம் ஓடியது. அந்த அதிசயத்தைப் பார்த்து அர்ஜுனன் வியந்தான். நாயோடு அவன் நடக்க ஆரம்பித்தான். அர்ஜுனனை அழைத்துக்கொண்டு அந்த நாய் ஏகலைவன் குடிசைக்கு வந்தது. அர்ஜுனன் கேட்க ஏகலைவன் நாயின்மீது தான் அம்பு எய்ததை ஒத்துக் கொண்டான்.

அர்ஜுனன்: "நீ யாருடைய சிஷ்யன்?"

ஏகலைவன்: "நான் துரோணாச்சாரியரின் சிஷ்யன். அவருடைய அனுக்ரஹத்தால் எனக்கு வில்வித்தை பிடிபட்டு வருகிறது."

அர்ஜுனன் வியந்தான். தனக்கும் புகட்டாத ஓர் அரிய கலையைத் துரோணாச்சாரியர் ஒரு வேட இளைஞனுக்கு விளக்கியிருக்கிறார் என்று வியந்து துரோணாச்சாரிடம் போய் முறையிட்டான். துரோணாச்சாரியரோ ஏகலைவனைச் சந்தித்ததை அறவே மறந்துவிட்டார். அர்ஜுனனோடு ஏகலைவன் குடிசைக்கு வந்தபோது பழைய நிகழ்ச்சி அவர் ஞாபகத்துக்கு வந்தது.

துரோணாச்சாரியர்: "இளைஞனே, நீ யாருடைய சிஷ்யன்?"

ஏகலைவன்: "இறைவா, உங்களிடம் அனுமதி பெற்று உங்களைக் குருவாக வைத்து நான் வழிபட்டு வருகிறேன்."

துரோணர்: "அப்படியானால் உனக்கும் எனக்கும் உள்ள இணக்கம் யாது?"

ஏகலைவன்: "பிரபு, தாங்கள் குரு. நான் சிஷ்யன்."

துரோணர்: "அப்படியானால் நான் கேட்கும் குரு தக்ஷிணையைத் தருவாயா?"

ஏகலைவன்: "இறைவா, குருதக்ஷிணையைக் கேட்பதின் மூலம் தாங்கள் மனமுவந்து எனக்குக் குரு ஆய்விட்டீர்கள். உயிர் உட்பட என்னிடமிருந்து எதைக் கேட்டாலும் தங்களுக்குத் தக்ஷிணையாகச் சமர்ப்பிக்கிறேன்."

துரோணர்: "உன் வலக்கைக் கட்டை விரலை வெட்டி தக்ஷிணையாகத் தா."

ஏகலைவன்: "பிரபோ, இதோ இப்பொழுதே சமர்ப்பிக் கிறேன்."

ஓர் அம்பை எய்தான். அது சுழன்று வந்து அவன் கட்டைவிரலைத் துண்டித்தது. துரோணர் முன்னிலையில் அவன் அதைச் சமர்ப்பித்தான். இப்பொழுது அது ஒரு இறைச்சித் துண்டு ஆய்விட்டது. அதைவிட உயர்ந்தது ஏதாவது கேட்டிருக்க லாமே என்று ஏகலைவன் பணிவுடன் பகர்ந்தான். கட்டைவிரல் துண்டிக்கப்பட்டதோடு ஏகலைவனுடைய நுண்ணிய வில்வித்தை தடைபட்டுப் போயிற்று. துரோணர் இப்படிச் செய்தது நியாயமா என்னும் கேள்வி எழுகிறது. குருபக்தியால் மாணாக்கன் ஒருவன் எக்கலையையும் பெறமுடியும் என்பதற்கு ஏகலைவன் சான்று ஆகிறான். குருபக்தி எத்தகையது என்பதை அவன் தன் கட்டைவிரலை மகிழ்வுடன் பறிகொடுத்ததே விளக்கிக் காட்டுகிறது. குருபக்தி படைத்திருக்கிறவன் குருவுக்காகவென்று

எத்தகைய தியாகத்தையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறான். இக்காலத்திய மாணாக்கர்களிடத்துக் குருபக்திதான் துர்லபமாகப் பின்னணியில் போய்க் கிடக்கிறது.

ஏகலைவன் குருக்ஷேத்திரப் போரில் சம்பந்தப்படாதவன். ஆதலால் அவனுடைய திறமையைத் துரோணர் அவனிடமிருந்து கறந்தெடுத்துவிட்டார். ஆனால் குருபக்திக்கு இலக்காக அவனை உலகுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஆதலால் துரோணர் செய்தது முற்றிலும் சரியே. ✪

53. நம்பிக்கை

கேள்வி: (695) சொர்க்கம், நரகத்தைப் பற்றிய விளக்கம் யாது?

பதில்: மக்களுக்கு இடையிலுள்ள கருத்து இறந்ததற்குப் பின் ஜீவன் சொர்க்கத்துக்கோ, நரகத்துக்கோ போகிறான் என்பதாகும். அவர்கள் கருத்துப்படி பார்த்தால் ஒவ்வொரு ஜீவனும் மரணமாகும் பொழுது அந்த ஜீவனுக்குப் பக்கத்தில் காத்திருந்து சொர்க்கத்துக்கோ, நரகத்துக்கோ அழைத்துப்போக ஒருவர் தேவைப்படுகிறார். அப்படி அழைத்துப்போவதற்கு ஏராளமான பேர்களை நியமித்தாகவேண்டும். அந்த உத்தியோகம் பெறுவதற்கு யாது செய்ய வேண்டும் என்ற கேள்வியும் எழு கிறது. சொர்க்கத்துக்குச் செல்லுகின்றவர்கள் இன்பத்தை அனுப விக்கிறார்கள் என்றும், நரகத்துக்குச் செல்பவர்கள் துன்பத்தை அனுபவிக்கிறார்கள் என்றும் கருதப்பட்டு வருகின்றன. புண்ணிய கர்மங்கள் செய்கிறவர்கள் சொர்க்கத்துக்குப் போகிறார்கள் என்றும், பாப கர்மங்கள் செய்கிறவர்கள் நரகத்துக்குப் போகிறார்கள் என்றும் கருதப்படுகின்றன. இனி, யுக்தியைப் பயன்படுத்திச் சொர்க்கம் நரகம், புண்ணியம் பாபம் என்பனவற்றைப் பற்றி ஆராய்வோம்.

இன்புற்றிருக்கின்ற காலத்தில் நாம் சொர்க்கத்தில் இருக்கின்றோம். துன்புற்றிருக்கின்ற காலத்தில் நாம் நரகத்தில் இருக்கின்றோம். நல்வினை அல்லது புண்ணியச் செயலின் மூலம் சொர்க்கம் அல்லது இன்பம் கிடைக்கிறது. தீவினை அல்லது பாபச் செயலின் மூலம் துன்பம் அடைகின்றோம். இனி, புண்ணிய பாபத்தைப்பற்றியும் அறிந்துகொள்ளவேண்டும். ஓர் இடத்தில் புண்ணியச்செயலாக இருப்பது மற்றோர் இடத்தில்

பாபச் செயலாகக் கருதப்படுகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் புண்ணியச் செயலாக இருப்பது மற்றொரு சந்தர்ப்பத்தில் பாபச் செயலாக இருக்கிறது. சான்று எடுத்துக்கொள்வோம். மருத்துவமனையில் கத்தியைக்கொண்டு வயிற்றைக்கிழித்து அறுவைச் சிகிச்சை செய்யும்பொழுது அது புண்ணியச் செயல். தெருவில் செல்கின்றவர்களைக் கத்தியைக்கொண்டு வயிற்றைக் கிழித்தால் அது கொலைச் செயலாகிறது. அப்படிச் செய்தவன் பாபம் செய்தவனாகிறான். பசியுள்ளவனுக்கு உணவு கொடுப்பது புண்ணியச் செயல். நோய்வாய்ப்பட்டுப் பசி இல்லாதிருப்பவனுக்கு உணவு கொடுப்பது பாபச் செயல். எனவே, எது புண்ணியம் எது பாபம் என்பதை நிர்ணயம் செய்யமுடியாதவர்களாக நாம் இருக்கின்றோம்.

சுவாமி விவேகானந்தர் புண்ணியத்துக்கும் பாபத்துக்கும் விளக்கம் தந்துள்ளார். எச்செயல் ஒரு மனிதனை அவன் இருக்கும் நிலையிலிருந்து மேல்நிலைக்குக் கொண்டுசெல்கிறதோ அது அவனுக்குப் புண்ணியச் செயல். எச்செயல் ஒரு மனிதனை அவன் இருக்கும் நிலையிலிருந்து கீழ்நிலைக்குக் கொண்டு செல்கிறதோ அச்செயல் அவனுக்குப் பாபச் செயலாகும். இளைஞன் ஒருவன் தேகவலிவை இழந்து பலஹீனனாக இருந்தான். அவன் கீதை என்னும் நூலை எடுத்துக்கொண்டு வந்து அந்நூலைத் தனக்குப் புகட்டவேண்டும் என்று சுவாமி விவேகானந்தரைக் கேட்டுக்கொண்டான். “முதலில் விளையாடும் மைதானத்துக்குச் சென்று கால்பந்து விளையாடி உடலை உறுதிசெய்துகொள். அதன் பிறகு கீதையைப்பற்றி அறிந்து கொள்ளலாம்” என்று அவனுக்குப் புகட்டினார். அவன் விஷயத்தில் விளையாடுவதுதான் அவனுக்குப் புண்ணியச் செயல். தீமையை எதிர்க்கக் கூடாதென்று துறவிக்குக் கூறினார். அது துறவியருக்குப் புண்ணியச் செயல். தீமையை எதிர்க்கவேண்டும் என்று இல்லறத்தார்க்குக் கூறினார். அது இல்லறத்தார்க்குப் புண்ணியச் செயல். ஆக, ஒரு செயல் ஒருவனை உயர்நிலைக்குப் போவதற்கு உதவுமானால் அது அவனுக்குப் புண்ணியச் செயல். எந்தச் செயல் செய்வதன் மூலம் ஒருவன் தான் இருக்கும் நிலையிலிருந்து கீழ்நிலை அடைகின்றானோ அது அவனுக்குப் பாபச் செயல்.

உலகச் சுகத்தைச் சொர்க்கமென்றும் உலகத் துன்பத்தை நரகம் என்றும் கூறலாம். பேரின்பம் அல்லது பாரமார்த்திக சுகம் இவ்விரண்டிற்கும் அப்பாற்பட்டது. நல்வினை, தீவினை ஆகிய இரண்டையும் கடந்து வினைத்தளையிலிருந்து விடுபடும் பொழுதுதான் பேரின்பம் என்னும் பாரமார்த்திகச் சுகம் வாய்க்கும். ஆசைக்கு வசப்பட்டுச் செயல்புரிகிறவர்கள் சொர்க்கம், நரகம் என்ற இன்பதுன்பத்தில் அகப்பட்டு உழல்கின்றார்கள். தனக்கு அமைந்த கடமையை ஈசுவர அர்ப்பணமாகச் செய்கின்றவர்கள் சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் அப்பாலுள்ள முக்தி என்னும் பெருநிலையை அடைகின்றார்கள். நாம் நாடவேண்டியது முக்தி. சொர்க்கத்தையோ நரகத்தையோ பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. கொலை, களவு, கள், காமம் முதலிய தீய செயல்களில் நாட்டம் உடையவர்களாகப் பிறர்க்குத் துன்பம் செய்து வருபவர்கள் நரக வேதனையை அடைவார்கள். நல்லவர்கள் இவற்றிலிருந்து விலகியிருக்கவேண்டும். பொருளையும், புகழையும், பதவியையும் இன்னும் பல உலகச் சம்பத்துக்களையும் பெற்று வாழவேண்டும் என்று விரும்புகிறவர்கள் சொர்க்கத்தை விரும்புகின்றார்கள். அவைகளில் நாட்டம் கொள்ளாது மனத்தைப் பரத்தினிடத்துச் செலுத்தி உலக வாழ்க்கையைப் பரமனுடைய அருள் பெறுவதற்காக வாழ்கின்றவர்கள் முக்தி என்னும் பெருநிலையை அடைகின்றார்கள். சொர்க்கம், நரகத்தைப் பற்றி நினைப்பவர்களும் அவற்றில் நாட்டம் கொண்டிருப்பவர்களும் மயக்கத்துக்கு உள்ளாகின்றனர். மோகம் அல்லது மயக்கத்தை ஒழித்துவிட்டுத் தெளிந்த ஸ்திரமான வாழ்வு வாழ இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்வோமாக.

***கேள்வி: (696)* பெரும்பாலும் சிறு தெய்வங்களின் கோயில்களில் பெரிய விறகுக்கட்டைகளை எரியவிட்டு நெருப்புக் குண்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுமார் இருபது அடிக்குமேல் உள்ள அக்குண்டத்தில் விரைந்து செல்கிறார்கள். இயற்கையாக நெருப்பு சுட்டெரிக்கும் தன்மையுடையது. ஆனால் அப்படி நடப்பவர்கள் பாதிக்கப் படுவதில்லை. பகவான் அருள்புரியும் தன்மையைப்**

பிரத்யக்ஷமாக வெளிப்படுத்துகிறார் என்பதை இதிலிருந்து எந்த அளவுக்கு நம்பலாம்? துணிவுகரமான இப்பேர்ப்பட்ட செயல்களை ஜனங்கள் ஏன் பகவான் பெயரில் செய்து கொண்டு வருகிறார்கள்? இப்பேர்ப்பட்ட செய்கைகளுக்கு ஹிந்துமத சாஸ்திரம் எந்த அளவுக்கு இடம் கொடுக்கிறது?

பதில்: தீ மிதி என்றும், பூ மிதி என்றும் இச்செயல் பகரப்படுகிறது. ஹிந்துக்களுக்கிடையில் இச்செயல் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நிகழ்ந்து வருகிறது. இதை இறைவனுடைய அருளோடு இணைக்கலாகாது. எண்ணத்தின் வலிவு மிகப்பெரியது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. தீயின்மீது தாங்கள் நடக்கவேண்டுமென்று தேவதைகளிடம் பலர் கோரிக்கை செய்து கொள்கின்றனர். அதற்கேற்ற விழா வரும்போது சில நாட்களாகக் கோரிக்கை செய்துகொண்டவர்கள் நெறியான வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். தாங்கள் வழுத்தும் தெய்வம் தங்களைத் தீயினின்று பாதுகாக்கும் என்று அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். நம்பிக்கையில்லாதவர்கள் தீயின்மீது நடக்க முடியாது. நடந்தால் வெந்துபோவார்கள். ஆனால் நம்பிக்கை வைத்திருப் பவர்களுக்கு நம்பிக்கையின் வலிவு தீயின் வெப்பத்தைவிடப் பெரியது. எண்ணம் எத்தகைய வலிவு படைத்துள்ளது என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும். பாமரர்களே இத்தகைய விரதத்தைப் பெரும்பாலும் அனுஷ்டிக்கிறார்கள் என்றாலும் எண்ணத்தின் வலிவுக்குத் தீமிதி நல்ல எடுத்துக்காட்டு ஆகும். யோக சாதனம் பயிலுகிற ஒருவனுக்கு அஷ்டசித்திகள் தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்று நாடுவதாலோ அமைவதுண்டு என்று யோக சாஸ்திரம் பகருகிறது. அஷ்ட சித்திகளைப் பெறுகின்றவன் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய பூதங்களின் மீது ஆதிக்கம் செலுத்தலாம் என்று யோகசாஸ்திரம் பகர்கிறது. அதே வேளையில் அஷ்டசித்திகள் ஞானத்துக்கும், பக்திக்கும் இடைஞ்சல் என்று யோகசாஸ்திரம் எச்சரிக்கை செய்திருக்கிறது. தீ என்னும் பூதத்தின் மீது தாற்காலிகமாகத் தீமிதிக்காரர்களுக்கு ஆதிக்கம் வந்துவிடுகிறது. அத்தகையவர்களுக்குத் தீ மிதியால் ஆத்மசாதனத் தடையொன்றும் வந்து விடுவதில்லை. ஓரளவு அச்செயல் அவர்களுடைய நம்பிக்கைக்கு உறுதி நல்குகிறது.

ஆனால் தீ மிதியைக் குறித்து வியப்படையவோ அதில் கருத்தைச் செலுத்தவோ ஆத்மசாதகனுக்குத் தகாது என்பதே ஹிந்து மதத்தின் மேலாம் கோட்பாடு ஆகும்.

கேள்வி: (697) மக்கள் கொடிய நோய்கள் சில ஆண்டவனால் தங்கள் மீது ஏவப்பட்டவை என்றும், அதனால் அவைகளைத் தெய்வத்தைப்போல் போற்றவேண்டுமென்றும் எண்ணி வைத்தியம் செய்ய மறுக்கிறார்கள். அந்நோய்களுக்கு மருந்து உண்டா? வைத்தியம் செய்யலாமா?

பதில்: எல்லாவிதமான நோய்களும் இயற்கையின் நடைமுறையில் இடம்பெற்று இருக்கின்றன. இயற்கையின் நடைமுறையே இறைவன் செயல். ஆதலால் இத்தனைவிதமான நோய்களும் இறைவனுடைய பெருந்திட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றன. வினைப்பயனை அனுபவிப்பதற்கும், மனதைப் பக்குவப்படுத்துதற்கும், இறுதியில் உடலை ஒடுக்குதற்கும் இந்த நோய்கள் யாவும் உதவுகின்றன. ஆதலால் வந்த நோயை முன்னிட்டு நல்ல ஆத்மசாதகன் வருந்தலாகாது. தன்னைப் பக்குவப்படுத்துவதற்கு இறைவன் அந்நோயைப் பயன்படுத்தி வருகிறார் என்று அவன் தெளிவு அடையவேண்டும். சில நோய்களுக்கு மருந்து உண்டு வேறு சில நோய்களுக்கு இன்னும் யாரும் மருந்து கண்டுபிடிக்கவில்லை. ஆனால் நல்ல மனப்பான்மையே எல்லா நோய்களுக்கும் அருமருந்து. பிராரப்த கர்மம் முடியும்பொழுது உடலை ஒடுக்குதற்கும் அதே வினை பயன்படுகிறது. இந்த எண்ணத்தில் உறுதி கொண்டிருக்கிறவர்கள் எந்த நோயைக்குறித்தும் மனத்தளர்ச்சியடைய வேண்டிய அவசியமில்லை.

கேள்வி: (698) ஹிந்து மதத்தினர் வியாழன், சனி தினங்களில் கருடபக்ஷியைத் தரிசனம் செய்கின்றார்கள். அதன் காரணம் என்ன? பலன் என்ன? இதைக்கண்டு பிற மதத்தினர் நண்டு, கோழி முதலியவைகளை உணவாகக் கொள்ளும் கருடபக்ஷியைத் தரிசனம் செய்யலாமா என்று ஏளனம் செய்கின்றனர். அவர்களுக்கு என்ன பதில் கொடுப்பது?

பதில்: உலகிலுள்ள எல்லா உயிர்களையும் தெய்வத்தின் தோற்றங்களாகக் காணுதல் வாழ்க்கையின் நோக்கமாகும். இயற்கையைப்பற்றிய உண்மையும் இதுவே. உலகனைத்தும் ஆயிருப்பவர் கடவுளே. ஆனால் ஆத்மசாதனத்தில் ஆரம்ப தசையில் இருப்பவர்கள் உலகனைத்தையும் கடவுள் சொரூபமாகக் காணும் சக்தியற்றவர்கள். ஞானிகளுக்கே அது சாத்தியமாகிறது. ஆயினும் ஆரம்பதசையில் இருப்பவர்கள் ஏதோ சில உயிர்களைக் கடவுள் சொரூபமாகக் கருதிப் பழகி னால் ஆத்ம சாதனத்துக்குரிய நல்ல பழக்கம் அதன் மூலம் துவங்கப் பெறுகிறது. கருடன் மஹாவிஷ்ணுவினுடைய வாகனமாக ஹிந்துக்களால் கருதப்படுகிறது. கருடனைக் கண்டதும் விஷ்ணுவினுடைய ஞாபகம் அவர்களுக்கு வர வேண்டும். இனி குறிப்பிட்ட இன்ன நாட்களில்தான் அத்தகைய எண்ணம் வரவேண்டும் என்பது சரியல்ல. கருடனைக் காணுந்தோறும் அதன் தலைவனாகிய தெய்வத்தின் எண்ணத்தை வரவழைத்துப் பழகுவது நல்ல பழக்கமாகும். இத்தகைய பழக்கத்தில் ஆழ்ந்து செல்லுகின்றவர்களுக்கு நாளடைவில் எல்லாம் தெய்வத்தின் சொரூபம் என்கின்ற எண்ணம் வலுத்தும் விரிவடைந்தும் வரும்.

தாங்கள் எடுத்த காரியத்தில் வெற்றியடையவேண்டும் என்கின்ற நோக்கத்துடன் சிலர் குறிப்பிட்ட நாட்களில் கருட தரிசனத்திற்காக வெளியில் வந்து காத்துக்கொண்டிருப்பார்கள். அத்தகைய பழக்கம் வெறும் குருட்டு நம்பிக்கையாம். தாங்கள் எடுத்துக்கொண்ட காரியத்தை முறையாகச் செய்துகொண்டு போதல் வேண்டும். அதற்குப் பதிலாகக் கருடதரிசனம் போன்ற உபாயத்தைக்கொண்டு தாங்கள் நாடிய கர்மத்தை எளிதில் நிறைவேற்றிவிடலாம் என்று எண்ணுபவர்கள் வாழ்க்கையின் தத்துவத்தை அறிந்தவர்கள் அல்லர்.

மக்களுடைய இயல்பை ஆராய்ந்து பார்த்தால் எல்லா மதஸ்தர்களுக்கிடையிலும் குருட்டு நம்பிக்கைகளை ஏராளமாகக் காணலாம். ஆனால் ஒவ்வொரு மதவாதியும் தன்னைப் பெரு மைப்படுத்தி எண்ணிக்கொள்கிறான். தான் கடைப்பிடிக்கும் குருட்டு நம்பிக்கைதான் கடவுளுக்கு உகந்தது என்றும், ஏனைய வர்கள் கொண்டுள்ள குருட்டு நம்பிக்கைகள் பரிகாசத்துக்கு

உரியவை என்றும் அவன் முடிவு கட்டுகிறான். இது குறுகிய மனப்பான்மையின் அறிகுறியாகும்.

ஒவ்வொரு உயிரும் ஏதேனும் ஒருவித உணவு உண்டு வாழ்ந்திருக்கிறது. அதனால்தான் இயற்கையின் நடைமுறையே ஒழுங்காகப் போய்க்கொண்டிருக்கிறது. ஓர் உயிர் எத்தகைய உணவை உண்டு வாழ்கிறது என்பதை அடிப்படையாக வைத்துக் கொண்டு அந்த உயிரின் உபயோகத்தை நாம் அளக்க முடியாது. நாம் விலக்கித்தள்ளும் சாக்கடை நீரை உணவாகக் கொண்டு தென்னைமரம் நல்ல உணவை உண்டுபண்ணி நமக்குத் தருகிறது. தென்னைமரம் எதை உண்டது என்பது முக்கியமல்ல; அது நமக்கு எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்பதே முக்கியமானது. கருடன் என்னும் பறவை எதைத் தின்கிறது என்பது முக்கியமானதல்ல. நம்முடைய உள்ளத்தில் எவ்வளவு உயர்ந்த எண்ணத்தை வளர்ப்பதற்கு அது முகாமை யாயிருக்கிறது என்பதே கருத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய விஷயமாகும்.

கேள்வி: *(699)* நான் நாள்தோறும் 'ராமஜெயம்' 'கிருஷ்ண ஜெயம்' 'ஹரிஓம்' 'லக்ஷ்மிஜெயம்' போன்ற நாமங்களைத் தினம் ஆயிரம் எழுதி வருகிறேன். இதுவரை லக்ஷம் நாமங்கள் ஆயிருக்கின்றன. இப்பொழுது "ஸ்ரீம் ஸ்ரீயை நம:" எழுதி வருகிறேன். மாலை வேளைகளில் விளக்கேற்றி வைத்து விளக்கு ஸ்தோத்திரம் சொல்வது.

சில சமயங்களில் பெருமாள் என்னுடன் பேசவேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். அப்பொழுதெல்லாம் அநேகமாக எனக்கு இடது கண் துடிக்கும். சில சமயங்களில் இப்படி நேராதிருப்பதும் உண்டு. அந்தச் சமயத்திலெல்லாம் எனது ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. கண் துடிக்காத சமயங்களில் "சரி, பெருமாளுக்கு நம்முடன் பேச இஷ்ட மில்லை" என்று நினைத்துக்கொள்வேன். இப்படி நான் நினைத்துக்கொள்வது என்ன பிரமையா? இல்லை ஏதாவது நல்லதுண்டா?

பெருமாளுடன் நாம் பேசுவதற்கு டெலிவிஷனோ, டிரங்க்காலோ, தந்தியோ கிடையாது. இருந்தாலும் பெருமாள்

என்னுடன் பேசுவதாக நான் நினைத்துக் கொள்ளும் வகையில் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவை யாவையும் எனக்கு ஒத்தவைகளாகவே தென்பட்டன. நல்ல ஆத்ம சாதகர்கள் செல்லும் மார்க்கத்துக்கு இவை முற்றிலும் ஒத்திருக்கின்றனவா எனத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

பதில்: ஆத்ம சாதனத்தில் நாமபஜனை, நாமஜபம் என இரு பகுதிகள் இருக்கின்றன. நாமபஜனை பண்ணும்பொழுது வெவ்வேறு மூர்த்திகளுக்குரிய நாமங்களாக மாற்றிக்கொண்டே போகலாம். அப்படி மாற்றுதற்கும் ஒரு நிபந்தனை உண்டு. நாமபஜனைக்காகக் கூடி இருப்பவர்கள் வெவ்வேறு மூர்த்தி களை உபாசிப்பவர்களாக இருப்பார்கள். அவர்களின் நலத்தின் பொருட்டும் அவர்களுக்கு இஷ்ட நிஷ்டையில் உற்சாகம் ஊட்டுதல் பொருட்டும் பலப்பல நாமங்களை மாற்றி மாற்றிப் பாடிப் பஜனை பண்ணலாம். ஆனால் ஆத்ம சாதகன் ஒருவன் தனியனாய் இருந்துகொண்டு தான் மட்டும் நாம பஜனை பண்ணும்பொழுது தன் இஷ்ட மூர்த்தியின் நாமம் ஒன்றை மட்டும் இடையறாது ஓதிக்கொண்டிருக்க வேண்டும். வெவ்வேறு மூர்த்திகளின் நாமங்களைச் சாதகன் ஒருவன் தனக்குத்தானே மாற்றி எடுத்துக்கொள்ளுகிறபொழுது இஷ்ட நிஷ்டை உறுதி பெறாது. இஷ்ட தெய்வத்தின் பாவம் உள்ளத்தில் உருவெடுக்காது. நிலத்தில் நட்ட செடி ஒன்று அதே இடத்தில் வளர்ந்து வேரை ஆழமாகக் கீழே செலுத்துவது போன்றும் கிளைகளை மேலே உயரச் செலுத்துவது போன்றும் ஆத்மசாதகன் அனுபூதி மான் ஆகும் வரையிலும், அனுபூதிமான் ஆனபிறகும் ஒரே நாமத்தில் ஊறியவனாய் இருப்பது அவசியமாகிறது.

மக்கள் எல்லோரையும் நாம் நேசிக்கிறோம். நேசிக்கவும் வேண்டும். ஆனால் தாய் தந்தையரிடத்தில் அலாதிப் பற்றும் அலாதி இணக்கமும் இயல்பாக இருப்பது போன்றது ஆத்ம சாதனமும். பரம்பொருள் ஒருவர். அவருக்குச் சொரூபங்கள் பல. எல்லாச் சொரூபங்களிடத்தும் நாம் பக்திக்கு நிகரான இணக்கம் வைத்திருக்கலாம். எல்லா நாமங்களிடத்தும் நல்ல நம்பிக்கை வைத்திருக்கலாம். ஆனால் நமக்கென்று நாம் தெளிந் தெடுத்திருக்கிற உபாசனா மூர்த்தி இடத்தே அல்லும் பகலும் நமது கருத்தைச் செலுத்திவர வேண்டும். உபாசனா மூர்த்தியின்

ஒரு தனி மந்த்ரத்தையே ஆயுள் காலமெல்லாம் ஜபித்து வர வேண்டும். நல்ல சாதகர்களுக்குத் தொடர்ந்து வரும் ஜன்மங்களிலும் அதே மந்த்ரந்தான் தெய்வாதீனமாக வந்து வாய்க்கும். ஆதலால் ஜபத்துக்குப் பலபெயர்களை மாற்றிமாற்றி எடுத்துக் கொள்வது ஒருபொழுதும் பொருந்தாது. இது ஆத்ம சாதகர்கள் கருத்தில் வைக்கவேண்டிய முக்கியமான விஷயமாகும்.

இஷ்ட தெய்வத்தின் நாமத்தை மனதில் ஜபிப்பதற்கு மாறாகக் காகிதத்தில் எழுதி வைக்கும் பழக்கம் இக்காலத்தில் பலர்க்கிடையில் பெருகிக்கொண்டிருக்கிறது. மனதில் பதிய வைக்கவேண்டியதைக் காகிதத்தில் எழுதுவது சரியான ஆத்ம சாதனமாகாது. வீண்பொழுது போக்குவதைவிடக் காகிதத்தில் இறைவனுடைய நாமத்தை எழுதிக்கொண்டிருப்பது மேலானதே. ஆனால் அது உள்ளத்தினுள் இஷ்டமூர்த்தி பாவனையை வளர்க்காது. அதற்கு மாறாகப் பாகிய திருஷ்டியிலேயே மனதை இழுத்துச் செல்லும். பக்தர்கள் எல்லோரும் தங்கள் உள்ளத்தினுள் வழிபடு தெய்வத்தின் நாமத்தைப் பதியவைக்கின்றனர். அதுவே சரியான ஆத்மசாதனமாகிறது. அவர்கள் சென்றுள்ள செந்நெறியில் செல்ல நாமும் கடமைப்பட்டிருக்கிறோம். கத்தை கத்தையாகக் காகிதத்தில் எழுதிவைப்பதை நாம் ஒருபொழுதும் நல்ல ஆத்மசாதனமாக எடுத்துக்கொள்ளலாகாது.

பகவானுக்கும் நமக்குமுள்ள இணக்கத்தைக் குறித்து எந்த விதமான ஒப்பந்தமும் யாருமே செய்யமுடியாது. சில லக்ஷம் தடவை அவருடைய நாமத்தை ஓதினால் அல்லது எழுதினால் அவன் நமககுக் காட்சி கொடுப்பானா என்னும் கேள்வி நல்ல சாதகனுடைய உள்ளத்தில் ஒருபொழுதும் எழுவதில்லை. ஜபம் செய்வதில் எண்ணிக்கையிலும் சாலச்சிறந்தது பாவனை. பாவனை வலுத்து வரவர எண்ணிக்கை தானாக நின்றுவிடுகிறது. எத்தனை தடவை நான் ஓதினேன் என்னும் எண்ணம் தானாக மனதினின்று நழுவி மறைந்துபட்டுப் போகிறது. சாதனத்தில் முதிர்ந்து மேலே வரவர ஒருதடவை நாமம் உச்சரிப்பதற்குள் இஷ்ட தெய்வ பாவனை வலுத்துவிடும். அந்தப் பாவனையில் உறைந்திருப்பது நல்ல தியானமாகிறது. எனவே ஜபம் வலுத்துவரும்பொழுது அது தியானமாக மாறுகிறது. முதிர்ந்த தியானமே சமாதியாகப் பரிணமிக்கிறது.

சாதனத்தில் ஆத்மசாதகன் ஒருவன் மேல்நோக்கிப் போவதற்கு ஏற்பத்தான் இஷ்ட மூர்த்தியின் சாந்நித்தியத்தைத் தனது உள்ளத்தின் உள்ளேயே உணருகிறான். தெய்வம் நமக்குப் புறம்பாகப் பரமபதத்திலோ வேறு எங்கேயோ வீற்றிருக்கிறார் என்று எண்ணிக்கொண்டிருக்கும் காலமெல்லாம் நாம் அக் ஞானத்தில் உழல்கிறோம். அவரை உள்ளத்தின் உள்ளேயே உணரும்பொழுதே சாதனத்தில் நாம் மேல்நோக்கி வந்திருக் கிறோம் என்பது வெளியாகிறது. ஆதலால் தெய்வத்தோடு இணக்கம் பண்ணுதற்கு நம்மிடத்து அமைந்துள்ள புறக்கரணங் களின் செயல்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலியன பயன்படமாட்டா. இனி டெலிவிஷன், டிரங்க்கால், தந்தி போன்ற பௌதிக கரணங்கள் பூதவுலகுக்குப் பயன்படுமே ஒழிய ஆத்மபோதத்துக்கோ, பரமாத்மாவுடன் யோகம் பண்ணு தற்கோ ஒருபொழுதும் பயன்படமாட்டா. ஜடமாயிருக்கும் மனது ஜபத்தின் மூலம் சேதனமாக மாறுகிறது. அப்பொழுது பரமாத்ம சாந்நித்தியத்தைத் தன்னுள் அது உணர்கிறது.

உள்ளத்தினுள் பக்திக்கேதுவான நல்ல உணர்வுகள் உண்டாகும்பொழுது கண் துடிப்பதும், கண்ணீர் மல்குவதும் ஆனந்தம் மேலிடுவதும் இயல்பே. இவை போன்ற அறிகுறிகள் பாராட்டுதற்குரியனவாம்.

கேள்வி: *(700)* ஜாதகம் கணிப்பதில் ஏதேனும் பொருள் உண்டா? ஒரு ஜீவன் உலகில் ஜனித்ததும் ஜாதகம் கணிக் கப்படுகிறது. அந்த ஜாதகத்தை வைத்துக்கொண்டு அந்த ஜீவன் உலகில் எப்பாங்கில் உயிர் வாழ்வான் என்று கூறப் படுகிறது. பிராரப்த கர்மத்தை மாற்ற எவர்க்கும் இயலாது என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையென்றால் மனிதப் பிரயத்தனத்தில் பயன் ஒன்றும் இல்லை என்கிற முடிவுக்கு வந்தாக வேண்டும். முன்னேற்றத்துக்கோ பிற்போக்குக்கோ மனிதன் பொறுப்பாளியல்ல என்றும் வெளியாகிறது. பிறகு மானுட முயற்சிக்கு இடமெங்கே?

பதில்: ஜாதகத்தைப்பற்றிய சாஸ்திரத்தில் பெரிதும் உண்மை உண்டு. ஒரு ஜீவன் பிறக்கின்ற நேரத்தைச் சரியாகக் கணித்தால் அந்த நேரத்தில் எந்தெந்தக் கிரகம் எந்த வீட்டில் இருக்கிறது

என்பதை அத்தகைய கணிதசாஸ்திரிகள் கண்டுபிடித்து விடுவார்கள். கிரகங்களுக்கிடையிலுள்ள தொடர்பையும் அதற் கேற்றபடி கிரக பலனைக் கூறுவதும் ஜோதிட சாஸ்திரம் என்னும் பெயர் பெறுகிறது. ஜோதிடன் ஒருவன் கிரகங்களின் இருப்பிடத்தில்தான் முழுக்கருத்தைச் செலுத்துகிறான். இயற்கையில் உண்டாகிற இத்தகைய அமைப்பை தீர்க்கதரிசிகள் ஆழ்ந்து ஆராய்ந்தார்கள். அத்தகைய ஆராய்ச்சியின் விளைவாக அவர்கள் கண்டறிந்த உண்மை ஒன்று உண்டு. கிரகங்கள் மாறி அமைவதால் எந்த வேளையில் எத்தகைய கிரக பலனை உண்டுபண்ண வல்லவைகளாக அவைகள் அமைகின்றனவோ அவ்வேளையில் பிறக்கின்ற ஜீவனுக்கு அத்தகைய கிரகபலன் வினைப்பயனாக அமைகிறது.

ஜீவனுக்கு அமைந்த வினைப்பயன் கிரகங்களால் உண்டு பண்ணப்பட்டதன்று. தன்னுடைய பிராரப்த கர்மமாக அது அமைகிறது. எத்தகைய சுகத்தையும் துக்கத்தையும் அனுபவிப் பதற்கு ஏற்றவனாக அவன் பிறந்திருக்கின்றானோ அது அவனு டைய பிராரப்த கர்மம். முற்பிறப்பில் தன் முயற்சியால் அவன் தனக்குத்தானே தேடிக்கொண்டது அது. இப்பிறப்பில் முறைபிறழாது அது பலன்கொடுக்க ஆரம்பிக்கிறது. இவனு டைய வினைப்பயனுக்கும் கிரகங்களால் உண்டாகும் பயனுக்கும் இயல்பாகவே தொடர்பு ஏற்படுகிறது. இயற்கையிலுள்ள ஆகர்ஷண சக்தி போன்றது இது. இரண்டு கோளங்கள் ஒன்றை ஒன்று கவர்ந்து இழுப்பது ஆகர்ஷண சக்தி என்னும் பெயர் பெறுகிறது. அதேவிதத்தில் கிரகபலன் என்பதும் ஒரு ஜீவனுடைய பிராரப்த கர்மமென்பதும் ஒன்றோடொன்று இணக்கம் காட்டுகிறது. அதிலிருந்து மற்றொரு உண்மையும் புலப்படுகிறது. எந்த ஜீவன் எத்தகைய கர்மபலனை அனுபவிக்கத் தகுதியுடையவன் ஆகின்றானோ அத்தகைய கிரகபலன் அமைகின்ற வேளையில் அவன் பிறப்பெடுக்கின்றான் என்று வெளியாகிறது. ஆகவே, கிரகங்களின் இயக்கத்துக்கும் மனிதனுடைய கர்மபலனுக்கும் தொடர்பு இருக்கிறது என்பது புலப்படுகிறது.

கிரகங்கள் மனிதனை ஒருவிதச் சூழ்நிலையில் வைத்து விட்டது என்பது உண்மையல்ல. அவனுடைய பிராரப்த கர்மமே

அதற்கேற்ற சூழ்நிலையில் அவனை வைக்கிறது. பிராரப்த கர்மத்தை நாம் தெரிந்துகொள்ள முடியாது. ஞானிகள் தெரிந்து கொள்வார்கள். பிராரப்த கர்மத்துக்குப் பதிலாகக் கிரகபலன் என்கின்ற ஒரு கோட்பாட்டை ஜோதிட சாஸ்திர மூலமாகத் தெரிந்துகொள்ள நமக்கு இயலும். வாஸ்தவத்தில் ஜோதிடன் சொல்லுவது கிரகபலன். அது அந்த ஜாதகனுடைய பிராரப்த கர்மத்தையும் பெரிதும் விளக்கி விடுகிறது.

பிராரப்த கர்மத்துக்கு மாற்றுத்தரவோ, வேகத்தை அதிகப் படுத்தவோ, தடுக்கவோ மனிதனுக்கு இயலும். அவ்வளவு தூரம் அவனுக்கு இச்சா சுதந்திரம் உண்டு. ஆகையினாலேதான் ஜோதிடம் பகர்வது முற்றிலும் மெய்யாவதில்லை. ஏகதேச உண்மையை அதில் காணலாம். ஒவ்வொரு மனிதனும் ஜோதிட சாஸ்திரத்தில் வைக்கின்ற கருத்தைவிட அதிகப்படியான கருத்து தன் முயற்சியிலும், ஈசுவர அனுக்ரஹத்திலும் வைப்பது அவசியம்.

எறும்புகள் வளையிலிருந்து தீனியைத் தூக்கிக்கொண்டு வீட்டின் மேல் பகுதிக்கு ஏறிச்சென்றால் மழைவரும் என்கின் றோம். மழை வருவதை இயற்கையாக உணர்ந்த எறும்பு பாதுகாப்புக்காக அப்படிப் போகிறது. அதை ஆராய்ந்து உணர்ந்தவர்கள் எறும்பின் செயலுக்கும் இனி வரப்போகும் மழைக்கும் தொடர்பு கண்டனர். எறும்பு மேலேறுவதால் மழை வருவதல்ல, தன்னைக்காக்க அது மேலே ஏறுகிறது. இனிவரும் மழைக்கு அது அறிகுறியாகிறது. அங்ஙனம் தன் வினைப்பயனையே மனிதன் அனுபவிக்கிறான். இயற்கையில் கிரகங்களின் அமைப்பு அதற்கு விளக்கமாக அமைந்திருக்கிறது. அதற்குமேல் இவனுடைய வாழ்க்கை முறையை மாற்றும் வல்லமை கிரகங்களுக்குக் கிடையாது. தன் முயற்சியால்தான் தன் வினையை அவன் மாற்றிக்கொள்கிறான். பழைய வினைப் பயனுக்கு ஏகதேசம் விளக்கமாக கிரகங்கள் அமைகின்றன.

கேள்வி: *(701)* ஜோதிடர்கள் சொல்கின்ற கிரகக் கோளாறுகளுக்குத் தேவதைகளுக்குப் பிரீதி செய்தால் நன்மை ஏற்படுமா? செய்யாமல் விட்டுவிட்டால் கெடுதி உண்டாகுமா? செய்தாலும் பலன் சொன்னபடி திருப்தி யில்லை. காரணம் என்ன?

பதில்: ஜோதிடசாஸ்திரம் முற்றிலும் உண்மையானதுமல்ல; முற்றிலும் பொய்யானதுமல்ல. அதில் ஏகதேசம் உண்மையுண்டு. தீவிரமாக ஆத்ம சாதனத்தில் ஈடுபடுபவர்கள் ஜோதிடத்தைப் பற்றி ஒன்றும் நினைப்பதில்லை. ஜோதிடத்தில் கருத்து வைக்கிறவர்களுக்குப் பக்தி ஓங்காது என்பது கோட்பாடு. இனி, வெற்றிகரமாக உலக வாழ்க்கையை நடாத்தி வருகிறவர்களும் ஜோதிடத்தில் கருத்து வைப்பதில்லை. இகலோக வாழ்க்கையிலோ, பாரமார்த்திக வாழ்க்கையிலோ உறுதியாகச் செல்லாதவர்களே ஜோதிடத்தில் நம்பிக்கை வைத்து அதை நாடிச் செல்கின்றனர். கிரகபலன் எதுவாயிருப்பினும் மக்கள் தாம் வாழவேண்டிய வாழ்க்கையை முறையாக வாழ்ந்து வருவதே அவர்கள் செய்யக்கிடக்கும் கடமையாகும். ஈசுவரப் பிரீதி, தேவதைகளின் பிரீதி, மானுடப் பிரீதியாகிய எல்லாப் பிரீதிகளும் வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்வதில் அடங்கிவிடுகின்றன.

கேள்வி: *(702)* புத்திரன் இல்லாவிட்டால் ஒருவனுக்கு நற்கதி கிடையாதா? கிடைப்பதாயிருந்தால் பல ஸ்தல தீர்த்த யாத்திரைகள் செய்யவேண்டும் என்கிறார்கள் ஜோதிடர்கள். அப்படிச் செய்தும் பலன் கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது?

பதில்: புத்திரபாக்கியம் இல்லாத கிரஹஸ்த வாழ்வு குறைபட்ட வாழ்வு ஆகிறது என்னும் கொள்கை பலர்க்கிடையில் உண்டு. இக்கொள்கைக்கு ஆதாரம் ஒன்றுமில்லை. இக்காலத்தில் பலபேருக்குச் சற்புத்திரர் வாய்ப்பதில்லை. பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களே பெரிதும் மகப்பேறு ஆக வாய்த்துக் கொண்டிருக்கின்றனர். மிகைப்பட மக்களைப் பெற்றெடுப்பது மகாபாபம் என்கின்ற கோட்பாட்டை இக்காலத்தில் வற்புறுத்திப் புகட்ட வேண்டியது அவசியமாகிறது. உணவு, உடைகொடுத்து மக்களைப் பேணத் தகுதியற்ற நிலையிலிருப்பவர்கள் பெருமிதமாக மக்களைப் பெறுவது பெரும் தோஷமாகும். மகப்பேறு அமையாது போவது இக்காலத்தில் பாபமாகாது. பல குழந்தைகளைப் பெறுவதே பொருந்தாத செயல். இப்பொழுது நம் நாட்டிலுள்ள மிகப்பெரிய தேசீயப் பிரச்னை மிகைப்பட்ட ஜனத்தொகையைப் பற்றியதாம். ஆண்டுதோறும் மக்கள்

எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. அத்தனை பேருக்குத் தேவையான நல்லுணவு நாட்டில் இல்லை. ஒரு புள்ளி விவரத்தை ஈண்டுச் சீர்தூக்குவது பொருந்தும். அமெரிக்காவின் விஸ்தீரணம் இந்தியாவைவிட மூன்று மடங்கு அதிகமானது. அமெரிக்காவின் ஜனத்தொகை இந்தியாவின் ஜனத்தொகையில் கால்பங்குதான் இருக்கிறது. ஆதலால் நாட்டிலிருக்கும் மக்களுக்கும் கால்நடைகளுக்கும் அவர்கள் ஏராளமாக நல்லுணவைக் கொடுத்துப் புஷ்டி அடைந்திருக்கின்றனர். இந்தியாவிலிருக்கும் பெருமிதமான ஜனக்கூட்டத்துக்கும், கால்நடைகளுக்கும் உணவு போதாமையினால் அவ்வுயிர் களனைத்தும் மெலிந்து கிடக்கின்றன. இந்த நெருக்கடியில் மகப்பேறு வேண்டுமென்று நாடாதிருப்பவர்கள் எல்லாம் நாட்டுக்கு நலம் செய்பவர்கள் ஆகிறார்கள். கடவுள் பக்தியைப் பெறத் தீர்த்த யாத்திரை பண்ணலாம். பிள்ளைவரம் தேடிக் கோயில் குளங்களுக்குப் போகலாகாது.

கேள்வி: *(703)* ஒருவனுடைய கைரேகையைப் பார்த்து விட்டு ஒரு ஜோதிடர் "உனக்குக் கல்யாணம் ஆகியே தீர வேண்டும். குடும்பத்தில் பல கஷ்டங்களை அனுபவித்தே ஆகவேண்டும். இது ஆண்டவனால் எழுதப்பட்டது, இதை யாராலும் மாற்ற முடியாது" என்று சொல்லுகிறார். ஆனால் அவருக்குக் குடும்பத்தில் வாழச் சிறிதும் பிரியம் கிடையாது. அவர் ஆண்டவனை அடைய வேண்டுமென்று நாள்தோறும் ஜபம், தியானம், பிரார்த்தனை முதலியவைகளைச் செய்து கொண்டு குடும்பத்தில் சிக்காமல் இருப்பதற்காக ஆண்டவனை வேண்டிக்கொண்டு வருகிறார். ஆகையால் அவர் கைரேகையில் உள்ளபடி திருமணம் நடந்தே தீருமா அல்லது விடுதலை கிடைக்குமா?

பதில்: வினைப்பயன் என்ற ஒன்று உண்டு. காரணகாரிய மாக அது அமைந்துள்ளது. நல்ல செயலைச் செய்தவன் இனிய பயனை அடைகிறான். தீயவினையாற்றியவன் இன்னாத பயனை அடைகின்றான். முறைபிறழாது வினைப்பயன் உயிர்களுக்கு வாழ்க்கையில் வந்தமைகிறது. அப்படி வரப் போகின்ற வினைப்பயனை முற்கூறியே விளக்குகின்ற கலை

ஞானங்கள் ஜோதிடமென்றும், ரேகை சாஸ்திரமென்றும் பெயர் பெறுகின்றன. இந்தச் சாஸ்திரங்களை முறையாக ஆராய்ச்சி பண்ணிப்பார்த்தால் இவைகளில் பெரிதும் உண்மை இருக்கிறது என்பது புலப்படும். காரணத்தைக் கண்டுபிடித்துவிட்டால் பிறகு காரியத்தை யூகித்துச் சொல்லிவிடலாம். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். பூமி ஒன்றில் விளைவுத்திறன், அதன் விஸ்தீரணம் அதிலே விதைக்கப்பட்டிருக்கின்ற தான்யம், போட்டுள்ள எரு, பெய்கின்ற பருவமழை ஆகியவைகள் முறையாக நமக்குத் தெரிந்துவிட்டால் அதில் இவ்வளவு தான்யம் விளையுமென்று மதிப்புப்போட்டுச் சொல்லிவிடலாம். அங்ஙனம் மனிதனுடைய வினைப்பயனை விளக்குகின்ற முறையிலே கிரகங்களின் அமைப்பும், ரேகையின் அமைப்பும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை ஆன்றோர்கள் கண்டுபிடித்தார்கள். சாதாரணமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றவர்களுக்கு இவை களைக் கணித்து ஓரளவில் இனி நிகழப்போகின்றவைகளைப் பற்றிச் சொல்லிவிடலாம்.

ஆனால் பாரமார்த்திக வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபடு கின்றவர்களுக்கு ஜோதிடமும், ரேகை சாஸ்திரமும் உதவமாட்டா. இவைகளில் தென்படுவது ஒன்று, வாழ்க்கையில் நிகழ்வது மற்றொன்றாகப் போய்விடும். ஜோதிட சாஸ்திரமே அதன்கண் உள்ள குறைபாட்டை எடுத்து விளக்குகின்றது. கிரக அமைப்பு ஒன்றிருக்க அதற்கு நான்கு, ஐந்து பலன்களை அது சொல்லுகின்றது. அவைகளுள் ஜோதிடம் பார்க்கின்ற மனிதன் எதைச் சொன்னால் கேட்கின்ற மனிதன திருப்தியடைவான் என்று பார்த்துப் பகர்கிறான். அப்போக்கில் ஜோதிடம் பகர்வது பொருந்தாது. ஒருவன் உண்மையே பேசிப் பழகவேண்டும். பிறரைத் திருப்திப்படுத்துதற்காகவென்று ஜோதிடம் பகரலாகாது. நான்கு, ஐந்து பலன்களில் எந்த ஜாதகனுக்கு எது பலித மாகும் என்று மனதை நடுநிலையில் வைத்துச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் - இப்படியெல்லாம் அதில் பகரப்பட்டிருக்கிறது. இவையாவையும் மீறிக் கடவுள் நாட்டத்தில் செல்லுகின்றவன் ரேகை சாஸ்திரத்தையும் ஜோதிட சாஸ்திரத்தையும் பொய்யாக்கு கின்ற பாங்கில் போகமுடியும். ஆத்ம சாதகர்கள் இவைகளில் கருத்து வைக்கலாகாது. அவர்கள் முற்றிலும் கடவுளைச்

சார்ந்திருக்கவேண்டும். கடவுளைச் சார்ந்திருப்பதால்தான் தங்கள் வினைப்பயனைத் தாங்களே வென்று விடுகின்றனர்.

கேள்வி: *(704)* கைராசி என்பது என்ன? எனக்கு இரு நண்பர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவரை என்னோடு அழைத்துக் கொண்டு சென்றால் அந்தக்காரியம் மிகச் சாதாரணமானதானால் கூட நடைபெறுவதில்லை. மற்றொரு வருடன் சென்றால் மிகவும் சாதாரணமாக எந்தக் காரியமும் நடைபெறுகின்றது. முதல் நண்பர் எந்தக்காரியத்தில் தலை யிட்டாலும் அது தடைப்பட்டே வருகின்றது. இதைப் பலமுறை சோதித்து விட்டேன். இது எதனால்? அவரிடம் தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அவரும் காலத்தை நொந்து கொள்கின்றார். உண்மையில் இது காலத்தின் தவறா?

பதில்: சிலர் தொடுத்த கர்மங்களிலெல்லாம் தோல்வி யடைந்து வருவதையும் இன்னும் சிலர் வெற்றியடைந்து வருவதையும் ஆங்காங்குக் காண்கின்றோம். இதைக் கைராசி என்று பகர்வது பொருந்தாது. மனம்போல மாங்கல்யம் என்பது வாழ்க்கையைப் பற்றிய உண்மை. ஆதலால் மனபரிபாகத்தின் விளைவு என்று சொல்லுமிடத்து அது பொருத்தமுடைய தாகும். ஒருவருக்கு ஏற்பட்டுள்ள இரண்டொரு தோல்வியை முன்னிட்டுத் தான் எக்காரியத்தில் இறங்கினாலும் அது நிறைவேறாது என்னும் மனத்தளர்வு அவருக்கு வந்துவிடுகிறது. புதிய செயல்களில் பிரவேசிக்கும் பொழுதெல்லாம் அது தோல்வியடையப் போகிறது என்கிற கருத்துடனேயே அதைச் செய்ய முன்வருகிறார். அத்தகைய மனநிலை தோல்வியை உண்டுபண்ணிவிடும். ஏற்கனவே தளர்வுற்றிருந்த மனது பின்பும் அதிகமாகத் தளர்வுறுகிறது. இப்படி அம்மனிதன் மனத்தளர் விலேயே மேலும் மேலும் கீழ்மையுற்று விடுகிறான்.

தான் அடைந்துவரும் வெற்றியைக் குறித்து மற்றொரு மனிதன் செருக்குற்று விடுவதும் உண்டு. அப்படிச் செருக்குறுவது தான் விரையில் கீழ்மையடையப் போவதற்கு முன் அறிகுறி யாகும். மனிதனுக்குச் செருக்கு உதவாது; சுயநம்பிக்கையில்லாத் தளர்வும் உதவாது. இந்த இரண்டுக்கும் பொதுவாகக் கடவுளை

நம்பியிருந்து கடவுளின் திருவுளப்படி ஆகட்டும் என்கின்ற எண்ணத்துடன் செயலில் பிரவேசிப்பது நலம். தொடுத்த கர்மம் தோல்வியடைந்து போய்விட்டால் அந்தத் தோல்வியிலும் ஒரு நலன் உண்டு என்பதைக் கடவுளை நம்பியிருப்பவன் பின்பு தெரிந்துகொள்வான். துவக்கிய வினையில் வெற்றி யடைந்துவிட்டால் அது ஈசன் செயல் என்பதை அவன் அறிந்து கொள்ளமுடியும். ஆக, வெற்றி தோல்வி ஆகிய அனைத்துக்கும் மூலகாரணமாய் இருப்பவர் கடவுள். எல்லாம் அவன் செயல். இத்தகைய மனப்பான்மையை வளர்த்து வருவது உசிதம். இதுவே வாழ்க்கைத் தத்துவத்தை உள்ளபடி அறிந்து கொண்டதற்கு அறிகுறியாகும். வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாதிருந்து தனக்கு ஏற்படும் கடமையைக் கடவுளை நம்பியிருந்து செய்கின்றவனுக்கு கைராசியைப் பற்றிய கேள்வி எழ இடமில்லை. எல்லாம் ஈசன் செயல் என்கின்ற உறுதி உண்டாகிறது. மன அமைதியும் வருகிறது. ஆதலால் கைராசி என்னும் மனப்பான்மையைத் தவிர்த்துவிட்டுக் கடவுளின் திருவுளம் என்கின்ற மனப்பான்மையை வளர்த்து வருவது மேலானது.

கேள்வி: *(705)* சில காரியங்கள் இனிது நடைபெறவும் தொடர்ந்து நன்கு நடைபெறவும் சுபமுகூர்த்தம் பார்த்துச் செய்யப்படுகிறது. அக்காரியம் சுபமுகூர்த்த நேரத்தில் நிறை வேறுவதும் உண்டு; சற்றுத் தவறி நடைபெற்று விடுகிறதும் உண்டு. இதில் பலாபலன்கள் மாறிக்கிடைக்கிற சந்தர்ப் பங்கள் ஏராளமாக இருக்கின்றன. சுபமுகூர்த்தத்துக்குச் சுப பலன் கொடுக்கும் சக்தி உண்டா? அசுப முகூர்த்தத்துக்கு அசுப பலனேதான் உண்டாகுமா? அல்லது அந்தப் பலனுக்குக் காரணம் வினைப்பயனா? நற்காரியங்களைச் செய்தற்குச் சுபநேரம் பார்க்கவேண்டியதில்லையா? அருள்கூர்ந்து விளக்க வேண்டுகிறேன்.

பதில்: ஒவ்வொரு நாளிலும் சுபமுகூர்த்தம் அசுபமுகூர்த்தம் ஆகிய இரண்டு பகுதிகளும் அமைந்திருக்கின்றன என்னும் கொள்கை ஐதிகமாக வந்துள்ளது. குளிகைக் காலத்தைச் சுப முகூர்த்தம் என்றும், ராகு காலத்தை அசுபமுகூர்த்தம் என்றும்

நாம் நம்பி வருகின்றோம். இதில் ஒருசிலர் மிகைபடக் கருத்தைச் செலுத்துகின்றனர். வேறுசிலர் ஏதோ சிலவேளைகளில் கருத்தைச் செலுத்துகின்றனர். பெரும்பாலோர் ராகுகாலம், குளிகை காலம் ஆகிய இவைகளைப்பற்றி நினைப்பதே இல்லை. தம்போக்கில் அவர்கள் வினையாற்றிக்கொண்டு போகிறார்கள். அப்படிச் செய்கின்றவர்கள் பெரும்பாலும் முன்னேற்றமடைந்து வருகின்றனர். நல்ல நேரம் பார்த்து ஒரு காரியத்தில் இறங்க வேண்டும் என்னும் கருத்துடையவர்கள் பெரும்பாலும் சந்தேகப் பேர்வழிகள் ஆகின்றனர். அவர்களுக்கு மனவுறுதி படிப்படி யாகக் குறைந்து போய்விடுகிறது. நம்முடைய அன்றாட வாழ்க் கையில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது கேள்வி. நேர்மையான பாங்கில் வாழ்க்கை நடத்துகின்றவர்கள், கணப்பொழுதும் காலத்தை வீண்போக்காது காரியங்களைச் செய்துகொண்டு வருபவர்கள், சுறுசுறுப்பாகத் தமக்கு ஏற்பட்ட கடமையைச் செய்துகொண்டிருப்பவர்கள் - ஆகிய இத்தகைய கர்ம வீரர்களுக்கு நல்ல காலம், கெட்ட காலம் ஆகியவை களைப்பற்றி எண்ணிப்பார்க்க நேரமில்லை. முறையாகத் தம் கடமைகளை அவர்கள் செய்துகொண்டு போகின்றனர். அத்தகை யவர்கள் பெரிதும் வெற்றியடைகின்றனர். ஏதோ சில சமயங் களில் துவக்குகின்ற சில சத்கர்மங்கள் இருக்கின்றன. வீடு கட்டுதல், குடிபுகுதல், மணம்புரிதல், தீர்த்தயாத்திரை போதல் இவை போன்ற அசாதாரணமான விசேஷ கர்மங்களுக்குச் சுபமுகூர்த்தங்களை நாடுதல் நலம். ஆனால் சுபமுகூர்த்தத்தில் செய்யப்படும் கர்மங்கள் அனைத்தும் வெற்றிகரமாகவோ, நலம் தருபவைகளாகவோ அமைந்துவிடும் என்று உறுதிகூற முடியாது. நல்ல நேரத்தின் ஆதிக்கம் ஓரளவு நல்வினைக்குச் சகாயம் செய்கிறது. ஆனால் நல்ல நேரத்தைவிட மேலானது நல்ல மனப்பான்மையும், நல்ல செயலும். ஆதலால் மனிதன் எக்கர் மத்தைச் செய்தாலும் அதை எந்த நேரத்தில் செய்கிறான் என்பதைப் பொருள்படுத்தாது என்ன எண்ணத்துடன் செய்கிறான் என்பதையே கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். நல்வாழ்வு வாழ்கின்றவர்களுக்கு எல்லா நேரங்களும் நல்ல நேரங்கள் என்று முடிவு கட்டலாம். தீவிரமாக வினையாற்று கின்றவர்கள் காலத்தில் கருத்தைச் செலுத்துவதில்லை.

கேள்வி: (706) சகுனம் பார்ப்பது சரியா?

பதில்: சகுனம் பார்ப்பதில் ஓரளவு உண்மை உண்டு. ஆனால் மனிதன் முற்றிலும் அதில் கருத்து வைக்கலாகாது. மானுடன் ஒருவன் தன் நண்பன் ஒருவனைச் சந்திக்கப் புறப்பட்டுப் போகிறான். பொருந்தாத சகுனம் தென்படுகிறது. பெரும்பாலும் அந்தச் சகுனத்தின்படி நண்பனைச் சந்திக்க முடிவதில்லை. ஆதலால் புறப்பட்டுப் போவதை நிறுத்தி விட்டு அடுத்த நாள் போவது உசிதம்.

இனி, பரீட்சை எழுதச் செல்லும் மாணாக்கன் ஒருவன் சகுனம் சரியில்லை என்று தன் முயற்சியை நிறுத்த முடியாது. அவன் சகுனம் பார்ப்பதும் பொருந்தாது. உண்பது, நீராடுவது போன்ற நித்திய கர்மங்களுக்கும் நாம் சகுனம் பார்ப்பதில்லை. ஆதலால் அவசியம் போய்க் கவனிக்கவேண்டிய காரியங்களைக் குறித்து மனிதன் சகுனம் பார்க்கலாகாது. தெய்வத்தை முற்றிலும் நம்பியிருப்பவர்களும் சகுனம் பார்க்க வேண்டியதில்லை. பெரும் பாலோர் நல்ல சகுனங்கள், கெட்ட சகுனங்கள் என்று நினைப்பதே இல்லை. தம்போக்கில் அவர்கள் வினையாற்றிக்கொண்டு போகிறார்கள். அப்படிச் செல்கின்றவர்கள் பெரும்பாலும் முன்னேற்றமடைந்து வருகின்றனர். நல்ல நேரம் பார்த்து ஒரு காரியத்தில் இறங்கவேண்டும் என்னும் கருத்து உடையவர்கள் பெரும்பாலும் சந்தேகப் பேர்வழிகள் ஆகின்றனர். அவர்களுக்கு மனவுறுதி படிப்படியாகக் குறைந்து போகிறது. ஒரு காரியத்தை இன்றைக்குச் செய்யலாமா அல்லது நாளைக்குச் செய்யலாமா என்று தீர்மானம் செய்யாதிருப்பவன் வேண்டுமானால் ஓரளவு சகுனத்தில் கருத்தைச் செலுத்தலாம். பொதுப்படச் சகுனம் பார்க்கும் மனப்பான்மை உதவாது.

கேள்வி: (707) பகலில் ராகுகாலம், குளிகை காலம் உண்டு. இரவில் கிடையாது, ஏன்? பகலில் நேரம் பார்த்துத்தான் செய்யவேண்டுமா?

பதில்: கவனிப்பதற்கு ஏராளமாக அலுவல்கள் படைத்திருப் பவர்களுக்கு ஒவ்வொரு கணப்பொழுதும் நல்ல நேரமே. அனுகூலமான நேரம், பிரதிகூலமான நேரம் என்னும் பாகுபாடு வேலை செய்வதற்கு ஒன்றுமில்லாது சோம்பித்திரிபவரிடத்துப்

பெரிதும் காணப்படும். மருத்துவ நிபுணர் ஒருவர் இருக்கிறார். அவர் ஆங்காங்குச் சென்று நோய்வாய்ப்பட்டிருக்கிறவர்களைக் கண்ணுங்கருத்துமாகக் கவனிக்கிறார். அழைக்கிற இடங்களுக் கெல்லாம் செல்ல அவருக்கு அவகாசம் கிடைப்பதில்லை. நோயாளிகளை முறையாகக் கவனிப்பதால் பலபேர் அவரைத் தேடிப்பிடித்து அவரவர் வீட்டுக்கு அழைத்துச் செல்கின்றனர். அத்தகைய மருத்துவருக்குக் குளிகைகாலம், ராகுகாலம் கவனிக்க நேரமில்லை. அப்படிக் கவனிப்பதும் அவசியமன்று.

பக்தன் ஒருவன் ஓடியோடிச் சமுதாயத்துக்குப் பணிவிடை பண்ணுகிறான். ஆருயிர்ச் சேவையை ஆண்டவன் சேவையாகக் கருதி முழுமனதோடு அவன் ஆற்றி வருகிறான். அத்தகைய பக்தனுடைய வருகையை மக்களும் ஆர்வத்தோடு எதிர்பார்க் கின்றனர். மகிழ்வுடன் அவனோடு உறவாடுகின்றனர். இத்தகைய இணக்கம் வைப்பதற்கு அனுகூலமான நேரம், பிரதிகூலமான நேரம் என்ற பாகுபாடு இல்லை. வாய்க்கின்ற நேரமெல்லாம் நல்ல நேரமே.

ஆங்காங்கு வீடுகளில் அமைந்திருக்கின்ற தொலைபேசியும், மின் விளக்கு அமைப்பும் அடிக்கடிக் கெட்டுப்போகின்றன. அவற்றை முறையாகப் பழுது பார்க்கின்றவன் ஓடியோடிப் பழுதுபட்டிருக்கும் அந்த அமைப்புகளைச் சரிப்படுத்துகின்றான். அப்படிச் செய்கின்றவனுக்கு நல்ல நேரம், கெட்ட நேரம் பார்க்க அவகாசமில்லை.

வீடு வீடாகச் சென்று உணவுப் பொருள்களை விற்கின்ற வர்கள், அவசர அவசரமாக ஓடி ஆங்காங்குத் தேவையாயிருக்கும் காய் வகைகளையும், ஏனையப் பண்டங்களையும் விற்று வருகின்றனர். அத்தகையவர்களுக்கு நல்ல நேரம், கெட்ட நேரம் பார்க்க அவகாசமில்லை.

தபால்காரன் ஓடியோடி வீடுகளில் கடிதங்களைப் பட்டு வாடா பண்ணுகின்றான். அவனுக்கு எல்லா நேரமும் நல்ல நேரமே. ராகுகாலத்தில் கடிதம் தரலாகாது என்னும் எண்ணம் அவனுக்கு வருவதில்லை. அப்படி எண்ணம் வந்தால் அவன் உபத்திரவத்துக்கு ஆளாவான்.

தொழிற்சாலை ஒன்றில் தீப்பற்றிக்கொண்டு எங்கும் அதி வேகமாகத் தீ பரவுகிறது. தீ அணைக்கிற கூட்டத்தாருக்கு

அந்த அவசரச் செய்தி எட்டுகிறது. நல்ல நேரம் பார்த்துப் போகலாம் என்று அக்கூட்டம் காத்திருப்பதில்லை. நேரத்தைப் பொருள்படுத்தாது தங்கள் கடமையைச் செய்ய அக்கூட்டத்தினர் பறந்தோடுகின்றனர்.

சுருங்கச் சொல்லின் குளிகைகாலம், ராகுகாலம் எல்லாம் வீண்பொழுது போக்குபவர்களுக்கிடையிலேதான் உள்ளன. ஆதலால் இந்த நம்பிக்கையை அறவே ஒதுக்கி வைத்துவிட்டு அவரவர்க்கு அமைந்துள்ள கடமைகளை விரைந்தோடி நன்கு நிறைவேற்றுவதே நன்மக்களுடைய செயலாகும்.

கேள்வி: *(708)* பில்லி சூனியம் செய்வது சாத்தியமா? அதை அறிவதும் அவ்வாறு செய்யப்பட்டுள்ளதை நிவர்த்திப்பதும் எவ்வாறு? 'சங்கரர்' சூன்யம் வைத்துக் கொல்லப்பட்டார் என்பது உண்மையா?

பதில்: பில்லி சூனியம் சாத்தியமானதே. இதற்குப் பிரமாணம் அதர்ம வேதத்தில் இருக்கிறது. அம்முறையைக் கையாண்டு பிறருக்குத் தீங்கு விளைவிப்பதே அதன் முக்கியமான நோக்கமாகிறது. பில்லி சூனியத்துக்கு நிவாரணம் உண்டு. அதுவும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இக்கலை இக்காலத்தில் பெரிதும் மறைந்து போய்விட்டது. அரிதிலும் அரிதாக இக்கலையைக் கையாள வல்லவர் யாரோ சிலர்தான் இக்காலத்தில் இருக்கின்றனர். சங்கரர் சூனியத்துக்கு இலக்காகிச் சிறிது காலம் வருந்தினார். ஆனால் கொல்லப்படவில்லை. சங்கரர் போன்று சுவாமி விவேகானந்தரும் இந்தக் கலைக்கு இலக்காகி மண்டையிடியால் வருந்தினார். தமக்கேன் இவ்வாறு நிகழவேண்டுமென்று அவர் அன்னை சாரதாதேவியிடம் முறையிட்டார். அதற்குப் பொருத்தமான விடையைச் சாரதா தேவியார் விடுத்தார். இங்ஙனம் செய்த ஏவல் நிரந்தரமாக இருக்கமாட்டாது. அப்படி வருகிற துயரத்தையும் ஈசன் செயல் என்று ஏற்றுப் பொறுமையுடன் அத்துயரத்தைச் சகிப்பது நல்ல ஆத்ம சாதனமாகிறது. அதைக் குறித்துச் சான்றோன் ஒருவன் யாரையும் நொந்து கொள்ளலாகாது. அப்படிப் பழகினால் கேடாக ஏவப்பட்டது ஆத்ம சாதகனுக்குப் பொறுமை பழகு தற்குப் பயன்படுகிறது. பொறுமையில் மேலோங்குகிறவர்களுக்கு

வந்தமைகிற கேட்டை நலமாக மாற்றிக்கொள்ளும் பேறு அவர்களுடையதாம்.

கேள்வி: *(709)* சுவாமிஜி, எனது தமக்கையார் வீட்டில் கடந்த ஒரு வருடமாகச் சூனியம், ஏவல் என்று சொல்லக் கூடிய மாந்திரீக முறையினால் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் உறவினர் ஒருவர்தான் சூனியம் வைத்துவிட்டதாகப் பிறகு தெரிய வந்தது. இதுவரையில் எவ்வளவோ மாந்திரீகங்களைக் கொண்டு வைத்தியம் பார்த்தும் எவ்விதமான நன்மையும் ஏற்பட வில்லை. இதுவரை மூன்று பேர்கள் அகால மரணமடைந்து விட்டார்கள். மற்றும் இருப்பவர்களுக்கு அடிக்கடி சுகக்கேடு, மனம் பேதலித்து விடுதல் இப்படி மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறார்கள். சென்ற மாதம் கொடிய நரக வேதனையினால் எனது மாமா இறந்துவிட்டார். அவர் மிகுந்த தெய்வ பக்தியும், இரக்க சிந்தனையும், அன்பும் உடையவர். அத்தகையவருக்கே இந்த நிலை உருவாகியது குறித்துப் பெரிதும் வேதனை உறுகின்றேன். இவ்வளவும் நடந்த பின்பும் என்னால் அவைகளை நம்பாமல் இருக்க முடியவில்லை. உண்மையில் பில்லி, சூனியம், ஏவல் இவைகள் உண்டா? இவைகளுக்கும் மனிதர்களுக்கும் தொடர்பு உண்டா? பக்தன் ஒருவன் இவைகளை எப்படித் தடுப்பது?

பதில்: பில்லி, சூனியம் என்பது ஏவல் என்று இயம்பப் படுகிறது. வாமாசாரம் என்று சொல்லப்படுகின்ற தந்திர சாதனம் அசாதாரணமான வழிபாட்டு முறையைக் கையாண்டு அம்பிகை யினுடைய அருளைப் பெறுதற்கு உற்ற உபாயமாகிறது. அதே வாமாசாரத்தில் ஏவல் செய்வதற்கும் இடம் கொடுக்கப்பட்டிருக் கிறது. பிறர்மீது நலனையும் ஏவலாம்; தீங்கையும் ஏவலாம். அதற்கேற்ற வாமாசார கிரியா முறைகள் இருக்கின்றன. அம் முறைகளை ஒழுங்காக நிறைவேற்றிப் பிறர்க்கு வேண்டியவாறு தீங்கை வரவழைக்கலாம். பிறர் அகால மரணத்தில் மடியும் படியும் செய்யலாம். வாழ்ந்திருக்கிறபொழுது பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகும்படியும் ஏவல் செய்யலாம். ஏவலின்

கொடுமை அத்தகையது. அது விரிவாக வாமாசாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அத்துன்மார்க்கத்தில் ஊக்கத்தோடு ஈடுபடுகிற ஏவல் வித்தைக்காரர்கள் இருக்கிறார்கள். அன்னவர்கள் பிறரிடமிருந்து கைக்கூலி வாங்கிக்கொண்டு ஒரு குற்றமும் செய்யாத நல்லவர்கள்மீது கொடிய ஏவலை வரவழைக்க முடியும். இத்தகைய பில்லி, சூனியம் முன்பொரு காலத்தில் இருந்தபடி முன்னணியில் இக்காலத்தில் இல்லை. ஆயினும் அது அடியோடு மறைந்துபட்டுப் போகவுமில்லை. அந்த வேதனைக்கு ஆளாகிறவர்கள் படும்பாடு இவ்வளவு என்று சொல்ல முடியாது. இதைப்பற்றி ஒன்றும் தெரியாதவர்கள் இதெல்லாம் வெறும் கற்பனை என்றும் இன்னும் வெவ்வேறு விதங்களில் இதை அலட்சியப்படுத்தியும் வரலாம். ஆயினும் இத்தகைய கொடியகலை ஒன்று இருப்பது உண்மை.

ஏவலுக்கு இலக்காகிற தௌர்பாக்கியர்கள் அதற்கு முறி ஏவலை நாடலாம். தீங்கு விளைவிப்பதன் பொருட்டு ஒரு மனிதன் செய்திருக்கிற ஏவலைப் பயனற்றதாகப் பண்ணுவது ஒரு முறை. அதற்குப் பிரதி ஏவலாக அதைப்பண்ணியவன் மீது பெருங்கேட்டை வரவழைப்பது ஒரு முறை. இத்தகைய கேட்டுக்கு இலக்கு ஆகின்றவர்கள் என்ன செய்வது என்பது கேள்வி. கேட்டைக் கேடால் அகற்ற முடியாது. கேடு ஒன்றுக்குப் பிரதிகேடு செய்தால் அதன் விளைவாகக் கேடு இரட்டிக்கிறது. அது அழிந்துபட்டுப் போவதில்லை. மாற்று முறையை மட்டும் கையாண்டு பிரதிகேடு செய்யாதிருப்பதில் தோஷமில்லை. மாற்று முறை கையாளுவதற்கேற்ற ஏவலாளன் அகப்படாத இடத்து வருகிற துன்பங்களையெல்லாம் சகித்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு நிவர்த்தி இல்லை. நல்லார்க்குக் கேடு வருமாகில் அக்கேட்டையே அவர்கள் ஆத்ம சாதனமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு உபமானத்தின் மூலம் இதை இன்னும் தெளிவுபடுத்தலாம். இராவணன் பலாத்காரமாக சீதையைத் தூக்கிக் கொண்டு போனான். தன்னுடைய தூய்மை என்னும் அஸ்திரத்தைக் கையாண்டு இராவணனைச் சாம்பலாக்குகிற திறமை சீதையிடம் இருந்தது. ஆனால் அவள் அதைக் கையாளவில்லை. இராவணன்மீது சீற்றம் கொள்ளவுமில்லை. சகிப்பதன் வாயிலாகத் தன்னுடைய தூய்மையையும், பண்பையும்

பன்மடங்கு அதிகப்படுத்தினாள்.

ஆதிசங்கரர், இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவே கானந்தர் ஆகிய பெருமக்களும் ஏவலுக்கு இலக்கானார்கள். சங்கரரும், இராமகிருஷ்ண பரமஹம்சரும் ஏவலைப் பொருள் படுத்தவில்லை. அது அவர்களுக்கு நலனாக முடிந்தது. விவே கானந்தர் அதைக்குறித்து அன்னை சாரதாதேவியாரிடம் முறையிட்டார். ஏவலைச் சகித்துப்பழகு. அதனால் நீ மேலும் ஆத்ம பரிபாகம் அடைவாய் என்று அன்னையார் ஆறுதல் கூறினார். விவேகானந்தரும் அங்ஙனமே செய்தார். ஆகவே பெருநிலையில் இருக்கிறவர்களிடத்தும் ஏவல் ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால் பெரியோர்களுடைய பெருநிலை அந்த ஏவலைப் பொருள்படுத்தாததின் விளைவாகப் பன்மடங்கு மேலோங்குகிறது. சான்றோர்க்கு வருகிற தீங்கு அவர்களை அசைப்பதில்லை. தீமையாக வந்தது அவர்களிடத்திருந்த தெய்வீகத்தை ஓங்குவிக்கச் செய்தது.

இனி, உலகத்தவர்கள் கதி என்னாவது என்பதுதான் ஈண்டு எழுந்துள்ள கேள்வி ஏவலாளன் யாராவது ஒருவன் அகப்பட்டால் அவனைக்கொண்டு வாய்த்த ஏவலைப் பயனற்ற தாய்ப் பண்ணிவிடலாம். மற்று தீங்குக்குப் பிரதி தீங்கு செய்கிற சிறுநெறியில் செல்லலாகாது. தீங்குக்குமேல் தீங்கு வந்து வாய்த்த காலை ஒரு காரியத்துக்கு அது உதவுகிறது. "இறைவா, என்கதி இப்படியாகி இருக்கிறதே" என்று தெய்வத்திடம் முறையிடுவது ஒன்றே உற்ற உபாயம். முறையிடுவதற்கேற்ப, ஏவல் துன்பத்துக் காளாவதற்கேற்பப் பக்தி ஓங்குகிறது. அது துன்பப்படுகிறவன் பெறுகிற இலாபமாகிறது. உடல் வேதனையால் அழுந்துவது அவன் படுகிற நஷ்டமாகிறது. அந்த நஷ்டத்தைத் தவிர்க்க முடியாது. நிகழ்வதெல்லாம் நன்மைக்காகவென்றே எனக் கருதுபவர்கள் உண்டு. அப்படிக் கருதாதவிடத்தும் அதுதான் உண்மை. கஷ்ட நஷ்டத்துக்கும் அகால மரணத்திற்கும் ஆளாகியே தீரவேண்டும். அதற்கிடையில் இறைவனை நோக்கிக் கதறிப் பதறி அழுது கொண்டிருந்தால் அது இந்த ஜன்மத்திலோ அல்லது இனி வரும் ஜன்மத்திலோ பெரும் நன்மையாய் விளையும். இதுவே ஏவல் வினையைப் பற்றிய கோட்பாடு ஆகும்.

கேள்வி: *(710)* விஷ்ணுதான் நம் வாழ்வின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பவர் என்றால் விஷ்ணுவை வணங்காத சிவ பக்தர்களுக்கு அவர்களின் ஆசைகளை நிறைவேற்றி வைக்கமாட்டாரா?

பதில்: ஹரியும் சிவனும் ஒன்று, அறியாதவன் வாயில் மண்ணு என்பது சர்வ சாதாரணமாய் மக்களிடையில் அமைந்துள்ள கோட்பாடாம். இனி, பரமசிவன் பார்வதியோடு கூடி அர்த்த நாரீஸ்வரனாக இலங்குகின்றார். ஆகவே விஷ்ணுவும், சிவமும், சக்தியும் பொருள் ஒன்றேயாம். அதனதன் செயலுக்கேற்றவாறு நாமங்கள் மூன்றாக அமைந்துள்ளன. பக்தன் ஒருவனுக்கு இவைகளைப் பாகுபடுத்துதற்கு நேரமில்லை. குழந்தை ஒன்று தான் வேண்டுவதைத் தாயிடம் அழுது பெறுகிறது. மற்றுத் தாய்க்கும் தந்தைக்குமுள்ள இணக்கத்தை ஆராய்ச்சி செய்யாததினால் குழந்தைகளுக்கு நஷ்டம் ஏதுமில்லை. பக்தன் ஒருவன் விஷ்ணு என்றும், சிவன் என்றும், சக்தி என்றும் வீண் ஆராய்ச்சியில் பொழுது போக்கமாட்டான். குழந்தை ஒன்று தாயைக் குறித்து அழுது தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வது போன்று பக்தன் ஒருவன் பரம்பொருளிடத்துத் தூய பக்திபூண்டு ஒழுகி மெய்ப்பொருளின் அருளைப் பெற முயல்வானாக.

கேள்வி: *(711)* "திருப்பதிக் கடவுள் பணக்காரச்சாமி" என்று அழைக்கப்படுகிறார். மற்ற கடவுளர்க்கு அவர் போன்று பணம் சம்பாதிக்கும் சக்தி இல்லையா?

பதில்: தெய்வம் ஒன்று. அவருக்கு வடிவங்கள் பல. பலப்பல வடிவங்களை மனிதன் கற்பனை பண்ணியிருக்கிறான். இது நமக்கு நன்கு விளங்குதல் பொருட்டு உபமானம் ஒன்று எடுத்துக் கொள்வது அவசியம். பஞ்ச பூதங்களுள் ஆகாசம் என்னும் முதல் பூதம் நீக்கமற எங்கும் நிறைந்துள்ளது. அதற்குப் போக்குவரவு இல்லை. அத்தகைய ஆகாசம் அண்டத்தைத் தாங்குகிறபொழுது அண்ட ஆகாசம் எனப் பெயர் பெறுகிறது. பிண்டத்தைத் தாங்குகிறபொழுது பிண்ட ஆகாசம் எனப் பெயர் பெறுகிறது. ஒரு குடத்துக்குள் அடங்கி இருக்கிற பகுதிகள் ஆகாசம் எனப் பெயர் பெறுகிறது.

பிளவுபடாத ஆகாசம் பிளவு பட்டதுபோன்று தென்படுகிறது. இந்த ஆகாசத்துக்கு ஜடஆகாசம் என்று பெயர். இதற்கு நிகராக நீக்கமற எங்கும் நிறைந்துள்ள கடவுள் சித் ஆகாசம் என்றும் பெயர் பெறுகிறார்.

மக்களாகிய நமக்குப் பணம் தேவை. வசதியான உடல் வாழ்க்கைக்குப் பணம் இன்றியமையாதது. தேவையான பண்டங் களை வாங்குவதற்குப் பணம் பயன்படுகிறது. நமக்குப் பொருள்கள் தேவையாயிருப்பது போன்று அகண்ட வஸ்து வாகிய பரமனுக்குத் தேவையொன்றுமில்லை.

"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்பது கோட்பாடு.

எங்கும் நிறைபொருளாகிய கடவுளைத் திருப்பதியில் வெங்கடாசலபதியாக எழுந்தருளப் பண்ணியிருப்பது மனித னுடைய செயல். காசியில் விசுவநாதனாக எழுந்தருளப் பண்ணி யிருப்பதும் மனிதனுடைய செயல். இராமேசுவரத்தில் ராமனாத சுவாமியாக வீற்றிருக்கச் செய்திருப்பதும் மனிதனுடைய செயல். வடகயிலையில் சதாசிவமாக வீற்றிருக்கச் செய்திருப்பதும் மனிதனுடைய செயல்.

கடவுளுக்குக் காணிக்கை செலுத்த மனிதன் பிரார்த்தனை பண்ணிக்கொள்ளுகிறான். தனக்குச் சொந்தமாயுள்ள சொத்தில் ஒரு பகுதியைத் தெய்வத்துக்கு எடுத்து வழங்குவது நல்ல வழிபாடு என அவன் கருதுகிறான். அந்த நல்ல கருத்தை அவன் வளர்த்து வருதல் பொருட்டுக் காணிக்கை செலுத்தும் கைங்கரியத்துக்கு உற்சாகம் ஊட்டப்படுகிறது. சில கோயில்களில் காணிக்கை ஏராளமாக வந்து விழுகிறது. வேறு சில கோயில் களில் கொஞ்சமாக வந்து விழுகிறது. இன்னும் சில கோயில் களுக்குக் காணிக்கையே வருவதில்லை. இவையாவும் மனிதனது மனப்பான்மைக்கு விளக்கங்களாகின்றன. கடவுளுக்கும், காணிக்கைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. கடவுள் பெயரால் வருகிற காணிக்கைகளைச் சத்கைங்கரியங்களுக்குச் செலவிடக் கோயில் நிர்வாகிகள் கடமைப்பட்டிருக்கின்றனர். காணிக்கை பெறுவதில் திருப்பதி வெங்கடாசலபதி உச்ச

நிலையிலிருக்கிறார் என்பது உண்மை. மக்களில் பெரும் பான்மையோர் ஆங்கு அதிகமாகச் செலுத்திப் பழகியுள்ளார்கள் என்பது இதனால் வெளியாகிறது. தெய்வத்தினுடைய சக்திக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

கேள்வி: *(712)* ஆதிபராசக்தி, ஸ்ரீவேங்கடேஸ்வரர் முதலிய தேவதைகள் ஒரு சாதாரண மனிதர் மேல் ஆவிர் பவித்துக் குறித்த நாளில் குறித்த நேரத்தில் அருள்வாக்குச் சொல்கிறார்கள். பல நோய்களுக்கு மருந்து கூறித் தீராத நோய் தீர்க்கப்படுகிறது. சமுதாயத்தில் பலருக்கிடையில் இத்தகைய செய்திகளும், நம்பிக்கைகளும் நிகழ்ந்து வருகின்றன. இதைப்பற்றித் தங்கள் கருத்து என்ன?

பதில்: இத்தகைய நம்பிக்கைகளும், செயல்களும் உலகில் எங்குமே சமுதாயத்தில் இடையிடையே நிகழ்ந்து வருகின்றன என்பது வெளிப்படை. அசாதாரணமான மனோசக்தி சிலருக் கிடையில் திடீரென்று தோற்றத்துக்கு வருகிறது. Freaks of Nature என்னும் கோட்பாட்டில் இது அடங்குகிறது. சிலவேளை களில் நோயைச் சிகிச்சை செய்யும் முறைகள் வெற்றிகரமாக நிகழ்கின்றன. வேறு சில வேளைகளில் பொருளற்ற கூற்றுக் களாகவும் அவைகள் முடிவுறுகின்றன. மழை குறிப்பிட்ட ஓரிடத்தில் எப்பொழுது எவ்வளவு பெய்யும் என்று கேட்டால் சரியான விடை சொல்ல அந்தத் தேவதைக்கு இயலவில்லை. எனவே, எந்தத் தேவதைக்கும் குறிப்பிட்ட ஒரு மனிதனைப் பிடித்துள்ள இந்த மன நோய்க்கும் சம்பந்தம் இல்லை என்பது வெளியாகிறது. இயற்கையில் புயற்காற்று, மழை ஆகியவை களைப்பற்றி வானசாஸ்திர ஆராய்ச்சி நிலையங்கள் வெளியிடுகின்றன. அவைகளை நம்பலாம். ஆனால் பொதுமக்கள் இந்த வேஷதாரிகளை நம்பி ஏமாற்றமடையலாகாது.

கேள்வி: *(713)* அரக்கனைக் கீழே மிதித்துக்கொண்டு நடராஜர் ஆனந்தத்தாண்டவமாடும் படத்தினையும், இடதுகையிலே வேல் எடுத்துள்ள முருகன் படத்தினையும் வீட்டிலே வைத்துப் பூஜை செய்யலாகாது என்று சிலர் கூறுகின்றனர். இதற்கு விளக்கம் என்ன?

பதில்: நடராஜ மூர்த்தியின் ஒரு பாதம் முயலகன் என்னும் அரக்கன்மீது பட்டும் படாதிருப்பது அகங்காரத்தை அகற்று தற்குச் சின்னமாய் அமைந்திருக்கிறது. மனிதனைக் கவர்ச்சிகரம் அல்லாதவனாகப் பண்ணுவது அவனிடமிருக்கிற அகங்கார மாகும். அகங்காரத்தில் கவர்ச்சிகரம் ஏதுமில்லை என்பதற்குச் சின்னமாக முயலகன் அமைந்திருக்கிறான். அகங்காரத்தை அகற்றுவது வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை நடராஜ மூர்த்தி விளக்கிக்கொண்டிருக்கிறார். நடராஜ தத்துவத்தில் அமைந்திருக்கிற ஒவ்வொரு பகுதியும் மானுடன் பரிபூரண நிலையை எட்டுவதற்குச் சின்னமாக அமைந்திருக்கிறது. அகங்கா ரத்தை அகற்றுவது ஞானமார்க்கத்தின் முதல்படி ஆகிறது. மனிதனுடைய மனது எப்பொழுதும் தெய்வீக எண்ணங்களி லேயே ஊறி இருக்கவேண்டும். மனிதனைப் பாழ்படுத்துகிற அல்ப எண்ணங்களுக்கு இடம் தரலாகாது என்னும் கோட் பாட்டைத் தூக்கியபாதம் விளக்குகிறது. ஆணவம் என்னும் புலியைக்கொன்று அதன் தோலைச் சிவனார் அணிந்திருப்பதின் வாயிலாக ஆத்ம சாதகர்களும் தங்களுடைய ஆணவமாகிய துஷ்ட மிருகத்தை வெல்லவேண்டும் என்னும் கோட்பாட்டை விளக்குகிறார். இடக்கரம் ஒன்றில் சிவனார் தீயை ஏந்தியிருக் கிறார். ஞானாக்னிக்குச் சின்னமாய் அமைந்திருப்பது தீ பொருள் களைத் தீ பொசுக்குவதுபோன்று ஞானாக்னி உலகப்பற்றை நாசமாக்குகிறது. அடுத்த இடக்கரத்தில் சிவனார் மானை ஏந்தியிருக்கிறார். அது அவர் முகத்தைப் பார்த்த வண்ணமாய் இருக்கிறது. மனதுக்குச் சின்னமாயிருப்பது மான். கட்டிலடங்காத மனதை மனிதன் கட்டியாளவேண்டும் என்னும் கோட்பாட்டை இதன் வாயிலாக விளக்குகிறார். வலக்கரம் ஒன்றில் அவர் உடுக்கையைப் பிடித்திருப்பது ஓசை முழுதுக்கும் பிறப்பிடம் பரம்பொருள் என்னும் உண்மையை விளக்குகிறது. அடுத்த வலக்கரம் அவருடைய பாதத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறது. மானுடா, நீ சதாசிவ சிந்தனையில் ஈடுபடுவாயாகில் நீ சிவனை அடைவாய் என்னும் கோட்பாட்டை இக்கரத்தின் வாயிலாக விளக்குகிறார். அத்தகைய மூர்த்தியின் படத்தை வீட்டில் வைத்திருக்கலாகாது என்று இயம்புவது ஆத்ம சாதகருடைய போக்கு ஆகாது. சிவபக்தர்கள் நடராஜ வடிவத்தை

அவரவர் வீட்டில் வைத்து வணங்கி வருகின்றனர். அப்படி வணங்கி வருவதே முறையாகும்.

முருகன் தன் கையில் வேல் வைத்திருப்பது ஞானத்துக்குச் சின்னமாகிறது. தன் வேலைக் கையாண்டு முருகன் மக்களிடத்திலுள்ள அக்ஞானத்தைக் களைந்து ஞானத்தை நிலைநாட்டுகின்றான். ஆகையால்தான் வேல் ஆனது கதிர்வேல் எனப் போற்றப்பெறுகிறது. ஞானஒளி அதனிடத்துப் பிரகாசித்துக் கொண்டிருப்பதால் அது கதிர்வேல் எனப் போற்றப்படுகிறது. கதிர்வேலவனை வீட்டில் வைத்து வணங்கலாகாது என்று சொல்கிறவர்கள் அக்ஞானத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கூற்றுக்குச் செவிசாய்க்கலாகாது. தாராளமாக வேல் முருகன் படத்தை வீட்டில் வைத்து வணங்கலாம்.

கேள்வி: *(714)* 1962-ஆம் வருடம் அக்டோபர் மாதம், 20-ஆம் தேதி சீன ஆக்கிரமிப்புச் சண்டை மிகவும் உக்கிரமாக இருந்த சமயம் முன்னாள் பிரதமர் நேரு அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் போர் வீரர்கள் எல்லோருக்கும் "கிருஷ்ண ஜயம்" எழுதிய சின்னங்கள் கொடுக்கும்படி எழுதியிருந்தேன். அன்று இரவே சீனர்கள் பின்வாங்கி விட்டார்கள் என்ற செய்தி வந்தது. எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நான் எழுதியிருந்தபடி அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் அந்த மாதிரி செய்தால் நல்லதென்று இன்னொரு கடிதம் எழுதினேன். அவர்களுக்கு அது முக்கியமாகப் படவில்லையோ என்னவோ, அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. போர்வீரர்களுக்குக் "கிருஷ்ண ஜயம்" போட்ட சின்னம் கொடுத்தால் அந்த மந்த்ரத்தின் வலிமைக்குப் பயந்து எதிரி ஓடிவிடமாட்டானா?

பதில்: ஆத்ம சாதனங்களின் பிரயோஜனத்தைச் சரியாக அறிந்துகொள்ளுவது முற்றிலும் அவசியமாகிறது. முன்பொரு காலத்தில் மந்த்ர சக்திகளோடு கூடிய அஸ்திர சஸ்திரங்களை இந்தியப் போர்வீரர்கள் சிலர் படைத்திருந்தனர். அவ்வாயுதங்களைப் பெற அவர்கள் அரும்பெரும் தவங்கள் புரியவேண்டியதாயிற்று. தவவலிவால் மனது உறுதிபெற்றது. மன உறுதியினின்று

மந்திரத்துக்கு சக்தி வந்தது. மந்திர சக்தியால் சில அஸ்திரங்கள் எதிரி இருக்குமிடத்தைத் தேடிச் சென்று அவனை அழித்து விட்டுத் திரும்பி வந்தன. மந்திர சக்தியால் தீப்பற்றி எரியவும் மழை பொழியவும், எதிரிகள் மோஹன அஸ்திரத்தின் சக்தி யால் மயங்கிக் கிடக்கவும் செய்ய அப்போர் வீரர்களுக்கு இயன்றது. ஆனால் அத்தகைய மனோவலிவு இன்று யாரிடத் திலும் இல்லை. மந்திர சக்தியைக்கொண்டு செய்கிற யுத்தத்தைப் பற்றிய ஞானம் இன்றைக்கு அறவே மறைந்துபோயிற்று. அதெல்லாம் வெறும் கற்பனை போன்று இக்காலத்தவர்களுக்குத் தோன்றுகிறது. போருக்காகப் பயன்படுத்தும் மந்திர சக்தி இன்று நடைமுறையில் இல்லை.

ஆனால் ஆத்ம சாதனத்துக்கு மந்திர சக்தி அன்றும் இன்றும் என்றும் நன்கு பயன்பட்டு வருகிறது. பகவானுடைய திருநாமத்தை ஜபிப்பதன் வாயிலாகச் சித்த சுத்தி உண்டாகிறது. சித்த சுத்தி ஓங்குதற்கு ஏற்பப் பக்தியும் ஞானமும் அதிகரிக் கின்றன. மனபரிபாகம் அடைவதற்கு ஏற்பப் பகவான் மனதில் குடிகொண்டிருக்கிறார் என்பதை ஆத்மசாதகன் நன்கு அறிந்துகொள்ளக்கூடும். நாமத்தை இடையறாது உச்சரிப்பதற்கு ஏற்ப அதில் சுவை உண்டாகிறது. அந்தச் சுவை பரமானந்தமாக வடிவெடுக்கிறது. நாம உச்சாரணைக்கு ஏற்ப உலகப்பற்றுக் குறைகிறது; தெய்வப்பற்று அதிகரிக்கிறது. இறைவனும் இறை வனுடைய நாமமும் ஒன்றே. இறைவனுடைய சொரூபத்தைக் காணமுடியாத நாம் இறைவனுடைய நாமத்தை நன்கு உச்சரிக்கலாம். அப்படி உரு ஏறுதற்கு ஏற்ப உள்ளத்தில் திரு ஏறுகிறது. ஈசனுடைய சாந்நித்தியத்தை உள்ளத்தினுள் உணரும் திறமை அதினின்று வருகிறது. எனவே இன்றைக்கு நாமஜபம் உலகப்பற்றையும் உலக வாழ்க்கை முறையையும் கடந்து செல்லுதற்கு நன்கு பயன்படுகிறது. காமிய பூஜைக்கு நாம ஜபம் நன்கு உதவாது. நிஷ்காமிய பூஜைக்கென்றே ஜபத்தைப் பயன்படுத்த வேண்டும். அதைப்பற்றிய நல்ல பாடமொன்று ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் முடிந்தான பிறகு சுக்ரீவன், விபீஷணன் போன்ற பலபேர்க்கு ஸ்ரீராமர் சன்மானங்களை வழங்கினார். ஆனால் ஆஞ்சநேயருக்கு அவர் சன்மானம் எதையும் கொடுக்கவில்லை. அதைக்குறித்துச் சீதாபிராட்டி

வருந்தினாள். ஹனுமானுக்கு சன்மானம் இல்லையா? என்ற கேள்வியும் அவளிடமிருந்து வந்தது. "ஹனுமானுக்கு நீயே சன்மானம் ஏதாவது தா" என்று ஸ்ரீ ராமபிரான் பணித்தருளினார். சீதாபிராட்டி தான் அணிந்திருந்த முத்துமாலையை எடுத்து ஆஞ்சநேயனது கழுத்தில் போட்டாள். ஆஞ்சநேயனோ முத்தை ஒவ்வொன்றாகக் கொரித்துப்பார்த்து அதைக் கீழே துப்பினான். அச்செயல் சீதாபிராட்டிக்கு வருத்தத்தை ஊட்டியது. "குரங்குத் தனத்தைக் காட்டுகிறாயே" என்றாள் அவள். இல்லை "சீதாராமனுக்குப் புறம்பானது எதையும் என் மேனியில் வைத்திறேன்" என்றான் ஆஞ்சனேயன். "அப்படியானால் சீதாராமனை உன்மேனியில் வைக்க உனக்கு இயலுமா?" என சீதாதேவி வினவினாள். ஆஞ்சநேயனோ தன் நெஞ்சைப் பிளந்து தனது இருதய கமலத்தில் சீதாராமன் வீற்றிருப்பதை விளக்கிக் காட்டினான். அப்பொழுது சீதாபிராட்டியாருக்கு நல்லறிவு வந்தது. ஆஞ்சநேயனது பக்தியின் மகிமையை ஸ்ரீராமர் அறிந்திருந்தார். ஆகையினால்தான் தனது சொரூபத்தைத் தவிர வேறு எந்த நன்கொடையையும் அவர் ஆஞ்சநேயனுக்குக் கொடுக்கவில்லை. பக்தர்கள் பகவானைத் தவிர வேறு எதையும் நாடுவதில்லை.

நாம ஜபம் எதற்கு உதவும், எதற்கு உதவாது என்பதை அறிந்திருப்பது ஆத்ம சாதகர்களின் கடமையாகும். மனபரிபாகம் அடைவதற்கு நாமஜபம் நன்கு பயன்படுகிறது. பசியைப் போக்குதற்கு நாமஜபம் பயன்படாது. ஜபத்தில் மூழ்கியிருக்கிற சிறிது நேரத்திற்குப் பசி தோன்றாது இருக்கலாம். ஆயினும் உடலைப் பேணுதற்கு உணவே உற்ற உபாயமாகிறது. உடலை வளர்ப்பது உணவு. உள்ளத்தைப் பக்குவப்படுத்துவது ஜபம். இந்தப் பாகுபாட்டை அறிந்திருப்பது அவசியமாகிறது. பூமியைப் பண்படுத்துதற்கு ஏர்கட்டி உழவேண்டும். மனதைப் பண்படுத்துதற்கு ஜபம் செய்ய வேண்டும். அப்படியல்லாது பூமியைப் பண்படுத்துதற்கு சும்மா அமர்ந்திருந்து ஜபம் செய்தால் பூமி திருந்தியமையாது.

'கிருஷ்ண ஜயம்' சின்னத்தைப் பற்றிய கேள்வி பிறந்ததை முன்னிட்டுச் சீனர்கள் பின்வாங்கவில்லை. அமெரிக்காவினின்றும் இங்கிலாந்தினின்றும் ஆயுதங்கள் ஏராளமாக வந்துகொண்டிருந்ததை முன்னிட்டு சீனர்கள் பின்வாங்கி விட்டனர். நாட்டை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்கு நல்ல ராணுவப் பயிற்சி

வேண்டும். இக்காலத்தில் அமைக்கப் பெற்றிருக்கின்ற அரிய ஆயுதங்கள் வேண்டும். அந்த அரிய ஆயுதங்களைச் சரியாகப் பயன்படுத்துவதற்கான பயிற்சி வேண்டும். எனவே எதிரிகளை விரட்டியோட்டுதற்கு நமது நாடு இக்காலத்திய முறைகளில் நிலம், நீர், வானம் ஆகிய மூன்று இடங்களிலும் நன்கு போர்புரியக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படியல்லாது 'கிருஷ்ண ஜயம்' சின்னம் அணிந்துகொண்டு போருக்குப் போவார்களாகில் அவர்கள் சாம்பலாவது அல்லது எதிரிகள் கையில் கைதிகளாவது திண்ணம். எந்தச் சாதனத்தை எதற்குப் பயன்படுத்த வேண்டுமென்று அறிந்து கொள்ளுவது அவசியமாகிறது.

முன்னாள் பிரதமர் நேரு அவர்களுக்கு இதைப்பற்றிக் கடிதம் வரைந்திருந்ததாக இக்கேள்வியில் சொல்லப்பட்டிருக்கிறது. இது போன்ற கடிதங்களைப் படித்துப்பார்க்க அவருக்கு நேரமில்லை. குப்பைத்தொட்டி ஒன்றே இதுபோன்ற கடிதங்களுக்குப் பொருந்திய இடமாகும். ஆத்மசாதகர்கள் ஆத்மீகத் துறையில் அடைகிற முன்னேற்றத்தை லௌகீக வாழ்க்கையுடன் இணைக்கலாகாது. இவ்வுலக முன்னேற்றத்திற்கு லௌகீக முறைகளைப் பயன்படுத்த வேண்டும். பாரமார்த்திகத்துறையின் முன்னேற்றத்திற்குப் பாரமார்த்திக சாதனங்களைக் கையாள வேண்டும். ஸ்ரீகிருஷ்ணனுடைய முன்னிலையில் இருந்துகொண்டு அர்ஜுனன் அஸ்திர சஸ்திரங்களைக் கையாண்டு பாரதப்போரில் வெற்றி பெற்றான். 'கிருஷ்ண ஜயம்' என்ற சின்னமோ, கிருஷ்ண நாமஜபமோ அல்லது தேர்த்தட்டின் மீது ஸ்ரீகிருஷ்ணனே வீற்றிருந்துகொண்டு தேர் ஓட்டியதோ அவனுக்குப் போருக்குப் பயன்படவில்லை. இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

கேள்வி: *(715)* யாழ்ப்பாணத்திலே மரணமடைந்த வீடுகளில் திருமுறை போன்ற புனிதமான நூல்களை ஓதலாகாது என்றும் அப்படி ஓதினால் பாபம் உண்டு என்றும் இந்து சமயத் தலைவர் ஒருவர் பகர்ந்துள்ளார். இக்கருத்து மக்கள் உள்ளத்தில் ஐயத்தைக் கிளப்பியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மக்கள் செய்யவேண்டியது யாது

என்பதை அருள்கூர்ந்து தெளிவுபடுத்தும்படி வேண்டுகிறேன்.

பதில்: பிறப்பெடுத்துள்ள ஒவ்வோர் உயிரும் மரண மடைந்தே ஆகவேண்டும். பகலைத்தொடர்ந்து இரவு வருவது போன்று பிறப்பைத் தொடர்ந்து சாவும் நிகழ்வது திண்ணம். இது இயற்கையின் கூறு. இதை யாரும் தவிர்க்க முடியாது. இறைவனுடைய கிருத்தியங்கள் ஐந்து உள. அவை முறையே படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்பன வாம். வடமொழியில் இவை சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் என்னும் பெயர் பெற்றுள்ளன. மூர்த்தி ஒருவர், அவருக்குக் கிருத்தியங்கள் ஐந்து. அந்தந்தக் கிருத்தியத்துக்கேற்ற பெயர் அதே மூர்த்திக்கு வந்து அமைகிறது. துடைத்தல் செயலைச் செய்கின்றபொழுது ஈசனார், ருத்ரன் என்னும் பெயர் பெறுகிறார். அதற்கேற்பச் சுடுகாட்டை ஸ்மசானம் என்றும் ருத்ரபூமி என்றும் சொல்கின்றோம்.

உயிர் வகைகள் வாழ்க்கையிலே பற்றுதல் மிக வைத்திருக் கின்றன. ஆகையால் அவையாவும் மரணத்துக்கு அஞ்சுகின்றன. மனிதனும் மரணத்துக்கு அஞ்சுகிறான். ஆனால் மரணத்தின் உட்பொருளை மனிதனே ஆராயவல்லவன். ஏனைய உயிர் களுக்கு மரணத்தின் உட்பொருள் விளங்கமாட்டாது. மரணம் உறக்கத்துக்கு நிகர். உடல் எடுத்து இருப்பவர்களுக்கு நனவு நிலை இன்றியமையாததாய் இருப்பதுபோன்று உறக்கமும் இன்றியமையாததே. நனவு நிலைக்கு வேண்டிய வசதிகளை மனிதன் செய்து கொள்வது போன்று நல்ல உறக்கத்துக்கு வேண்டிய நிலையையும் மனிதன் செய்து கொள்ளுகிறான். அதற்கு நிகராக நன்கு வாழ்ந்திருக்கக் கற்றுக்கொள்ளுகிற மனிதன் நேரடியாகவோ மறைமுகமாகவோ மரணத்தை ஏற்றுக் கொள்ளவும் தன்னை ஆயத்தப்படுத்தவேண்டும். பரஞானத்துக்கு மரணவித்தை என்பது மற்றொரு பெயர். மழைக்காலத்துக்கு வேண்டிய உணவு வசதிகளை மனிதன் மட்டும் அல்லன், மற்ற உயிர்களும் முன்கூட்டியே ஆயத்தப்படுத்திக் கொள் கின்றன. அதற்குமேல் மரணத்துக்கும் அறிஞன் ஒருவன் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றான்.

காசிக்கு மஹா ஸ்மசானம் என்பது ஒரு பெயர். அந்திய

காலத்தில் காசியில் உடலை உகுப்பது சிறந்த செயல் என்று ஹிந்து மதத்தை அனுஷ்டிக்கிறவன் நம்புகிறான். அந்த நம்பிக் கைக்கேற்பப் பழங்காலந்தொட்டு இன்றைக்கு, இனி வருகிற என்றைக்குமே மரணத்தை நாடிக் காசிக்குப் போகும் பெருங் கூட்டமான நன்மக்கள் இருந்து வருவார்கள். அக்காசியிலே காலமெல்லாம் இருபத்து நான்கு மணிநேரமும் பிரேதங்கள் தகனமாகிக் கொண்டேயிருக்கின்றன. சவங்கள் தீக்கிரையாகின்ற வேளையில் துறவியர்கள் அருகில் அமர்ந்து தியானம் பண்ணிக் கொண்டிருப்பார்கள். பிறகு நேரே காசி விசுவநாதர் ஆலயத் துக்குச் சென்று சிவலிங்கத்தைத் தொட்டு வணங்கிவிட்டு அவரவர் இருப்பிடத்துக்குப் போவார்கள். சுடுகாட்டுக்குப் போவது தீட்டு என்றால் காசிக்குப் போவதும் அங்கு வாழ்ந்திருப்பதும் பெருந்தீட்டாகும். ஆனால் உண்மை அதுவன்று.

பிறப்பெடுப்பது வாய்ப்பு என்றால், நல்ல பாங்கில் மரண மடைவது அதைவிடப் பெரிய வாய்ப்பாகிறது. காசியிலே காலமெல்லாம் எல்லா மொழிகளிலும் நல்ல நூல்கள் ஓதப்பட்டு வருகின்றன. அப்படி ஓதுவதுதான் முறை. மரணத்தை முன்னிட்டு ஓதுதலை நிறுத்துதல் என்றால் காசியில் ஒரு பொழுதும் புனித நூல் ஓதப்பெறமாட்டாது. ஆனால் சாவும், சாஸ்திரங்களை ஓதுதலும் காலமெல்லாம் காசியில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. சவங்களைத் தூக்கி வருகிறவர்கள் இறைவனுடைய நாமத்தை ஓதுகிறார்கள். வேதம் ஓதுகிறார்கள். உபநிஷதங்களை ஓதுகிறார்கள். ஏனைய புனித நூல்களையும் ஓதுகிறார்கள். அப்படி ஓதாதிருப்பது முறையன்று என்று காசியில் இருப்பவர்கள் கருதுகிறார்கள். இதற்கு மாறாக யாழ்ப்பாணவாசி ஒருவர் மரணகாலத்தில் திருமுறை ஓதலாகாது என்று பகர்வாராகில் அவர் வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்தவர் அல்லர்.

மரணத்தைப் போற்றுவதும் இறைவனைப் போற்றுவதும் ஒன்றே. காலகாலனாக இறைவனார் இருந்துகொண்டு உயிர் வகைகளை மரணத்தின் வாயிலாக எடுத்து மறைத்தல் என்னும் செயலை ஓயாது செய்து வருகிறார். ஆதலால் மரணத்தை முறையாகப் போற்ற வல்லவனே மரணத்தை முறையாக ஏற்றுக்கொள்ள வல்லவனாகின்றான். அன்னவனே இறுதியில்

மரணமில்லாப் பெருவாழ்வுக்கும் தகுதியுடையவன் ஆகின்றான்.

'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பது முதுமொழி. உலகப்பற்று அறுபட்டுப்போவதற்குத் தெய்வப்பற்றை வளர்க்க வேண்டும். அதற்கேற்ற நல்ல சந்தர்ப்பங்கள் சில அமைகின்றன. பற்றற்ற நிலைக்கு வைராக்கியம் என்பது ஒரு பெயர். வைராக்கி யங்களுள் ஸ்மசான வைராக்கியம் மிக முக்கியமானது. காசியில் வசித்து வருகிறவர்கள் செத்துப்போன சொந்தக்காரருடைய பிரேதத்தைத் தாங்களே தகனம் பண்ணவேண்டும் என்பது ஓர் ஐதிகம். அது இன்றைக்கும் நிகழ்ந்து வருகிறது. பற்றுதல் நீங்குதற்கு உற்றதோர் உபாயம் இதுவாம். அவ்வேளையிலும் கடவுள் நாமத்தை ஓதவேண்டும். திருமுறைகள் போன்ற நல்ல நூல்களையே ஓதவேண்டும். உலகப்பற்றை ஒழிப்பதற்கும் தெய்வப்பற்றை வளர்ப்பதற்கும் இதுவே உற்ற உபாயமாம்.

கேள்வி: (716) செத்தவர் ஆவி உலகில் இருக்கின்றனர் என்றும் அவர்களோடு பேசலாம் என்றும் சிலர் பகர்கின்றனர். இதைப்பற்றிய உண்மை யாது? எவ்வளவு காலம் செத்தவர் ஆவி உலகில் இருக்கின்றனர்?

பதில்: கால அளவை நமக்கு வேறு, செத்தவர்களுக்கு வேறு. அயர்ந்து தூங்குகின்ற ஒருவன் காலத்தைக் கடந்து இருப்பது போன்று செத்துப்போன ஆத்மாக்கள் நமக்கு அளவையாக இருக்கும் காலத்தில் கட்டுப்படுவதில்லை. ஆக, எவ்வளவு காலம் அவைகள் வேறு நிலையில் இருக்கின்றன என்னும் கேள்விக்குப் பொருத்தமான விடைகொடுக்க முடியாது. ஒரு நிலையில் ஐந்து நிமிஷமாகத் தென்படுவது மற்றொரு நிலையில் ஐந்து ஆண்டு அல்லது ஐம்பது ஆண்டுகள் ஆய்விடலாம். நாம் காணும் கனவே அதற்குச் சான்றாகும்.

செத்தவர்கள் பெரிதும் அயர்ந்து தூங்குகிற நிலையில் இருக்கின்றனர். ஒருசிலர் மட்டும் சொப்பனம் காண்கின்ற நிலைக்கு வருகின்றனர். அவர்காணும் சொப்பனம் நல்லதாயிருந் தால் அதைச் சொர்க்க வாழ்வு என்று எண்ணுகின்றனர். சொப்பனம் கெட்டதாயிருந்தால் அது நரகம் எனப்படுகிறது. அவரவர் வினைக்கு ஏற்ப அந்நிலையில் கொஞ்ச காலம் இருந்துவிட்டு வசதியான சூழ்நிலை அமையும்போது மறுபடியும்

மண்ணுலகில் பிறக்க வருகின்றனர்.

அவர்களோடு பேச்சுவார்த்தை வைத்துக் கொள்வது நமக்குச் சாத்தியமன்று. இன்று ஆவி உலகப் பேச்சு என்று உலவிவரும் வதந்திகளெல்லாம் பெரிதும் ஆதரவு அற்றவைகள். மண்ணுலகத்தவரோடு தொடர்பு கொள்ளக்கூடிய சூட்சும சரீரத்தில் அமைந்திருக்கும் பாங்கு ஏதோ சில ஆத்மாக்களுக்கு மட்டும் உண்டு. அவர்களுடைய மனநிலையை வாங்கிக் கொள்ளும் தன்மை மக்களுள் யாரோ சிலருக்குத்தான் வந்தமை கிறது. ஆகையினால்தான் பொதுவாகச் செத்தவர்களுக்கும் நமக்கும் எவ்விதமான நேர்தொடர்பும் கிடையாது. அவர்களைக் குறித்து நாம் எண்ணும் நல்லெண்ணங்கள் மட்டும் அவர்களுக்கு ஓரளவில் பயன்படுகிறது. செத்தவர்களோடு பேசுதல் என்னும் ஆதரவற்ற நம்பிக்கையை அடியோடு மறந்துவிடுவதே உத்தமம்.

கேள்வி: *(717)* இறந்தவர்களின் ஆவிகளை 'Planchet' பலகை மூலம் இவ்வுலகுக்கு வரவழைத்துப் பேசலாம் என்கின்றனர் சிலர். இவ்விதம் பேசிக்கொண்டும் இருக்கிறார்கள் என்கின்றனர் சிலர். இவ்விஷயம் எவ்வளவு தூரம் உண்மை? உண்மையாகவே இறந்தோரின் ஆத்மாக்கள் வந்து பேசுகின்றனவா? இறந்த பின்பு எத்தனை வருஷ காலம்வரை அவ்வாவிகள் அந்தப் பலகையில் வரும்? ஆவிகளுக்கு நம் வருங்காலத்தைக் கூறச் சக்தி உளதா? அன்றி நமக்கு அவ்வாவிகள் ஏதாவது நன்மை செய்ய முடியுமா?

பதில்: ஸ்தூல சரீரத்தை நீத்துவிட்ட ஆத்மாக்கள் ஸ்தூல சரீரத்திலிருக்கும் நம்மோடு தொடர்பு வைக்கின்றன என்பதை இரண்டு பாங்குகளில் மக்கள் நம்பிவருகிறார்கள். சிலரைப் பிசாசு பிடித்துக்கொள்கிறது என்பது ஒரு முறை. இன்னும் சிலரிடம் தேக வியோகமானவர்கள் பலகையின் மூலமாக எழுதிப் பேசுகின்றனர் என்பது மற்றொரு முறை. இரண்டாவது முறையாகிய பிளான்செட் பலகையின் மூலம் எழுதித் தெரிவித்தல் மிக அண்மையில் வந்துள்ளது. இதில் பலர் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். இவ்விரு முறைகளையும் சேர்ந்தே ஆராய்ந்து பார்ப்போம்.

செத்தவர்கள் எல்லோரும் பிசாசு ஆய்விடுவதில்லை என்பது கோட்பாடு. அகால மரணத்தில் மாய்கின்றவர்களில் பலர் பிசாசு ஆய்விடுகின்றார்களாம். அத்தகையவர்கள் பெரிதும் மனவுறுதியில்லாத பெண்களை வந்து பிடிக்கின்றார்கள் என்று மக்கள் நம்பி வருகிறார்கள். பெண் பேய்கள் ஆண்களைப் பிடிக்கின்ற செய்தி உலகில் அதிகம் இல்லை. பெண்களுக்கிடையிலும் மனவுறுதி படைத்தவர்களைப் பேய் ஒன்றும் செய்வதில்லை. பேய்பிடித்தவர்களுடைய இயல்புகளை ஆராய்ந்து பார்த்தால் பேய் பிடித்தல் என்பது ஒருவிதமான மனநோய் என்பது வெளியாகும். தனக்கு விளங்காத பாஷைகளையும் பேயின் வசப்பட்டிருக்கும்பொழுது பேசுவதைக் கேட்கலாம். பேயின் வசப்பட்டு இருப்பது என்பது உண்மையில் மனது ஒருவித அசாதாரணமான நிலையை அடைந்துவிடுதலாம். அந்த அசாதாரணமான மனநிலையில் மனதுக்குப் புதிய ஆற்றல்கள் தாற்காலிகமாக வந்து விடுகிறது. அதைத் தவிரப் பேய் என்னும் ஆத்மா சரீரத்தில் பிரவேசித்து ஆதிக்கம் செலுத்துகிறது என்பதற்கு ஆதாரம் இல்லை.

தேகவியோகம் ஆய்விட்ட ஆத்மாக்களும் பெரிதும் மன உறுதியில்லாத மக்கள் மூலமாகவே எழுதிப் பேசி வருகிறார்கள் என்பதைக் காணலாம். அத்தகைய ஆத்மாக்கள் பேச்சுக்கு உடந்தையாய் இருப்பவர்களை ஆங்கிலத்தில் Medium என்று அழைப்பார்கள். யார் ஒருவன் மீடியம் ஆக வந்து அமைகின்றானோ அவன் நாளுக்குநாள் இச்சா சுதந்திரத்தை இழந்து விடுகின்றான்; மனவலிவு அற்றவன் ஆய்விடுகின்றான். அவன் முதலில் ஏதேனும் ஓர் ஆத்மாவுடன் தொடர்பு கொள்கிறான். நாளடைவில் பல ஆத்மாக்கள் அவன் மூலம் செய்திகளைத் தெரிவிக்க ஆரம்பிக்கின்றன. அவனுடைய மனவலிவு குறைந்து கொண்டே வருவது அதற்குக் காரணமாகிறது. விஷயத்தைத் துருவி ஆராய்கின்றவர்களுக்கு அவ்வுண்மை புலப்படும்.

உயிர்வாழும் மனிதன் ஒருவன் தனது இச்சா சுதந்திரத்தை எல்லாம் இழந்துவிடும்படி அவன் வேறு ஒரு ஆத்மாவின் கையில் கருவியாக அமைவது பாராட்டத்தக்கதன்று. உயிர் வாழ்ந்திருக்கும் பொழுதே ஒருவனைச் சிறிது சிறிதாகக் கொலை செய்வதற்குச் சமானமாகும் இது. இந்த மனிதன் மூலம்

நமக்குச் செய்திகளைக் கொடுக்கும் ஆவி உலகத்தவர் அலாதி சக்தி வாய்ந்தவர்கள் என்று சொல்லுதற்கில்லை. அவர்கள் உண்மையையே பேசுகிறார்கள் என்று சொல்லுதற்கும் இடமில்லை. நமது எதிர்காலத்து நிலையை அவர்கள் அறிந்து கொள்கிறார்கள் என்று கூறுவதற்கும் இடமில்லை. என்றைக்கோ ஒருநாளைக்கு வரப்போகிற விஷயங்களையெல்லாம் இன்றைக்குச் சரியாகச் சொல்லுதற்கு ஆவி உலகத்தவர்க்கு சக்தி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தால் அவர்களுக்கு அச்சக்தி இல்லையென்பது நன்கு வெளியாகும். நமக்கு எந்த விதத்திலும் உதவி பண்ணுதற்கும் ஆவி உலகத்தவர்களுக்கு இயலாது. இம்மண்ணுலகில் இருக்கும்பொழுது பெற்ற அறிவு அல்லது ஆற்றலுக்குமேல் புதியது எதையும் அவர்கள் செத்தவுடன் பெற்றுவிடுவதில்லை. ஏகதேசம் உண்மை அமையப்பெற்ற விதவிதமான செய்திகளைக் காகிதத்தில் அவர்கள் எழுதுவதைக் காணலாம். ஆவி உலகத்தோடு பேச்சு என்பதும் உண்மையில் மீடியம் அல்லது கருவியாக அமைந்த மனிதனது அசாதாரண மனநிலை என்று யூகிப்பதற்கு இடந்தருகிறது. பேய் ஆடுவது ஒருவித மனநோய் என்றால் ஆவி உலகத்தோடு இணக்கம் வைப்பது மற்றொரு விதமான மனநோய் ஆகும். தத்துவ ஆராய்ச்சி போன்ற கேள்விகளை ஆவி உலகத்தவரிடம் கேட்டால் அவர்கள் தக்க விடைகொடுப்பதில்லை. கருவியாக அமைகின்றவனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அசாதாரணமான மனநிலையில் உயர்வு ஏற்படுகின்றதோ அதற்கேற்றபடி ஏகதேசம் உண்மைகள் அடங்கி விடைகளை ஆவி உலகத்திலிருந்து பெறலாம். ஆவி உலகம் என்பது உண்மையில் கருவியாக அமைகின்றவனுடைய அசாதாரணமான மனநிலையேயாம். இதில் நம்பிக்கை வைக்கின்றவர்கள் பெரிதும் தமது விவேகத்தை இழந்து விடுகின்றனர். மனிதனை நல்ல மனிதன் ஆக்குதற்குரிய எந்தவிதமான உதவியையும் ஆவி உலகத்திலருந்து நாம் பெற முடியாது. இயற்கையின் நடைமுறையைப் பற்றிய புதிய எந்த மர்மத்தையும் ஆவி உலகத்திலிருந்து நாம் பெறமுடியாது. நல்லறிவுக்குப் பங்கமாய் அமையும் இந்த ஆராய்ச்சியைச் சிறிதும் பொருட்படுத்தாது விட்டுவிடுவதே நாம் செய்யக்கிடக்கும் கடமையாகும். தூய வாழ்வும் நேர்மையான முயற்சியும்

நல்லறிவும் வேண்டுகின்ற அன்பர்கள் ஆவி உலகத்தைப்பற்றிய ஆராய்ச்சியை அறவே புறக்கணித்து விடுவார்களாக. ☆

54. தெய்வ நம்பிக்கை

கேள்வி: *(718)* **தன்னுடைய சொந்த சமய நம்பிக்கைகளை, சம்பிரதாயங்களைத் தந்தை ஒருவர் எந்த அளவுக்குத் தன்னுடைய மக்களுக்கு வலுக்கட்டாயமாகப் புகுத்தலாம்? ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை, விசுவாசம் இவற்றிற்கான சூழ்நிலையை மட்டும் தனது குடும்பத்தில் ஏற்படுத்தும் குடும்பத் தலைவன் குடும்பத்தில் உள்ள மற்ற ஜீவர்களின் சுய வளர்ச்சிக்கு ஹானி செய்கின்றானல்லவா?**

பதில்: சமய உணர்ச்சியிலே ஒரு மனிதன் வளர்ச்சியடைந்து வருவது ஒரு செடியின் வளர்ச்சிக்கு ஒப்பாகிறது. செடி சிறியதாக இருக்கும்பொழுது அதற்கு வேலி கட்ட வேண்டும். மிகைபட வெயிலோ, காற்றோ, மழையோ, கால்நடைகளோ அதைத் தாக்கலாகாது. அவ்வளவு பெரிய பாதுகாப்பு அதற்குக் கொடுப்பது அவசியம். ஒரு குடும்பத்தில் இருக்கும் எல்லோருக்கும் அக்குடும்பத்திற்குத் தலைவனாக இருப்பவனே பொருள் கொடுத்து ஆதரிப்பதுபோன்று சமய உணர்ச்சியும் கொடுத்து ஆதரிக்கவேண்டும். இயற்கையின் பரந்த நடைமுறையை ஆராய்ந்து பார்த்தால் ஒரு பேருண்மை விளங்கும். ஒவ்வோர் உயிரும் அதற்குத் தகுந்த சூழ்நிலையிலேயே பெரிதும் பிறப்பெடுக்கிறது என்பதே அவ்வுண்மையாகும். இக்கோட்பாட்டை ஆங்கிலத்தில் The law of affinity Fußm The law of natural selection என்றும் பகர்வார்கள். இக்கோட்பாட்டின்படி ஒரு குடும்பத்திலே பிறக்கின்ற சிறுவர்களுக்கு அக்குடும்பத்தைச் சேர்ந்த பெரியோர்கள் ஐதிகமாக அக்குடும்பத்தில் வந்துள்ள மதக்கோட்பாடுகளையே நன்கு போதிக்கவேண்டும். ஏதேனும் ஒரு மதக் கோட்பாட்டில் நன்றாக ஊறி வளரும் மனிதன் ஒருவனுக்கு

மனபரிபாகம் உண்டாகிறது; பிறகு தன் மதத்தையே வேண்டுமென்றால் மாற்றியமைத்துக்கொள்ளும் விவேகமும் சிரத்தையும் காலக்கிரமத்தில் வந்தமையும். சிறு செடி மரம் ஆகும்பொழுது வேலியை அகற்றி விடுவதற்கு இது ஒப்பாகும். சிறுவனுக்குரிய செல்வத்தை முதியோர் காப்பாளராக இருந்து வேண்டியவாறு வளர்ப்பதுபோன்று சிறுவர்க்குச் சமய உணர்ச்சியைத் தமக்குத் தோன்றியவாறும், தமது குல ஐதிகத்துக்கு ஏற்றவாறும் ஏராளமாக வழங்குவதே தகப்பனுடைய கடமையாகும். ஏதேனும் ஒரு விதத்தில் சமய அனுஷ்டானத்தைக் கட்டாயப்படுத்திச் சிறுவர்கள் உள்ளத்தில் செலுத்துவதுதான் தகப்பனுடைய கடமை. மைந்தன் பெரியவனாய் ஆன பிறகு தனக்கு வேண்டுமென்கின்ற பாங்கில் அவன் அதை மாற்றியமைத்துக் கொள்ளலாம். இத்தகைய சமய அனுஷ்டான சுதந்திரம் நம் நாட்டில் எக்காலத்திலும் இருந்து வந்திருக்கிறது.

கேள்வி: *(719)* கருட தரிசனம் செய்யாமல் எனது முன்னோர்கள் சாப்பிடுவதே கிடையாதாம். சனிக்கிழமை மிகவும் பிரதானமாகக் கருட தரிசனத்துக்கு வருந்தி வருகையை எதிர்நோக்கித் தரிசனம் கிடைத்தபின்தான் திரும்புவார்களாம். கருட தரிசனம் மிக முக்கியமாக என்னென்ன கிழமைகளில் செய்யவேண்டும்? அதன் பலா பலன்கள் என்ன?

பதில்: ஆத்மீக வாழ்க்கையென்பது ஆற்றலிலும், அன்பிலும், அறிவிலும் தலைத்தரமான வாழ்க்கை எனப் பொருள்படுகிறது. அதிகாலையிலிருந்து இரவு படுக்கப்போகும் வரையில் ஆற்றுதற்கான அரும்பெரும் அலுவல்கள் மக்களுக்கு ஏராளமாக இருக்கின்றன. தொடர்பு கொள்ளுகிற உயிர்கள் அனைத்திடத்தும் உள்ளன்புகொண்டிருப்பது சிறந்த செயலாகும். எது மனிதனை மேன்மைப்படுத்துகிறது, எது மனிதனைக் கீழ்மையில் ஆழ்த்துகிறது என்று பாகுபடுத்துவது நல்லறிவு அல்லது விவேகத்தின் செயலாம். இப்படியெல்லாம் செந்நெறி சார்ந்திருந்து வாழ்க்கையை உயர்த்துதல் மேலோர்கள் வகுத்து வைத்துள்ள வழியாகும். இந்த நல்வழியைப் புறக்கணித்து விட்டுப் பறவை ஒன்றின் தரிசனத்தை நாள்தோறும் நாடி

அலைவது நல்லோர்க்கு ஒவ்வாது. கருடன் மஹாவிஷ்ணுவின் வாகனம் என்னும் ஐதிகத்தை முன்னிட்டு அதைத் தற்செயலாகக் காணுமிடத்து அக்காட்சியின் மூலம் நாராயண சேவை செய்து பழகலாம். ஆனால் அதைத் தேடித்திரிதல் யாருக்குமே ஒவ்வாது. மானுடப் பிறவியைச் சிறந்த லக்ஷியத்திற்குப் பயன்படுத்து பவர்கள் இத்தகைய சிறு செயல்களில் கருத்தைச் செலுத்த மாட்டார்கள்.

கேள்வி: *(720)* புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவதால் பாபம் நீங்குகிறது என்று சொல்லுகின்றனர். பின்பு புண்ணிய க்ஷேத்திரங்களில் போய்ப் பாபம் செய்தால் அப்பாபம் பன்மடங்கு அதிகரிக்கிறது என்கின்றனர். இது முரண்பாடு அல்லவா? பாபம் செய்யும் தௌர்ப்பாக்கிய வான்கள் புண்ணிய க்ஷேத்திரத்துக்குப் போகாமலே இருந்து விடுவது நலமல்லவா?

பதில்: எந்த இடம் நல்வாழ்வுக்கும் தூய எண்ணத்துக்கும் துணைபுரிகிறதோ அது புண்ணிய க்ஷேத்திரமாகும். இயற்கையின் வசதியும், மனிதனுடைய ஸத்கர்மமும், தெய்வீக எண்ணங் களும் சேர்ந்து ஒரு இடத்தைப் புண்ணிய க்ஷேத்திரம் ஆக்கி விடுகின்றன. நல்லார் வசிக்குமிடமே நாளடைவில் புண்ணிய க்ஷேத்திரமாகி விடுகிறது. அத்தகைய சூழ்நிலை பின்னும் வருகிற ஆத்மசாதகர்களுக்கு அனுகூலமான இடமாய் விடுகிறது. ஆகவே, அதன் புண்ணிய விசேஷம் பெருகிக்கொண்டே போகிறது. நலம் தருகிற ஓர் இடத்தை நல்லகாரியத்துக்கே பயன்படுத்தவேண்டும், அதிலிருந்துதான் நன்மையடைய வேண்டும் என்ற ஆர்வமும் ஒருவனுக்குத் தேவையாகிறது. அத்தகைய மனப்பான்மையும் நம்பிக்கையும் உடையவர் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவதால் விரைவில் மன பரிபாகம் அடைகின்றனர்.

இயல்பாகவே புனிதம் வாய்க்கப்பெற்ற புனல் கங்காநீர். அதில் நீராடுவதால் உடல் சுத்தியடைகிறது. வேறு நலன்கள் உடலுக்கும் உள்ளத்துக்கும் உண்டாகின்றன. அப்புண்ணிய நதிக்குள் ஒருவன் மலம் கழித்து அழுக்குப்பண்ணி விடுவானாகில் அது தனக்கும் கேடு, மற்றவர்களுக்கும் கேடு. நதியும்

தோஷமுடையதாகிறது. கங்கையுடன் தொடர்வு வைக்கவேண்டும். ஆனால் கங்கையை அழுக்குப்படுத்தலாகாது. அதை அழுக்குப் படுத்தியவன் பன்மடங்கு கேடு செய்தவன் ஆகிறான்.

எதிரொலி கேட்குமிடத்தில் நமது சொல்லே திரும்பவும் நமக்கு வருகிறது. வினைப்பயனை விரைவில் கொண்டுவர வல்லது புண்ணிய க்ஷேத்திரம். ஆங்கு மனிதன் எதை எண்ணுகிறானோ அது பன்மடங்கு வலிவுடையதாக விரைவில் அவனிடம் திரும்பி வருகிறது. மேலான எண்ணம் பன்மடங்கு மேம்படுகிறது; கீழான எண்ணமும் அப்படியே ஆகிறது. அதை எண்ணியவனுக்கே சொந்தமாகப் பிறகு அவனிடம் விரைவில் திரும்பி வந்துவிடுகிறது. அவரவர் வினையின் பயன் பன்மடங்கு வலிவுடையதாக அவரவர்க்கு வந்து சேருகிறது. புண்ணியம் பன்மடங்காகப் பெருகுவது போன்று பாபமும் ஆங்கு வலுக்கிறது.

நான் பாபம் செய்யும் பாங்குடையோன் என்று மனிதன் தன்னைச் சிறுமைப்படுத்தி எண்ணிக்கொண்டிருக்கலாகாது. அதனால் அவன் அதிகமாகவே சிறுமைப்படுவான். நலமே செய்யத் துணியவேண்டும். அதற்கு அனுகூலமான சூழ்நிலையையும் நாடவேண்டும். புண்ணியக்ஷேத்திரம் மிக அனுகூலமான சூழ்நிலை என்பதை நல்லார் அதிவிரைவில் அறிகின்றனர். மற்றவர்களும் அத்தகைய உறுதியான மனப்பான்மையுடன் ஆங்குச் சென்று அது தருகிற உதவியைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இயற்கையினின்று மனிதன் எத்தனையோ விதமான உதவிகளைப் பெறுகிறான். அவைகளுள் புண்ணிய க்ஷேத்திரங்கள் வழங்கும் அருள்நிலை மிக மேலானது. கெட்ட மனமுடையவர்க்குப் பாபத்தைப் பெருக்குதல் அதில் அடங்கி இருக்கும் ஆபத்து ஆகும். நல்ல மனமுடையவர்க்கு நலமே ஓங்குதல் அதன் சிறப்பு ஆகும். கேட்டைத் தவிர்த்து நலத்தை விரைவில் அடைந்திட மனிதன் கற்றுக் கொள்ளவேண்டும். ✯

55. மூட நம்பிக்கை

கேள்வி: *(721)* தற்சமயம் கோவாவில் கிறிஸ்துவப் பெரியாரின் உடல் தரிசன வைபவம் நடைபெறுகிறது. உயிர் பிரிந்து சுமார் நானூறு ஆண்டுகளாகியும் அதைப் பரிசுத்த, தெய்வீக ஒளியென நம்பியும், பிறரை நம்பும்படிச் செய்தும், அவ்வாறு நம்புவோர் என்றென்றும் அழியாப் பேரின்பம் அடைவர் என்றும், நம்பாதோர் தாழ்ந்த நித்திய நரக மடைவர் எனவும் மதஸ்தாபன குருமார்கள் மக்களுக்குப் போதித்து, தாமும் அவ்வாறே ஒழுகிவரும் அவர்கள் உண்மை உணர்ந்த ஞானிகள்தானா? அதன் உட்கருத்து என்ன? தெய்வீக ஒளி ஜடமாகிய உடலுக்கு உண்டா?

பதில்: மனிதன் உயிரோடு இருக்கும்பொழுது சரீரத்தை நெடுநாள் காத்து வைத்திருக்கும் கலை இந்தியர்களுக்குத் தெரியும். அது காயகற்பம் என்னும் பெயர் பெறுகிறது. காயகற்பம் செய்துகொண்டு சில நூற்றாண்டுகளாக மனிதன் உயிர் வாழ்ந்திருக்கலாம். இந்தியாவில் அப்படி வாழ்ந்தவர்கள் கூட்டத்தில் கடைசியானவர் திரைலிங்க சுவாமிகள் என்பவர். அவர் காசியில் வசித்திருந்தார். சுமார் ஐந்நூறு வருஷ காலம் அவர் ஜீவித்திருந்ததாகப் பலர் கூறுகின்றனர். சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்புதான் அவர் தேகவியோகம் ஆனார்.

இந்தியர்களுக்கு மற்றொரு கலையும் தெரியும். அது ஜடசமாதி என்னும் பெயர் பெறுகிறது. ஹடயோகத்தின் ஒரு பகுதியாகும் அது. மனிதன் தன்னை நெடுநாள் பூமிக்குள் புதைத்து வைத்துக்கொள்ளலாம். தண்ணீருக்குள்ளும் இருக்க லாம். அதன் பிறகு அவன் புறவுலக ஞாபகம் பெற்று மக்க ளோடு பேசவும் முடியும். அத்தகைய செயல் புரிகின்றவர்களை

இக்காலத்திலும் சிற்சில இடங்களில் காண்கின்றோம்.

செத்த சரீரத்தை நெடுங்காலம் பாதுகாத்து வைக்கும் கலையை எகிப்து நாடு பண்டைக்காலத்தில் கற்றிருந்தது. அக் கலை இப்பொழுது மறைந்து போயிற்று என்றே சொல்லலாம். மம்மி என்று அழைக்கப்படும் செத்த பிணங்கள், நாலாயிரம், ஐயாயிரம் வருஷங்கள் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. சுமார் மூவாயிரம் வருஷம் அப்படி வைக்கப்பட்டுள்ள எகிப்து நாட்டு மம்மி ஒன்று கல்கத்தாவில் பொருட்காட்சி சாலையில் இருக்கிறது. இன்றைக்கும் நாம் அதைக் கல்கத்தாவில் காணலாம். சரீரத் தினுள்ளே இரத்தக் குழாய்களிலும் நரம்புகளிலும் ஒருவகைத் திராவகத்தைச் செலுத்துவதால் உடல் அழிந்துபோகாத் தன்மை யைப் பெற்றுவிடுகிறது. கோவாவில் உள்ள கிறிஸ்தவப் பெரியாரின் உடல் அத்தகைய முறையில் பாதுகாத்து வைக்கப் பட்டதாக இருக்கவேண்டும். அதன்கண் தெய்வீக எழில் பொலி கிறது என்றோ, அதனிடத்திருந்து அருள் சுரந்து வருகிறது என்றோ சொல்லுவது ஆதரவற்ற கூற்றாகும். செத்த பிணத்துக்கு அத்தகைய சக்தி ஒன்றும் கிடையாது. ஒரு மகானுடைய உடலாயிருந்தாலும் பிணம் பிணமே. அதனிடத்துச் சக்தியிருக்கிற தென்று எண்ணுவதெல்லாம் நம்முடைய நம்பிக்கைதான். அத்தகைய நம்பிக்கை நலம் விளைவிக்கவல்ல நம்பிக்கை என்று மட்டும் நாம் இயம்பலாம். அதன் தெய்வத் தன்மையை நம்பினவர்களுக்குச் சொர்க்கப் பிராப்தி என்றும், நம்பாதவர் களுக்கு நரகப் பிராப்தி என்றும் போதிப்பது ஆதரவற்ற போதனையாகும். சமயத்தின் உட்கருத்தை அறிந்தவர்கள் அங்ஙனம் பகரமாட்டார்கள். அந்த உடலத்துக்குத் தெய்வ சக்தி இருக்கிறதென்றால் இப்பொழுது உலகிலுள்ள பல கேடுகளை அது நேர்முகமாக அகற்றிவரலாம். அப்படி அது எதையும் செய்து வருவதாக நாம் காண்கிறோமில்லை. சமயத்தின் பெயரால் உயர்ந்த கோட்பாடுகளைப் புகட்டுபவரும் உளர். மூடநம்பிக் கையை வளர்ப்பவரும் உளர். இதுபோன்று ஒரு செத்த பிணத்தின்மீது பெரு நம்பிக்கை வைப்பதைவிடத் தன்னை ஒழுக்கம் வாய்ந்தவனாகத் திருத்தியமைக்க வேண்டுமென்று ஒவ்வொருவனும் முயன்று வருவனாகில் அது நல்ல சமய அனுஷ்டானம் ஆகும். ஆகவே, இக்கிறிஸ்தவப் பெரியாரின்

பிரேதத்தின் வாயிலாகவோ, அல்லது வேறு எந்த மகானின் பிரேதத்தின் வாயிலாகவோ உலகுக்கு உயர்ந்த நன்மை வந்து விடுமென்று நாம் நம்புவதற்கு ஆதாரம் ஒன்றுமில்லை.

கேள்வி: *(722)* கல்யாணமாகாமல் வாழ்க்கை முழுதும் பிரம்மச்சாரிகளாகக் காலம் கழிப்பவர்கள் இறந்தபின் 'புத்' என்ற நரகத்தில் விழுவதாக அறிஞர்கள் அறைகின்றார்கள். பிரம்மச்சரியம் உயர்ந்த தத்துவம். அப்படியிருக்க உன்னத லட்சியத்தைக் கொண்ட பிரம்மச்சாரிகளுக்குப் புத் என்ற நரகம் இருப்பது நம்பத்தக்கதா?

பதில்: ஜீவன் ஒருவன் பரமாத்மாவினிடத்திருந்து தோன்றி வந்தவன். இப்பொழுது பிரபஞ்ச வாழ்வு என்னும் பெரிய யாத்திரை செய்து கொண்டிருக்கிறான். இந்த யாத்திரை முற்றுப் பெறுமிடத்துத் தான் பழையபடி பரமாத்மாவினிடம் போய்ச் சேருகிறான். ஜீவன் உலக வாழ்க்கையில் மேலும் மேலும் கட்டுண்டவனாய் வருகின்றபொழுது அவன் கையாளும் உபாயத்துக்குப் பிரவிருத்தி மார்க்கம் என்று பெயர். உலகிலுள்ள சம்பத்துக்களையெல்லாம் மேலும் மேலும் பெறுபவனாக அவன் உணர்கின்றான். உண்மையில் உலகப் பொருள்களில் அவன் மூழ்கியவன் ஆகின்றான்; அவைகளில் கட்டுண்டவன் ஆகின்றான். உலகப் பொருள்களை வைத்து அனுபவித்து இன்புற்றிருப்பதாகத் தன்னைப்பற்றி அவன் எண்ணிக் கொள்கின்றான். வாஸ்தவத்தில் இவனுடைய பாரமார்த்திகப் பெருநிலை உலக வியவகாரத்தால் ஜீரணிக்கப்படுகிறது.

ஜீவன் பெற்றுள்ள உலகவாழ்வு தனக்கு அனுகூலமாக அமையுமிடத்து அது சொர்க்கம் எனப்படுகிறது. பிரதிகூலமாக அதை அவன் உணர்வானாகில் அதே பிரபஞ்ச வாழ்வு அவனுக்கு நரகமாய் விடுகிறது. உலகில் நரகம் என்றும் சொர்க்கம் என்றும் வெவ்வேறு இடங்கள் இல்லை. ஒரே உலகம் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்பச் சொர்க்கமாகவோ, நரகமாகவோ அல்லது இன்பதுன்பம் கலந்த இவ்வையக வாழ்வாகவோ காட்சி கொடுக்கிறது. புத்திரப்பேறு இவ்வுலக சம்பந்தமானது. புத்திரர்களைப் பெற்று இன்புற்றிருப்பாரை இவ்வுலகில் காணலாம். புத்திரரைப் பெற்றுத் துன்புற்றிருப்பாரையும்

இவ்வுலகிலேயே காணலாம். சிலருக்குப் புத்திரரே நரகத்துவாரம் போன்று அமைந்து விடுகின்றனர். ஆக, புத்திரப்பேறு நரக கதிக்குத் தடை என்பது முற்றிலும் உண்மையல்ல. இவ்வுலகம் தருகின்ற காட்சிகளே இக்கோட்பாட்டுக்குப் பிரமாணங்களாகும்

இவ்வுலகப் பற்றை நீக்குமளவு ஒருவன் பரம்பொருளிடத்து விரைந்து போகின்றான். அது நிவிர்த்தி மார்க்கம் எனப்படுகிறது. "கர்மத்தாலல்ல, மக்களைப் பெறுவதாலல்ல, செல்வத்தைச் சேகரிப்பதாலல்ல, இவை யாவையும் தியஜிப்பதாலேயே அமிர்தத் துவம் அடையப்படுகிறது" என்பது ஆப்தவாக்கியம். சாதகன் ஒருவன் பிரம்மச்சரிய விரதத்தில் நிலைபெற்றாலொழிய அவன் நிவிர்த்தி மார்க்கத்துக்குத் தகுதியுடையவன் ஆகான். பிரம்ம ஞானத்தைக் குறித்து यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति என்பதும் மறைமொழியாகும். ஆக, புத் என்ற நரகத்தைப் பற்றிய கோட்பாடு லௌகிகர்களுடையது. பாரமார்த்திகத்தில் செல் வோர்க்கு இது நகைப்புக்குரியதாகும்.

கேள்வி: *(723)* அழியும் தன்மையுடைய இவ்வுடம்பு அழியா உடம்பாக இருக்க முடியுமென்றும்; நரை, திரை மூப்பு, சாக்காடு ஆகிய இவை இவ்வுடம்பைச் சார்ந்தன அல்லவென்றும் கூறப்படுகிறது.

மேலும், காந்தியடிகள், பகவான் இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், மஹரிஷி ரமணர் முதலியவர்களின் தேகம் நோய்வாய்ப்பட்டு அழிந்துபட்டன; ஆனால் இராம லிங்க அடிகள் இக்கூட்டத்தைச் சார்ந்தவர் அல்லரென்றும், அவர் இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி வாழ்கிறா ரென்றும் கூறப்படுகிறது. இதற்குச் சான்றாக அருட்பா விலுள்ள கீழ்க்கண்ட அடிகள் காட்டப்படுகின்றன.

**"வையகத்தே யுறுமரண வாதனையைத் தவிர்த்த
வாழ்க்கையதே வாழ்க்கையென மதித்ததனைப்
பெறவே மெய்யகத்தே விரும்பியிங்கே வந்திடுமின்"
"சாவையும் பிறப்பையும் தவிர்த்திட விரும்பீர்"
"தப்பாலே சகத்தவர் சாவே துணிற்
தாமுள நாண நான் சாதலைத் தவிர்த்தே
எப்பாலு மெக்காலு மிருத்தலே பெற்றேன்"**

வள்ளலார் அழியா உடம்புடன் வாழ்கிறார் என்று கூறுதல் நம்பத்தக்கதா?

பதில்: மனிதனுடைய சொரூபத்தில் மூன்று பகுதிகள் இருக்கின்றன. அவைகளை உடல், உள்ளம், உயிர் எனப்பகர லாம். வேதாந்த பரிபாஷையில் இம்மூன்று பகுதிகளும் முறையே ஸ்தூலசரீரம், சூக்ஷ்மசரீரம், காரணசரீரம் எனப் பெயர் பெறுகின்றன. இம்மூன்றுக்கும் சரீரம் என்பது பொதுப் பெயர். சரீரம் என்னும் கருவியின் வாயிலாகவே சரீரி ஆகிய ஆத்மா இலங்குகிறது. சரீரத்தைப் பற்றியும் அதனுள் வீற்றிருக்கும் ஆத்மாவைப் பற்றியும் தெளிவுபட ஆன்றோர்கள் விளக்கியிருக் கிறார்கள். அவர்கள் விளக்கியிருப்பதை எல்லோரும் சுவானு பூதியிலும் தெரிந்து கொள்ளலாம். சுவானுபூதியில் தெரிந்து கொள்ளும்வரை இக்கோட்பாடு வெறுமனே நம்பிக்கைக் குரியதாகும். யுக்தியாலும் ஏகதேசம் அதைப்பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

எது ஓயாது ஜீரணமாகிக் கொண்டிருக்கிறதோ அது சரீரம். எது ஓயாது தகனமாகிக் கொண்டிருக்கிறதோ அது தேகம். தேகம் நித்யவஸ்து அல்ல என்பது ஆன்றோர் வாக்கு. நித்தியமல்லாததை நித்தியமாக்க முடியுமென்று இதுவரையில் யாரும் பகர்ந்ததில்லை. அப்படிச் செய்து காட்டியதும் கிடையாது. அஞ்ஞானத்தில் இருக்கும் மனிதனுக்கு அநித்தியமாயுள்ள சரீரமே நித்யமானதாகப் புலப்படுகிறது. அவன் சரீரத்துக்கே முதன்மை ஸ்தானம் கொடுக்கிறான். சரீரத்தின் மூலம் வருகிற இன்ப துன்பங்களே முக்கியமானவைகளாக அவனுக்குத் தோன்று கின்றன. சரீரத்துக்கு உள்ளிருக்கும் ஆத்மாவைப்பற்றிக் கேள்விப் பட்டவர் மிகச்சிலர். கேட்டதைச் சிந்தித்துப் பார்த்தவர் அதைவிடச் சிலர். சிந்தித்துப் பார்த்துத் தெளிவடைந்தவர் இன்னும் மிக மிகச் சிலரேயாவர்.

தேகத்தை முக்கியமான வஸ்துவாக மதிப்பிடுபவர் அது அழிந்துபட்டுப் போகாது இருக்கவேண்டும் என விரும்புகின் றனர். இந்த விருப்பத்தின் விளைவாகவே காயகற்பம், காய சித்தி முதலிய சாஸ்திரங்களும் தோன்றியிருக்கின்றன. தேகத்தை நெடுநாள் பாதுகாத்து வைக்க முடியும். அப்படி அதைப் பாதுகாத்து வைத்த பெரியார்கள் பலர் இப்பாரினுள்

இருந்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லுதற்குப் பிரமாணம் இல்லை. ஸ்தூல சரீரத்திலும் வலிவு படைத்தது சூக்ஷ்ம சரீரம். அதைவிட வலிவு படைத்தது காரண சரீரம். இக்காரண சரீரம் அக்ஞானத்தில் தோன்றியது. ஞானோதயம் வரும்பொழுது அக்ஞானம் இருக்குமிடம் தெரியாது மறைந்து போய்விடுகிறது. சூரியோதயத்தில் இரவு இருக்குமிடம் தெரியாது மறைந்து போவதற்கு அது ஒப்பாகிறது. மூன்று வகைகளாகப் பிரிந்துள்ள இச்சரீரமே நினைவின் தோற்றம் என்பது கோட்பாடு. நினைவு மாறுவதற்கு ஏற்பச் சரீரம் மாறுகிறது. அதைத்தான் பிறப்பு இறப்பு என்கின்றோம். நினைவு அற்ற நிலை ஆத்மாவுக்கு உண்டு. அப்பொழுது அதற்கு சரீரம் இருக்கவேண்டியது அவசியமல்ல. ஒரு சான்றின் மூலம் இதை விளக்குவோம். நமது நிழல் பூமியில் படுகிறது. நிழலுக்கு முதல் காரணம் நாமும் நம்மை விளக்குகிற சூரியனும். அதிகாலையில் நிழல் நீண்டு இருக்கிறது. உச்சிவேளை வரும்பொழுது நிழல் குறுகி மறைந்துவிடுகிறது. நிழல் இருப்பதால் ஆளின் சொரூபத்துக்கு அதிக மதிப்பு இருக்கிறதென்றும், நிழல் மறையும்பொழுது ஆளின் சொரூபம் குறைந்துபட்டுப் போய்விட்டது என்றும் சொல்லுவது ஒவ்வாது. நிழல் போன்றதே இவ்வுடல். இதற்கப்பாலுள்ள நிலையை நாம் நாடி வருகிறோம்.

உடலில் இருக்கும்பொழுதே ஞானிக்கு உடலில் அபிமானம் இல்லை. முதிர்ந்த ஞானிக்கு உடல் இருப்பதைப் பற்றிய ஞாபகமும் இல்லை. அத்தகைய உடலை யாரேனும் ஒருவர் பாதுகாத்து வைத்திருக்கிறார் என்றால் அவர் உடலபிமானம் உடையவர் என்று பொருள்படுகிறது. உடல் அபிமானம் உடையவர் அக்ஞானிகள். வள்ளலார் தம் உடலைப் பாதுகாத்து வைத்திருக்கிறார் என்று நம்புகிறவர்கள் மறைமுகமாக அவரை அக்ஞானி என்று பகர்கிறார்கள். ஹடயோகிகள் நெடுநாள் உடலை வைத்திருப்பது போன்று அவரும் வைத்திருக்கிறார் என்றால் அவ்வுடலுடன் தம்மை அவர் மற்றவர்களுக்கு ஏன் காட்டித் தரலாகாது? உயிர்களிடத்து அவர் பெருங்கருணை வைத்திருந்ததுதானே உடலில் வாழ்ந்திருந்தபொழுது மக்கள் அவரிடத்துக் கண்ட சிறப்பு ஆகும்? சிறிது காலம் உடலின்

மூலம் தம்மை விளக்கியவர் இப்பொழுதும் ஏன் அவர் தம்மை விளக்கிக் காட்டலாகாது? அவருடைய பாடல்களை யெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் தேகாத்ம புத்தியைக் கடந்த நிலைக்கு அவர் பரிபக்குவம் அடைந்து வந்தார் என்பதே வெளியாகும். மற்றவர் கண்ணுக்குத் தென்படாது அவர் உடலை வைத்திருக்கிறார் என்னும் கொள்கை யுக்திக்கும் அனுபவத் துக்கும் பொருந்தாது. அவருடைய சிறப்புக்கும் அது ஒவ்வாது.

கேள்வி: *(724)* வாழ்க்கையில் நமக்கு ஏதாவது கஷ்டம் வந்துவிட்டால், அல்லது சந்தேகம் ஏற்பட்டுவிட்டால் கோயிலில் பூ வைத்துக் கேட்கிறோம். உண்மையில் கடவுளிடமிருந்து நமக்குப் பூவின் மூலமாக உத்தரவு வருகிறதா?

பதில்: கோயிலில் பூ வைத்துக் கடவுளுடைய உத்தரவை எதிர்பார்த்து நிற்கும் பழக்கம் பலர்க்கிடையில் இருக்கிறது. பாமரர்க்கிடையில் அதிகமாகவும், கற்றவர்க்கிடையில் குறை வாகவும் இப்பழக்கத்தைக் காணலாம். மனப்பூர்வமாகவே இதில் நம்பிக்கை வைக்கின்றவர்கள் பலபேர் இருக்கின்றனர். ஆனால் இது சாஸ்திரத்திற்கு ஒத்ததா, தத்துவத்துக்குப் பொருந்தியதா என்கின்ற ஆராய்ச்சியை அவர்கள் செய்வதில்லை. பூ வைத்துக் கோயிலில் சுவாமியின் உத்தரவு கேட்கும் பலபேர் உண்மை யாகவே குழந்தை போன்ற கபடமற்ற நம்பிக்கை உடையவர் களாக இருக்கிறார்கள். அவர்களுடைய களங்கமற்ற மனப் பான்மை பாராட்டத்தக்கது. அது ஒருபுறம் இருக்க இம்முறை யானது ஈசனுடைய திருவுளத்துக்கு முற்றிலும் ஒத்ததாயிருக்கிறதா என்பதைத்தான் நாம் ஆராயவேண்டும்.

கோயிலில் பொதுவாக இரண்டுவித நிறமுடைய பூக்களைத் தனித்தனியே கட்டிச் சுவாமியின் முன்னிலையில் வைப்பார்கள். எண்ணிய எண்ணம் தங்களுக்கு அனுகூலமாக ஆகும் என்றால் ஒருநிறப் பூ வரவேண்டுமென்று மனதிற்குள் சங்கற்பித்துக் கொள்வார்கள். பிரதிகூலமாகப் போய்விடுமென்றால் மற்றொரு நிறப் பூ கைக்கு வரவேண்டுமென்று நினைத்துக் கொள்வார்கள். இரண்டு கட்டையும் சந்நிதியில் வைத்துப் பூஜைசெய்து ஏதேனும் ஒன்றை எடுத்து வரும்படிப் பூஜாரியிடம் பகர்வார்கள்.

கைக்கு வரும் பூவை அனுசரித்துக் கடவுளின் திருவுளம் அல்லது உத்தரவு அத்தகையதென்று அவர்கள் முடிவு கட்டுவார்கள். மற்றும் ஒருமுறையைக் கையாளுபவர்களும் உண்டு. கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்தின் விக்கிரகத்தின் தலையில் வெள்ளைப் பூ ஒன்றும், சிவப்புப் பூ ஒன்றும் வைத்து விடுவார்கள். ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யக் கடவுளுடைய அனுமதி இருக்கிறதென்றால் வெள்ளைப் பூ கீழே விழவேண்டும் என்று பிரார்த்திப்பார்கள். கடவுளுடைய அனுமதியில்லையென்றால் சிவப்புப் பூ கீழே விழவேண்டு மென்பார்கள். பிறகு பிரார்த்தனையும் மணியடித்தலும், சில இடங்களில் கொட்டுதலும் நிகழும். பூ விழுவதைக் கண்டு தெய்வத்தின் திருவுளத்தை அறிகிறார்கள்.

இதை ஒட்டிய நிகழ்ச்சி ஒன்றை இங்கு தெரிவிப்பது உசிதமாகும். சில தினங்களுக்கு முன்பு தபோவனத்துக்கு அன்பர் ஒருவர் வந்து சேர்ந்தார். நூறு மைலுக்கு அப்பாலுள்ள ஊர் ஒன்றிலிருந்து பிரயாணம் பண்ணி வந்தவர் அவர். வினயத் துடன் சில விஷயங்களை அவர் வினவினார். அதற்கு விடை தரமுடியாது. அவர் மனதில் இருந்ததையெல்லாம் தெளிவுபடுத்தி விளக்கும்படி நாம் வேண்டினோம். அவர் கொடுத்த செய்தியின் சாரம் வருமாறு: சுமார் பத்து அல்லது பன்னிரண்டு வருஷங் களுக்கு முன்பு அவர் ஊரிலிருந்து அவருக்குச் சொந்தமாயிருந்த ஒரு சிறுவனும், சிறுமியும் காணாது போய்விட்டார்கள். வழிப் போக்கர்களாயிருந்த வயிராகிகள் யாரோ அவர்களை அழைத்துக் கொண்டு போயிருக்கவேண்டும் என்பது அவருடைய நம்பிக்கை. கோயிலில் அவர் பூ வைத்துக் கேட்டார். அவருக்கு விடையும் கிடைத்தது. அதாவது காவிரிக் கரையில் தென்னந்தோப்புகளுக்கு இடையில் ஒரு ஸ்தாபனத்தில் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பது தெய்வத்திடமிருந்து அவர் பெற்ற தகவல் ஆகும்.

இதையெல்லாம் கேட்டபின் அதில் நம்பிக்கை வைக்க வேண்டாமென்றும் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு காணாமற்போன சிறுவர்கள் இப்பொழுது பழைய இடத்தில் வந்து இன்புடன் தங்கியிருக்கும் பாங்கு உடைத்திருக்கமாட் டார்கள் என்றும் அவர்களை அடையாளம் கண்டுபிடிப்பதும் சாத்தியமல்ல என்றும் அவருக்குச் சமாதானம் சொல்லி அனுப்ப

வேண்டியதாயிற்று. கேட்டவர் கபடமற்றவர். ஏழை நெஞ்சம் படைத்தவர். அவர் போன்றவர்கள் இவ்விதம் நம்பிக்கை வைப்பதைத்தான் ஆங்காங்குக் காண்கின்றோம்.

மனிதன் தன் ஆசையால் தூண்டப்பெற்று பல செயல்களைச் செய்கின்றான். கடவுளுடைய துணையையும் அதற்கு நாடுதல் உண்டு. தொடுத்த கர்மம் நிறைவேறுவதும் உண்டு; தோல்வியுறுவதும் உண்டு. எது நிகழ்ந்தாலும் இறுதியில் அது அம்மனிதனுடைய நன்மைக்கேயாம். ஆசையற்றவர்கள் கடவுள் ஆக்ஞைப்படி கர்மம் செய்யக் காத்திருக்கின்றனர். அத்தகையவர்களுக்குத் தெய்வம் அகத்தே மனச்சாட்சியாகவும் புறத்தே வசதியான சூழ்நிலையாகவும் இருந்து எத்தகைய கர்மத்தில் ஈடுபட வேணடுமென்பதைக் காட்டியருள்கின்றது. இதைத்தான் உண்மையில் தெய்வ சங்கல்பம் என்று சொல்லவேண்டும். முற்றும் தெய்வத்தை நம்பியிருக்கின்றவர்களுக்குத் தெய்வத்திடமிருந்து எதைச் செய்வது, எதைத் தவிர்ப்பது என்ற ஆதேசம் வருகின்றது. பூ வைத்துக் கேட்பது அக்ஞானத்திலிருக்கும் மக்கள் கையாளும் முறை ஆகும். அதைக் கையாளாதிருப்பதே அறிஞருக்கு அழகு ஆகும். அதில் வரும் அனுகூலம் அல்லது பிரதிகூலமான செயல் வெறும் தற்செயலே. அம்முறையினின்று விவேக வளர்ச்சி உண்டாவதை நாம் காண்பதில்லை. உண்மையில் கடவுளைச் சார்ந்திருப்பவர்க்கே விவேகம் வளர்ந்துகொண்டே வருகிறது.

கேள்வி: *(725)* எங்கள் ஊரில் ஒருவர் வீட்டில் ஒரு நகை திருட்டுப் போய்விட்டது. அதற்கு அவர்கள் ஒரு மந்திரவாதியை அழைத்து வந்தார்கள். அந்த மந்திரவாதி அவர்களுக்குச் சந்தேகம் உள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். பிறகு ஒரு கிண்ணியை வைத்து மந்திரம் ஓதினான். அந்தக் கிண்ணி ஒருவர் வீட்டின் வாயிற்படி வரையிலும் தத்தித் தத்தி ஓடி நின்றுவிட்டது. அந்த மந்திரவாதி அந்த வீட்டிலுள்ளவன்தான் திருடினான் என்றான். இது உண்மையா?

பதில்: இத்தகைய முறையைக் கையாளுவது அறிவாளிகளுடைய செயல் ஆகாது. இது மிகவும் அநாகரிகமானது,

யுக்திக்குப் பொருந்தாதது, தத்துவத்துக்கு முரண்பட்டது. மக்களிடத்துள்ள குருட்டு நம்பிக்கையைப் போலி மந்திரவாதிகள் தங்களுடைய ஜீவனோபாயத்தின் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நேர்மையில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நேர்மையாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முயலவேண்டும். பொருள் அகப்படாது போய்விடுமிடத்தும் அதை அனுபவிப்பதற்குரிய பிராப்தம் அதற்குமேல் தம்மிடத்து இல்லை என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொள்ளவேண்டும். அசாதாரணமான முறைகளில் மனதைச் செலுத்திச் சந்தேகத்தை வளர்ப்பதும், சஞ்சலத்தை உண்டுபண்ணுவதும் பொருந்தாது.

கேள்வி: *(726)* சிலர் பேய் என்றும் பிசாசு என்றும் கூறி மக்களைப் பயத்தில் ஆழ்த்திப் பணமும் பறிக்கிறார்களே, உண்மையாகவே பேய் ஒன்று உண்டா? இல்லை கயவர்கள் கட்டிவிட்ட கதையா? கிறிஸ்தவ நூல்களில் பேய் உண்டென்றும் அவைகள் கடவுளின் எதிரிகள் என்றும், கடவுளுக்கும் பேய்க்கும் சண்டை நடப்பதாகவும் கண்டிருக்கிறதே?

பதில்: மக்களுள் துஷ்டர்களைப் பேய் என்றும் பிசாசு என்றும் பகர்வது உலகத்தவர் வழக்கம். ஸ்தூல சரீரத்தை உகுத்தான பிறகும் சஞ்சலப்படுகிற நிலையில் யாதனா சரீரத்தில் சிறிது காலத்துக்குச் சில ஜீவர்கள் இருப்பதுண்டு. ஆனால் அவர்களோடு நாம் தொடர்பு வைக்கமுடியாது. பயத்தினால் சிலர் பேய் பிசாசுகளைப் பற்றி மனதில் கற்பனை பண்ணிக் கொள்கின்றனர். மனோகற்பிதத்துக்கு அந்நியமாக அவர்கள் காணும் பேய் பிசாசு கிடையாது. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். ஒரு இடத்தில் பேய் இருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பவர்கள் அந்த இடத்துக்குப் போவார்களானால் பேயைப் பற்றிய அச்சம் அவர்கள் உள்ளத்தில் உண்டாகிறது. அப்படிப்பட்டவர்கள் பகலிலேயே போவதற்கு அஞ்சும் ஒரு இடத்துக்கு அவ்விடத்தைப் பற்றிய செய்தியை முன்பின் அறியாத ஒருவன் நள்ளிரவில் அங்குப் போவானானால் அவனைப் பேய் பிடித்துக் கொள்வதில்லை. பேயையும் அவன் அங்குக் காண்பதில்லை. உண்மையில் பேய் இருக்குமானால்

அவனுக்கும் அங்குத் தென்பட்டிருக்க வேண்டும். எனவே பேய் பிசாசு இருப்பதற்கு மனம்தான் காரணமேயொழிய உண்மையில் பேய் பிசாசு இல்லை. நாம் அவைகளைப் பற்றி அஞ்சுவது நம்முடைய அறியாமையேயாகும்.

கிறிஸ்துவர்கள் கடவுளுக்கு எதிரியாக இருக்கும் சைத்தானைப் பற்றிப் பகர்ந்து வருகின்றனர். அவர்களுடைய கொள்கையை நாம் இயற்கைத் தத்துவமாக வகைப்படுத்தி விளக்குகிறோம். தெய்வ சம்பத், அசுர சம்பத் என்னும் இரண்டு விதமான இயல்புகள் இயற்கையில் இயங்குகின்றன. இந்த இரண்டு இயல்புகளுக்கிடையில் ஓயாத போராட்டமும் உண்டு. தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையில் நிகழும் போராட்டங்கள் என்று நம் புராணங்கள் பகர்கின்றன. தெய்வ சம்பத் அல்லது நல்லியல்பு மனிதனை மேன்மையின்கண் எடுத்துச் செல்கிறது. அசுர சம்பத் அல்லது தீய இயல்பு மனிதனைக் கீழ்மையில் ஆழ்த்துகிறது. கீழான இயல்போடு போராடி மேலான இயல்பில் உறுதிபெற்றுப் பிறகு அதையும் கடந்து கடவுளை அடைவது வாழ்க்கையின் குறிக்கோள்.

கேள்வி: *(727)* ஸ்ரீ ஜகதாம்பிகே மஹாமாயே! ஜகதாம்பிகே மஹாமாயே! இதில் கண்ட சக்கரம் உலகமெல்லாம் சுற்றி வருகின்றது. ஒவ்வொருவரும் ஒன்பது நேயர்களுக்கு இதைக் காப்பி செய்து அனுப்ப வேண்டும். அனுப்பிய ஒன்பது நாளில் நன்மை ஏற்படும். பெயர் எழுதக் கூடாது. அவ்வாறு காப்பி செய்து அனுப்பாவிடில் புண்ணியம் கிடையாது. இது கிடைத்த தேதி அனுப்பிய தேதி எழுதவேண்டும். ஒருவர் ரூ.2000 பெற்றார். ஒருவர் அசட்டையினால் புத்திரசோகம் அடைந்தார். ஒருவர் உடனே அனுப்பியதால் பெரும் பாக்கியம் பெற்றார். நீங்களும் பாக்கியத்தை அடைவீர்கள். இது ஒரு மகான் உத்தரவு. இவ்வுத்தரவு கிடைத்த தேதி 30-11-57 அனுப்பிய தேதி 2-12-57.

மேலே கண்டபடி கார்டு ஒன்று என் பேருக்கு வந்திருக்கிறது. எழுதியது இன்னாரென்று தெரியாது. அதில் சொல்லியுள்ளபடி காப்பி செய்து அனுப்பவேண்டியது அவசியமா, அவசியமில்லையா?

பதில்: 'ஜகதாம்பா மஹாமாயே' என்பது அம்பிகைக்குரிய ஒரு மந்திரமாகும். அம்பிகையின் திருநாமத்தை ஓதுவதும், ஓதக்கேட்பதும் மிக நன்று. தெய்வத்தின் பெயரை ஓதுமளவு பக்தி பெருகுகிறது, மனபரிபாகம் வருகிறது. ஆனால் பக்தியைப் பெருக்குதற்கு ஈண்டுக் குறித்துள்ளபடி தபால் கார்டுகளை மறைமுகமாக அனுப்புவது சரியன்று. மேலும் காமியப் பிரார்த்தனை ஒன்று அதில் பொலிகிறது. மகான்கள் காமியப் பிரார்த்தனையை வளர்ப்பதற்கு ஒருநாளும் உத்தரவு கொடுக்க மாட்டார்கள். பிறர்க்கு இப்படி எழுதி அனுப்புவதால் ரூபாய் இரண்டாயிரம் கிடைத்தது என்று சொல்லுவது பெரிய பித்த லாட்டம். கைக்கூலியை நாடிக் கடவுள் வழிபாடு செய்கிறவர்கள் ஒருநாளும் அருளுக்குப் பாத்திரமாகமாட்டார்கள். இப்படிப் பிறந்து வந்துள்ள ஆணையைப் புறக்கணித்துப் பிறர் ஒன்பது பேருக்குப் போஸ்டு கார்டு எழுதத் தவறியதினால் புத்திரசோகம் உண்டாய்விட்டதென்று பகர்வது பெரும் புளுகு. புத்திரனுக்கு ஆயுள் முடிய அவன் உடல் அழிகிறது. தந்தை கார்டு எழுதப் புறக்கணித்ததை முன்னிட்டு அவனுக்குச் சாவு ஏற்பட்டது என்பது இயற்கையின் நியதிக்கு ஒவ்வாதது. பொருந்தாத இத்தகைய பிரசாரம் செய்கிறவர்கள் மக்களுக் கிடையில் குருட்டு நம்பிக்கையையும் மனத்தளர்வையும் பெருக்குகின்றார்கள். அன்பர்களுக்கிடையில் இத்தகைய போஸ்ட் கார்டுகள் வந்தால் அவைகளைக் கிழித்து எறிந்துவிட்டு இந்தப் போலிப் பிரசாரத்தில் கருத்துவைக்காது இருந்து பழகவேண்டும். தெய்வத்திடத்து நல்லன்பைத் தாங்களே வளர்த்து வருதல், தெய்வத்திடத்துப் பக்தி கொள்ளுதற்கு மற்றவர்களைத் தங்களோடு சேர்த்துக்கொள்ள முயலுதல் ஆகிய அரிய அறப் பணிகளை மக்கள் யாண்டும் செய்து வரவேண்டும். அதை முன்னிட்டுச் செல்வம் வரவேண்டுமென்கின்ற எண்ணம் பக்தர்களுடைய உள்ளத்தில் ஒருநாளும் உதிக்கலாகாது.

"யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக்கு என்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன்
மண் ஆள்வான் மதித்து மிரேன்
தேனேயும் மலர்க் கொன்றைச்

சிவனே எம்பெருமான் எம்
மானே உன் அருள் பெறுநாள்
என்றென்றே வருந்துவனே."

இத்தகைய மனப்பான்மையைப் பெறவேண்டும் என்பதைத் தான் பெரியோர்கள் நமக்குத் தெளிவுபடக் காட்டியிருக்கிறார்கள். இத்தகைய நேர்வழியைப் புறக்கணித்துவிட்டுப் போலிகள் பரப்புகின்ற புல்லிய முறைகளில் நாம் கருத்துவைக்காது இருந்து பழகவேண்டும்.

கேள்வி: *(728)* இறந்துபோனவர்களுடைய ஆத்மாக்களோடு சிலர் தொடர்பு கொண்டுள்ளனர் என்று ஒரு புலவர் குறிப்பிட்டு, மாணவன் ஒருவன் சுவாமி விவேகானந்தருடைய ஆன்மாவோடு தொடர்பு கொண்டிருந்தான் என்றும், அந்த ஆன்மாவினுடைய உதவியினால் ஆங்கிலப் பாட பரீக்ஷயின்போது மிக உயர்ந்த நடையில் எழுதி முதலாவதாகத் தேறினான் என்றும் குறிப்பிட்டார். இது எப்படிச் சாத்தியமாகும்? இதை நாமும் பின்பற்றலாமா? ஆத்மீக முன்னேற்றத்துக்கு இதனால் தடையேற்படுமா?

பதில்: இது நம்புதற்குரிய விஷயமல்ல. முறையாக இதை ஆராய்ச்சி செய்து பார்த்தால் இது வெறும் பொய்ப் பிரசாரம் என்பது வெளியாகும். ஆவி உலகத்தோடு நாம் தொடர்பு வைக்கலாகாது என்னும் விஷயம் பலதடவைகளில் தர்ம சக்கரத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. ஆவி உலகத்தோடு தொடர்பு வைத்துப் பழக முயலுகின்றவனுக்குப் படிப்படியாக மன உறுதி போய்விடுகிறது. ஒருவிதமான மதி மயக்கத்துக்கு அவன் வசமாகிறான். இதற்கு மாறாக ஆத்ம சாதனமோ மன உறுதியை உண்டுபண்ணுகிறது. தன் திறமையினால் பாடத்தையும், மொழியையும் நன்றாகக் கற்று நேர்மையாகப் பரீக்ஷயில் எழுதி வெற்றி பெறுகிறவனே நேர்மையான மாணாக்கன் ஆகிறான். யாரோ ஒருவருடைய வசீகரத்துக்கு உட்பட்டு விடை எழுதுபவன் அல்லது பேசுபவன் உண்மையான ஆண்மகன் ஆகான். விவேகானந்த சுவாமிகள் அகண்ட சச்சிதானந்தத்தில் கலந்துவிட்டார். ஆவி உலகில் உலவித்திரியும் சிற்றுயிராக அவர் இப்பொழுது இல்லை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

பிறர் சொல்வதையெல்லாம் நம்பிக் கொள்வது விவேகம் படைத்தவர்களுடைய செயல் ஆகாது.

கேள்வி: *(729)* துர்க்கையம்மன் எங்கள் குல தெய்வம். அத்தெய்வத்துக்கு ஆடு, கோழிகளை எங்கள் முன்னோர்கள் பலியிட்டு வந்தனர். இப்பொழுது நாங்கள் அந்த அநாகரிகச் செயலை நிறுத்திவிட்டோம். ஆனால் எங்கள் குடும்பத் துக்குப் பொருள் கஷ்டம், உடல் நலக்குறைவு, தொழில் துறையில் கஷ்டம் முதலிய கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எங்கள் குடும்பத்துக்கு ஏற்பட்டுள்ள கஷ்டம் எங்கள் குல தேவதைக்கு ஆடு, கோழி முதலியவைகளைப் பலி போட்டுப் பூஜை போடுவதை நிறுத்தியதால் அந்தத் தேவதை சினந்து எங்களுக்கு - இத்தகைய இன்னல்களைச் செய்து வருவதாகவும், மீண்டும் அப்பூஜையைத் துவங்கி னால் இவ்வின்னல்கள் ஒழியுமென்றும் எங்கள் இனத்தார் ஒருவர் சாமியாடிச் சொல்கிறார். ஆனால் நாங்கள் புலால் உண்ணுவதில்லை என்று மனப்பூர்வமாக விரதம் கொண் டுள்ளோம். இந்நிலையில் நாங்கள் என்ன செய்வது?

பதில்: இவ்வுலக வாழ்க்கையில் உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லாது, சகடக்கால்போல வருவது இயல்பு. ஆகை யால் செல்வம் வந்து வாய்த்த காலத்து அதிலேயே மூழ்கிப் போகாதும் வறுமை வந்து வாய்த்த காலத்து மனத்தளர்ச்சியடை யாதும் இருந்து வரப் பழகுவது நல்ல வாழ்க்கைப் பயிற்சியாகும். வறுமையைக் குறித்து மனத்தளர்ச்சியடையாது அதை மகிழ்வுடன் ஏற்றுப் பழகுவதன் மூலம் மனத்திட்பம் உண்டாகிறது. மனத்திட்பத் தோடு சலியாது உழைத்து வந்தால் கஷ்டதசை நாளடைவில் நம்மைவிட்டு நீங்கிவிடும்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை"

என்ற வள்ளுவர் வாக்கை நாம் நினைவு கூறவேண்டும்.

அக்கோட்பாட்டை வாழ்க்கையிலும் கடைப்பிடித்து அதன் உண்மையை அனுபவத்திற்குக் கொண்டுவர முற்படவேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சிஷ்யர்களுள் நாக மஹாஷயர் என்னும் பரமபுருஷர் ஒருவர் இருந்தார். அவர் பரம ஏழை. ஆனால் மன அமைப்பிலோ அவர் ஒருநாளும் ஏழையாக இருக்கவில்லை. நிறை மனது படைத்தவராக அவர் நிறைவாழ்வு வாழ்ந்து வந்தார். அவர் போன்று வாழத் தெரிந்து கொள்கின்றவர்களுக்கு "இன்பமே எந்நாளும் துன்ப மில்லை" என்ற உண்மை விளங்கும்.

கடவுள் பெயரால் சில மூடப்பழக்கவ்ழக்கங்கள் இருந்து வருகின்றன. அம்மூடப்பழக்கவழக்கங்களுள் தெய்வத்துக்குப் பலி இடுவதும் ஒன்றாகும். கடவுள் தத்துவத்தைப் பற்றிய விவேகம் வாய்க்கப் பெறாதவர்கள் தெய்வத்தின் பெயரால் ஏதேதோ சிக்கல்களைத் தங்களுக்குத் தாங்களே கற்பித்துக்கொண்டு தெய்வம் துன்புறுத்துகிறதென்று நம்பி அவர்கள் அல்லல் படுகின்றனர். உண்மையில் எந்தத் தெய்வமும் எக்காலத்தும் நம்மைத் துன்புறுத்துவதில்லை. நம்முடைய அறியா மனதே நம்மைத் துன்புறுத்தி வருகிறது. நம் மனதில் தெளிவு உண்டாக உண்டாக நம் மனதைவிட்டுத் துன்பம் அகலுகிறது.

உடல் வாழ்வுக்கு உணவு அவசியம். எனவே உடல் படைத்திருக்கும் மக்கள் உணவு உண்டு வாழ்கின்றனர். ஆனால் இவர்கள்போன்று தெய்வம் உணவு உண்ணுவது கிடையாது. எனவே நம்மிடம் தெய்வம் உணவு கேட்க வேண்டிய அவசிய மில்லை. அப்படி உணவு கேட்கும் தெய்வம் எங்கும் இல்லை. "உயிர்ப்பலி கொடாவிட்டால் நம்மைத் துன்புறுத்துவேன்' என்று இயம்புகிற வியக்தி தெய்வமாகாது. நம் உயிரையே நாம் மாய்த்துக்கொள்ள நமக்கு உரிமையில்லை. அப்படியிருக்கப் பிற உயிரைப் பலிகொடுக்க நமக்கு உரிமையேது? ஊன் உண்ணும் தெய்வம் ஒருவேளை இருப்பதாக வைத்துக்கொண் டாலும் அத்தெய்வம் தனக்கு வேண்டிய ஊனைத் தானே தேடிக் கொள்ளட்டும். தேடிக்கொள்ள அதற்குத் திறனில்லா விடில் அது பட்டினிகிடந்து சாகட்டும். அதற்கு நாம் ஊன் படைக்க வேண்டியது அவசியமில்லை. "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக உலகு இயற்றியான்" என்பது வள்ளுவர்

வாக்கு. இவ்வாக்கிற்கேற்ப வள்ளுவர் தெய்வத்துக்குச் சாபம் கொடுப்பது போன்று நாமும் அந்த ஊன் உண்ணும் தெய்வத்தைச் சபிக்கலாம். இத்தகைய மன உறுதிப்பாடு நமக்கு வந்து அமையவேண்டும். அப்பொழுது தெய்வம் நம்மை வந்து துன்புறுத்துகிறது என்று நமக்கு நாமே கற்பனை செய்து கொள்ளமாட்டோம். தெய்வம் நம்மைத் துன்புறுத்துகிறது என்று நாம் கற்பனை பண்ணுவதற்கு நம்மிடத்திலுள்ள அக்ஞானமும், மனத்திட்பமின்மையுமே காரணமாகும். அக்ஞானத்தையும், மனத் தளர்வையும் அகற்றிவிட்டு நல்வாழ்வு வாழ்ந்து வரவேண்டும். நல்வாழ்வு வாழ்ந்து வருவதற்கிடையில் இத்தகைய மூட நம்பிக்கை நம் மனதில் புகுந்துவிடாது நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

கேள்வி: *(730)* பூசாரிகள் சாமி ஆடி இறந்தகால, எதிர் கால நிகழ்ச்சிகளையும் நாம் நினைத்ததையும் சொல்லு கின்றார்களே, அது எப்படி? அவர்கள் சொல்லுவதில் நம்பிக்கை வைக்கலாமா?

பதில்: தாம் வழிபடும் தெய்வத்தின் ஆவேசம் பூசாரி ஒருவனுக்கு வருவதாகவும் அவன் மூலம் நிகழ்கிற பேச்செல் லாம் அந்தத் தெய்வத்தினுடைய பேச்சென்றும் சிலர் கருதி வருகின்றனர். இதில் நம்பிக்கை வைக்கின்றவர்கள் தெய்வம் என்ன சொல்கிறதென்று கேட்டுத் தெரிந்துகொள்ள முயல் கின்றனர். அப்படிக் கேட்கின்றவருடைய மனப்பான்மைக்கு ஒத்திருக்கும் பல விடைகளைப் பூசாரி சொல்லிக்கொண்டே போகிறான். அவன் சொல்லுவதில் ஏதோ சில உண்மைகள் அமைந்திருப்பதையும் மக்கள் காண்கிறார்கள். ஆனால் உண்மை யாகவே தெய்வ ஆவேசம் அவனுக்கு வந்திருக்கிறதா என்பதை முறையாக ஆராய்ச்சி செய்கின்றவர்களுக்கு அதைப்பற்றிய உண்மை விளங்கிவிடும். முறையாகக் கேட்கின்ற கேள்விகளுக் கெல்லாம் விடை சொல்ல அவனுக்கு இயலாது. விவேகமில்லாத வர்கள் தாங்கள் நாடுவதன் பெரும் பகுதியைப் பூசாரியிடம் சொல்லிவிடுகின்றனர். அதற்கு முடிவு கேட்கின்ற பாங்கில் அவனிடம் வினவுகின்றனர். உத்தேசமாக ஏதோ சில விடை களை அவன் சொல்கிறான். ஆனால் விஷயத்தை ஆராய்ச்சி

பண்ணுகிறபாங்கில் நல்ல விவேகிகள் அவனிடம் கேள்விகள் கேட்டால் சரியான விடைகொடுக்க அவனால் இயலாது போய்விடும். உண்மையில் அவனடைந்திருப்பது அருள் நிலையல்ல. அதற்கு நேர்மாறாயிருக்கின்ற மருள்நிலையென்று அதைப் பகரவேண்டும். குறி கேட்கிறவர்களும் அதற்கு விடை சொல்கிறவனும் ஒருவித மயக்க நிலையிலிருக்கிறார்கள் என்பது ஆராய்ச்சிக்காரர்களுக்கு விளங்கும். எனவே இப்படி ஆவேசம் பெறுவதில் பொருள் ஒன்றுமில்லை. அறிவாளர் அதில் கருத்தைச் செலுத்தலாகாது.

கேள்வி: *(731)* சிலர் சாமி ஆடி நம் எதிர்காலத்தைப் பற்றியும் மற்றும் இறந்த, நிகழ்காலங்களைப் பற்றியும் உள்ள சமாசாரங்களைத் தெரிவிக்கின்றனர். இது எவ்வளவு தூரம் உண்மை? மேலும் சாமியாடி நம் குறி சொல்லுபவர்கள் நற்செயல் நல்லொழுக்கம் அற்றவர்களாகவும் இருக்க அவர்களால் உண்மையைச் சொல்ல முடியுமா?

பதில்: சாமி ஆடுபவர்கள், குறி சொல்லுபவர்கள் இவர்களில் பெரும்பான்மையோர் பொய் வேஷக்காரர்கள். தங்களுடைய ஜீவனோபாயத்துக்காக என்றோ, வெறும் பேரும் புகழுக்காக என்றோ அவர்கள் குறி சொல்லுவார்கள். குறி கேட்க வருகின்றவர்களுடைய மனநிலையைக் குறிப்பால் அறிந்து கொள்ளும் சாமர்த்தியம் அவர்களில் பலருக்கு உண்டு. கேட்கின்றவர்களுடைய விருப்பத்திற்கேற்ற பிரகாரம் அவர்கள் பதில் அளிப்பார்கள். குறி சொல்கின்றவர்களிடம் நல்வாழ்வு வாழ விரும்புபவர் யாரும் செல்லலாகாது. நாளைக்கு நமக்கு என்ன நிகழப்போகிறது என்பதைக் குறித்துக் கவலைப்படுவதும் அவர்களுக்குப் பொருந்தாது. குறிகேட்கப் போகின்றவர்கள் ஏழை நெஞ்சம் படைத்தவர்கள். அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுதற்குப் பாசாங்குக்காரர் பலர் தோன்றுகின்றனர்.

குறி சொல்பவர்களுடைய தரத்தை ஆராய்ச்சி பண்ணக்கூடியவர்கள் அதிவிரைவில் அவர்களைப் பற்றிய உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும். அவர்களிடத்து அசாதாரணமான சக்தி ஒன்றுமில்லை என்பதையும் விரைவில் கண்டுபிடித்து விடலாம்.

குறி சொல்பவர்களுள் அசாதாரணமான மனோசக்தி உடையவர்கள் அரிதிலும் அரிதாக யாரோ சிலர் இருக்கின்றனர். சில நிகழ்ச்சிகளைப் பற்றிய உண்மைகளைச் சொல்ல அவர்களுக்கு இயலும். பொதுப்பட அவர்கள் நெறியான வாழ்க்கை வாழ்பவர்களாகவும் இருப்பார்கள். விதவிதமான சித்திகளைப் பெறுவது மனதின் இயல்பு. ஒரு சிறிய சித்தி மனதுக்கு வந்துவிட்டால் அதைப் பெருமிதப்படுத்துவது இத்தகையவர் களது இயல்பு. ஆத்மசாதனத்தில் முன்னேற விரும்புகிறவர்கள் இத்துறையில் சிறிது சித்தி பெற்றவர்களிடத்திலும் குறி கேட்கும் மனப்பான்மையுடன் போகலாகாது. குறிகேட்பவரும் சொல்ப வரும் படிப்படியாகத் தங்கள் மனத்தகத்துள்ள இச்சாசக்தியை இழந்துவிடுகின்றனர். அதன் மூலம் நலத்தைவிடக் கேடே அதிகம் விளைகிறது. ஒழுக்கமற்றவர்களும் இத்துறையில் ஈடுபடுவதும் இயல்பே. ஆத்மசாதனத்தைக் கடைப்பிடிப்பவர்கள் குறி சொல்பவர்களை நாடலாகாது.

கேள்வி: *(732)* ஆவி உலகம் உண்டா? ஆவியுடன் பேச முடியுமா?

பதில்: நாம் ஒன்று உண்டு என்பதைத் தீர்மானிப்பதற்குப் பிரத்யக்ஷப் பிரமாணம், சாஸ்திரப் பிரமாணம், யுக்திப் பிரமாணம், அனுபவப் பிரமாணம் என்ற நான்கு பிரமாணங் களுள் ஏதேனும் ஒன்றைக் கையாளுகிறோம். ஆவி உலகம் உண்டு என்பதை அறிய இந்த நான்கு பிரமாணங்களும் உதவுவதில்லை. மண்ணுலகை நாம் கண்ணால் காண்கின்றோம். இப்பொழுது நாம் பஞ்சேந்திரியங்களையும் பயன்படுத்தி இவ்வுலகை அறிந்து வருகின்றோம். இது பிரத்தியக்ஷப் பிரமாண மாகிறது. ஆவி உலகத்தை அறிவதற்குப் பஞ்சேந்திரியங்களும் நமக்குப் பயன்படுவதில்லை. பஞ்சேந்திரியங்களைக் கொண்டு ஆவி உலகத்தை அறிய முடியாததால் பிரத்யக்ஷப் பிரமாணத் தைக்கொண்டு ஆவி உலகம் உண்டு என்பதைத் தீர்மானிக்க முடியாது.

இனி, சாஸ்திரப் பிரமாணத்திலும் ஆவி உலகம் உண்டு என்பதற்கு இடமில்லை. சான்றோர்கள், எத்தகைய வாழ்க்கை வாழ்ந்தால் மேன்மையுறலாம், எத்தகைய வாழ்க்கை நம்மைக்

கீழ்மையில் ஆழ்த்துகிறது என்ற விவரங்களை எழுதி வைத்துள்ளார்கள். மேலாம் வாழ்க்கையில் உண்டாகும் அனுபவங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை வேண்டியவாறு சான்றோர்கள் சாஸ்திரத்தில் சொல்லி வைத்திருக்கிறார்கள். மக்கள் அடையக் கூடிய பாரமார்த்திக அனுபவங்களைப் பற்றிச் சாஸ்திரம் தெளிவாகப் பகர்ந்துள்ளது. நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், பதினெட்டுப் புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள், நிகமங்கள் ஆகியவைகள் முடிவான சாஸ்திரங்கள் ஆகின்றன. இவை யாவற்றையும் நுணுக்கமாக எப்படி ஆராய்ந்து பார்த்தாலும் செத்தவர்கள் நம்மோடு தொடர்பு வைக்க முடியும் என்பதற்குப் பிரமாணம் இல்லை.

இனி, யுக்தியைக் கையாண்டு எவ்வளவு ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தாலும் ஆவி உலகம் உண்டு என்பதை அறிவதற்குப் பிரமாணம் இல்லை. உறங்குகின்ற மனிதன் எந்நிலையில் இருக்கிறான் என்பதையே அறிந்துகொள்ள முடிவதில்லை. இனி இறந்தவர்கள் எந்நிலையில் இருக்கிறார்கள் என்பதை எப்படி அறிந்து கொள்ள முடியும்?

> *"உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி*
> *விழிப்பது போலும் பிறப்பு"*

என்பது வள்ளுவர் வாக்கு. உறங்குபவனுக்கும், செத்தவனுக்கும் சில வேறுபாடுகளைக் காண்கின்றோம். உறங்குபவன் முன்பு இருந்த உடலிலேயே விழித்து எழுகின்றான். ஆனால் இறந்த மனிதன் பழைய உடலில் எழுந்திருப்பதில்லை. புதிய உடலில் எழுந்திருக்கிறான். தூங்குகிறவனிடத்தில் சுவாசிப்பது, இருதயம் துடிப்பது, இரத்த ஓட்டம் நிகழ்வது, உண்ட உணவு ஜீரணமாவது, புரண்டு படுப்பது, உளறுவது, குறட்டை விடுவது முதலிய செயல்கள் நிகழ்கின்றன. அந்நிகழ்ச்சிகள் யாவும் அவனை அறியாது அவனிடத்தில் நிகழ்கின்றன. ஆனால் மாண்டு போனவனுக்கோ சுவாசமும், இரத்த ஓட்டமும், இருதயம் அடித்தலும் நின்று விடுகின்றன. உடல் குளிர்ந்து போய் விடுகிறது. அவனைத் திரும்பவும் எழுப்ப முடிவதில்லை. நேரம் ஆக ஆக உடலில் துர்நாற்றம் எடுக்க ஆரம்பிக்கிறது.

உறங்குபவனுக்கும், மாண்டு போனவனுக்கும் ஒற்றுமைகள்

சில இருக்கின்றன. உலகைப் பற்றிய ஞாபகம் இருவருக்கும் இல்லை. உலகம் தரும் இன்பமும் துன்பமும், புகழ்ச்சியும் இகழ்ச்சியும், லாபமும் நஷ்டமும் இருவருக்கும் இல்லை. உலகத்தில் பெற்ற அனுபவங்கள் எல்லாம் இருவருக்கும் ஒடுங்கிப்போய் விடுகின்றன. காலத்தைப் பற்றிய உணர்வு இருவருக்குமில்லை. இருவர்களுக்கும் கருவிகரணங்கள் வேலை செய்வதில்லை. எனவே யுக்தியைக் கொண்டு தூங்குகின்றவனைப் போல் செத்தவனும் ஒருநிலையில் ஒடுங்கிக் கிடக்கின்றான் என்றுதான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

இதுகாறும் செத்தவர்கள் மீண்டு எழுந்து வந்து தங்கள் அனுபவத்தைக் கூறவில்லை. தூங்குகின்றவன் எழுந்தவுடன் ஒருவாறு தூங்கினதால் பெற்ற அனுபவத்தைக் கூறமுடிகிறது. "தூங்கினபொழுது நான் ஆனந்தமாக இருந்தேன்" என்று விழித்தவுடன் கூறுகின்றான். அப்படிச் செத்தவர்கள் தங்கள் அனுபவத்தைக் கூறுவதற்கு இதுவரையிலும் யாரும் எழுந்து வரவில்லை. எனவே அனுபவப் பிரமாணத்தாலும் ஆவி உலகம் உண்டு என்பதைத் தீர்மானிக்க முடிவதில்லை. ஆவி உலகம் உண்டு என்பதற்கு நான்கு வகைப் பிரமாணங்களாலும் முடிவு கட்ட இயலவில்லை. எனவே, அந்த உலகத்தைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. அப்படி ஓர் உலகம் இருக்கிறது என்று நாம் நம்பவேண்டியதும் இல்லை. அவ்வாறு நம்புவதற்கு அடிப்படை ஆதாரம் ஏதுமில்லை.

நனவு நிலையில்தான் மக்களோடு நாம் தொடர்பு வைப்பது சாத்தியமாகிறது. கனவு நிலையிலோ, உறக்க நிலையிலோ, மயக்க நிலையிலோ, மரணமடைந்துள்ள நிலையிலோ மற்றவர் களோடு தொடர்பு வைப்பது சாத்தியமில்லை. ஏனென்றால் மற்றவர்களோடு தொடர்பு வைப்பதற்குக் கனவு நிலையிலும், உறக்க நிலையிலும், மயக்க நிலையிலும் கருவிகரணங்கள் செயல்புரிவதில்லை. மரண நிலையில் கருவிகள் முற்றும் அழிந்துபட்டுப் போகின்றன. எனவே அந்நிலையில் இருப்பவன் நிச்சயம் மற்றவர்களோடு தொடர்புவைக்க முடியாது. வாழ்ந் திருக்கும்பொழுது மனிதன் படைத்துள்ள ஆற்றல்கள் எல்லாம் கனவிலும், உறக்கத்திலும், மயக்கத்திலும் ஒடுங்கிப் போய் விடுகின்றன. அந்நிலைகளில் இருப்பவர்களிடத்து ஒடுங்குகின்ற

ஆற்றல்கள் எல்லாம் பன்மடங்கு அதிகமாக மரணத்தில் ஒடுங்குகின்றன. மற்றொரு தேகம் எடுத்து அதை வளர்த்து ஆயத்தப்படுத்தும் வரையில் ஆற்றல்கள் எல்லாம் ஒடுங்கிய நிலையில்தான் கிடக்கின்றன. மரத்தின் ஆற்றல் விதையில் ஒடுங்கிக் கிடக்கிறது. மற்றொரு மரம் ஆவதற்கு முன்பு அது தன் ஆற்றலை வளர்க்க முடியாது. அதே முறையில் செத்தவன் மற்றொரு சரீரம் எடுக்கும் வரையில் தன் ஆற்றலையும் விருப்பத் தையும் யாருக்கும் வெளிப்படுத்தமுடியாது. அப்படி வெளிப் படுத்தாத நிலைக்கே மரணம் என்னும் பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது. செத்தவர்கள் உயிர் வாழ்ந்திருப்பவர்களோடு எவ்விதத் தொடர்பும் கொள்வதில்லை. அப்படி இருந்தும் அதில் கருத்துச் செலுத்துகிறவர்கள் மேலாம் குறிக்கோளை அறியாதவர்களும், நெறி வழுவியவர்களும் ஆகின்றார்கள்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் சமயப்பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபொழுது இதை ஒட்டிய நிகழ்ச்சி ஒன்று நேர்வதாயிற்று. செத்துப்போன அமெரிக்கப் பெருமகன் ஒருவன் கருவி மனிதன் (Mediator) மூலமாக உலகுக்குச் செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்று சுவாமிகளிடம் ஒரு சாரார் இயம்பினர். நேரில் நிரூபிப்பதாகக் கூறிச் சுவாமிகளை அவனிடத்தில் அழைத்தார்கள். "நிகழ்வதில் நான் பங்குகொள்ள மாட்டேன். வெறும் சாக்ஷியாகவிருந்து வேடிக்கை பார்க்கிறேன்" என்று கூறி ஆங்குச் சென்றார். கருவி மூலமாகச் செய்தி விடுத்த இறந்த மனிதனிடத்து மற்றவர்கள் கேள்வி கேட்டார்கள். இன்று புதிதாக இங்கு வந்திருப்பவர் யார்? அவரைப் பற்றிய விசேஷம் ஏதாவது உளதா? என்பது அவர்கள் கேட்ட கேள்வி யாகும். "இங்கே வந்திருப்பவர் ஓர் இந்தியர், அவர் ஒரு பெரிய மகான்" என்னும் விடை ஆவி உலகத்திலிருந்து வந்தது. இப்பொழுது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று விவே கானந்தரிடம் கேட்டார்கள். இச்செய்தி சொல்வதற்கு ஆவி உலகம் தேவை இல்லை என்று சுவாமிகள் பதில் தந்தார். இத்தகைய பயனற்ற புல்லிய முயற்சிகளில் மனதை ஒருபொழுதும் செலுத்தலாகாது என்று ஸ்ரீராமகிருஷ்ணரும் எச்சரிக்கை செய்துள்ளார். இத்தகைய அல்ப விஷயங்களில் கருத்துச் செலுத்துவதில் ஆன்மீக முன்னேற்றம் எதுவும் அமைந்து

விடாது. இதில் கருத்துச் செலுத்துபவர்கள் காலத்தை வீணாக்கி யவர்களாகிறார்கள். உயிரோடு இருப்பவரிடம் தொடர்பு கொள்வதற்கும், அவர்களுக்குச் சேவை செய்வதற்கும் நமக்குப் போதிய நேரமில்லை. இனி, செத்தவர்களோடு தொடர்புகொண்டு அவர்களுக்கு நாம் என்ன செய்யப் போகின்றோம்? எனவே, ஆன்மீக முன்னேற்றத்துக்கு வேண்டியதைச் செய்வோம்.

கேள்வி: *(732)* இறந்தவர்களோடு பேச முடியுமா?

பதில்: உயிரோடு இருக்கிறவர்களோடு பேச முடியும். அப்படிப் பேசுதற்கும் நிபந்தனை ஒன்று உண்டு. உயிரோடு இருக்கிறவன் தூங்கிக் கொண்டிருந்தால் அவனோடு பேச முடியாது. அவன் மயங்கிக் கிடந்தால் அவனோடு பேசமுடியாது. ஔஷதத்தைக் கொண்டு அவனிடத்து மயக்கத்தை வருவித்திருந் தால் அவனோடு பேச முடியாது. இனி, இறந்தவனுக்கு உடல் இல்லை. அவனுடைய உள்ளத்துக்குத் தனி வியக்தி கிடையாது. உள்ளம் ஒடுங்கிய நிலையை எய்துகிறது. விதையொன்று அடைந்துள்ள நிலையில் இறந்தவன் இருக்கிறான். விதையில் மரத்தினுடைய பாங்குகளெல்லாம் மறைந்து கிடக்கின்றன. விதையானது விதை நிலையிலேயே இருந்துகொண்டு பூக்கவும், காய்க்கவும் வல்லதாகாது. அதேவிதத்தில் இறந்தவனுக்குக் கருவி கரணங்கள் இல்லையாதலால் உயிர் வாழ்ந்திருப்பவர்களோடு அவன் பேசமுடியாது. நீண்ட உறக்க நிலையில் அவன் இருக் கிறான். குறுகிய உறக்க நிலையிலேயே பேச மனிதனுக்கு இயலுவதில்லையென்றால், நீண்ட உறக்கநிலையில் இருக்கிற பொழுது அவன் எங்ஙனம் பேசுவான்? அவனுக்குப் பேச முடியும் என்று சிலர் விளம்பரம் பண்ணுகின்றனர். எண்ணத் துக்கேற்ற எதிர் எண்ணம் medium என்று சொல்லப்படுகிற ஒரு முகாமை மனிதன் உள்ளத்தில் உதிக்கிறது. அதைச் செத்தவனுடைய செய்தியென்று கருதி அன்னவர் ஆறுதல் அடைகின்றனர்.

கேள்வி: *(734)* இறந்தவர்கள் ஏதோ கருவிகள் வாயிலாக நம்மோடு பேசுவதாகக் கூறுகிறார்களே இது சாத்தியமா?

பதில்: இறந்தவர்கள் நம்மோடு பேசுகிறார்கள் என்னும்

கருத்தை ஒரு மதக்கொள்கை போன்று பிரச்சாரம் பண்ணி வருகிறவர்கள் சிலர் இருக்கின்றனர். இது வெறும் கற்பனைக் கொள்கை. மரணத்தின் வாயிலாக அன்னவர்கள் நம்மிடத்திருந்து பிரித்தெடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். செத்தவர்கள் ஓய்வில் இருக்கிறார்கள். நம்மோடு பேசுதற்கு ஏற்ற கருவிகரணங்கள் அவர்களிடத்தில் இல்லை. வீணை வாசிக்கிறவனிடமிருந்து வீணையைப் பிரித்து எடுத்துக்கொண்டால் அவன் எப்படி வீணையை வாசிக்க முடியாதோ அப்படிச் செத்தவன் நம்மோடு உரையாடுதற்கான கருவிகரணங்கள் இல்லாதவன் ஆகிறான். அயர்ந்து உறங்குகின்றவனுக்கு நம்மோடு பேச இயலுவதில்லை. பேசினால் அவன் உறங்குபவன் அல்லன். இரண வைத்தியம் பண்ணுகிறபொழுது மயக்க மருந்து கொடுத்து நாடி நரம்புகளெல்லாம் உணர்ச்சியற்றுப் போகும்படி செய்கிறார்கள். அந்நிலையில் மயங்கியிருக்கிறவர்கள் நம்மோடு பேசுவதில்லை. அத்தகைய நிலையினின்றும் முழுதும் மாறியுள்ள கருவி கரணங்களற்ற நிலைக்குச் செத்தவர்கள் போகிறார்கள். நம்மோடு அவர்கள் பேசுகிறார்கள் என்பதற்கு எந்தச் சாஸ்திரத்திலும் பிரமாணமில்லை. ஆதலால் இக்கொள்கையைப் பொருளற்றது எனப் புறக்கணிப்பது உசிதம்.

கேள்வி: *(735)* தற்கொலை அல்லது கொலை நிகழ்ந்த வீட்டில் குடி இருக்கலாமா? அதனால் பாதகம் உண்டாகுமா?

பதில்: இயற்கையின் திட்டத்தைச் சிந்தித்துப் பார்த்து அறிந்து கொள்ளாததனால்தான் இத்தகைய சந்தேகங்கள் எழுகின்றன.

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் இயற்கை முழுவதும் கொலைக்களமாக இருப்பது விளங்கும். நாம் நடந்து போகும் பொழுது எத்தனையோ உயிர்கள் மிதிபட்டுச் சாகின்றன. ஆக, இயற்கையில் எல்லா இடங்களும் கொலை நிகழும் இடங்களாகத்தான் இருக்கின்றன.

மரணம் ஏதோ ஒருபோக்கில் மனிதனுக்கு வந்து அமைகின்றது. இயற்கையாக வந்து அமையும் மரணம் நோயின் மூலமாக வருகிறது. விரோதத்தாலோ, திடீரென்று உணர்ச்சிவசப் பட்டோ ஒருவர் மற்றொருவரைக் கொலைசெய்து விடுவதும்

உண்டு. கோழை மனம் படைத்தவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட உடல் துயரத்தையோ, மனத் துயரத்தையோ பொறுத்துக் கொள்ள முடியாது தற்கொலை செய்து கொள்வதுமுண்டு. இப்படி வருகின்ற மரணம் செயற்கையில் அமைவதாகும். எந்த முறையில் அமைந்தாலும் உயிர் உடலை விட்டுப் பிரிந்து விடுகிறது. உடலை விட்டுப் பிரிந்த உயிர் என்ன ஆகிறது என்பது நமக்குத் தெரியாது. உயிரை விட்டுப் பிரிந்த உடலை மட்டும் அவ்விடத்திலிருந்து எடுத்து நெருப்பில் பொசுக்கியோ, பூமியில் புதைத்தோ அழித்து வருகின்றோம். மரணம் நிகழ்ந்த இடத்தில் மரணத்துக்குள்ளான உயிரோ, உடலோ இருப்பதில்லை. அதைக் குறித்து உயிர் உள்ளவர்கள் அச்சத்துக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அச்சப் படுவது அறியாமையேயாகும். உயிரோடு இருப்பவர்கள் நமக்கு ஏதாவது தீங்கு செய்யலாம். ஆனால் செத்தவர்கள் நமக்கு எவ்விதத் தீங்கும் செய்ய முடியாது.

நாம் பற்றுமிக வைத்திருந்தவர்கள் காலமான வீட்டில் குடியிருந்தால் அவர்களைப் பற்றிய நினைவு அடிக்கடி நமக்கு வந்துகொண்டிருக்கும். அவர் நினைவு வரும்பொழுதுதெல்லாம் நாம் துயரத்துக்கு ஆளாகவேண்டிவரும். அதை முன்னிட்டுச் சிறிதுகாலம் அவ்வீட்டை விட்டு விலகி இருக்கலாம். அவ்வீட்டில் குடியிருப்பதால் அதைத் தவிர வேறு பாதகம் எதுவும் வந்து விடாது. மனதிலுள்ள அழுக்கு நமக்குத் துயரத்தையும், பாதகத்தையும் உண்டுபண்ணி வருகிறது. பாதகம் நம் மனதில் இருக்கிறதேயன்றிப் புறத்தில் நிகழும் நிகழ்ச்சியில் அல்ல.

கேள்வி: *(736)* பேய், பிசாசுகளைப் பற்றிய நம்பிக்கை சின்னஞ்சிறு வயதிலேயே பிஞ்சு உள்ளங்களில் புகட்டப் படுவதால் அந்த நம்பிக்கை ஆழ்ந்து இடம் பெறுகிறது. உண்மையில் பேயும் இல்லை; பிசாசும் இல்லை. இதே பாங்கில் கடவுளைப் பற்றிய நம்பிக்கையும் பெற்றோர் களாலும், உற்றார் உறவினர்களாலும் சின்னஞ்சிறு வயதிலேயே சிறுவர்கள் உள்ளத்தில் ஊட்டப்படுவதால் இந்த நம்பிக்கை அசைக்க முடியாத பாங்கில் மக்கள் உள்ளத்தில் இடம்பெற்று இருக்கிறது. எப்படிப் பேய், பிசாசு

இல்லையோ, அப்படிக் கடவுள் என்னும் ஒரு வணக்கத்துக் குரிய பெரிய பேர்வழி இல்லை. இக்குருட்டு நம்பிக்கை யைத் தொடர்ந்து விளக்கிக் காட்டி அகற்றுவது அறிஞர் கடமை - இங்ஙனம் நாஸ்திகர்கள் பகர்கிறார்கள். இக்கொள்கை சரிதானா?

பதில்: பேய் என்பதும் பிசாசு என்பதும் வெறும் குருட்டு நம்பிக்கையே. அதைப்பற்றிய போதனை யாருக்குமே பண்ண லாகாது. நாள் ஏறஏற உலகெங்கும் பேய் பிசாசைப் பற்றிய நம்பிக்கை குறைந்து வருகிறது. மக்களுக்கிடையில் இத்தகைய ஆதரவற்ற நம்பிக்கை அழிந்துபட்டுப்போவது முற்றிலும் அவசியம்.

ஆனால் ஆராய்ச்சி பண்ணிப் பார்ப்பதற்கு ஏற்பக் கடவுள் நம்பிக்கை உறுதிபெறும். ஏனென்றால் இது உண்மையை அடிப்படையாகக் கொண்டது. கடவுளுக்குப் பொருத்தமான விளக்கம் அனுபூதியில் அவரை அடையப் பெற்றவர்கள் பகர்ந்திருக்கிறார்கள். கடவுளைப் பற்றிய குருட்டு நம்பிக்கையும் மக்கள் உள்ளத்தில் புகுந்திருக்கிறது. அக்குருட்டு நம்பிக்கை களை அறவே அகற்றுவது தலைசிறந்த சமுதாயச் சேவை ஆகும். ஆனால் கடவுள் தத்துவத்தை மட்டும் அசைக்க முடியாது. கடவுளுக்கு மெய்ப்பொருள் என்பது மற்றொரு பெயர். மனிதன் எவ்வளவுதான் முயன்றாலும் மெய்யைப் பொய்யாக்க முடியாது. பொய்யை மெய்யாக்க முடியாது.

மெய்ம்மைக்கு ஆன்றோர் விளக்கம் கொடுத்திருக்கின்றனர். எது ஒருகாலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் இல்லாது போகிறதோ அது மெய்ப்பொருள் ஆகாது. மானுட உடல் ஒரு காலத்திலிருக்கிறது. இன்னொரு காலத்தில் மறைந்துபட்டுப் போகிறது. இது எல்லார்க்கும் வெளிப்படை. மானுட சரீரத்தினுள் உயிர் இருக்கிறது. உயிரோடு கூடியுள்ள சரீரத்தை ஜீவாத்மா என்றும், உயிரற்ற சரீரத்தைச் சவம் என்றும் சொல்கின்றோம். உடல் அழிந்துபட்டுப் போவதால் அவ்வுடலில் குடியிருக்கும் ஜீவாத்மன் அழிந்துபட்டுப் போவதில்லை என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் பொதுமக்கள் இதைக்குறித்து அறுதியிட்டு ஒன்றும் இயம்பமுடியாது. ஒவ்வொரு மனிதனும் தன்னை உடல் அல்லன், உண்மையில் ஆத்மா என்னும் கோட்பாட்டை

அறிந்துகொள்ளும்படி மெய்ச்சமயம் புகட்டுகிறது. இந்த ஆத்மாவானது அறிவு சொரூபம். ஆனந்த சொரூபம் என்றும் மெய்ச்சமயம் சொல்கிறது. எந்த மனிதனாவது தான் அறிஞன் அல்லன், ஆத்ம சொரூபி அல்லன் என்று மறுப்பானா? உடல் எடுத்திருக்கும் ஜீவாத்மாக்கள் அனைவரும் ஆத்ம சொரூபமே; உடல் சொரூபமன்று என்னும் உண்மையை மெய்ச்சமயம் தெளிவுறுத்துகிறது.

அறியும் பாங்குடைய ஜீவாத்மன் உள்ளத்தினுள்ளே மனச் சாட்சி என்னும் பேரறிவுப் பேரானந்தப் பெரியபொருள் உள்ளது. அதை ஆன்றோர்கள் "யாரேனும் அறியாது என் உள்ளத்தினுள் எழுந்தருளி நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்" என்று கடவுளைப் பற்றிய அடிப்படை விளக்கம் ஒன்றைக் கூறியிருக் கிறார்கள். மனதினுள் குடிகொண்டிருக்கும் மெய்ப்பொருளை "இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்று அனுபூதிமான் ஒருவர் இயம்பியுள்ளார். எந்த மனித னாவது தன்னுடைய உள்ளத்தில் மனச்சாட்சி என்னும் தூய பொருள் இல்லையென்று துணிந்து சொல்வானா? திருட்டுத் தனமாகப் பக்கத்து வீட்டு மைதானத்தில் மேயப்போகும் கால்நடைகூட அடிக்க அல்லது பிடிக்க வந்தால் சுவரைத் தாண்டி ஓடித் தப்பித்து விடுகிறது. ஆனால் அதே கால்நடை தனக்குச் சொந்தமான இடம் எது என்றும் தீனி எது என்றும் அறிகிறது. அதற்கேற்ற அளவு மனச்சாட்சி அதனிடத்து அமைந்திருக்கிறது.

மனிதன் சமய அனுஷ்டானத்தின் மூலமாகத் தன்னுடைய மனதைத் தெளிவுபடுத்துதற்கேற்ப அம்மனதினுள் மிளிரும் மெய்ப்பொருளை உள்ளபடி அறியவருகிறான். "தன்னையறிந் தால் தலைவன்மீது பற்றல்லது பின்னையொரு பற்றுமுண்டோ" என்பது ஆன்றோர் வாக்கு. இவையாவும் குருட்டு நம்பிக்கை யின் விளைவு ஆகா. மனிதன் சமய அனுஷ்டானத்தின் வாயிலாகத் தன்னைத் திருத்தியமைப்பதற்கேற்பத் தான் உடல் அல்லன் என்றும், ஆத்ம சொரூபம் என்றும், இந்த ஆத் மாவைப் பேணுகிற பேரறிவுப் பேரானந்தப் பெரிய பொருள் ஒன்று பிரக்ஞானமயமாக உள்ளத்திலிருந்து கொண்டு ஒவ்வொரு ஜீவனையும் பண்படுத்திப் பல பிறவிகளில் மேல்நிலைக்குக்

கொண்டு வருகிறது என்றும் அனுபூதியில் மனிதன் அறிய வருகிறான். அப்பொழுதுதான் அவனுடைய ஐயங்கள் அகன்று பட்டுப் போகின்றன. பழையன கழிதல், புதியன புகுதல் என்னும் கோட்பாட்டின்படி ஒவ்வொரு ஜீவாத்மனும் தகுதியற்றுப் போன தன்னுடைய சரீரத்தைத் தகுதியற்ற உடையெனக் கருதி அகற்றவும் பிறப்பின் வாயிலாகப் புதிய சரீரத்தைப் பெறவும் செய்கிறான். பிறந்த குழந்தையொன்று காலி மனதோடு உலகத்துக்கு வருவதில்லை. பூர்வஜன்மத்தில் பெற்ற அனுபவங்களைப் புதிய பிறவியில் பாங்கின் மூலமாக விளக்குகிறது. ஆத்மா அழிவற்றது. உடலுக்குத்தான் மரணம் என்னும் அழிவும், ஜனனம் என்னும் புதுமையும் அமைகின்றன என்பது உண்மை. முறையாக ஆராய்ச்சி பண்ணினால் இது தெளிவாகும்.

ஆகவே சமயக் கோட்பாடுகளும் அனுபவங்களும் குருட்டு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவைகள் அல்ல.

"மனத்துக்கண் மாசுஇலன் ஆதல்; அனைத்துஅறன்
ஆகுல நீர பிற"

என்பது கோட்பாடு. இந்த மலம் நீங்கினால் ஆத்மாவாகிய தன்னைப் பற்றிய உண்மையும், தன் தலைவனைப் பற்றிய உண்மையும் விளங்குகின்றன. ஆக, இவ்வுண்மையை அறிந்து கொள்ளுதற்கு ஒவ்வொரு மனிதனும் ஆத்மசாதனங்கள் வாயிலாகத் தன்னைத் திருத்தியமைக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

கேள்வி: *(737)* கையில் வெற்றிலை, அஞ்சனம் அல்லது மை வைத்துப் பார்த்துச் செய்திகள் அறிவதாகக் கூறுவது உண்மையா?

பதில்: சிறுவர்கள் கையில் வெற்றிலையைக் கொடுத்து அதன் மீது அஞ்சனம் அல்லது மை வாயிலாக ஒரு புள்ளி வைப்பார்கள். விளக்கு வெளிச்சத்தில் அப்புள்ளியை உற்றுப் பார்க்கும்படி அச்சிறுவன் ஏவப்படுவான். சில சமயங்களில் மக்கள் வருவது போன்ற காட்சிகளை அச்சிறுவன் மையினுள் காண்கிறான். திருட்டுப்போனதைக் கண்டுபிடிக்க இந்த முறை உதவுகிறது என்று சிலர் நம்புகின்றனர். அஞ்சனம் வைத்துப் பார்ப்பவர்களுடைய உதவியையும் நாடுகின்றனர். ஏதோ ஒரு கொள்கையாக

இது இருந்து வருகிறது. இதன் மூலம் உண்மை கண்டறியப் பட்டதற்குச் சான்று இதுவரையில் கிடைத்ததில்லை. ஆதலால் இதில் கருத்துச் செலுத்துவது பொருந்தாது.

கேள்வி: ***(738)*** **சாமி ஆடுவதைப் பற்றிய உண்மை என்ன?**

பதில்: மனிதனுடைய பலஹீனம் பலவிதங்களில் வெளிப் படுகின்றது. மனதை அடக்குவது மிகவும் கஷ்டம். அடங்காத மனது ஆன்ம சக்தியைப்பெறத் தடையாக இருக்கிறது. மனதில் எண்ணங்களும், உணர்ச்சிகளும் உதித்துக்கொண்டே இருக் கின்றன. அப்படி உதிக்கின்ற எண்ணங்களும் உணர்ச்சிகளும் மனிதனைச் செயலில் உந்தித் தள்ளிக் கொண்டிருக்கின்றன. மனதில் உதிக்கும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அடக்கத் தெரியாதவன் தன்னைப் பலஹீனன் ஆக்கிக் கொள்கின்றான். மனதில் தோன்றும் எண்ணங்களை மனிதன் அப்படியே வெளிப்படுத்துவதில்லை. பொருந்தாத எண்ணங்களைச் சொல்லால் வெளிப்படுத்துவதில்லை. பொருந்தாத எண்ணங் க்களைச் செயல்படுத்துமளவு நம்மிடத்தில் வீரியம் குறையும். மனதில் தோன்றும் எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் சொல்லால் வெளிப்படுத்துகிறவனைப் பைத்தியக்காரன் என்கின்றோம்.

மனதில் எழுந்துவரும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திப் பழகுகின்றளவு இச்சாசக்தி (Will Power) அதிகரிக்கும். உணர்ச்சி களைக் கட்டுப்படுத்தாது வெளிப்படுத்தும்பொழுது மனம் தளர்ச்சி அடைகிறது. மனதில் தோன்றும் சிறிதளவு உணர்ச்சி யைப் பெரிதுபடுத்தி அவ்வுணர்ச்சிக்கு வசப்படுபவர்கள் சாமி யாடுபவர்கள் ஆகிறார்கள். பரமஹம்சர் ஓர் உதாரணம் கொண்டு சாமியாடுபவர்களை விளக்குகிறார். பத்து லிட்டர் கொள்ளும் பாத்திரத்தில் அரை லிட்டர் பாலை ஊற்றிக் காய்ச்சினால் அது பொங்கும்பொழுது பாத்திரம் நிறையப் பால் இருப்பதாகத் தென்படும். பொங்குவது அடங்கினால் அரை லிட்டர் பால் கால் லிட்டர் பாலாகச் சுண்டிவிடும். அதுபோன்று சாமியாடு பவர்கள் உள்ளத்தில் சிறிதளவு உணர்ச்சி வெளிப்பட்டு அரிய பெரிய செயலைச் செய்வதுபோன்று விளக்கிக் காட்டுகிறது.

அச்செயலுக்குப் பின் உள்ளத்தில் தளர்ச்சி உண்டாகிவிடும். நல்வாழ்வையும், ஒழுக்கத்தையும், பிரம்மச்சரியத்தையும் கடைப் பிடித்து நேர்மையான வாழ்வு வாழ்பவர்கள்தாம் தெய்வத் தன்மையை வளர்க்கமுடியும். நேர்மையான வாழ்க்கையைக் கடைப்பிடிக்காது தங்களிடம் தெய்வம் வந்திருப்பதாகச் சாமி ஆடுபவர்கள் பரமஹம்சர் சுட்டிக் காட்டியுள்ள பால் உதாரணத் துக்கு ஒப்பாவார்கள். எனவே சாமி ஆடுவதை நாம் பாராட்ட லாகாது. சாந்தமும் அமைதியும், மனத்தெளிவும் யார் முன்னிலைக்குச் சென்றால் நமக்கு ஏற்படுகின்றனவோ அவர்தாம் மஹாத்மா ஆவார். அவர் மௌனமாகவும், அமைதியாகவும் இருந்து சாந்தத்தையும் மனத்தெளிவையும் தம்மிடம் வருபவர் களுக்கெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். சரீரத்தை வதைப்பதையும், மற்றவர்களுக்கு அச்சத்தை ஊட்டுகின்ற பாங்கில் நடந்து கொள்வதையும் சாமி ஆடுபவர்களிடம் காணலாம். தேவாலயமாகச் சரீரத்தைக் கருதவேண்டும். அதைப் புனிதமாகக் கருதிப் பூஜிக்க வேண்டுமேயன்றி அதைச் சித்திர வதை செய்யக்கூடாது. மற்றவர் உள்ளத்திலுள்ள அச்சத்தைப் போக்கி அவர்களிடம் சாந்தத்தையும், அமைதியையும் உண்டு பண்ண வேண்டுமேயன்றி ஆரவாரத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் காட்டக்கூடாது. சாமி ஆடவேண்டியதில்லை; சுவாமி ஆக வேண்டும். உணர்ச்சி கட்டில் அடங்காது போவது சாமி ஆடுதலாகும். உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி அதை ஆன்மீக உணர்ச்சியாக மாற்றி அமைக்கவேண்டும்.

கேள்வி: *(739)* கோயில்களில் சாமி ஆடி வாக்கு சொல் கிறார்கள். அவர்கள் மூலம் தெய்வம்தான் பேசுகின்றாரா?

பதில்: கள் குடியன் ஆடுகின்றான். சிலர் பேயாட்டம் ஆடுகின்றனர். சமாதி நிலையிலும் உடல் அசைவதுண்டு. பக்தி உணர்வினால் இறைவன் புகழ்பாடி ஆடுவது உண்டு. சிலர் தங்களிடம் தெய்வம் எழுந்தருளி உள்ளதாகக் கூறிக் கொண்டு ஆடுவதும் உண்டு.

எல்லா ஆட்டங்களுக்கும் உணர்ச்சிதான் அடிப்படைக் காரணமாய் உள்ளது. உணர்வு கட்டில் அடங்காது தலை எடுக்கும்போது அது ஆட்டமாகச் செயல்படுகின்றது. தூய

உணர்வு மேலிடும்பொழுது பாவசமாதி ஏற்பட்டு உடல் அசைவ துண்டு. இது பரமஹம்சருக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. பக்தி உணர்வினால் கௌராங்கரும், அவருடைய சிஷ்யர் நித்தியானந்தரும் பரம்பொருளின் புகழ்பாடி ஆடினார்கள். கள் குடியன் ஆடுவது மயக்கத்தால் நிகழ்கிறது. அவனுக்குப் புத்தி சுவாதீனத்தில் இருப்பது இல்லை. பேயாட்டம் ஆடுகின்ற வர்கள் மனத் தடுமாற்றத்தால் ஆடுகின்றனர். சாமியாடுகின்றவர் களும் உணர்ச்சிக்கு வசப்பட்டு ஆடுகின்றார்கள்.

உதாரணமாக பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியை மணமகளாகப் பெற்றுத் தங்களோடு அழைத்துக்கொண்டு தாயிடம் வந்தார்கள். வீட்டுக்குள் இருந்த தாயிடம் வாயில்பக்கம் நின்று "அம்மா, இன்று நாங்கள் ஒரு நூதனமான பிக்ஷை கொண்டு வந்திருக்கிறோம்" என்று கூறினார்கள். பிக்ஷை இன்னதென்று திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்குள் இருந்தபடியே "நீங்கள் கொண்டு வந்துள்ள பிக்ஷையை ஐவரும் பங்கிட்டுக் கொள்ளுங்கள்" என்று குந்தி இயம்பினாள். பிறகு அவள் வெளியே வந்து பார்த்தபொழுது அர்ச்சுனன் பக்கத்தில் திரௌபதி நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். அப்பொழுது யுதிஷ்டிரன் "இந்தத் திரௌபதிதான் எங்களுக்கு இன்று கிடைத்த பிக்ஷை" என்று விளக்கினார். "உண்மைக்கு மாறான எதையும் என் வாழ்நாளில் நான் பகர்ந்தது இல்லை" என்று குந்தி கூறினாள். "திரௌபதியை நாம் ஐவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்னையினுடைய வாக்கிலிருந்து வந்து விட்டது. அன்னையினுடைய சொற்படி நடந்து கொள்வதுதான் உசிதம் என்று என்னுடைய உள்ளத்திலும் தோன்றுகிறது. பொருந்தாத எண்ணத்தை நான் ஒருபொழுதும் எண்ணியதில்லை. ஆதலால் என் உள்ளத்தில் தோன்றுவதும் நல்லதாகவே இருக்கும்" என்று யுதிஷ்டிரன் கூறினார். இங்ஙனம் சத்தியம் பேசுகிறவர்களும், மனத்தூய்மை படைத்தவர்களும் சொல்கின்ற வாக்குத்தான் தெய்வவாக்காக அமையும். ☆

56. ஐதிகம்

கேள்வி: *(740)* தியானம் பண்ணுகிறபொழுது கிழக்குத் திசை பார்த்து உட்காரவேண்டும் என்றும் வடக்குத் திசை பார்த்து உட்காரவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. அது முற்றிலும் அவசியமா? அதன் நோக்கம் யாது?

பதில்: பூமியில் வசித்து வருகிற நமக்கு நான்கு திக்குகளும் புலப்படுகின்றன. நம்முடைய நடமாட்டங்களில் நான்கு திக்குகளையும் பயன்படுத்துகிறோம். குறிப்பிட்ட ஒரு இடத்திற்குப் போதல் என்றால் இன்ன திக்கில் இவ்வளவு தூரம் போக வேண்டும் என்னும் ஏற்பாடு அமைகிறது. தியானம் பண்ணுகிற நாம் கருவி கரணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மனதை அந்தர்முகத்தில் செலுத்துகிறோம். நம்முடைய அந்தக்கரண அமைப்பில் திசைகளுக்கு இடமில்லை. ஆதலால் சரியான தியான அவஸ்தையிலிருக்கின்றபொழுது திக்குகளைப் பற்றிய எண்ணம் வருவதில்லை. திக்குகளைப்பற்றிய எண்ணம் வந்தால் அது தியானமாகாது.. வசதியையும், சூழ்நிலையையும் அனுசரித்து எப்படி வேண்டுமென்றாலும் அமர்ந்துகொண்டு தியானம் பண்ணலாம். தியானத்தை ஆழ்ந்து நன்றாகப் பண்ணுவது நம்முடைய குறிக்கோள். எந்தத் திக்கைப் பார்த்துச் சரீரத்தை அமைத்து வைத்திருக்கிறோம் என்பது நமக்குக் குறிக்கோள் ஆகாது.

ஆயினும் நமக்கு ஐதிகம் ஒன்று உண்டு. கிழக்குத் திக்கைப் பார்த்துக்கொண்டு அதிகாலையில் தியானத்திற்கு அமர்கின்றோம். தியானம் முடிந்து கண்விழித்துப் பார்க்கின்ற பொழுது சூரியன் உதயமாகி ஸ்தூலமாகக் காட்சிகொடுத்துக் கொண்டு அவன் திகழ்கிறான். இந்தக் காட்சியை முன்னிட்டே

தியானம் பண்ணுகிறவர்களெல்லாம் கிழக்கு முகமாக அமர்ந்து கொண்டு அந்த அரிய பெரிய செயலில் கருத்தைச் செலுத்தினர். நாளடைவில் அது ஐதிகமாயிற்று. இந்த ஐதிகத்திற்கு உட்பட்டு நடப்பதில் சிரமம் ஏதுமில்லை. வடக்கு முகமாக உட்காருவதைப் பற்றிய கோட்பாடு மற்றொன்று உண்டு. சூரியபகவான் கிழக்கில் உதித்து மேற்கை நோக்கிப் போவதற்கு நிகராகப் பூமியின் அமைப்பில் காந்த சக்தி வடதுருவத்தினின்று தென்துருவத்தை நோக்கிச் சர்வகாலமும் பாய்ந்துகொண்டிருக்கிறது. அதன் போக்கு அப்படியிருப்பதால் அது உற்பத்தியாகிற இடமாகிய வட துருவத்தை நோக்கி அமரவேண்டும் என்னும் ஐதிகம் வந்துள்ளது.

கேள்வி: *(741)* விசேஷ காலங்களில் மாவிலை, வாழை மரம் கட்டுவதன் நோக்கம் என்ன?

பதில்: விசேஷ காலங்களில் மனதைத் தூயதாகவும் இனியதாகவும் வைத்திருத்தல் வேண்டும். தூய்மைக்கும் இனிமைக்கும் இருப்பிடமாக இயற்கையில் சில மரம், செடி கொடிகள் இருக்கின்றன. நல்ல காரியங்களில் ஈடுபடும்பொழுது மக்களாகிய நாம் அவைகளைப் பயன்படுத்திக் கொள்கிறோம். அவைகளைப் பார்க்கும்பொழுது மேலான எண்ணங்களே நம் மனதில் உண்டாகின்றன.

மாவிலையும், வாழை மரமும் மங்களத்திற்குச் சின்னங்களாகின்றன. ஒரு நாளெல்லாம் அவை இரண்டும் வாடாதிருக்கும். இரண்டாம் நாள் அவ்வ வாடிப்போம். மங்களமான காரியங்களை ஒரே நாளில் முடிக்கவேண்டும். அவைகளை முடித்தான பிறகு மாவிலைகளையும், வாழை மரங்களையும் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். பலபேர் வீட்டு வாயிலில் மாவிலை கட்டுவார்கள். பிறகு அவைகளை அப்புறப்படுத்துவதில்லை. உலர்ந்து பழுத்துப்போன இலைகளாக மாதக்கணக்காக அவைகள் தொங்கிக்கொண்டிருக்கும். அப்படி அவைகளை விட்டுவைப்பது நல்ல காரியங்களில் நிரந்தரமான ஊக்கம் இல்லை என்பதற்கு அறிகுறியாகும். வாடிப்போன வாழைமரம் கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கு வீட்டுவாயிலில் அல்லது பந்தலில் நின்றுி கொண்டிருக்கும். அவைகளை அங்ஙனம் விட்டுவைப்பதும் ஊக்கமின்மைக்கு அறிகுறியாகும். சிலர் வீட்டிலுள்ள படங்களுக்குப்

பூ மாலைகள் சூட்டுவார்கள். அப்பூமாலைகள் உலர்ந்துபோய் நெடுநாளைக்குப் படங்களில் தொங்கிக்கொண்டிருக்கும். பூ மாலைச் சருகுகளை அப்படி விட்டுவைப்பது அமங்களத்தை அழைப்பதற்கு ஒப்பாகும். நல்ல காரியங்களை நல்ல காலத்தில் செய்து உடனுக்குடனே அவைகளுக்குச் சின்னமாயிருக்கும் மாவிலை, வாழைமரம், பூமாலை முதலிய இயற்கைப்பொருள் களை அப்புறப்படுத்துதல் வேண்டும். அப்பொருள்கள் அமங்களத்திற்கு அறிகுறிகளாகும் வரையில் வைத்திருக்கலாகாது என்னும் கோட்பாட்டை நன்மக்கள் அறிந்துகொள்ளக் கடமைப் பட்டிருக்கிறார்கள். நவராத்திரி போன்ற விழாவை தொடர்ந்து ஒன்பது நாளைக்குக் கொண்டாடுகிறோம். அப்பொழுது மா இலைகளையும் வாழை மரங்களையும் புஷ்பங்களையும் நாள் தோறும் புதுப்பிக்க வேண்டும். வாடிப்போனவைகளை வைத்துக் கொண்டு விழா நடாத்தலாகாது. இனி, மனதை எப்பொழு துமே அன்று அலர்ந்த மலர்போன்று வைத்திருத்தல் வேண்டும்.

கேள்வி: *(742)* வீட்டில் ஒருவர் இறந்துவிட்டால் தீட்டு என்று சொல்கிறார்கள். அப்போது பூஜை செய்யலாமா?

பதில்: பிறப்பை முன்னிட்டோ இறப்பை முன்னிட்டோ வீட்டில் தீட்டு ஏற்பட்டுவிட்டால் தீட்டு முடிவுபெறும் பரியந்தம் வீட்டிலே கடவுள் வழிபாடு செய்யலாகாது என்பது கர்மகாண்டக் கோட்பாடாகும். கர்மகாண்டத்தின்படி ஸ்மசானத்துக்குப் போய் வந்தால் நீராடிவிட்டு வீட்டுக்குள் வரவேண்டும் என்பது நியமம்.

ஆனால் பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் கடைப்பிடிப்பவர்களுடைய கொள்கையும் கோட்பாடும் இதி னின்று முற்றிலும் வேறுபட்டவைகளாம். பரம பக்தன் ஒருவன் பகர்ந்ததாவது: "இறைவா, உன்னை மறந்தால் உயிர் துறப்பேன்" என்றான். ஸ்மசானத்தை ருத்ரபூமி என்கிறோம். ஆதலால் அது சிவனாருடைய உறைவிடம் ஆகிறது. இக்கொள்கையின்படி சிவன் கோயிலுக்குப் போய் வருகிறவர்கள் எல்லோரும் தீட்டுப் பட்டவர்கள் ஆகிறார்கள். காசிக்கு மகாஸ்மசானம் என்று பெயர். ஆதலால் காசிக்குப் போய் வருகிறவர்கள் எல்லோரும் தீட்டுப்பட்டவர்கள் ஆகிறார்கள். இதுவும் பொருந்தாது. ஆகவே ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகின்ற ஒருவன் கர்மகாண்டக்

கொள்கையை ஒதுக்கி வைத்துவிட்டுத் தன் போக்கில் கடவுள் வழிபாட்டில் ஈடுபடவேண்டும். வீட்டில் யாராவது மடிந்து போனால் அப்பொழுதுதான் தீவிரமாகக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடவேண்டும். பக்தியும் ஞானமும் ஓங்குதற்கு அதுவே தக்க தருணமாகிறது.

கேள்வி: *(743)* பழநிக்குப் போகிறவர்கள் காவடி எடுக்கிறார்கள். சுப்பிரமணியருக்கும், காவடிக்கும் என்ன சம்பந்தம்?

பதில்: கடவுள் வழிபாடு சம்பந்தமான செயல்களும் விரதங்களும் வாழ்க்கை முறைகளும் பல இருக்கின்றன. அவைகளை முறையாகக் கையாண்டால் மனிதனுடைய மனப்பான்மை திருந்தப்பெறுகிறது. 'மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்தறன்' என்பது கோட்பாடு. சமய அனுஷ்டானங்கள் பெரிதும் மனதைப் பண்படுத்துவதற்கென்றே அமைந்திருக்கின்றன. பழநிக்குச் செல்லும் பக்தர்கள் நெடுநாளாகக் காவடி எடுத்துச் செல்லும் வழக்கத்தைக் கையாண்டு வந்திருக்கின்றனர். இன்றைக்குப் பயணம் பெரிதும் புகைவண்டியிலும், மோட்டார் வண்டியிலும் நடைபெறுவதால் பழநிக்குக் காவடி எடுத்துச் செல்லும் பழக்கம் பின்னணிக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அந்த ஸ்தலத்தைச் சென்றடைந்தவர்களில் பலர் மலையைச் சுற்றி வரும்பொழுதும், மலையின் மீது ஏறும்பொழுதும் முருகன் சந்நிதி வந்து சேரும் வரையில் காவடியைத் தோளில் எடுத்துச்சென்று வருகின்றனர். அவைகள் பெரிதும் பால்காவடி என்றும், இளநீர்க்காவடி என்றும், சர்க்கரைக் காவடி என்றும் பெயர் பெறுகின்றன. பக்தி பூர்வமாக அவைகளை ஆராதனைக்காக ஆண்டவன் முன்னிலைக்குத் தூக்கிச்செல்லுவது அதன் நோக்கமாகிறது. பழைய முறைப்படி ஐம்பது மைல் அறுபது மைல் தூரத்திலிருந்தவர்கள் அவரவர் ஊரிலிருந்தே காவடிகளை எடுத்துக்கொண்டு வழிநெடுக முருகனுடைய நாமத்தையே ஓதிக்கொண்டு நடந்து சென்றார்கள். அப்படிச் செய்ததின் விளைவாக அவர்கள் பண்பாடு அடைந்ததுமன்றி அக்காட்சியைப் பார்த்தவர்கள் உள்ளத்திலும் பக்தி பெருக்கெடுத்தது. அக்காலத்தில் சர்க்கரைக் காவடிதான் பழக்கத்திலிருந்து வந்தது.

பழனி ஸ்தலத்தை எட்டிய பிறகே பால்காவடி, தயிர்க்காவடி முதலியன கையாளப்பட்டன. பார்க்கிற மக்கள் எல்லார் உள்ளத்திலும் பண்பையும், பக்தியையும் ஊட்டுதற்குக் கந்தனின் வழிபாட்டுக்குக் காவடி எடுக்கும் பழக்கம் யாண்டும் நிலைத்திருப்பது முற்றிலும் அவசியமாகிறது.

கேள்வி: *(744)* திருப்பதி வேங்கடாசலபதிக்குக் கண்கள் மறைபடுமாறு நாமம் சாத்தியிருப்பதன் உட்கருத்து யாது? விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: மஹாவிஷ்ணுவுக்குச் சுந்தரராஜன் என்பது ஒரு பெயர். எங்கெல்லாம் அழகு மிளிர்கிறதோ ஆங்கெல்லாம் தெய்வ சாந்நித்தியம் இருப்பது வெளிப்படை. அழகை மேலும் அலங்கரிப்பது நல்ல வழிபாடு ஆகிறது. அழகை அழகற்றதாகப் பண்ணுவது வழிபாடு என்று அறிஞர் உலகம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. மக்களுக்கிடையில் தங்கள் உடலை அலங்கரிக்கும் பாங்கில் தாரதம்மியம் உண்டு. பண்பட்டுள்ளவர்கள் இரண்டொரு நகைகளைக்கொண்டு தங்களுடைய உடலழகை மேலும் ஓங்குவிக்கச் செய்கின்றனர். ஏராளமாக நகைகளை அணிந்து கொண்டு இயல்பாகத் தங்களிடம் அமைந்துள்ள அழகை விகாரப்படுத்துபவர்களும் இருக்கிறார்கள்.

ஏதோ ஓர் ஐதிகத்தை முன்னிட்டுத் திருப்பதி வேங்கடாசலபதிக்குக் கண்கள் மறைந்துபட்டுப்போகும்படி நாமம் சாத்துகிறார்கள். கண்களை மூடிவைப்பது ஒருபொழுதும் அழகாகாது. அப்பொருந்தாத செயல் இன்றைக்கு ஐதிகமாகத் திருப்பதியில் நிகழ்ந்து வருகிறது. ஒரு சிலர் அதற்கு ஒரு வியாக்யானம் சொல்கின்றனர். வேங்கடாசலபதியின் நேர் பார்வையை ஏற்றுக்கொள்ளும் தகுதியோ, வல்லமையோ உலகத்தவர்களுக்கு இல்லை. எனவே வேங்கடாசலபதியின் பார்வை, திருமண்ணின் வாயிலாக ஒருவாறு மறைத்து வைக்கப் பட்டிருக்கிறது. இக்கொள்கை யுக்திக்கோ, தத்துவத்துக்கோ ஒவ்வாது. இதை பொருளற்ற ஐதிகம் என ஒதுக்கி வைப்பதே முறை. ஆனால் கோயில் நிர்வாகிகள் ஏதோ ஒருபோக்கில் பொருந்தாத ஐதிகத்தையும் பின்பற்றியே வருகின்றனர். அறிஞர் உலகுக்கு இந்த ஐதிகம் ஒவ்வாது.

கேள்வி: (745) கணபதி அருகில் சரஸ்வதி, லட்சுமி இருக்கின்றனர். ஏன் மற்ற தெய்வங்கள் இல்லை?

பதில்: இத்தகைய படம் அலாதியாகப் பம்பாய் மாகாணத்துக்குரியது. ஒவ்வொரு மாகாணத்திலும் சிறப்பாக ஏதேனும் ஒரு தெய்வம் வழிபடப்படுகிறது. தமிழ்நாட்டில் குமரக்கடவுள் சிறப்பாக வழிபடப்படுவது போன்று பம்பாய் மாகாணத்தில் குமரக்கடவுளின் தமையனாகிய கணபதி ஆராதிக்கப்பெறுகிறார். இளையவனாகிய குமரக்கடவுள் வள்ளி, தேவசேனையாகிய இரு மனைவிமார்களை உடைத்திருப்பது தென்னிந்திய ஐதிகம். வட இந்தியாவில் குமரக்கடவுள் ஒரு பிரம்மச்சாரியாகக் கருதப்படுகிறான். இங்ஙனம் தெய்வத்தைப் பற்றிய ஐதிகமே மாகாணத்துக்கு ஒருவிதமாக அமைந்திருக்கிறது. இனி, மனைவிமார்கள் எனக் கருதப்படுகின்ற வள்ளியும், தேவ சேனையும் உண்மையில குமரக்கடவுள் படைத்துள்ள அன்புக்கும் ஆற்றலுக்கும் உருவக மூர்த்திகளாக இரண்டு பெண்பாலர் அமைகின்றனர்.

மூத்தவனாகிய கணபதி எங்குமே நித்திய பிரம்மச்சாரியாகக் கருதப்படுகிறான். அதையொட்டிப் புராண வரலாறும் ஒன்று உண்டு. பால கணபதி ஒரு பூனையோடு விளையாடிக்கொண்டிருந்தான். விளையாட்டின் வேகத்தில் அப்பூனையின் முகத்தில் ஒரு சிறு காயத்தை அவன் உண்டுபண்ணிவிட்டான். பிறகு அவன் உணவு அருந்தப் போனபொழுது அன்னை பார்வதிதேவி அவனுக்கு அமுது படைத்தார். அப்பொழுது அன்னையின் முகத்தில் அவன் ஒரு சிறு காயத்தைக் கண்டான். “அம்மா இக்காயம் ஏன்? எப்படி உண்டாயிற்று?” என்று கேட்டான். “பிள்ளாய், அக்காயத்தை உண்டு பண்ணியவன் நீதானே” என்னும் விடை லோகமாதாவினிடமிருந்து வந்தது. “நான் அப்படி ஒன்றும் செய்யவில்லையே” என்று பிள்ளை திகைத்திருந்தான். தாய் இயம்பினாள்: “உலகிலுள்ள பெண் உயிர் வகைகளனைத்தும் என் மயமாய் இருக்கின்றன. பெண் பூனைக்கு நீ உண்டு பண்ணிய காயம் என் முகத்தில் பிரதிபலிக்கிறது” என்றாள் அகிலாண்டநாயகி. பெண்பாலனைத்தும் தன் அன்னையின் சொரூபமாதலால் தான் மணந்து கொள்வதில்லை எனக் கணபதி தீர்மானித்தான். ஆதலால் அவன் யாண்டும்

நித்தியப் பிரம்மச்சாரியாகவே இருந்து வருகிறான்.

கணபதியை வழுத்துகிறவர்களுக்கு வித்தையும், திரவிணமும் வாய்க்கும் என்பது கோட்பாடு. வித்தியா சொரூபமாயிருப்பவள் சரஸ்வதி தேவி. திரவிண சொரூபமாயிருப்பவள் லட்சுமி. திரவிணம் என்றால் திரவியம் அல்லது செல்வம். திருமகளிடத் திருந்தே செல்வமனைத்தும் வருகின்றது. திருமகளிடத்திருக்கிற மகிமைகளெல்லாம் கணபதியினிடத்தும் உண்டு. கணபதி ஞான மூர்த்தி. ஆகையினால் அவன் நெற்றியில் ஞானக்கண் உடைய வனாக இருக்கிறான். ஞானக்கண்ணுக்கு அதிஷ்டான மூர்த்தி களாக இருப்பவர்கள் சிவன், சக்தி, கணபதி ஆகிய மூவராம். அந்த ஞானம் பரவித்தை எனப்படுகிறது. பரம்பொருளைச் சுவானுபூதியில் அறிகிறவர்கள் பரம்பொருளில் ஒன்றுபடுகின் றனர். பிரபஞ்சமோ மாயாதோற்றமாக மறைந்து போகிறது.

ஆனால் கணபதி வழிபாட்டில் ஒரு சிறப்பு உண்டு. பிள்ளையார் எனப் பகரப்பெறுகிற கணபதியை வழுத்துகிற வர்கள் முதலில் நல்ல கல்வியைப் பெறுகின்றனர். ‘இளமையில் கல்’ என்னும் கோட்பாட்டுக்கு அவர்கள் இலக்காகின்றனர். வயது வருகிறபொழுது அவர்கள் ஏராளமாகச் செல்வம் பெறுகின்றனர். உடலை உகுக்கின்றபொழுது அவர்கள் பரம் பொருளில் ஒன்றுபடுகின்றனர். இந்த மேலாம் கோட்பாட்டை மக்களுக்கிடையில் புகட்டுதற்காகவே கணபதியை மத்தியில் வைத்து இருமருங்கிலும் கலைமகளையும், திருமகளையும் அமைத்துப் படம் வரைந்திருக்கிறார்கள். இது சிறப்பாகப் பம்பாய் மாகாணத்துக்குரியதென்றாலும் மற்ற மாகாணத்தவர் களும் இக்கோட்பாட்டை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளலாம்.

கேள்வி: *(746)* நாராயணனை வணங்குவோர் திருமண் அணிகின்றனர். சிவனை வணங்குவோர் திருநீறு அணிகின்றனர். இதன் உண்மை என்ன?

பதில்: இவ்விரண்டு செயல்களின் உட்பொருள் ஒன்றேயாம். வைஷ்ணவர்கள் திருமண் அணிந்து கொள்வதன் வாயிலாக “இவ்வுடல் வாழ்வு நித்தியமானதன்று, ஒருநாள் உடல் மண் ணாகப்போம், பரமனே நித்திய வஸ்து” என்னும் கோட்பாட்டை வைஷ்ணவ சமயம் வெளிப்படுத்துகிறது. அதே கொள்கையை

மற்றோர் விதத்தில் சைவ சமயம் வெளிப்படுத்துகிறது. "முடிசார்ந்த மன்னனும் முடிவில் ஒருபிடி சாம்பல் ஆவது திண்ணம்" என்னும் வாழ்க்கைக் கோட்பாட்டைத் திருநீறு அல்லது சாம்பல் நெற்றியில் அணிவதன் மூலம் நாம் விளக்குகின்றோம். உடல் வாழ்வு நிலையற்றது என்னும் உண்மை இதன் மூலம் மனிதனுக்கு ஞாபகமூட்டப்படுகிறது.

இவ்வுண்மையை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சிறுவர்களுக்கும் விளங்குகின்ற பாங்கில் ஓர் உபமானத்தின் மூலம் விளக்குகின்றார். "படகு தண்ணீரின்மீது மிதந்துகொண்டிருக்கலாம். ஆனால் படகுக்குள் தண்ணீர் புகுந்துவிடலாகாது. அதேவிதத்தில் மனிதன் உடலில் வாழ்ந்திருக்கலாம். ஆனால் உடல்பற்று என்னும் தண்ணீர் அவனுடைய உள்ளத்தில் புகுந்துவிடலாகாது."

உடல்பற்றை நீக்கிய மனிதனே உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து வருகிறான். இதுவே திருமண் அணிபவர், திருநீறு அணிபவர் ஆகிய இரண்டு சமய அனுஷ்டானர்களும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயமாம்.

கேள்வி: *(747)* சிவனுக்கு வில்வம், திருமாலுக்குத் துளசி, கணபதிக்கு அருகம்புல் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன. இதன் கருத்து என்ன?

பதில்: இவை மூன்றும் ஒஷதிகள் எனக் கருதப்படுகின்றன. எது ஔஷதத்திற்குப் பயன்படுகிறதோ அது ஒஷதியாகிறது. ஔஷதம் என்பது மருந்து. அது நோயை நீக்கவல்லது. இயற்கையில் அமைந்துள்ள பொருள்களுக்கிடையில், சிறப்பாக ஸ்தாவரங்களுக்கிடையில் மருந்துக்குரிய செடி, கொடி, வேர் வகைகள் ஏராளமாய் இருக்கின்றன. ஆராய்ச்சியின் வாயிலாகவும் ஞானக்கண்கொண்டும் இவைகளிடத்துள்ள சிறப்புக்களை ஆன்றோர்கள் கண்டறிந்தார்கள். அப்படிக் கண்டறிந்துள்ள ஒஷதிகளுள் வில்வம், துளசி, அருகு ஆகிய மூன்றும் முக்கியமான இடம் பெற்றுள்ளன. ஆதலால் அவைகளை முறையே சிவனாருக்கும் திருமாலுக்கும் கணபதிக்கும் பிரியமானவைகள் என ஆன்றோர் கற்பித்தனர். "பக்திபூர்வமாக இவைகளை உட்கொள்வதால் நோய்கள் பல தவிர்க்கப்படுகின்றன." இறைவன்

அருளால் நோய் தடுக்கப்பட்டது என்று பொதுமக்கள் பொருள் படுத்துகின்றனர். எனவே இவைகளைத் தெய்வத்துக்குப் பிரிய மானவைகள் என்னும் கொள்கையைப் பரப்புவதன் வாயிலாக மக்களுக்கு இரண்டு நலன்கள் வந்தமைகின்றன. எந்த விதத் திலும் பக்தியை வளர்ப்பதும் நோயைத் தவிர்ப்பதும் நல்ல ஆருயிர்ப் பணிவிடைகளாகின்றன. அந்த முறையில் இவை மூன்றையும் பக்திபூர்வமாகப் பாதுகாத்து வைப்பதும், பரமனுக்குப் படைப்பதும், பிறகு பக்தி விசுவாசத்துடன் அவைகளை உட் கொள்வதும் நல்ல செயல்களாம். நலன் தரும் அனைத்தையும் கடவுள் பக்தியோடு இணைத்து வைத்துள்ளார்கள் நம் பழங்காலத்து அறிஞர்கள்.

கேள்வி: *(748)* தர்மசக்கர அட்டையில் வெளியிடப் பட்டுள்ள நடனமாடும் விநாயகரை வீட்டில் வைத்து வணங்கினால் தீங்கு நேரும் என்கின்றனர். இது உண்மையா?

பதில்:

"எப்பொருள் எத்தன்மைத்(து) ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு."

வாழ்க்கை சம்பந்தமான பலப்பல கோட்பாடுகளையும், கொள்கைகளையும் அவரவர் தமக்குத் தோன்றியபடியெல்லாம் பகருகின்றனர். அக்கூற்றுகளைக் கேட்டு மனம் குழம்பியிருப் பவர்கள் அதிலும் அதிகமாம். ஆத்ம சாதகன் ஒருவனுக்கு இத்தகைய ஐயப்பாடு உதவாது. அவன் திண்ணியனாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறான். இக்கொள்கையைத்தான் பாலகனா யிருந்தது முதற்கொண்டு விவேகானந்த சுவாமிகள் எடுத்துப் புகட்டியுள்ளார்.

வீட்டில் வழிபடு தெய்வம் ஆனந்த மூர்த்தியாயிருப்பது முற்றிலும் மங்களமானதேயாம். ஆதலால் ஆனந்தத் தாண்டவ மாடும் கணபதியைப் பக்திபூர்வமாக வீட்டில் வைத்து நன்கு உபாசனை செய்வது முற்றிலும் பொருத்தமானதேயாம். வீட்டில் கேடு ஏதேனும் வந்தால் அதற்கு முகாமையாயிருப்பது ஆனந்தத்தாண்டவமாடும் கணபதி அன்று; வேறு ஏதாவது காரணம் இருக்கலாம். அக்காரணம் ஒருவருக்கு அமைந்தபடியே

மற்றவருக்கும் அமையாது என்பது திண்ணம்.

கடவுளை எந்த வடிவத்தில் வைத்துப் பூஜித்தாலும் நம்முடைய வழிபாட்டை அவர் ஏற்றுக்கொள்கிறார். தெய்வத்தை எவ்வடிவத்தில் வைத்து வழிபடுகிறோம் என்பது முக்கியமானதன்று. நாம் வைத்துக்கொள்ளும் தெய்வவடிவத்தில் நாம் செலுத்துகின்ற அன்பே முக்கியமானது. எனவே மனதில் உலகப்பற்று நீங்கித் தெய்வப்பற்று ஓங்குவதற்குத் தெய்வத்தின் வடிவத்தை நாம் துணையாகக்கொள்கின்றோம். நம் மனதுக்குப் பிடித்தமான தெய்வத்தின் வடிவத்தை வீட்டில் வைத்து வழிபடுவதனால் நமக்குத் தீங்கு ஒன்றும் வாராது. மனப்பூர்வமாக வழிபாடு நிகழ்ந்தால் பக்தி ஓங்கி வரும்.

கேள்வி: *(749)* ருத்ர தாண்டவப்படத்தை வீட்டில் வைத்து வணங்கக்கூடாது என்பது சரியா?

பதில்: ருத்ரன் சம்ஹார மூர்த்தி; உயிர்களையெல்லாம் காலக்கிரமத்தில் முடிவுக்குக் கொண்டுவருகிறவன். ஆகையினால் அந்த மூர்த்தியை வீட்டில் வைத்து வணங்கக் கூடாது என்பது கோழைகளுடைய கொள்கை. உயிர்ப்பற்று வைத்துள்ள கோழைகளே மரணத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். அஞ்சுகின்றவர்கள் மரணத்தைத் தடுத்துக்கொள்ள முடியுமா? தீக்கோழியைப் பிடிக்க வேட்டைக்காரர்கள் அதைத் துரத்திக் கொண்டு போகின்றனர். மேற்கொண்டு ஓடமுடியாத இடத்து அது தன் தலையை மணலுக்குள் புதைத்து வைத்துக்கொண்டு தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்து விட்டதாக எண்ணுகிறது. உண்மை என்ன? வேட்டைக்காரர்கள் கையினின்று அது தப்பிக்க முடியாது. சம்ஹாரத் தாண்டவம் ஆடுகின்ற ருத்ர மூர்த்தியினுடைய படத்தை வீட்டில் வைத்து வணங்கலாகாது என்று சொல்லித் தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றவர்களுடைய கதியும் இத்தகையதேயாம்.

பிறந்த உயிர்கள் மடிந்தே ஆகவேண்டும். இந்த நியதியினின்று யாரும் தப்பித்துக்கொள்ளமுடியாது. "யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பு, அதற்கு என் கடவேன்?" என்று மாணிக்கவாசகர் பகர்ந்துள்ளார். இறப்பா, அது தன்போக்கில் வந்துகொள்ளட்டும். அதைக்குறித்து நான் செய்யவேண்டியது

யாதுமில்லை. நிகழ்வது நிகழ்ந்தே தீரும். இங்ஙனம் எண்ணித் தன்னை மரணத்துக்கு ஆயத்தப்படுத்துகிறவனே நல்ல பக்தனாகிறான். சூரிய அஸ்தமனத்தைக் குறித்து எவ்வளவுதான் அழுது புரண்டாலும் அச்செயலை யாரும் தடுக்க முடியாது. அது இயற்கையின் பாங்கு. அதேவிதத்தில் பிறந்துள்ள ஜீவர்களும் மரணத்தின் வாயிலாக ஒடுங்குவது இயல்பு. இங்ஙனம் மனிதன் தன்னை வாழ்வுக்கு ஆயத்தப்படுத்திக்கொள்வது போன்று மரணத்துக்கும் ஆயத்தமாயிருத்தல் வேண்டும். ஆதலால் சம்ஹாரத் தாண்டவம் ஆடுகின்ற ருத்திரனுடைய படத்தை வைத்து வணங்குவதில் தவறேதுமில்லை.

கேள்வி: *(750)* கடவுள் வழிபாட்டுக்காகத் தீபம் ஏற்றுகிறோம். நாமே அதை அணைக்கலாமா? எப்படி அணைப்பது?

பதில்: கடவுள் வழிபாட்டில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று மானச பூஜை. மற்றது பாகிய பூஜை. இவ்விரண்டினுள் மானச பூஜை மிக முக்கியமானது. அதை உறுதிப்படுத்துதற்குப் பாகிய பூஜையை அமைத்துக் கொள்கிறோம். பாகிய பூஜையில் வழிபாட்டுக்குரிய மூர்த்தியை ஒரு விக்கிரகத்தின் வாயிலாக அல்லது ஒரு படத்தின் வாயிலாக வழிபடுகிறோம். அத்தகைய பாகிய பூஜையில் கையாளும் பொருள்கள் யாவும் மானச பூஜைக்குப் புறச்சின்னங்களாக அமைந்திருக்கின்றன. மனதில் எழும் மேலாம் எண்ணங்களுக்கு அறிகுறியாக அன்றலர்ந்த தூயமலர்களைக் கையாளுகிறோம். அதேவிதத்தில் மனத்தகத்து ஏற்றி வைக்கவேண்டிய விவேகம் என்னும் விளக்குக்குப் புறச்சின்னமாகப் பாகிய பூஜையில் தீபம் ஏற்றி வைக்கிறோம். இங்ஙனம் தீபம் ஏற்றிவைப்பது முக்கியமானதன்று. இதன் உட்பொருளாகிய உள்ளத்தினுள் அமைந்திருக்கும் ஞானவிளக்கே முக்கியமானது. புறத்தில் செய்யும் பூஜையில் பலர் மிகைபட்ப் பொருள்களைப் பயன்படுத்துதலில் வீண்செலவு செய்கின்றனர். அதற்குச் சான்று ஒன்று. எண்ணெய் விளக்குக்குப் பதிலாக நெய் விளக்கு ஏற்றுவது வீண்செலவு. மக்களில் பலபேருக்கு உண்ணுதற்கு நல்ல நெய் கிடைப்பதில்லை. இந்த நெருக்கடியில் நெய்

விளக்கு ஏற்றி வைப்பது பக்திக்கு அறிகுறி அன்று; அது வீண் ஆடம்பரச் செலவாம். ஈண்டு எழுந்திருக்கும் கேள்வி விளக்கேற்றி வைப்பதை ஒட்டியதாம். இக்கேள்விக்கு விடையில்லை. ஏனென்றால் ஏற்றி வைத்த விளக்கை அணைப் பதும், தானே அணைந்துபோகும்படி விட்டுவிடுவதும் வழிபடு பவருடைய மனப்பான்மையை ஒட்டியதாம். இதைக் குறித்துச் சாஸ்திரம் என்ன சொல்லுகிறது அல்லது சான்றோர் என்ன சொல்லுகிறார்கள் என்னும் ஆமோதிப்பை நாடுவதே பொருளற் றதாம். ஒவ்வோர் ஆத்மசாதகனும் இதுபோன்ற சிறிய செயல் களைச் சமயோசிதம் போன்றும், தன் மனதுக்கு ஏற்ற முறையிலும் கையாளுதலே சிறந்ததாம்.

கேள்வி: *(751)* ஆலய வழிபாட்டில் சண்டீசுவரர் கோயிலில் ஏன் கை தட்டி வணங்குகின்றோம்?

பதில்: சண்டீசுவரர் கோயிலில் கை தட்டி வணங்கு தலில் மேலான கோட்பாடு ஒன்று இருக்கிறது. மானுடன் ஒருவன் தனி உடைமையைப் பொது உடைமை ஆக்குவானாகில் அது பாராட்டப்படுகிறது. பொது உடைமையைத் தனி உடைமை யாக எடுத்துக்கொள்ள மனிதன் முயன்றால் அது பாராட்டத் தகாத செயலாம்.

வழிபாட்டுக்காகக் கோயிலுக்குச் செல்லும் மக்கள் பொதுவாக வெறுங்கையோடு போகலாகாது என்பதும்; கடவு ளுக்குப் படைப்பதற்காகப் பொருத்தமான பொருள்கள், பண்டங்கள் ஏதாவது எடுத்துச் செல்லவேண்டும் என்பதும் ஐதிகம். கடவுளுக்கு மக்கள் எடுத்துச்செல்லும் பொருள்களும், பண்டங்களும் கடவுளுக்கு அவசியமானவைகள் அல்ல. பண்டங்கள் ஈசுவரப் பிரசாதமாக மக்களுக்கே வழங்கப்படு கின்றன. பொருள்கள் கோயிலின் அபிவிருத்திக்காகவும் நடைமுறைக்காவும் பயன்படுத்தப்படுகின்றன. கோயிலில் ஏராளமாகச் சேருகிற பொருள்களில் பங்குகொள்ள மக்களுக்கு ஆசை உண்டாகிறது. அது பொருந்தாத ஆசை. கோயிலுக்குச் சொந்தமாயுள்ள சிவன் சொத்தை மானுடன் ஒருவன் தனக்குரிய தாகச் செய்வானாகில் அதன் மூலம் அவன் தனக்குத்தானே கேட்டை வரவழைத்துக் கொள்கிறான்.

சண்டீசுவரன் சிவனார் கோயிலுக்கு முக்கியமான நிர்வாகி யாக இருந்து வருகிறார் என்பது ஐதிகம். ஆதலால் சண்டீசுவரரை வழுத்துகிறபொழுது எதையும் எடுத்துக்கொள்ளவில்லை என்னும் செயலுக்கு அறிகுறியாக வழிபடுவன் கை தட்டுகிறான். கை தட்டுவதோடு கூட மற்றொரு செயலும் ஐதிகத்திலிருந்து வருகிறது. வழிபடுகிறவன் தான் அணிந்திருக்கும் வஸ்திரத் தினின்று ஒரு நூலைப் பிடுங்கி எடுத்துச் சண்டீசுவரன் முன்னிலையில் போட்டு வணங்குவது வழக்கம். ஒரு சிறு பொருளையாவது மனிதன் கோயிலுக்குத் தரவேண்டுமேயொழிய கோயிலினின்று எப்பொருளையும் தனக்குரியதாக்கலாகாது என்பதுதான் நல்ல ஐதிகம். இதற்குச் சான்றாகச் சண்டீசுவரரின் முன்னிலையில் வழிபடுகிறவன் கைதட்டி வணங்கிவிட்டு வருகிறான்.

கேள்வி: *(752)* கோயிலில், சண்டீசுவரர் சந்நிதியில் ஆண்களும், பெண்களும் (ஒரு சிலர்) வேஷ்டியிலிருந்தும்; புடவையிலிருந்தும் நூலைப் பிய்த்தெடுத்து, சண்டீசுவர சுவாமியின் மீது போடுவதின் தாத்பர்யம் என்ன?

பதில்: சிவன் கோயிலில் நிகழுகிற இந்த நிகழ்ச்சியானது கைலாச யாத்திரையில் ஸ்தூலமான ஒரு வடிவெடுத்திருக்கிறது. யாத்திரையில் கஷ்டமான பகுதிகள் பல இருக்கின்றன. கஷ்ட மான ஒரு பகுதியைப் பூர்த்திபண்ணுகிற இடத்தில் குன்று போன்று சிறு கற்குவியல் இருக்கிறது. அதற்கருகில் சுமார் ஐந்தடி உயரமுள்ள செடி ஒன்று இருக்கிறது. திபெத் பீடபூமியில் ஐந்தடிக்குமேல் மரம் ஏதும் வளர்வதில்லை. அந்தச் செடியில் ஒரு சிறு துணியைக் கட்டுவதும், கற்குன்றின் மீது ஒரு கல்லை வீசி எறிந்து "கைலாசபதிக்கு ஜெய்" என்று கூறுவதும் அந்த யாத்திரையில் அமைந்துள்ள ஐதிகமாகிறது. அங்குத் துணிகட்டுவதால் கற்குன்றாய் அமைந்திருப்பது தற்செய லாய் அமைந்ததன்று; மானுட முயற்சியின் விளைவு என்பது வெளியாகிறது. பரத்தை நோக்கிப் பயணம் போகிறவர்கள் இங்ஙனம் கடினமான பகுதிகள் பலவற்றைச் சமாளித்து மேல் நோக்கிப் போகவேண்டும் என்னும் கோட்பாடு அந்த வழிபாட்டு முறையில் அடங்கியிருக்கிறது.

சிவன் கோயிலில் சண்டேசுவரன் முன்னிலையில் இரண்டு நிகழ்ச்சிகள் நிறைவேறுகின்றன. ஒன்று வஸ்திரத்தினின்று நூல் ஒன்றைப் பிடுங்கிப் போடுதல். சிவாலயத்துக்கு வருகிறவர்கள் ஏதேனும் ஒருபொருளை இறைவனுக்குப் படைத்தல் வேண்டும். இறைவனிடத்திருந்து எதையும் அவர்கள் கேட்கலாகாது. கோயி லினின்று வெளியேறும்பொழுது வெறும் கையோடு போக வேண்டும். கோயிலினின்று எதையும் தனியுரிமையாக்கி எடுத்துக் கொண்டு போகலாகாது. அதற்குச் சின்னமாக சண்டேசுவரன் முன்னிலையில் கைதட்டுவதன் மூலம் இக்கோட்பாடு விளக்கப் பெறுகிறது. நூல் ஒன்றைப் போடுவதன் மூலம் ஒரு சிறிதளவு தியாகமாவது செய்யவேண்டும் என்னும் கருத்து அடங்கி யிருக்கிறது. துறவியர்கள் தங்களையே தெய்வத்துக்குக் கொடுத்து விடுகிறார்கள். ஆதலால் கைதட்டுதல், நூல்போடுதல் ஆகிய செயல்களை அவர்கள் செய்யவேண்டியதில்லை.

பக்தியிலும் சிவசேவையிலும் சண்டேசுவரர் நிபுணராக இருக்கிறார். ஆதலால் கோயில் நிர்வாகத்துக்கு அவர் தலைமை வகிக்கிறார். வழிபட வருகிறவர்கள் எல்லாரும் தாங்கள் முறை யாக நடந்துகொண்டதை அவரிடம் தெரிவித்துவிட்டு வெளி யேறுதல் ஒரு சிறந்த ஐதிகமாக நடைபெற்று வருகிறது. சண்டேசுவரர் வழிபாட்டின் தத்துவம் இதுவேயாம்.

கேள்வி: *(753)* கோயிலுக்குச் சென்று வருபவர்கள் கால் கழுவலாகாது என்பதன் கருத்தென்ன?

பதில்: கண்டவீதிப் பக்கம் சென்று வருபவர்கள் கால் கழுவவேண்டும். அதில் பெரிய கோட்பாடு இருக்கிறது. வீதி எங்கும் கிடக்கிற குப்பை தூசிகளை மிதித்து வருகிற மனிதன் வீட்டுக்குள் நுழைவதற்கு முன்பு பாதங்களைக் கழுவுதல் வேண்டும். ஆனால் கோயில் ஒன்று புனிதம் வாய்ந்தது. கோயிலுக்குள் கிடக்கும் பாததூளியிலும் தெய்வீகம் திகழ்கிறது என்பது அறிஞர் நம்பிக்கை. அத்தகைய புனிதம் வாய்ந்த இடத்தில் நடந்துவருகிறவன் தன் வீட்டிற்குள்ளே நேரே செல்வதின் வாயிலாகப் பாதத்தில் படிந்திருக்கும் துகள்களின் வாயிலாகத் தூய்மையை வீட்டிற்குள்ளே எடுத்துச் செல்கிறான் என்பது நம்பிக்கை. ஆக, இக்கொள்கை அவரவர் நம்பிக்கையை

முன்னிட்டு வந்தது. இதை ஒரு பெரிய வாழ்க்கைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமில்லை. அவரவர் கொண்டுள்ள தூய நம்பிக்கையே இதுபோன்ற செயலுக்குப் பிரமாணம் ஆகிறது.

கேள்வி: *(754)* கோயிலுக்குப் போகும்போது ஏதாவது கொண்டுபோகவேண்டும் என்பதன் கருத்தென்ன?

பதில்: கடவுளே உலகிலுள்ள அனைத்துமாய் இலங்குகின்றார். கோயிலுக்கு மக்கள்போவது தங்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை ஞாபகத்திற்குக் கொண்டுவருதற்பொருட்டேயாம். அக்கொள்கையைச் செயலிலும் காட்டியாக வேண்டும். உண்பதற்கேற்ற நல்ல பொருள்களைக் கடவுளுக்குப் படைப்பதற்காக எடுத்துச் செல்லுதல் வழக்கத்தில் இருந்து வருகிறது. அப்பொருள்களைக் கடவுளுக்குப் படைத்தல் என்பதன் கருத்து அவருடைய சிருஷ்டியாக இலங்குகின்ற மற்ற மக்களோடு பங்கிட்டுக்கொள்ளுதல் என்பதேயாம். பரம்பொருள் தாமே உண்ணாது உறங்காது இருக்கின்றார். ஆயினும் அனந்தங்கோடி உயிர்களாக வடிவெடுத்து உண்ணவும் உறங்கவும் செய்கின்றார். ஆதலால் கோயிலுக்குப் போகின்றவர்கள் நல்லதும் தூயதுமாகிய உணவுப்பொருளைக் கோயிலுக்கு எடுத்துச்சென்று கடவுளுக்கு நைவேத்தியம் பண்ணி அக்கடவுளின் பிரசாதமாக அதை மற்ற உயிர்களுக்கு வழங்குதல் நல்ல வழிபாடாகிறது.

கேள்வி: *(755)* வழிபாட்டுக்குப்பின் சாந்திபாடம் சொல்வதன் நோக்கம் என்ன?

பதில்: சாந்தி பாடத்தை முதலில் சொல்லி வழிபாடு ஆரம்பமாகிறது. வழிபாடு முற்றுப்பெற்றான பிறகும் சாந்தி பாடம் ஓதப்படுகிறது. ஒவ்வொரு சாந்தி பாடத்தின் உட்பொருளும் மனதின்கண் அமைதியையும் தெளிவையும் உண்டுபண்ணுகிறது. வழிபாடு செய்வது மனத்தெளிவின் பொருட்டே. அதேவிதத்தில் சாஸ்திர ஆராய்ச்சி பண்ணுவதும் மனத்தெளிவின் பொருட்டேயாம்.

மனம் தெளிவடைதற்கு ஏற்ப மனிதன் மேலோனாகிறான். சான்று ஒன்றின் மூலம் இக்கோட்பாட்டைத் தெளிவுபடுத்தலாம்.

குழந்தையொன்று தன் தாயைக் காணாதிருக்கின்றபொழுது கதறி அழுகிறது. தாயைக் கண்டதும் அழுகை நிற்கிறது. அமைதி உண்டாகிறது. குழந்தைக்கு உள்ளத்தில் சாந்தி நிலவு கிறது. ஸ்தூலத்தில் நாம் காண்கின்ற இக்காட்சிக்கு நிகரானது சூட்சும நிலையில் சாந்திபாடம் உள்ளத்தில் உண்டுபண்ணு கின்ற அமைதி. குழந்தை தன்னைப் பெற்றெடுத்துப் பேணிவரும் தாயைக் கண்டதும் அமைதியுறுகிறது. அதேவிதத்தில் சாந்தி பாடத்தில் அமைந்துள்ள மேலாம் கருத்தை அறிந்துகொள்ளுதற் கேற்ப அதை ஓதுகிறவனுடைய உள்ளத்தில் அமைதி உண்டா கிறது. எனவே சாந்திபாடம் என்பது காரணப் பெயர். உண்மையை அறிவதற்கேற்ப மனிதன் உள்ளத்தில் உவகையும் அமைதியும் உண்டாகிறது. ஆதலால் இவ்விஷயத்தை அறிந்து வருகிற மாந்தர் சாந்திபாடத்தை நன்கு பயன்படுத்துவார்களாக.

கேள்வி: *(756)* ஐயப்பன் கோயிலுக்குச் செல்பவர்கள் கறுப்பு நிற ஆடையை அணிவது ஏன்? ஐயப்பனைத் தவிர வேறு தெய்வங்களைத் தொழலாகாது என்று கூறுகிறார்களே அது சரியா?

பதில்: சபரி மலையிலிருக்கும் ஐயப்பன் கோயிலுக்கு யாத்திரை போகின்றவர்களுடைய எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அப்படிப் போகிறவர்கள் கையாளுகிற சில நியதிகள் பாராட்டத்தக்கவைகள். நாற்பது நாள் விரத மிருந்து யாத்திரை பண்ணுகின்றனர். அப்படி விரதமிருப்பது தவம் பண்ணுவதற்கு நிகர். ஆகார நியதியுடன் அவர்கள் இருக்கின்றனர். அது பாராட்டத்தக்கது. அன்றாட அனுஷ் டானங்ளை அவர்கள் முறையாகக் கையாளுகின்றனர். ஐயப்பன் வழிபாடு நீங்கலாக வேறு எந்த முயற்சியிலும் அவர்கள் கருத்தைச் செலுத்துவதில்லை. தெய்வம் ஒன்று; அவருக்கு வடிவங்கள் பல. வடிவங்கள் எத்தனை இருந்தாலும் வழிபாடு ஒரே மூலமூர்த்திக்கு உரியதாகிறது. இஷ்டநிஷ்டை என்னும் கோட்பாட்டுக்கு உட்பட்டு அவர்கள் நாட்கணக்காக ஐயப்பனைப் பற்றிய எண்ணத்திலேயே ஊறியிருப்பது முற்றிலும் பாராட்டத் தக்கது. ஐயப்பன் கோயில் யாத்திரையை முடித்தான பிறகு அவர்கள் மற்ற கோயில்களுக்குப் போகிறார்கள். அதை முடிக்கும்

வரையில் அந்த ஒரே நோக்கத்தில் அவர்கள் கண்ணும் கருத்து மாய் இருப்பது முற்றிலும் அவசியம். ஐயப்பன் கோயில் யாத்திரைக்கு விரதம் பூண்டு மாலை அணிந்துகொள்ளுதல் ஒரு சடங்கு ஆகிறது. மாலை அணிந்து கொள்ளுவதோடுகூட கறுப்பு உடை அல்லது அதற்கு நிகராக இருக்கிற ஏதேனும் ஒரு நிறத்தை உடைய உடை அணிவதில் காரியம் உண்டு. யாரும் வெள்ளை வஸ்திரம் அணிவதில்லை. அழுக்குப் படிந் தாலும் அவ்வழுக்குத் தெரியாத நிறமுள்ள உடையை அவர்கள் அணிகின்றனர். விரதம் பூண்டுள்ள நாட்களில் அவர்கள் வெறும் தரையில் படுத்து உறங்குகின்றனர். தரையில் படுத்து உறங்கும்போது வெள்ளை வஸ்திரம் ஒரே நாளில் அழுக்குப் படிந்துவிடும். பிறகு அது பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாக இராது. கறுப்புநிற வஸ்திரமும் கிட்டத்தட்ட அதை ஒத்திருக்கிற வஸ்திரமும் அழுக்குப் படிந்ததாகக் காட்சி கொடுக்காது. சாதாரண மாக அவைகளைத் துவைத்துக் கட்டினால் போதுமானது. அழுக்கைப் போக்குவதைப் பற்றிய கவலைக்கு ஆங்கு இட மில்லை. பழங்காலத்து ரிஷிகளும் தவசிகளும் மரவுரி அணிந் திருந்தனர். அதற்கு நிகர் இக்காலத்திய இந்த யாத்திரைவாசிகள் கறுப்பு உடை அணிவது. இனி யாத்திரை போகும்பொழுது ஆங்காங்கு இரவில் மரத்தடியில் படுத்து உறங்குகின்றனர். உடை அழுக்குப் படிவதைப்பற்றிய கவலைக்கு ஆங்கு இட மில்லை. பாதையில் சில இடங்களில் நீராடுவதற்குத் தண்ணீர் கிடையாது. அந்நாட்களில் அவர்கள் நீராடமாட்டார்கள். அப்படி நீராடாது இருப்பதைப் பற்றிய கவலையும் அவர்களுக்கு இல்லை. ஐயப்பனுடைய நாம உச்சாரணை அவர்களுடைய மனதைக் குளிப்பாட்டுகிறது. அது உடல் சுத்தத்தைவிட மேலானது.

இனி, ஐயப்பன் கூட்டத்தார் தங்களுக்கிடையில் பரந்த பாங்கில் சமரசம் கொண்டாடுகின்றனர். முதியவர்கள், இளைய வர்கள் என்கிற பாகுபாடு அவர்களுக்கு இடையில் இல்லை. பணக்காரர், ஏழையர் என்ற வேற்றுமையும் அவர்களுக்கு இடையில் இல்லை. மேல்ஜாதி, கீழ்ஜாதி என்ற இன வேற்று மையும் அவர்களுக்கு இடையில் இல்லை. கற்றவர், மற்றவர் என்கிற பிரிவினை அவர்களுக்கிடையில் இல்லை. ஒருவரை ஒருவர் ஐயப்பன் என்றே அழைக்கின்றனர். ஆயிரக்கணக்கான

பேர் ஐயப்பன் சொரூபம் ஆகின்றனர். அத்வைத சாதனத்துக்கு இது ஒப்பானது. வேறு எதையும் இதற்கு நிகராக நாம் காணமுடியாது. அத்தனை பேர் ஏகோபித்து ஐயப்பன் உணர்ச் சியில் ஊறியிருப்பது நல்ல பயிற்சி ஆகிறது. சில வாரங் களுக்காவது இத்தகைய அபேத நிலையில் இருப்பது பாராட்டத்தக்கது.

தலையில் இருமுடி தாங்கிச் செல்வார்கள். ஒரு முடி ஐயப்பன் ஆராதனைக்கு உரியது. அடுத்த முடி தங்கள் உடல் வாழ்க்கைக்குத் தேவையாய் இருக்கும் அற்ப உணவுப் பொருளும், துணியும் கொண்டதாகும். ஆக, எளிய வாழ்க் கைக்கும் சீரிய எண்ணத்துக்கும் சான்றாக ஐயப்பன் கோயில் யாத்திரை அமைகிறது. ஆயுட்காலத்தில் ஒரு தடவையாவது இத்தகைய பயிற்சி பெறுவது சாலச்சிறந்தது.

கேள்வி: *(757)* சபரிமலைக்குச் செல்லும் ஸ்ரீ ஐயப்பன் பக்தர்கள் 54 அல்லது 108 மணிகள் கொண்ட மாலையை அணிந்தால்தான் விரதம் தொடங்குவதாய் ஐதிகம் இருந்து வருவதற்கும், ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்களும் இம் மாலைகளை அணிவதற்கும் உள்ள தத்துவம் என்ன?

பதில்: ஜப மாலையைப் பயன்படுத்துவது மதங்கள் யாவுக்கும் பொதுவாக அமைந்திருக்கிறது. நல்ல சாதனை முறைகளைச் சமயத்தவர்கள் எல்லாரும் பயன்படுத்தலாம் என்பதற்கு இது சான்றாகிறது. புரிகின்ற சாதன வகைகளைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் அவைகளுக்கிடையில் வேற்றுமை மிகக் குறைவு என்பது வெளியாகும். மதங்களுக்கிடையிலே எங்கு வேற்றுமை இருக்கிறது என்பதைக் காண்பதற்குப் பதிலாக எங்கு ஒற்றுமை இருக்கிறது என்று கண்டு பழகுதலே நல்ல பயிற்சியாகும். ஹிந்து மதத்தவர்கள் கையாளுகிற ஜப மாலையில் 108 மணிகள் இருக்கின்றன. அல்லது அதில் பாதி 54 மணிகள் இருக்கின்றன. மணிகள் மிகப்பெரியவைகளாக இருந்தால் 54-இல் பாதி 27-ஐ எடுத்துக்கொள்வதும் நடை முறையில் இருந்து வருகிறது. இந்த எண்ணிக்கைகளைக் கூட்டினால் மொத்தம் ஒன்பதில் வந்து நிற்கும். தத்துவ விளக்கத்துக்கு ஒன்பது தலைசிறந்ததாக இடம்பெற்றிருக்கிறது.

பிரபஞ்ச அமைப்பு சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களிலிருந்து வந்தது. அப்பிரபஞ்சம் கால, தேச, நிமித்தம் ஆகிய மூன்று பாங்குகளில் தன்னை விளக்கிக் கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்தில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரமாகிய மூன்று கிருத்தியங்கள் நிகழ்ந்து வருகின்றன. இம்மூன்றும் சேர்ந்து ஒன்பது ஆகிறது. பிரபஞ்சத்துக்கு விளக்கம் இந்த ஒன்பதுக்கு மேல் கிடையாது. ஆதலால் தத்துவ விளக்கத்தில் ஒன்பது முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. ஒன்பதனுடைய விரிவடைந்த எண்ணிக்கைகளாக இருபத்தேழு, ஐம்பத்துநான்கு, நூற்றெட்டு அமைந்திருக்கின்றன. இறைவனுடைய திருநாமத்தை ஜபிப்பதற்கு ஜபமாலை பயன்படுத்தப்படுகிறது. ஒரே நாமத்தைத் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பது நாமஜபம் என்னும் பெயர் பெறுகிறது. ஆத்ம சாதனங்களுள் இது மிகமிகச் சுலபமானது. மக்களாகப் பிறந்திருக்கிறவர்கள் யார் வேண்டுமானாலும் நாம ஜபத்தில் ஈடுபடலாம். வயது வேற்றுமையோ, பால் வேற்றுமையோ, இன வேற்றுமையோ நாமஜபத்தில் குறுக்கிடுவதில்லை. ஐயப்பன் கோயிலுக்குத் த..ிசனத்துக்குப் போகிறவர்கள் ஜபமாலை பூணுதல் என்னும் விரதம் எடுத்துக் கொள்கின்றனர். மாலை பூண்ட நாள் முதற்கொண்டு ஐயப்பன் தரிசனம் பூர்த்தியாகும் நாள்வரை மாலை பூண்டுள்ளவர்கள் கட்டுப்பாடான வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். நியமனத்தோடு தினசரி சாதனத்தில் அவர்கள் கருத்தைச் செலுத்துகிறார்கள். மனிதன் ஒருவனுக்குச் சிலநாட்கள் கட்டுப்பாடோடு வாழ்ந்திருப்பது சாத்தியமென்றால் ஆயுள் முழுவதிலும் அவன் அங்ஙனம் கட்டுப்பாடோடு வாழ்ந்திருக்கலாம் என்னும் கோட்பாடு வெளியாகிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பேர்கள் ஐயப்பனுடைய தரிசனத்திற்காக ஜபமாலையைப் பூண்டு கொண்டு ஒழுங்கான வாழ்க்கை வாழ்ந்து வருவது அரிய பெரிய செயலாகிறது. அவர்கள் எல்லாருமே ஐயப்பன் என அழைக்கப்பெறுகிறார்கள். ஐயப்பனுடைய எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிவேகம் வளர்ந்து வருவது ஆகுக. அதற்கு ஐயப்பன் யாண்டும் துணைபுரிவானாக.

கொஞ்ச காலத்துக்கு முன்பு ஐயப்பன் வழிபாடு அலாதியாகக் கேரளத்துக்கு உரியதாக இருந்தது. நாள் செல்லச்

செல்லப் பக்கத்து மாகாணங்களுக்கும் அது பரவுவதாயிற்று. இப்பொழுது அகில பரதகண்டத்தையே தழுவுகிற பாங்கில் அது பரவிக்கொண்டிருக்கிறது. பக்திமார்க்கத்தில் மக்கள் படைத்துள்ள ஆர்வத்துக்கு இது சான்றாகிறது.

கேள்வி: *(758)* பெண்கள் மசூதிக்குச் செல்லக்கூடாது என இஸ்லாம் சமயம் தடை செய்கிறது. ஐயப்பன் கோயிலுக்குப் பெண்கள் செல்லலாகாது என ஹிந்துமதம் தடை செய்வது முறையா? குருவாயூரப்பன் கோயிலுக்குள் சட்டையை நீக்கிவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று சொல்வது ஏன்? இதற்கான காரணத்தை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: ஆத்மா ஆணன்று, பெண்ணன்று, அலியுமன்று. ஆத்மா பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது. பிரபஞ்சத்தில் உருவான சரீர அமைப்பில் ஆண், பெண், அலி என்னும் பேதம் உண்டு. வழிபாட்டில் பெண்பாலர் ஆண்பாலருக்குச் சமம் என்னும் ஹிந்துமதக் கோட்பாடு அர்த்தநாரீசுவரத் தத்துவத்தில் வந்து அமைந்திருக்கிறது. கணவன் ஒருவன் தன் மனைவியைப் புறக்கணித்துவிட்டு வழிபாடு போன்ற ஸத்கர்மம் எதுவும் செய்யலாகாது என்பது ஹிந்துமதக் கொள்கை. இக்கொள்கை யினின்று ஒருபொழுதும் நாம் பிசகலாகாது.

ஐயப்பன் ஆலயத்தினுள் இன்னும் புஷ்பவதியாகாத சிறுமிகளும் கிழவிமார்களும் செல்வதற்கு அனுமதி உண்டு. இடைநிலையில் உள்ள பெண்கள் இக்கோயிலுக்கு வரலாகாது என்னும் கட்டுப்பாடு மாதம் ஒருமுறை அவர்கள் வீட்டுக்குப் புறம்பாக இருக்கும் நிலையை அனுசரித்து வந்துள்ள கட்டுப் பாடாகும்.

குருவாயூரப்பன் கோயிலுக்குள் சட்டைபோட்டுக்கொண்டு போகலாகாது என்பது லோகாச்சாரம். அதாவது அந்தந்த மாகாணத்துக்குரிய பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாம்.

பக்தியை வளர்ப்பதும் மக்களுக்கிடையில் ஒற்றுமையைக் கொண்டுவருவதும் யாண்டும் நம் மேலான நோக்கமாய் இருக்கவேண்டும்.

கேள்வி: *(759)* முனிவர்கள் மான்தோல், புலித்தோல் மீது அமர்வதில் ஏதேனும் கருத்துண்டா?

பதில்: பழங்காலத்தில் வாழ்ந்து வந்த முனிவர்களும் தபஸ்விகளும் வனத்தில் அகப்பட்ட காய், கனி, கிழங்கு வகைகளைப் புசித்து வந்தார்கள். விலங்குகளின் தோல்களையும், மர உரியையும் உடையாகப் பயன்படுத்தினார்கள். மான், புலி முதலிய விலங்குகளின் தோல்கள் அக்காலத்தில் எளிதில் அகப்பட்டன. குளிர்காலங்களில் அவைகள் கதகதப்பாயிருந்தன. கோடைகாலத்தில் அவைகள் குளிர்ந்திருந்தன. அத்தகைய வசதி அவைகளிடத்து அமைந்திருந்ததினால் அத்தகைய தோல் வகைகளைத் தியானத்தில் அமருகிறவர்கள் எல்லோரும் பயன் படுத்த ஆரம்பித்தனர். நாளடைவில் அப்பழக்கம் ஓர் ஐதிகமாக உருவெடுத்திருக்கிறது. ஆனால் அத்தகைய தோல்களின் மீது அமர்ந்து தியானம் பண்ணவேண்டும் என்னும் நியதியில்லை. பழங்காலத்தில் புலித்தோல், மான்தோல் முதலியன எளிதில் அகப்பட்டன. இக்காலத்தில் உரோமம், பஞ்சு முதலியவைகளைக் கொண்டு நெய்கின்ற கம்பள வகைகளும் ஜமுக்காள வகைகளும் எளிதில் அகப்படுகின்றன. உட்காருவதற்குரிய விரிப்பு எக்காலத்தில் எது எளிதில் அகப்படுகிறதோ அதைப் பயன் படுத்துவது உசிதம். இன்ன விரிப்பின் மீதுதான் அமர்ந்து தியானம் பண்ணவேண்டும் என்னும் நியதியில்லை.

ஆனால் தியானம் பண்ணிப் பழகுகிறவர்கள் வெறும் தரையில் உட்காரலாகாது. கோரைப்பாய், தர்ப்பைப்பாய், ஜமுக் காளத் துண்டு ஆகியவைகளில் எது ஒத்து வருகிறதோ அதை ஆசனமாக அமைத்து அதில் தியானம் பழகுவது அவசியமாகிறது. ✪

செல்லப் பக்கத்து மாகாணங்களுக்கும் அது பரவுவதாயிற்று. இப்பொழுது அகில பரதகண்டத்தையே தழுவுகிற பாங்கில் அது பரவிக்கொண்டிருக்கிறது. பக்திமார்க்கத்தில் மக்கள் படைத்துள்ள ஆர்வத்துக்கு இது சான்றாகிறது.

கேள்வி: *(758)* பெண்கள் மசூதிக்குச் செல்லக்கூடாது என இஸ்லாம் சமயம் தடை செய்கிறது. ஐயப்பன் கோயிலுக்குப் பெண்கள் செல்லலாகாது என ஹிந்துமதம் தடை செய்வது முறையா? குருவாயூரப்பன் கோயிலுக்குள் சட்டையை நீக்கிவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று சொல்வது ஏன்? இதற்கான காரணத்தை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: ஆத்மா ஆணன்று, பெண்ணன்று, அலியுமன்று. ஆத்மா பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது. பிரபஞ்சத்தில் உருவான சரீர அமைப்பில் ஆண், பெண், அலி என்னும் பேதம் உண்டு. வழிபாட்டில் பெண்பாலர் ஆண்பாலருக்குச் சமம் என்னும் ஹிந்துமதக் கோட்பாடு அர்த்தநாரீசுவரத் தத்துவத்தில் வந்து அமைந்திருக்கிறது. கணவன் ஒருவன் தன் மனைவியைப் புறக்கணித்துவிட்டு வழிபாடு போன்ற ஸத்கர்மம் எதுவும் செய்யலாகாது என்பது ஹிந்துமதக் கொள்கை. இக்கொள்கையினின்று ஒருபொழுதும் நாம் பிசகலாகாது.

ஐயப்பன் ஆலயத்தினுள் இன்னும் புஷ்பவதியாகாத சிறுமிகளும் கிழவிமார்களும் செல்வதற்கு அனுமதி உண்டு. இடைநிலையில் உள்ள பெண்கள் இக்கோயிலுக்கு வரலாகாது என்னும் கட்டுப்பாடு மாதம் ஒருமுறை அவர்கள் வீட்டுக்குப் புறம்பாக இருக்கும் நிலையை அனுசரித்து வந்துள்ள கட்டுப் பாடாகும்.

குருவாயூரப்பன் கோயிலுக்குள் சட்டைபோட்டுக்கொண்டு போகலாகாது என்பது லோகாச்சாரம். அதாவது அந்தந்த மாகாணத்துக்குரிய பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாம்.

பக்தியை வளர்ப்பதும் மக்களுக்கிடையில் ஒற்றுமையைக் கொண்டுவருவதும் யாண்டும் நம் மேலான நோக்கமாய் இருக்கவேண்டும்.

கேள்வி: *(759)* முனிவர்கள் மான்தோல், புலித்தோல் மீது அமர்வதில் ஏதேனும் கருத்துண்டா?

பதில்: பழங்காலத்தில் வாழ்ந்து வந்த முனிவர்களும் தபஸ்விகளும் வனத்தில் அகப்பட்ட காய், கனி, கிழங்கு வகைகளைப் புசித்து வந்தார்கள். விலங்குகளின் தோல்களையும், மர உரியையும் உடையாகப் பயன்படுத்தினார்கள். மான், புலி முதலிய விலங்குகளின் தோல்கள் அக்காலத்தில் எளிதில் அகப்பட்டன. குளிர்காலங்களில் அவைகள் கதகதப்பாயிருந்தன. கோடைகாலத்தில் அவைகள் குளிர்ந்திருந்தன. அத்தகைய வசதி அவைகளிடத்து அமைந்திருந்ததினால் அத்தகைய தோல் வகைகளைத் தியானத்தில் அமருகிறவர்கள் எல்லோரும் பயன் படுத்த ஆரம்பித்தனர். நாளடைவில் அப்பழக்கம் ஓர் ஐதிகமாக உருவெடுத்திருக்கிறது. ஆனால் அத்தகைய தோல்களின் மீது அமர்ந்து தியானம் பண்ணவேண்டும் என்னும் நியதியில்லை. பழங்காலத்தில் புலித்தோல், மான்தோல் முதலியன எளிதில் அகப்பட்டன. இக்காலத்தில் உரோமம், பஞ்சு முதலியவைகளைக் கொண்டு நெய்கின்ற கம்பள வகைகளும் ஜமுக்காள வகைகளும் எளிதில் அகப்படுகின்றன. உட்காருவதற்குரிய விரிப்பு எக்காலத்தில் எது எளிதில் அகப்படுகிறதோ அதைப் பயன் படுத்துவது உசிதம். இன்ன விரிப்பின் மீதுதான் அமர்ந்து தியானம் பண்ணவேண்டும் என்னும் நியதியில்லை.

ஆனால் தியானம் பண்ணிப் பழகுகிறவர்கள் வெறும் தரையில் உட்காரலாகாது. கோரைப்பாய், தர்ப்பைப்பாய், ஜமுக் காளத் துண்டு ஆகியவைகளில் எது ஒத்து வருகிறதோ அதை ஆசனமாக அமைத்து அதில் தியானம் பழகுவது அவசியமாகிறது. ✩

57. சடங்கு

கேள்வி: (760) **ஜீவன் உடலைவிட்டுப் பிரியுமுன் பிரக்ஞையற்றுக் கிடக்கும் நிலையில் இரண்டு, மூன்று தினங்கள் வரை அவயவங்கள் பலவிதக் கஷ்டங்கள் படுகிறது. மரணாவஸ்தையில் ஏற்படுகிற மேற்படி கஷ்டங்கள் ஜீவன் அனுபவிக்கிறதுதானா என்பதற்கும், உடலை விட்டு ஜீவன் பிரிந்த பின் நற்கதி, சாந்தியடையு மென்று செய்யப்படும் கர்மாதிகள், தான தருமங்கள், சிரார்த்தம் முதலியவைகளால் மேற்படி ஜீவனுக்கு அனுகூலம் ஏற்படுகிறதா என்பதற்கும் அப்படிச் செய்யப் படாத மற்ற ஜீவன்கள் நற்கதியடைகிறதில்லையா என்பதற்கும் விளக்கம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

பதில்: யாருக்குச் சரீரப் பற்று இருக்கிறதோ அவர்களுக்கு இறுதிக் காலத்தில் சரீரம் நோய்வாய்ப்பட்டிருக்கும்பொழுது துன்பம் ஏராளமாய் உண்டு. தன் உடையில் அபிமானம் வைத் திருக்கும் ஒருவனுக்கு உடை ஆணியில் மாட்டிக்கொண்டு கிழிந்துவிட்டால் அல்லது நீக்க முடியாத கறை விழுந்துவிட்டால் அம்மனிதன் துன்பப்படுகின்றான். ஆனால் உடையில் பற்று வைக்காத மனிதன் தற்செயலாய் நிகழ்ந்ததைக் குறித்து வருந்து வதில்லை. அந்த உடைப்பற்றுக்கு ஒப்பானது உடல்பற்று. அந்திய காலத்தில் உடல் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் உள்ளம் ஆத்ம சொரூபத்திலேயே நிலைத்திருக்கும் சாதகர்கள் சிலர் இருக்கின்றனர். அவர்கள் மரணத்தைப் பற்றியோ உடலின் வேதனையைப் பற்றியோ நினைப்பதில்லை. சாந்தத்திலும் இன்பத்திலும் அவர்கள் நிலைத்திருக்கிறார்கள். உடல் பற்றுடை யவர்களுக்கு வாழ்விலும் துன்பம், மரணத்திலும் துன்பம்.

காலமாய் விட்ட ஒருவனுக்கு உற்றார் உறவினர் செய்கின்ற சிரார்த்தம் போன்ற சடங்குகளும் தானங்களும் நேரடியாகத் துணைபுரிவதில்லை. அந்தக் கிரியைகளுக்கு அடிப்படையாக அவர்கள் எண்ணுகின்ற மேலான எண்ணம் காலம் சென்றவர்களுக்கு ஆத்ம சாந்தியை ஒருவாறு அளிக்கிறது. சிரார்த்தம் போன்ற சடங்குகளைக் காலஞ்சென்ற பலபேருக்கு வேறு யாரும் செய்வதில்லை. அதை முன்னிட்டு அவர்களுக்குக் குறை ஒன்றும் வந்துவிடாது. உண்மையில் அவரவர் வினைப் பயனே எல்லா ஜீவர்களையும் மரணத்திற்குப் பிறகும் தொடர்ந்து வருகிறது. உற்றார் உறவினர் செய்கின்ற சடங்குகள் மிகமிகச் சிறிய அளவிலே செத்தவர்களுக்குப் பயன்படுகிறது.

கேள்வி: *(761)* நாம் கோயில்களில் அர்ச்சனை செய்யும் பொழுது நம் பெயர், நக்ஷத்திரத்திற்குச் செய்வது முறையா அல்லது இறைவனின் நாமத்திற்குச் செய்வது முறையா?

பதில்: கோயிலுக்குச் செல்கிறவர்கள் பெரும்பான்மையோர் தங்களுடைய நாம நக்ஷத்திரங்களைச் சொல்லி அர்ச்சனை செய்யும்படி வேண்டுகின்றனர். அதில் ஓரளவு நலன் உண்டு. ஆனால் இத்தகைய வழிபாடு காமிய உபாசனையில் சேர்க்கப்படுகிறது. ஒரு மனிதன் தன்னுடைய சொந்த வாழ்க்கைக்காகவென்று கடவுள் வழிபாடு செய்தால் அது காமிய உபாசனை ஆகிறது. மக்களில் பெரும்பான்மையோர் காமிய உபாசனைக்குத் தான் தகுதியுடையவர்களாய் இருக்கிறார்கள்.

உண்மையான பக்தர்கள் தங்கள் சொந்த நலத்துக்காகவென்று கடவுள் வழிபாடு செய்வதில்லை. கடவுளிடத்துத் தங்களை ஒப்படைத்து விடுதலிலேயே பெருமகிழ்வு அடைகின்றனர். தங்களுக்காகவென்று ஏதேனும் ஒன்றைக் கேட்பதற்குப் பதிலாகத் தங்களையே அவர்கள் கடவுளிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். "வேண்டத்தக்கது ஒன்று உண்டெனில் அதுவும் உந்தன் விருப்பன்றே" என்பது பக்தியின் உச்சநிலைக்குப் போனவர்கள் செய்கின்ற பிரார்த்தனையாகும். கடவுள் வழிபாடு செய்து வருகிற நம்மவர்கள் காமிய உபாசனையைப் படிப்படியாக நிஷ்காமிய உபாசனையாக மாற்றவேண்டும். அர்ச்சனை செய்வதையே அதற்கு உற்ற

ஒரு உபாயமாக எடுத்துக் கொள்ளலாம். பக்தன் ஒருவன் தன்னுடைய நாம நக்ஷத்திரத்துக்கு அர்ச்சனை செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுதற்குப் பதிலாக உலக நன்மையின் பொருட்டு தெய்வத்தின் பெயராலேயே அர்ச்சனை செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்து வருவது சாலச் சிறந்ததாகும். நாம் நன்மை அடையவேண்டும் என்கிற எண்ணத்தை விட உலகமெல்லாம் நன்மை அடையட்டும் என்கிற எண்ணம் மிக மேலானது. இத்தகைய பரந்த எண்ணம் கொள்கிறவர்களுக்கே ஆத்மபரிபாகம் விரைவில் வந்தமைகிறது.

கேள்வி: *(762)* நம் சாஸ்திரம் இறந்துபோன முன்னோர் களுக்குப் பிதிர்க்கடன் செய்யவேண்டுமென்றும் அதுவும் உத்தமமான பிராமணர்களுக்குத் தானம் கொடுக்கவேண்டு மென்றும் பகர்கிறது. அப்படிப்பட்ட பிராமணர்கள் இக் காலத்தில் கிடைப்பது அரிதாக இருக்கிறது. கிருஹஸ்தன் சிரார்த்தம் முதலிய பிதிர்க்கடன் செய்யக் கடமைப் பட்டவனா? அதை எவ்விதம் செய்தல் நலம்?

பதில்: காலஞ்சென்ற முன்னோர்களுக்குப் பிதிர்க்கடன் செய்வது என்பதும் சிரார்த்தம் செய்வது என்பதும் அலாதியாக ஹிந்துக்களுக்கு அமைந்த செயல் அல்ல. ஒருவிதத்தில் உலக மக்கள் அனைவரிடத்திலுமே இந்தச் செயல் வெவ்வேறு வடி வெடுத்து இருந்து வருகிறது. சிரார்த்தம் செய்கின்றபொழுது நல்லவர்கள் பலருக்குத் தானம் கொடுக்கவேண்டும் என்பதுதான் அடிப்படைக் கோட்பாடு. பொதுவாகப் பிராமணர்கள் நல்ல வர்கள் என்கின்ற கோட்பாட்டை அடிப்படையாக வைத்துக் கொண்டு அவர்களுக்குத் தானம் செய்யவேண்டும் என்கின்ற ஐதிகம் வந்துள்ளது. இக்காலத்திய மனிதர்களுக்கு அத்தகைய நம்பிக்கை பொருந்தாது என்றால் யாரை நல்லவர்கள் என்று தாங்கள் நினைக்கிறார்களோ அவர்களுக்குத் தானம் பண்ண லாம். ஆனால் நல்லாரில் பலர் இத்தகைய தானத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அந்த நெருக்கடியில் என்ன செய்வது என்கின்ற கேள்வியும் எழக்கூடும். சிரார்த்தம் செய்கின்றவர்கள் தங்களுடைய முன்னோரின் நலத்தை எண்ணி ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்யலாம். காலஞ்சென்ற

ஒரு புண்ணியாத்மாவின் பொருட்டுத் தங்களுக்கு உணவு கிடைத்ததாக எண்ணி அத்தனை பேரும் திருப்தியடைகின்றனர். அப்படிப் பலர் அடைகின்ற திருப்தியானது காலஞ்சென்றவர்கள் எவ்வுலகில் எந்த நிலையில் இருந்தாலும் அவர்களுக்கு மனச்சாந்தியை உண்டுபண்ணுகிறது. அலைகள் எல்லாம் ஒரே கடலில் சம்பந்தப்பட்டிருப்பது போன்று வெவ்வேறு மனிதர் எண்ணுகின்ற எண்ணங்கள் எல்லாம் விராட் சொரூபமாக இருக்கிற மனதோடு சம்பந்தப்பட்டவைகள். ஆதலால் சிரார்த் தத்தின் மூலம் காலம் சென்றவர்களைக் குறித்து மற்றவர் எண்ணுகிற நல்லெண்ணம் அவர்களுக்குச் சாந்தியடைதற்குத் துணைபுரிகிறது. எனவே ஊக்கத்துடனும் நல்லெண்ணத்துடனும் அவரவருக்குத் தோன்றுகிற முறையில் சிரார்த்தச் சடங்கைச் செய்துவருவது அவசியமாகும்.

கேள்வி: *(763)* இந்தக் காலத்திலுள்ள மடாதிபதிகளுள் சிலர் குறிப்பிட்ட காலங்களில் கனகாபிஷேகம் செய்து கொள்கின்றனர். ஆலய வழிபாடு செய்கின்றவர்களில் சிலர் சுவர்ண புஷ்பத்தைக் கொண்டு இறைவனுக்கு அர்ச்சனை செய்கின்றனர். தங்கக் காசுகளைக் கொண்டு அபிஷேகம் செய்வதும் தேவ ஆராதனை செய்வதும் எவ்விதத்தில் சமய அனுஷ்டானத்துக்கு உறுதி தருகின்றன என்று விளக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

பதில்: உபநிஷதங்களில் பரமஹம்ஸோபநிஷதம் என்ற ஒன்று உண்டு. அதில் பரமஹம்சர் என்பவர் யார் என்னும் கேள்விக்கு விடை கிடைக்கிறது. தீவிரமான பரஞானத்தை அடையப் பெற்றவர் பரமஹம்சர். அத்தகையவருடைய மேனி யின்மீது தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள் தீண்டுவதற்கு அவருடைய மேனியே இடந்தராது. ஓடுபோன்ற உலோகங்கள் அல்லாத பொருள்களைத்தான் அவர் கையாள முடியும் என்று பகரப்பட்டிருக்கிறது. இனி, மன அமைப்பிலோ மண் ணையும், பொன்னையும் ஒன்றாகக் கருதிப் பொன்னில் சிறிதேனும் பற்று வைக்காத மனநிலை பரமஹம்சருக்கு வந்து விடுகிறது என்றும் பகரப்பட்டிருக்கிறது. இக்கோட்பாடு யுக்திக்கு முற்றிலும் பொருத்தமானது. ஒவ்வொரு மனிதனுக்கும்

அவனவனுடைய மனநிலைக்கு ஏற்ப ஸ்தூல உடல் மாறி யமைகிறது. நிறைஞானி ஒருவர் யாண்டும் ஆத்மசொரூபத்தி லேயே திளைத்திருக்கிறார். இப்பிரபஞ்ச சம்பந்தமான உணர்வு ஏதும் அவருடைய உள்ளத்தில் உண்டாவதில்லை. உடலும் அதற்கேற்ற தூய நிலையை அடைந்துவிடுகிறது. இனி, இதற்குப் பிரத்தியட்சப் பிரமாணமாக அமைந்துள்ளவர் என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றிப் பகரலாம். பொன்னைப் போற்றி வருவது இக்காலத்து மக்களுடைய உள்ளத்தில் உருவெடுத்திருக்கும் அதர்மம் ஆகும். அந்த அதர்மத்தை தம்மிடத்திருந்து அகற்றுதற்கென்றே அவர் வாழ்ந்திருந்தார் அவர் செய்த சாதனங்களில் ஒன்று காசைத் தொடுவதில்லை, அதை மனதில் நாடுவதில்லை என்பதாகும். அப்படி அவர் ஆழ்ந்து சங்கல்பித்தார். அந்தச் சங்கல்பத்துக்கு ஏற்ப அவருடைய உடலமைப்பே புதியதாக மாறிவிட்டது. மறந்தும் அவர் மேனியின் மீது பொன்னோ, வெள்ளியோ, தாமிரமோ படிய முடியாது. தேள் கொட்டுவதுபோன்று அப்பொழுது அவர் உணர்வார். ஒரு மனிதனுக்கு அல்லது ஒரு இயக்கத்துக்குப் பொருள் பெருகுமளவு அருள் தானாக மறைந்துபட்டுப்போம். இது சமயக் கோட்பாடுகளுள் மிக முக்கியமானது. இதைத் தெளிவுபட விளக்கிக் காட்டியவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். பிறகு அவருடைய இயக்கத்தில் பொருள் கையாளப்படுகிறது. அதில் மக்கள் ஒரு சிறப்பைக் காணலாம். பொதுமக்களிடத்திருந்து வருகிற ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு வைத்து அப்பொருளையெல்லாம் பொதுமக்கள் நலத்துக்கென்றே அவ்வியக்கம் பயன்படுத்தி வருகின்றது. ஒரு அரசாங்கமே அத்தகைய நடுநிலையிலிருந்து எல்லா மக்களுக்கும் எல்லாச் சமயத்தவருக்கும் எல்லா இனத்தவர்களுக்கும் பொதுவாகப் பணத்தைச் செலவழிக்க முடியாது என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இயக்கம் நிரூபித்து வருகிறது.

இனி, மடாதிபதிகள் கனகாபிஷேகம் செய்துகொள்வது மிகமிகக் கடைத்தரமான செயல் ஆகும். விவேகிகள் அத்தகைய செயலினிடத்து அருவருப்புக் கொள்ளுவர். சமய உணர்வை வளர்ப்பதற்கு அது ஒருபொழுதும் உதவாது. சமயத்தின் பெயரால் பொருளைச் சேகரிப்பதற்கான லெளகீக புத்தியையே அது

வளர்த்து வரும். இத்தகைய செயலில் நம்பிக்கை வைக்கிற மடாதிபதிகள் நாட்டுக்கோ சமய வளர்ச்சிக்கோ ஒருநாளும் பயன்படமாட்டார்கள். ஆலயங்களில் சொர்ண புஷ்பார்ச்சனையைப் புகுத்தியவர்கள் புரோகிதர்கள். சமயத்தின் பெயரால் மக்களிடத்திருக்கும் பொருளைப் பறிப்பதற்கு விதவிதமான உபாயங்களைக் கையாளுதலில் தேர்ச்சி பெற்றவர்கள் புரோகிதர்கள். சமுதாயத்துக்கும், சமய வளர்ச்சிக்கும் ஆதரவுதர ஆர்வம் கொண்டிருப்பவர்கள் இத்தகைய புரோகிதத் தந்திரத்துக்கு ஆதரவு கொடுக்கலாகாது. எனவே, சமய உணர்வும் சமய வளர்ச்சியும் வேறு; அதன் பெயரால் மக்களிடத்திருந்து பொருளைப் பறிக்கும் செயல் வேறு. இதைப் பொதுமக்கள் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்களாக.

கேள்வி: *(764)* ஸ்ரீ ராமகிருஷ்ணர் கறுப்புப் பூனையை வெட்டி அதன் தலையை ஆசனம் அமைத்ததாக தந்தர சாதனத்தில் சொல்லப்படுகிறது. "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி தின்னுயிர் நீக்கும் வினை" என உள்ள அறநூலுக்கு இது முரண்படுகிறது. இதனை விளக்குக.

பதில்: ஸ்ரீ ராமகிருஷ்ணர் புரிந்த தந்தர சாதனத்துக்குத் தகுந்த ஆசனம் ஒரு ஸ்மசானத்தில் ஒரு வில்வ மரத்தடியில் அமைக்கப்பட்டது. தந்தர சாஸ்திரப் பிரகாரம் அந்த ஆசனத்தின் கீழ் பூமிக்குள் கரும்பூனையின் தலை, கருங்குரங்கின் தலை, அகால மரணமடைந்த மனிதன் தலை போன்ற பல பொருள்கள் புதைக்கப்பட்டன. அவைகளையெல்லாம் தந்தர சாஸ்திரம் சொல்லியுள்ளபடி அமைக்காவிட்டால் ஆசனம் சரியாக அமைக்கப்பட்டதாகாது. ஆசனம் சரியாக அமையப் பெறாவிடில் அதன்மீது புரிகின்ற சாதனமும் சித்தியாகாது. எனவே அந்த சாஸ்திரம் சொல்லியுள்ள பிரகாரம் உயிர்வகைகளின் தலைகளை வாங்கத்தான் வேண்டும். இன்னும் தந்தர பூஜையில் ஆடுபோன்ற உயிர்வகைகளைப் பலிகொடுப்பதற்கும் இடமுண்டு. உயிர்களைப் பலிகொடுத்து அத்தகைய பூஜை செய்ய விரும்பாதவர்கள் அதை ஒதுக்கி வைத்துவிடலாம். ஆனால் அந்தப் பூஜையில் விளைகிற அதிசயச் செயல்களையும், காட்சிகளையும் காணவிரும்புகின்றவர்கள் உயிர்களைப்

பலிகொடுக்கத் தயங்கலாகாது. தந்தர சாஸ்திர பூஜை முறைகளில் இன்னும் உயர்ந்த படி ஒன்று உண்டு. சாதகன் தன்னையே பலிகொடுக்க முன்வரும் பகுதி அதில் இருக்கிறது. அதை அவன் முறைதவறிச் செய்தால் அவனுக்கு உயிர் போய்விடும். முறையுடன் செய்தால் அவனிடத்துள்ள பாப புருஷன் என்னும் அக்ஞான இருள்தான் கொல்லப்படுகிறது. சாதகன் அம்பிகையின் அருளுக்குரிய ஞானியாகப் புதிய பிறவி எடுத்துவிடுகிறான். அக்கோட்பாட்டின்படியும், பழைய மனிதன் கொல்லப்பட்டவன் ஆகிறான். தந்தர சாஸ்திர விதிப்படி சாதகன் தன்னையும் பலிகொடுக்க ஆயத்தமாயிருக்கிறான். சாஸ்திர விதிப்படி மற்ற உயிர்களையும் பலிகொடுக்க ஆயத்தமாயிருக்கிறான். தன்னுயிர் வேறு, மன்னுயிர் வேறு என்கின்ற வேற்றுமை அவனுக்குக் கிடையாது. தான் உட்பட எல்லா உயிர்களையும் ஒரே தரத்தில் வைத்துத் தேவிக்கு அவைகளைப் படைக்க முயலுகின்றவனுக்குப் பாபம் கிடையாது. அத்தகைய மனநிலையை அடையப் பெறாதவர்கள் அந்தச் சாதனத்தில் ஈடுபடவேண்டியதில்லை.

இனி, சாந்த முறையில் தெய்வ வழிபாடு செய்கிறவிடத்தும் மனிதன் தன்னையே பலிகொடுப்பதற்கு இடமுண்டு. ஒரு தேவாலயத்தினுள் நுழைந்தவுடனே வழிபடுபவனுடைய காட்சிக்கு முதலில் வருவது பலிபீடம். அந்தப் பலிபீடத்தில் அவன் வீழ்ந்து நமஸ்கரித்து சிற்றியல்போடு கூடிய தன்னைப் பலிகொடுத்துவிட்டதாக உணரவேண்டும். தெய்வப்பெற்றி வாய்ந்த புதுமனிதன் ஆகி அவன் எழுந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் கடவுள் வழிபாட்டுக்கு அவன் முற்றிலும் தகுதியுடையவன் ஆகிறான். எந்த விதத்திலும் ஆத்மசாதகன் தன்னைத் தெய்வத்திற்குப் பலிகொடுத்தாக வேண்டும். அப்பொழுதுதான் ஜீவபோதம் அழிந்துபோய்ச் சிவபோதம் தலையெடுக்கிறது. உயிரில் வாஞ்சை வைத்திருப்பவனுக்கு உயரிய நிலை கிட்டாது. தன்னுயிரையே பலிகொடுக்க முன்வருகின்றவன் மற்ற உயிர்களையும் சாஸ்திர விதிப்படி பலிகொடுத்தால் அது குற்றமாகாது என்று தந்தர சாஸ்திரம் சொல்கின்றது. அப்படித் தந்தர சாஸ்திரம் சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற கட்டாயம் இல்லை. ஸ்ரீராமகிருஷ்ணர் அந்தச் சாதனங்களைச் செய்தார். ஆனால்

சுவாமி விவேகானந்தர் போன்ற தம் சிஷ்யர்களை அச்சாதனங்களில் ஈடுபடவேண்டாமென்று தடுத்துவிட்டார். தந்தர சாதனங்களிலும் உண்மையிருக்கிறதென்று நிரூபிப்பதற்குத் தாம் மட்டும் அவையாவையும் செய்து முடித்தார்.

கேள்வி: *(765)* ஆத்மசாதனம் செய்பவர்கள் சாவுகளுக்குப் போவது, வாய்க்கு அரிசி போடுவது, தலையை மொட்டை அடிப்பது இவைகள் சரியா? இவைகளைச் செய்யாவிடில் குற்றம் ஏற்படுமா?

பதில்: ஆத்ம சாதகர்களுள் இருதரத்தார் இருக்கின்றனர். துறவறத்தார் என்றும் இல்லறத்தார் என்றும் அவர்களைப் பாகுபடுத்துகிறோம். உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன் என்பது துறவறத்தார் படைத்திருக்கும் மனநிலை உற்றார் இருக்கும்பொழுதே அவர்களைத் துறவறத்தார் அறவே மறந்து விடுகின்றனர். இருக்கும்பொழுதே இறந்தவர்க்கு ஒப்பாகின்றனர். அப்படித் துறவறத்தில் இருப்பவர்கள் செத்தவர்களைக் குறித்து எந்தவிதமான கிரியையும் செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனால் இல்லறத்தில் இருக்கிறவர்கள் ஆத்ம சாதனம் செய்துகொண்டிருந்தாலும் இறந்துபட்டுப்போம் உற்றார் உறவினரைக் குறித்துச் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் செய்வது முறையாம். உற்றார் என்று உரிமை பாராட்டிக் கொண்டிருந்த பின் செத்தவுடனே அவர்களை மறந்துவிடுவது குற்றமாகும். கிரியைகளெல்லாம் அவர்களுக்குக் கடமைப்பட்டிருப்பதைக் காட்டுவதற்கே அமைந்தவைகள். ஆதலால் அவர்களுக்குக் கிரியைகளைச் செய்யாது விட்டுவிடுவது குற்றமாகும். இனி, அவரவர் ஐதிகத்துக்கு ஒப்பக் கிரியைகளை வேண்டியவாறு மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

கேள்வி: *(766)* பூணூல் தரிப்பதற்குமுன் பூஜை முதலியன செய்யக்கூடாது என்கிறார்கள். அது உண்மையா? செய்தால் பாபமா?

பதில்: மனிதனுக்கு நல்ல சம்ஸ்காரங்கள் செய்து வைப்பது வைதிக வாழ்க்கையின் குறிக்கோள். வாழ்க்கையில் அந்தந்தத் தருணத்துக்கேற்ற சம்ஸ்காரங்கள் இருக்கின்றன. கல்வி கற்கும்

பருவம் வரும்பொழுது ஒரு மாணாக்கனுக்கு உபநயனம் என்னும் சடங்குகள் செய்து வைக்கப்படுகிறது. அதிலிருந்து அந்த மாணாக்கனுக்குக் கட்டுப்பாடான மேலாம் வாழ்க்கை துவங்குகிறது. அத்தகைய நல்வாழ்வுக்குப் புறச்சின்னமாகப் பூணூல் அணியப்படுகிறது. சரியாகக் கடவுள் வழிபாடு செய்யத் தெரிந்து கொண்டவனே தேவ ஆராதனையிலும் பூஜையிலும் ஈடுபட வேண்டும் என்னும் நியமனம் ஏற்பட்டது. வைதிக நெறிக்கு இக்கட்டுப்பாடுகளெல்லாம் முற்றிலும் பொருத்தமானவைகளே. ஆனால் இன்றைக்குச் சமுதாயத்தின் நிலை வைதிகக் கட்டுப்பாடுகளுக்கு முற்றிலும் ஒத்தவைகளாக இல்லை. நல்ல மனபரிபாகமுடையவர்கள் பலர் பூணூல் தரித்தலைத் தங்கள் குலாச்சாரமாக எடுத்துக்கொள்ளாது இருக்கின்றனர். பூணூல் தரித்தலைத் தங்கள் குலாச்சாரமாக வைத்திருப்பவர்களில் பலர் உண்மையில் அந்த உயர்ந்த லட்சியத்துக்குத் தகுந்தவர்களாக இருப்பதில்லை. எனவே இன்றைக்கு உபநயனச் சடங்கு அல்லது பூணூல் தரிப்பதைப் பற்றி அதிகம் கவனம் செலுத்தவேண்டிய அவசியமில்லை. தத்தமக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளையும் வசதிகளையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்திக்கொண்டு கடவுள் வழிபாட்டை உள்ளன்போடும் ஊக்கத்தோடும் செய்து வரலாம். அவரவர்க்குச் சொந்தமாகக் கடவுள் பூஜையையும் வேண்டியவாறு செய்துகொள்ளலாம். ஆனால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பெரிய ஆலயங்களிலெல்லாம் ஆகம விதிப்படியோ, வேத விதிப்படியோ பூஜை செய்யப்போகிறவர்களெல்லாம் உபநயனம் என்னும் சம்ஸ்காரத்தை அடையப்பெற்றவர்களாகவே இருந்தாக வேண்டும்.

இறைவனுடைய அருளைப் பெறுதற்குப் பூணூல் சம்ஸ்காரம் முற்றிலும் அவசியமானதல்ல. நெறியான வாழ்க்கையின் மூலமே மனிதன் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகிறான். புறமதங்களில் பூணூல் சம்ஸ்காரம் இடம் பெறவில்லை. ஆகையினால் அந்தந்த மதங்களைச் சேர்ந்தவர்கள் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகிறது இல்லை என்பது உண்மையல்ல. நமது மனபரிபாகத்தைக் கடவுள் முற்றிலும் அங்கீகரிக்கிறார். புறச்சடங்குகளுக்கு அவர் பெருமதிப்புத் தருவதில்லை.

கேள்வி: *(767)* யாகம் செய்வதால் உலகுக்குத் தனி நன்மை உண்டாகிறது என்று கருதிப் பலர் அதைச் சிறப் பாகச் செய்கின்றனர். கொஞ்சகாலத்துக்கு முன்பு அஷ்ட கிரகங்கள் ஒன்று கூடியபொழுது உலக நன்மைக்காகக் காசியில் பெரிய யாகம் ஒன்று நடாத்தப்பெற்றது. சில வருடங்களுக்கு முன்பு புதுக்கோட்டையில் 'சண்டி யக்ஞம்' என்னும் வேள்வி சிறப்பாக நடைபெற்றது. அதன் பிறகு மதுரையில் மீனாக்ஷி அம்மன்கோயில் கும்பாபிஷேகத்தை ஒட்டி யாகம் ஒன்று நிறைவேறியது. அதைத் தொடர்ந்து திருநெல்வேலியில் சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாவையொட்டி ஒரு சிறிய யாகம் நடாத்தப்பட்டது. இவைகள் மூலம் உலகுக்கு அலாதியான நலன்கள் உண்டாகின்றன எனக் கருதப்படுகிறது. மக்களும் பக்தி விசுவாசத்தோடு இந்த யாகங்களைப் பார்க்கப்போய்க் கூடுகின்றனர். இப்படி நிகழ்கின்ற இந்த யாகங்கள் வாயிலாக உலகுக்கு எப்படி நன்மை உண்டாகின்றது?

பதில்: யாகம், யக்ஞம், ஹோமம், வேள்வி என்னும் சொற்களெல்லாம் ஒரே வைதீகச் சடங்கைக் குறிக்கின்றன. இச்சடங்கு மிகப் பழங்காலத்தில் நம் நாட்டிலே உருவெடுப்ப தாயிற்று. பண்டொரு காலத்தில் ஆலயங்களும், ஆலய வழிபாடு களும் நம் நாட்டில் அமையவில்லை. ஆனால் யாகத்தின் வாயிலாக வழிபாடு செய்வது சரித்திரத்திற்கும் எட்டாத மிகப் பூர்வீகமான பழக்கமாகும். அன்றுமுதல் இன்றுவரை நம் நாட்டின் வழிபாட்டில் அது ஆழ்ந்து இடம்பெற்றிருக்கிறது.

ஆனால் யாகம் செய்வதின் மூலம் நலன்கள் அனைத் தையும் நாம் பெற்றுவிடமுடியாது என்பதை அப்போதைக்கப் போது நம் நாட்டில் தோன்றிவந்துள்ள சமயாச்சாரியர்கள் தெளிவுற விளக்கிக் காட்டியிருக்கின்றனர். புத்தர் காலத்தில் யாகத்தின் பெயரால் எண்ணிறந்த ஆடுகள் பலியிடப்பட்டன. அப்பொருந்தாத செயலை அறவே நிறுத்திவிட அப்பெம்மான் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். அதன் பிறகு நம் நாட்டில் தோன்றிய ஆதிசங்கரர் யாகம் போன்ற கருமம் பண்பட்டுள்ள ஆத்ம சாதகனுக்கு ஒருபொழுதும் பயன்படாது என்பதைத் தெளிவுற விளக்கிக் காட்டினார். ஒரு தத்துவத்தை

விளக்குவதற்கான கிரியையாக யாகம் அமைந்திருக்கிறது. மற்று, தத்துவத்தை அறிந்து கொள்ளாது கிரியையைப் பெரியதாக்கிக் கொண்டு போவதில் நலன் ஒன்றும் விளைந்துவிடாது. வேள் வித்தீயில் எரிந்துபோகின்ற வஸ்துக்கள் வடிவம் மாறியிருந்து இயற்கைக்குப் புதிய முறையில் பயன்படுகின்றன. நவீன பௌதிக விஞ்ஞான முறையில் அதைப் பகர்வோம். குப்பை கூளங்கள் நம்மைச் சுற்றிலும் ஏராளமாகக் குவிந்து கிடக் கின்றன. அவைகளையெல்லாம் தீ மூட்டிப் பொசுக்கிவிட்டால் கரியமிலவாயுவாக மாறிப் புதிதாக வளர்ந்து கொண்டிருக்கிற மரம், செடி, கொடிகளுக்கு உடனே நேரடியாக அது பயன்படு கிறது. பயன்படாது கிடக்கும் குப்பை செத்தைகளைப் பயன் படுத்துவதற்குத் தீ உதவுகிறது. அந்தத் தீயை வேள்வித் தீயாக மாற்றிக்கொள்வதின் மூலம் மனிதன் தன் வாழ்க்கையில் தனக்கும் பிறர்க்கும் பயன்படாத பகுதியைப் பயன்படும்படி மாற்றியமைக்க வேண்டும். அப்படி மாற்றி அமைப்பதற்குத் தீ ஒரு சின்னம் அல்லது அடையாளமாக இருக்கிறது. குப்பை கூளங்களைத் தீயில் ஏராளமாகப் பொசுக்குதற்குப் பதிலாக உண்பதற்குக் கிடைக்காத நெய்யை ஏராளமாகச் சொரிவது பெரிய வேள்வியாகாது. நெய்யைச் சொரிதல் என்னும் செய லைச் சிறிய அளவில் செய்துமுடித்துவிட்டு நெய்க்கு நிகராக இருக்கும் வாழ்க்கையின் சிறந்த பகுதியை மற்றவர்களுக்குப் பயன்படும்படி ஒப்படைக்கவேண்டும். அப்படிச் செய்வது நல்ல யாகமாகிறது. வாழ்க்கையில் சீர்திருத்தமும் முன்னேற்றமும் சிறிதேனும் அமையப்பெறாது இருப்பதற்கிடையில் விலையுயர்ந்த வஸ்துக்களை ஹோமாக்கினியில் பொசுக்கித்தள்ளுவதில் ஒரு பயனும் விளையாது.

எது நல்ல வேள்வி, எது பயனற்றது என்பதைக் காட்டித் தருவதற்கு மகாபாரதத்தில் ஒரு சம்பவம் இருக்கிறது. தர்மராஜா பொருளை ஏராளமாகச் செலவிட்டு ராஜசூய யக்ஞம் நிகழ்த் தினார். அதை ஒப்புயர்வற்ற தியாகம் என்று மக்கள் பாராட்டினார்கள். ஆனால் கீரிப்பிள்ளை ஒன்று அது உயர்ந்த யக்ஞம் அல்ல என்று மறுத்தது. மற்றவர்கள் கேட்டபொழுது தக்க விளக்கத்தையும் அக்கீரிப்பிள்ளை கொடுத்தது. அதன் உடலில் ஒருபகுதி பொன்னிறமாய் இருந்தது. மற்ற பகுதி

அதற்கென்று அமைந்திருந்த சாம்பல் நிறமாயிருந்தது. அதற்குக் காரணத்தை அக்கீரிப்பிள்ளை விளக்கிக்காட்டிற்று. பஞ்சத்தில் பலநாள் பட்டினி கிடந்து சாகப்போகிற நிலையிலிருந்த பொழுதும் தம்மிடம் விருந்தினராக வந்த ஒருவருக்குத் தமது அல்ப ஆகாரத்தை மனமுவந்து படைத்தார் ஆசிரியர் ஒருவர். வந்தவரும் அவ்வுணவை ஏற்று மகிழ்ச்சியடைந்து படைத்தவரை ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார். உணவைப் படைத்த ஆசிரியரோ பட்டினிகிடந்து மடிந்துபோனார். ஆனால் தமது சீரிய மனப் பான்மைக்கு ஏற்ப அவர் பாரமார்த்திகப் பெருநிலை எய்தினார். அன்னவர் உணவு சமைத்தபொழுது கோதுமை மாவில் ஒருசிறிது தவறித் தரையில் விழுந்து கிடந்தது. சமைத்தல் என்னும் யக்ஞத்தில் யக்ஞ சிஷ்டமாக அமைந்தது அந்தச் சிறிய அளவு கோதுமை மாவு. யக்ஞத்தில் எஞ்சியிருந்ததால் அது புனிதமே வடிவெடுத்தது. அதன்மீது அந்தக் கீரிப்பிள்ளை படுத்துப்புரண்டது. மாவின் புனிதத்தை முன்னிட்டுக் கீரிப் பிள்ளையின் உடலில் ஒருபகுதி பொன்னிறமாக மாறிற்று. அதுபோன்ற மற்றொரு யாகத்தைப் பார்க்க அக்கீரிப்பிள்ளை முயன்றது. எங்குமே மற்றொரு புனிதமான வேள்வியை அவ்விலங்கு காணவில்லை. யுதிஷ்டிரருடைய யக்ஞமும் மிக மட்டமானதாயிற்று. ஏனென்றால் கீரிப்பிள்ளையின் உடலில் சீரிய மாறுதலை அது உண்டுபண்ணவில்லை. அந்நிகழ்ச்சி யினின்று உண்மையொன்று வெளியாகிறது. கிரியா விசேஷத் தாலோ அல்லது பொருள் விரயத்தாலோ யக்ஞம் ஒன்று பெரு வேள்வியாகாது. வேள்வி வேட்பவர்களுடைய மனபரிபாகத்தை முன்னிட்டே யாகத்துக்குச் சிறப்பு வருகிறது.

இன்றைக்கு மக்களுடைய மனப்பான்மை முற்றிலும் மாறி யமைய வேண்டும். மக்களில் பெரும்பான்மையோர் சுயநலமே வடிவெடுத்தவர்களாக இருக்கின்றனர். யாகம் செய்வதாகப் புறத்தில் காட்டிக்கொண்டு சுயநலத்தைப் பேணுபவர்களும் பலர் இருக்கின்றனர். தன்னலத் தியாகம் பண்ணுபவர்கள் இன்றைக்கு ஏராளமாக வேண்டும். தியாகமும் திருத்தொண்டும் இக்காலத்தில் நம் தேசத்துக்குத் தேவை என்று சுவாமி விவேகானந்தர் வற்புறுத்திக் கூறியுள்ளார். தெய்வப்பற்றே தியாகம் என்னும் பேர் பெறுகிறது. சுயநலத்தை ஒதுக்கிவிட்டுப்

பிறர் நலனுக்காக வாழ்ந்திருப்பதே திருத்தொண்டு ஆகிறது. இந்த விதத்தில் வாழ்க்கையைத் திருத்தி அமைக்காது தீ மூட்டித் திரவியங்களைச் சேதப்படுத்துவதில் நலன் ஒன்றும் விளைந்துவிடாது. யாகங்களுள் மகாயக்ஞமாக இருப்பது மனம் மேலானதாகவும் தூயதாகவும் மாறியமையப் பெறுவதேயாம். மனமாற்றம் என்னும் வேள்வி இன்றைக்கு நமக்குத் தேவையாய் இருக்கிறது.

கேள்வி: *(768)* ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடுவர்களுக்கு மதசம்பந்தமான சடங்குகளும், குறிகளும் முற்றிலும் அவசியமா?

பதில்? ஆத்மீக வாழ்வில் ஈடுபடுகிறவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படைக் கோட்பாடு ஒன்று உளது. மனிதன் ஆத்ம சொரூபம்; அவன் உடல் சொரூபம் அல்லன். உடலுக்கு அழிவுண்டு; ஆத்மாவுக்கு அழிவில்லை. எங்கும் நிறைபொருளாகிய கடவுள் நம் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறார். இது அடிப்படைத் தத்துவம். இதற்கு உட்பட்டு வாழ்வது ஆத்மீக வாழ்வு ஆகும்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது மத சம்பந்தமான சடங்கு ஆகும். ஆலயத்துக்குச் செல்லும் முன்பு நீராடுதல், தூய உடையணிதல் போன்ற செயல்களும் மதச் சடங்குகளாகின்றன. நெற்றியிலே திருநீறு, திருமண், குங்குமம் போன்றவைகளை முறையாக அணிந்துகொள்ளுதல் சமய அனுஷ்டான சம்பந்தமான குறிகளாகின்றன. இத்தகைய நல்ல சடங்குகளையும், குறிகளையும் நாம் யாண்டும் அனுஷ்டிப்பது முற்றிலும் அவசியம்.

பயிர் பண்ணுகிறவர்கள் வேலிகட்டுவது அவசியமா என்னும் கேள்வியைக் கேட்கமாட்டார்கள். ஏனென்றால் வேலி கட்டுவது அவசியம் என்பது அவர்களுக்குத் தெரியும். வேலி கட்டா விட்டால் ஆடு மாடுகளும், மக்களும் மிதித்துப் பயிர்களைப் பாழ்படுத்தி விடுவார்கள். மத சம்பந்தமான சடங்குகளும் குறிகளும் வேலிகட்டுவதற்கு நிகராகின்றன. சடங்குகளில் ஈடுபடும் பொழுது மனது தானாகத் தெய்வீக உணர்ச்சியை வளர்க்கிறது. குறிகளை அணிந்திருப்பதைப் பார்க்கும்பொழுதெல்லாம்

தெய்வீக உணர்ச்சி உள்ளத்தில் உருவெடுக்கிறது. சடங்குகளும் சின்னங்களும் ஆரம்பதசையிலிருக்கும் ஆத்ம சாதகர்களுக்கு முற்றிலும் அவசியமானவைகள். பழங்கள் போன்று தென்படும் போலிப் பழங்களைக் களிமண்ணில் செய்து, சாயம்பூசி பழம் போன்ற தோற்றத்தை அமைக்கிறோம். அப்படிக் களிமண்ணால் செய்த பழத்தைப் பார்க்கிறபொழுதெல்லாம் உண்மையான பழத்தின் எண்ணம் உள்ளத்தில் உதிக்கிறது. அங்ஙனம் சடங்குகளும் சின்னங்களும் இடையறாது இறைவனுடைய எண்ணத்தை உள்ளத்தில் வளர்த்து வருகின்றன. ஆராய்ச்சி பண்ணிப்பார்த்தால் உண்மையொன்று புலனாகும். எந்த மதத்தில் சடங்குகளும் சின்னங்களும் கிரியா விசேஷங்களும் குறிகளும் ஏராளமாகக் கையாளப்படுகின்றனவோ அந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் படிப்படியாக மேல்நிலை எய்துகின்றனர். இச்சடங்குகள் பொருளற்றவைகளென்று புறக்கணிக்கின்றவர் களுக்கு இடையில் ஆத்மீக வாழ்க்கையில் முன்னேற்றம் அரிதிலும் அரிதாகிறது. வளருகிற பயிர்க்கு நீர் பாய்ச்சுதல், எருவிடுதல் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானவை களாக மதச் சடங்குகளும், குறிகளும் ஆத்மீக வாழ்வில் இடம்பெறுகின்றன. ஆதலால் ஊக்கத்தோடு அச்சடங்குகளை அனுஷ்டிப்பது அவசியமாம். முற்றிலும் மேல்நிலைக்கு வந்திருப் பவர்களுக்குச் சடங்கு ஒன்றும் அவசியமில்லை. ஆயினும் மற்றவர்களுக்கு முன் மாதிரியாயிருத்தல் பொருட்டு அவர்களும் சடங்குகளை அனுஷ்டித்து வருகின்றனர்.

கேள்வி: *(769)* இறந்தவர் உடலை எரித்துச் சாம்பலாக்கி அதனைத் தண்ணீரில் கரைக்கின்றனர். அதன் பொருள் என்ன?

பதில்: இறந்தவர்கள் உடலை ஏதேனும் ஒருவிதத்தில் ஒதுக்கித் தள்ளியாக வேண்டும். உலகில் எல்லாச் சமுதாயங் களிலும் இது நிகழ்ந்து வருகிறது. விறகும் தண்ணீரும் ஏராளமாய்ப் படைத்துள்ள நம் நாட்டில் சவத்தைச் சாம்பலாக்கி அதை நீரில் கரைப்பது மிக எளிது. ஆதலால் அச்செயலை நாம் செய்து வருகிறோம். வேறு சிலர் சவத்தை மண்ணினுள் புதைக்கின்றனர். எரிப்பதற்கு அடுத்த இடம் பெறுகிறது அது.

தண்ணீர் ஏராளமாய் இருக்குமிடங்களில் சவத்தைக் கல்லில் கட்டி நீரில் போட்டு விடுகின்றனர். அது மூன்றாவது இடம் பெறுகிறது. வேறு ஒருசிலர் சவத்தைக் காற்றில் உலர்த்திக் கழுகுக்கு இரையாகும்படி விட்டு விடுகின்றனர். இங்ஙனம் ஏதேனுமொரு பாங்கில் சவத்தைத் துடைத்துத் தள்ளியாக வேண்டும். ஆத்மா பிரிந்தான பிறகு சவத்தை ஏதேனும் ஒரு முறையில் அழித்துத் தள்ளுவது அவசியமாகிறது. இத்தனைவித முறைகளுள் தகனம் பண்ணுவதே சாலச்சிறந்தது எனக் கருதப் படுகிறது. எகிப்து தேசத்தில் சவத்தைப் பாதுகாத்து வைக்குமளவு அதனுள் வாழ்ந்திருந்த ஆத்மா இன்புற்று இருக்கிறது என்னும் கொள்கையொன்று ஒருகாலத்தில் இடம் பெற்றிருந்தது. ஆதலால் அரிய ஔஷதங்களைக்கொண்டு, சவத்தை நெடுங்காலம் பாதுகாத்து வைக்கும் முறையை அன்னவர்கள் கையாண்டனர். ஆனால் அது தத்துவத்துக்குப் பொருந்தாத கொள்கை. உலகி லுள்ள சவங்களையெல்லாம் அங்ஙனம் பாதுகாத்து வைத்தால், சமுதாயம் முழுதும் சவம் மயமாகப் போய்விடும். அதை ஏதேனும் ஒருவிதத்தில் பூதங்களுக்கு இரையாக்குவதே பொருத்த மான செயலாகிறது. வடிவெடுத்துள்ளது ஒன்று ஒருகாலத்தில் வடிவத்தை இழந்தாக வேண்டும் என்பது நியதி. அதுதான் உலகில் நிகழ்ந்து வருகிறது.

கேள்வி: *(770)* காலஞ்சென்ற பெற்றோர்களுக்கு ஆண் சந்ததி இல்லாது போனால் பெண் சந்ததி ஈமக்கிரியை, சிரார்த்தம் முதலியன செய்யலாமா?

பதில்: இதுகாறும் நம் நாட்டில் ஐதிகமாக வந்துள்ள ஈமக்கிரியைகள், சிரார்த்த சடங்குகள் முதலியவற்றை ஆண் பாலரே செய்து வந்தனர். காலம் சென்ற ஒருவனுக்குச் சொந்த ஆண்மகப்பேறு இல்லாவிட்டால் அவனுக்குச் சொந்தமா யுள்ள தாயாதிகளுள் ஆண்பாலர் அக்கடமையைச் செய்து வந்தனர். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் சிலர்க்குப் பொருத்தமான தாயாதிகள் அமைவதில்லை. அப்படி அமையாத விடத்துக் காலஞ்சென்ற தாய் தந்தையரிடத்துப் பற்றுதல் வைத்துள்ள பெண்பாலர் ஈமக்கிரியைகளையும் சிரார்த்தக் கடமைகளையும் செய்வது சாலச்சிறந்தது. வழக்கத்தில்

இல்லாதது எதையும் புதியதாக வழக்கத்தில் கொண்டு வரலாகாது என்னும் மனப்பான்மை பாராட்டத்தக்கதன்று. பழையன கழிதல், புதியன புகுதல் இயற்கையின் பாங்கு ஆகும். இன்றைக்குப் பெண்பாலர் பல துறைகளில் புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆகாய விமானம் ஓட்டுவது, விண்வெளியில் சென்று ஆராய்ச்சி பண்ணுவது, போலீஸ் உத்தியோகம் பண்ணுவது, நீதிமன்ற உத்தியோகம் பண்ணுவது, படையெடுத்துச் சண்டைக்குப் போவது பெண்பாலர்க்குச் சாத்தியமென்றால், அத்தகைய நிகழ்ச்சிகள் இன்றைக்கு வெற்றிகரமாக நிறைவேறி வருகிறதென்றால் நிச்சயமாகவே ஈமக்கிரியைகளிலும் சிரார்த்தங்களிலும் தேவை ஏற்பட்டால் அவர்கள் அத்தகைய செயல்களை நிறைவேற்றி வைக்கலாம். ஐதிகமாக வந்துள்ள கிரியைகள் சிலவற்றை மாற்றியமைப்பதில் குறை ஏதுமில்லை. திருஷ்டாந்தமாகக் காலஞ்சென்றவர்களின் அஸ்தியை எடுத்துக் கொண்டு காசி, இராமேஸ்வரம் போய் ஆங்குச் சிரார்த்தங்களை நிறைவேற்றுவது ஐதிகமாக இருந்து வருகிறது. பெண்பாலர் அத்தகைய நெடுந்தூரப் பயணம் போவது இடைஞ்சல் என்றால் அப்படிப் போகாமலேயே அருகிலுள்ள ஒரு நதிக்கரையில் தங்கள் வசதிக்கும் மனப்பான்மைக்கும் ஏற்ப மிகச் சுருக்கமாக அச்சடங்கை செய்து முடிக்கலாம். செயலிலும் மிக்கது காலஞ் சென்றவர்களிடம் வைத்திருக்கும் தீவிர அன்பாம். அத்தகைய அன்பை உறுதிப்படுத்துதற்குத் தங்களுக்குத் தோன்றியபடி கிரியைகளை மாற்றியமைப்பதில் ஒருபொழுதும் தோஷமில்லை. எனவே பெண்பாலர்க்கு அத்தகைய நெருக்கடி நேருங்கால் தங்கள் பாங்குக்கேற்பப் பெற்றோர்க்குச் சிரார்த்தத்தைப் புரோகிதர் துணையின்றியே தங்கள்போக்கில் செய்து முடிக்கலாம். நலனே அதன் விளைவாகும்.

கேள்வி: *(771)* உத்தராயணம், மஹா சங்கராந்தி போன்று எல்லா விழாக்களையும் அறிவியல் பூர்வமாக விளக்க இயலுமா?

பதில்: விழாக்களில் பெரும்பான்மை காலதேச நிமித்தத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கின்றன. காலத்தை அனுசரித்து வரும் விழாக்கள் சில உள்ளன. உத்தராயணப்

புண்ணியகாலம், சங்கராந்தி ஆகியவை காலத்தில் வரும் மாறுதலை முன்னிட்டாம். அதேவிதத்தில் நவராத்திரி விழா அல்லது சக்தி வழிபாடு மழை பெய்து ஓய்ந்த பிறகு சரத் காலத்தில் வருகிறது. மஹா சிவராத்திரி குளிர்காலம் முடிந்து இளவேனிற்காலம் துவங்குகிறபொழுது வருகிறது. ஆக, இவைபோன்ற விழாக்கள் காலத்தை அனுசரித்து வருபவை களாம். ஸ்ரீராம நவமி, கிருஷ்ணாஷ்டமி ஆகியவைகள் நிமித்தத்தை அடிப்படையாகக் கொண்டவைகள். பெருமக்களின் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டவைகள். துலாஸ்நானம், கங்கா ஸாகர ஸ்நானம், கும்பமேளா முதலிய விழாக்கள் இடத்தை அடிப்படையாகக்கொண்டு அமைந்தவைகளாம். ஆகவே, நாம் அனுஷ்டித்து வரும் விழாக்களில் பெரும்பான்மை காலத்தையும், இடத்தையும் நிமித்தத்தையும் அடிப்படையாகக் கொண்டவைகளாம்.

கேள்வி: *(772)* வைணவர்களின் நாமம், சைவர்களின் திருநீறு இவற்றின் கருத்தென்ன?

பதில்: வைஷ்ணவர்கள் போடும் நாமத்துக்குத் திருமண் அணிதல் என்று பெயர். சைவர்கள் பூசும் திருநீறும் வைஷ்ண வர்கள் அணியும் திருமண்ணும் லட்சியத்தில் ஒன்று. நீறு என்பது சாம்பல். நிலையற்ற உடல் ஒருநாள் சாம்பலாகப் போகும் அல்லது மண்ணோடு மண்ணாகும் என்னும் கோட் பாட்டை இந்த இரண்டு சின்னங்களும் விளக்குகின்றன. உயிரினும் மிக்கது உடலிலே உறையும் ஆத்மா. இந்த ஆத் மனைப் பரமனுக்கு உரியதாக்க வேண்டுமென்பது சமயங்களின் குறிக்கோள். ஆத்ம சாதகன் இந்தக் குறிக்கோளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சின்னத்துக்கு முதன்மை தந்து மத வேற்றுமையையும் வெறுப்பையும் வளர்க்கலாகாது. மதங்கள் பலப்பல இருப்பது அவசியம். தனக்கு விருப்பமான சின்னத்தைப் பயன்படுத்தி ஆத்ம சாதகன் பக்தியை வளர்க்க வேண்டும்.

கேள்வி: *(773)* விரதங்களை அனுஷ்டிப்பதின் பயன் என்ன?

பதில்: மானுடன் ஒருவன் நன்கு கடைப்பிடிப்பதாகக்

கொண்டுள்ள மேலாம் தீர்மானத்திற்கு விரதம் என்று பெயர்.

"எண்ணிய எண்ணியாங் (கு) எய்துப எண்ணியார்
திண்ணியர். ஆகப் பெறின்"

என்பது பொய்யாமொழி. வாரத்தின் ஒருநாள் காலையில் உணவு உண்ணாதிருந்து தீவிரமாகக் கடவுள் வழிபாடு செய்து விட்டு நண்பகலில் மட்டும்தான் உணவு அருந்துவேன் என்னும் நல்ல தீர்மானம் ஒரு விரதமாகிறது. இந்த விரதத்தை முறை யாகக் கையாண்டு வருபவன் உறுதியான உள்ளம் படைத்த வனாகத் திருந்தியமைவதைத் தானே கண்டுகொள்வான். ஆகவே நல்ல விரதம் ஒன்று எடுத்துக்கொள்வதும் அதை முறையாகக் கையாண்டு வருவதும் மனிதனுடைய முன்னேற்றத்திற்கு இன்றியமையாத கோட்பாடாம். ✪

58. தேசியம்

கேள்வி: *(774)* நமது பண்பாடு நமது நாட்டிற்கு மட்டும் பொருந்தியதா?

பதில்: பண்பாட்டில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒரு பகுதி லோகாசாரம் எனப் பெயர் பெறுகிறது. அடுத்த பகுதி வாழ்க்கைக் கோட்பாடு எனப் பெயர்பெறுகிறது. லோகா சாரம் அல்லது அந்தந்தத் தேசத்துக்குரிய பழக்கவழக்கங்கள் ஒன்றோடொன்று ஒவ்வாதிருப்பது இயல்பு. சான்றுகள் சில எடுத்துக்கொள்வோம். காலில் அணிந்திருக்கும் பாதரட்சையை வெளியே விட்டுவிட்டு வீட்டுக்குள் போவது நம் நாட்டுத் தேசாச்சாரம். பாதரட்சையோடு வீட்டுக்குள் போவது மேல் நாட்டுத் தேசாச்சாரம். எச்சில்பட்ட உணவை மற்றவர்களுக்கு வழங்காதிருப்பது நம் நாட்டுத் தேசாச்சாரம். எச்சிலைப் பொருள் படுத்தாது ஒருவன் கடித்த கனியைப் பலபேர் மாற்றிமாற்றிக் கடித்துத் தின்னுவது வேறு சில நாட்டவருடைய பழக்கவழக்கம். இங்ஙனம் தேசாச்சாரத்தில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பாங்கில் ஈடுபட்டிருப்பது வெளிப்படை. எனவே தேசாச்சாரம் என்ற பண்பாட்டில் நாட்டுக்கு நாடு வேறுபட்டிருப்பதில் குறை ஏதுமில்லை.

விருந்து என்னும் சொல் 'அழைப்புக்கு இணங்கி வருவது' என இக்காலத்தில் பொருள்படுகிறது. முன்காலத்தில் முன்பின் அறியாத வேற்றான் ஒருவன் வந்தால் அவனை அன்போடு வரவேற்று உபசரிப்பது நம் நாட்டுப் பண்பு ஆகும். அப்பண்பில் ஒரு பகுதிதான் இன்றைக்கு எஞ்சியிருக்கிறது. உலகில் பல நாடுகளில் வேற்றானைக் கண்ணெடுத்துப் பார்க்காது இருப்பது குற்றமாகாது. ஆனால் நம் நாட்டுக்குரிய மேலான பண்பாகிய

'விருந்து ஓம்பல்' என்னும் கோட்பாட்டை உலக முழுவதும் ஏற்றுக்கொள்வது பொருந்தும். உயிரோடு உயிர் நல்லிணக்கம் வைப்பது எல்லார்க்கும் பொதுவானது. புதிதாக வந்துள்ள வேற்றான் ஒருவனுக்கு வேண்டியவாறு சலுகைகள் காட்டி அவனை உபசரிப்பது தூய அன்பின் அறிகுறியாம். இது நம் சிறப்பான பண்டை ஒழுக்கம் எனினும் இதை இக்காலத்தில் எல்லா நாடுகளிலும் பரப்புவது பொருந்தும்.

"மோப்பக் குழையும் அனிச்சம்: முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

அனிச்சப் பூ மோந்தவுடன் வாடிவிடும். அதுபோன்று விருந்தினர்களை முகங்கோணிப் பார்த்தாலே அவர்கள் வாடி நிற்பார்கள் என்பது இக்குறளின் கருத்தாகும். இது நம் நாட்டுப் பண்பு. இந்தப் பண்பை எல்லா நாடுகளும் பின்பற்றலாம். இது எல்லா நாட்டுக்கும் பொருந்தும். நம்மைத் தேடிவந்தவர்களை இன்முகத்தோடும் உள்ளன்போடும் உபசரிக்காவிட்டால் அவர்கள் துன்பப்படுவார்கள்.

கேள்வி: *(775)* நம் தேசியப்பண்பு கீழ்நிலை அடையக் காரணம் என்ன?

பதில்: ஒரு நாட்டின் பண்பு காலமெல்லாம் ஒரே பாங்கில் இருப்பதில்லை. உடைமையும், வறுமையும் ஒருவழி நில்லா என்பது இயற்கையைப் பற்றிய கோட்பாடு. ஒரு வருஷத்தில் பருவங்கள் மாறி மாறி அமைந்து வருகின்றன. சில பருவங்கள் நலனையும் மகிழ்ச்சியையும் தருவனவாக இருக்கின்றன. வேறு சில பருவங்கள் இடைஞ்சல்களாகவும், துன்பத்தை விளைவிப்பனவாகவும் இருக்கின்றன. அவைகளை அமைகிற பாங்கில் ஏற்றுக்கொண்டு சமாளிப்பது நம்முடைய கடமையாகும். இனி, தனி மனிதனுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவன் யாண்டும் முன்னேற்றமடைந்து வருவதில்லை. சில காலங்களில் ஆக்கமே வடிவெடுத்தவன் ஆகின்றான். வேறு சில காலங்களில் பொருளைப் பெரிதும் இழந்து விடுகின்றான். சில காலங்களில் ஆரோக்கியமே வடிவெடுத்தவனாய் இருக்கிறான். மற்றும் சில காலங்களில் நோய்வாய்ப்பட்டவனாகிறான். இவ்வுண்மைகள்

ஒரு தேசத்திற்குப் பொருந்துகின்றன. நாடு ஒன்று சில காலங்களில் பண்புடன் வாழ்ந்து வருகின்றது; வேறு சில காலங்களில் பண்பில் கீழ்மையுறுகிறது. இயற்கையைப் பற்றித் தவிர்க்க முடியாத நியதி ஆகிறது இது. ஆயினும் கீழ்மையுற்று இருக்கிற காலங்களில் நெறிபிறழாது மக்கள் தாக்குப்பிடித்து வருவார்களானால் அதுவே பாராட்டுதற்குரிய பண்பு ஆகும். ஆக, இயற்கையின் போக்கை அனுசரித்துக் கஷ்ட தசையிலும் நன்னெறி பிறழாதிருப்போமானால் நல்ல காலம் மீண்டும் வரும். இயற்கை நல்குகிற நலன்களுக்கிடையிலும் நல்வழி பிறழாதிருப்பது நம் கடமையாகும். கேட்டின் மூலம் நம் தரம் சோதிக்கப்படுகிறது. ஆகவே, கேடு உண்டான காலத்திலும் நாம் நேர்மையாக இருந்து பழகுவோமானால் ஒருநாளும் நாம் கெட்டுப்போகமாட்டோம்.

கேள்வி: *(776)* நாட்டின் பண்பு அதிவேகம் தாழ்வுற்று வருகிறது. இதற்குக் காரணம் யாது?

பதில்: நாடு மேன்மையுறுவதற்கு அரசியல் துறையில் அது சுதந்திரம் பெற்றிருப்பது முற்றிலும் அவசியம். 1947-ஆம் ஆண்டில் நம்நாடு பிற ஆட்சியினின்று விடுதலை பெற்றுச் சுதந்திர வாழ்வு வாழ்ந்து வருகிறது. அதற்குச் சற்று முன்பு நிகழ்ந்த இரண்டாவது உலகமகா யுத்தத்தில் ஜெர்மனியும், ஜப்பானும் பெரும் நஷ்டத்துக்கு ஆளாயின. அங்ஙனம் அனைத்தையும் இழந்த நிலையில் அந்த நாடுகள் இரண்டும் 1947-ஆம் ஆண்டில் இருந்தன. சுதந்திரம் என்னும் பெரிய வாய்ப்பு வாய்க்கப்பெற்ற நாடாக நம் இந்தியா அதே 1947-இல் அமைவதாயிற்று. முப்பத்து நான்கு வருஷங்களுக்குப் பிறகு இன்றைக்கு ஜெர்மனியும், ஜப்பானும் யாண்டும் மேன்மையுற்று விளங்குகின்றன. பொருளாதாரத்துறையில் அந்த நாடுகள் இரண்டும் தலையாய இடம் பெற்றுள்ளன. அந்நாட்டு மக்கள் மனப்பான்மையில் மேலோங்கியிருக்கின்றனர். அறிவிலும், உழைப்பிலும், அன்னவர்களுக்கு நிகரானவர்களை இன்றைக்கு உலகில் வேறு எங்கும் காணமுடியாது. பிரதிகூலமான சூழ்நிலையை எல்லா விதத்திலும் முன்னேற்றத்துக்கேதுவான சூழ்நிலையாகத் திருத்தியமைத்த பெருமை அந்நாட்டு மக்களுக்கு உண்டு.

எல்லாவிதமான செளபாக்கியத்தோடு கூடியதாக நம் நாடு 1947-ஆம் ஆண்டிலிருந்து சுதந்திர வாழ்வு வாழ்ந்து வருகிறது. அது பரியந்தம் வெளிநாட்டவர்கள் இங்கிருந்து சுரண்டி எடுத்துச்சென்ற செல்வம் இப்பொழுது இந்நாட்டுக்கே உரியதாக விரிவடைந்து வருகிறது. ஆகவே பொருளாதாரத்துறையில் ஓரளவு முன்னேற்றம் காண்கிறோம். ஆயினும் ஏழை மக்கள் இன்றைக்கும் ஏழையாக இருந்து வருகின்றனர். 'மேழிச்செல்வம் கோழைபடாது' என்பது கோட்பாடு. ஆனால் இன்றைக்கு வேளாண்மைத்தொழில் எந்தவிதமான முன்னேற்றமும் அடை யாது பின்னணியிலேயே இருந்து வருகிறது. இந்த ஒரு கார ணத்தை முன்னிட்டுப் பொருளாதாரத்துறையில் நாம் மேலோங்கி இருக்கிறோம் என்று சொல்ல முடியாது. முன்னேற்றங்களுள் முதன்மை வகிப்பது நல்ல மனப்பாங்கு ஆகும்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

என்பது பொய்யாமொழி. இன்றைக்கு நம் நாட்டு மக்களுள் பெரும்பான்மையோர் மனபரிபாகத்தில் அதிவேகம் கீழ்மை யடைந்து வருகின்றனர். சுயநல எண்ணமே இதற்கு முதற்காரண மாகும். பொதுநலனில் சுயநலம் அடங்கியிருக்கிறது என்னும் மேலாம் கோட்பாட்டை நம்மவர்கள் மறந்துவிட்டார்கள். நமக்கு நாம் வகுத்து வைத்திருக்கும் அரசியல் திட்டம் நமக்குப் பொருத்தமானதன்று. பண்டைக்காலத்தில் நம் நாட்டில் முடி யரசும் குடியரசும் ஒன்றுபட்டு இருந்தன. இன்றைக்கு அமைந் துள்ள குடியரசு நம் நாட்டுப்பண்பை அடிப்படையாகக் கொண்டதன்று. கைக்கூலி அல்லது லஞ்சம் கொடுத்து ஆதிக்கத் திற்கு வரும் முறை இன்றைக்கு அமலில் இருக்கிறது. நாடு கீழ்மையுற்றதற்கு இதுவே முதற்காரணமாகும். லஞ்சத்தைத் தொடர்ந்து பொய்யும் பித்தலாட்டமும் ஏராளமாக வடிவெடுத்து வருகின்றன.

எனவே, நம் நாட்டில் அமைந்துள்ள ஆட்சி முறையைப் பழைய பண்போடு கூடியதாகத் திருத்தியமைக்காவிடில் நாம் இன்னும் அதிகமாகக் கீழ்மையுறுவது திண்ணம். இறைவன் திருவருளால் ராமராஜ்ஜியம் என்னும் பெயர் பெற்றுள்ள

மேலாம் ஆட்சிமுறை நமக்கு வாய்க்கும்பொழுது பண்பாட்டில் நம் நாடு புத்துயிர் பெற்று இலங்கும்.

கேள்வி: (777) நாம் அணு ஆயுதம் வைத்திருக்க வேண்டாமா?

பதில்: ஜடசக்தியைப் பயன்படுத்தி மனிதன் பிறர்க்குச் செய்யும் கேடுகளுள் மிகக் கொடியது அணு ஆயுதம். வாழ்க்கையைப் பற்றிய கோட்பாடு ஒன்று உளது. மனிதன் பிறர்க்கு எதை எடுத்து வழங்குகின்றானோ அது இம்மியளவும் பிசகாது அவனையே வந்து சேருகிறது. உலகனைத்தும் இன்புற் றிருக்கவேண்டும் என்று தீவிரமாக எண்ணுபவன் தானே இன்புற்று இருக்கிறான். பிறரை அழித்து ஒழித்துத் தள்ளி விட்டுத் தான் மட்டும் வாழ்ந்திருக்கவேண்டும் என்று எண்ணு பவன் தானே அழிந்துபட்டுப் போகின்றான். பஸ்மாசுரனுடைய செயல் இதற்குச் சான்றாகிறது. பௌதிக விஞ்ஞானத்தில் தீவிரமாக முன்னேற்றமடைந்து நம் நாட்டவர்களும் அணு ஆயுதம் அமைக்கக் கற்றுக்கொள்வதில் கேடு ஒன்றுமில்லை. அங்ஙனம் தற்பாதுகாப்பிற்காக அணு ஆயுதம் அமைத்து அதைச் செயலுக்குக் கொண்டுவர யாண்டும் ஆயத்தமாகவும் இருக்கலாம். ஆயினும் அதைப் பயன்படுத்திப் பிறரைத் துன்புறுத்தவோ, துடைத்துத்தள்ளவோ நம் நாட்டவர்கள் ஒருநாளும் எண்ணலாகாது. மேலான நல்லெண்ணத்திற்கு நிகரான ஆயுதம் வேறேதுமில்லை.

இக்காலத்தில் அணு ஆயுதம் படைத்திருப்பவர்களுள் உச்ச நிலையிலிருப்பவர்கள் அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் ஆவார்கள். மன அமைப்பில் அவர்களுக்கிடையில் இருக்கும் சஞ்சலத்திற்கும் நம்மவர்களுக்கிடையில் இருக்கும் அமைதிக்கும் வெகுதூரம். உலகத்திலுள்ள யாரையும் எதிர்க்கவோ, தாக்கவோ, துடைத்துத் தள்ளவோ நாம் எக்காலத்திலும் திட்டம் போட்டது கிடையாது. உலகனைத்தும் இன்புற்று இருக்கவேண்டும் என்னும் பரந்த மனப்பான்மையே நம்முடைய தேசியத் திட்டமாகும். அதன் விளைவாகத்தான் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு நாம் வாழ்ந்து வருகிறோம். நலன் விதைப்பவன் நலனை அறுவடையாக எடுக்கிறான். தீமை விதைப்பவன்

தனக்குத்தானே தீமைக்கு இலக்காகிறான். இதுவே வாழ்க்கையைப் பற்றிய கோட்பாடாகும்.

கேள்வி: *(778)* கட்டாய இராணுவப்பயிற்சி சமுதாயத் திற்குப் பயன்படுமா?

பதில்: இராணுவப் பயிற்சி என்பது உடலைத் திண்ணிய தாக்குதலும் உள்ளத்தினுள்ளே அஞ்சாத் தன்மை படைத் திருப்பதும் ஆகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது கோட்பாடு. உடலைத் திண்ணியதாக்குதற்குப் பதிலாக மெலிந்த நிலையிலேயே அதை விட்டு வைப்பது அறிவுடை யவன் செயல் ஆகாது. தக்க பயிற்சியின் மூலமாக உடலை உறுதிப்படுத்துதல் இராணுவப் பயிற்சியாகும். ஆபத்து வந்து வாய்ப்பது உயிர்கள் அனைத்துக்கும் பொதுவானது. ஆதலால் மனிதன் இதற்கு விலக்காக்மாட்டான். இனி, ஆபத்தைச் சமாளிப்பதற்கு மனிதனுக்கு யாண்டும் உறுதுணையாயிருப்பது தைரியம் ஒன்றேயாம். நம் வாழ்வுக்கு இன்றியமையாத தைரியத்தைப் பெறுவதற்கு உற்ற உபாயமாயிருப்பது இராணுவப் பயிற்சி ஒன்றேயாம். எனவே நல்வாழ்வு வாழ விரும்பும் சமுதாயம் ஒன்றிற்கு இராணுவப் பயிற்சி முற்றிலும் இன்றி யமையாதது.

பள்ளிக்கூடங்களில் இராணுவப் பயிற்சியைக் கட்டாயமாக வைப்பது அரசாங்கத்தின் கடமையாகும். ✪

59. கல்வி

கேள்வி: *(779)* **கல்வித்துறையில் எவ்வாறு மாற்றம் கொண்டு வருவது?**

பதில்: கல்வித்துறையில் மாற்றம் கொண்டு வருவது மிக எளிது. கல்வியின் அடிப்படைக் கோட்பாடுகளை நாம் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். பிரதிகூலமான சூழ்நிலையிலும் நாம் அவைகளை நன்கு அனுஷ்டிக்க முடியும். சில சான்றுகள் எடுத்துக்கொள்வோம். நவீனக் கல்விமுறையில் குரு பக்திக்கு இடமில்லை. நம்முடைய பழங்காலத்துக் கல்விமுறைப்படி மாணாக்கனிடத்துக் குருபக்தி ஓங்குதற்கேற்ப அவன் தரத்தில் மேலே வருகிறான். 'எழுத்து அறிவித்தவன் இறைவனாகும்' என்பது மாறாத உண்மை. இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் மாணாக்கனுக்கும் ஆசிரியருக்குமிடையில் வாழ்க்கையை யொட்டிய இணக்கம் ஏதுமில்லை. குறிப்பிட்ட வேளையில் மணியடித்தவுடன் ஆசிரியர் வகுப்புக்கு வருகிறார். புகட்ட வேண்டிய பாடத்தை ஏதேனும் ஒருபோக்கில் புகட்டி முடிக்கிறார். பிறகு அவர் தம்போக்கில் வகுப்பை விட்டு வெளியேகுகிறார். தம் வகுப்பிலிருக்கும் மாணாக்கர்களுள் பலரை அவர் அடையாளம் தெரிந்து கொள்ளமாட்டார். இக்குறைபாட்டைத் திருத்தியமைப்பது ஆசிரியருக்கு இயலும். ஒவ்வொரு மாணாக்கனோடும் அவர் நெருங்கிப் பழகலாம். மாணாக்கனுடைய முன்னேற்றத்தில் சிரத்தைமிகக் காட்டலாம். இங்ஙனம் அன்பு நெறியை அனுஷ்டிப்பதற்கேற்ப நல்லிணக்கம் உருவெடுக்கிறது. நல்ல குருபக்தி அமையுமானால் அதன் வாயிலாக இக்காலத்தில் கல்வி முறையிலுள்ள கேடுகள் பல நன்கு தவிர்க்கப்படும். ஆசிரியரிடத்து வியாபார மனப்பான்மை

இருக்குமானால் கேடுகள் மேலும் அதிகரிக்கும். தாயன்பும், தந்தையின் ஒழுங்குப்பாடான திட்டமும், ஆசிரியருடைய பெருமையும் பேரூக்கமும் ஓர் ஆசிரியரிடம் ஒன்று சேருமானால் அவர் மூலம் மாணாக்கர்கள் பலபேர் நன்கு திருந்தியமைவார்கள். 'கொற்றவன் எப்படியோ குடிமக்கள் அப்படி' என்பது கோட்பாடு. கல்வித்துறையில் கல்வி புகட்டுபவன் எப்படியோ கல்வி ஏற்பவர்கள் அப்படி மாறியமைகின்றனர்.

நல்லாசிரியர்கள் நாட்டில் அதிகரிக்கும்பொழுதே கல்வித் துறையில் புனிதம் ஓங்கும்.

கேள்வி: *(780)* கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆன்மீகச் சூழ்நிலை எவ்விதம் துணைபுரிகிறது?

பதில்: இயற்கையில் ஆங்காங்குப் பலதரப்பட்ட சூழ்நிலைகளைக் காண்கின்றோம். இனத்தோடு இனம் போட்டிபோடும் சூழ்நிலை, சண்டை சச்சரவுகளை வளர்க்கும் சூழ்நிலை, ஓர் இனம் மற்றோர் இனத்தைத் தாக்கித் தகர்த்து ஒழிக்கும் சூழ்நிலை ஆகியவைகளை உலகில் ஆங்காங்குக் காண்கின்றோம். இதில் அமைதிக்கு இடமில்லை. அசாந்தியும் அச்சமும் வெறுப்புமே இச்சூழ்நிலையில் வடிவெடுத்து வருகின்றன.

ஓர் இனம் மற்றோர் இனத்துக்குத் துணைபுரிவதையும், வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளைப் பரஸ்பரம் வழங்கிக் கொள்ளுதலையும் காண்கின்றோம். இத்தகைய சூழ்நிலை சமுதாய அமைப்பு என்னும் பெயர் பெறுகிறது. இங்குப் போட்டிக்கும் பொறாமைக்கும் இடமில்லை. ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு இனிய வாழ்வு வாழ்தல் இச்சூழ்நிலையில் இடம்பெறுகிறது.

மூன்றாவதாகவும் இவை யாவுக்கும் மேலானதாகவும் இருப்பது ஆன்மீகச் சூழ்நிலை. இது போட்டியை அடிப்படையாகக் கொண்டதன்று. பெரிதும் நல்லிணக்கத்தையே இது வளர்த்து வருகிறது. இதற்கெல்லாம் மேலாக உயிர்களனைத்தையும் பரம்பொருள் சொரூபம் எனக்கருதி வருவது ஆன்மீகச் சூழ்நிலையாம். தெய்வ வழிபாட்டுக்கு நிகராக ஒருவருக்கொருவர் பணிவிடை பண்ணிக்கொள்ளுதல் ஆன்மீகச் சூழ்நிலையின் குறிக்கோளாகிறது. "அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி

விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்பது இதன் விளைவு. ஆத்ம சொரூபமும், பேரறிவும் ஒன்றேயாம்.

"கற்றதனால் ஆய பயனென்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்னும் பொய்யாமொழியின் வாயிலாகக் கல்வியின் குறிக்கோள் விளக்கப்பெறுகிறது. தியானப் பயிற்சியின் வாயிலாக உள்ளத்தின் உள்ளே இருக்கும் உயிருக்கும் பேரறிவு தீட்டப் பெறுகிறது. பொருள்களை உள்ளவாறு அறிந்து கொள்ளும் வல்லமை பேரறிஞனுக்கு வாய்க்கிறது. எனவே அறிவின் உண்மையான முன்னேற்றம் ஆன்மீகத்துறையில்தான் இருக்கிறது. பண்டைக்கால குருகுலமுறை முற்றிலும் ஆன்மீகச் சூழ்நிலையில் அமைந்திருந்தது. ஆகையால் அப்பொழுது கல்வி தலைத்தரமான நிலையில் இருந்தது.

கேள்வி: *(781)* அடியாத பிள்ளை படியாது என்பதை நவீனக் கல்வி முறை ஏற்பது இல்லை. உங்கள் கருத்து என்ன?

பதில்: வளர்ந்து வருகிற சிறுவன் முதலில் உடல்மயமாய் இருக்கிறான். உடல்மயமாய் இருப்பது சிற்றுயிர்களின் பாங்கு. அறிவுபடைத்துள்ள மனிதன் உடல் உணர்வைத் தாண்டிப் பகுத்தறிவு நிலையை எட்டுகிறான். பகுத்தறிவு நிலையில் இருப்பவனுக்குப் பகுத்தறிவு நிலையில் வைத்து ஆமோதிப் பதையும், ஆட்சேபிப்பதையும் தெரிவிக்கலாம். பண்பட்டுள்ள ஒருவனிடம் 'நீ செய்தது சரியன்று' என்று இயம்புவது தண்டனைக்கு நிகர். பண்பிலே இன்னும் மேலே போனவனிடம் அவன் செய்த குற்றத்தை முன்னிட்டு மௌனம் சாதிப்பது இன்னும் பெரிய தண்டனையாகிறது. பண்பாடு இன்னும் உடல் நிலையில் இருக்கின்ற மாணாக்கனுக்கு அடி விளங்குகிறது; கண்டித்துச் சொல்வது விளங்காது. ஆக அந்தந்த நிலையில் இருக்கின்ற மனிதனுக்கேற்ப அறிவுறுத்தும் முறை வேறுபடுகிறது. பாடம் படிக்காவிட்டால் அடி கிடைக்கும் என்று எச்சரிக்கை பண்ணலாம். அந்த எச்சரிக்கை போதவில்லை என்றால் அடி

கொடுத்தால் அவன் வழிக்கு வருகிறான். இதை அனுபவ பூர்வமாக அறிந்துகொள்ளலாம். கணபதி முன்னிலையில் தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுவது சரீர சம்பந்தமான பாடம். சான்றோர்களுக்கு இது தேவையில்லை. சிறுவர்களுக்குக் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுவது விளங்குவதுபோன்று நான் நன்னெறி பிசகேன் என்னும் வாய்ப்பேச்சு பயன்படாது. இன்ன காரியத்தை நன்றாகச் செய்தால் மிட்டாய் தருகிறேன் என்பது சிறுவனுக்கு விளங்கு கிறது. அதைச் செய்தால் நீ மேலோன் ஆவாய் என்பது விளங்காது. பாடம் படிக்காவிட்டால் அடி கிடைக்கும் என்பது விளங்குகிறது. பாடம் படிக்காவிட்டால் நீ அறிவாளியாகமாட்டாய் என்பது விளங்காது. ஆதலால் அடியாத பிள்ளை படியாது என்பது உண்மைக்கு ஒத்ததாம்.

கேள்வி: *(782)* மிகக் கண்டிப்பாய் இருந்தால் கேடுதான் வரும் என்கிறார்கள். இது உண்மையா?

பதில்: இக்கேள்வி சமுதாய வாழ்க்கையை ஒட்டியது. கண்டிப்பாக இருக்கவேண்டிய இடத்தில் தளர்வுற்றிருந்தால் கேடுதான் வந்தமையும். சலுகை காட்டவேண்டிய இடத்தில் மிகக்கண்டிப்பாக இருந்தால் அதன் விளைவாகக் கேடே வந்தமையும். மனிதனுக்குச் சமயோசித புத்தி முற்றிலும் தேவை. ‘சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே’ என்பது முதுமொழி. அறிந்தோ அறியாமலோ சிறுவர்கள் செய்கின்ற சிறிய குற்றங்களுக்கு எச்சரிக்கை செய்து அவர்களை மன்னிப்பது அவசியம்.

சிறு பிழைக்குக் கடினமான நடவடிக்கை எடுப்பது பொருந்தாது. அப்படிச் செய்வதால் சிறுபிழை செய்துள்ள சிறுவர்கள் கல் நெஞ்சக்காரர்களாக மாறிப்போகின்றனர். தண்டனையின் மூலமாக அவர்களை மேலும் கெடுத்ததே கண்டிப் பின் விளைவாகும். சின்னஞ்சிறு வயதிலேயே திருடுதலும், பொய் சொல்லுதலும், பிறர்க்குத் தீங்கு விளைவித்தலும் ஆகிய பெருங்குற்றங்களில் சிறுவர்கள் ஈடுபடுவார்களானால் அவர்களிடத்துக் கண்டிப்பாய் இருந்து அவர்களைத் திருத்தி அமைப்பது முற்றிலும் அவசியம். ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில்

வளையாது' என்பது மற்றொரு முதுமொழி. சின்னஞ்சிறு வயதிலேயே சில தீய செயல்களினின்று திருத்தப்படாதவர்கள் பெரியவர்களான பிறகு யார் சொல்லியும் திருந்தமாட்டார்கள். ஆகவே, மக்களை நல்வழியில் நடாத்துவது ஓர் அரிய கலை ஞானமாகும். கண்டிப்பாய் இருப்பதும், சலுகை காட்டுவதும் ஒன்றோடொன்று இணைந்திருத்தல் வேண்டும். வருத்தப்படுத்திச் சீர்திருத்துவது சீர்திருத்தமாகாது. மகிழ்வுடன் திருந்தியமைவதற்குக் கையாளுகிற முறையே கண்டிப்புக்களுள் பாராட்டத்தக்க கண்டிப்பாம்.

கேள்வி: *(783)* மாணவர்களிடையே குருபக்தியை வளர்க்க ஆசிரியர்கள் என்ன செய்யவேண்டும்?

பதில்: குருபக்தி தெய்வ பக்திக்கு நிகரானது. ஒரு சிலர் குருபக்தியானது தெய்வ பக்திக்கும் மேலானது எனக் கருதுகின்றனர். காலமெல்லாம் இது நம்முடைய தேசிய லட்சியங்களில் ஒன்றாக இலங்கிவருகிறது. ஆனால் இக்காலத்திய மாணாக்கர்களுக்கும் குருபக்திக்கும் வெகுதூரம். சூழ்நிலையே பெரும்பாலும் அதற்குக் காரணமாகும். தாயன்பும், தந்தையின் பராமரிப்பும், ஆசிரியரின் ஆசாரமும் ஒன்று சேர்ந்து அமையப் பெற்றிருப்பவர் குரு ஆவார். ஆதலால் குருவின் பொறுப்பு தாய்தந்தையரின் பொறுப்பைவிட மேலானது. இத்தகைய பாங்குடைய குருமார்களை இக்காலத்தில் காண்பது அரிது. தங்களிடத்துள்ள மேலாம் பண்புகளையும் பயிற்சிகளையும் படிப்பையும் மக்களுக்கிடையில் எடுத்து வழங்க அவா மிகப் படைத்திருப்பவரே குரு ஆகிறார். தலைத்தரமான குரு தமக்குக் கிடைக்கும் சம்பளத்தையோ, சன்மானத்தையோ, கைக்கூலியையோ எதிர்பார்ப்பதில்லை. ஆனால் இக்காலத்திய சூழ்நிலை பணம் சம்பாதிக்க மனிதனைத் தூண்டுகிறது. பணம் சம்பாதிக்கும் மனப்பான்மை படைத்திருப்பவர்கள் குருபக்தியை மாணாக்கர்களுக்கிடையில் வளர்க்க வல்லவர்கள் ஆகமாட்டார்கள்.

கேள்வி: *(784)* ஆசிரியர் தொழிலின் நிலை எப்படி அமைய வேண்டும்?

பதில்: நம் சமுதாய அமைப்புக்கு யாண்டும் முன்மாதிரியாக

இருப்பவைகள் இராமாயணம், மகாபாரதம் என்னும் இரண்டு இதிகாசங்கள். இவை இரண்டும் சத்தியத்திற்கும், தர்ம அனுஷ்டானத்திற்கும் விளக்கங்களாக அமைந்திருக்கின்றன. தசரத ராமன் ராமாயணத்துக்குக் கதாநாயகனாக அமைகின்றான். யுதிஷ்டிரன் அல்லது தர்மராஜன் மகாபாரதத்திற்குக் கதாநாயகனாக அமைகின்றான். இராமனுக்குப் பயிற்சி கொடுத்தவர்கள் வசிஷ்டரும், விசுவாமித்திரரும். யுதிஷ்திரனுக்குப் பயிற்சி கொடுத்தவர்கள் கிருபாச்சாரியரும், துரோணாச்சாரியரும். அவர்களுக்கும் மேலாகப் பாட்டனாராகிய பீஷ்மரும் அவனுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறார்.

வீடு கட்டுவதற்கு அஸ்திவாரம் இன்றியமையாதது. அது தோற்றத்தில் இருப்பதில்லை. ஆயினும் வீடு முழுதையும் தாங்கிப் பிடித்துக்கொண்டிருப்பது அஸ்திவாரம். அதேவிதத்தில் மனிதனுக்கு ஒழுக்கத்தை வழங்குபவர் ஆசாரியர். ஒழுக்கத்தைப் பாடப் புஸ்தகத்தின் மூலமாகப் புகட்ட முடியாது. மனிதன் வாழ்ந்துவரும் ஜீவிதம்தான் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமைகிறது. ஆதலால் ஆசிரியனின் பொறுப்பு மிகக் கடினமானது. ஆசிரியன் எண்ணுகிற எண்ணமும், பேசுகிற பேச்சும், செய்கிற செயலும் மக்களுக்கு முன்மாதிரியாக அமைந்திருத்தல் வேண்டும். சமுதாயத்தில் கேட்டைப் பரப்புவது மிகச் சுலபம். நலனை வழங்குவது மிகவும் கடினம். ஆசிரியன் ஒருவன் நலனே வடிவெடுத்திருப்பானாகில் அவனது பண்பில் ஒரு சிறு பகுதியைத்தான் மாணாக்கன் ஏற்றுக் கொள்கிறான். ஆசிரியனிடம் கேடு ஏதேனும் இருக்குமாகில் அதை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு பன்மடங்கு அதிகமாகக் கேட்டைக் கையாள மாணாக்கன் துணிகிறான். இக்கோட்பாடு எல்லாக் காலத்துக்கும், எல்லாச் சமுதாயங்களுக்கும் உரியதாம். ஆதலால் தான் சமுதாயத்தில் ஆசிரியர் ஸ்தானம் பெறுகிற மனிதன் ஒழுக்கத்தில் தலைசிறந்தவனாக இருக்கவேண்டும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்பது மறைமொழி. எப்படியாவது உயிரைக் காப்பாற்றுவது எல்லா ஜீவ ஜந்துக்களுக்கும் பொதுவானது. ஒழுக்கமோ

அலாதியாக மனிதனுக்குரிய பண்பாடாகிறது.

இக்கோட்பாட்டையறிந்து நல்லொழுக்கமே வடிவெடுத்திருக்கும் ஆசிரியனே சமுதாயத்திற்குத் தலைசிறந்த தொண்டனாகின்றான். ஆசிரியர் உலகம் ஒழுக்கம் நிறைந்ததாக இருக்குமாகில் சமுதாயம் ஒழுக்கத்தில் படிப்படியாக முன்னேறும். ஆசிரியர் உலகம் ஒழுக்கத்தினின்று சிறிதளவாவது பிசகுமாகில் சமுதாயம் அதிவிரைவில் பெருவாரியாக நெறிபிசகிப் போய்க் கீழ்மையுறும். இதுவே ஆசிரிய உலகைப்பற்றிய கோட்பாடாம்.

கேள்வி: *(785)* **ஒரு லட்சிய ஆசிரியர் யார்? Who is an Ideal teacher?**

பதில்: ஆசிரியராயிருப்பது மிகக் கடினம். ஏனென்றால் ஒவ்வொரு படித்தரத்திலும் ஆசிரியனுடைய சொல்லையும் செயலையும் பார்த்து மாணாக்கன் பாடம் கற்கின்றான். நல்லாசிரியன் ஒருவனிடம் பண்புகளனைத்தும் ஒருங்கே அமையப்பெறுவது முற்றிலும் அவசியம். தாயின் அன்பும், தந்தையின் கட்டுப்பாடும், ஆசிரியரிடம் இருக்கவேண்டிய ஒழுங்குப்பாடும் ஒன்று சேர்ந்து அமைந்திருப்பது நல்லாசிரியர் ஒருவரிடம் இருக்கவேண்டிய பண்பாம்.

ஆசிரியர் புகட்டுவதோடு நின்றுவிடலாகாது. தம் வாழ்க்கையின் மூலம் நற்பண்புகளை வாழ்ந்து காட்டுபவரே நல்லாசிரியராக விளங்க முடியும். நல்லாசிரியர் ஒருவர் தம் வாழ்க்கையின் மூலம் நல்வாழ்வைப் பிறருக்குப் புகட்டிக் கொண்டே இருக்கவேண்டும். சாந்தம், அமைதி, அடக்கம், சான்றாண்மை ஆகிய நற்பண்புகளை நல்லாசிரியர் பெற்றிருக்க வேண்டும். இத்தகைய நற்பண்புகளை நல்லாசிரியர் ஒருவரிடமிருந்துதான் கற்றுக் கொள்ள முடியும். புஸ்தகங்களின் மூலமாக அப்பண்புகளைக் கற்றுக்கொள்ள முடியாது.

கேள்வி: *(786)* சரஸ்வதி பூஜையன்று ஏன் படிக்கலாகாது?

பதில்: சரஸ்வதி பூஜையன்று படிக்கலாகாது என்னும் நியதி ஏதுமில்லை. படிப்பதில் தோஷம் ஏதுமில்லை. "ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்" என்பது கோட்பாடு. மேலான

கருத்துக்களடங்கிய நூல்கள் ஓதுதற்கும், பாடப் புஸ்தகங்கள் படிப்பதற்கும் பொருந்திய நாள், பொருந்தாத நாள் என்னும் தடை ஏதுமில்லை. சரீர வளர்ச்சி காலமெல்லாம் நிகழ்ந்து கொண்டிருப்பதற்கு நிகராக அறிவு வளர்ச்சியும் யாண்டும் நிகழவேண்டும். ஆனால் படிப்பதைப்பற்றிய கோட்பாடு ஒன்று உண்டு. உடல் வளர்ச்சிக்கு உணவு பயன்படுவது போன்று அறிவு வளர்ச்சிக்குக் கல்வி பயன்படுகிறது. உணவை அளந் தெடுத்துக் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் உண்கிறோம். அங்ஙனம் கல்வியைப் பயனுடைய கல்வியாக்க வேண்டும். நாளெல்லாம் படித்துக்கொண்டேயிருந்தால் அறிவு மழுங்கு கிறது; சிந்தனாசக்தி உருவெடுப்பதில்லை. நல்ல நூலில் ஒரு சிறு பகுதியைக் கசடறக் கற்கவேண்டும். கற்றதைப் பிறகு சிந்தனை பண்ணவேண்டும். சிந்தனை பண்ணுவதற்கேற்பக் கற்ற கல்வி நமக்குச் சொந்தமாகிறது. பலபேர் சிந்தனா சக்தியைப் பயன்படுத்துவதில்லை. வெறும் மேல்போக்காகப் படிக்கின்றனர். படித்ததை மேல்போக்காக மனதில் வைத்துப் பிறகு மறக்கின்றனர். சமாசாரப் பத்திரிகைகளை அப்படிப் படிக்கலாம். ஆனால் நூல் ஆராய்ச்சி அறிவு மயமானது. அறிவைத் தீட்டுதற்கும் அதைத் தெளிவுபடுத்துதற்கும் கல்வியை நாள்தோறும் கற்றுவரவேண்டும்.

சரஸ்வதி பூஜையன்று பெரும்பாலும் நல்ல புஸ்தகங்களைக் கொலுவில் வைக்கிறோம். ஆகையால் அவைகளைக் கற்க முடியாது. நாள்முழுதும் விதவிதமான வந்தனை வழிபாட்டில் காலம் கழிகிறது. ஆதலால் சரஸ்வதி பூஜையன்று வழிபாடு ஒழுங்காக நிகழ்ந்துகொண்டிருப்பதற்கிடையில் புஸ்தகம் எதையும் எடுத்துப் படியாதிருப்பதில் நஷ்டமில்லை. சிறப்பான வழிபாடு ஆண்டுக்கு ஒருதடவை நிகழ்கிறது. அத்தினத்தில் மனம் முழுதும் ஆராதனையில் ஈடுபட்டிருத்தல் நூல் கற்பதிலும் மேலானதாம்.

கேள்வி: *(787)* மேலை நாடுகளில் கல்வித்திட்டம் வெற்றியடைந்துள்ளது. நம் நாட்டில் தோல்வி அடைந்தது ஏன்?

பதில்: கல்வி மேல் நாட்டில் முற்றிலுமே வெற்றியடைந் திருக்கிறது என்றும் நம் நாட்டில் முற்றிலுமே தோல்வி

அடைந்திருக்கிறது என்றும் இயம்புவது பொருந்தாது. மேல் நாட்டுப் பள்ளிகளில் உடல் உழைப்பை ஒட்டிப்போடுகிற திட்டங்களைப் பெரிதும் நிறைவேற்றுகின்றனர். அக்காரணத்தை முன்னிட்டே அங்குக் கல்வி வெற்றியடைந்திருக்கிறது என்று கருதப்படுகிறது. நம் நாட்டிலோ மாணாக்கர்களுக்கிடையில் உடல் உழைப்பு மிகக் குறைவு. வெறும் மனோமுயற்சி மயமான கல்வியைத்தான் நம் நாட்டு இளைஞர்கள் கற்று வருகின்றனர். பள்ளிப்படிப்பு முடிந்தான பிறகு நம்மவர்கள் சமுதாயத்துக்குச் சுமையாயிருப்பதை முன்னிட்டு நம் நாட்டுக் கல்வி தோல்வி யடைந்திருக்கிறது என்னும் முடிவுக்கு வருகிறோம்.

பண்பாடு என்பது கல்வியின் மற்றொரு முக்கியமான பணியாகிறது. பெற்றோர்க்கு அடிபணிந்திருப்பதும் காலமெல் லாம் பெற்றோர்க்குப் பணிவிடை பண்ணுவதும் பண்பாட்டின் விளைவாம். மேல்நாட்டுக் கல்வித்திட்டப்படி வயது முதிர்ந்த மகன் எந்த விதத்திலும் தாய் தந்தையர்க்குக் கடமைப்பட்டவன் அல்லன். கோழியும் குஞ்சும் தருணம் வருகிறபொழுது பிரிந்து கொள்ளுவதுபோன்று மேல்நாட்டு மாணாக்கர்கள் தங்கள் தாய் தந்தையர்களிடமிருந்து பிரிந்துகொள்கிறார்கள். நம் நாட்டுக் கல்வியின் பண்பும் பயனும் அத்தகையவைகள் அல்ல. ஏழையாயிருப்பவனும், தன் வருவாயில் ஒரு பகுதியைக்கொண்டு பெற்றோரைப் பேணுவது நம் நாட்டுக் கல்வித்திட்டத்தின் வெற்றியாம். மேல்நாடுகளிலுள்ள உழைப்புத் திறமையும், நம் நாட்டுப் பண்பாகிய பெற்றோர்க்கு யாண்டும் கடமைப்பட் டிருக்கும் பான்மையும் சேர்ந்து அமையுமானால் அதுவே தலைசிறந்த கல்வித் திட்டமாகும். உலகெங்கும் இத்தகைய நல்ல கல்வித்திட்டம் அமைவது நலம்.

கேள்வி: *(788)* சுதந்திர மறுமலர்ச்சி பெற்றுள்ள பாரதத்தில் இளைஞரைத் திறம்படச் செய்வதற்காக அரசாங்கத்தின் ஆதரவில் பல ஸ்தாபனங்கள் பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது. (உதாரணம் Scouts, National cadet corps, Auxiliary Cadet Corps) இவற்றின் திட்டங்களைப் பார்த்தால் விவேகானந்தர் கனவு கண்ட ஆண்மை தரும் கல்விதான் வந்துவிட்டதோ என்று எண்ணவேண்டியுள்ளது.

ஆனால் இத்திட்டங்களைச் சற்று அலசிப்பார்த்தால் இவையொன்றிலும் நமது நாட்டுப் பண்புக்கு மூலாதாரமான சமயப்பயிற்சி எள்ளளவும் காணப்படுவதில்லை. சமய ஆதாரமற்ற அரசியலை நாம் ஏற்றுள்ளதன் விளைவோ இது? இத்தகைய ஒரு நிலைமை போற்றத்தக்கதுதானா?

பதில்: இக்காலத்தில் நம் நாட்டு இளைஞர் பெற்றுவரும் கல்வியில் ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது என்பதை அறிஞர் அனைவரும் ஒத்துக் கொள்கின்றனர். அந்தக் குறைபாடு யாது என்பதை உள்ளபடி அறிந்து கொண்டவர் யாரும் இல்லை போலும்! முறையாக எழுதப்படிக்கத் தெரிந்துகொண்டால் போதாது. தேகப்பயிற்சி வேண்டியவாறு பெற்றிருந்தாலும் போதாது. சமுதாயத்துக்குப் பணிவிடை செய்வதற்கு இளைஞர் கள் ஆயத்தமாய் இருந்தாலும் போதாது. பணிவிடையையே அவர்கள் ஓயாது புரிந்துகொண்டிருந்தாலும் போதாது. முறை வகுக்கப்பட்ட வாழ்க்கையைத் தீவிரமாகக் கடைபிடித்தாலும் போதாது. தொழில்கள் பலவற்றைப் புரியத் தெரிந்துகொண் டாலும் போதாது. உழைப்பே வடிவெடுத்தவர்களாக இளைஞர்கள் அமைந்துவிட்டாலும் போதாது. விளையாட்டுக்கள் பலவற்றை அவர்கள் கற்றிருந்தாலும் போதாது. சிக்கனமாகப் பொருளைச் செலவிடக் கற்றுக்கொண்டாலும் போதாது. பண்டைக்காலத்துப் பயிற்சியில் இந்தியப் பெருமக்கள் கையாண்டமுறை சமயத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்றைக்குச் சமயம் என்பதைப் பெரும்பாலோர் தவறுதலாகப் பொருள்படுத்துகின்றனர். சமயத்தின் பெயரால் கருத்துவேற்று மையை வளர்ப்பதே பலருடைய செயல் ஆகின்றது. மனிதனுடைய பேரியல்பை வளர்ப்பதே சமயம். "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" இதுவே சமயத்துக்கு விளக்கம். இக்காலத்திய இளைஞர்களுக்கு ஒழுக்கம் இன்னதென்று தெரியாது. மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களை ஒழுங்குபடுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். எதை எண்ணுவது எதை எண்ணலாகாது என்பது வாழ்க்கைக் குரிய அடிப்படைத் தத்துவமாகும். இக்காலத்திய இளைஞர் தகாத எண்ணங்கள் பலவற்றை எண்ணுகின்றனர். தகும் எண்ணங்களை அவர்களுக்கு ஊட்டுவார் இல்லை. நாவடக்கிப்

பேசாதிருக்க அவர்களுக்குத் தெரியாது. புலனடக்கத்துக்கும் அவர்களுக்கும் வெகுதூரம். வாழ்க்கை உரிமை என்னும் பெயரால் பொருந்தாத பல செயல்களைச் செய்கின்றனர். இதற்கு மாறாக, திரிகரணங்களையும் அடக்கியிருந்து பழகுதல் முதற்பாடமாகும். முதியோரிடத்தில் பக்திகாட்டுவது இரண்டாவது பாடம். தாய் தந்தையரைத் தெய்வ சொரூபமாகப் பாராட்டி அவர்களை வணங்குதல் வேண்டும். அடுத்தபடியாக அதே உயர்ந்த எண்ணத் துடன் குருவை வணங்கிப் பழகவேண்டும். கடைசியாக மக்கள் அனைவரிடத்திலும் அதே உயர்ந்த மனப்பான்மையைச் செலுத்துதல் வேண்டும். இறுதியில் மெய்ப்பொருள் ஒன்றுதான் பிரபஞ்சத்தில் இத்தனை உயிர்களாக இயங்குகிறது என்னும் பாடத்தைக் கற்றுக்கொண்டு தெய்வபக்தியை வளர்த்தல் வேண்டும். தெய்வபக்தியைப் பெற்றுள்ளவர்கள் உயிர்கள் அனைத்திடத்தும் உயர்ந்த இணக்கம் வைக்கத் தெரிந்தவர்களா கிறார்கள். ஆனால் நவீன இளைஞர்க்கோ இத்தகைய மனப்பான்மை உண்டாவதில்லை. அதை முறையாகப் புகட்டு பவரும் இல்லை. ஆணவமும் அகங்காரமுமே வடிவெடுத் தவர்களாக அவர்கள் ஆய்விடுகின்றனர்.

பிறருக்குப் பணிவிடை செய்கின்ற அளவு சிறுவன் ஒருவன் சிறப்பு எய்துகின்றான். காயத்தால் அவன் தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்யவேண்டும். பிறகு குருவுக்குப் பணிவிடை செய்து பழகவேண்டும். இதற்குப் பதிலாக வெறும் விளம்பரத் துக்காகவென்று மேற்போக்காகச் சமுதாய சேவை செய்பவர் களாகச் சிலர் அமைகின்றனர். சீரிய மனப்பான்மைக்கு ஆங்கு இடமில்லை. தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்வது விளம்பரத்துக்காக அல்ல. பெற்றோர்க்குத் தான் வாழ்க்கையில் கடமைப்பட்டவன் என்பதை நிலைநாட்டுதற்கே அவன் பணிவிடை செய்கின்றான். ஒழுக்கத்தையும் நல்லறிவையும் புகட்டிய குருவுக்குத் தான் கடமைப்பட்டவன் என்பதை நிலைநாட்டுதற்கே குருவுக்கு அவன் பணிவிடை செய்கின்றான். இத்தகைய பணிவிடையை முதலில் பழகுகின்றவன் இறுதியில் உலகுக்கு உகந்த தொண்டன் ஆவான். இத்தகைய பயிற்சிகள் யாவும் சமயத்தோடு சம்பந்தப்பட்டவைகள். மனிதனை மேலோனாக மாற்றியமைப்பது சமயம். சமயத்தோடு

சம்பந்தப்படாத கல்வி மனிதனை அறிவுடைய விலங்கு ஆக்கி விடும். உரிமைக்குப் போராட அவன் கற்றுக்கொள்வான். மனமுவந்து தன் கடமையைச் செய்ய அவன் முன்வாரான். இக்காலத்திய இளைஞர்களிடத்துச் சமயப் பயிற்சியின்மையே எல்லாவிதமான கேடுகளுக்கும் முதற்காரணமாகிறது. இக்காலத்திய அரசாங்கம் நம்முடைய சிருஷ்டி, இக்காலத்திய கல்வி முறையும் நம்முடைய சிருஷ்டி. இக்காலத்திய வாழ்க்கை முறையும் நம்முடைய சிருஷ்டி. சமயத்தைப் புறக்கணித்ததின் விளைவை வெட்டவெளியாகக் காண்கின்றோம். சண்டையிடும் போலிச் சமயங்களைப் புறக்கணித்துவிட்டு மனதைப் பண்படுத்தும் மெய்ச்சமயத்தைத் திரும்பவும் நாம் தீவிரமாகச் சார்ந்திருந்தா லொழிய நமக்கு விமோசனமில்லை. நம்மிடத்துக் காணப்படும் கேடுகள் அனைத்தையும் அகற்றுதற்குச் சமயப்பயிற்சி ஒன்றே உற்ற உபாயமாகும். தக்க பயிற்சியின் மூலம் விலங்குகளை ஒழுங்குப்பாடுடையவைகளாக மாற்றிவிடலாம். வாழ்க்கையையே ஒழுங்காக நடாத்தும் இயல்பு அங்ஙனம் அவைகளுக்கு வந்து விடுகிறது. அதைப்போன்று நல்ல பயிற்சியின் மூலம் மனிதனைத் தெய்வம் போன்றவன் ஆக்கிவிடலாம்.

கேள்வி: *(789)* தபோவனக் கல்வித்திட்டத்தில் மாணவர் தம்முடைய மாணவ வாழ்வின் பெரும்பகுதியைப் பெற்றோரிடமில்லாது குருகுலத்தில் கழிக்கவேண்டுமென்ற ஏற்பாடு உள்ளது. தர்ம சக்கர இதழில் வெளிவந்த "குருகுல முறையில் கல்லூரிப்படிப்பு" என்கிற தலையங்கத்திலும் கல்லூரி மாணவர் நான்கு ஆண்டுகள் விடுமுறைக்கும் கூட வீடு செல்லமாட்டார்கள் என்று எழுதப்பெற்றுள்ளது. இளம் வயதில் இவ்வாறு மாணவர் தமது பெற்றார், உற்றார் இனத்தாருடன் தொடர்பு அற்றுப்போனால், பின்னால் கல்லூரி யினின்றும் திரும்பி வீடு வந்து அவர்கள் வீட்டுப் பொறுப்பை ஏற்கும்போது குடும்பத்தின் பழக்கவழக்கங்கள், ஆசாரங்கள், தனிப்பண்பு இவற்றை அறியாமல் குடும்பத்தின் விசேஷத் தொழில் திறமை, கலைத்திறமை இவற்றையும் பெறாமல், குடும்பத்தின் அமைப்பு முறையில் பொருத்தமாக அமைத்துக்கொள்ள முடியாது வேற்றார்கள்போல

இருந்துவிடுவாரோ என்ற ஐயம் ஏற்படுகிறது. தனித்தனிக் குடும்பங்களின் மூலம் தானே சமூகத்தின் நாகரிகமும் பண்பும் வாழையடி வாழையாக வர முடியும்? குருகுலப் பயிற்சியும், குடும்பப் பண்பின் தொடர்பும் இரண்டும் கங்கையும் யமுனையும் போன்று மாணவருக்குக் கிடைக்குமாறு ஒரு திட்டம் வகுக்கமாட்டீர்களா?

பதில்: பிறப்பிலும் மிக்கது பயிற்சி "Nurture is greater than nature" என்ற ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. சிறு வயதிலிருந்து இளைஞர் பெறுகின்ற பயிற்சி எத்தகையதோ அதற்கு ஏற்றவாறு அவர்களுடைய இயல்பு மாறியமைகிறது. எத்தகைய இயல்புகளுடன் அவர்கள் பிறந்தார்களோ அத்தகைய இயல்புகளையும் இளமைப் பயிற்சி பெரிதும் மாற்றிவிடுகிறது என்பது இதன் கருத்து. இதை முன்னிட்டே "இளமையில் கல்" என்னும் கோட்பாடும் வந்துள்ளது. பழைய ஜன்மாந்திர வாசனையின் பயனாக எத்தகைய இயல்புகள் மனதிலே புதையப்பெற்றவர்களாக மக்கள் பிறந்திருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. பிறவிக் குணமாக மனதில் புதைந்திருப்பது நல்லது ஆனாலும் சரி, கெட்டது ஆனாலும் சரி - அதைப் பயிற்சியால் பெரிதும் பண்படுத்திவிடலாம். நல்ல இயல்புடன் பிறந்தவனுக்கு நல்ல பயிற்சி மேலோங்குதற்குப் பேருதவி புரிகிறது. கெட்ட இயல்போடு பிறந்தவனுக்கும் நல்ல பயிற்சியால் பெருநன்மை ஏற்படுகிறது. கெட்ட இயல்பின் வேகத்தை நல்ல பயிற்சி குறைத்துவிடுகிறது. ஆக, இளைஞர்களைப் பண்படுத்தும் செயலில் நம் கைவசம் இருப்பது பயிற்சி ஒன்றே. பூர்வஜன்ம சம்ஸ்காரங்கள் அல்லது பிறவிக்குணம் என்பது நம் கைவசத்தில் இல்லை.

நல்ல பயிற்சி கொடுப்பதற்குச் சிறுவர்களின் சொந்த வீடுகள் சிறந்த சூழ்நிலையா, அல்லது கல்வி ஸ்தாபனங்கள் சிறந்த சூழ்நிலையா என்பது அடுத்த கேள்வி. அவரவர் சொந்த வீடுகளில் சிறுவர்கள் இன்புற்று வாழ்ந்திருக்கிறார்கள் என்பது உண்மை. வீடுகளினின்று அவர்களைப் பிரித்தெடுக்கும் பொழுது பெரிதும் அவர்கள் மனவேதனைப்படுகின்றனர். கல்வியின் பொருட்டுப் பெற்றோரிடமிருந்து பிரிந்து வேற்றூருக்குப் போகச் சிறார் யாரும் மகிழ்ச்சியுறுவதில்லை;

வேதனைப்பட்டுக்கொண்டே போகின்றனர். நல்ல கல்வி ஸ்தாபனங்களில் இருக்கின்றபொழுதும் அவர்கள் அடிக்கடி தங்கள் வீட்டைப்பற்றி நினைத்துக்கொள்வதே இயல்பு. சொந்த வீடுகளினின்று நெடுநாள் அவர்கள் பிரிந்திருந்தால் தங்கள் குடும்ப ஐதிகங்களும் அவர்களுக்குத் தெரியாது போய்விடும் என்பது உண்மை. ஆயினும் அவரவர் வீட்டில் பெறும் பயிற்சியால் உண்டாகும் நன்மை மிகக்குறைந்தது.

நோய்களுக்குச் சிகிச்சை செய்வதற்கு மருத்துவமனைகளில் இருக்கின்ற வசதிகளைச் சொந்த வீடுகளில் பெறமுடியாது. சொந்த வீடுகளில் மகிழ்வுடன் வாழ்ந்திருக்கலாம். ஆனால் சிகிச்சைக்கு வேண்டிய உதவிகளை ஆங்குப் பெறமுடியாது, நல்ல சிகிச்சை வேண்டுமென்கின்றவர்கள் அதற்கேற்ற மருத்துவ மனைகளுக்குப் போகவேண்டும். மனத்திருப்தியின் பொருட்டு அவரவர் வீட்டில் இருந்துகொண்டே வைத்தியம் பண்ணிக் கொள்வது போதாது. வேறுசில சான்றுகளையும் எடுத்துக் கொள்ளலாம். நல்ல புகைப்படம் பிடிக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் அதற்கென்று அமைந்துள்ள (Studio) சித்திர சாலைக்குச் செல்ல வேண்டும். விதவிதமான அழகிய மரம் செடி கொடிகளைப் பார்க்க விரும்புகின்றவர்கள் (Public gardens) அனைவர்க்கும் பொதுவாய் அமைந்த பூந்தோட்டங்களுக்குப் போகவேண்டும். இதே கோட்பாடு கல்வித்துறையிலும் வந்தமைகிறது.

பெற்றோரிடமிருந்து நல்ல பழக்கவழக்கங்கள் சிலவற்றைப் பெறலாம், இன்புற்று அவர்களுடன் வாழ்ந்திருக்கலாம்; குடும்ப ஐதிகங்களையும் இயல்பாகத் தெரிந்து கொள்ளலாம். அத்துடன் இளைஞன் ஒருவன் பெறுகின்ற பயிற்சி நின்றுவிடுகிறது. வாழ்க்கைக்கு இன்றியமையாத கணக்கற்ற வேறு பயிற்சிகள் பல இருக்கின்றன. காலமெல்லாம் உற்றாருடனேயே பேசிப் பழகி வாழ்ந்திருப்பவன் குறுகிய மனப்பான்மை உடையவன் ஆய்விடுகிறான். வெவ்வேறு இடங்களிலுள்ள, வெவ்வேறு பாங்குகள் படைத்த மக்களோடு உறவாடிப் பழகுதலில் உண்டாகிற பயிற்சி அலாதியானது. சிறுவன் ஒருவன் குருகுல வாசம் செய்வதன் மூலம் உலகத்தோடு உறவாடச் சின்னஞ்சிறு வயதிலேயே பழகுகிறான். நட்பு, பகைமை ஆகியவைகள்

உலகில் எப்படி உண்டாகின்றன என்னும் பாடத்தைக் குரு குலத்தில் பெறுவது போன்று சொந்த வீட்டில் பெறமுடியாது. பகைமையைக் குறைக்கவும், நட்பைப் பெருக்கவும் ஆகிய பெரிய பயிற்சிக்குக் குருகுல வாழ்வே முற்றிலும் வசதியான சூழ்நிலையாகும். வெற்றிகரமாகக் குருகுலவாசம் செய்யக் கற்றுக் கொண்டவன் வெற்றிகரமாக உலகத்தில் எந்த இடத்தில் வேண்டு மானாலும் வாழமுடியும் என்பதைக் கற்றுக் கொண்டவன் ஆகிறான்.

பக்தி, புலனடக்கம், ஒழுக்கம் ஆகியவைகளில் பயிற்சி பெறுதற்குச் சொந்த வீடுகளைவிடக் கல்வி ஸ்தாபனம் பன்மடங்கு சிறந்தது ஆகும். நல்லாசிரியர் ஒருவர் ஒரு குருகுலத்தில் அமைந்திருந்தால் அவர் நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு ஆங்குப் பயிற்சி கொடுத்து விடுகிறார். சொந்த வீட்டில் பெறுதற்கு நூற்றுக்கணக்கான பெற்றோர்கள் அந்த நல்லாசிரியர் பெற்றுள்ள பண்பைப் பெறவேண்டியது அவசிய மாகிறது. சமுதாய நடைமுறையில் அது சாத்தியப்படாது. நித்திய வாழ்க்கையை முறையாக வகுத்துவைத்து நூற்றுக் கணக்கான மாணாக்கர்கள் அதைப் பின்பற்றும்படிச் செய்வதற்கு குருகுலம் ஒன்றே வசதியான இடமாகும்.

குருகுலத்தில் நல்ல பயிற்சி பெற்றவன் தன் சொந்தக் குடும்பம் ஒன்றுமட்டுமல்ல; உலகத்தில் எங்குச் சென்று யாருடன் ஒட்டி உறவாடுவது என்றாலும் அதற்கேற்ற பாங்கை அவன் ஏற்கனவே பெற்றிருக்கிறான். ஆதலால் இருக்குமிடமெல்லாம் அவன் சொந்த வீடு போன்றதாகிறது; சந்திக்கும் மக்களெல்லாம் அவனுக்கு உறவினர் போன்றவர் ஆகின்றனர். குருகுலத்தில் நல்ல பயிற்சி பெற்றவனுக்கு உலகமெல்லாம் தன் குடும்பம், ஊரெல்லாம் தன் சொந்த ஊர் ஆய்விடுகின்றது. ஆதலால் குருகுலப்பயிற்சியே மக்களுக்குத் தலைசிறந்த பயிற்சியாகும்.

கேள்வி: *(790)* படித்ததை மனதில் மறக்காமல் இருத்திக் கொள்ள ஞானிகள் உபாயங்கள் கூறியுள்ளார்களாம். அவ்வுபாயங்கள் யாவை?

பதில்: ஞாபக சக்தி சாசுவதமானதல்ல. மனிதனிடத்து மனது உறுதிபெற்று ஓங்குவதும் நாளடைவில் தளர்வுற்று

ஒடுங்குவதும் இயல்பு. மனது உறுதிபெற்று வருகின்றபொழுது ஞாபகசக்தி வளர்ச்சியடைகிறது. அது தளர்வுறுங்கால் ஞாபக சக்தியும் குன்றிப்போய் விடுகிறது. மனிதனுடைய ஜீவிதத்தை விமர்சனம் செய்து பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். அவ்வுண்மையை ஓர் உபமானத்தின் மூலம் விளக்கலாம். சுவர் எடுக்கின்றபொழுது அஸ்திவாரக் கல்லை முதலில் போடுகிறோம். ஏனைய கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அமைத்து வருகிறோம். சுவரின் மேல் பகுதியில் இருப்பது கடைசியாக வைத்த கல். இனி, அந்தச் சுவரை இடிக்க ஆரம்பிக்கின்றபொழுது கடைசியாக வைத்த கல்லை முதலில் எடுக்கிறோம். கற்களை இடித்துத் தள்ளுகின்றபொழுது முதலில் வைத்த அஸ்திவாரக் கல்லைக் கடைசியாகத் தகர்க்கிறோம். மனிதனிடத்துள்ள ஞாபக சக்தியைச் சுவர் எடுப்பதோடு ஒப்பிடலாம். இளமையில் கற்கின்றவைகள் அஸ்திவாரக் கல்லுக்கு ஒப்பாகின்றன. முதுமையில் கற்கின்றவைகள் சுவரின் மேல் பகுதியில் வைத்த கற்களுக்கு ஒப்பானவை. விருத்தாப்பிய தசையில் மனது தளர்வுறுங்கால் விருத்தாப்பியத்தில் கற்றவைகள் விரைவில் மறந்துபோய் விடுகின்றன. இளமையில் கற்றவைகள் கடைசியாக மறக்கப்படுகின்றன. தான் பிறந்ததையே ஜீவன் பிறகு மறந்து விடுகின்றான். அந்த மறதிக்கு மரணம் என்று பெயர். எனவே, கற்றதையெல்லாம் ஒருகாலம் இல்லாவிட்டாலும் ஒருகாலத்தில் மறந்தே ஆகவேண்டும். மறக்காமலிக்க ஞானிகள் எந்த உபாயங்களையும் கூறவில்லை. அப்படி மறந்துவிடுவதைப் பற்றி யாரும் கவலைப்படவேண்டியதில்லை. தான் கடவுளின் அம்சம் என்பதை அறிகின்றவன் ஞானி. அந்த ஒரு ஞானம் மட்டும் அடையப்பெற்றான பிறகு என்றைக்கும் மறக்கப்படுவதில்லை. மற்றவைகள் மறந்துபோனதில் ஞானிக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. அத்தகைய அந்த மெய்ஞ்ஞானியின் நிலையை அடைய நாம் முயலவேண்டும். ✯

60. பௌதிக விஞ்ஞானம் / மெய்ஞ்ஞானம்

கேள்வி: ***(791)*** **விஞ்ஞானத்துறையில் மேம்பட்ட அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகள் வளப்பமாகவும், ஆத்மீகத்தில் உயர்ந்த இந்தியா தரித்திரத்திலும் கல்வி அறிவில்லாதவர்களாகவும் இருக்கக் காரணம் என்ன? விஞ்ஞானம் ஆத்மீகத்தை விடச் சிறந்தது என்றுதானே தெரிகிறது?**

பதில்: இவ்வுலக வாழ்க்கையைப் பற்றிய வசதிகளையும் நுட்பங்களையும் புகட்டுவது விஞ்ஞானம். அது போதிக்கின்ற உண்மைகளையெல்லாம் பயன்படுத்தினால் இவ்வுலக வாழ்க்கையை உயர்ந்ததாகச் செய்து கொள்ளலாம்; நல்ல சுகஜீவனம் பண்ணலாம். ஆத்மீக ஞானம் என்பது ஒழுக்கத்தையும் இவ்வுலகுக்கு அப்பாலுள்ள பாரமார்த்திகப் பெருவாழ்வையும் புகட்டுவதாகும். வாழ்க்கை சம்பந்தமான சிக்கலான பிரச்னைகளையெல்லாம் அது தீர்த்துவைக்கிறது. மரணத்தின் மர்மத்தை அது விளக்குகிறது. துன்பங்களினின்று தப்பித்துக் கொள்ளுதற்கும் ஆத்மஞானம் வழிகாட்டுகிறது. மனிதனை மேலோனாக்குதற்கு ஆத்மீகத்துறை ஒன்றே உற்ற உபாயம். இந்த ஞானம் சிறப்பாக இந்தியாவில் தோன்றியது. இன்றைக்கும் அது இந்தியாவிலேயே சிறப்பாக யாரோ சிலரிடத்தில் நிலைபெற்றிருக்கிறது.

இந்திய மக்கள் இன்றைக்கு ஊக்கம் குன்றியவர்களாக, ஆற்றல் அற்றவர்களாக இருக்கிறார்கள். இவ்வுலக வாழ்க்கையை செப்பனிட்டுக் கொள்ளுதற்கு ஏதுவாக இருக்கிற விஞ்ஞானத்தில் தீவிரமாகச் செல்லுதற்கு அவர்களுக்கு இயலுகிறதில்லை. ஆத்மீக

வாழ்வை உறுதியாகக் கடைப்பிடிக்கவும் அவர்களுக்குச் சாத்தியமாவதில்லை. சமுதாயம் முழுதும் தளர்வுற்று இருப்பதால் இகலோக வாழ்வையோ, பரலோக வாழ்வையோ பெறத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். மேல்நாட்டவர்கள் இகலோக வாழ்வை நன்கு அனுபவித்து வருகிறார்கள். விஞ்ஞானத்தை அதற்கு நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஊக்கம் உடையவர்க்கே இகலோகமும் கிடைக்கின்றது; பரலோகமும் கிடைக்கின்றது. பாரமார்த்திக வாழ்வில் இன்றைக்கு மேல்நாட்ட வர்களில் யாரோ ஒருசிலர் ஈடுபடுகின்றனர். அதனால் ஆத்மீக வாழ்விலும் அவர்களில் சிலர் விரைந்து முன்னேற்றம் அடைகின்றனர்.

ஊக்கம் உடையவன் எதையும் தன்னுடைய முன்னேற்றத் துக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஊக்கம் இல்லாத வனிடத்து எவ்வளவு உயர்ந்த ஞானமிருந்தாலும், எவ்வளவு பெரிய செல்வம் இருந்தாலும் இரண்டும் வீணாய்ப்போய்விடும். நாம் வலிவு குன்றியவர்களாக இருக்கின்றோம் என்பது வெளிப்படை.

விஞ்ஞானம், வேதாந்தம் ஆகிய இரண்டையும் நன்கு பயன் படுத்துகிற மனிதனே இகம், பரம் ஆகியவைகளை இனிது பெறமுடியும் என்பது விவேகானந்த சுவாமிகளின் கொள்கை. இவ்விரண்டையும் இனிது பயன்படுத்துகின்ற உயர்நிலைக்கு நம்நாடு இன்னும் வரவில்லை. அப்படி உயர்வு அடைந்தான பிறகு விஞ்ஞானம் பெரியது; அதைவிடப் பெரியது ஆத்மீக ஞானம் என்பதை நமது சமுதாயம் அதனுடைய ஜீவிதத்தின் வாயிலாக விளக்கவல்லதாகும்.

கேள்வி: *(792)* மேனாட்டு நிபுணர்கள் பலர் சூக்ஷ்ம சரீரத்தை ஸ்தூல சரீரத்திலிருந்து பிரித்துத் தாங்கள் சரீரத் தினின்று வேறென்பதைப் பார்ப்போர்களுக்கு நிரூபித்திருப் பதாயும் உடலை விட்டுப் பிரிந்த சூக்ஷ்ம சரீரத்தின் போட்டோக்கள் பிடித்திருப்பதாயும் சொல்கிறார்கள். இச்சூக்ஷ்ம சரீரம் சில வேலைகளும் செய்கிறதாம்.

நம் சாஸ்திரங்களிலும் திருமூலர், விக்கிரமாதித்தியர் முதலியவர்கள் வேறொரு சரீரத்தில் புகுந்து சஞ்சரித்ததாய்

பிரமாணங்கள் இருக்கின்றன. இதைப் பரகாயப் பிரவேசம் என்று சொல்லியிருக்கிறது. இச்சூக்ஷமம் மனிதனுக்கு மட்டும்தான் உண்டா? புல், புழு, மரம், மிருகம் இவைகளுக்கும் உண்டா? மறுஜென்மாவில் இச்சூக்ஷமம்தான் உடலெடுத்து வருகிறதா? வினைகளைச் சூக்ஷமம்தான் அனுபவிக்கிறதா? மனம்தான் சூக்ஷமசரீரமா? அல்லது மனம் வேறு, சூக்ஷமம் வேறா? அல்லது சூக்ஷம சரீரமே கிடையாதா?

பதில்: மேல்நாட்டு நிபுணர்கள் இயற்கை சம்பந்தமான பல நுட்பங்களை ஆராய்ந்து கண்டுபிடித்து வருகின்றனர். அன்னவர்களைத்தான் பௌதிக விஞ்ஞானிகள் என்கிறோம். ஆனால் அத்யாத்மிக விஷயத்தில் அவர்கள் இதுவரையில் முன்னேற்றம் அடைந்து வருவதின் அறிகுறி எதையும் நாம் காணவில்லை. அவர்கள் சொல்லும் சில கூற்றுக்கள் ஆன்றோர்களுடைய துணிவுக்கும் யுக்திக்கும் பொருந்தாதவைகளாய் இருக்கின்றன. அத்யாத்மிக விஷயத்தில் நம் நாட்டில் தோன்றிய முன்னாளைய மேலோர்கள் பூரண வெற்றியடைந்திருக்கின்றனர். அவர்கள் செய்துள்ள முடிவுக்கு மேல் புதிய முடிவுக்கு நாம் வரமுடியாது. அப்படிப் புதிய முடிவு ஏதாவது இருக்குமாகில் அது உண்மைக்கு முற்றிலும் ஒவ்வாததாய்ப் போய்விடும். ஆனால் அவ் ஆன்றோர்கள் நமக்கு அளித்திருக்கும் முடிவான சித்தாந்தங்களை நவீன முறையில் எல்லோருக்கும் விளங்கும் படித் தெளிவுற நாம் எடுத்து இயம்பலாம்.

ஆன்றோர்கள் சொற்படி ஜீவாத்மாவுக்கு மூன்று சரீரங்கள் உண்டு. அவை முறையே ஸ்தூலசரீரம், சூக்ஷமசரீரம், காரண சரீரம் எனப் பெயர் பெறுகின்றன. ஸ்தூலசரீரம் கட்புலனாகிறது. அதைப் புகைப்படம் பிடிக்கவும் முடியும். சூக்ஷம சரீரமோ கண்ணுக்குப் புலனாகாது. அதைப் புகைப்படம் பிடிக்கவும் முடியாது. ஸ்தூலசரீரத்தின் துணையின்றிச் சூக்ஷம சரீரம் எந்த வேலையையும் செய்ய முடியாது. அன்னமயகோசமாய்ப் பிராணமய கோசமாய் இருப்பது ஸ்தூலசரீரம். மனோமய கோசமாய் விஞ்ஞானமய கோசமாய் இருப்பது சூக்ஷமசரீரம். ஆனந்தமய கோசமாய் அக்ஞானத்திலிருப்பது காரண சரீரம். ஸ்தூலசரீரத்தை மாற்றிக் கொள்வதை மரணம் என்கிறோம்.

சூக்ஷ்ம சரீரமும் காரணசரீரமும் சேர்ந்து புதியதாகத் தனக்கு ஒரு ஸ்தூல சரீரத்தை உண்டுபண்ணிக் கொள்ளும்போது அதைப் பிறப்பு என்கிறோம். ஆத்மஞானிகள் ஸ்தூல சரீரத்துக்குப் புறம்பாக ஜீவாத்மாக்களின் சூக்ஷ்ம சரீரத்தையும் காரண சரீரத்தையும் ஞானக்கண்கொண்டு காணமுடியும். கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருக்கும் வஸ்துக்களைக் காண்பதுபோன்று தாம் தம்மிடம் வருபவர்களின் மன அமைப்பை நேரில் காண்பதாக ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்வதுண்டு. அப்படி அவர் சூக்ஷ்ம சரீரத்தைப் பார்த்தது உண்மை. அவர்போன்ற தீர்க்கதரிசிகள் ஒரு மனிதனுடைய உள் அமைப்பை அல்லது மனபரிபாகத்தை அல்லது சூக்ஷ்ம சரீரத்தை உள்ளபடி காணமுடியும்.

யோக சித்தி அடைந்திருக்கிறவர்களுக்குப் பரகாயப்பிரவேசம் பண்ணுவது சாத்தியம். உயிர் வாழ்ந்திருக்கும் பிறர் சரீரத்தில் புகுந்து பிறரை மயக்க நிலையில் ஒடுக்கி வைத்துவிட்டு அந்தச் சரீரத்தை வேண்டியவாறு சித்த புருஷர்கள் கையாள முடியும். இதற்குச் சாஸ்திரப்பிரமாணம் இருக்கிறது. ஆதிசங்கரர் பரகாயப்பிரவேசம் செய்ததாக அவருடைய வரலாற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. 'மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்' என்று தாயுமானவர் பகர்ந்திருக்கிறார். சூக்ஷ்ம சரீரம் ஜீவர்கள் அனைவருக்கும் உண்டு. புல், புழு, மரம், மிருகம் ஆகியவைகள் ஜீவாத்மாக்களாகவே ஆன்றோர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அவைகளுக்கும் சூக்ஷ்ம சரீரம் உண்டு என்று யூகிக்கவேண்டும். ஆனால் நமது மனது என்னும் சூக்ஷ்ம சரீரத்தை நாம் ஆராய்ச்சி பண்ணுவதுபோன்று அவைகளின் சூக்ஷ்ம சரீரம் நமது ஆராய்ச்சிக்கு எட்டுவதில்லை. புல், புழு, மரம் இவைகளின் ஸ்தூல சரீரத்தைப் பற்றிய அற்புதமான ஆராய்ச்சிகளை மேல்நாட்டு நிபுணர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அம்மறுக்கமுடியாத உண்மைகளை நாம் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கேள்வி: *(793)* விஞ்ஞானத்தின் முன்னேற்றம் காரணமாகத் தற்போது விரைந்து அறிவு வளர்ந்து வருகிறது. இத்தருணத்தில் சமயம் அவசியம்தானா?

பதில்: விஞ்ஞானம் என்பது இயற்கையிலுள்ள வெவ்வேறு பகுதிகளின் விரிவான விபரங்கள் ஆகும். என்னென்ன பொருட்களை என்னென்ன காரியங்களுக்கு எப்படியெப்படிப் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றிய விரிவான விளக்கமே விஞ்ஞானம் எனப்படுகிறது. விஞ்ஞான ஆராய்ச்சிகளின் விளைவாக நுட்பமான கருவிகளும், அவைகளைப் பயன்படுத்தி வருகிற தொழிற்சாலைகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றன. நிலத்தை உழுவது, விதை விதைப்பது, அறுவடை செய்வது ஆகிய கிருஷித் தொழில்கள் பெரும்பாலும் இன்றைக்கு அமெரிக்காவில் எந்திரங்களின் வாயிலாகவே நிகழ்ந்து வருகின்றன. அதைப்போன்று நம் நாட்டில் பயிர்த்தொழில் பண்ண ஆரம்பித்தால் பலபேர்க்குப் பிழைப்புக்கு வகையில்லாது கேடே நிகழும். அந்தப்போக்கில் நம் நாட்டில் விஞ்ஞான வளர்ச்சி வரலாகாது. நூல் நூற்றலும், நெசவுத் தொழிலும் பெரும்பாலும் இன்றைக்கு எந்திரங்கள் வாயிலாகவே நிகழ்ந்து வருகின்றன. தொழிலாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவும், உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் பெரிதும் எந்திரங்களைக்கொண்டே நிறைவேற்றி வருகின்றனர். அதன் வாயிலாகவும் தொழிலாளிகள் பலருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக அமைகின்ற இந்தச் சூழ்நிலை ஆமோதிப்பதற்குரியதன்று. எனவே வரம்புகடந்த விஞ்ஞான வளர்ச்சி மனிதனுக்குக் கேடாய் முடியும் என்பது வெளிப்படை.

என்னென்ன பொருட்களை என்னென்ன காரியங்களுக்கு எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்னும் அறிவு வளர்ச்சியின் வாயிலாகச் சுயநலக்காரனுக்குச் சுயநல நோக்கமே முன்னணியில் வந்து நிற்கும். நாள் ஏறஏற மக்களுக்கிடையில் சுயநல நோக்கமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சமுதாயத்தில் தென்படுகிற கேடுகள் பலவற்றுக்குக் காரணம் சுயநலமே என்பது வெளிப்படை. எனவே, மிகைப்பட்ட விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகச் சமூகத்தில் கேடுகளும் அதிகரித்து வருகின்றன என்பதில் ஐயமில்லை.

மனிதன் சமயானுஷ்டானத்தில் ஈடுபடுவதற்கேற்ப நல்லொழுக்கம் ஓங்குகிறது. சுயநலப்பற்றும் சமய அனுஷ்டானமும்

ஒன்றுபடமாட்டா. சுயநலத் தியாகமே சமய அனுஷ்டானத்துக்கு அஸ்திவாரமாகிறது. சமய அனுஷ்டானம் பின்னணிக்குப் போவதற்கேற்பச் சுயநலமும் இந்திரிய சுகபோகமும் முன்னணிக்கு வரும். அதன் விளைவாகச் சமுதாயம் அதிவிரைவில் பாழ்பட்டுப் போகும். ஆதலால் சமய அனுஷ்டானமே மனிதனுடைய முன்னேற்றத்திற்கு முற்றிலும் முகாமையாகிறது. சமய அனுஷ்டானத்தில் பலபேர் விரைந்து முன்னேற்றம் அடைந்து வந்தால் உலகெங்கும் நலனே அதிகரிக்கும். ஆதலால் நலனை வளர்க்கவும், கேட்டைத் தவிர்க்கவும் வல்ல சமய அனுஷ்டானத்தில் மட்டும் மனிதன் தீவிரமாக ஈடுபடக் கடமைப் பட்டிருக்கிறான்.

கேள்வி: *(794)* எண்ணங்கள் இருதயத்திலிருந்து எழுவதாக ஞானிகள் சொல்கிறார்கள். செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட மனிதன் கூடச் சில நாட்கள் எண்ணங்களுடன் உயிர் வாழ்கிறான். இருதய நிபுணர், எண்ணங்கள் என்னும் சக்தி மூளையில் இருப்பதாகக் கூறுகிறார். தங்கள் கருத்து என்ன?

பதில்: எண்ணத்துக்கு இருப்பிடம் மூளை என்பதும் உணர்ச்சிக்கு இருப்பிடம் இருதயம் என்பதும் கோட்பாடாகும். உணர்ச்சியற்ற மனிதனை ஈரமில்லா நெஞ்சத்தான் எனக் கருதுகிறோம். சிந்தனா சக்தியற்றவனை அவன் மண்டையில் இருப்பது களிமண்; மூளை அன்று என்று நாம் திரஸ்கரிக்கிறோம். மூளையில் ஏதாவது ஒரு பகுதி கெட்டுப்போய் விடுமாகில் அதற்கேற்றவாறு மனிதனும் தன் அறிவுத் திறனை இழக்கின்றான். இனி, தனக்குச் சொந்தமாய் அமைந்துள்ள இருதயத்தை இழந்துவிட்டுச் செயற்கை இருதயத்தை வைத்துக் கொண்டு மனிதன் வாழ்ந்திருப்பானாகில் அவன் வெறுமனே வாழ்ந்தவனாகின்றான். உணர்ச்சியை அவனிடத்துக் காண முடியாது. அதற்கேற்றவாறு அது குறைவாழ்வேயாம்.

கேள்வி: *(795)* விஞ்ஞான வளர்ச்சி அதிகமாக அதிகமாகப் பிரச்னைகள் அதிகம். அதுபோன்று வேதங்கள் அதிகமானாலும் பிரச்னைகள் அதிகம்தானே?

பதில்: இயற்கையின் பாங்கு எத்தகையது என்பதை அறிந்து அதை மனிதனுடைய வசதிக்காகவும் சுக ஜீவனத்திற்காகவும் பயன்படுத்துவது பௌதிக விஞ்ஞானம். இந்தப் பௌதிக விஞ்ஞானத்தைப் பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் இருந்த பௌதிக விஞ்ஞானிகள் கூட்டத்தில் இயம்பியதாவது: பௌதிக விஞ்ஞானம் முன்னேற்றம் அடைவதற்கேற்ப மானுட வர்க்கம் க்ஷீணதசையடைகிறது. இது சுவாமி விவேகானந்தருடைய தனி அபிப்பிராயம் மட்டுமன்று. சாங்க்ய தர்சனம் இயற்கையின் பாங்குகளை இயம்புதற்கிடையில் எச்சரிக்கையொன்று செய்திருக்கிறது. இயற்கை நல்குகின்ற வசதிகளை மிகைபட அனுபவிப்பதற்கேற்ப மனிதன் அதற்கு ஈடு கொடுத்தாகவேண்டும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறது. நவீன மனிதன் எப்படி ஈடுகொடுத்து வருகிறான் என்பதை ஆராய்வோம். பௌதிக விஞ்ஞானத்தில் மருத்துவத்துறையில் மனிதன் அடைந்திருக்கும் முன்னேற்றம் இவ்வளவு அவ்வளவு அன்று. கிட்டத்தட்ட மரணத்தை வெல்லும் தறுவாயில் மனிதன் வந்திருக்கிறான். தொழிற்சாலைகளை மனிதன் ஏராளமாக அமைத்திருக்கிறான். போக்குவரத்து வசதிகள் மிக அருமையாக அமைந்திருக்கின்றன. வானொலி மூலம் உலகில் எந்தப் பகுதியில் நிகழுகின்ற எச்செயலும் அதிவிரைவில் உலகெங்கும் எட்டும்படி செய்யப் படுகிறது. மேலான கருத்துக்கள் அடங்கிய புஸ்தகங்களை அச்சடிப்பதற்கு அற்புதமான அச்சு எந்திரசாலை அமைக்கப் பட்டிருக்கிறது. பெரும்பாலும் எந்திரங்களைக் கொண்டே பயிர்த்தொழில் பண்ணி உணவுப்பொருள்கள் ஏராளமாக உற்பத்தி பண்ணப்படுகின்றன. நெசவுத்தொழில் விருத்தியும் அத்தகைய தேயாம். வீடு கட்டுதற்கான வசதிகள் அற்புதமாக அமைந் திருக்கின்றன. கோடை வெப்பத்தின் கொடுமையையும், பனிக் காலத்தில் குளிரின் கொடுமையையும் பௌதிக விஞ்ஞானத்தின் துணைகொண்டு தவிர்க்கவல்லவனாக நவீன மனிதன் இருக் கின்றான். உணவுப் பொருள்கள் அற்புதமான பாங்கில் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. இருந்த இடத்தில் வசதியாக அமர்ந்துகொண்டு உலகில் அவ்வப்போது நிகழுகின்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொலைக்காட்சியின் மூலம் மனிதன்

காணவல்லவனாகவிருக்கிறான். தொலைபேசியின் துணை கொண்டு உலகெங்குமுள்ள மக்களோடு இருந்த இடத்திலிருந்துகொண்டே மனிதன் பேசுகின்றான். இவ்வையகம் போதாது என்று சந்திரலோகம் போன்ற மற்ற உலகங்களுக்குப் போய் இக்காலத்திய மனிதன் ஆராய்ச்சி செய்கின்றான்.

இத்தனை வசதிகளுக்கிடையில் மனிதனுடைய கவலையும், அச்சமும் அதிகரித்து வருகின்றன. நோய்க்குச் சிகிச்சை முறைகள் அதிகரிப்பதற்கேற்ப நோய்கள் அதிகரிக்கின்றன. சிகிச்சை முறையில் ஒரு பங்கு முன்னேற்றம் என்றால் புதிய நோய்கள் நான்கு மடங்கு எண்ணிக்கையில் அதிகரிக்கின்றன. நோய்கள் மனிதனை மட்டும் பாதிப்பதல்ல; அவனைச் சார்ந்துள்ள கால் நடைகள், அவன் உற்பத்தி பண்ணின பயிர் பச்சை முதலியவைகளையும் தாக்குகின்றன. நவீன மனிதனுக்கு உறக்கம் பிடிப்பதில்லை. அதற்கேற்ற தூக்கமாத்திரைகளைக் கையாண்டால்தான் மனிதன் தூங்க இயலுகிறது. நாட்டோடு நாடு பகை கொள்ளுதல் அதிகரித்து வருகிறது. எந்தச் சமயத்தில் பிறநாடு பிரயோகிக்கும் அணுகுண்டு வந்து உலகை அழிக்கும் என்னும் பயம் அதிகரிக்கிறது. பழங்காலத்து மனிதன் பத்து மைல் தூரம் நடந்துபோய் ஒரு காரியத்தைச் செய்து முடித்து விட்டு அன்று இரவே அவன் வீட்டுக்கு நடந்து வந்து தூங்குவான். இக்காலத்திய மனிதனோ ஒருமைல் நடந்தால் ஒருநாள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கிறான். இத்தகைய நிலையை அறிஞர் உலகம் பாராட்டாது. சான்றோர் செய்துள்ள எச்சரிக்கையை நவீன உலகம் புறக்கணித்துப் பௌதிக விஞ்ஞானத்தில் முன்னேற்றம் அடைவதற்கேற்ப நவீன மனிதன் க்ஷீணதசை அடைந்து வருகிறான் என்பது வெளிப்படை. இதற்கு நேர்மாறாக வேதாந்தத்தில் முன்னேற்றம் அடைவதற்கேற்ப மானுடன் திண்ணியனாகத் திருந்தியமைகிறான். இவ்வுலக வைபவம் எதுவும் அவனுக்குத் தேவையில்லை. அவன் தன்னையே கட்டியாளுகிறான். நோய் வந்தால் நோயைச் சகிக்கும் உறுதிப்பாடு அவனிடத்து உண்டு.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

என்னும் கோட்பாட்டுக்கு

உட்பட அவன் யாண்டும் ஆனந்தத்தில் திளைத்திருக்கிறான். உயிர்கள் அனைத்தையும் அவன் நேசிக்கிறான். தீய முறையைக் யையாண்டு உலகில் நலனை நிலைநாட்ட முடியாது என்னும் கொள்கையில் வேதாந்தி நிலைத்திருக்கிறான். தனக்குத் தீங்கு செய்பவர்களுக்கும் அவன் நலனே செய்கின்றான். ஆத்ம சொரூபத்தை அணுகுவதற்கேற்ப உலகப் பிரச்சனை ஏதும் அவனுக்கு இல்லவே இல்லை. ஆதலால் விஞ்ஞானத்தின் வேகத்தைத் தணிக்கவும், வேதாந்தத்தை வளர்க்கவும் செய்வது ஒன்றே உலகுக்கு நிரந்தர நலனை நல்கும். விஞ்ஞானமும், வேதாந்தமும் இணைந்து செயல்பட ஆரம்பிக்கும்பொழுது மனிதன் இகம், பரம் இரண்டிலும் சிறப்படைகின்றான். மனிதனை மனித நிலைக்கு உயர்த்துவதும், அதற்குமேல் தேவநிலைக்கு உயர்த்துவதும் வேதாந்தமேயாகும். மனதைத் தூயதாக்கி, திண்ணியதாக்கி மனிதனுடைய பிரச்னைகளைத் தீர்ப்பது வேதாந்தமே.

கேள்வி: *(796)* சூரியனும் சந்திரனும பூமியும் ஒரு நேர்க்கோட்டில் வரும்போது சூரிய சந்திர கிரகணங்கள் உண்டாவதாக அறிவியல் கூறுகிறது. சமயமோ, ராகு, கேது அவைகளை விழுங்குவதால் உண்டாகிறது என்று கூறுகிறது. இவ்விரண்டு கூற்றுக்களுள் எது சரி?

பதில்: மூன்று கிரகங்களும் நேர்க்கோட்டுக்கு வரும் பொழுது மத்தியில் இருப்பது கோடியில் இருப்பவைகளுள் ஒன்றை மறைக்கிறது. உதாரணமாக அமாவாசை நாட்களில் சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் நேர்க்கோட்டில் வரும்பொழுது பூமியில் இருப்பவர்களுக்குச் சூரியனுடைய காட்சி மறைகிறது. அது சூரிய கிரகணம் என்று சொல்லப் படுகிறது. பௌர்ணமியன்று பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் வந்து சந்திரன் மீது பூமியினுடைய நிழல் படும்படி செய்கிறது. அப்பொழுது அது சந்திர கிரகணம் எனப்படுகிறது. இவைகளே இயற்கையில் நிகழும் நிகழ்ச்சிகளாகும்.

இந்நிகழ்ச்சிகளைச் சமயம் உருவகப்படுத்தி இராகு, கேது ஆகிய இரண்டு சர்ப்பங்கள் வந்து விழுங்குவதாக இயம்புகிறது. இப்படி இயம்புவதில் பாராட்டத்தக்க கற்பனை ஒன்று உளது.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலும் உண்டாகிற நிழல்கள் வளைந்து வளைந்து பாம்பு போன்று அமைகின்றன. ஆகையினால் இரண்டு கற்பனைப் பாம்புகள் வந்து விழுங்குவதாகப் பொது மக்களுக்கு எடுத்து விளக்கினார்கள். அறிவியல் சொல்லுவதை அவர்களும் அறிந்திருந்தனர். அதற்கு ஒரு கற்பனை புகட்டியது பாராட்டுதற்குரியது. அதில் இழுக்கு ஒன்றுமில்லை. குருட்டு நம்பிக்கையும் அதில் இல்லை.

கேள்வி: *(797)* அண்மையில் நிகழ்ந்த சூரிய கிரகணத்தின்பொழுது நமது நாட்டு ஐதிகத்துக்கு ஒப்ப நான் உண்ணாவிரதம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தேன். அதற்கிடையில் பத்திரிகை நிருபர் என்னும் ஹோதாவில் இரண்டு பொதுக்கூட்டங்களுக்குச் சென்றிருந்தேன். ஒரு கூட்டத்துக்குக் கல்லூரியில் ஆசிரியராய் இருக்கும் கிறிஸ்தவ மதத் தலைவர் ஒருவர் வந்திருந்தார். அவர் என்னிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது "ஹிந்துக்களாகிய நீங்கள் பல மூடநம்பிக்கைகளை இன்னும் விட்டுவிடக் கிடையாது. இதோ நான் வழக்கம் போன்று உணவு அருந்திவிட்டு இங்கு வந்திருக்கின்றேன். எனக்கு யாதொரு கெடுதலும் உண்டாய்விடவில்லை. கிரகண வேளையில் உணவு உண்டால் அது விஷமாகப் போய்விடுகிறதென்றும் இன்னும் என்னென்னவோ ஆதரவில்லாத நம்பிக்கைகளை நீங்கள் வைத்திருக்கிறீர்கள்" என்றார். இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: நமது வாழ்க்கையில் பெரும்பகுதி வெறும் நம்பிக்கை மயமாய் இருக்கிறது. எந்த நம்பிக்கையைப் பகுத்தறிவோடு கூடிய நம்பிக்கை என்றும், எந்த நம்பிக்கையை மூடநம்பிக்கை என்றும் பாகுபடுத்துவது மிகக் கஷ்டம். மைந்தன் ஒருவன் இன்னார் என் தாய் என்று நம்புகிறான். இதைப் பகுத்தறிவோடு கூடிய நம்பிக்கை என்று சொல்வதா அல்லது மூடநம்பிக்கை என்று சொல்வதா? சற்று ஆராய்ந்து பார்த்தால் நம்முடைய நம்பிக்கைகளில் பெரும்பகுதி மூடநம்பிக்கைகளாகத்தான் இருந்து வருகின்றன என்பது புலப்படும். மனிதன் செத்த பிறகு கடவுள் அவனைப் பிடித்து நரகத்தில் போடுகிறார்; அல்லது

சொர்க்கத்துக்கு அனுப்புகிறார் என்று நம்புகின்றோம். இதை எத்தகைய நம்பிக்கையாகப் பாகுபடுத்துவது? மதவாதிகள் கடவுள்மீது வைக்கும் நம்பிகையை நாஸ்திகர்கள் மூடநம்பிக்கை என்கிறார்கள். அது அப்படியல்ல; கடவுள் நம்பிக்கை உண் மைக்கு ஒத்ததென்று அன்னவர்க்கு நாம் நிரூபிக்க முடியுமா?

கிரகண வேளையில் வயிற்றில் உணவு ஒன்றும் இருக்க லாகாது என்னும் நம்பிக்கை நம் நாட்டில் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி பரியந்தம் இருந்து வருகிறது. கிரகண வேளையில் நம் மனதை எதன்கண் திருப்புகின்றோமோ அதில் அது உறுதிபெறுகின்றது என்கின்ற நம்பிக்கையும் ஹிந்துக்களிடம் உண்டு. ஆதலால் கிரகண வேளையில் கடவுள் வந்தனை வழிபாட்டில் காலத்தைக் கழிப்பது நம் நாட்டு வழக்கமாக இருந்துவருகிறது. இத்தகைய நம்பிக்கையிலும், அனுஷ்டானத் திலும் நமக்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை. அதற்கு மாறாகச் சில நன்மைகள் அமைவதை நாம் அனுபவபூர்வமாக உணரலாம். இடையிடையே உடலைப் பட்டினி போடுவது ஆரோக்கியத்துக்கு முற்றிலும் நலம் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த ஒன்றாகும். இதில் வெவ்வேறு மதவாதிகளுக் கிடையில் அபிப்பிராய வித்தியாசத்துக்கு இடமில்லை. பட்டினி இருக்கின்றபொழுது மனதில் உணவைப் பற்றிய எண்ணமே அதிகமாக உண்டாகும். அதை அறவே மறந்திருந்தால்தான் பட்டினியின் முழு நலன் ஏற்படுகிறது. ஏதேனும் ஓர் எண்ணத்தை மனதில் ஆழ்ந்து எண்ணும்பொழுது மற்றோர் எண்ணம் ஆங்கு உதிக்க அவகாசமில்லை. எண்ணங்களுள் சிறந்தது கடவுளைப் பற்றியது. ஆகவே கிரகண வேளையில் உபவாசமிருப்பது உடலுக்கு நல்லது; கடவுள் சிந்தனை பண்ணுவது உள்ளத்துக்கு நல்லது.

உபவாசமிருப்பதைக் குறிப்பாகக் கிரகண வேளையில் வைத்துக் கொள்வானேன் என்னும் கேள்வி எழலாம். கிரகண வேளையில் பூமியின் ஆகர்ஷண சக்தி உச்சநிலைக்கு வருகிறது என்பது ஆராய்ச்சியின் விளைவு. பௌதிக விஞ்ஞானம் இதைத் தெளிவுபடுத்தி இருக்கிறது. ஆக, இதைக் குறித்தும் அபிப்பிராய வித்தியாசத்துக்கு இடமில்லை. இயற்கையில் உண்டாகும் சில நிகழ்ச்சிகள் மனிதனுடைய உள்ளத்தையும் தாக்குகிறது என்பது

சான்றோர்களின் அனுபவம். உதாரணமாகக் காலை நேரம், மாலை நேரம் போன்ற இயற்கையின் சாந்தமான சூழ்நிலை மனதை ஒருமுகப்படுத்துதற்கு அனுகூலமானது. மனதைப் பண்படுத்துவதற்கு அத்தகைய சந்தர்ப்பங்களை நாம் பயன் படுத்திக் கொள்கிறோம். ஆகர்ஷண சக்தி உச்சத்துக்கு வருகின்ற பொழுது மனதைச் சத்துவ நிலைக்கு எடுத்துச் செல்வதோ, ரஜோகுண நிலையில் வைப்பதோ, அல்லது தமோகுணத்தில் கீழ்மையுற விட்டுவிடுவதோ சாத்தியம். இதை முன்னிட்டே கிரகண வேளையில் நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சி எதுவோ அது பன்மடங்கு உறுதிபெறுகிறது என்னும் கோட்பாடு உண்டாயிற்று. சத்துவகுணத்தை வளர்ப்பதற்கும் கடவுள் பக்தியைப் பெருக்குதற்கும் அது தகுந்த வேளை. நம் நாட்டு ஞானிகள் சுவானுபவத்தில் கண்டறிந்துள்ள மேன்மைகளில் இதுவும் ஒன்று. இவ்விஷயம் அறியாதவர்கள் வேண்டியதை எல்லாம் பேசிக்கொண்டிருக்கட்டும். சான்றோர்கள் சென்றுள்ள செந்நெறியைப் பின்பற்றிக் கிரகண வேளையில் உபவாசத் தையும், உபாசனையையும் நாம் தீவிரமாகச் செய்து வருவோம். அதில் நலன்கள் அனைத்தும் உண்டு என்பதை ஆத்ம சாதனத்தில் செல்கிறவர்கள் அறிந்துகொள்வார்கள்.

செயல் எதுவாயினும் அதன்மூலம் மனிதனுக்கு நலனும் மனவுறுதியும் உண்டாகுமாயின் அதை அவன் தாராளமாகக் கையாளலாம். அவனுடைய மனபரிபாகமே அதற்கு அளவை யாகிறது. இயற்கையில் அமையும் ஒரு பெருநிகழ்ச்சியின்போது பலகோடி மக்கள் தங்களைப் பண்படுத்த முயலுகிறார்கள். அந்த அரிய செயலைப் பாராட்ட ஒருவருக்கு இயலவில்லை யென்றால் அவருடைய குறுகிய மனப்பான்மைக்கு அது சான்றாகும். ✯

61. உலகப்பற்று

கேள்வி: *(798)* துன்பமாக மாறியமையும் இந்திரிய சுகங்களில் மக்கள் ஏன் பற்று மிக வைத்திருக்கிறார்கள்?

பதில்: பஞ்சேந்திரியங்கள் மூலமாக மனிதன் பெறுகிற ஒவ்வோர் இன்பத்துக்கும் துன்பம் என்னும் விலை கொடுக்க மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். இன்பத்திலே மனிதன் வைத்திருக்கும் பற்றுதல் மிகமிக ஆழ்ந்ததாம். ஆதலால் அவன் கொடுக்கிற துன்பம் என்னும் விலை அவன் உள்ளத்தில் பதிவதில்லை. சூதாட்டக்காரன் அந்த நோய்க்கு ஆளாயிருக்கிற பொழுது தன்னிடத்திலிருக்கும் சொத்து முழுதையும் பணயம் வைத்து இழக்கிறான். அதற்கு நிகராகச் சுகத்தில் வைத்திருக்கிற பற்றுதல் ஆழ்ந்திருப்பதால் அதை முன்னிட்டு வரும் துன்பத்தின் கொடுமை அவனுடைய உள்ளத்தைத் தொடுவதில்லை. மானம் போவதோ அவனுக்கு விளங்காது. நல்லறிவை இழப்பதும் அவனுக்குப் புலனாகாது. இங்ஙனம் பெருங்கேட்டிற்கு ஆளான பிறகு விழிப்பு நிலை அவனுக்கு வருகிறது. தனக்குத்தானே செய்துகொண்ட பாதகம் அப்போது விளங்குகிறது. அத்தகைய சீரிய மனமாற்றம் வந்த பிறகே அவன் நல்வழிக்குத் திரும்பு கிறான். மக்களில் பெரும்பான்மையோர் கேட்டில் அகப்பட்டுத் துன்பப்பட்ட பிறகே நல்வழிக்குத் திரும்புகிறார்கள். எப்படியும் நல்வழிக்கு வருவதே வாழ்க்கையின் குறிக்கோளாம்.

கேள்வி: *(799)* பற்று இல்லாது வாழ்வதின் பயன் என்ன? அதனால் செய்யும் கர்மத்தில் திறமை குன்றாதா?

பதில்: பற்றுதல் இல்லாத வாழ்வு எடுத்த எடுப்பில் எல்லார்க்கும் சாத்தியப்படாது. எடுத்துக்கொண்ட கர்மத்தில்

ஆரம்பத்தில் பற்றுதல் மிக வைத்துப் பழகவேண்டும். பள்ளிக் கூடத்து மாணாக்கர்கள் படிப்பில் பற்றுதல் வைத்து ஒருவனை ஒருவன் முந்தவேண்டும் என்னும் நோக்கத்துடன் போட்டி போட்டுக்கொண்டு படிக்கிறார்கள். விளையாட்டுப் பந்தயத்தில் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகிறார்கள். அத்தகைய வினைப் பற்றுதல் இல்லாவிட்டால் மாணாக்கன் முன்னேற்றம் அடைய மாட்டான். எவ்வளவுக்கெவ்வளவு பற்றுதல் வைக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்தக் கர்மத்தில் திறமை தானாக வந்தமைகிறது.

மனிதன் தனித்துத் தனக்காக வாழ்பவனல்லன். பரஸ்பர உதவியையே அடிப்படையாகக் கொண்டது சமுதாய வாழ்க்கை. பரஸ்பரம் உதவி பண்ணிக்கொள்ளும் பண்பில் மனிதன் மேல்நிலைக்கு வரவேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஏதேனும் ஒருவிதத்தில் சமுதாயத்துக்கு ஏற்ற தொண்டனாக அமைய வேண்டும். அப்படி அமைந்த பின்பே பற்றற்ற கர்மத்துக்குத் தகுதியுடையவனாகத் திருந்தி அமைய அவன் கடமைப்பட்டிருக் கிறான். ஏற்றுக்கொண்ட சம்பளத்துக்கு ஏற்றபடி பணிவிடை பண்ணுவது முறைமை. அப்படிப் பணிவிடை பண்ணாது ஏமாற்றுபவன் தரத்தில் கீழே போவது திண்ணம். ஏற்றுக் கொண்ட சம்பளத்துக்குமேல் பிரதிபலனை எதிர்பாராது பணிவிடை பண்ணுவது பற்றற்ற கர்மமாம். யார் ஒருவன் அத்தகைய பரந்த மனப்பான்மையோடு பணிவிடை பண்ணு கிறானோ அவன் பண்பில் அதிவிரைவில் மேலே வருகிறான்.

குடும்பம் ஒன்றில் தாய் ஒருத்தி பண்ணுகிற பணிவிடை ஏராளமானது. பிரதிபலன் எதையும் எதிர்பாராது அச்செயல் களையெல்லாம் அவள் செய்து வருவதால் அவ்வீட்டுக்கு அவள் தலைவியாகத் திகழுகிறாள். சம்பளம் வாங்கிக்கொண்டு அச்செயல்களைச் செய்பவர்கள் அந்தப் பெரிய நிலையை அடைய முடியாது.

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்னும் கோட்பாடு பற்றற்ற கர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. யார் ஒருவன் பிரதிபலனை எதிர்பாராது சமூகத்

தொண்டில் ஈடுபடுகிறானோ அவன் தெய்வசம்பத்தில் அதிவிரைவில் முன்னேற்றமடைகிறான். சமுதாயம் ஒன்றில் அத்தகைய கர்மயோகிகள் அதிகரிப்பதற்கேற்ப அந்தச் சமுதாயம் முன்னேற்றமடைந்து வருகிறது. அன்பினால் தூண்டப்பெற்றுச் செய்வதால் எடுத்துக்கொண்ட கர்மத்தின் தரம் அதிகவேகம் மேலோங்குகிறது. ஆக, பற்றற்றுக் கர்மம் பண்ணுவது பண்பட்டவர்க்கே சாத்தியமாகிறது. அவர்களின் வாழ்வின் தரமும் ஓங்குகிறது. எடுத்துக்கொண்ட கர்மத்தின் பண்பும் புனிதமடைகிறது. சமுதாயம் அதனால் பெரியதொரு நலனை அடைகிறது. இதுவே பற்றற்ற கர்மத்தின் விளைவாம். ☆

62. ஆஹார நியமம்

கேள்வி: *(800)* **சைவ உணவு, அசைவ உணவைப் பற்றிய விளக்கம் யாது?**

பதில்: உடலுக்கு வேண்டிய உணவில் தாவர வகையைச் சார்ந்த உணவைச் சைவ உணவு என்றும், மாமிச உணவை அசைவ உணவு என்றும் சொல்கின்றோம். உயிர்கள் யாவும் உணவு உண்டு வாழ்கின்றன. மறைமுகமாகவோ, நேர்முக மாகவோ ஓர் உயிர் அழிந்தால்தான் மற்றோர் உயிர் வாழ முடியும். செடி கொடிகளும், பிராணிகளின் உடலும், மனித உடலும் அழிந்து மண்ணாகும்பொழுது அவை தாவரத்துக்கு உரமாகப் பயன்படுகின்றன. நாயின் உடலை எலுமிச்சைச் செடி இருக்குமிடத்தில் புதைத்தால் அச்செடி அதை உண்டு செழிப்பாக வளர்ந்து பயன் கொடுக்கிறது. மிருகங்களில் தாவரங்களை உட்கொள்கின்ற மிருகங்களும் உண்டு. மாமிச உணவை உட்கொள்கின்ற மிருகங்களும் உண்டு. தாவர உண வையும், மாமிச உணவையும் கலந்து உண்கின்ற மிருகங்களும் உண்டு. ஆடு, மாடு, யானை, குதிரை முதலியன தாவர உணவை மட்டும் உண்ணும். நாய், நரி, பூனை முதலியன தாவர உணவையும் உண்ணும்; மாமிச உணவையும் உண்ணும். சிங்கம், புலி, சிறுத்தை முதலியன மாமிச உணவை மட்டும்தான் உண்ணும்.

மக்களுக்கிடையிலும் தாவர உணவை மட்டும் உண்கிற வர்கள் இருக்கின்றார்கள். மாமிச உணவை மட்டும் உண்கின்ற வர்கள் இருக்கின்றார்கள். தாவர உணவையும் மாமிச உணவையும் உண்கின்றவர்கள் இருக்கிறார்கள். வட துருவத்தில்

வசிக்கும் எஸ்கிமோக்கள் போன்றவர்களுக்கு மாமிச உணவை உண்பதைத்தவிர வேறு வழியில்லை.

தாவர உணவை உண்ணும் மிருகங்கள் அமைதியாக இருக்கின்றன. மாமிச உணவை உண்ணும் மிருகங்கள் பரபரப்பு உடையவைகளாக இருக்கின்றன. மாமிச உணவு உடலில் ஒரு பதட்டத்தையும் பரபரப்பையும் உண்டுபண்ணும்.

மனிதனுடைய வளர்ச்சிக்கு உணவு மட்டும் போதாது. உணவைவிட உள்ள வளர்ச்சிக்குக் கருத்தும், உணர்வும் தேவைப் படுகின்றன. உள்ளத்தால் மனிதன் தன்னை உயர்த்திக் கொள்ளலாம். உடல் வளர்ச்சியால் மனிதன் தன்னை உயர்த்திக் கொள்ளமுடியாது. உள்ளத்தில் மனிதன் எத்தகைய சிந்தனை யையும், எத்தகைய உணர்வையும் வாங்குகின்றானோ அதற்கேற்ப மனிதனுடைய வாழ்வு மாறி அமையும். ஐந்து இந்திரியங்களின் மூலமாக மனிதன் உள்ளத்தில் உணர்ச்சியைப் பெறுகின்றான். அந்த ஐந்து இந்திரியங்கள் மூலமாக மனிதன் இறையுணர்வைப் பெறுவானாகில் அவன் தன்னைச் சிவநிலைக்கு உயர்த்து கின்றான். எனவே அவன் சைவனாகின்றான். ஐந்து இந்திரி யங்கள் மூலமாக உடலைப்பற்றிய உணர்வைப் பெறுவானாகில் தேகாத்ம புத்தியை வளர்த்து ஆன்மீக உணர்ச்சியை அழிக்கின் றான். ஆன்மீக உணர்ச்சியை அழிப்பது கொலைகளுள் பெரிய கொலை ஆகும். ஆன்மீக உணர்ச்சியை அழிக்கக்கூடிய உடல் உணர்வை இந்திரியங்கள் மூலமாக உள்ளத்தில் வாங்குபவன் அசைவன் ஆகின்றான்.

தாவர உணவை உண்பவன் உடலுக்குரிய சைவ உணவை உண்கின்றான் என்றுதான் சொல்லவேண்டும். ஐந்து இந்திரி யங்கள் மூலமாக உள்ளத்தின்கண் ஆன்மீக உணர்வைப் பெறுபவன் உண்மையாகவே சைவனாகின்றான். ஐந்து இந்திரி யங்கள் மூலமாக உடல் உணர்வை வளர்ப்பவன் அசைவனாகின் றான். உடலுக்குத் தரும் தாவர உணவைச் சைவ உணவு என்றும், மாமிச உணவை அசைவ உணவு என்றும் பகர்கிறோம். உள்ளத்துக்குத் தரும் ஆன்மீக உணர்வுதான் உண்மையில் சைவ உணவு ஆகும். உள்ளத்துக்குத் தரும் காம உணர்வுதான் உண்மையில் அசைவ உணவு ஆகும். ஆன்மீக வளர்ச்சிக்கு உள்ளத்துக்குத் தரும் உணர்வுதான் முக்கியமானது.

ஆரம்ப ஆத்ம சாதகர்கள் உணவு விஷயத்திலும் கருத்துச் செலுத்தவேண்டும். சத்துவ குணத்தை வளர்க்கக்கூடிய உணவை ஏற்றுக்கொள்வதுதான் ஆரம்ப சாதகர்களுக்கு நல்லது. மாமிச உணவு ரஜோகுணத்தை வளர்க்கும் தன்மையுடையது. ஆகையால் ஆத்மசாதகன் மாமிச உணவை ஒதுக்கவேண்டும்.

உயிர்களிடத்தில் அன்பை வளர்ப்பது அவசியம். எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க எண்ணுவது அன்பை வளர்ப்பதற்கு உபாயமாகும். எல்லா உயிர்களுக்கும் அன்புடன் பணி செய்வது அன்பைப் பெருக்குவதற்குப் பயன்படும். உயிர்களிடத்தில் அன்பு வைக்கின்றவளவு நாம் தெய்வத்துக்கு உரியவர்களாகிறோம். சைவ உணவு உண்பதனால் மட்டும் பெரியவர்களாய் ஆகி விடுவோம் என்பது தவறு. சுயநலமற்றுப் பணிவிடை பண்ணவேண்டும். சுயநலத்தை ஒழிக்கின்றவளவுதான் உயர்வடையலாம். ஐம்பொறிகளின் மூலமாகத் தெய்வீக உணர்வை உள்ளத்தில் வாங்குவதன் மூலம்தான் நம்மிடத்தில் நாம் தூய்மையையும், சிவத்தன்மையையும் வளர்க்கமுடியும்.

கேள்வி: *(801)* மனிதன் நான்கு தோஷங்களை நீக்கினால் முக்தி பெறலாம். அவை ஒழுக்கக் குறைவு, சுராபானம், பிறர்பொருளில் இச்சை, அன்ன தோஷம் என்று பெரியோர்கள் சொல்கிறார்கள். நான்காவதாகிய அன்ன தோஷத்தை விவரிக்கும்பொழுது முக்கியமாகச் சமபந்தி போஜனத்தைக் குறிப்பிடுகிறார்கள். தற்காலத்தில் அதிகமாகக் கல்வி கற்க ஆவல் கொண்டால் வெளியூர்களில் உள்ள ஹாஸ்டல்களில் தங்க நேரிடுகிறது. சமபந்தி போஜனம் தவிர்க்க முடியாமல் போகிறது. காலத்திற்கேற்றவாறு நடப்பதும் கடமையாகிறதல்லவா?

பதில்: அன்னத்துக்கு ஏற்படும் தோஷங்களில் ஆச்ரய தோஷம் என்பது ஒன்று. அந்தத் தோஷத்தை எல்லோராலும் கண்டுபிடிக்க முடியாது. சமைக்கப்படும் உணவு ஒன்று எம் மனிதனால் கையாளப்படுகிறதோ அம்மனிதனுடைய இயல்பு சூக்ஷ்மமாக உணவில் படிகிறது என்பது கோட்பாடு. நல்லார் கைப்பட்ட உணவு நல்ல உணவு ஆகிறது. கெட்டவர்கள் கைப்பட்ட உணவு கேடுடையது ஆகிறது. இன்றைக்குச்

சமுதாயத்தில் நாம் காணும் அன்ன விசாரமெல்லாம் இந்த ஆச்ரய தோஷத்தைப் பற்றியது. ஆனால் நல்லவர் யார், கெட்டவர் எவர் என்று நாம் உறுதிகூற முடியாது. கொஞ்ச காலத்துக்கு முன்பு உயர்ந்த ஜாதியில் பிறந்தவர்களிடம் உணவை ஏற்றுக்கொள்ளுதலும், தாழ்ந்த ஜாதியில் பிறந்தவர்களிடம் உணவை ஏலாதிருந்ததும் சமூகப் பழக்கவழக்கமாய் இருந்து வந்தது. ஆனால் அக்கொள்கை பெரிதும் மறைந்துபோய் விட்டது. ஆகையால் ஹாஸ்டல் போன்ற இடத்தில் சமைக்கப் படும் உணவு தூயது அல்ல என்று கருதுவது பொருந்தாது. பல ஹோட்டல்களில் கிடைக்கும் உணவைவிட ஹாஸ்டல்களில் கிடைக்கும் உணவு மிகத் தூயது என்றே இயம்பலாம். இன் றைக்கு ஹோட்டல்கள் பெயரளவில் மேல் வகுப்பினர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால் உள்ளே புகுந்து ஆராய்ந்து பார்த்தால் எல்லாவித தோஷங்களையும் ஆங்குக் காணலாம்.

ஆத்ம சாதகர்கள் தங்களுக்கென்றே உணவு சமைத்துக் கொள்ளுதல் உத்தமம். அத்தகைய வாய்ப்பு அமையாத இடத்தில் சமுதாயத்தில் எங்கே ஆரோக்கிய முறையில் சமைக்கப் படும் உணவு அகப்படுகிறதோ அதை ஏற்றுக்கொள்ளலாம். அதை ஏற்கும் ஆத்மசாதகன் ஒருவன் முதலில் தனது எண்ணத் தால் தன் வழிபடு தெய்வத்துக்கு அதை நைவேத்தியமாகப் படைக்க வேண்டும். தெய்வத்தின் பிரசாதமாகப் பிறகு அதை அருந்தலாம். அப்படிச் செய்கின்றவர்களுக்கு ஒரு தோஷமும் ஏற்படாது. இக்காலத்திய சூழ்நிலையில் இதைத்தான் நம்மால் சாதிக்கமுடியும். இதற்குமேல் மற்றொரு பேருண்மையை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உண்ணும் உணவை விடச் சிறந்தது எண்ணும் எண்ணம். எண்ணத்துக்கே ஆகாரம் என்கிற பெயர் உண்டு. நல்லெண்ணம் என்னும் தூய ஆகாரம் ஏற்பவர்களுக்கு அன்னத்தினின்று ஒரு கேடும் வந்துவிடாது. ஒருவன் தூய உணவை உண்டு கொண்டிருப்பதற்கிடையில் காமத்துக்கு வசப்பட்டவனாக இருப்பானாகில் அவன் கீழ்மகன் என்பதும், சாதாரண உணவை உண்பதற்கிடையில் மேலான எண்ணமே எண்ணியும், ஆசையை அடக்கியும் ஒருவன் இருப்பா னாகில் அவன் மேன்மகன் ஆகிறான் என்பதும் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் பகர்ந்துள்ள கோட்பாடு ஆகும்.

கேள்வி: *(802)* சுவாமி விவேகானந்தர் புலால் உண்பதை ஏற்றுக் கொள்கின்றார். இது பொருந்துமா?

பதில்: புலால் உணவு, மரக்கறி உணவு என உணவை இரண்டு விதமாய்ப் பிரித்து எடுக்கலாம். அவைகளுள் புலால் உணவையே புசித்துவரும் உயிர்வகைகள் உள. புலி, சிங்கம், கழுகு முதலியன புலால் உணவை உண்டே வாழ்ந்து வருகின்றன. இனி, யானை, மான், கால்நடைகள் போன்றவை புல், இலை, தழை முதலியவைகளைத் தின்று உயிர் வாழும் ஜந்துக்களாக அமைந்திருக்கின்றன. மனிதன் வளர்க்கும் நாய், கரடி போன்ற வேறு சில ஜந்துக்களுக்குப் புலால் உணவும் மரக்கறி உணவும் சேர்ந்தே பயன்பட்டு வருகின்றன. மரக்கறி உணவை மட்டும் அருந்துகின்ற மக்கள் உடல் நலன் அதிகம் பெறுவதில்லை. பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியன மரக்கறி உணவு ஆகமாட்டா. அவைகள் பண்பட்ட பாங்கில் அமைந்துள்ள புலால் உணவு வகைகளே ஆகும். இக்கோட்பாட்டை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

பொதுவாக மக்கள் எல்லோரும் புலால் உணவைப் புறக்கணிக்கும் பாங்கில் இல்லை. புறக்கணிக்கவேண்டுமென்று வற்புறுத்துவதும் பொருந்தாது. மக்களுள் தீவிரமாக ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகின்றவர்கள் பால், தயிர், நெய் முதலியவற்றைப் புசிக்கலாம். ஆனால் மாமிசத்தைப் புசிப்பது ஆத்ம சாதனத்திற்கு இடைஞ்சல் என்பதை அவர்கள் அறிய வருகின்றனர். அதன் விளைவாக அவர்கள் சுத்த ஆகாரத்தை மேற்கொள்கின்றனர்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் தம் முக்கிய சிஷ்யராகிய விவேகானந்த சுவாமிகளை உணவு நியமத்தில் கட்டுப்படுத்தவில்லை. 'நரேந்திரன் எந்த உணவை வேண்டுமானாலும் புசிக்கலாம்; அதனால் அவனுடைய பாரமார்த்திகப் பாங்கு ஒருநாளும் கெட்டுப்போகாது' என்று விவேகானந்த சுவாமிகளுக்குக் குருதேவராகிய அவர் அனுமதி கொடுத்தார். வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த அவர் அகப்பட்ட உணவு வகைகள் அனைத்தையும் தாராளமாகப் புசித்து வந்தார். இயமநியமங்களில் அச்சான்றோர் கருத்துச் செலுத்தினாரே தவிர உணவு முதலிய சாதாரணத் தேவைகளில் கவனம்

செலுத்தினார் அல்லர். இச்செயலினின்று மனிதன் அறிந்து கொள்ளவேண்டிய பேருண்மை ஒன்று உள்ளது. மனிதனுடைய ஆத்ம சாதனத்துக்கு இன்றியமையாது இருப்பது புலனடக்கமும், மனப்பண்பாடுமேயாம். உலகம் தருகின்ற உணவு வகைகளிலே தனக்குப் பொருந்தியது, பொருந்தாததை மக்கள் தாங்களே தேர்ந்து கொள்ளுதல் அவசியம். அதன்படி அவர்கள் தம் விருப்பம்போல் உணவை ஏற்றுக்கொண்டு தம் உடலைத் தக்க முறையில் பேணிப் பாதுகாத்து வரலாம். பொருந்தாத உணவை உண்டவர் மேலோர் ஆகமாட்டார் என்னும் கொள்கை தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. இதற்கு விவேகானந்த சுவாமிகளே சான்றாகின்றார்.

பஞ்சேந்திரியங்கள் மூலமாகச் செல்லும் விஷயங்கள் யாவும் உள்ளத்துக்கு உணவாகின்றன. உள்ளத்தில் பொருந்தாத உணர்ச்சிகளை ஊட்டும் விஷயங்களை உள்ளே செலுத்துதல் ஆன்ம வளர்ச்சிக்குப் பெருந்தடையாகும். தூய உணர்வை வளர்க்கும் விஷயங்களை உள்ளே செலுத்துபவர்கள் மேலோர் ஆகின்றனர். உண்கின்ற உணவில் கருத்தைச் செலுத்துவதை விட உள்ளே செலுத்துகின்ற விஷயாதிகளில் கருத்தைச் செலுத்துவதுதான் நம்மை மேலோர் ஆக்குவதற்குத் துணை புரியும்.

கேள்வி: (803) புலால் உண்பது பாபம் என்கிறார்கள். பால் அருந்துகின்றோம். அது பாபம் அன்றோ? செடி கொடிகளைக் கொல்லுவது பாபம் அன்றோ?

பதில்: எது பொருந்திய செயல், எது பொருந்தாத செயல் என்பதை நிர்ணயிப்பதற்கு இயற்கையின் நடைமுறையே ஒப்பற்ற பிரமாணம் ஆகிறது. இயற்கையின் நடைமுறையும் இறைவனுடைய திட்டமும் ஒன்றே.

உலகிலுள்ள உயிர்வகைகள் அத்தனையும் உணவு உண்டு உயிர் வாழ்ந்து வருகின்றன. உணவு உண்ணாது எவ்வுயிரும் ஜீவித்திருக்க முடியாது. அடுத்தபடியாக, உணவு என்றால் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். வெறும் மணற்பரப்பில் பயிர் பச்சைகள் விருத்தியடையமாட்டா. வளம் நிறைந்த மண் அவைகளின் வளர்ச்சிக்குத் தேவை. வளம்

என்பது மண்ணில் அமைந்துள்ள பாக்டீரியா என்னும் உயிர்த் தத்துவமேயாம். ஓரிடத்தில் செங்கல் காளவாய் வைத்துத் தரையின்மீது ஏராளமான உஷ்ணத்தைச் செலுத்தினால் அத்தரை தீய்ந்து போகின்றது. அதாவது அதிலுள்ள பாக்டீரியா என்னும் உயிர்த்தத்துவம் வெந்துபோகிறது. அதன் விளைவாக அவ்விடத்தில் செடி கொடி ஏதும் வளராது. உயிர்த்தத்துவத்தைப் புசித்தே உயிர் வகைகள் வாழ்ந்து வருகின்றன என்பது இயற்கையைப் பற்றிய கோட்பாடு ஆகும். எப்படி எண்ணெய் இல்லாது தீபம் எரியாதோ அப்படி மற்றோர் உயிரை உண வாக்காது எவ்வுயிரும் வாழ்ந்திருக்க முடியாது. உயிர் வகைகளை ஸ்தாவரம், ஜங்கமம் என இருவகையாகப் பிரிக்கிறோம். ஆனால் ஓர் உயிர் மற்றோர் உயிருக்கு உணவாக மாறியமையும் கோட்பாட்டில் ஸ்தாவரம், ஜங்கமம் என்னும் பாகுபாடு இல்லை. சில செடி, கொடி, தழைகளை வேறு சில பயிர் பச்சைகளுக்கு எருவாகப் போடுகிறோம். அங்கு ஸ்தாவரமே ஸ்தாவரத்திற்கு உணவாகிறது. பிறகு செடி, கொடி, பயிர்பச்சை, இலை, தழை முதலியவைகளைத் தின்று ஜங்கமமாயுள்ள பறவை, விலங்கு, மக்கள் ஆகியவைகள் உயிர் வாழ்ந்து வருகின்றன. ஜங்கம மாயுள்ள பறவை, விலங்கு, மக்கள் ஆகியவைகளின் உடல்கள் ஸ்தாவரத்திற்கு நல்ல எரு ஆகின்றன. அந்த உடலங்களைப் புசித்து நடப்பன, பறப்பன, நீந்துவன ஆகிய உயிர் வகைகள் அனைத்தும் வாழ்ந்து வருகின்றன. இயற்கையில் எங்குத் திரும்பி எந்த உயிரை ஆராய்ந்து பார்த்தாலும் அது மற்ற உயிர்களைத் தனக்கு இரையாக்குவதே இயற்கையின் கோட்பாடாகிறது. தனக்குப் புறம்பாயுள்ள உடல்களை எடுத்து உணவாக்காது எவ்வுயிரும் வாழ்ந்திருக்க முடியாது. தானிய வகைகளுள் ஒவ்வொரு தானியமும், அரிசியும் தனித்தனி உயிர்த் தத்துவமாகிறது. இயற்கையின் நடைமுறை இங்ஙனம் இருக்கையில் கொலை மறுத்தல் என்னும் கோட்பாடு வெறும் கொள்கையளவிலேயாம். ஜங்கம உயிர் எதையும் கொன்று தின்னாது ஸ்தாவர உணவைக்கொண்டே மனிதன் உயிர் வாழ்ந்திருக்க முடியும். அப்படிச் செய்வதால் அவன் கொலை மறுத்தவனாகமாட்டான். அரிசி வகைகள், பருப்பு வகைகள், கீரை, காய்கறி வகைகள் ஆகிய யாவும் உயிர்த்தத்துவங்களேயாம்.

அவைகளை நேராகவோ, சமைத்தோ புசிப்பதின் வாயிலாகவே மனிதன் உயிர் வாழ்ந்து வருகிறான். இனிப் பருகுகிற நீரிலே உயிர்த்தத்துவம் உண்டு. சுவாசிக்கிற காற்றிலே உயிர்த்தத்துவம் உண்டு. நீரைப் பருகாது, காற்றைச் சுவாசிக்காது மனிதன் எங்ஙனம் உயிர்வாழ முடியும்? மனிதன் நடக்கிறபொழுது அவனால் மிதியுண்டு சிற்றுயிர்கள் நாள்தோறும் அழிகின்றன. சமையல் அடுப்பில் பூச்சி வகைகள் வீழ்ந்து மடிகின்றன. அச்செயலையும் மனிதன் தவிர்க்க முடியாது. இயற்கையின் அமைப்பைப்பற்றிய உண்மையொன்று இப்பொழுது நமக்கு வெளியாகிறது. உலகில் வாழவந்துள்ள உயிர் வகைகளனைத்தும் ஒன்றையொன்று உணவாக்கியே வாழ்ந்து வருகின்றன. கொஞ்சகாலம் வாழ்ந்திருக்கும் உயிர் பிறகு மற்ற உயிர்வகைகளுக்கு உணவாகிறது. இந்த ஏற்பாட்டைத் தவிர்க்கவோ, மாற்றியமைக்கவோ யாருக்குமே இயலாது.

சீலத்திலும், நல்லொழுக்கத்திலும், ஆத்மீக வளர்ச்சியிலும் முன்னேற்றமடைய விரும்புகிறவன் உணவு நியதியைக் கையாளக் கடமைப்பட்டிருக்கிறான். மானுட சரீரத்துக்கு மாமிச உணவு, மரக்கறி உணவு ஆகிய இரண்டுவித உணவு வகைகளும் தேவை. அவைகளுள் மாமிச உணவு ரஜோகுணத்தை வளர்க்கிறது. மாமிசத்தை விலக்கி வைத்துவிட்டுப் பால், தயிர், நெய் வகைகளைப் புசிப்பது மேலானது. பாலும், மாமிச உணவிற்கு நிகரென்றாலும் அது மாமிசத்தைவிடத் தூயதாக அமைந்திருக்கிறது. உணவு உண்பதில் பாபம் புண்ணியம் என்னும் கோட்பாட்டுக்கு இடம் இல்லை. பொருந்திய உணவு எது, பொருந்தாத உணவு எது என்ற கோட்பாட்டுக்கே ஆங்கு இடம் உண்டு. தமோகுணத்தையும், ரஜோகுணத்தையும் வளர்க்கிற உணவு வகைகளை ஒதுக்கிவைப்பது உசிதம். ஆத்ம சாதனங்களில் தீவிரமாக ஈடுபடுகிறவர்களுக்கு ஆகார நியதி முற்றிலும் அவசியமானது. ஆத்மசாதனத்தில் ஈடுபடாது வெறும் உலகவாழ்விலேயே உழன்று கொண்டிருப்பவர்களுக்கிடையில் உணவு நியதியை வற்புறுத்துதலில் பொருள் இல்லை. அன்னவர்களும் ஆத்மசாதனத்தில் ஈடுபடுவதற்கான பரிபாகம் ஒன்று உண்டு. அப்படி ஆத்மசாதனத்தில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவரும் தாமாகவே தமக்குப் பொருந்தாத புலால் உணவு

போன்றவைகளை விலக்கிவைத்து விடுவார்கள். இதுவே உணவு நியதி பற்றிய கோட்பாடாம்.

கேள்வி: *(804)* உயிர்க்கொலை செய்யாதிருக்க முடியுமா? புலால் உண்ணலாகாது என்கின்றனர். மற்ற தாவர உணவில் உயிர் இல்லையா?

பதில்: இயற்கை நடைமுறையை ஆராய்ந்து பார்த்தால் இக்கேள்விக்கேற்ற விடை கிடைக்கும். எண்ணெய் இல்லாது தீபம் எரியாது. எரிகிற தீபம் நிலைபெற்றிருத்தல் பொருட்டு எண்ணெய் சதா நஷ்டமாகிக் கொண்டிருக்கிறது. உயிர் வாழ்க்கை தீபம் எரிவதற்கு நிகரானது. ஓர் உயிர் நிலைபெற்றிருத்தல் பொருட்டு அதற்கு உணவாக ஏனைய உயிர்கள் மடிந்து கொண்டிருக்கின்றன. உயிர்த்தத்துவம் நிறைந்துள்ள இடத்தில் தான் உயிர் வாழ்க்கை சாத்தியமாகிறது. பாலைவனத்தில் ஸ்தாவரமோ, ஜங்கமமோ தென்படுவதில்லை. மரம், செடி, கொடிகள் ஸ்தாவரம் எனப்படுகின்றன. விலங்கு, பறவை, மக்கள் முதலிய உயிர்வகைகள் ஜங்கமம் எனப்படுகின்றன. வெறும் மணல் மயமாயிருப்பது பாலைவனம். அதில் உயிர்த் தத்துவம் இல்லை. செழிப்பான மண்ணில் பாக்டீரியா என்னும் உயிர்த்தத்துவம் இருக்கிறது. அணு உயிரென அது இயம்பப்படு கிறது. அணு உயிர் நிறைந்திருக்கிற நிலத்தில் விதை விதைத்தால் அது செழித்தோங்கி வளர்கிறது. மண்ணில் உள்ள பாக்டீரியா வைப் புசித்து மரம், செடி, கொடி வகைகள் வாழ்ந்து வருகின்றன. அவைகளுள் ஒன்றன் இலை, தழை முதலியன மற்றொன்றுக்கு உணவாகின்றன. இப்படி ஸ்தாவர உலகிலும் ஒன்றைப் புசித்து மற்றொன்று வாழ்கிறது. இனி தழை, இலை, புல், பூண்டு முதலியவைகளைப் புசித்துப் புழு வகைகள், பூச்சி வகைகள், பறவை வகைகள், விலங்கு வகைகள் முதலியன வாழ்கின்றன. அவைகளுள் புழு, பூச்சி முதலியவைகளைப் பறவைகள் புசிக்கின்றன. பறவைகளுள் புறாவைப் பருந்து புசிக்கிறது. பூனை, நரி போன்ற விலங்கு வகைகள் பறவைகளையும் எலி, முயல் போன்ற விலங்கு வகைகளையும் புசித்து வாழுகின்றன. புலி, சிங்கம் முதலியன மான், ஆடு, மாடு முதலியவைகளைத் தின்று வாழுகின்றன.

நீர்வாழ் வகைகளுக்கிடையில் சிறு மீன்கள் பெரிய மீன்களுக்கு இரையாகின்றன. பூமியில் வட துருவத்தின் அருகிலிருக்கும் எஸ்கிமோ பிரதேசத்தில் வசிக்கும் மானுடர் பச்சை மாமிசம், மீன் முதலியவைகளைப் புசித்து வாழுகின்றனர். அவர்களுக்கு விறகு இல்லை, தீ இல்லை; அவைகள் சமைப்பதும் இல்லை. இப்படி உலகப்போக்கை ஆராய்ந்தால் ஓர் உயிரைத்தின்று மற்றோர் உயிர் வாழ்ந்து வருகிறது. உயிர்த்தத்துவம் இல்லாத மணல், கல் முதலியன எவ்வுயிர்க்கும் உணவாவதில்லை. நடப்பன, பறப்பன, நீந்துவனவாகிய உயிர் வகைகளனைத்தும் ஒன்றை யொன்று கொன்று தின்பதன் வாயிலாக நிலவுலகில் உயிர் வாழ்க்கை சாத்தியமாகிறது. ஜங்கமத்தில் உயிர் இருப்பதுபோன்று ஸ்தாவரத்திலும் உயிர் இருக்கிறது. உயிர்த்தத்துவம் நிறைந்த உடல்தான் உயிர் வாழ்க்கைக்கு நல்ல உணவாகிறது. மரத்தின் இலைகள் மான், யானை போன்றவைகளுக்கு நேராக உணவா கின்றன. அடிமரமோ இத்துப்போய் நிலத்தில் உள்ள பாக்டீரியா அல்லது அணு உயிர்க்கு உணவாகிறது. பூமியில் எருச்சத்துப் போடுவதின் கோட்பாடு இதுவே. இக்கோட்பாட்டின்படி ஒவ்வொரு சரீரமும் உணவு மயமாயிருக்கிறது. ஆதலால்தான் ஸ்தூல சரீரத்தை 'அன்னமயகோசம் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. இயற்கையின் அமைப்பு இப்பொழுது தெளி வாகிறது. ஸ்தாவரமோ, ஜங்கமமோ ஆகிய ஏதேனும் ஓர் உயிரை அழித்தே மற்றோர் உயிர் வாழ்ந்து வருகிறது. சம்ஹாரமும், சிருஷ்டியும் இங்ஙனம் ஒன்றோடொன்று இணைக்கப் பட்டிருக்கின்றன. ஓர் உயிருக்குச் சிருஷ்டியாவது மற்றோர் உயிருக்குச் சம்ஹாரமாக வடிவெடுக்கிறது. ஆதலால் கொலை செய்யாதிருக்க எவ்வுயிர்க்கும் இயலாது.

அந்தந்த உடலுக்கேற்ற உணவு இயற்கையில் அமைந்திருக் கிறது. வனத்தில் வசிக்கும் விலங்குகளுள் பெரிய நிலைக்கு வந்திருப்பவைகள் யானையும் சிங்கமுமாம். யானையின் உணவு ஸ்தாவரம். சிங்கத்தின் உணவு ஜங்கமம். ஒன்று இலை, தழைகளை உண்டு வாழ்ந்து வருகிறது. மற்றது மாமிசத்தைப் புசித்து வாழ்ந்து வருகிற்து. யானையின் உணவு சிங்கத்துக்கு உதவாது. சிங்கத்தின் உணவு யானைக்கு உதவாது. இனி, மக்களுள் எஸ்கிமோக்கள் சிங்கத்துக்கு நிகராகிறார்கள்.

நாகரீகமாகக் குளிர்ப்பிரதேசத்தில் வசிப்பவர்கள் முக்கிய உணவாகச் சமைக்கப்பட்ட மாமிசத்தைப் பயன்படுத்துகின்றனர். பழம், தானியம் முதலிய ஸ்தாவர உணவைச் சிறிதளவு ஏற்கின்றனர். உஷ்ணப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்கள் தானிய வகைகளை அதிகமாகவும், மாமிச வகைகளைக் குறைத்தும் புசித்து வாழ்ந்து வருகின்றனர். உஷ்ணப் பிரதேசத்தில் இருப்பவர்களுள் சாத்வீக உணவை நாடுகிறவர்கள் சிலர். அவர்கள் ஸ்தாவர உணவாகிய தானிய வகைகள், பயறு வகைகள், காய் வகைகள், கிழங்கு வகைகள், கீரை வகைகள் முதலியவைகளைச் சமைத்து உண்கின்றனர். மாமிச உணவுக்கு ஈடாகப் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவைகளைப் பயன்படுத்துகின்றனர். உலக ஜனத்தொகையில் இக்கூட்டத்தார் எண்ணிக்கையில் மிகக்குறைவு.

முடிவுரையாக இங்ஙனம் இயம்பலாம்: உயிரைக்கொன்று தின்று வாழ்ந்திருப்பதே இயற்கைத் திட்டம். உயிர் எனப்படுவது பாக்டீரியாவாகிய அணு உயிராக இருக்கலாம், ஸ்தாவர உயிராக இருக்கலாம், ஜங்கம உயிராக இருக்கலாம். இவையாவும் உயிர் வகைகளே. உயிரை உயிர் புசித்து வாழுகிற திட்டத்தினின்று உடல் படைத்துள்ள யாருமே தப்பித்துக்கொள்ள முடியாது. கொல்லாவிரதம் என்பதனுடைய கோட்பாடு உணவின் பொருட் டல்லாது வேறு எவ்விதத்திலும் மற்ற உயிர்களுக்குத் தீங்கு செய்யாதிருப்பதாம்.

ஜீவன் முக்தர்கள் எனப்படுகிறவர்கள் சரீரம் எடுக்கும் நிலையைக் கடந்து மேலே போயிருக்கும் ஆத்ம சொரூபங்களா கின்றனர். அந்நிலையை எட்டுகின்றவர்களே உண்மையில் கொல்லாவிரதத்தில் நிலைபெற்றவர்கள் ஆகின்றனர். உடல்பற்று வைத்து உலக வாழ்க்கை வாழ்ந்து வருகிற மக்கள் ஸ்தாவரத் தையோ ஜங்கமத்தையோ கொன்று தின்னுதல் வாயிலாகவே வாழ்ந்து வருகின்றனர். அதற்கிடையில் பிற உயிர்களுக்கு அவர்கள் தீங்கு செய்யாது இருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

கேள்வி: *(805)* ஊன் உணவு ஒதுக்கியவர்கள் உயிர்வதை செய்யலாகாது என்பர். உயிர்வதை செய்யாது இருக்க இயலுமா?

பதில்: உடல் வாழ்க்கை உணவை அடிப்படையாகக் கொண்டது. உடலெடுத்திருக்கும் ஆத்மா ஜீவாத்மா என்னும் பெயர் பெறுகிறது. ஸ்தாவர ஜங்கமங்களாக ஜீவாத்மாக்கள் இலங்குகின்றன. மரம், செடி, கொடிகளாக இருப்பவைகள் ஸ்தாவரங்கள். அவைகள் நிலைத்திணைகள் எனவும் அழைக்கப் படுகின்றன. இடம்விட்டு இடம் மாறாதவைகள் என்பது அதன் பொருள். பூமியில் தோன்றி அதே இடத்தில் அவைகள் வளர்ந்து வருகின்றன. பின்பு அவைகள் வேர்கள் வாயிலாகவும், இலைகள் வாயிலாகவும் உணவு ஏற்று வருகின்றன. உணவை ஏலாவிட்டால் அவைகள் வளரமாட்டா; பட்டுப்போம். இனி ஜங்கமங்கள் எனப்படுபவை இயங்கு திணையாகின்றன. வெவ்வேறு இடங்களுக்குப் போக அவைகளுக்கு இயலுகிறது. ஜங்கமமாயுள்ள ஜீவாத்மாக்களும் உணவை உண்டுதான் உடலை வளர்த்து வருகின்றன. எந்த ஜீவனாவது உணவு உண்ணாது இருந்தால், உடலை வளர்க்க முடியாது. காற்றைப் புசித்துச் சில உயிர்கள் நெடிது வாழ்ந்திருக்கின்றன. காற்றினின்றும் உணவை உயிர் வகைகள் ஏற்று வருகின்றன.

இனி, இயற்கையின் அமைப்பை ஆராய்ந்து பார்த்தால் ஸ்தாவர ஜங்கமங்களாக இருக்கிற உயிர்வகைகள் ஒன்றுக் கொன்று உணவாகி வருகின்றன. உண்ணாது எவ்வுயிரும் நிலைத்திருக்கமாட்டா. உயிர்வதை வாழ்வுக்கு இன்றியமையாத செயலாகும். ஆதலால் எவ்வுயிரும் மற்ற உயிர்வதையை அறவே தவிர்க்கமுடியாத நிலையில் இருக்கிறது. உடல் இருக்கும் பரியந்தம் அதற்கு ஏதேனும் ஒருவிதத்தில் ஏனைய உடலங்கள் உணவாகப் பயன்பட்டாக வேண்டும். இதுவே இயற்கையின் நியதி. ஆகையால் உடல் எடுத்து இருக்கின்ற ஜீவாத்மாக்கள் உயிர்வதை செய்யாது இருக்கமுடியாது. உடல் எடுப்பதைத் தவிர்க்க ஜீவாத்மாவுக்கு முடியும். அந்நிலைதான் முக்தி என்று மொழியப்படுகிறது. தேகம் எடுப்பதைத் தவிர்த்துள்ள முக்த புருஷர்கள் எவ்வுயிரையும் வதை செய்வதில்லை. ஏனென்றால் தாங்களே விதேகர்கள் ஆதலால், அதாவது தேகத்தைத் துடைத்தவர்கள் ஆதலால் அவர்கள் உயிர்வதை செய்யும் நிலைக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆக, முடிந்த கோட்பாடு இதுவேயாம். உடல் படைத்திருக்கும் காலமெல்லாம்

அந்த உடலைப் பேணுதல் பொருட்டு ஏனைய உடலங்களை ஜீவாத்மன் உணவாக ஏற்றாகவேண்டும். உடல் பற்றை நீக்கி உடலினின்று விடுதலை அடைந்துள்ள முக்த ஆத்மாக்கள் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்வதில்லை; எவ்வுயிரையும் வதைப்பது மில்லை. உயிர்வதையைத் தவிர்ப்பது முக்த ஆத்மாக்களின் பெருநிலையாம். மேலும் பத்தாத்மாக்கள் அதாவது உடல் வாழ்க்கையில் கட்டுண்டு இருப்பவர் உயிர்வதையைக் குறைக்கலாம்; ஆனால் அதைத் தவிர்க்க முடியாது.

63. சொல் விளக்கம்

கேள்வி: *(806)* தர்மம், சனாதன தர்மம் என்றால் என்ன?

பதில்: இயற்கையின் அமைப்பு உயிர் வகைகளின் அமைப்பாகும். உயிர் வகைகளின் முன்னேற்றத்திற்கான செயல், உயிர் வகைகளின் நல்லிணக்கத்துக்கான செயல் ஆகிய இவையாவும் தர்மம் எனப்படுகின்றன. இயற்கை பஞ்சபூதங்களால் ஆனது. அவைகளுள் நிலத்தின் தர்மம் மணம் கமழுவது; நீரின் தர்மம் நனைப்பது; தீயின் தர்மம் தகிப்பது; காற்றின் தர்மம் உலர்த்துவது; ஆகாசத்தின் தர்மம் ஓசையைக் கிளப்புவது. இனி, உயிர் வகைகளுள் ஸ்தாவரத்தின் தர்மம் இருந்த இடத்திலேயே வளருவது. ஜங்கமத்தின் தர்மம் வளர்ச்சியை நாடி இங்குமங்கும் போவது. மக்களுள் மாணாக்கனுடைய தர்மம் கல்வி கற்பது; ஆசிரியனுடைய தர்மம் கல்வி புகட்டுவது. மனிதனுடைய தர்மம் பரஸ்பரம் நேசிப்பதும், துணைபுரிவதும். போர்வீரனுடைய தர்மம் கொடிய பகைவர்களை அடக்குதல் அல்லது ஒடுக்குதலாம். மக்கள் எல்லோர்க்கும் பொதுவாயுள்ள தர்மம் கடவுளை வழுத்துதல். சான்றோர்களின் தர்மம் மற்றவர்களை மேலோராக்குவது; துறவிகளின் தர்மம் பிரபஞ்ச வாழ்க்கையைக் கடந்து பரத்தினை அடைதலாம். இத்தனைவிதமான தர்மங்களின் தொகை சனாதன தர்மம். தர்மம் எக்காலத்துக்கும், எல்லா இடங்களுக்கும், எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொதுவானது. ஆதலால் அது சனாதன தர்மம் எனப்படுகிறது.

இனி, சந்தர்ப்பத்திற்கேற்ற பிரகாரம் தர்மானுஷ்டானம் மாறியமைகிறது. தசரதராமன் பெற்றோர் ஆணைப்படி நடந்துகொண்டான். அப்படி அவன் நடந்துகொண்டது தர்மம் எனப்படுகிறது. அந்த இராமனுடைய தம்பி பரதன் தாயின்

ஆணைப்படி நடந்துகொள்ள மறுத்துவிட்டான். அப்படி அவன் செய்ததும் தர்மம் எனப் பாராட்டப்படுகிறது. இங்ஙனம் நெருக்கடியான சூழ்நிலைகளுக்கேற்பத் தர்மானுஷ்டானமும் மாறியமைகிறது. அவைகளையெல்லாம் இங்கு விஸ்தாரமாக ஆராய வேண்டியதில்லை. தந்தையினுடைய ஆணைப்படி தாயைக் கொன்றான் பரசுராமன். அவன் செய்ததும் தர்மமே. தந்தையின் ஆணையை மீறி இறைவழிபாட்டில் ஆழ்ந்தான் பக்தன் பிரஹ்லாதன். அவன் செய்ததும் தர்மமே. 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்பது கோட்பாடு.

கேள்வி: *(807)* அத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், ஆன்மபோதம் என்பன யாவை?

பதில்: தன்னிடத்திலிருந்தே வருவதற்கு அத்யாத்மிகம் என்று பெயர். மனிதன் முறைதவறி வாழ்ந்து பல கேடுகளைத் தனக்குத்தானே உண்டுபண்ணிக் கொள்கிறான். இந்திரிய சுகத்துக்கு வசப்பட்டுக் கிடக்கும் மனிதன் இந்திரிய போகத்தில் வரம்புகடந்து போகும்பொழுது துன்பத்தை வரவழைத்துக் கொள்கிறான். சுவைக்கு அடிமைப்பட்ட மனிதன் சுவையான உணவு கிடைக்கும்பொழுது அளவுக்கு மேல் உண்டு அஜீரணத்தால் வரும் நோய்களுக்கு ஆளாகின்றான். மேலும் குடிப்பழக்கத்துக்கு ஆளாகி மிகைபடக் குடித்து உடலையும் புத்தியையும் கெடுத்துக்கொள்கிறான். மனத்தை விகாரப்படுத்தும் காட்சிகளைக் காண்பதிலும், ஓசைகளைக் கேட்பதிலும் கண்ணையும் காதையும் ஈடுபடுத்துபவன் மன மாசுக்கு இடம் தந்து மனக் குழப்பத்தையும் துன்பத்தையும் வரவழைத்துக் கொள்கின்றான். மோந்து அறிவதற்கு அமைந்துள்ள நாசிக்குள் மூக்குப்பொடியைச் செலுத்துவதன் மூலம் போகி உடலுக்குப் பல நோய்களை உண்டுபண்ணிக் கொள்கிறான். அளவுக்கு மீறி மூக்குப்பொடி போடுவது புற்றுநோய்க்கு ஒரு காரண மாகும். காம உணர்ச்சிக்கு வசப்பட்டு உடல் போகத்தில் மூழ்கி உடலுக்குப் பல வியாதிகளையும் உள்ளத்துக்குத் தளர்ச்சி யையும் விளைவித்துக் கொள்கின்றான். மனிதன் புலனடக்கம் என்னும் பண்பைப் பெறாது தனக்குத்தானே துன்பத்தை வரவழைத்துக் கொள்கின்றான். இது அத்யாத்மிகம் எனப்படும்.

இயற்கையின் சீற்றத்தால் துன்பங்கள் ஏற்படுவதுண்டு. இடி, மின்னல், புயற்காற்று, கடல் கொந்தளிப்பு, வெள்ளப் பெருக்கு, பூகம்பம், எரிமலை, காட்டுத்தீ என்னும் இயற்கையின் சீற்றத்தால் உண்டாகும் விளைவுகள் மனிதனுக்குப் பொருட் சேதத்தையும் உயிர்ச்சேதத்தையும் ஏற்படுத்துகின்றன. இது ஆதிபௌதிகம் எனப்படும். பௌதிகம் என்பது ஐம்பூதங்களையும் குறிக்கும். ஐம்பூதங்கள் துன்பத்துக்குக் காரணமாக இருக்கும் பொழுது அவை ஆதிபௌதிகம் ஆகின்றன.

மனிதனுடைய சக்திக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டு நிகழும் நிகழ்ச்சிகள் ஆதிதெய்விகம் ஆகின்றன. அரசன் ஒருவன் பழம் நறுக்கும்பொழுது விரலை நறுக்கிக்கொண்டான். மந்திரி "அரசே! இதுவும் நன்மைக்கே" என்றான். அச்செயலில் என்ன நன்மை இருக்கின்றது என்பது அரசனுக்கு விளங்கவில்லை. பின்பு ஒருசமயம் அரசன் வனத்துக்கு வேட்டையாடச் சென்றான். அரசன் மட்டும் நரபலி தரும் கூட்டத்தினரிடம் அகப்பட்டுக்கொண்டான். கூட்டத்தினர் அரசனைத் தாங்கள் வழிபடும் தெய்வத்துக்குப் பலிகொடுக்க முடிவு செய்தனர். அரசனுடைய கைவிரல் ஊனமாயிருந்ததைப் பார்த்து அவன் பலிக்குத் தகுதியற்றவன் என எண்ணி அவனை விட்டுவிட்டனர். இது ஆதிதெய்விகமாகும்.

சரீரபோதம், ஜீவபோதம், ஆன்மபோதம் என்னும் மூன்று நிலைகள் உள்ளன. சரீரபோதம் எல்லா உயிர்களுக்கும் உண்டு. ஜடப்பொருளுக்கு எந்த போதமும் இல்லை. ஜீவபோதம் வாழ்வின் ஒரு கட்டத்தில் வருகிறது. ஆன்மபோதம் மனிதனுக்கு மட்டுந்தான் உண்டு. சரீரபோதத்தில் இருக்கின்ற உயிர்கள் சரீரத்துக்கு வரும் இன்ப துன்பங்களை உணர்கின்றன. ஜீவபோதத்தில் இருக்கும் உயிர்கள் மனதுக்கு வரும் இன்ப துன்பங்களை உணர்கின்றன. ஆன்மபோதம் பெற்றிருப்பவர்கள் அருள்நாட்டமே வடிவெடுத்தவர்களாக இருக்கிறார்கள். தாங்கள் வேறு, இறைவன் வேறு என்னும் உணர்வைக் கடந்து தாங்களும் இறைவனும் ஒன்றே என்னும் உணர்வைப் பெறுகிறார்கள்.

ஒருசமயம் இராமபிரான் அனுமனைப் பார்த்து, 'நீ என்னை எவ்வாறு கருதுகிறாய்?' என்று கேட்டார். அப்பொழுது அனுமன் பகர்ந்ததாவது: "என்னிடம் சரீரபோதம் தலையெடுக்கும்பொழுது,

இராமா! உன்னை என் தலைவனாகவும், என்னை உன் தொண்டனாகவும் கருதுகிறேன். என்னிடம் ஜீவபோதம் தலையெடுக்கும்பொழுது "உன்னிடத்தில் நான் ஓர் அம்சமாக இருப்பதை உணர்கிறேன்". ஆன்மபோதம் தலையெடுக்கும்பொழுது "இராமா! நீயே நான்; நானே நீ என்னும் உணர்வைப் பெறுகிறேன்." இங்ஙனம் அனுமன் சரீரபோதம், ஜீவபோதம், ஆன்மபோதம் என்னும் மூன்றுக்கும் தக்க விளக்கம் தந்துள்ளான்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் ஆன்மபோதத்தில் யாண்டும் இருந்தமையால் தெய்வத்தோடு அவருடைய மனமும் வாக்கும் செயலும் ஒன்றியிருந்தன. தமக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்த சாரதாமணி தேவியைப் பராசக்தியின் சொரூபமாகப் பார்த்ததோடு அவரை வழிபாட்டுப் பீடத்தில் அமர்த்தி அவருக்கு வழிபாடும் செய்தார். நரேந்திரனைச் சிவசொரூபமாகப் பார்த்தார். விலைமாதுக்களும் அவருக்குப் பராசக்தியின் தோற்றமாகக் காட்சியளித்தனர்.

மனிதன் சரீரபோதம், ஜீவபோதம், ஆன்மபோதம் என்னும் மூன்றிலும் இருந்து வருகிறான். அவன் தன் வாழ்க்கையின் மூலம் ஏந்தப் போதத்தை வேண்டுமானாலும் வளர்க்கலாம். சரீரபோதத்தை வளர்ப்பவன் இந்திரிய போதத்துக்கும் உடல் போதத்துக்கும் அடிமையாகின்றான். ஜீவபோதத்தை வளர்ப்பவன் ஆணவ அகங்காரங்களுக்கு அடிமையாகின்றான். ஆன்ம போதத்தை வளர்ப்பவன் தெய்வப் பெற்றியைத் தனக்கு உரியதாக்குகின்றான். தன்னை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்துக்கொள்கிறான். ஆன்ம போதத்திலிருந்த அப்பருக்குச் சமண மன்னனிடமிருந்து ஆணை வந்தபொழுது, "நாமார்க்கும் குடியல்லோம்" என்று கூறித் "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்னும் கோட்பாட்டை உறுதிப்படுத்தினார். ஆன்மபோதம் பெற்றவர்களுக்கே அங்ஙனம் இயம்புதல் சாத்தியம். ஆன்மபோதம் பெற்றிருந்த மார்க்கண்டன் மரணத்தைக் குறித்து அஞ்சாதவனாக இருந்தான். ஆன்மபோதத்திலிருந்த பிரஹ்லாதன் தந்தை செய்த கொடுமைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு விஷ்ணு ஸ்மரணையில் இன்புற்றிருந்தான். ஆன்மபோதம் பெறுதலே மானுட வாழ்வின் குறிக்கோள்.

கேள்வி: (808) சந்நியாசம், தியாகம் ஆகிய இவை இரண்டிற்கும் விளக்கம் யாது?

பதில்: நியாசம் என்றால் புனிதப்படுத்துதல் என்று பொருள். அதாவது சந்நியாசம் என்பது கீழ்மையை முற்றிலும் அகற்றி நன்கு புனிதப்படுத்துதல் என்பதாகும். தியாகம் என்பது கீழ்மையை உதறித்தள்ளிவிட்டு மேன்மையை நாடுதல் ஆகும். சந்நியாசம், தியாகம் ஆகிய இரண்டும் கிட்டத்தட்ட ஒரே பொருளைத் தருகின்றன. இவ்விரண்டும் வாழ்க்கையைப்பற்றிய கோட்பாடுகளில் மிகச் சீரியவைகள் ஆகும். இவற்றின் விளக்கத்தைச் சாஸ்திரத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியாது. புலனடக்கத்தின் மூலமாகவும் தூய்மையான வாழ்வின் மூலமாகவும் வாழ்வைப் பெருவாழ்வாக மாற்றுகின்றவர்களே இவற்றிற்கு உண்மையான விளக்கம் காணமுடியும். எனினும் புத்திக்கு எட்டுகின்ற பாங்கில் இவற்றிற்கு உரிய விளக்கத்தைச் சிறிது ஆராய்வோமாக.

காமிய கர்மங்களைத் துறப்பது சந்நியாசம். இம்மையில் தனக்குப் பட்டம், புகழ், பேர், புத்திர பாக்கியம், செல்வம், தீர்க்காயுள், ஆரோக்கியம் முதலியன வேண்டுமென்று ஆசைப் படுவதும், மறுமையில் சொர்க்காதி பதவிகள் வேண்டுமென்று ஆசைப்படுவதும் காமிய கர்மங்கள் ஆகும். இத்தகைய ஆசையோடு கூடிய கர்மம் புரிவதை விட்டொழிப்பது சந்நியாசம் ஆகும். கர்மத்தை இத்தகைய புல்லிய நோக்கத்தோடு செய்ய லாகாது. பரநலத்திற்கென்றும் சித்த சுத்திக்கென்றும் கர்மத்தைச் செய்யும்பொழுது அக்கர்மம் புனிதம் உடையது ஆகிறது. கர்மத்தை, ஆசை வசப்பட்டு ஜீவபோதத்தை வளர்க்கின்ற சுயநலக் கர்மமாக மாற்றும்பொழுது கர்மம் புனிதத்தன்மையை இழக்கிறது. சந்நியாசி அப்படிக் கர்மம் செய்யலாகாது. சித்த சுத்தியின் பொருட்டும் பரநலத்தின் பொருட்டும் எல்லாக் கர்மத்தையும் சந்நியாசி செய்யவேண்டும். அப்பொழுது அவன் செய்கின்ற கர்மம் புனிதம் உடையது ஆகிறது.

தசரத ராமனுக்கு அரச பதவி வந்தது. குடிமக்களின் நலனுக்காகத் தசரதராமன் ஆட்சி செய்தான். அவன் பதவியில் ஆசை வைக்கவில்லை. இராமனை அரசனாக்கத் தந்தை தசரதன் விரும்பியபொழுது தாய் அவனை வனத்துக்குப்

போகும்படி வரம் வாங்கினாள். இராமன் அரச பதவியை விட்டு விலகி வனத்திற்குப்போவதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். வனவாச வாழ்க்கை முடிந்த பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். அப்பொழுது அரசனுடைய தர்மம் எது என்பதை விளக்கிக் காட்டுதற்கே ஆட்சிபுரிந்தான். குடிகளை நல்வழிப் படுத்துவதற்குத் தன் குடும்ப வாழ்வையே தியாகம் செய்தான். சீதையை வனத்திற்கு ஓட்டியது அரசனுடைய கடமை எது என்பதை விளக்கிக் காட்டுகிறது. ஆலயம் கட்டுவதையும் பள்ளிக்கூடம், வைத்தியசாலை கட்டுவதையும் பேருக்காகவும் புகழுக்காகவும் செய்யும்பொழுது அவை காமிய கர்மங்கள் ஆகின்றன. புகழுக்காகச் செய்கின்றவர்கள் விளம்பரப் பிரியர் களாக இருக்கின்றார்கள். தாங்கள் செய்த செயல் பத்திரிகை மூலமாக விளம்பரம் ஆகவேண்டும் என்று விரும்புகிறார்கள். தாங்கள் கட்டிய கோயிலிலும் பள்ளிக்கூடத்திலும் வைத்திய சாலையிலும் தங்கள் பெயர் பொறிக்கப்படவேண்டும் என விரும்புகிறார்கள். இத்தகைய செயல்களை எவ்வித விளம்பரமும் இன்றி உலக நலனுக்காகச் செய்கின்றவன் சந்நியாசி ஆகின்றான். அப்பூதி அடிகள் தாம் அமைத்த தண்ணீர்ப் பந்தலில் தம் பெயரை எழுதாது சிவனடியார் பெயரை எழுதி வைத்தார். அப்படிச் செய்ததன் மூலம் அச்செயல் அவரிடத்துச் சித்த சுத்தியையும் சிவபக்தியையும் உண்டாக்கியது. ஸ்ரீராமகிருஷ்ணர் யாருக்கும் தெரியாமல் இரவில் சேரிக்குச் சென்று சேரித் தெருவில் உள்ள குப்பை கூளங்களையும் மலங்களையும் சுத்தம் செய்தார். அந்தச் செயல்மூலம் தாம் உயர்குலத்தில் பிறந்தவர் என்ற அகங்காரத்தை அழித்தார். தன்னைப் புனிதப் படுத்துவதற்குச் சந்நியாசி ஒவ்வொரு செயலையும் செய்கின்றான். சாதாரண மக்கள் தெருக்கூட்டும் செயலையும் மலம் அள்ளும் செயலையும் தோட்டி செயல் என்று கருதி அவற்றை இழிவாக நினைக்கிறார்கள். இராமகிருஷ்ணரும் காந்தியடிகளும் அவற்றை இறைவன் செயலாகச் செய்து புனிதப்படுத்தினார்கள்.

கோயில் குளங்களுக்குச் செல்வது, யாகம் செய்வது, அன்னதானம் செய்வது ஆகிய செயல்களைப் புத்திர பாக்கியம் வேண்டுமென்று செய்கின்றார்கள். அப்படித் தங்களுக்கு வாய்க் கின்ற புத்திரர்கள் தாங்கள் தேடிய சொத்துக்கும் தங்களுக்கும்

உரியவர்களாக இருக்கவேண்டும் எனவும் எண்ணுகிறார்கள். இத்தகைய நோக்கத்தோடு ஆலய வழிபாடு செய்வது காமிய கர்மம் ஆகும். விவேகானந்தருடைய தாய் தனக்குப் புத்திர பாக்கியம் அமையவேண்டுமென்று காசி விஸ்வநாதரைப் பிரார்த்தித்துக் கொண்டார். அப்பிரார்த்தனையின் பயனாக அவருக்கு விவேகானந்தர் புத்திரராக வாய்த்தார். அப்புத்திரனை உலக நலனுக்காகத் தெய்வ காரியத்திற்கு ஒப்படைப்பதில் விவேகானந்தருடைய தாய் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். இங்ஙனம் குடும்ப வாழ்வை உலக நலனுக்காகவும் தெய்வ காரியத்திற் காகவும் என்று நடாத்துபவர்கள் சந்நியாச வாழ்வு வாழ்கின் றார்கள். மக்கள் செல்வத்தின் பொருட்டும் கர்மம் புரிகிறார்கள். தேடிய செல்வத்தைத் தாங்களே அனுபவிக்க வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். ஆயுளைப் பெருக்கி ஆரோக்கியமாக இருந்து உலக சுகபோகங்களை அனுபவிக்க வேண்டுமெனவும் விரும்புகிறார்கள். செல்வம் திரட்டுவது சிவன் செயலுக்கென்றும் ஆயுளைப் பெருக்கி ஆரோக்கியமாக இருப்பது சிவத் தொண்டுக்காக என்றும்; செல்வத்தைத் திரட்டுவதற்கும் ஆயுளைப் பெருக்கி ஆரோக்கியமாக வாழ்வதற்கும் கர்மம் செய்கின்றவர்கள் சந்நியாசிகள் ஆகிறார்கள். பூலோக வாழ்வைப் புனித வாழ்வாக வாழ்கின்றவர்கள் சந்நியாசிகள்.

“உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்”

என்பது கோட்பாடு. கனவு உலகத்தில் வரும் உலகக் காட்சிகளில் தங்களைச் சம்பந்தப்படுத்திக்கொள்பவர்கள் எண்ண உலகில் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். கனவில் ஒருவர் கோடீஸ்வரர் ஆவதுண்டு. அப்படிக் கனவு ஏற்படும்பொழுது தான் கோடீஸ்வரன் ஆகிவிட்டதாகக் கருதுகிறவன் எண்ண உலகுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறான். கனவு உலகில் தான் ஒரு விலங்காக ஆகிக் காட்டில் திரிவதாகக் கண்டு துன்பப் படுகின்றான். இப்படிக் கனவில் ஏற்படுகின்ற நிலைகளுக்கு அடிமைப்பட்டிருப்பவர்கள் சாதாரண மக்கள் ஆவார்கள். கனவில் உண்டான செயல்கள் அத்தனைக்கும் வசப்படாது கனவு உலகிலும் தான் ஆத்ம சொரூபம் என்று எண்ணி

அப்பொழுது நிகழும் செயல்களில் தன்னைச் சம்பந்தப்படுத்தி வைத்துக்கொள்ளாதவன் சந்நியாசி ஆகின்றான். கனவற்ற ஆழ்ந்த உறக்கத்தில் தமோகுணத்தில் மூழ்கி ஜடம்போன்று கிடப்பது சாதாரண மனிதர்களுடைய இயல்பாகும். ஆழ்ந்த உறக்கத்தில் ஏற்படும் பேரின்பத்தைத் தமோகுணத்தில் இருந்து விடுபட்டுத் தெளிவாக உணர்ந்து வருபவன் சந்நியாசி ஆகின்றான். ஆக நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளிலும் உலக வியவகாரங்கள் என்னும் கீழ்மையில் அகப்படாது பரத்தோடு சம்பந்தப்படுத்தி வாழ்கின்ற வாழ்விற்குச் சந்நியாசம் என்று பெயர்.

நனவு, கனவு, உறக்கம் ஆகிய அனைத்திலும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளில் உண்டாகும் பலன்களைத் துறந்து சொரூப நினைவிலேயே யாண்டும் இருக்க முயலுவதற்குத் தியாகம் என்று பெயர். அத்தகைய தியாகத்தில் பேரானந்தத்தைக் காண்பவன் யோகி ஆகின்றான். செல்வம், பேர், புகழ், பட்டம் ஆகியவற்றில் இன்பம் இருப்பதாக எண்ணுபவன் போகி ஆகின்றான். போக வாழ்வைத் துறந்து யோக வாழ்வு வாழ்பவனே தியாகி ஆவான். ஆக, சந்நியாசம், தியாகம் ஆகிய இரண்டும் அபரவாழ்வாகிய இப்பிரபஞ்ச வாழ்விலிருந்து பரவாழ்வாகிய பேரின்ப வாழ்விற்கு நம்மை எடுத்துச் செல்வதாகும். சந்நியாசி சத்கர்மங்களைப் புனித பாவனையுடன் செய்கின்றான். போக வாழ்வில் தியாகி எல்லாக் கர்மங்களின் பலன்களையும் விட்டுவிடுகிறான். கர்மபலனில் பற்றை ஒழிக்கும்பொழுது கர்மம் தியாகியைக் கட்டுப்படுத்துவது இல்லை.

கேள்வி: *(809)* ஸ்ரீமத் என்பதற்குப் பொருள் என்ன?

பதில்: ஸ்ரீமத் என்பதன் பொருள் மேன்மைக்கு இருப்பிடம் என்பதாம். ஸ்ரீமத் பகவத்கீதை என்று பகருமிடத்து மேலான உண்மைகளை விளக்குகிற போற்றுதலுக்குரிய பெரிய நூல் எனப் பொருள்படுகிறது. ஸ்ரீமத் சங்கரன் என்று சொல்லுகிறவிடத்துப் போற்றுதலுக்குரிய பெரிய மூர்த்தி. அவர் நலனே செய்கின்றவர்; கேட்டுக்கும் அவருக்கும் தொடர்பு ஏதுமில்லை என்பதாம்.

கேள்வி: (810) சுருதி, ஸ்மிருதி என்றால் என்ன?

பதில்: கர்ண பரம்பரையாகக் காதால் கேட்டுக் காப்பாற்றி வைக்கப்பெற்றது எதுவோ அது சுருதி, ஸ்மிருதி எனப் பொருள் படுகிறது. உபநிஷதங்கள் சுருதியாகின்றன. பராசர ஸ்மிருதி, மனு ஸ்மிருதி முதலியவைகள் ஸ்மிருதிகளில் பிரசித்தமான வைகள். பகவத்கீதை சுருதியாகவும் ஸ்மிருதியாகவும் விளங்குகிறது.

சுருதி நெடுங்காலமாக ஒருவரிடமிருந்து மற்றொருவர் கேட்டு வந்தது எனினும் அதன் சொல்லமைப்பை யாரும் மாற்றி விடவில்லை. கணிதத்தில் கூட்டல், பெருக்கல் முதலான வற்றைக் கொண்ட எண்சுவடியை எங்ஙனம் எவரும் மாற்ற முடியாதோ அங்ஙனம் சுருதியை மாற்றமுடியாது. சுருதி யாண்டும் சாசுவதமானது. ஸ்மிருதிகள் சாசுவதமானவைகள் அல்ல. காலத்துக்கும் இடத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு அவை மாறியமையும்.

பரதத்துவத்தை நன்கு விளக்குவது சுருதி. பரதத்துவத்துக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்வது சனாதன தர்மம். சுருதியிலிருந்து சனாதன தர்மத்தை உள்ளபடி அறிந்து கொள்ளலாம். அப் போதைக்கப்போது மாறியமையும் சமூகக் கோட்பாடுகளைக் கொண்டது ஸ்மிருதி. சமூக நடைமுறைகளை நன்கு அறிந் துள்ள மேலோன் காலத்துக்கு ஏற்றவாறு ஸ்மிருதியைத் திருத்தியமைத்துக் கொள்கின்றான்.

பகவத்கீதை சனாதன தர்மத்தை உள்ளபடி புகட்டுவதால் அது சுருதியாகிறது. சமுதாய அமைப்பு எத்தகையது என்பதையும் அது எங்ஙனம் நிகழவேண்டும் என்பதையும் பகவத்கீதை அறிவுறுத்துவதால் அது ஸ்மிருதியாகிறது. எனவே, பகவத்கீதை சுருதியாகவும் ஸ்மிருதியாகவும் விளங்குகிறது. பகவத்கீதையைக் கற்றறிபவன் பாரமார்த்திகத் தத்துவங்களையும் உலக நடைமுறை உண்மைகளையும் கற்றறிந்தவன் ஆகின்றான்.

கேள்வி: (811) புரோகிதம் என்றால் என்ன? புரோகிதர் வீட்டில் ஏன் உணவு ஏற்கலாகாது?

பதில்: கடவுள் வழிபாட்டையும், லௌகிகச் சடங்கு களையும் ஒருவர் பொருட்டு இன்னொருவர் செய்தால் அது

புரோகிதம் எனப் பெயர் பெறுகிறது. கிரியை, அர்ச்சனை என்பவை கடவுள் வழிபாட்டில் மற்றொரு பகுதியாகும். ஜபம், தியானம், ஸ்தோத்ரம், பிரார்த்தனை போன்ற கடவுள் வழி பாடுகளை மற்றொரு மனிதன் துணைகொண்டு நிறைவேற்றினால் அது புரோகிதம் எனப்படும். உபநயனம், அக்ஷராப்யாசம் என்பன அவற்றிற்கு அடுத்தபடியிலிருக்கும் செயல்களாகின்றன. உயர்ந்த எண்ணங்களைச் சிறுவர் மனதில் செலுத்துவதற்கு உபநயன சமஸ்காரம் என்பது பெயர். அத்தகைய நல்வாழ்வை மாணாக்கனுக்குத் துவக்கிவைப்பவர் புரோகிதராகிறார். அதற் கடுத்த நிலையாக விவாகச் சடங்குகளையும், நாமகரணச் சடங்குகளையும் செய்து வைப்பவர் புரோகிதராகிறார். இறுதியாக இறந்தவர்களைக் குறித்துச் செய்யும் சிரார்த்தச் சடங்குகளையும் செய்துவைப்பவர் புரோகிதராகிறார். எனவே பிறத்தல், வாழ்தல், மாய்தல் ஆகிய வாழ்க்கைக்குரிய முக்கிய மூன்று செயல்களில் புரோகிதர் தொடர்பு கொள்கின்றார்.

வாழ்வு என்னும் ஏணியில் பலபடிகள் மேலே போயிருப் பவர் புரோகிதராகிறார். அப்படி மேலே போனவர் வீழ்ச்சி அடையும்பொழுது அது பெரிய நீர்வீழ்ச்சி ஆகின்றது. தொழில் தன்னளவில் நல்லதுமன்று, கெட்டதுமன்று. என்ன மனப் பான்மையுடன் தொழில் செய்யப்படுகின்றதோ அதற்கேற்பத் தொழில் மேலானது அல்லது கீழானது ஆகிறது. உயர்ந்த தெய்வீக எண்ணத்துடன் செய்யும் செயல் தேவாராதனை யாகிறது. கீழான எண்ணத்துடன் செய்யும் செயல் தீய செயலாகிறது. புரோகிதன் முற்றும் தெய்வத்தை நம்பித் தன் செயலைச் செய்தால் அவன் செய்கின்ற செயல் மேலான தாகிறது. புரோகிதன் கடவுள் வழிபாட்டைப் பணத்துக்காகவும், பொருளுக்காகவும் செய்வானாகில் அவன் கீழானவனாகின்றான். தெய்வத்தை நம்பியிருக்கவேண்டிய புரோகிதன் பணத்தை நம்பி இருப்பானாகில் அவன் வீழ்ச்சியுற்றவன் ஆகின்றான். தேவாராதனையில் சிரத்தை குறைவதும், மக்களிடத்திலிருந்து பணத்தைப் பறிப்பதில் ஆசை அதிகரிப்பதும் புரோகிதனுக்குப் பெரும் வீழ்ச்சியைத் தரும். ஆசைபிடித்த புரோகிதன் தெய்வச் சடங்கில் தனது ஞானத்தை விலைக்கு விற்பானாகில் அது அவனுடைய வீழ்ச்சிக்கு ஏதுவாகும். விவாகம், சிரார்த்தம்

ஆகிய லௌகிகச் சடங்குகள் ஆத்மசாதகனுக்குப் பேரிடைஞ் சல்கள் எனலாம்.

புரோகிதத் தொழில் எத்தகைய முறையில் நிகழவேண்டு மென்பதை உலகுக்கு விளக்கிக் காட்டுவதற்கு ஸ்ரீ ராம கிருஷ்ணர் அத்தொழிலை மேற்கொண்டார். அவர் அத்தொழி லைத் தேடிப் போகவில்லை. தமையனார் விருப்பத்தின்படி ஸ்ரீ ராமகிருஷ்ணர் சில வீடுகளில் பூஜை செய்தார். அவர் பூஜையில் ஈடுபட்டுவிட்டால் காலம் போவதைக் கருத்தில் வாங்கிக்கொள்ளமாட்டார். அவர் செய்த தேவாராதனையே அவருக்கு அனைத்துமாயிற்று. அதில் அவர் அளவுகடந்த ஆர்வத்தைச் செலுத்தினார். அவர் செய்த பூஜையைக் காணலுற் றவர்கள் மெய்மறந்தவர்களாய்த் தங்கள் மனதை அதில் ஈடுபடுத்தினார்கள். பூஜை என்றால் இப்படி அல்லவோ இருக்க வேண்டுமென்று அதில் பங்குகொண்டவர்கள் பகர்ந்தார்கள். அவர் செய்த பக்தியோடுகூடிய கடவுள் வழிபாடானது அவருடைய உள்ளத்திலும், மற்றவர்களுடைய உள்ளத்திலும் பக்திப் பெருக்கெடுத்தோடும்படி செய்தது. பாரமார்த்திகப் பெரு வாழ்வைப் புரோகிதத் தொழிலின் வாயிலாக அவர் இப்பாருலகில் பரப்பினார். புரோகிதத் தொழிலை முறைதவறிச் செய்தால் அது மனிதனைச் சிறுமைப்படுத்திவிடும். முறையுடன் செய்தால் தனி மனிதனுக்கும், சமூகத்துக்கும் பெரும் நலன் விளைவிக்கும் என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் வாழ்வில் விளக்கிக்காட்டி இருக்கிறார். இன்றைக்குப் புரோகிதர்களுடைய பிடுங்கலுக்குப் பயந்து பலர் பிதுர்க் கடன்களைச் செய்வதில் பாராமுகமாய் இருந்துவிடுகின்றனர். இத்தகைய சுயநலம் படைத்துள்ள புரோகி தர்கள் வீட்டில் ஏற்கும் உணவு மனதைக் கீழ்மைப்படுத்து மாகையால் அவர்கள் வீட்டில் உணவு ஏற்கலாகாது.

கேள்வி: *(812)* மேதைநாடி, குருநாடி இவற்றின் விளக்கம் யாது?

பதில்: மானுட சரீரம் ஓர் அற்புதமான இயந்திரம். இறை வனுடைய சிருஷ்டியில் அதற்கு நிகரானது ஒன்றுமில்லை. மன அமைப்புக்கு ஏற்ற உடலமைப்பு மானுடவர்க்கத்தில் தெளிவுறக் காண்கிறோம். பண்பாடு அடையாத பாமரனுடைய

அமைப்பில் அறிஞர் சிறப்பு ஒன்றையும் காண்பதில்லை. பிறகு, பெரியபெரிய மேதைகளாக உலகில் தோன்றியவர்களுடைய மூளை அமைப்பைச் சாத்தியப்பட்ட பொழுதெல்லாம் அறிஞர்கள் ஆராய்ச்சி பண்ணிப் பார்த்திருக்கிறார்கள். யாரெல்லாம் அலாதியான ஆற்றலும், அன்பும், அறிவும் அடையப் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்களோ, அன்னவர்களுடைய மூளை அமைப்பில், அதற்கேற்ற சிறப்பும் வடிவெடுத்து இருந்திருக்கிறது.

சின்னஞ்சிறு வயதில் சிறுவர்களுடைய மூளையமைப்பு கிட்டத்தட்ட ஒரேபாங்கில் இருக்கிறது. பின்பு ஒரு சிலருடைய அலாதியான முன்னேற்றத்துக்கு ஏற்ப மூளை அமைப்பிலும் மேன்மை தானாக வந்தமைகிறது. மானுடன் வளர்ந்து வரவர அவனுடைய பாங்குக்கு ஏற்ப மூளை அமைப்பிலும் மாறுதல் வந்துகொண்டிருக்கிறது. பெருவாழ்வு வாழ்வது மனிதனிடத்திலுள்ள சிறப்பு ஆகும். மற்ற உயிர் வகைகள் அந்தந்த இனத்துக்கேற்ற முறையில் வாழ்வை நிறைவேற்றுகின்றன.

மனிதன் ஓயாது தன்னுடைய வாழ்க்கையை மாற்றியமைத்துக்கொண்டே போகிறான். நல்லவனாக அவன் தன்னை மாற்றிக்கொள்வானாகில், அந்த மாறுதல் நாடி, நரம்புகளையும் எட்டுகிறது. புனிதத்தில் ஊறியவனாக மனிதன் வாழ்ந்து வருகிற பொழுது அந்தப் புனிதம் உள்ளத்தோடு நின்று விடுவதன்று; அது உடலையும் எட்டுகிறது. மேதை நாடி என்பது பிறப்பில் உண்டானதன்று. வாழ்க்கை முறையின் விளைவாக அது வடிவெடுக்கிறது. யோகி ஒருவன் நிரந்தரமாக ஐம்பொறிகளைக் கட்டி ஆளுவானாகில், அவன் அஹிம்சையிலும், சத்தியத்திலும் நிலைபெற்றவனாக இருப்பானாகில், நாளடைவில் அவனிடத்து மேதை நாடி உருவெடுக்கிறது. தத்துவத்தை உள்ளது உள்ளபடி அறிந்து கொள்ளுவது மேதை நாடியாம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்பது கோட்பாடு. இங்ஙனம் மெய்ப்பொருள் காண்பவனிடத்து மேதை நாடி உருவெடுத்திருக்கிறது. மனிதனிடத்துள்ள மேன்மைகளெல்லாம், சிற்றுயிர்களிடத்தும் ஒடுங்கிய பாங்கில்

அமைந்திருக்கின்றன என்பதை நல்லறிஞன் ஒருவன் அறியவருகிறான். மேதைநாடி அமையப்பெற்றதின் விளைவு அது. உயிர்வகைகள் உடல் சொரூபம் அல்ல; அந்தந்த உடலில் குடிகொண்டிருக்கும் அழிவில்லாத ஆத்மசொரூபம் என்னும் உண்மையைச் சுவானுபூதியில் ஒருவன் அறிகிறான். அன்னவனிடத்து மேதைநாடி உருவெடுத்திருக்கிறது. நூலறிவிலும் மிக்கது மேதைநாடி. ஆத்மஞானமும் மேதைநாடியும் ஒன்றுபட்டு விடுகின்றன. தன்னை ஆத்மாவென்று அனுபூதியில் அறிவதுதான் அறிவின் முடிந்தநிலை. 'சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே' என்று அனுபூதிமான் ஒருவர் இயம்பியுள்ளார். மேதை நாடியை உருவாக்கியதின் விளைவாக அவருக்கு இந்தப் பரஞானம் உதயமாயிற்று. அதை அடையப்பெறாத நாமும் இந்தச் சிறந்த கோட்பாட்டை நம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்தலாம். அறிவைத் தீட்டுகிற வாழ்க்கை முறையுண்டு. அறிவை மழுங்கச் செய்கின்ற வாழ்க்கை முறையும் உளது. ஆன்றோர் வாக்கில் நம்பிக்கை வைத்து நாம் நல்வாழ்வு வாழ்ந்து வந்தால் மேதைநாடி நம்மிடத்து வருகிறது. பொருள் களைப் பற்றிய உண்மைகளை உள்ளபடி அறிந்துகொள்ளும் திறமை நமக்கும் வருகிறது. இத்தெய்வீகத் திறமைதான் மேதைநாடி என்னும் பெயர் பெறுகிறது.

குருநாடி என்பது கிட்டத்தட்ட மேதைநாடிக்கு ஒத்ததாக இருக்கிறது. இரண்டு சான்றுகளின் மூலம் விளக்கலாம். பக்தியின் மேன்மை ஆயர்பாடியில் வாழ்ந்து வந்த கோபிமார்கள் வாயிலாக வெளியாயிற்று. பக்தி ஓங்குதற்கேற்பச் சிற்றியல்புகளெல்லாம் அடிபட்டுப் போகின்றன. பக்தி ஓங்குதற்கேற்பக் காமநோய் ஒதுக்கப்படுகிறது. பக்தி ஓங்குதற்கேற்பப் பகவத்சொரூபமே அகத்திலும், புறத்திலும் மிளிர்கிறது. அங்ஙனம் பகவத் சொரூ பத்தை யாண்டும் தரிசித்து வந்தவள் கோபிமார்களுக்கிடையில் தலைவியாய் இருந்த ஸ்ரீமதி ராதையாவாள். அவளுடைய அமைப்பு முழுதும் கிருஷ்ணன் மயமாக மேலோங்குவதாயிற்று. அவள் படைத்திருந்த ஐம்பொறிகளும் அலாதியான ஆற்றல் படைத்தவைகளாயின. மேலும் குருநாடி வாய்க்கப்பெற்ற ராதையின் கண்கள் கண்ணனுடைய வடிவத்தைக் காண்பதோடு நின்றுவிடவில்லை. அதே கண்களுக்கு ஓசையின் வடிவத்தைக்

காண்கிற திறமையும், கண்ணன் நாமத்தில் அமைந்திருந்த இன்சுவையை ரசிக்கும் ஆற்றலும், கண்ணனைத் தீண்டுவதால் வருகிற பேரானந்தத்தை அனுபவிக்கவும் ராதை வல்லவ ளானாள். சுருங்கச் சொல்லின் பக்தியின் விளைவாக ஓர் இந்திரியத்துக்கு ஐந்து இந்திரியங்களினுடைய திறமைகள் அனைத்தும் ஒருங்கே அமைகின்றன. இங்ஙனம் அமையப் பெறுவது குருநாடியாகும். ராதை படைத்திருந்த அத்திறமை ஒரு செயலின் மூலம் வெளியாயிற்று. கண்ணனை நீராட்டு வதற்காக யமுனாநதி ஜலம் கொண்டுவரும்படி ஏனைய கோபிமார்கள் ராதையிடம் வேண்டினார்கள். அவள் கையில் மட்குடம் ஒன்றைக் கொடுத்தார்கள். அம்மட்குடத்தில் கணக்கற்ற துவாரங்கள் இருந்தன. ராதைக்கு அது ஒன்றும் தெரியாது. கண்ணன் சேவையில் அவள் தன் சொரூபத்தை ஒப்படைத்தாள். கண்ணனைக் குளிப்பாட்டுவதற்கு நிகரான பாக்கியம் வேறு யாது உளது என்று அவள் உணர்ந்தாள். விரைந்தோடி அம்மட்குடம் நிறைய யமுனா நீர் கொண்டுவந்து சேர்த்தாள். ஒரு சொட்டுத் தண்ணீரும் அக்குடத்தைவிட்டு ஒழுகிப் போக வில்லை. கண்ணனை நீராட்டிய பிறகு அக்குடத்தில் அமைந் துள்ள துவாரங்களைக் கோபிமார்கள் ராதைக்கு விளக்கிக்காட்டி னார்கள். அவளுடைய மகிமை எவ்வளவு பெரியது என்று அவர்கள் இயம்பினார்கள். அது கண்ணனுடைய மகிமையென்று ராதை பதிலுரைத்தாள். அவள் படைத்திருந்த குருநாடியின் பாங்கு அத்தகையது.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் குருநாடியை மற்றொரு பாங்கில் படைத்திருந்தார். இக்காலத்திய மக்களெல்லோரும் பணத்தைப் போற்றும் பாங்குடையவர்களாக இருக்கின்றனர். இதற்கு நேர்மாறாகப் பணத்தைப் புறக்கணிக்கும் பாங்குடையவராகப் பரமஹம்சர் தம்மைத் திருத்தியமைத்தார். ஒரு கையில் மண்ணை எடுத்தார், மற்றொரு கையில் காசு ஒன்றை எடுத்தார். பிறகு இங்ஙனம் சங்கல்பித்தார். "பொன் மண்ணினின்று வந்தது. பொன் மீண்டும் மண்ணாகக் கூடியது. இதன்மீது வைக்கிற பற்றுதல் பக்தியைப் பாழ்படுத்துகிறது. மனிதன் போற்றுகிற காசை நான் திரிகரணங்களாலும் தீண்ட மாட்டேன்" என்று ஆழ்ந்து சங்கல்பித்தார். கையிலிருந்த

மண்ணையும் காசையும் கங்கைக்குள் வீசியெறிந்தார். அவர் செய்த சங்கல்பத்தின் விளைவாக அவர் படைத்திருந்த நாடி நரம்புகளெல்லாம் திருந்தியமைந்தன. காசு ஒன்று அவருடைய மேனியைத் தீண்டினால், தேள் கொட்டுவது போன்று அவர் உடலில் வலி எடுக்கும். காசு வைக்கப்பட்டிருக்கும் படுக்கையின் மீது படுக்க அவருக்கு இயலாது. காசு வைக்கப்பட்டிருக்கும் ஆசனத்தின் மீது அமர அவருக்கு இயலாது. அவருடைய இந்த அதிசய அமைப்பை விவேகானந்தர் மறைமுகமாக ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தார். அதில் பாசாங்கு ஒன்றுமில்லை என்பதை அறியவந்தார். மனிதன் எண்ணுகிற மேலான எண்ணத்துக்கு ஏற்ப அவனுடைய நாடி நரம்புகளெல்லாம் திருந்தியமைகின்றன என்னும் உண்மையைக் கண்டார். ஓர் ஆத்மசாதகனுடைய நாடி நரம்புகளெல்லாம் அவன் கொண்டுள்ள லக்ஷியத்திற்கு ஏற்ற பிரகாரம் பண்பட்டு அமையுமானால் அது குருநாடி எனப்படுகிறது.

கேள்வி: *(813)* உள்ளம், சித்தம், மனம், புத்தி, அகங்காரம் இவற்றிற்குரிய விளக்கம் யாது?

பதில்: உலகை அறிவதற்குப் புறக்கரணம், அந்தக்கரணம் ஆகிய இரண்டும் தேவை. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தும் புறக்கரணங்களாகின்றன. உள்ளம், சித்தம், மனம், புத்தி, அகங்காரம் என்பன அந்தக்கரணத்துக்குரிய மறுபெயர்களாகும். அந்தக்கரணம் செயல்படுவதற்கேற்ப அதற்கு அப்பெயர்கள் வந்தமைகின்றன. புறக்கரணங்களையும் அந்தக் கரணத்தையும் அடக்குவதன் மூலம் மனிதனிடத்துள்ள தெய்வீகம் வெளிப்படுகிறது.

உள்ளம் ஆகாசத்தின் அம்சமாகும். ஆகாசத்தில் பிரபஞ்சமும் பிரபஞ்சத்திலுள்ள பொருள்களும் அடங்கியிருப்பன போன்று உள்ளத்தில் சித்தம் என்பது அடங்கியிருக்கிறது. சித்தத்துக்கு உபமானம் நீர் நிறைந்த குளம். குளத்தில் நீர் நிறைந்திருப்பது போன்று சித்தத்தில் விருத்திகள் இருக்கின்றன. நீரில் அசைவு ஏற்படும்பொழுது அலை உருவெடுக்கிறது. விருத்திகளில் உண்டா கின்ற அசைவு எண்ணமாக வடிவெடுக்கிறது. எண்ணத்தை மனம் என்று கூறுகின்றோம். எண்ணத்தை நல்லதா கெட்டதா

என்று பாகுபடுத்துகின்ற செயல் செய்வதைப் புத்தி என்கிறோம். எண்ணத்தைத் தனக்குரியதாகக் கருதும் செயலை அகங்காரம் என்கிறோம்.

சித்தம் நீரின் அம்சமாகும். நீர் பள்ளத்தை நோக்கி ஓடுவது போன்று சித்தம் விஷயாதிகளில் ஓடிக்கொண்டிருக்கும். பெருக்கெடுத்து வருகின்ற நீரை அணைகோலித் தடுத்துப் பாசனத்துக்குப் பயன்படுத்தலாம். குழாய் வழியாக நீரைச் செலுத்தி மின்சக்தியை உண்டுபண்ணலாம். சித்தத்தில் உண்டாகும் காம உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கடவுள்பால் செலுத்தினால் பக்தி என்னும் பேரியல்பைத் தோற்றுவிக்கலாம். சித்தத்தில் உண்டாகும் உணர்வைக் கட்டுப்படுத்திச் சரியான மார்க்கத்தில் செலுத்துபவன் சித்த புருஷனாகிறான்.

மனம் வாயுவின் அம்சமாகும். வாயு போன்று மனம் அலையும் தன்மையுடையது. மனம் எப்படி அலைகின்றது என்பதை அர்ஜுனன் கண்ணனிடம் பகர்ந்ததாவது:

சஞ்சலம் ஹி மன: க்ருஷ்ண ப்ரமாதி பலவத்த்ருடம் ।
தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ॥

"கண்ணா! மனம் அலையும் தன்மையுடையது. அது பலம்மிகப் பொருந்தியது. காற்றை அடக்கமுடியாதது போன்று மனத்தை அடக்குவது கஷ்டம்."

தாயுமானவரும் மனதின் அடங்காத் தன்மையைப்பற்றி முறையிடுவதாவது:

"எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி
ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்தது இனிப் போதும் பராபரமே"

இப்படி அலைகின்ற மனதை அடக்குவதற்கு இரண்டே உபாயங்கள்தாம் இருக்கின்றன என்று கண்ணன் பகர்கின்றார். ஒன்று இடைவிடாத அப்பியாசமாகும். மற்றொன்று நித்தியத்தில் மனத்தை நிலைநிறுத்தி அநித்தியத்திலிருந்து மனத்தைப் பிரித்தெடுப்பதாகும்.

புத்தி அக்னியின் அம்சமாகும். அக்னி இருளைப் போக்குகின்றது. தெளிந்த புத்தி ஞான ஒளியை உண்டாக்குகிறது.

ஞானம் புத்தியைத் தெய்வத்தின்பால் திருப்புகிறது. புத்தி தெய்வத்தினைச் சார்ந்திருக்கும்பொழுது சித்தம் தெய்வத்தின்பால் ஒப்படைக்கப்படுகிறது. விஷயாதிகளில் மனம் செலுத்தப்படும் பொழுது விஷயப்பற்று உண்டாகிறது. விஷயப்பற்று காமவெறி யாகிப் புத்தியை மழுங்கச் செய்கிறது. புத்தியைக் கடவுள்பால் செலுத்துபவனே விவேகியாகின்றான்.

அகங்காரம் மண்ணின் அம்சமாகும். மண்ணின் அம்சமாக உள்ளது பூத உடல். பூத உடலைத் தன்மயமாக அபிமானிப்பது அகங்காரம். அகங்காரத்திலிருந்துதான் கேடுகள் யாவும் தோன்று கின்றன. "அஹம் பிரம்மாஸ்மி" என்பது வேதவாக்கியம். "நான் பிரம்ம சொரூபமாக இருக்கிறேன்" என்பது அதற்குப் பொருள். பரப்பிரம்ம சொரூபமாகத் தன்னை உணர்பவன் பிரம்ம மயமாகின்றான். எனவே "நான் பிரம்மம்" என்று சொல்லும் அஹங்காரம் நம்மைக் கட்டிலிருந்து விடுவித்து முக்தி நிலைக்கு எடுத்துச் செல்கிறது. அந்தக்கரணத்தின் செயல்களை அடக்குபவன்தான் சிறந்த துறவியாகின்றான்.

"அந்தக்கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும்நன்று எந்தாய் பராபரமே"

என்கிறார் தாயுமானவர். அந்தக்கரணத்தின் தன்மையை அறிந்து அதை அடக்கும் சாதனத்தை மேற்கொண்டு பேரறிவு மயமாக முயல்வது மானுட வாழ்வின் முடிந்த லட்சியமாகும்.

கேள்வி: *(814)* அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரை பிரம்ம முகூர்த்தம் என்று கூறப்படுகிறது. அதன் பொருள் என்ன?

பதில்: இயற்கையின் நடைமுறையில் ஒழுங்குப்பாடு இருக்கிறது. அந்த ஒழுங்குப்பாடு சில வேளைகளில் மனித னுக்குப் பேருதவி பண்ணக்கூடியதாக வந்தமைகிறது. இரவும் பகலும் சந்திக்கிற நேரத்தைச் சந்தியாவேளை என்கின்றோம். அந்நேரத்தைக் கடவுள் வழிபாட்டில் பயன்படுத்தினால் மனிதன் அதில் அடையும் நன்மையானது மிக அதிகம். மற்ற நேரங்களில் பண்ணும் வழிபாட்டைவிட அதிகமான சாந்தியையும் நலனையும் சந்தியா நேரம் உண்டுபண்ணுகிறது.

அதேபாங்கில் பிரம்ம முகூர்த்தம் எனப்படும் அதிகாலை 4-00 மணியிலிருந்து 6-00 மணி வரையில் செய்கின்ற கடவுள் வழிபாடு ஆத்ம சாதகனுக்கு நன்கு பயன்படுகிறது. அந்த நேரத்தைக் கடவுள் வழிபாட்டில் பயன்படுத்திப் பார்ப்பவர் களுக்கே இவ் உண்மை விளங்குகின்றது. ஆதலால் அந்த நேரத்தை மக்கள் எல்லோரும் பயன்படுத்துவது உசிதம்.

கேள்வி: *(815)* குண்டலினி சக்தி என்றால் என்ன?

பதில்: குண்டலினி சக்தி என்பதைப் பற்றித் தெளிவாக அறிந்திருப்பது அவசியம். யோகநூல் மூலாதாரத்தில் உறங்கிக்கிடக்கும் ஆன்ம சக்தியைக் குண்டலினி சக்தி என்று கூறுகிறது. இயற்கையிலுள்ள ஒரு சக்தியை மற்றொரு சக்தியாக மாற்றி அமைக்கலாம். உதாரணமாக, சலன சக்தியை மின் சக்தியாக மாற்றலாம். மின் சக்தியை உஷ்ண சக்தியாகவும், ஒளிச் சக்தியாகவும், ஒலிச் சக்தியாகவும் மாற்றியமைக்கலாம். இந்த மாறுதல்கள் எல்லாம் ஜடசக்தியில் நிகழும் மாறுதல் களாகும். நம்மிடத்திலுள்ள சக்தியிலும் மாறுதலை உண்டு பண்ணலாம். உணவை உண்டு சரீரத்துக்குச் சக்தியைத் தேடுகிறோம். அந்தச் சக்தி ஐம்பொறிகளின் வாயிலாகச் சிதறுண்டு போய்க்கொண்டிருக்கிறது. புலனடக்கத்தின் வாயிலாகச் சரீர சக்தியை மனோசக்தியாக மாற்றி அமைக்கலாம். ஆத்ம தியானத்தின் மூலமாக மனோசக்தியை ஆன்ம சக்தியாக மாற்றலாம்.

உடல் முதிர்ந்து பக்குவம் அடைதல் என்பது ஆண், பெண் ஆகிய இருபாலார்க்கும் பொதுவானது. பிள்ளைகளைப் பிறப்பிக்கும் ஆற்றல் சரீரத்துக்கு உண்டாகும்போது அது பக்குவம் அடைந்ததெனக் கருதப்படுகிறது. அப்பருவம் வாழ்க்கையில் ஒரு நெருக்கடியான நிலையாகும். பக்குவம் அடைந்துவரும் இளைஞர்கள் அப்பக்குவத்தை இன்னது என்று அறிந்துகொள்ளாது வாழ்க்கையைப் பலவிதங்களில் பாழாக்கி விடுகின்றனர். பக்குவம் அடைகின்ற பருவம் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டு பதினாறு வயதுக்கு உட்பட்டதாகும். பக்குவம் அடைகின்ற வயது பிந்துகின்றவளவு உடலுக்கு நல்லது.

உடலில் சுசும்னை நாடி என்பது முள்ளந்தண்டு அல்லது முள் எலும்பு. ஜீவநாடிகளுள் சுசும்னை நாடி மிக முக்கிய மானது. உடல் பக்குவம் அடையும்பொழுது மூளைக்கு ஒப்பாகிய ஓர் உயர்ந்த தாது சுசும்னை நாடியில் உண்டாகிறது. ஆடவரிடத்து உண்டாகும் அந்தத் தாதுக்குச் சுக்கிலம் என்றும், மகளிரிடத்து உண்டாகும் அந்தத் தாதுக்குச் சுரோணிதம் என்றும் பெயர். பொதுவாக அதை விந்து என்று அழைக்கலாம். இரத்தத்தில் மிக உயர்ந்ததும், சக்தி வாய்ந்ததுமான அணுக் களினின்று விந்து உண்டாகிறது. தெள்ளியெடுக்கப்பட்ட சில நூற்றுக்கணக்கான இரத்தத்துளிகள் சேர்ந்து ஒரு துளி விந்து ஆகின்றது. இரத்தத்தை விட அது பன்மடங்கு சக்தி வாய்ந்தது. ஜீவ களை அதனூடே உள்ளது. விந்து உபயோகிப்பதற்கேற்ப வாழ்வு உயர்வு அல்லது தாழ்வு அடைகிறது.

பக்குவம் அடைந்த சரீரத்தில் விந்து சிரசினின்று மூலாதாரத்தை நோக்கி வரும். சிந்தையானது அப்பொழுது பெரிதும் சிற்றின்பத்தையே நாடும். சிற்றின்ப அறிவைக் கேட்டு அறியாதவர்களுக்கும் ஜன்மாந்தர வாசனையின் பயனாக அவ்வறிவு இயல்பாகவே உதித்துவிடும். விஷய சுகங்களைப் பற்றி மனோராஜ்யம் பண்ணுவதில் பேருவகை உண்டாகும். காமத்துக்கு வசப்பட்டு விந்துவைக் கலைப்பதற்கே எண்ணம் வரும். விந்துவை விரயம் செய்தாலன்றி வெறியும் அடங்காது. விந்துவைச் சேதப்படுத்துபவன் வீரியத்தை இழந்து வாழ்க்கையை அறவே குலைத்துக்கொள்கின்றான். விந்துவைக் கட்டிக்காப்பவன் ஒழுக்கத்தில் நிலைபெறுபவனாகின்றான். விந்துவை விரயம் பண்ணாது காப்பவனுக்குத் தெய்வசம்பத்துக்கள் தாமே உண்டாகின்றன. கெட்ட எண்ணமும் செய்கையும் விந்துவைக் கலைத்து விடுகின்றன. விந்து நாசத்தைவிட உடலுக்குக் கேடு தருவது வேறொன்றுமில்லை. விந்துவை விரயம் பண்ணுகின்ற வனுக்குத் தேகதிட்பம் போய்விடும். தைரியத்துக்கும் அவனுக்கும் வெகுதூரம். உள்ளத்தின்கண் ஊக்கமும் உற்சாகமும் குன்றிப் போய்விடும். புத்தியில் தீட்சண்யமிராது. சிந்தையில் சஞ்சலமும் சந்தேகமும் குடிகொள்ளும். விந்துவைக் காப்பவனுக்கு அது உடல் எங்கும் வியாபித்து உடலில் லயமாகின்றது. மேலான மூளையும், நாடியும், தசையும் அதனின்று உண்டாகின்றன.

விந்துவைக் கட்டிக்காப்பவன் அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மை உடையவனாவான். அவனுடைய முகத்தில் ஆனந்தம் தென்படும். கண்களில் ஒளிவீசும்.

சரீரத்தில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. உடலின் அடிப்பாகத்தில் குறியின்கண் இருப்பதற்கு மூலாதாரம் என்று பெயர். அதற்குச் சற்று மேல் இருப்பது சுவாதிஷ்டானம். நாபியில் இருப்பது மணிபூரகம். இருதய கமலத்தில் இருப்பது அனாகதம். கண்டத்தில் இருப்பது விசுத்தி. நெற்றியில் இருப்பது ஆக்ஞை. மூலாதாரம் முதல் மூன்று ஆதாரங்களில் மனது உழலும்போது சரீர உணர்ச்சி தடித்திருக்கும். காம சம்பந்தமான விருத்திகள் அப்பொழுது அதிகரிக்கும். தூய அன்பு, ஈசுவர சிந்தனை முதலியன மனம் அனாகதம் முதல் ஆக்ஞை வரையில் லயித்திருக்கும்பொழுது உண்டாகும். அந்நிலையில் ஆத்மபோதம் மேலிடுகிறது. மனதை ஆக்ஞைக்குமேல் எடுத்துச் செல்கின்றவனுக்கு உலக ஆசை சொப்பனத்திலும் உண்டாவதில்லை.

மனிதன் காமத்தை வெல்லுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆத்ம சக்தியை வளர்த்துக் காமத்தின் ஆவேசத்தைக் குறைக்கின்றான். உடலின் அருவருப்புத்தன்மையை ஆழ்ந்து எண்ணுவதன் மூலமாகவும், சத்கர்மத்தில் ஈடுபடுவதன் மூலமாகவும், கசிந்துருகிப் பிரார்த்தனை செய்வதன் மூலமாகவும் மனதை எப்பொழுதும் உன்னத நிலையில் வைத்திருக்கலாம். ஆண்பாலர்கள் பெண்பாலர்களை எல்லாம் பராசக்தியின் வடிவமாகக் காண்பதாலும், பெண்பாலர்கள் ஆண்பாலர்களைச் சிவம் அல்லது நாராயண வடிவங்களாகக் காண்பதாலும் காம உணர்ச்சியை வெல்லலாம்.

ஒழுக்கமான வாழ்வின் மூலம் குண்டலினி சக்தியை அல்லது ஆன்மீக சக்தியை விழிப்படையச் செய்யவேண்டும். ஆன்மீக சக்தி விழிப்படையும்பொழுது அதை ஆன்மீக முன்னேற்றத்துக்கே பயன்படுத்தவேண்டும். சிலருக்குச் சில அபூர்வ சக்திகள் வந்து வாய்க்கும். அவ் அபூர்வ சக்திகள் மூலம் மக்களை மயக்கலாகாது. ஆன்மீக சக்தியின் மூலம் மயக்கத்தினின்று தன்னையும் விடுவித்துக்கொண்டு மற்றவர்களையும்

மயக்கத்தினின்று விடுவிக்கவேண்டும். ஆன்மீக சக்தியினால் உள்ளத்தில் உறுதியும் திட்பமும் ஏற்படும். குண்டலினி சக்தி என்னும் ஆன்மீக சக்தியை விழிப்படையச் செய்து ஆன்மீக லாபம் அடைவோமாக.

கேள்வி: *(816)* தாரணை என்றால் என்ன?

பதில்: இராஜயோகத்திற்கு அஷ்டாங்கயோகம் என்பது மற்றொரு பெயர். அஷ்டாங்கம் என்றால் எட்டுப் பிரிவுகளைக் கொண்டது என்பது பொருள். யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன அவ் எட்டுப் பிரிவுகள் ஆகும். இவற்றுள் பிரத்யா காரம், தாரணை, தியானம், சமாதி என்பன மனதில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளாகும். மனதைப் பஞ்சேந்திரியங்கள் வழியாகப் புறவுலகிற்குச் செல்லாது தடுத்து உள்ளே இழுத்து மனோ சக்தியையெல்லாம் ஒன்று திரட்டுவதற்குப் பிரத்யாகாரம் என்று பெயர், ஒன்று திரட்டிய மனோசக்தியை லட்சியத்தின்பால் குவிப்பதற்குத் தாரணை என்று பெயர்.

சிதறுண்டு போகின்ற சூரிய ஒளிக்கிரணங்களை ஒரு லென்சின் உதவிகொண்டு ஒரு காகிதத்தின்மீது குவியச் செய்தால் அக்காகிதம் பற்றி எரியும். குவிக்கப்பட்ட ஒளிக்கிர ணங்களுக்குச் சக்தி அதிகமாகிறது என்பது அதிலிருந்து விளங்கு கிறது. அங்ஙனம் மனதை ஒரு லட்சியத்தின்பால் குவியச் செய்தால் நம்முடைய சித் அல்லது அறியும் சக்தி அதிகமாகிறது. மனம் எதனிடத்துக் குவிகின்றதோ அதைப்பற்றிய ரகசியங்கள் எல்லாம் நமக்கு விளங்கிவிடும். மனோசக்தியை ஒன்றின்பால் குவிப்பதற்குத் தாரணை என்று பெயர். குவியப்பட்ட மனது அதில் நிலைத்திராமல் விரைவில் கலைந்துவிடும். ஒன்றில் குவிக்கப்பட்ட மனது அதில் நீடித்து நிலைத்திருக்குமானால் அதற்குத் தியானம் என்று பெயர். அதாவது தாரணை தொடர்ந்து நீடித்தால் அது தியானமாக மாறுகிறது. தியானம் ஆழ்ந்ததாகு மானால் சமாதி கூடுகிறது. எந்தப்பொருளைத் தியானிக்கின் றோமோ அந்தப் பொருள் மயமாகச் சமாதியில் மாறிவிடு கின்றோம். தியானத்தின் ஆரம்ப நிலையைத் தாரணையென்றும், தியானத்தின் முடிந்த நிலையைச் சமாதி என்றும் கூறலாம்.

தாரணைக்கு முன்பு பிரத்யாகாரம் என்ற செயல் நிகழவேண்டும். பிரத்யாகாரத்தின் மூலம் மனதின் சக்தியை ஒன்று சேர்த்து அதை ஒரு லட்சியத்தின் மீது செலுத்துவதுதான் தாரணை ஆகும்.

கேள்வி: *(817)* அன்பு, பாசம் ஆகிய இவ்விரண்டுக்கும் இடையிலுள்ள பாகுபாட்டைச் சான்றுகள் மூலம் விளக்க வேண்டுகிறேன்.

பதில்: அன்பு, பாசம் ஆகிய இரண்டும் பற்றுதல் என்னும் சக்தியின் இரண்டுவிதத் தோற்றங்களாம். பிரபஞ்சம் முழுதும் பற்றுதல் மயமாய் இருக்கிறது. பற்றுதல் இல்லாவிட்டால் பிரபஞ்ச வாழ்வு நிகழாது. இந்தப் பற்றுதல் அன்பு ஆகவும், பாசம் ஆகவும் வடிவெடுக்கிறது. அன்பில் தோஷமில்லை; பாசத்தில் தோஷம் உண்டு. பாசத்தை அன்பாக மாற்றுதற்கு ஏற்பத் தோஷத்தைத் துடைக்கலாம். இனி, சில சான்றுகள் எடுத்துக்கொள்வோம். ஊருக்குப் பொதுவாகப் பூங்கா ஒன்று அமைக்கப் பெற்றிருக்கிறது. அது மக்களுடைய பொதுவுடைமை. மக்கள் எல்லோரும் அதை நன்கு பயன்படுத்தலாம். பூங்காவுக்குச் செல்லுகின்ற மானுடன் ஒருவன் ஆங்கு அமர்ந்துகொண்டு அதன் அழகை ரசிக்கிறான். இரசிப்பதற்கு ஏற்ப அவனுடைய வாழ்வு பெருவாழ்வு ஆகிறது. இது அன்பின் விளைவு. மற்றொரு மனிதன் பூங்காவிலுள்ள பூக்களைப் பறிக்க முயல்கிறான். அப்படி அவன் செய்வதற்குத் தடை உண்டாகிறது. தடை பண்ணுபவர்களோடு அவன் சண்டை இடுகிறான். பூங்கா எல்லோருக்கும் பொதுவானது என்கிறான். பொது உடைமையாய் இருப்பதால் தனக்கு பூப்பறிக்கும் உரிமை உண்டு என்று வாதாடுகிறான். அவன் அப்படிச் செய்வது அவனுக்கும் சங்கடம், பூங்காவைக் காத்து வளர்த்து வரும் வேலைக்காரனுக்கும் சங்கடம், பொதுமக்களுக்கும் சங்கடம். இது பாசத்தின் விளைவு.

மற்றொரு சான்று எடுத்துக்கொள்வோம். வீடு ஒன்றில் அழகிய குழந்தை ஒன்று வளர்ந்து வருகிறது. அதைக் கண்டு களிக்கவும், அதனோடு உறவாடவும் ஊரார் வருகின்றனர். அப்படி அவர்கள் செய்வது அன்பின் விளைவு. குழந்தையைப்

பெற்றெடுத்த தாய் அதைப் பேணிகாத்து வருகிறாள். தன் குழந்தையை ஊரார் பார்த்தால் அதற்குத் திருஷ்டி தோஷம் வந்துவிடும் என்று அவள் அஞ்சுகிறாள். அந்த அழகிய குழந்தை மற்ற குழந்தைகளோடு சண்டையிட்டு அவைகளைத் துன்புறுத்துகிறது. அக்குழந்தையை நேசிக்கிற அண்டை வீட்டார் களே அது செய்கிற குற்றத்தைத் தாயிடம் தெரிவித்து அதைத் திருத்தியமைக்கும்படி வேண்டுகிறார்கள். ஆனால் பெற்ற தாயோ தன் குழந்தை கேடு ஒன்றும் செய்யவில்லை என்றும், கேடு செய்கிற பாங்கு அதனிடத்து இல்லை என்றும் இயம்புகிறாள். குறைகூற வந்தவர்களிடம் அவள் சண்டையிடுகிறாள். இது பாசத்தின் விளைவு.

அன்பு, பாசம் ஆகிய இவ்விரண்டினுள் அன்பு தூயது. அது விவேகத்தோடு கூடியது. அன்பினின்று தீங்கும் துன்பமும் வடிவெடுப்பதில்லை. இனி, பாசமோ குறைபாடு உடையது. அது விவேகத்தை அழித்துவிடுகிறது. பாசம் ஓங்குதற்கேற்பத் தீமையும் துன்பமும் அதிகரிக்கின்றன. பற்றுதலை மனிதன் பாசமாக்கிவிடலாகாது. பற்றுதலை அன்பாக மாற்றுதற்கு ஏற்ப அதன்கண் தெய்வீகம் திகழ்கிறது. தூய அன்பே இறுதியில் தெய்வமாகிறது. தூய அன்பு நலன் அனைத்துக்கும் இருப்பிடம். எனவே, பாச சொரூபமாய் இருக்கும் மாந்தர் அன்பு சொரூபமாக மாறவேண்டும்.

கேள்வி: *(818)* அன்பு, பாசம், ஆசை இவை மூன்றும் ஒன்றா? அல்லது வெவ்வேறானவையா?

பதில்: அன்பு, பாசம், ஆசை ஆகிய மூன்றுக்குமிடையில் தொடர்பு உண்டு. ஆனால் மூன்றும் ஒன்றாகமாட்டா. வாழ்க்கை பாசத்தில் துவங்குகிறது. விலங்குகள் தங்கள் குட்டிகளிடம் பாசம் வைத்திருக்கின்றன. பறவைகள் தங்கள் குஞ்சுகளிடம் பாசம் வைத்திருக்கின்றன. மக்கள் தங்கள் சிசுக்களிடம் பாசம் வைத்திருக்கிறார்கள். இப்பாசமானது நாள் ஏறஏற மக்களிடத்தில் ஆசையாக வடிவெடுக்கிறது. தங்கள் செல்வர்களும் செல்விகளும் மேன்மையுறவேண்டும் என்று மக்கள் ஆசைப்படுகின்றனர். தங்களுக்கு ஏராளமாகச் செல்வம் வாய்க்க வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுகின்றனர். நோய், நொடி இல்லாது

வாழ்ந்திருக்க வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுகின்றனர். பொருளும், போகமும், பதவியும் எவ்வளவு வாய்த்தாலும் அவை போதவில்லை என்று ஆசைப்படுகின்றனர். ஆசை அதிகரிக்குமளவு சஞ்சலம் அதிகரிக்கிறது. ஆசை சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. இனி அன்போ பாசத்தையும், ஆசையையும் விட மேலானது. இயற்கையில் அழகான காட்சி தென்படுகிறது. அதனிடத்து அன்பு ஊற்றெடுக்கிறது. அத்தகைய அன்பு பாசமும் அன்று, ஆசையும் அன்று. நல்லொழுக்கமும், பரோபகாரமும் வடிவெடுத்துள்ள மானுடன் ஒருவனை உலகம் பார்க்கிறது. அத்தகைய நல்லானிடத்து உலகத்தவருக்கு அன்பு சுரக்கிறது. உலக நலத்தின் பொருட்டு அந்த நல்லான் நெடுநாள் வாழ்ந்திருக்க வேண்டும் என்று ஆசி கூறுகின்றனர். அது அன்பின் விளைவு. மானுடன் ஒருவன் தன்னுடைய சொந்த மகன் மேன்மையுற வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அது பாசத்தின் விளைவு. உலக நலனுக்காக உழைக்கிறவனுக்கு மக்கள் உதவிபுரிகின்றனர். அது அன்பின் விளைவு. தன்னுடைய சொந்த மகன் முன்னணிக்கு வரவேண்டும் என்று தந்தை பணம் செலவிடுகின்றான். அது பாசத்தின் விளைவு. அன்பு உயிர்கள் அனைத்துக்கும் பொதுவானது. பாசமோ உற்றார் உறவினர் என்னும் வரம்புக்குட்பட்டது. அன்பினால் தூண்டப் பெற்றுச் செய்கிற கைங்கரியங்கள் பிரதிபலனை எதிர்பாராத வைகள். பாசத்தினால் தூண்டப்பெற்றுச் செய்கிற செயல்கள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவைகள். கொடுக்கும் பாங்குடையது அன்பு. தனக்காகவென்று எடுக்கும் பாங்குடையது பாசம். தூய அன்பும் தெய்வமும் ஒன்றே. பாசம் உடல் வாழ்வை ஒட்டியது. அறியாமையில் வடிவெடுத்தது. அது சிறுமையில் மனிதனைக் கட்டிவைக்கிறது. இங்ஙனம் அன்பு, பாசம், ஆசை ஆகிய மூன்றும் பற்றுதல் என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது எனினும் பண்பாட்டில் அவைகளுக்கிடையில் வேற்றுமை உள்ளது.

கேள்வி: *(819)* யோக நித்திரையின் விளக்கம் யாது?

பதில்: தூங்கும்பொழுது மனிதன் ஜடப்பொருளுக்கு நிகராகின்றான். அந்நிலையில் மனம் ஒடுங்கி இருக்கிறது.

ஆதலால் தன்னைப்பற்றிய உணர்ச்சியோ, உடலைப்பற்றிய உணர்ச்சியோ ஆழ்ந்த உறக்கத்தில் அவனுக்கு இல்லை. மனிதன் ஆழ்ந்து உறங்குகிறபொழுது தமோகுணம் தலையெடுத்திருக்கிறது. அதற்கேற்றவாறு உறக்கத்தின் நிலை ஜடத்தை ஒத்திருக்கிறது. ஆத்ம சாதனம் பயின்று வருகிறவனுக்குத் தமோகுணத்தை வெல்லும் தகைமை படிப்படியாக மேலோங்குகிறது. தமோ குணத்தை வென்று ரஜோகுணத்துக்கு வருவதும், ரஜோகுணத்தை வென்று சத்துவ குணத்தை அடைவதும் ஆத்ம சாதனத்தின் குறிக்கோள். உறங்குகின்றபொழுது மனிதனிடத்துச் சத்துவ குணத்தோடு கூடிய நிலைமை வாய்க்குமாகில் அது யோக நித்திரை எனப்படுகிறது. அறிதுயில் எனவும் இது இயம்பப் படுகிறது. தமோகுணத்தில் ஊறி உறங்குபவனுடைய நிலை ஜடம் அல்லது கல் போன்றது. ஆங்கு உணர்வு ஒடுங்கிக் கிடக்கிறது. சத்துவகுணத்திற்கு வருங்கால் அதே உணர்வு தெளிந்த நிலையில் இருக்கிறது. உலகைப்பற்றிய உணர்ச்சியோ அல்லது தன்னுடைய ஜீவவியக்தியைப் பற்றிய உணர்ச்சியோ ஆங்கு இல்லை. எனினும் முற்றிலும் தெளிவடைந்துள்ள உணர்ச்சியாக அது திகழ்கிறது. அந்நிலையையே யோக நித்திரை என நாம் இயம்புகிறோம். விவேகானந்த சுவாமிகளுக்குச் சின்னஞ் சிறு வயதிலிருந்தே யோகநித்திரை வாய்த்திருந்தது. அவர் பெற்றிருந்த தூயமனமே அதற்குக் காரணமாயிற்று. ✪

64. பொதுவானவைகள்

கேள்வி: *(820)* இக்காலத்தில் பலரால் போற்றப்பட்டு வருகிற சான்றோர் ஒருவர் தம்மைக் கடவுளின் சொரூபம் என்று கூறுகிறார். இதை ஏற்றுக்கொள்ளலாமா?

பதில்: 'ஆதிபகவன் முதற்றேஉலகு' என்பது பொய்யா மொழி. 'உலகனைத்தும் ஆனாய் நீயே' என்பதும் பொய்யாமொழி. 'பரம்பொருளே பிரபஞ்ச சொரூபமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்' என்பதும் மறைமொழி. ஆதலால் மக்கள் அறிந்திருந்தாலும், அறியாதிருந்தாலும் ஜீவகோடிகளனைத்தும் அண்டகோடிகளனைத்தும் பரம்பொருளிடத்திருந்தே வந்தவை களாம். இது அடிப்படை உண்மை. இந்த உண்மைக்கு ஒப்ப உயிர்களோடு உயிர்கள் மேலாம் இணக்கம் வைப்பது பாராட்டு தற்குரிய நல்லிணக்கமாகிறது. இதினின்று சற்று விலகிய மானுட னொருவன் தான் மட்டும் கடவுளின் சொரூபம் என்றோ, கடவுளின் அவதாரம் என்றோ தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வானாகில் அந்த மனிதனைப் பற்றி மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தெய்வீக அம்சம் சிறப்பாக ஒரு மனிதனிடத்து அமைந்திருக்குமாகில் அம்மனிதன் தன் தரத்துக்கேற்ற சிஷ்யக் கூட்டத்தை உருவாக்குகிறான். புத்தர், இயேசுநாதர், ஆதிசங்கரர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகியவர்களிடத்துத் தெய்வீக அம்சம் சிறப்பாகப் பொலிந்துகொண்டிருக்கிறது. "தக்கார் தகவிலர் என்பது அவ்ரவர் எச்சத்தால் காணப்படும்" என்னும் மறைமொழிக்கு அப்பெருமக்கள் அமைத்து வைத்திருந்த சிஷ்யர் கூட்டங்களே சான்றுகளாகின்றன. இப்பொழுது தம்மைக் கடவுளின் சொரூபம் என்று சொல்லிக்கொள்ளுகிற சான்றோர் மேலான சிஷ்யர் கூட்டத்தை அமைப்பாராகில் அவரைத்

தெய்வீக அம்சம் என்று ஏற்றுக்கொள்ளலாம். அப்படித் தகை சான்ற மேலோரை உருவாக்காது வெறும் விபூதியை இங்கு மங்கும் படத்திலிருந்து விழச் செய்தாலும், கனி வர்க்கங்களைக் கையில் வரவழைத்தாலும் அத்தகைய செயல்களை வெறும் அபிசார பூஜையின் விளைவு என ஒதுக்கித் தள்ளவேண்டும். அபிசார பூஜை என்பது தந்திர சாதனத்தின் ஆரம்பதசை யிலிருக்கும் ஒருவித வழிபாடு ஆகும். அந்த வழிபாட்டு முறைப்படி சில பொருள்களை ஓரிடத்தில் வைத்துக் கிரியைகள் செய்து முடித்து விட்டு மற்றோர் இடத்திலிருந்து கையை நீட்டினால் வைக்கப்பட்ட இடத்திலிருந்து பூஜை பண்ணியவருடைய கைக்குப் போய்ச்சேரும். மக்களை மயக்குவதற்கு இச்செயல்கள் பயன்படும். மக்களை மேலோராக்குதற்கு இவை உதவமாட்டா. ஆதலால் அபிசார பூஜையில் ஈடுபட்டிருக்கிற மனிதனைப் பற்றி மக்கள் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தம்மைப் பார்க்க வந்த பக்தனொருவனுக்கு இந்தச் சான்றோன் கையை உயர்த்தி அதில் பழம் ஒன்று வரச்செய்து அப்பழத்தை வந்திருந்த பக்தனிடம் கொடுத்தார். பக்தனோ 'கடையில் நாலணா கொடுத்து இப்பழத்தை நான் வாங்க முடியும். இது எனக்கு வேண்டாம். மனம் ஒடுங்குதற்கு வழிகாட்டித் தாருங்கள்' என்றான். தம்முடைய மனதையே அடக்கியாளத் தெரியாத ஒருவர் பிறருடைய மனதைப் பண்படுத்த எங்ஙனம் வல்லவராவார்?

கேள்வி: *(821)* பொது நன்மைக்காகவென்று லாட்டரிச் சீட்டுப் போட்டுப் பொருள் சேகரிப்பது சரியா? இன்னும் நாடகம், இன்னிசை, நடனம் போன்ற நிகழ்ச்சிகள் மூலமாக பொதுநல ஸ்தாபனங்களுக்கு பொருள் சேகரிப்பது பொருந்துமா?

பதில்: லாட்டரிச்சீட்டு என்றால் என்ன என்பது பலருக்குத் தெரியாது. ஒரு சான்றின் மூலம் அதை விளக்குவோம். பேருக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு லக்ஷம் பேரிடத்திருந்து லாட்டரிச்சீட்டு போட்டுப் பணத்தைத் திரட்டுதல் முதல் செயல். அதில் ஐம்பதினாயிரம் ரூபாயை ஏதேனும் ஒரு பொதுநல சேவைக்கு ஒதுக்கி வைத்துவிடுவது இரண்டாவது செயல்.

பாக்கியிருக்கும் ஐம்பதினாயிரம் ரூபாயைப் பணம் கொடுத்த லக்ஷம் பேருக்கிடையில் திருவுளச்சீட்டு போட்டு சுமார் பத்து, பதினைந்து பேருக்கு முதல் வெகுமதி, இரண்டாவது வெகுமதி, மூன்றாவது வெகுமதி என்று பலதரப்பட்ட தொகைகளைப் பலதரப்பட்ட வெகுமதிகளாகப் பகிர்ந்து கொடுப்பது மூன்றாவது செயல். இதற்குத்தான் லாட்டரிச்சீட்டு என்று பெயர். பொதுநலத் துக்காக ஒரு சத்திரம் சாவடி கட்டுவது, பாதை அமைப்பது, பாலம் போடுவது போன்ற செயல்களுக்கு லாட்டரிச்சீட்டு போடுவதில் குறையில்லை. ஆனால் ஒரு கல்விச்சாலை, ஆஸ்பத்திரி போன்ற பொதுநல ஸ்தாபனத்துக்கு இப்படி லாட்டரிச்சீட்டு போடுவது உசிதமானதன்று. லாட்டரியில் பணம் கொடுக்கின்ற ஒவ்வொரு மனிதனும் தனக்கு ஒருவேளை பெருமிதமான ஊதியம் கிடைக்குமென்று ஆசைகொள்கிறான். எனவே சேகரிக்கப்படுகின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் அடிப்படை யாகப் பேராசையும் சுயநலமும் வடிவெடுத்திருக்கின்றன. பேராசையையும் சுயநலத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ள நிதிகள் தூயவைகள் ஆகமாட்டா. மேலாம் காரியங்களுக்கு அத்தகைய நிதிகள் பெரிதும் இடைஞ்சலாய்ப் போவதுண்டு.

இனி நாடகம், இன்னிசை, நடனம் போன்றவைகள் லாட்டரிச்சீட்டு போன்று அவ்வளவு கீழ்த்தரமானவைகள் ஆகா. இத்தகைய நிகழ்ச்சிகளை முன்னிட்டுப் பணம் கொடுக் கின்றவர்களும் பிரதிபலனை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்பார்க்கின்ற பிரதிபலன் பெரிதும் அவர்களுக்குக் கிட்டி விடுகிறது. எனவே, இத்தகைய உபாயங்களைக் கொண்டு நிதி திரட்டுகின்றவிடத்துப் பணம் கொடுத்தவர்களுடைய ஆசைகளைப் பணம் பெற்றவர்கள் நிறைவேற்றி வைத்துவிடுகின்றனர். எனவே இதில் அதிக தோஷம் இல்லை. ஆனால் பொதுநல ஸ்தாபனங் களுக்காக நிதி திரட்டுதலில் தலைத்தரமான உபாயம் ஒன்று உண்டு. ஒரு ஸ்தாபனத்தை நிறுவ விரும்புகின்றவர்கள் அந்த ஸ்தாபனம் மக்களுக்கு என்ன பாங்கில் பயன்படும் என்பதை பொதுமக்களுக்குத் தெளிவுபடப் புகட்டுதல் வேண்டும். பிறகு அத்தகைய ஸ்தாபனத்தில் நம்பிக்கை வைக்கின்றவர்கள் முழுமனதோடு தங்களால் இயன்ற பொருளைத் தரவேண்டு மென்று வேண்டிக்கொள்ளுதல் பொருந்தும். அவர்களும்

மனச்சலிப்பின்றி அந்த ஸ்தாபனத்தை ஆசீர்வதிக்கிற முறையில் அதற்குச் செல்வத்தை எடுத்து வழங்குவார்களாகில் அது உத்தமமான செல்வச் சேகரிப்பு ஆகும். நல்லார் பலருடைய நல்லெண்ணமே ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு நல்ல அஸ்தி வாரமாகும். நேர்மையான முறையில் பொதுநலத்துக்காக என்று உழைத்து வரும் ஸ்தாபனங்களுக்குச் செல்வம் திரட்டுதலில் சிரமம் ஒன்றுமில்லை. ஆனால் எடுத்த எடுப்பிலேயே ஏராளமான நிதிவந்து குவிந்துவிடாது. சிறிது சிறிதாகச் சேகரித்துப் பொது நலத்துக்கு அதைப் பயன்படுத்தி வந்தால் அத்தகைய பணி விடையைப் பார்க்கின்றவர்கள் மேலும் மேலும் பொருளுதவி செய்துகொண்டே வருவார்கள். இப்படி நேர்மையாகப் பணத்தைத் திரட்டிச் செலவிடுகிறவர்கள் ஆத்ம பரிபக்குவம் அடைகின்றார்கள். நல்ல காரியத்துக்காகவென்று மனமுவந்து பொருளை எடுத்து வழங்குகின்றவர்களும் மனபரிபாகம் அடைகின்றனர்.

கேள்வி: *(822)* பொதுநலத்துக்காகவென்று நான் ஒரு ஸ்தாபனம் நடாத்தி வருகிறேன். அனாதைக் குழந்தைகளுக்கு உணவு, உடை, கல்வி முதலியன தருவது இந்த ஸ்தாபனத்தினுடைய முக்கியமான அலுவல். மதப்பிரசாரமும், சன்மார்க்க போதனையும் அதற்கடுத்தபடி இடம்பெற்று வருகின்றன. வழிபாடு, பஜனை, உபந்நியாசம் முதலியன இங்கு நடாத்தப்பெற்று வருகின்றன. இந்த ஸ்தாபனத்தில் ஆராதனைக்காக என்று அமைக்கப் பெற்றுள்ள சின்னங்களைப் பற்றித்தான் மாறுபடும் அபிப்பிராயங்கள் பல வந்துகொண்டிருக்கின்றன. தியாகத்தின் சின்னமாகிய காவிக்கொடியை மட்டும் வணங்குதல் என்று நான் முதலில் ஆரம்பித்தேன். அதன்பிறகு அழகாக அச்சடிக்கப்பட்டிருக்கும் ஓம் என்னும் அக்ஷரம் இங்கு வழிபடும் மண்டபத்தில் சுவரில் உயர மாட்டப்பெற்றிருக்கிறது. அதற்குச் சற்றுக் கீழே நான் நேரில் சந்தித்த ஒரு மஹாபுருஷருடைய படம், ஓவியக்காரன் ஒருவனால் தீட்டப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது. பூஜையில் பலபேர் வந்து கலந்துகொள்கிறார்கள். வருபவர்கள்

விதவிதமான அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் மஹான்களுக்கிடையில் நான் ஒரு வித்தியாசமும் பாராட்டுவது கிடையாது. அவர்கள் எல்லோரையும் ஒரே மனப்பான்மையுடன் வழுத்துகிறேன். அவர்களுடைய படங்களை வைத்துக் கொள்ளாமலும் வழிபாடு செய்ய எனக்கு இயலும். ஆனால் இந்த ஸ்தாபனத்துக்கு வந்து கொண்டிருக்கும் விதவிதமான மனப்பான்மையுடைய அன்பர்களைத் திருப்திசெய்வதுதான் மிகக் கஷ்டமாகத் தென்படுகிறது. மஹாபுருஷர்கள் என்றாலும் மனிதர் களுடைய படம் ஒன்றும் வேண்டாம் என்கிறார்கள். இறைவனுடைய படம் வைப்பது அவசியமென்றால் அவதார புருஷர்கள் என்று அனைவராலும் அங்கீகரிக்கப் பட்டுள்ள ராமர், கிருஷ்ணர் போன்றவர்களுடைய படங்களை வைப்பதுதான் எங்களுக்குப் பிடிக்கிறது என்கின்றார் ஒரு கூட்டத்தார். இராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய படம் வைத்திருப்பது ஒருசிலருக்குப் பிடிக்கிறது; பலருக்குப் பிடிக்கவில்லை. ஒருவரும் அறியாத மற்றொரு மஹானைப் பற்றிய அபிப்பிராயம் முற்றிலும் பிரதிகூலமானதாய் இருக்கிறது. அவருடைய படத்தை வேண்டாம் என்கின் றனர் பலர். சாயிபாபாவுடைய படத்தை வைக்கும்படி அவருடைய அன்பர்கள் அபிப்பிராயம் சொல்லுகிறார்கள். இராமலிங்க வள்ளலாருடைய படத்தை வைக்கும்படி அவருடைய அன்பர்கள் தூண்டுகிறார்கள். ராமதாஸ் சுவாமிகளுடைய படம் வைக்கவேண்டுமென்று அன்னாருடைய சிஷ்யர்களில் ஒருவர் இயம்புகிறார். இவை யாவையும் சமதிருஷ்டியில் காணும் என் நிலைமை தர்ம சங்கடமானதாய் இருக்கிறது. எதைச் செய்வது உசிதமென்று விளக்கிக் கூறும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பதில்: சமயப் பிரசாரத்துக்கென்று அமைந்துள்ள பொது ஸ்தாபனம் ஒன்றில் முறையான கடவுள் வழிபாடும் இடம் பெறவேண்டும். மேலும் அந்த ஸ்தாபனத்தில் அனாதைக் குழந்தைகள் வளர்க்கப்பட்டு வருகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு மத உணர்ச்சி உள்ளத்தில் நன்றாகப் படிதல் பொருட்டு நித்திய வழிபாடும் இதுபோன்ற பொது ஸ்தாபனத்தில் இடம்

பெறுவது அவசியமாகிறது. நித்திய வழிபாடு பக்தி சிரத்தையோடு கூடியதாகவும், ஐதிகமாக வந்துள்ள வழிபாட்டின் அம்சங்கள் அமையப்பெற்றதாகவும் இருத்தல்வேண்டும். வழிபாடு இன்றி யமையாதது ஆகும்.

ஒரு சின்னத்தின் மூலமாக வழிபாடு செய்தால்தான் மக்கள் உள்ளத்தில் அது நன்கு பதியும். ஹிந்து மதத்தில் விதவிதமான சின்னங்கள் அங்கீகரிக்கப்பெற்றவைகளாய் இருக்கின்றன. சின்னங்களுள் மிக உயர்ந்த நிலையில் இருப்பது ஓம் என்னும் ஏகாக்ஷரம். அதை உபாசிக்கும் முறை எல்லார்க்கும் விளங்காது. அது மிக சூக்ஷ்மமான வழிபாடு ஆகின்றது. அந்த ஓங்காரத்தின் புறத்தோற்றமாக ஒரு ஸ்படிக லிங்கத்தையோ, அல்லது சாளக்கிராமத்தையோ வைத்துக்கொண்டு அதற்கு அபிஷேகம், அலங்காரம், ஆராதனை முதலியன செய்யுமிடத்து வழிபடுகிற வர்கள் உள்ளத்தில் திருப்தியை ஊட்டும். இந்தப் பாங்கில் ஓங்காரம் ஆராதிக்கப்படுமாகில் ஹிந்துக்கள் அனைவர்க்கும் அவ்வழிபாடு ஏற்புடையதாகும்.

நிறைஞானம் அடையப்பெற்றுள்ள மஹான்களின் படங்களின் வாயிலாகவும் ஆராதனை செய்யலாம். ஆனால் அத்தகைய ஆராதனையில் வரையறை ஒன்று இருக்கிறது. வழிபாட்டுக்குரிய ஓர் ஆலயத்தில் அதிஷ்டான தெய்வமாக எழுந்தருளியிருக்கும் முக்கியமான மூர்த்தி ஏதேனும் ஒன்றே இருந்தாகவேண்டும். எந்த மூர்த்தியை வைப்பது என்கின்ற சந்தேகம் எழுகின்ற இடத்து மானுட வடிவெடுத்துள்ள மூர்த்தி களை ஆராதனைக்கென்று வைக்கலாகாது. ஸ்ரீராமரும், ஸ்ரீகிருஷ்ணரும் மானுட வடிவம் எடுத்தவர்களுக்குள் ஓர் அலாதி இடம்பெற்றவர்கள் என்பது உண்மை. மானுடவடிவம் தேவை என்று தோன்றுகிறவிடத்து ராமர் அல்லது கிருஷ்ண ருடைய படத்தையே அதிஷ்டான தெய்வமாக வைத்துக் கொள்வது முறையாகும்.

ஆத்ம சாதகர்களுள் சிலர் தங்களுக்குரிய சத்குரு ஆக யாரோ ஒருவரைத் தீவிரமாகப் பின்பற்றுகிறார்கள். இக்காலத்திலுள்ள சாதகர்களுக்கிடையில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பின்பற்றுகிறவர்களையும், ராமதீர்த்த சுவாமி களைப் பின்பற்றுகிறவர்களையும், இராமலிங்க வள்ளலாரைப்

பின்பற்றுகிறவர்களையும், ராமதாஸ் சுவாமிகளைப் பின்பற்று கிறவர்களையும், ரமணமஹறிஷியைப் பின்பற்றுபவர்களையும் ஆங்காங்குக் காணலாம். இங்குக் குறிப்பிட்டுள்ளது போன்ற ஒரு பொது ஸ்தாபனத்தை நடத்துபவர் இவர்கள் அனை வரையும் ஒரே மனப்பாங்குடன் பாராட்டி வருகிறார் என்றால் இந்த ஸ்தாபனத்தில் ஆராதனைக்குரிய மூர்த்தி என்று இவர்களில் யாருடைய படத்தையும் வைக்கலாகாது. சிவம், விஷ்ணு, அம்பிகை ஆகிய தெய்வங்கள் அல்லது ராமர், கிருஷ்ணன் போன்ற அவதார மூர்த்திகளில் ஒருவரையே ஆலயத்தின்கண் எழுந்தருளியிருக்கும் அதிஷ்டான தெய்வமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு மஹானுடைய கோட்பாட்டைப் பரப்புதற்கென்றே ஒரு ஸ்தாபனம் அல்லது ஆஸ்ரமம் ஏற்படலாம். அத்தகைய ஸ்தாபனத்தில் அந்த மஹாபுருஷருடைய படத்தை அதிஷ்டான தெய்வமாக வைத்து வணங்குவது முறையாகும். அதே மஹா புருஷருடைய சிறந்த கொள்கைகளையும் கோட்பாடுகளையும் நூல்கள் வாயிலாக அத்தகைய ஆஸ்ரமத்தினின்று பிரசுரிப்பதும் ஒரு நல்ல இயக்கமாகும். ஆக, ஒரு மஹாபுருஷருடைய கோட்பாட்டைப் பரப்புதற்கென்றே அமைந்துள்ள மடாலயம், ஆஸ்ரமம் அல்லது நிலையத்தில் அவருடைய வடிவம் ஆரா தனைக்காகவென்று தெய்வத்தின் விக்கிரகம் ஒன்றை வைத்துக் கொள்வதுதான் பொருத்தமானதாகும். அனைவருக்கும் அது சம்மதமானதாகவும் அமையும். ஆக, இக்கேள்வி கேட்டுள்ளவர் நிலையத்தில் ஆராதனைக்கு அமையவேண்டியது கடவுளின் சின்னமேயாம். மண்டபத்தில் வெவ்வேறு இடங்களில் சான் றோரின் படங்கள் அமைக்கப்பெற்றிருக்கலாம்; ஆராதனைக்குரிய சின்னமாக அவைகளை வைப்பது பொருந்தாது.

சிறுவர்கள் வசித்துவருகின்ற இதுபோன்ற ஒரு ஸ்தாபனத்தில் அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், ஆராததைன ஆகிய வழிபாட்டு முறைகளுக்குரிய மூர்த்தியாகக் கணபதி, முருகக்கடவுள், கிருஷ்ணன் போன்றவர்களின் விக்கிரகத்தை அமைத்து வைப்பது முற்றிலும் பொருந்தும். சிறுவர் உள்ளத்தில் அது நல்ல பக்தியை ஊட்டும். அத்தகைய வழிபாடு விதவிதமான சம்பிரதாயத்தையுடைய முதியோர்களுக்கும் சம்மதமானதாகும்.

கேள்வி: *(823)* இலங்கைக்குச் சமீபத்தில் வந்திருந்த ஒரு சம்ஸ்கிருத பண்டிதரை இங்கே உள்ள சில உத்தியோகஸ்தர்கள் ஈசா வாஸ்யோபநிஷத் சாந்தியாகிய என்று துவங்கும் முதல் மந்திரத்துக்கு என்ன தாத்பர்யம் என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'பூர்ண வஸ்துவிலிருந்து பூர்ணத்தை எடுத்தாலும் பூர்ணம் பூர்ணமாகவே இருக்கும்' என்று சொன்னார். இந்த விளக்கம் தமிழர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. உடனே ஒரு பெரியவர் சொன்னதாவது: "பெரிய படிப்பாளியாகிய இவருக்கே இதை விளக்க முடியவில்லையே. இப்படியான பாஷையைப் படிப்பதில் நான் ஆசைகொள்ளவில்லை" என்றார். அதை ஆமோதித்து வக்கீல் ஒருவர் சொன்னதாவது: "எனக்கு வடமொழியைக் கற்கலாமோ என்ற சிந்தனை லேசாய் இருந்தது. ஆனால் மதிப்புக்குரிய நம் பெரியவரே தனது புத்திக்கு எட்டவில்லை என்று சொன்னதால் என்மட்டில் இனி அந்த யோசனை இல்லை; கைவிட்டுவிட்டேன்'' என்றார். இவ்வளவு விஷயங்களைக் கேட்டுக்கொண்டிருந்த பண்டிதர் பேசாமல் மௌனம் சாதித்து விட்டுப்போய்விட்டார். இந்த உபநிஷத் வாக்கியத்திற்குச் சரியான விளக்கத்தைத் தெரிந்துகொள்ள நாங்கள் ஆசைப்படுகிறோம்.

பதில்: கல்வியறிவில் தேர்ந்தவர்கள் அவசரப்பட்டு இத்தகைய முடிவுக்கு வரமாட்டார்கள். பூமியின் சில அறிகுறிகளைப் பார்த்து இங்கு பூமியினுள் தங்கம் இருக்கிறது என்று ஒருவர் கூறினார். சிலர் பூமியைக் கொஞ்சம் வெட்டிப் பார்த்தார்கள். அதைக் குறித்துக் கொஞ்சம் செல்வமும் செலவிட்டார்கள். பொன் அகப்படவில்லை. பொன் இருக்கிறது என்று யாரோ புளுகி விட்டார்கள், அதைப் பொருள்படுத்த வேண்டாம்; பூமியின் மேற்பரப்பில் அகப்படுவதைக்கொண்டு நாம் திருப்தியடைந்திருப்போம் என்று அவர்கள் முடிவு கட்டினார்கள். அவர்கள் அறிவுக்கேற்ற ஆதாயம் அவர்களுக்குக் கிடைத்தது. கோலார் பொன் சுரங்கம் போன்ற இடத்தில் பல ஆயிரம் அடி கீழே துளைத்துக்கொண்டுபோய் பொன் எடுக்கிறவர்களும் உளர். நல்லறிவும் திறனும் சேர்ந்து அமையுமிடத்தே எதை யார் வாய்க் கேட்பினும் அதனிடத்து மெய்ப்பொருள் காணஇயலும்.

மருத்துவ நூல் (Medical Science) ஆங்கிலத்தில் இருக்கிறது. அதில் பெரும்பகுதி ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கே விளங்காது. அதில் ஏதோ ஒரு பகுதியைப் படித்துப் பார்த்துவிட்டு ஆங்கிலமே நமக்கு வேண்டாம் என்று ஒருவர் அம்மொழியைப் புறக்கணித்து விட்டால் அவருடைய அறிவின்மைக்கும் அவசர புத்திக்கும் அது எடுத்துக்காட்டு ஆகும்.

தமிழ் மொழியில் நூல்களில் அமைந்துள்ள பகுதிகள் எல்லாம் தமிழர் எல்லாருக்கும் விளங்கிவிடும் என்று நாம் எண்ணி ஏமாற்றமடைந்து விடலாகாது. உதாரணம் ஒன்று எடுத்துக் கொள்வோம்.

> **பாரில்லை நீரில்லை பங்கயம் ஒன்றுண்டு**
> **தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது**
> **ஊரில்லை காணும் ஒளியது ஒன்றுண்டு**
> **கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே**

திருமூலருடைய திருமந்திரம் மூவாயிரங்களில் இதுவும் ஒன்று. இதேபாங்கிலும், இதைவிடக் கடினமான பாங்கிலும் அந்நூலிலே திருமந்திரங்கள் பல பொதிந்திருக்கின்றன. இவைகள் விளங்கவில்லை என்று தமிழ் மொழியையே புறக்கணிக்க யாராவது முயன்றால் அதைப் பொருத்தமான முயற்சி என்று அறிவுடையோர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

மொழி ஒன்றை அறிந்து கொள்ளுதற்குக் கற்கும் கல்வி ஆதாரக் கல்வி. அம்மொழியில் அடங்கியுள்ள உயர்ந்த கருத்துக்களை அறிந்துகொள்ளுதற்கு ஒருவர் கற்கின்ற கல்வி கலைஞானமாக இருக்கலாம் அல்லது பரஞானமாக இருக்கலாம். அத்தகையவைகள் பெரிதும் அனுபவத்தோடு கூடியவைகள். வெறும் சொல்லுக்குப் பொருள் தெரிந்துகொள்வதனால் மூலக்கருத்து விளங்கிவிடாது. அந்தந்தத் துறையில் முன்னேற்றம் அடைந்திருப்பவர்களைக் கொண்டே சொல்லுக்கு அடிப்படையாய் இருக்கின்ற பொருளைத் தெரிந்துகொள்ள முயலவேண்டும்.

இந்த சாந்திமந்திரத்தின் அடிப்படைக் கருத்து வருமாறு: "பரம்பொருள் எல்லையில் அடங்காது. பரம்பொருளிடத்திருந்து தோற்றத்துக்கு வந்திருப்பதால் பரம்பொருளில் ஒரு குறையும் ஏற்பட்டு விடவில்லை. மனம், மொழி, மெய்க்கு எட்டுகிற

இயற்கையும் நிறைபொருளே". எப்படி ஆராய்ந்தாலும் இரண்டு நிறைபொருள்கள் இல்லை.

இதனுடைய உட்கருத்து தத்துவ ஞானத்தில் சிறிதளவாவது பயிற்சிபெற்றவர்களுக்கே விளங்கும். இதன் உட்கருத்தைத் தெரிந்து கொள்வது வேறு, சம்ஸ்கிருத மொழியைத் தெரிந்து கொள்வது வேறு. இதன் உட்கருத்தும் சம்ஸ்கிருத மொழியும் ஒன்று என்று எண்ணுபவர் விஷயம் தெரியாதவர்கள். மனித னுடைய விருப்பத்திற்கேற்ப எம்மொழியை வேண்டுமானாலும் கற்கலாம்; மேலும் அவன் விருப்பத்திற்கேற்ப எந்தக் கலை ஞானத்தையும், எந்தத் தத்துவ ஞானத்தையும் பெற முயலலாம். கலைகளையும், தத்துவங்களையும் தனக்குத் தெரிந்துள்ள ஏதேனும் ஒரு மொழியில் அல்லது பல மொழிகளில் விளக்க லாம். அப்படியிருந்தும் அதற்கு முழுவிளக்கம் மொழியில் அடங்கிவிடாது. மொழியறிவுக்குமேல் சுய அனுபவம் வேண்டும். ஞானசம்பந்தமான கோட்பாடுகள் இப்படி இருக்க இத்துடன் பொருந்தாத முடிவுகளையோ, மொழி முனைவுகளையோ உண்டுபண்ணுவது யாருக்கும் பொருந்தாது.

கேள்வி: *(824)* சிலர் உபதேசம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு ஆடம்பரமான பூஜை செய்து குடும்பம் பூராவிற்கும் உபதேசம் செய்து இதையே பிழைப்பாக வைத்துக்கொண்டு திரிகிறார்கள். உபதேசம்பெற்ற குடும்பங்களில் சில குலைந்தும் போய் இருக்கின்றன. தவறான மந்திர உச்சரிப்பால் (உபதேசத்தால்) இப்படி நிகழ்ந்து இருக்கலாமா? தவறான உச்சரிப்பால் கெடுதல் உண்டாகுமா?

பதில்: நோய்வாய்ப்பட்டிருக்கும் நோயாளி ஒருவன் வைத் தியன் என்று சொல்லிக்கொள்ளுகிற ஏதேனும் ஒருவனிடம் சிகிச்சையின் பொருட்டுப் போகலாகாது. வைத்தியன் உண்மை யில் நிபுணனா என்பதை முதலில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அவனிடம் சிகிச்சைக்குச் சென்ற நோயாளிகளின் அனுபவங்கள் எத்தகையவை என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படியல்லாது போலி வைத்தியனிடம் தன் உடலை ஒப்படைக்கிறவன் பெருந்துன்பத்துக்கு ஆளாவான்.

ஆன்மீகத் துறையில் இறைவனுக்கும், உயிர்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை வளர்க்கத் தெரிந்திருக்கிறவர்கள் நல்ல உபதேசிகளாகிறார்கள். ஆனால் அத்தகைய அரிய அருள் துறைப் பணிவிடைக்குத் தகுதிவாய்ந்தவர்கள் மிகச் சிலரே. பெரும்பான்மையோர் பிழைப்பின் பொருட்டும், பேரும் புகழின் பொருட்டும் அருள் தொண்டில் ஈடுபடுகிறார்கள். அன்னவர்களைக் குறித்து ஆத்மசாதகர்கள் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கடவுள் பக்தியைப் பெற விரும்புகிறவர்களுக்கு முற்றிலும் தேவையாயிருப்பது அருள்நாட்டம். குழந்தை ஒன்று தாயைக் கூவி அழைப்பது போன்று பக்தன் ஒருவன் நேர் கடவுளிடம் பிரார்த்தனை பண்ணவேண்டும். தனக்குத் தோன்றுகிறபடி அவன் வந்தனை வழிபாடு செய்யலாம். இறைவனுடைய திருநாமத்தை உச்சரிப்பதில் பிழை ஏற்பட்டுவிட்டாலும் கடவுள் அதைப் பொருள்படுத்தார். குழந்தைக்கு அம்மா என்று சரியாக உச்சரிக்கத் தெரியாததினால் அதற்குத் தீங்கு ஒன்றும் வந்துவிடுவ தில்லை. தாயும் அச் சொல்குற்றத்தைப் பொருள்படுத்தாள். சாதகன் ஒருவன் சாதனத்தில் எத்தகைய ஊக்கம் கொண்டிருக் கிறான் என்பதையே கடவுள் கருதுகிறார்.

தமது சாதனத்தின் ஆரம்பதசையில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் எந்த மனிதனுடைய உதவியையும் நாடவில்லை. கடவுளின் அருளையே நாடியிருந்தார். அந்த அருள்நாட்டம் அவருக்கு நல்ல பலனைக் கொடுத்தது. அம்பிகையின் அருளால் அவர் அனுபூதிமான் ஆனார். அதன் பிறகு தகுதி வாய்ந்த நல்ல பெருமக்கள் அவரிடம் வந்து வெவ்வேறு சாதன வகைகளைக் காட்டிக் கொடுத்தனர். இதனின்றும் நாம் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம் ஒன்றிருக்கிறது. நேரே இறைவனு டைய அருளை நாடு. அதை உள்ளன்போடு நாடு. நமது நாட்டத்தில் குறையிருந்தால் ஏதேனும் ஒருவிதத்தில் கடவுள் அதை நிறைநிலைக்குக் கொண்டுவந்து அருள்கிறார். போலிச் சமயவாதிகளை நாடி மந்த்ரோபதேசம் பெறுவதற்காகவோ, பூஜா முறையைக் கற்றுக்கொள்வதற்காகவோ நாம் போகலாகாது. பிறரிடமிருந்து 'நான் ஒன்றையும் கற்றுக்கொள்ளமாட்டேன்' என்ற மனப்பான்மையும் பொருந்தாது. புகட்ட வருகிறவர் எத்தகையவர், அவருடைய வாழ்வு எப்படிப்பட்டது

என்பனவற்றையெல்லாம் நிதானமாக ஆராய்ந்து அவர் நேர்மையும் நல்ல பண்புமே வடிவெடுத்தவராயிருந்தால் அவர் காட்டும் நெறியைப் பின்பற்றலாம். போலி மதபோதகர்கள் வசம் யாரும் அகப்பட்டுக்கொள்ளலாகாது.

கேள்வி: *(825)* ஏசுநாதர், புத்தர், முகம்மது, மஹாவீரர் ஆகியோர் மத்தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்களைக் கடவுள் என்று கருதுவது பொருந்துமா? விளக்கம்தர வேண்டுகிறேன்.

பதில்: ஆன்மிகத்துறையில் பெருமக்களாகத் திகழ்கின்ற வர்கள் பலர் தெய்வீகம் வாய்க்கப்பெற்றவர்களாக இருக்கின் றார்கள். உண்மையில் பரம்பொருள்தான் பிரபஞ்சமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது. அப்பிரபஞ்சமோ நலன், கேடு இரண்டும் வாய்க்கப்பெற்றதாக உள்ளது. எது மனிதனுக்குக் கேடாகத் தென்படுகிறதோ அது உண்மையில் முற்றிலும் கேடானது அன்று. ஏதேனும் ஒருபாங்கில் அது உலகிற்கு நலம் தரவல்லது என்பது ஆராய்ந்து பார்த்தால் தெரியும். இனி நல்லது என்பதில் நலனே பெரிதும் நிறைந்திருக்கிறது. இது சிருஷ்டியின் கூறு.

மதாச்சாரியர்களாகவும் தெய்வீகம் நிறைந்தவர்களாவும் உள்ள மக்கள் உலகில் சிலர் தோன்றியிருக்கின்றனர். பொது மக்கள் பலர் அப்பெரியவர்களைப் பெரிதும் பாராட்டுகின்றனர். அன்னவர்களைக் கடவுளாக வைத்துக்கொள்வது பொருந்துமா என்பது கேள்வி. கடவுள் என்பது நிறைபொருள்; தத்துவங்கள் அனைத்துக்கும் உறைவிடம். நீர் நிலைகளுள் கடலுக்கு நிக ரானது பரவஸ்து. ஆகையினால் பெருமக்களைக் கடவுளாக வைத்து வணங்குவது தத்துவத்துக்குப் பொருந்தாது. ஆயினும் அவர்களைப் போற்றி வணங்குவதில் குற்றம் ஏதும் இல்லை. ஆத்ம சாதனம் புரிந்து வருபவர்களுள் ஒரு சிலர் பெருமக்களைக் கடவுளாகக் கருதி வணங்குகின்றனர். அப்படி வணங்குவதன் வாயிலாக வணங்குபவர்கள் படிப்படியாக மேல்நிலைக்கு வருகின்றனர். பரம்பொருள் அகண்டாகாரமாக வடிவெடுக்குமா னால் வணங்குகின்ற சாதகனும் வணங்கப்பெறுகிற பெருமக்களும் அகண்டாகாரத்தில் லயமாகின்றனர். இக்காரணத்தை முன்னிட்டே

பெருமக்களைப் பரம்பொருளுக்கு நிகராக வைத்து வணங்குதற்கு ஆன்றோர்கள் அனுமதி தருகின்றனர்.

கேள்வி: *(826)* ஒரு மனிதன் மற்றொரு மனிதனைத் தன் நலத்தின் பொருட்டே நேசிக்கிறான் என்பது பொருந்துமா?

பதில்: மனிதனை மனிதன் நேசிப்பது தன் நலத்தின் பொருட்டேயாம். பிறரிடமிருந்து தனக்குத் தீங்கு ஏதும் வாராது இருக்கும் வரையில் பிறர் நேசம் இனிது நிகழ்கிறது. பிறர் நேசத்தின் விளைவாகத் தனக்குத் தீங்கு ஏதேனும் நிகழுமாகில் அந்த நேசம் அக்கணமே மறைந்து பட்டுப்போகும். தந்தை மைந்தனை நேசிப்பது தன் நலனுக்காக. மைந்தன் தந்தையை நேசிப்பது தன் நலனுக்காக. கணவன் மனைவியை நேசிப்பது தன் நலனுக்காக. மனைவி கணவனை நேசிப்பது தன் நலனுக்காக. நண்பனை நண்பன் நேசிப்பது தன் நலனுக்காக. இத்தனை விதமான நட்புக்களில் ஏதேனும் ஒன்று தன் உயிர் வாழ்க்கைக்கு இன்னல் விளைவிக்குமாகில் அந்த நட்பானது நொடிப்பொழுதில் மாயமாய் மறைந்துபோகும். தீவிரபக்தி வாய்க்கப்பெற்றிருக்கும் ஒருவனே தனக்குத் தீங்கு விளைவிக்கும் உயிர்களிடத்தும் பேரன்பு பூண்டு ஒழுகுகின்றான். இதை ஓர் உபமானக் கதைமூலம் விளக்கலாம்.

சாது மகாத்மா ஒருவர் கங்கைக்கரையோரம் அமர்ந்திருந்தார். நதியில் தேள் ஒன்று மிதங்கிக்கொண்டு வந்தது. கையால் அவர் அதை எடுத்தார். தேள் அவரைக் கொட்டியது. கையை உதறினார். தேள் தண்ணீரில் வீழ்ந்து, மிதங்கிக்கொண்டு வந்தது. கைநீட்டி அதையெடுத்துத் தரையில் உதற உதற அது கொட்டியது. "கொட்டுகிற தேளை ஏன் இப்படிச் சிரமப்பட்டு எடுக்கிறீர்கள்?" என்று ஒருவர் கேட்டார். "கொட்டுவது அதன் இயல்பு; அதைக் காப்பாற்றுவது நமது இயல்பு" என்றார் அந்தச் சான்றோர்.

கேள்வி: *(827)* உயர்ந்த கல்வியறிவும் விவேகமும் உடைய சிலர் பஞ்சமகா பாதகங்களுக்கும் ஆளாகின்றனர். சாதாரண மக்களுக்கே பிழையாகத் தோன்றுவது

இவர்களுக்கு அவ்வாறு தோன்றாமல் இருப்பதன் மாயம் என்ன? 'அவனன்றி ஓரணுவும் அசையாது' 'நன்னாரிற் பூட்டிய சூத்திரப்பாவை' என்பவற்றிற்கிணங்க இவர்கள் தம் செயலற்று ஒழுகுகின்றனரா? அவ்வாறாயின் நாம் அவர்கள்மீது இரங்க வேண்டுமல்லவா?

பதில்: 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் கோட்பாடும், 'நன்னாரிற் பூட்டிய சூத்திரப்பாவை' என்னும் கோட்பாடும் பாரமார்த்திக உண்மையைச் சுவானுபூதியில் அறிந்து கொண்டவர்களுக்கே பொருந்தும். அப்படி அறிந்துகொண்டவர்கள் யாண்டும் நல்வாழ்வே வாழ்வார்கள். அந்த உண்மையை அறிந்து கொண்டதன் விளைவு அதுவேயாம்.

இக்காலத்தில் கற்றறிந்தவர்கள் என்று பகரப் பெறுகின்றவர்களில் சிலர் பண்பாடு அடைந்தவர்கள் அல்லர். ஏதோ நூல்கள் பலவற்றை அவர்கள் படித்திருக்கலாம். நூல்களில் சொல்லியுள்ள புள்ளி விவரங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதும் சந்தர்ப்பம் வாய்க்கின்றபொழுது அந்தப் புள்ளி விவரங்களைப் பேச்சிலோ, எழுத்திலோ வெளிப்படுத்துவதும் கல்வியாகாது. பண்பாடும் ஒழுக்கமும் நல்ல கல்வியின் விளைவாகும். இக்காலத்தில் கல்வி கற்றவர்களுக்கிடையில் கயவர்கள் ஆங்காங்கு உண்டு; அதற்கு மாறாகக் கல்லாத பேர்களுக்கிடையில் நல்லவர் பலர் உளர். நல்வாழ்வை உண்டுபண்ணும் கல்வி வேறு; வெறும் நூலறிவோடு நின்றுவிடும் கல்வி வேறு. இதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இக்காலத்தில் கல்வி கற்றவர்கள் எல்லாம் சான்றோர்கள் ஆகமாட்டார்கள் என்பது நமக்குப் புலனாகும்.

கேள்வி: (828) **மாலை நேரத்தில் உணவு உண்ணலாகாது. விளக்கு வைத்த பின்பே உண்ணவேண்டும் என்னும் கொள்கை வந்துள்ளது. இதற்குக் காரணம் யாது?**

பதில்: சூரியன் அஸ்தமனமாகும் நேரம் மாலை நேரம் என்றும் சந்தியா வேளை என்றும் கருதப்படுகிறது. அந்த வேளையில் இயற்கை முழுதிலும் ஸாந்தி நிலவுகிறது. கடவுள் வழிபாட்டுக்கு அது முற்றிலும் பொருத்தமானது. கடவுள் வழிபாடு பண்ணுவதற்குப் பதிலாக அந்த நல்ல நேரத்தில்

உணவு உண்பவன் போகியாகிறான். அவன் யோகியாகமாட்டான். நல்ல நேரத்தை நல்ல பயிற்சிக்குப் பயன்படுத்துவது நியதி. அதே மாலைநேரத்தில் படுத்து உறங்குவதும் பொருந்தாது. தூங்குகிறவர்கள் தமோகுணத்தை வளர்க்கின்றனர். சத்துவ குணத்தை வளர்ப்பதற்குப் பொருத்தமாயுள்ள நல்ல நேரத்தை ஏனைய போக்கில் வீண்விரயம் செய்யலாகாது என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டே இந்த நியதி வந்துள்ளது. மக்களில் பெரும்பான்மையோர் ஸந்தியா நேரத்தைக் கடவுள் வழிபாட்டுக்காகப் பயன்படுத்துவதில்லை. வேறு ஏதேதோ உலக வியவகாரங்களில் அன்னவர் மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்களுடைய போக்கைக் கருத்தில் வாங்கிக்கொள்ளாது நல்வழியில் நிலைத்திருப்பவர்களும் கடவுள் வழிபாட்டில் ஒழுங்காக ஈடுபடுபவர்களும் மாலை நேரத்தை வழிபாட்டுக் கென்றே பயன்படுத்தவேண்டும். அந்த நல்ல நேரத்தில் உண்ணும் உணவைப்பற்றி நினைவுகொள்ளுதல் கூடாது.

கேள்வி: *(829)* மனிதன் மாறியமைவது கொள்கையை முன்னிட்டா? அல்லது சூழ்நிலையை முன்னிட்டா?

பதில்: மனிதன் சதா மாறியமைந்து கொண்டிருக்கின்றான். அப்படி மாறியமைவதின் வாயிலாக அவன் மேன்மையுறுவதும் உண்டு; கீழ்மையுறுவதும் உண்டு. மனிதன் எந்த விதத்தில் மாறியமைந்தாலும் அதற்கு முக்கியமாகக் கொள்கை, சூழ்நிலை ஆகிய இரண்டும் பயன்பட்டு வருகின்றன. மக்களுக்கிடையில் இரட்டையர்கள் பிறப்பது சர்வ சாதாரணம். இரட்டையர்களுக்கு மேற்பட்டு மூன்றுபேர் நான்கு பேர் பிறப்பதும் உண்டு. அப்படிப் பிறந்த குழந்தைகளை வெவ்வேறு இடங்களில் பிரித்து வைத்து வெவ்வேறு கொள்கைகளைப் புகட்டினால் அக்கொள்கை களுக்கேற்ற மாறுபாடுகள் அக்குழந்தைகளிடத்து இயல்பாகவே அமைகின்றன. இனி, சூழ்நிலை என்பது சகவாசம் எனப் பொருள்படுகிறது. நல்லார்களுக்கிடையில் வாழ்ந்து வருவது நல்ல சூழ்நிலையாகிறது. கெட்டவர்களுக்கிடையில் வாழ்ந்து வந்தால் தவிர்க்கமுடியாத கேடு தானே வந்தமைகிறது. மனிதனை மேல்நிலைக்கு எடுப்பதும் கீழ்நிலையில் வைத்துக் கெடுப்பதும் சாத்தியம். வளர்ந்து வருகிற குழந்தைகளுக்கு எத்தகைய

கருத்துக்களை ஊட்டுகிறோம், எத்தகைய சூழ்நிலைகளில் வளர்த்து வருகின்றோம் ஆகிய இந்த இரண்டு கோட்பாடு களும் மிக முக்கியமானவைகளாம்.

ஜன்மக்கூறு என்பது ஒன்று உண்டு. அது முற்பிறப்பில் பெற்றுள்ள சம்ஸ்காரங்களைப் பொறுத்திருக்கிறது. சம்ஸ்காரங் களுக்கேற்ப ஒருவன் நல்ல இயல்புகளோடு பிறக்கிறான். மற்றொருவன் தீய இயல்புகளோடு பிறக்கிறான். புதிதாகப் பெற்றுள்ள பிறவியில் நாள் ஏறஏற முற்பிறப்பின் பாங்குகள் முன்னணிக்கு வருகின்றன. ஆயினும் நல்ல சூழ்நிலையில் வளர்ந்து வருகின்ற ஜீவாத்மன் ஒருவன் பழைய சம்ஸ்காரங்கள் கெட்டவைகளாக இருந்தாலும் அவைகளைப் பின்னணிக்குத் தள்ளிவிட்டு நல்ல பாங்குடையவனாக வளர்ந்து வருகிறான். ஆதலால் சூழ்நிலை மிக மிக முக்கியமானதாகிறது. அதற்கேற்பப் புதிதாகப் பிறந்துள்ள ஜீவாத்மன் ஒருவன் மேலோன் அல்லது கீழோன் ஆகிறான்.

கேள்வி: *(830)* விரதம் இருந்தால் என்ன பயன்?

பதில்: நன்மை பயக்கக்கூடிய கட்டுத்திட்டங்களை நாமே விதித்துக்கொண்டு அவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒழுக்கத்தில் நிலைபெறுவதற்கு விரதம் என்று பெயர். விரதத்தை அனுஷ்டிப்பதன் மூலம் நாம் விமலர்கள் ஆகின்றோம்.

உணவில் கட்டுத்திட்டம் ஏற்படுத்துவது விரதத்தில் ஒரு பகுதியாகும். ஒருநாள் முழுவதும் உண்ணாதிருப்பது அல்லது ஒருவேளை மட்டும் உண்பது என உணவில் கட்டுத்திட்டத்தை ஏற்படுத்திக் கொள்வது உணவு சம்பந்தமான விரதமாகிறது. விரத தினத்தன்று ஒரு வேளைதான் உண்பேன் அல்லது உண்ணாதிருப்பேன் எனச் சங்கல்பம் செய்து அந்தச் சங்கல் பத்தை நிறைவேற்றுவது விரதம் எனப்படும். விரத தினத்தன்று உணவைப்பற்றிய சிந்தனையே வராதிருக்குமாகில் நம் சங்கல்பம் திண்ணிய சங்கல்பமாகிறது. இவ்விரதத்தின் மூலம் நம்மிடத்தில் இச்சா சக்தி (Will Power) அதிகரித்து வருகிறது. வாரத்துக்கு ஒருநாள் அல்லது மாதத்திற்கு ஒருநாள் உண்ணாவிரதம் இருப்பதன் மூலம் ஜீரணக் கருவிகளுக்குப் பூரண ஒய்வு கிடைக்கிறது. உணவில் ஜீரணமாகாத பகுதி ஏதாவது இருந்தால்

உண்ணாவிரதத்தன்று அது ஜீரணமாக்கப்பட்டுக் குடல் சுத்த மடைகிறது. அதன்மூலம் உடல் நோயினின்று விடுபட்டு ஆரோக்கியமடைகின்றது.

சபரிமலை, பழனி, திருப்பதி போன்ற ஆலயங்களுக்குப் போகவிரும்புபவர்கள் சிலநாட்களுக்கு விரதம் இருக்கின்றார்கள். அவ்விரத காலத்தில் தங்கள் உடலுக்கும் உள்ளத்துக்கும் நன்மை பயக்கக்கூடிய ஒழுக்கத்தை மேற்கொள்ளுகிறார்கள். நினைத்த நேரமெல்லாம் உண்ணாது ஒரு நாளைக்கு இரண்டு வேளை அல்லது ஒரு வேளைதான் உண்பது என உண்பதில் வரையறை விதித்துக் கொள்கிறார்கள். அதை முறையாகக் கடைப்பிடிப்பதன் மூலம் மிகைபட உண்பது, அடிக்கடி உண்பது போன்ற குறைகள் தவிர்க்கப்படுகின்றன. உடலுக்குக் கெடுதியை உண்டுபண்ணும் மது, மாமிசம், புகைபிடித்தல் போன்ற பழக்கங்களை விட்டொழிப்பதை விரதமாகக் கொள்கிறார்கள். சொகுசான படுக்கையையும், படாடோபமான வாழ்க்கையையும் ஒதுக்கிவிட்டுத் தூய எளிய வாழ்வு வாழ்ந்து வருகின்ற விரதத்தை மேற்கொள்வதன் மூலம் உடலும் உள்ளமும் புனிதமடைகின்றன.

இனி, மனிதனைக் கீழ்மையினின்று விலக்கித் தெய்வ நிலைக்கு எடுத்துச் செல்லும் விரதம் ஒன்று உண்டு. அதுதான் பிரம்மச்சரிய விரதமாகும். விரதங்களுள் பிரம்மச்சரிய விரதத்தை ஒப்பற்ற விரதம் என்று சொல்லலாம். எல்லா விரதங்களும் பிரம்மச்சரிய விரதத்தில் அடங்கிவிடுகின்றன. பக்குவமடைந்த சரீரத்தில் விந்துதாரை சிரசினின்று மூலாதாரத்தை நோக்கிவரும். அப்பருவத்தில் மனத்தில் புதிய புதிய எண்ணங்கள் தோன்றும். சிந்தையானது அப்போது பெரிதும் சிற்றின்பத்தையே நாடிச் செல்லும். சிற்றின்ப ஞானத்தைக் கேட்டறியாதவர்களுக்கும் ஜன்மாந்திர வாசனையின் பயனாக அது இயல்பாகவே உதித்து விடும். விஷய சுகங்களைப்பற்றி மனோராஜ்ஜியம் பண்ணுவதில் பேருவகை உண்டாகும். காமநோயால் உழற்றப்படும் மனிதனுக்கு எப்படியாவது விந்துவைக் கலைப்பதற்கே எண்ணம் வரும். அந்த எண்ணத்துக்கு உட்பட்டு வீரியத்தைச் சேதப்படுத்துபவன் வாழ்வு குலைந்துபோகிறது. விந்து விரயமாகாது, அதை நல் வழியில் செலுத்தக் கற்றுக்கொள்வது பிரம்மச்சரிய விரதமாகும்.

தேக வளர்ச்சிக்கும், மனத்திட்பத்துக்கும் பிரம்மச்சரியத்தைப் போன்று வேறு எதுவும் பயன்படாது. பிரம்மச்சரிய விரதம் காப்பவன் ஆண்மை உடையவனாகிறான். அஞ்சா நெஞ்சமும், தைரியமும் அவன்மாட்டுத் திகழும். அவனுடைய வதனத்தில் ஆனந்தம் வழியும். கண்களில் ஒளி வீசும். அவன் சிந்தையில் அறிவு ஒளிரும். பிரம்மச்சரிய விரதம் கடைப்பிடிப்பவனை மானுட வேடம் தாங்கியுள்ள தேவன் என்று அழைக்க வேண்டும்.

நைஷ்டிக பிரம்மச்சரிய விரதத்தைத் தந்தையின் பொருட்டுப் பீஷ்மர் எடுத்துக்கொண்டார். அதை அவர் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்ததன் மூலம் அவர் ஒப்பற்ற மஹான் ஆனார். பிரம்மச்சரியத்தின் வலிவை எதிர்க்க யாருக்குமே இயலாது என்பதை அவர்தம் வாழ்க்கையில் விளக்கிக் காட்டினார். விரதம் காப்பவன் வீரனாகிறான் என்பதையும் நிரூபித்துக் காட்டினார். பீஷ்மர் கடைப்பிடித்த விரதம் தர்மத்தினின்றும் சதாச்சாரத்தினின்றும் வழுவாது அமைந்திருந்தது. பரசுராமர் பூண்டிருந்த விரதம் சினம், மதம், ஹிம்சை ஆகிய சிறுமைகளுக்கு இடமளித்திருந்தது. தூய்மையிலும் தியாகத்திலும் ஊறி ஒளிர்ந்துகொண்டிருக்கும் சத்திய விரதத்தின் முன் கோபத்தில் மூழ்கிக்கிடக்கும் சத்திய விரதம் வெற்றிகொள்ளாது என்பதைப் பீஷ்மர் பரசுராமருக்கு எடுத்து விளக்கினார். தர்மத்துக்கும் சத்தியத்துக்கும் மேலான விரதம் இல்லை. இத்தகைய விரதங்களைக் கடைப்பிடிப்பவர்கள் பெருமக்களாகிறார்கள்.

விரதத்தை அனுஷ்டிப்பவன் ஒழுக்கநெறியில் நிலைபெற்று வருவதால் அவன் வாழ்வு விழுப்பத்துக்குரியதாகிறது. எடுத்துக் கொண்ட விரதத்தினின்று வழுவாது இருப்பவன் தன்னை உறுதிப்படுத்தி வருகின்றான். புலனடக்கம் என்னும் பயிற்சியை விரதத்தை அனுஷ்டிப்பவன் மேற்கொண்டவனாகின்றான். புலனடக்கத்தின் மூலம் ஆன்மிக விழிப்பு உண்டாகின்றது. ஆன்மிக விழிப்பைத் தன்னிடத்துத் தோற்றுவிப்பவன் பாரமார்த்திக வாழ்வுக்கு உரியவனாகின்றான். விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு லௌகீக வாழ்வு பாரமார்த்திக வாழ்வாக மாறி அமைகிறது. விரதத்தின் ஒப்பற்ற பயன் பாரமார்த்திக வாழ்வு என்னும் பெருவாழ்வைப் பெறுவதேயாம்.

கேள்வி: *(831)* திருப்பாவை - திருவெம்பாவை இவற்றை மார்கழி மாதத்தில்தான் சொல்லவேண்டுமா?

பதில்: திருப்பாவை, திருவெம்பாவை மட்டுமல்ல; பக்தி ஊட்டக்கூடிய நூல்களனைத்தையும் நாம் வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் நன்கு பயன்படுத்தவேண்டும். மார்கழி மாதத்தில் சிறப்பாகக் கடவுள் வழிபாடு நிகழ்ந்து வருகிறது. அந்தச் சிறப்பு வழிபாட்டில் இவை இரண்டும் இவைபோன்ற வேறு நூல்களும் நன்கு பயன்படுத்தப்படுகின்றன. மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து பழகுதல் சோம்பலினின்றும் அதற்கு முகாமையாயிருக்கின்ற தமோகுணத்தினின்று மீளுதல் பொருட்டேயாம். ஆதலால் காலமெல்லாம் அதிகாலையில் எழுந்து பழகுவது நல்ல பழக்கம். அதேபாங்கில் முறை வைத்துக் கொண்டு திருப்பாவையையும் திருவெம்பாவையையும் காலமெல்லாம் ஓதி வருவது நன்றேயாம்.

கேள்வி: *(832)* தவம் செய்து பண்பாட்டை வளர்க்க வேண்டும். ஆனால் இராவணன், சூரபத்மன் செய்த தவம் அவ்வாறு அவர்களை மாற்றவில்லையே ஏன்?

பதில்: தவத்தின் வாயிலாக மானுடன் ஒருவன் தன் தரத்தை மேன்மைப்படுத்த வல்லவனாகின்றான். தவத்தின் வாயிலாக விசுவாமித்திரர் ஒரே ஜன்மத்தில் ஒரு சாதாரண மனிதன் நிலையிலிருந்து மேலோங்கிப்போய்ப் பிரம்மரிஷி நிலையை எட்டினார். சுருங்கச் சொல்லின் ஒரே ஜன்மத்தில் தவத்தின் மூலம் கடைநிலையிலிருந்து ஒப்பற்ற உயர்நிலையை எய்தினார்.

"தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு"

என்பது வள்ளுவர் வாக்கு. இனி, தவம் நிஷ்காமிய தபசு, காமிய தபசு, அசுர தபசு என இயம்பப் பெறுகின்றது. இறைவனுடைய அருளைப் பெற்றுப் பிறவிப்பிணியைத் துடைப்பதற்கான தபசு நிஷ்காமிய தபசு ஆகிறது. இது தலைசிறந்தது. சான்றோர்கள் யாண்டும் கடைப்பிடிப்பது நிஷ்காமிய தபசு. இனி, உலகப்பற்றுடையவர்கள் உலக வாழ்வில்

சம்பத்துக்களையெல்லாம் அடையப்பெற்று இம்மையில் இன்புற்று வாழ்ந்திருக்கப் பண்ணுவது காமிய தபசு ஆகின்றது. மக்களில் பெரும்பான்மையோர் பண்ணுவது காமிய தபசு. ஏனென்றால் அவர்கள் இன்னும் உலகப்பற்றுதலை ஒழித்து விட்டு மேல்நிலைக்கு வந்தவர்கள் அல்லர். அசுர இயல்பு படைத்த மக்கள் சிலர் மண்ணுலகில் இருக்கின்றனர். அவர்கள் சுகபோகத்தில் ஆசையும் ஆதிக்கத்தில் ஆசையும் படைத்தவர் களாகின்றனர். கடும் தவம்புரியும் திறமை அவர்களுக்கு உண்டு. ஜடசக்தியில் அணுசக்தியைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்த வல்லவனாக இக்காலத்திய மனிதன் இருக்கிறான். அந்த அணுசக்தியை ஆக்கத்துறையில் பயன்படுத்துவது நல்லவர் களுடைய போக்காகிறது. அதே அணுசக்தியை நாசகாரியங் களுக்குப் பயன்படுத்துவது பொல்லாத காரியமாகும். அதுபோன்று பத்மாசுரனும், ராவணனும் பெறுதற்கரிய ஆற்றல்களைக் காமிய தவத்தின் மூலம் பெற்றார்கள். அங்ஙனம் அவர்கள் பெற்ற தபோபலனைப் போகத்துக்கும் பிறரைத் துன்புறுத்துதற்கும் பயன்படுத்தினர். இத்தகைய அசுரர்களுக்கொப்பான மானுடர் உலகில் எக்காலத்திலும் இருக்கிறார்கள். பிரபஞ்ச அமைப்பில் அன்னவர்களுக்கும் இடம் உண்டு. ஆனால் அக்கொடியவர்கள் காலக்கிரமத்தில் திருந்தியமைவது திண்ணம். நெறிவழுவிய வாழ்வு யாருக்குமே பயன்படாது என்னும் உண்மையை விரைவில் அல்லது நாளடைவில் அவர்கள் கற்றுக்கொள் கின்றனர். இறைவனுடைய சிருஷ்டியில் இத்தனைவித இயல்புகள் இடம்பெற்றிருக்கின்றன.

கேள்வி: *(833)* கணவனே தெய்வம் என்று நம்பியிருந்த பெண்ணிற்குக் கணவன் துரோகம் செய்துவிட்டார். அவள் சாவதைத் தவிர வேறு வழியில்லையா? பெண்களுக்கு மட்டும்தான் கற்பு நெறியா? இனி, பிறவியே வேண்டாம் என நினைக்கிறேன். இதற்கு என்ன வழி?

பதில்: கற்பு ஆடவர், மகளிர் ஆகிய இருதரத்தாருக்கும் பொதுவானதே. ஆடவன் தனக்கு நல்ல மனைவி வாய்க்கா விட்டால் இரண்டாவது மணம்புரிந்து கொள்ளலாம். அதற்கு முதல் மனைவியின் சம்மதத்தைப் பெறுவது முற்றிலும் அவசியம்.

இனி, ஆடவன் ஒருவனுக்குக் குடும்பியாயிருக்கும்பொழுது திடீரென்று உலகப்பற்றினின்று விழித்தெழுந்து விவேகம், வைராக்கியம் வந்துவிட்டால் அவன் துறவியாகப் போகலாம் என்னும் ஆமோதிப்புச் சான்றோர்களுக்கிடையில் உண்டு. ஆனால் பெண்பால் ஒருத்திக்குத் துறவறம் பூணும் சுதந்திரம் இதுகாறும் நம் சமுதாயத்தில் இல்லாதிருந்தது. ஆனால் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் மண்ணுலகில் தோன்றி வந்த காலம் முதல் பெண்களுக்கும் துறவியாகப் போகும் சுதந்திரம் உண்டு என்னும் கொள்கை வந்துள்ளது. ஆனால் அங்ஙனம் துறவறம் பூணும் பெண்பாலர் தக்க ஸ்தாபனம் ஒன்றில் வாழ்ந்திருத்தல் வேண்டும். தனியாக அவர்கள் சஞ்சரிக்கலாகாது.

பாரமார்த்திகப் பெருநிலையை எய்தும் வாய்ப்பு ஆண்பாலருக்கு இருப்பது போன்று பெண்பாலருக்கும் சாத்தியம். பெண்களுக்கு ஞானம் கிடையாது என்னும் குருட்டு நம்பிக்கை நம்மவர்களுள் ஒரு சிலருக்கிடையில் இன்றைக்கும் இருந்து வருகிறது. இக்கொள்கை பொருளற்றது என்பதை ஸ்ரீசாரதா தேவியார் நிரூபித்துள்ளார். ஆதலால் பொறுப்பற்ற கணவனைப் புறக்கணித்துவிட்டு நெறிபிறழாத மாது ஒருத்தி துறவறம் பூண்டு ஒரு நல்ல ஸ்தாபனத்தின் மூலம் மக்கள் சேவை செய்வதே மானுட ஜன்மத்தின் குறிக்கோளாகும்.

கேள்வி: *(834)* பிரளயம் வந்தால் அதில் பாரதமும் அழிந்துவிடுமா?

பதில்: பிரளயத்தின் பாங்கு மனிதனுடைய நித்திய வாழ்க்கையில் நாள்தோறும் நிகழ்ந்து வருகிறது. உயிர் வாழ்கின்ற ஜீவர்கள் அனைவருக்கும் நனவு, கனவு, கனவற்ற உறக்கம் ஆகிய மூன்று நிலைகள் யாண்டும் நிகழ்ந்து வருகின்றன. கனவற்ற உறக்கத்தில் பிரபஞ்சம் முழுதும் காட்சியினின்று மறைந்துபட்டுப் போகின்றது. இது இயற்கையின் கூறு. பரதகண்டவாசிகள் இந்த அமைப்புக்கு விலக்காயிருக்கிறார்கள். உலகம் முழுதுக்கும் நிகழ்ச்சிகள் யாவும் ஒரே பாங்குடையவை. பிரளய காலத்தில் எல்லாம் அழிந்துபட்டுப் போவதுபோன்று பரத கண்டமும் அழிந்துபட்டுப்போம். பிரளய ஒடுக்க நியதிக்கு விலக்கு யாருக்கும் இல்லை. எப்பொழுதும் இல்லை.

கேள்வி: *(835)* ஆராய்ச்சிக்காக உயிர் வகைகளைக் கொல்லலாமா?

பதில்: "கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுதல் என் இச்சை பராபரமே" எனத் தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்திருக்கிறார். அது வாழ்க்கையின் குறிக்கோள். ஆனால் வாழ்க்கையின் துவக்கம் கொலை மயமாகவே அமைந்திருக்கிறது. எண்ணெய் இல்லாது தீபம் எப்படி எரியாதோ அப்படி உயிர் உயிரை மாய்ப்பதின் வாயிலாகவே பிரபஞ்ச வாழ்வு நடைபெற்று வருகிறது. மண்ணிலுள்ள பாக்டீரியா என்னும் உயிர் வகைகளை உணவாக்கிப் பயிர்பச்சைகள் தழைத்தோங்குகின்றன. பிறகு அவைகள் ஒன்றனுக்கு ஒன்று உணவு ஆவதன் வாயிலாக உயிர் வாழ்வு நிறைவேறுகிறது. ஜங்கமங்கள் தோன்றி வந்து அடுத்தபடியாக ஸ்தாவர வர்க்கங்களைப் புசித்து வாழ்வைப் பேணி வருகின்றன. ஜங்கமங்களும் ஒன்றனுக்கு ஒன்று உண்பதற்கு உணவு ஆவதன் விளைவாகவே வாழ்வு மேலோங்குகிறது. உயிர் வாழுதல் பொருட்டு உயிர்வகைகள் அழிக்கப்படுவது ஒருபுறம் இருக்கிறது. வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்துகொள்ள முயலுவது ஒரு மேலாம் திட்டமாகிறது. தத்துவத்தை அறிந்து கொள்ளுதற்குக் கொல்லுதல் தேவையென்றால் அச்செயலிலும் மனிதன் ஈடுபட்டே ஆகவேண்டும். இதையொட்டிய பழமொழி ஒன்று உண்டு. "ஆயிரம் கண்ணைக் கெடுத்தவன் அரை வைத்தியன்" என்பது அக்கோட்பாடு. ஆராய்ச்சி பண்ணுகிறவன் தோல்வியடைகிறபொழுதெல்லாம் பிற உயிர்களுக்கு அழிவு அல்லது நஷ்டம் நிகழ்கிறது. அந்த அழிவுக்கும், நஷ்டத்திற்கும் மனிதன் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

பிறகு வாழ்வும் மாய்வும் இணைபிரியாதவைகள். வாழ்ந்திருக்க விரும்புகிறவன் மாய்ந்து போவதற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டும். நனவுக்கு நிகர் வாழ்வு. உறக்கத்திற்கு நிகர் சாவு. உறங்காது காலமெல்லாம் மனிதன் வாழ்ந்திருக்க முடியாது. அதேபாங்கில் சாவின் மூலமாக மனிதன் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளுகிறான். சில வேளைகளில் யுத்தம் நிகழ்கிறது. அதில் மக்கள் பெருவாரியாக மாய்ந்து போகின்றனர். பஞ்சம், கொள்ளை நோய் வாயிலாகவும் ஏராளமாக மக்கள் மடிந்து

போவதுண்டு. ஆதலால் வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்திருப்பவர்கள் மரணத்திற்கு அஞ்சாதிருந்து பழகவேண்டும். கொல்லுவதன் மூலமாகவும் சமுதாயத்திற்கு நலனை உண்டு பண்ணலாம். அவ்வாறு உண்டுபண்ண முடியுமானால் அச்செயலில் மனிதன் துணிந்து ஈடுபட்டே ஆகவேண்டும்.

மகாபாரத யுத்தத்தைத் தவிர்க்கக் கண்ணபிரான் எவ்வளவோ முயன்றார். அவர் முயற்சி வெற்றியடையவில்லை. யுத்தத்தில் ஈடுபட வேண்டியது முற்றிலும் அவசியமாயிற்று. சமுதாயத்தோடு சமுதாயம் முரண்படுகிறது. அந்த முரண்பாடு இரண்டு சமுதாயங்களுக்கும் இடுக்கண்ணாக உருவெடுக்கிறது. காலமெல்லாம் சங்கடத்திற்கு உட்பட்டுத் திண்டாடிக்கொண்டு வாழ்ந்திருப்பதைவிட யுத்தத்தின் வாயிலாக நெருக்கடியைப் போக்கடிப்பது இன்றியமையாததாகிறது. மகாபாரதப் போர் அங்ஙனம் நிகழ்ந்ததாகச் சொல்லுதற்கு ஆங்கு இடமுண்டு. இக்கோட்பாடு அன்று இருந்தது போன்று இன்றும் எப்பொழுதுமே இருக்கும். ஆதலால் அவசியம் ஏற்படுகின்ற இடத்துக் கொல்ல மனிதன் துணிய வேண்டும்.

கேள்வி: *(836)* அருளும் பொருளும் ஏன் சேர்ந்து இருக்கக்கூடாது?

பதில்: நாட்டத்தில் இரண்டு விதங்கள் இருக்கின்றன. இவ்வுலக சம்பந்தமான நாட்டம் பொருள் நாட்டம். இவ்வுலகை நன்கு பயன்படுத்தித் தன்னைப் பரத்துக்கு ஆயத்தப்படுத்துவது அருள் நாட்டம். இவை இரண்டும் பாங்கில் ஒன்றோடொன்று ஒவ்வாதிருப்பதால் அருள் நாட்டம் நாடுகிறவர்கள் பொருள் நாட்டத்தை ஒதுக்கித் தள்ளவேண்டும். இதைக் குறித்துப் பரமஹம்சதேவர், "இராமனும் காமனும் சேர்ந்திருக்கமாட்டார்கள். இராமன் உள்ள இடத்தில் காமன் இல்லை; காமன் உள்ள இடத்தில் இராமன் இல்லை" என்று இயம்புகின்றார். அருள் நாட்டம் யோகியர்களுக்கு உரியதாகிறது. பொருள் நாட்டம் பொல்லாதது என்பதற்குச் சான்றாகப் பரமஹம்சதேவர் தம் திரிகரணங்களைக் கொண்டும் பணத்தைத் தீண்டவில்லை.

பெருநிலையை அடைய விரும்புகின்ற ஒருவன் அதற்கேற்ற விலைகொடுக்க வேண்டும். அருள் நாட்டம் மனிதன் பெறுகிற

பேறுகள் அனைத்திலும் தலைசிறந்ததாகிறது. உள்ளத்தினின்று பொருளாசையை அறவே அகற்றித் தள்ளுதலே அதன் பொருட்டு அவன் தருகிற விலையாம். ஆயினும் இந்த நியதிக்கு விதி விலக்கு ஒன்று உள்ளது. மனிதன் பொருளைப் படைத்திருக் கலாம்; சம்பாதிக்கவும் செய்யலாம். ஆயினும் பொருள் நாட்டத்துக்கு அவன் அடிமையாகக்கூடாது. யக்ஞங்களுள் திரவிய யக்ஞம் என்பது ஒன்று. பொருளைச் சம்பாதிப் பதைக் கடவுள் நாட்டத்தோடு இணைத்து வைத்துச் செய்ய லாம். சம்பாதித்த பொருளைக் கடவுள் நாட்டத்திலும் மக்கள் பணிவிடையிலுமே செலவு செய்யலாம். அப்படிச் செய்கிற வர்கள் பொருளுக்கு ஒருபோதும் அடிமைகளாவதில்லை. மக்களுள் பெரும்பாலோர் பொருள் சம்பாதிப்பதற்கிடையில் பொருளாசையிலேயே ஊறியிருந்து அதற்கு அடிமைகள் ஆகிறார்கள். அத்தகையவர்களுக்கு யோகம் அல்லது அருள்நாட்டம் கைகூடாது. போகம் அல்லது உலக நாட்டமே அவர்களுடைய உள்ளத்தில் உறுதிபெறுகிறது. இக்காரணங்களை முன்னிட்டே ஆத்ம சாதகன் பொருள் நாட்டதை ஒதுக்கித் தள்ளவேண்டும்.

கேள்வி: *(837)* தாய் திருடச் சொன்னால் பணியலாமா?

பதில்: நல்ல மகன் ஒருவனுக்குத் 'தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை; தாய் சொல்மிக்க வாசகமில்லை' என்னும் பழமொழி வந்துள்ளது. தாய், தந்தை சொற்படி நடப்பவனே நல்ல மைந்தனாகிறான். திருடுதல் நல்வினையாகாது. அது தீவினை. ஆன்றோர்கள் எல்லோரும் அதைக் கேடு என ஒதுக்கித் தள்ளிவைக்கின்றனர். தன் மகனைப் பார்த்துத் தாய் ஒருத்தி எங்கேனும் சென்று ஏதேனும் பொருளைத் திருடி வா என்று சொல்லுவதில் அவளுடைய பண்பாடு வெளியாகிறது. மகனைத் திருடனாக்குவது அவளுடைய நோக்கமன்று. ஏதேனும் ஒருவிதத்தில் தனக்குத் தேவையாயுள்ள பொருளைப் பெற்றாக வேண்டும். மற்று நேர்மையான முறைகளைக் கையாண்டால் விரும்பிய பொருளைப் பெறுவதற்குக் காலதாமதம் ஆகும். குறுக்கு வழியில் விரைவில் அதைப்பெற அவள் எண்ணங் கொண்டுள்ளாள். அந்த எண்ணம் சரியானதன்று. அத்தருணத்தில்

நல்வழியை அறிந்திருக்கும் மகன் அதை அறியாதிருக்கும் தாயைத் திருத்தியமைக்கக் கடமைப்பட்டிருக்கிறான். திருடுதலில் வருகிற கேடுகளையெல்லாம் எடுத்து இயம்பி நல்வழியில் ஈடுபட்டுத் தேவையாயுள்ள பொருள்களை நிதானமாகப் பெறுவது உத்தமம் என்றும், முறைதவறிப்போய்த் தனக்குத்தானே பெருங்கேடு சூழ்ந்து கொள்ளுதல் தகாது என்றும், மகன் தாய்க்கு எடுத்துரைத்து அவள் மனதைத் திருத்தியமைக்க வேண்டும்.

பிரஹ்லாதன் மஹாவிஷ்ணுவின் பக்தனாகப் பிறப்பெடுத்தான். ஆனால் அவன் தந்தை ஹிரண்யகசிபு திருமாலின் ஜன்ம சத்ருவாக இருந்தான். இந்தச் சூழ்நிலையில் பிரஹ்லாதனுக்குத் தந்தையின் சொற்படி நடக்க இயலவில்லை. ஆயினும் தந்தையைத் தன் வழிக்குத் திருப்ப அவன் பெரிதும் முயன்றான். அவன் முயற்சி பலிதமாகவில்லை. அத்தருணத்தில் தந்தையின் சொல்லை மீறி அவன் நடந்தது குற்றமாகாது.

கைகேயி தன் மகனாகிய பரதனுக்கு முறைதவறிய பாங்கில் இராஜ்ஜியத்தைப் பெற முயன்றது கிட்டத்தட்ட திருட்டுச் செயலுக்கு நிகரானது. அக்கைகேயியின் சொற்படி ராமன் காட்டுக்குச் சென்றான். இராஜ்ஜியத்தைப் பெறும்படி அவள் சொன்னதைச் சொந்த மகன் பரதன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, எந்த விஷயத்தில் பெற்றோர்க்கு அடிபணிதல் வேண்டும் என்பதையும், எந்த விஷயத்தில் பெற்றோர் விருப்பத்தை நிராகரிக்கவேண்டும் என்பதையும் நன்கு அறிந்திருப்பது அறிஞர்களுடைய செயலாம்.

கேள்வி: *(838)* நல்ல காரியம் ஏதேனும் செய்வதற்கு உற்றார் உறவினர் தடை உள்ளதே? எப்படி மீள்வது?

பதில்: உற்றார் உறவினர் எனப்படுகின்ற எல்லோரும் உடல் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவர்கள் ஆகின்றார்கள். அறிவிலும் பண்பாட்டிலும் அவர்களுக்கிடையில் தாரதம்மியம் இருப்பது இயல்பே. ஒருவருக்கு நல்லதாகத் தோன்றுவது மற்றவருக்கு நல்லதாகத் தோன்றுவதில்லை. ஆகையினால் அன்னவர்களிடமிருந்து தடை வருகிறது. பொருந்தாத தடைக்கு முயற்சியுடைய நல்லவன் அடிமைப்படலாகாது. உற்றார், உறவினர் மனம் நொந்துகொள்ளும்படியும் நடந்து கொள்ளலாகாது.

பேறுகள் அனைத்திலும் தலைசிறந்ததாகிறது. உள்ளத்தினின்று பொருளாசையை அறவே அகற்றித் தள்ளுதலே அதன் பொருட்டு அவன் தருகிற விலையாம். ஆயினும் இந்த நியதிக்கு விதி விலக்கு ஒன்று உள்ளது. மனிதன் பொருளைப் படைத்திருக் கலாம்; சம்பாதிக்கவும் செய்யலாம். ஆயினும் பொருள் நாட்டத்துக்கு அவன் அடிமையாகக்கூடாது. யக்ஞங்களுள் திரவிய யக்ஞம் என்பது ஒன்று. பொருளைச் சம்பாதிப் பதைக் கடவுள் நாட்டத்தோடு இணைத்து வைத்துச் செய்ய லாம். சம்பாதித்த பொருளைக் கடவுள் நாட்டத்திலும் மக்கள் பணிவிடையிலுமே செலவு செய்யலாம். அப்படிச் செய்கிற வர்கள் பொருளுக்கு ஒருபோதும் அடிமைகளாவதில்லை. மக்களுள் பெரும்பாலோர் பொருள் சம்பாதிப்பதற்கிடையில் பொருளாசையிலேயே ஊறியிருந்து அதற்கு அடிமைகள் ஆகிறார்கள். அத்தகையவர்களுக்கு யோகம் அல்லது அருள்நாட்டம் கைகூடாது. போகம் அல்லது உலக நாட்டமே அவர்களுடைய உள்ளத்தில் உறுதிபெறுகிறது. இக்காரணங்களை முன்னிட்டே ஆத்ம சாதகன் பொருள் நாட்டதை ஒதுக்கித் தள்ளவேண்டும்.

கேள்வி: *(837)* தாய் திருடச் சொன்னால் பணியலாமா?

பதில்: நல்ல மகன் ஒருவனுக்குத் 'தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை; தாய் சொல்மிக்க வாசகமில்லை' என்னும் பழமொழி வந்துள்ளது. தாய், தந்தை சொற்படி நடப்பவனே நல்ல மைந்தனாகிறான். திருடுதல் நல்வினையாகாது. அது தீவினை. ஆன்றோர்கள் எல்லோரும் அதைக் கேடு என ஒதுக்கித் தள்ளிவைக்கின்றனர். தன் மகனைப் பார்த்துத் தாய் ஒருத்தி எங்கேனும் சென்று ஏதேனும் பொருளைத் திருடி வா என்று சொல்லுவதில் அவளுடைய பண்பாடு வெளியாகிறது. மகனைத் திருடனாக்குவது அவளுடைய நோக்கமன்று. ஏதேனும் ஒருவிதத்தில் தனக்குத் தேவையாயுள்ள பொருளைப் பெற்றாக வேண்டும். மற்று நேர்மையான முறைகளைக் கையாண்டால் விரும்பிய பொருளைப் பெறுவதற்குக் காலதாமதம் ஆகும். குறுக்கு வழியில் விரைவில் அதைப்பெற அவள் எண்ணங் கொண்டுள்ளாள். அந்த எண்ணம் சரியானதன்று. அத்தருணத்தில்

நல்வழியை அறிந்திருக்கும் மகன் அதை அறியாதிருக்கும் தாயைத் திருத்தியமைக்கக் கடமைப்பட்டிருக்கிறான். திருடுதலில் வருகிற கேடுகளையெல்லாம் எடுத்து இயம்பி நல்வழியில் ஈடுபட்டுத் தேவையாயுள்ள பொருள்களை நிதானமாகப் பெறுவது உத்தமம் என்றும், முறைதவறிப்போய்த் தனக்குத்தானே பெருங்கேடு சூழ்ந்து கொள்ளுதல் தகாது என்றும், மகன் தாய்க்கு எடுத்துரைத்து அவள் மனதைத் திருத்தியமைக்க வேண்டும்.

பிரஹ்லாதன் மஹாவிஷ்ணுவின் பக்தனாகப் பிறப்பெடுத்தான். ஆனால் அவன் தந்தை ஹிரண்யகசிபு திருமாலின் ஜன்ம சத்ருவாக இருந்தான். இந்தச் சூழ்நிலையில் பிரஹ்லாதனுக்குத் தந்தையின் சொற்படி நடக்க இயலவில்லை. ஆயினும் தந்தையைத் தன் வழிக்குத் திருப்ப அவன் பெரிதும் முயன்றான். அவன் முயற்சி பலிதமாகவில்லை. அத்தருணத்தில் தந்தையின் சொல்லை மீறி அவன் நடந்தது குற்றமாகாது.

கைகேயி தன் மகனாகிய பரதனுக்கு முறைதவறிய பாங்கில் இராஜ்ஜியத்தைப் பெற முயன்றது கிட்டத்தட்ட திருட்டுச் செயலுக்கு நிகரானது. அக்கைகேயியின் சொற்படி ராமன் காட்டுக்குச் சென்றான். இராஜ்ஜியத்தைப் பெறும்படி அவள் சொன்னதைச் சொந்த மகன் பரதன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, எந்த விஷயத்தில் பெற்றோர்க்கு அடிபணிதல் வேண்டும் என்பதையும், எந்த விஷயத்தில் பெற்றோர் விருப்பத்தை நிராகரிக்கவேண்டும் என்பதையும் நன்கு அறிந்திருப்பது அறிஞர்களுடைய செயலாம்.

கேள்வி: *(838)* நல்ல காரியம் ஏதேனும் செய்வதற்கு உற்றார் உறவினர் தடை உள்ளதே? எப்படி மீள்வது?

பதில்: உற்றார் உறவினர் எனப்படுகின்ற எல்லோரும் உடல் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவர்கள் ஆகின்றார்கள். அறிவிலும் பண்பாட்டிலும் அவர்களுக்கிடையில் தாரதம்மியம் இருப்பது இயல்பே. ஒருவருக்கு நல்லதாகத் தோன்றுவது மற்றவருக்கு நல்லதாகத் தோன்றுவதில்லை. ஆகையினால் அன்னவர்களிடமிருந்து தடை வருகிறது. பொருந்தாத தடைக்கு முயற்சியுடைய நல்லவன் அடிமைப்படலாகாது. உற்றார், உறவினர் மனம் நொந்துகொள்ளும்படியும் நடந்து கொள்ளலாகாது.

படிப்படியாக நல்ல வழியில் செல்வதன் பயனை அவர்களுக்கு எடுத்து விளக்கிக்காட்டி அவர்களையும் நல்வழிக்குத் திருப்புவது உசிதம். ஒரு சிலர் திரும்புவர்; வேறு சிலர் திரும்பமாட்டார்கள். அன்னவர்களிடம் மனம் நோகாதபடி நடந்துகொண்டு நல்ல வழியில் செல்கின்றவன் தன்போக்கில் போவதே உசிதம்.

கேள்வி: *(839)* நலத்தையே நினைந்து, நலத்தையே நவின்று, நலத்தையே நிறைவேற்றி வருகிறவர்களுக்கு யாரும் தீங்கு செய்யமாட்டார்கள் எனத் தர்மசக்கர அருள் விருந்தில் இருக்கிறது. ஆனால் மகாத்மா காந்தி, ஏசுநாதர் போன்ற உத்தமர்களுக்கு ஏன் துப்பாக்கியால் சுடப்பட்டும் சிலுவையில் அறையப்பட்டும் துர்மரணம் நேர்ந்தது?

பதில்: குழந்தையின் சுபாவம் உடையவர்களாக சான்றோர்கள் ஆய்விடுகிறார்கள். குழந்தைகள் பிற உயிர் களிடத்து வெறுப்புக்கொள்வதில்லை. ஆதலால் பிற உயிர்கள் குழந்தைகளை வெறுக்கவோ, அவைகளைத் துன்புறுத்துவோ முற்படுவதில்லை. இது பொதுவிதி. உலகில் இப் பொது விதிக்கும் விலக்கு உண்டு. சிசுக்களை வதைக்கும் கொலை பாதகர்களும் உலகில் இருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வதை முன்னிட்டுக் குழந்தைகள் எப்பொழுதும் துன்பத்துக்கு ஆளாகிறார்கள் என்று சொல்லலாகாது. குழந்தைகளைப் பொதுவாக எல்லோரும் நேசிப்பது போன்று சான்றோர்களையும் பொதுமக்கள் இயல்பாக நேசித்து வருகிறார்கள். ஏசுநாதரும், மகாத்மா காந்தியும் கொலையுண்டது வேறு இரண்டு காரணங் களை முன்னிட்டேயாம். தம்மைக் கடவுளின் புதல்வன் என்று சொல்லிக் கொண்டதற்காக ஏசுநாதரை அறிவிலிகள் சிலுவையில் அறைந்து கொன்றுவிட்டார்கள். எவ்விதத்திலாயினும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை இருந்தாக வேண்டுமென்று வற்புறுத்தி யதற்காக வெறிபிடித்தவன் ஒருவன் மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்றுவிட்டான். இவ் இரு பெரியோர்கள் கொண் டிருந்த பெரிய லட்சியங்களை முன்னிட்டு இருவரும் தங்கள் உடலங்களை இழந்தார்கள். ஆனால் அந்நிகழ்ச்சிகள் வாயிலாக அவர்களுடைய இயக்கங்கள் பன்மடங்கு அதிகமாக வலிவு பெற்றன. இழக்கப்பட்டது சரீரம், அடையப்பெற்றது லட்சியத்தின்

வளர்ச்சி. எனவே அச்செயல்கள் உலகுக்கோ அச்சான்றோர் களுக்கோ நஷ்டத்தை உண்டுபண்ணி விடவில்லை. இலாபத் தையே அவைகள் உண்டுபண்ணின. தீமைபோன்று தென்பட்ட நன்மைகளென்று அந்நிகழ்ச்சிகளை நாம் பொருள்படுத்த வேண்டும்.

கேள்வி: *(840)* சுமங்கலியாய் இருக்கிற மாது ஒருத்தி வீட்டில் எல்லாமிருக்க யாதொரு அணிகலனுமின்றி கழுத்தில் ஜபமாலை மட்டும் அணிந்திருக்கிறாள். குருவினிடத்துக் கைவல்யம் முதலிய நூல்களைப் பாடம் கேட்டு மனனம் செய்திருக்கிறாள். ஆயினும் சுமங்கலி வளையல்கூட இல்லாமல் இருப்பது சரியா? இவ்வாறு இருத்தலில் தனிச்சிறப்பு ஏதேனும் உண்டா?

பதில்: லௌகிகப் பழக்கவழக்கங்கள் பல அவரவர் கொள்கையை ஒத்ததாகின்றன. லௌகிகப் பழக்கவழக்கங்களைத் தமது விருப்பம் அல்லது சௌகரியத்துக்கு ஒப்ப மாற்றி அமைத்துக்கொள்வதால் வாழ்க்கைக்கு ஒருவிதமான இழுக்கும் உண்டாகாது. சுமங்கலி ஒருத்தி உடலில் ஒருவிதமான ஆபர ணமும் இல்லாது கழுத்தில் மாங்கல்யதாரணமும் இல்லாது சிறந்த சுமங்கலியாக இருக்கமுடியும். புறச்சின்னங்கள் எல்லாம் நம்முடைய வசதிக்காக என்று அமைந்தனவே ஒழிய நாம் அவைகளில் கட்டுண்டிருப்பதற்காக அல்ல. எனவே, புறச்சின்னங்களைக் கொண்டு ஒருவனை அல்லது ஒருத்தியை நாம் மதிப்புப் போடுவது பொருந்தாது. தூய மனதும், தூய வாழ்க்கை முறையும் அமைந்திருப்பவர்கள் எல்லோரும் மேலோரே. மனத்தகத்து மாசுபடிந்திருப்பவரும் வாழ்க்கைமுறை வழுவியிருப்பவரும் கீழோர் ஆவர்.

கேள்வி: *(841)* தர்ம சக்கரம் அருள்விருந்து ஒன்றில் "விரும்பிய மாத்திரத்தில் வாலிபனுடைய மனப்பான் மையைப் பெறவல்லவன் ஒருவன் நுண்ணறிவு படைத்த வனாகிறான்" என்று ஒரு அறிவுரை இருக்கிறது. தற்காலத்து வாலிபர்களில் பெரும்பான்மையோர் ஆத்மீக விஷயங் களைப் படித்துப் புரிந்துகொள்ளச் சக்தியற்றவர்களாவும்,

அளவுக்கு மீறிய காம இச்சை, பணப்பேராசை, முரட்டுத் தனம் ஆகிய கீழான போக்குடையவர்களாவும் இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஆகையால் மேலே அருள் விருந்தில் கூறப்பட்ட வாலிப மனப்பான்மை இன்னது என்று விளக்கவேண்டுகிறேன்.

பதில்: உடலுக்கு முதுமை உண்டு. முதுமையடைந்துவிட்ட உடல் திரும்பவும் இளமையைப் பெறுவது துர்லபம். ஆனால் ஒரு மனிதன் மனத்தகத்து எப்பொழுதும் இளமை படைத் தவனாகவே இருக்கமுடியும். முதிய வயதில் மனபரிபாகம் பெரிதும் வந்தமைகிறது. மனபரிபாகம் அடையப்பெற்றுள்ள ஒரு மனிதன் அந்த மனத்தகத்து இளமையைக் காப்பாற்ற வல்லவனாய் இருப்பானாகில் அவன் 'வாலிபனுடைய மனப் பான்மையைப் பெறவல்லவன்' எனப் பொருள்படுகிறது. இதற்கு மாறாக இளைஞர்கள் அனைவரும் நல்ல மனப்பான்மை படைத்தவர்கள் என்று நாம் பொருள்படுத்தலாகாது. ஆகவே ஊக்கமும், தன்னம்பிக்கையும் நிறைந்துள்ள மனநிலையே வாலிபனுடைய மனப்பான்மையென்று அந்த அருள் விருந்தில் பொருள்படுத்தப்பட்டுள்ளது.

கேள்வி: *(842)* பெரியவர்களும் அறிஞர்களும் எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் யாராயிருந்தாலும் 'உன் பாதாரவிந்தத்துக்குச் சரணம்' என்றுதான் சொல்லுகிறார்கள். அப்படியானால் அந்தப் பாதத்தினுடைய மகிமை யாது?

பதில்: மனிதனுடைய உடலமைப்பில் உத்தமமான அங்கமாக இருப்பது தலை. ஒரு நாட்டுக்குத் தலைமைப்பட்டணம் போன்றது உடலமைப்புக்குத் தலை. முக்கியமான பொறிகள் எல்லாம் தலையில் அமைந்திருக்கின்றன. மிக நுட்பமான கருவியாகிய மூளை மண்டையோட்டுக்குள் வைத்துப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் உடலமைப்பில் தலை முக்கியமான இடம்பெறுகிறது. பிறகு காலோ உடலமைப்பில் கீழான இடம்பெறுகிறது. கையால் அடிப்பதைவிடக் காலால் உதைப்பது அவமானப்படுத்துதற்கு ஏதுவான செயலாகக் கருதப்படுகிறது. ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு மரியாதை

காட்டுகிறபொழுது கடையாய நிலையிலிருக்கிற அடிகளுக்கு வணக்கம் செலுத்தினால் ஏனைய பகுதிகளுக்கெல்லாம் வணக்கம் செலுத்தியதற்கு ஒப்பாகிறது. பெரியவர்கள் சிறியவர்களைத் தலையைத்தொட்டு ஆசீர்வதிக்கிறார்கள். சிறியவர்கள் பெரியவர் களைப் பாதத்தைத் தொட்டு வணங்குகிறார்கள். கடவுளிடத்து அன்பு செலுத்துகிறவர்களெல்லாம் அடியார்கள் என அழைக்கப் படுகிறார்கள். இறைவனுடைய திருவடியை நாடுபவர்கள் என்பது அதன் கருத்து. 'இறைவா, உன் திருவடியை நான் வந்து சேரவேண்டும்' என்பது வணக்கமாகிறது. அதற்கு மாறாக, 'இறைவா, உன் தலையில் நான் வந்து சேரவேண்டும் என்பது வணக்கமாகாது. இங்ஙனம் அடியைச் சிறப்பித்துச் சொல்லுவது வணக்கத்தை வெளியிடுதல் பொருட்டேயாம். பெரியோர்களை வணங்கும்பொழுதும் கடவுளை வணங்கும்பொழுதும் அவர் களின் திருவடிகளைச் சிறப்பிப்பதே முறை.

கேள்வி: *(843)* **என் தோழிக்கு மணமாகிப் பதினோரு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. குழந்தைகள் ஐந்து இருக்கின்றன. அவள் கணவருக்குத் தொழிலேதும் கிடையாது. என் சிநேகிதிக்கு அவள் தந்தை கொடுத்த பணம் சிறிது இருக்கிறது. அதிலிருந்து அவள் குழந்தைகளுடன் காலம் தள்ளுகிறாள். கணவன் கொடுக்கும் கொடுமைகள் தாளாமல் தன் தந்தை வீட்டிற்கு அடிக்கடி வந்து விடுகிறாள். இது எவ்வளவு நாள் சாத்தியமாகும்? உள்ளன்பில்லாது பணத்தையும் உடலையும் மட்டும் விரும்பும் கணவனிடம், வேலையில்லாது வீட்டிலேயே இருப்பவனிடம், அவள் படும் அவஸ்தைகள் பல. என் தோழி S.S.L.C. படித்திருக்கிறாள். சிறிது ஹிந்தியும் கற்றி ருக்கிறாள். ஆகவே மேலும் ஹிந்தியில் அபிவிருத்தி யடைந்து பள்ளி ஆசிரியையானால் அவளுடைய மனத்தில் அல்லல் குறையுமல்லவா? அவள் பிறந்த குடும்பத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியேறி உத்தியோகம் பார்த்தல் இதுவரை நடந்ததில்லை. கேவலம் என்றுகூட எண்ணுவார்கள். எனவே எதிர்ப்பை மீறிக்கொண்டு ஆசிரியை படிப்புப் படிக்க அவள் துணியலாமா?**

அவள் புருஷன் போன்றவர்கள் பொறாமை, காமவெறி, தான் பெற்ற குழந்தையிடத்தும் கொண்ட மனைவியிடத்தும் பாசமின்மை, மனைவியின் நகை, பணம் இவைகளை அபரிக்கச் சூழ்ச்சி செய்தல் ஆகிய இவைகளை நீக்கி நல்ல மனிதர்கள் ஆவது சாத்தியப்படுமா?

பதில்: நல்வாழ்வு வாழ்ந்து மேல்நிலைக்கு வருவதற்காக நாம் மானுடராய்ப் பிறந்திருக்கிறோம். எப்படியாவது உண்டு, உடுத்து இன்புற்றிருப்பது வாழ்வின் நோக்கமல்ல. சூழ்நிலை பிரதிகூலமானதாய் இருந்தால் அதை மாற்றியமைக்கவும் நாம் முயலவேண்டும். உற்றார் உறவினர்க்கிடையில் இருக்கும் ஒற்று மையும் நட்பும் எப்பொழுதும் உயர்ந்த நோக்கத்தை அடிப் படையாகக் கொண்டதன்று. பெரும்பாலும் அது சுயநலத்தின் பொருட்டு அமைந்ததாம். மனமொத்த நிலையில் இல்வாழ்வு பாராட்டத்தக்கது. ஆனால் இல்வாழ்வின் பெயரால் எண்ணிக் கையில் மிகைப்பட்ட மக்களைப் பெற்றெடுப்பது பொருந்தாது. அப்படிச் செய்வது காமத்துக்கு வசப்பட்டவர்களுடைய செயல்.

ஓர் உயர்ந்த லக்ஷியத்தின் பொருட்டுக் கீழான வாழ்க்கையைத் துறந்தே ஆகவேண்டும். கீழான வாழ்க்கையைத் துறக்கும் உரிமை ஆண்பாலர், பெண்பாலர் ஆகிய இருபாலாருக்கும் உண்டு. கணவன் எத்தகைய கயவன் என்பதும், பொறுப்பற்றவன் என்பதும் ஈண்டுக் கிளம்பியுள்ள கேள்வியினின்று வெளி யாகிறது. அத்தகைய கணவனோடு மனைவி மேலும் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளலாகாது. ஐந்து குழந்தைகளை முறையாகப் பேணி அவர்களை மேல்நிலைக்குக் கொண்டுவருவது எளிதில் ஆகாது. ஆதலால் மேலும் பிள்ளைகளைப் பெற அவள் இடங்கொடுக்கலாகாது. தன் உழைப்பை நம்பியே அவள் உயிர் வாழ்ந்திருக்கவேண்டும். ஆசிரியைத் தொழில் மிக நல்லது. ஈண்டுப் பகர்ந்துள்ள குடும்ப கௌரவம் பொருளற்றது. இன்றைக்கு அரசர்கள் எல்லாம் ஆண்டிகளாக மாறியமையும் காட்சிகளைக் கண்டு வருகிறோம். நல்ல தொழில் ஒன்றைப் புரிந்து, கண்ணியமாகச் சம்பாதித்து நல்வாழ்வு வாழ்ந்து வருவது மக்கள் அனைவரின் கடமையாகும். உடனே அத்தகைய நல்வாழ்வில் இறங்க, தன் குழந்தைகளை முறையாகப் பராமரிக்க, கீழான இயல்புடைய தன் சோம்பேறிக் கணவனைப்

புறக்கணிக்க இம்மாது கடமைப்பட்டிருக்கிறாள். அமைதியுடனும், சுயநம்பிக்கையுடனும், கடவுள் விசுவாசத்துடனும் அவள் உடனே புதிய வாழ்வில் ஈடுபடுவது அவளுடைய கடமையாகும்.

கேள்வி: *(844)* நீங்கள் குழந்தை அதிகம் பிறக்காமல் இருக்கச் சொல்லும் வழி பிரம்மச்சரியத்தை அனுஷ்டிப்பது. ஆனால் நம்முடைய சாஸ்திரங்களின்படி ஒவ்வொருவனும் அவனவன் கர்மாவின் பலனை அனுபவித்தே தீரவேண்டு மென்றிருக்கிறது. அப்படியிருக்க ஒருவனுக்கு நான்கு குழந்தைகள் என்று கர்மவிதி நிச்சயித்திருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். உங்கள் யோசனைப்படி ஒரு குழந்தை பிறந்த பிறகு பிரம்மச்சரியத்தை அனுஷ்டிப்பத னாலோ, அல்லது கர்ப்பத்தடை மார்க்கங்களை அனுஷ்டிப் பதனாலோ, பாக்கி பெறவேண்டிய குழந்தைகளைப் பெறாமல் இருக்கமுடியுமா? இரண்டு கொள்கைகளும் முரணாக இருக்கின்றன. சமரசம் எப்படிச் சாத்தியம்? விதியை அவ்வளவு சுலபமாக மாற்றிவிடமுடியுமா?

பதில்: விதி என்பது வாழ்க்கையைப்பற்றிய சட்டதிட்டம். விதியை மனிதன் ஓயாது மாற்றிக்கொண்டுதான் இருக்கிறான். சாஸ்திரம் சொல்லுதற்காக மனிதர் மக்கட்பேறு எடுக்கிறார்கள் என்பது உண்மையல்ல. தங்களுடைய ஆசைக்கு வசப்பட்டே அவர்கள் பெருமிதமான மக்களைப் பெற்றெடுக்கின்றனர். அவர்கள் அனைவரையும் காமப்புத்திரர்கள் என்று பகரவேண்டும். மனமடங்கியிருக்கக் கற்றுக்கொண்டவன் பிள்ளை பெறாது இருக்கலாம். உலக நன்மைக்காக என்று இரண்டொரு மக்களை மட்டும் பெறலாம். அத்தகைய மக்களைத் தவப்புதல்வர்கள் என்பர் மேலோர். தவப்புதல்வர்களிடத்தே மேன்மைகள் அனைத்தையும் காணலாம்.

தன்னால் ஆதரிக்க முடியாத அளவுக்குப் பல குழந்தை களைப் பெற்றெடுக்கின்றவன் உலகில் பாபத்தைப் பெருக்கு கின்றான். அப்படிக் குழந்தைகளைப் பெருக்குவதைவிடக் கர்ப்பத் தடை பண்ணுவது மேலானது. கர்ப்பத்தடை நல்லொழுக்கம் எனக் கருதப்படமாட்டாது. ஆனால் பயன்படாத பல பிள்ளை களைப் பெருக்குவதைவிடக் கர்ப்பத்தடை உயர்ந்தது. இந்த

இரண்டு பாபச் செயல்களுக்கிடையில் பிள்ளைகளைப் பெருக்கு கின்ற பாபச்செயலே மிகக் கொடியது. கர்ப்பத்தடை இரண்டாந் தரமான பாபம் ஆகிறது.

காமபுத்திரர்கள் உலகில் அதிகரிக்குமளவு உலகில் கேடும் அதிகரிக்கும். ஆதலால் காமபுத்திரர்களைப் பெற்றெடுக்காது இருப்பதே ஒருவன் உலகுக்குச் செய்யும் நலனாகும். தனக்கும் அத்தகைய அடக்கத்தின் மூலம் அவன் நலம் தேடிக்கொள்கின் றான். புலனடக்கம் பழகுதல் மூலம் புத்திரப்பேற்றின் எண்ணிக் கையை மனிதன் குறைக்க முடியும். அதைக் குறைக்குமளவு அவன் இயற்கையின் விதியை வெல்லுகிறான். இயற்கையின் விதியை வெல்லுமளவு அவன் மேலோன் ஆகிறான். இதுவே வாழ்க்கையைப் பற்றிய மேலாம் விதி.

கேள்வி: *(845)* சிறு குழந்தை பெரும்பாலும் சிரிக்கிறது. இந்நிலையில் குழந்தை கடவுளோடு விளையாடுகிறது என்று சிலர் சொல்லுகின்றனர். இதனை எப்படி ஏற்பது?

பதில்: சின்னஞ்சிறு குழந்தை உடலுணர்ச்சியை இன்னும் ஏலாத நிலையில் இருக்கிறது. உடல் உணர்ச்சியை ஏற்பதற்கேற்ப அது அகங்காரத்தை உருவாக்குகிறது. தான் அல்லாத உடலைத் தான் என்று கருதுவது அகங்காரம். இந்த அகங்காரமே கடவுள் காட்சிக்கு இடைஞ்சலாய் இருக்கிறது. கடவுள் நாட்டம் கொள்கிறவர்கள் அகங்காரத்தை ஒதுக்கியாகவேண்டும். இனி ஞானியர்கள் குழந்தையின் பாங்கைப் படைத்திருக்கின்றனர் என்பது கோட்பாடு. ஞானியர்களோ அகங்காரத்தைக் கடந்து அப்பால் சென்றவர்கள். ஆகவே, குழந்தைகளுக்கும், ஞானியர் களுக்கும் இடையில் ஒற்றுமையொன்று உண்டு. அகங்காரமற்ற நிலையே அவ் ஒற்றுமையாகும். அகங்காரத்தை இன்னும் பெறாத நிலையில் குழந்தைகள் இருக்கின்றன. பெற்ற அகங் காரத்தை ஒதுக்கிய நிலையில் ஞானிகள் இருக்கின்றனர். ஆகவே 'அற்றது அகங்காரமெனில் உற்றது கடவுள் பெற்றி' என்பது கோட்பாடு. குழந்தையின் சிரிப்பில் தெய்வீகம் திகழு கிறது. ஆதலால் குழந்தைகள் தெய்வத்தோடு பேசுகின்ற நிலையில் இருக்கின்றன. மேலும் தெய்வம் நம்போன்று ஒரு வடிவத்தில் இருப்பவர் அல்லர். எல்லா உயிர்களிடத்தும்,

அவ்வுயிர்களுக்கு அப்பாலும் சத்-சித்-ஆனந்தமாய் இருப்பவர் கடவுள். எங்கெல்லாம் களங்கமற்ற ஆனந்தத்தைக் காண்கின்றோமோ, அங்குக் கடவுளின் சாந்நித்தியத்தைக் காண்கிறோம். அகங்காரத்தை இன்னும் அடையப்பெறாத சின்னஞ்சிறு குழந்தைகள் பேரானந்த சொரூபமாயிருக்கின்றன. அப்பேரானந்தமோ குழந்தைகளோடு இணக்கம் கொள்கிறவர்களுள் வயதில் பெரியவர்களுக்கும் ஆனந்தத்தை ஊட்டுகிறது. அக்கோட்பாட்டை முன்னிட்டுக் குழந்தைகள் கடவுளோடு விளையாடுகின்றன என்று இயம்புவது முற்றிலும் பொருத்தமானதே.

கேள்வி: *(846)* பிறக்கின்ற குழந்தை அழுதுகொண்டு பிறக்கிறது. மனிதன் இறக்கின்ற போதும் அழுதுகொண்டு செல்கின்றான். இது ஏன்?

பதில்: பிறந்தவுடன் பசியை முன்னிட்டுக் குழந்தை அழுகிறது. அது அழாதிருந்தால் அதைச் செத்துப்போனதென்றோ அல்லது சாகப்போகிறதென்றோ மற்றவர்கள் பொருள் படுத்துகின்றனர். முகத்தில் நீர் இறைத்து அதை அழச்செய்கின்றனர். ஆக, குழந்தையின் அழுகை மற்றவர்களால் வரவேற்கப் படுகிறது. அழாதிருப்பது நல்ல அறிகுறியன்று. தான் அழுவதைப் பற்றிக் குழந்தைக்கு ஒன்றும் தெரியாது. முதியோர்படும் துயரத்தோடு பிறந்த குழந்தையின் அழுகையை ஒப்பிடலாகாது.

இனி, சாகின்றவனுடைய நிலையும் கிட்டத்தட்ட இது போன்றது. நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறபொழுது ஒரு வேளை சாவு வந்துவிடுமோ என்ற அச்சம் உள்ளத்தை வாட்டுகிறது. கோழையர் சிலர் உற்றார் உறவினரைப் பிரிந்து போகின்றோமேயென்று கதறி அழுவதுண்டு. உண்மையாக மரணம் வரும்பொழுது தூங்குவதுபோல இருந்து உலகை மறந்து விடுகிறான்.

குழந்தையின் பிறப்பு பெற்றெடுக்கும் தாய்க்கு வேதனைக்குரியது. பலர் எண்ணுவது போன்று பிறக்கின்ற சிசு யோனி வாயில் பெருந்துன்பத்துக்கு ஆளாகிறது என்பது உண்மையன்று. தாய் படும் வேதனை எல்லார்க்கும் வெளிப்படை.

அதேவிதத்தில் ஒருவன் உயிர் துறக்கின்றபொழுது உற்றார் உறவினர்க்கு வேதனை. சாகின்றவனோ பிரக்ஞையற்றுப்

போகிறான். ஆதலால் அவனுக்கு வேதனையில்லை. பண்பட்ட ஒரு சிலர் முழுப் பிரக்ஞையோடு உயிர் துறக்கின்றனர். அன்னவர்கள் மரணத்தின் வாயிலாகத் தாம் மற்றொரு பெருநிலைக்குப் போவதை உணர்கின்றனர். ஊருக்குப் போகிற ஒருவன் மனமுவந்து போவது போன்று அறிஞர் மன அமைதியுடன் மரணத்தை ஏற்கின்றனர். நம்முடைய காட்சியில் அச்செயல் மரணம். மரணமடைகிறவர்களுடைய மனநிலையில் பெருநிலையெய்துகிற உணர்வு உண்டாகிறது. ஆதலால் பிறப்புக்கும் இறப்புக்கும் உட்படுகிற ஜீவாத்மா உயிர் வாழ்க்கையின் இடையிடையே துன்பத்துக்கு ஆளாகிறதேயொழியப் பிறப்பு இறப்பு என்னும் அந்நிகழ்ச்சிகளில் துன்பத்துக்கு ஆளாவதில்லை.

கேள்வி: *(847)* தர்மச்சக்கர இதழில் "நோயால் கஷ்டப்படும் உயிர்களை வேதனையின்றி மரணம் சம்பவிக்கச் செய்யலாம். அது ஜீவகாருண்யமாகும்" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். யார் அப்படி மரணம் ஏற்படுத்துவது? அவதிப்படுவோரை வேதனையின்றி மேலுலகம் அனுப்பும் முறை நம் தர்மத்திற்கு அடுக்காது. எந்த மருத்துவனும் இதைச் செய்யமாட்டான், எப்படிச் சட்டமானது குற்றம் செய்தோரைத் தண்டிப்பதற்கு மட்டும் அல்லாது அதற்கு மேல் நிரபராதிகளைக் காப்பதற்கும் உள்ளதோ, அதே போன்று மருத்துவரும் நோயாளிகளைக் காப்பதற்கு மட்டுமல்ல; நோயுற்றாரைக் கொன்று விடவும் கூடாது. எவன் ஒருவனுக்கு ஆக்கும் வல்லமை உண்டோ அவனே அழிக்கவும் செய்யலாம். அவன் ஆண்டவன் ஒருவனே. உடல் நோயால் துன்பப்படுபவரை வேதனையின்றி உயிர் எடுத்தல் உகந்த உபாயம் என்றால் logical conclusion முடிவில் உள்ளத்தில் துயருற்றோரையும், அங்கஹீனர், முதியோர், பித்தர் ஆகியவரையும் exterminate பண்ணுவது சரியாகுமா?

பதில்: வாழ்வு, சாவு ஆகிய இரண்டு பகுதிகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. பிரபஞ்ச அமைப்பில் மரணமிலாப் பெருவாழ்வு இல்லை. அது பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டது. அத்தகைய முக்திநிலையை அறிஞர் நாடுகின்றனர். ஆனால் உடல் எடுத்தவர்களுள் பெரும்பான்மையோர்

உடல் வாழ்க்கையிலேயே பற்று வைத்திருக்கின்றனர். அதன் பொருட்டுக் கணக்கற்ற பிறவிகளை அவர்கள் எடுத்து வருகின்றனர். உடல் எடுத்திருப்பவர்கள் ஒருநாள் உடலை விட்டுப் பிரிந்தாக வேண்டும். ஆகவே ஜனனமும், மரணமும் இன்றியமையாதவைகளாம். வாழ்வையும் மாய்வையும் முறையாக ஆராய்ச்சி பண்ணுதல் அத்யாத்ம வித்தையாகும். வாழ்வாங்கு வாழத் தெரியாதவர்கள் செத்தவர்களுக்கு நிகராகிறார்கள். வாழ்வாங்கு வாழ விரும்புகிறவர்கள் எப்படி எப்படியெல்லாம் வாழலாம் என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும். அதற்குமேல் அன்னவர்கள் வாழ்வு சரியாக அமையாவிட்டால் என்னென்ன பாங்குகளில் அதை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். முடிவுக்குக் கொண்டுவருவதைக் குறித்து என்றைக்கும் அபிப்பிராய வித்தியாசங்கள் ஏராளமாக இருந்து வருகின்றன. நவீன யுத்த முறை பழங்கால யுத்த முறை போன்றது அன்று. அக் காலத்தில் போர் புரிந்தவர்களே எதிரிகளைக் கொன்றுவந்தனர். இன்றைக்கோ எதிரிகளின் சமுதாயத்திலிருக்கும் ஆடவர், மகளிர், குழந்தைகள் ஆகிய அனைவரையும் அணுசக்தியின் துணை கொண்டு துடைத்துத் தள்ளுகின்றனர். இது ஆமோதிக்கத் தகாதது எனினும் இத்தகைய போராட்டம் தடுக்கமுடியாத பாங்கில் உலகில் இருந்து வருகிறது. இனி, ஜீவகாருண்யத்தில் பல முறைகள் இருக்கின்றன. மருத்துவ உலகம் அடைந்திருக்கிற முன்னேற்றத்தை அனாயாச மரணத்திற்கு நன்கு பயன்படுத்தலாம் என்னும் கொள்கை உலகெங்கும் அதிகவேகம் பரவி வருகிறது. ஒவ்வொரு கொள்கைக்கும் ஆமோதிப்பும், எதிர்ப்பும் இருந்துவருவது இயல்பு. துன்பத்தைத் துடைத்து இன்புத்தை வளர்க்கக் கையாளும் முறை ஒவ்வொன்றும் ஆமோதிப்புக்குரியதாகும். உலக அமைப்பில் ஒவ்வோர் உயிரும் மற்ற உயிர்வகைகளை உணவாகப் பயன்படுத்தி வாழ்ந்து வருகின்றது. நிலைத்திணை, இயங்குதிணை ஆகிய இரண்டு திணைகளுக்கும் உயிர் உண்டு. நிலைத்திணையாகிய மரம், செடி, கொடி, பயிர் பச்சை ஆகியவைகள் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று உணவாகின்றன. அதற்குமேல் நிலைத்திணை, இயங்குதிணை ஆகிய இரண்டும் ஒன்றையொன்று கொன்று உணவாக்கி

வாழ்ந்து வருகின்றன. அப்படிச் செய்யாவிட்டால் அவைகள் தாமே மடிந்துபட்டுப்போம். 'பிற உயிரை உண்டாக்க வல்லவனே பிற உயிரை மாய்க்கத் துணியலாம்' என்னும் கொள்கை இயற்கையின் நடைமுறையோடு ஒத்ததன்று. அனந்தங்கோடி உயிர்கள் ஒன்றையொன்று கொன்றுதின்று வாழ்ந்து வருகின்றன. அவைகளுக்கு உயிரை உண்டுபண்ணத் தெரியாது. கொலை மயமாயுள்ள உலகில் எத்தகைய கொலையில் துன்பம் குறைந்திருக்கிறது என்பதே முக்கியமான கோட்பாடாகும்.

கேள்வி: *(848)* காயம்பட்டோ, அல்லது நோய்வாய்ப் பட்டோ வருந்திக் கொண்டிருக்கிற கால்நடைகளின் துயரத்தைத் துடைப்பதற்குத் தக்க முறையில் அவைகளைக் கொன்றுவிடுவது முறை என நாம் அங்கீகரிக்கிறோம். இனி மக்களில் சிலர் முதுமை, உறுப்புக்கள் பழுதுபடுவது, கொடிய நோய்க்கு ஆளாவது ஆகியவைகளின் விளைவாகப் பெரும் துயரத்தில் வருந்திக்கொண்டிருக் கின்றனர். அத்துயரத்தினின்று அவர்களை விடுவித்தல் பொருட்டுத் தக்க மருத்துவ முறையைக் கையாண்டு அவர்களை உயிர் நீக்கச் செய்வது முறையாகுமா?

பதில்: அனாயாச மரணம் யாண்டுமே வேண்டப்படுகிறது. வேதனை சிறிதுமில்லாது உடலை உகுப்பவர்கள் பாக்கியவான்கள் எனக் கருதப்படுகின்றனர். ஆனால் பலபேர் விதவிதமான மரண வேதனைகளில் துடித்துக் கொண்டிருக்கின்றனர். அன்னவர்கள் சிகிட்சை பெற்று நோயற்ற வாழ்வுக்குத் திரும்பப் போவதில்லை. பலநாள் வருந்திக்கிடந்து சாவதற்குப் பதிலாக அமைதியாகத் தூங்குவது போன்று உடலைவிட்டு உயிர் நீங்குவதற்குக் கையாளக் கூடிய நவீன மருத்துவ முறைகள் பல இக்காலத்தில் இருக்கின்றன. அம்முறைகளைக் கையாண்டு நோயால் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பவர்களைச் சிரமப்படாது மறுமைக்கு அனுப்பிவைப்பது பாராட்டத்தக்க செயல். அது மேலான பரோபகாரமாகும். ஜீவகாருண்யமென்றால் அதுதான் ஜீவகாருண்யம். ஆனால் சமுதாயச் சட்டம் அதற்கு இடம் தருவதில்லை. அச்செயலைத் துணிந்து நிறைவேற்ற முன்வருபவர் எவருமில்லை. எனவே பலபேர்க்கு மிக எளிதில்

அனாயாச மரணத்தை வழங்குவது சாத்தியம் எனினும் அது நடைமுறைக்கு வாராது இருப்பதுதான் விந்தையாயிருக்கிறது. இன்னும் பத்து நாள் துன்பப்பட்டுச் சாகின்றவனை இன்றைக்கே நல்ல மருத்துவ முறையைக் கையாண்டு உயிர்துறக்கச் செய்வது புண்ணிய கர்மமாகும். ஆனால் சட்டம் இதற்கு இடம் தருவதில்லை.

கேள்வி: *(849)* Religion is not for empty stomachs. ஏழை மக்களுக்கு மதபோதனை தேவையா?

பதில்: மதபோதனை வேறு, ஏழ்மை வேறு. ஏழ்மை பொருளாதாரத் துறையைச் சார்ந்தது. சமயம் பண்பாட்டைச் சார்ந்தது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்பது சமயக்கோட்பாடு. பொருளாதாரத்தோடு இதை இணைக்கலாகாது. ஈண்டு மற்றொரு கோட்பாட்டையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். வறுமையில் வாடிக் கிடப்பவர்களுக்கிடையிலும் மிகைப்பட்ட செல்வத்தை முன்னிட்டுச் சுகஜீவனத்தில் சொக்கியிருப்பவர்களுக்கிடையிலும் மதபோதனை செல்லாது. இவையிரண்டும் நல்வாழ்க்கைக்கு இடைஞ்சலாம். மதத்தின் குறிக்கோள் மனிதனை மேலோன் ஆக்குதல் ஆகும். மேலோன் ஆவதற்கு இடைஞ்சலாயுள்ள மிகைப்பட்ட செல்வத்தை எடுத்து வறுமையில் வாடிக்கிடப்பவர் களுக்கிடையில் வழங்குதல் முறை. ஆனால் அதைப் பலாத் காரத்தால் கையாளலாகாது. மனதை நல்ல மனதாக மாற்றி யமைப்பது சமயம். இங்ஙனம் சுகஜீவனத்தில் மூழ்கியிருப்பவன் மனதை மாற்றுவதும் அவன் படைத்துள்ள மிகைப்பட்ட செல்வத்தில் ஒரு சிறு பகுதியை ஏழைகளுக்கு எடுத்து வழங்கும்படி செய்வதும் நல்ல சமய அனுஷ்டானமாகும்.

வறுமைக்கு மூலகாரணம் பெரிதும் முயற்சியின்மையே ஆகும். ஒரு சிறிதளவு பொருள் உபகாரம் செய்வதற்கிடையில் சோம்பியிருப்பவனை முயற்சியில் தூண்டுவது அவசியம். சோம்பிக்கிடப்பது பொல்லாத நோய். 'தன் கையே தனக்குதவி'

என்னும் நல்ல மனப்பான்மையை அவனுக்கிடையில் ஊட்டுவது முற்றிலும் அவசியம். இங்ஙனம் சமுதாயத்தில் உள்ள கேடுகளை அகற்றவல்லது சமய உணர்ச்சி ஒன்றேயாம். தக்கமுறையில் சமயத்தொண்டர்கள் பேரூக்கத்துடன் பணிவிடை பண்ணிச் சமுதாயத்தில் உள்ள கேடுகள் அனைத்தையும் அகற்றக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

கேள்வி: *(850)* சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா இந்த ஆண்டு முழுதிலும் உலகில் வெவ்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது என அறிய வருகிறோம். நூற்றாண்டுவிழா முடிவு பெற்ற பிறகு சுவாமி விவேகானந்தரைப் பற்றிய பேச்சும் நின்றுவிடும். அந்தந்தப் பருவத்துக்கேற்ற பல பேச்சுக்கள் மக்களுக்கிடையில் நிலவு வதும் பிறகு அவைகள் மறைந்துபட்டுப் போவதும் இயல்பு. அதே விதத்தில் விவேகானந்தரைப் பற்றிய பேச்சும் ஓராண்டுக்குப் பிறகு பின்னணிக்குப் போய்விடுமாகில் அதில் பயன் யாது உளது? இதுபற்றிய தங்களது கருத்தை அறிய விரும்புகிறேன்.

பதில்: சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதன் உட்கருத்தை நாம் உள்ளபடி அறிந்து கொள்ளுவது அவசியமாகிறது. அப்படி அறிந்துகொள்ளுதற் பொருட்டு, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய உபமானக் கதையொன்றை நாம் முதலில் ஞாபகத்துக்குக் கொண்டு வருவது உசிதம். கதை வருமாறு:- ஒரு மனிதன் பொருள் மிகச் செலவு செய்து அழகிய தோட்டம் ஒன்றை அமைத்திருந் தான். அத்தோட்டத்தில் வேலை செய்வதற்காகத் தோட்டக் காரர் இருவரை அம்மனிதன் நியமித்திருந்தான். முதல் தோட்டக்காரன் வேலையில் சேரும்பொழுதே தனக்குச் சேரவேண்டிய சம்பளத்தை நிர்ணயம் செய்துகொண்டான். நாள் ஒன்றுக்குத் தோட்டத்தில் எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்பதையும் தன் எஜமானனோடு பேசி முடிவு செய்துகொண்டான். மாதத்தில் எத்தனை நாள் தனக்கு விடுமுறை கிடைக்கும் என்பதையும் உறுதி கட்டிக் கொண்டான். அதன் பிறகு தோட்டத்தில் தனக்கு இயன்றவளவு

வேலை செய்துவந்தான். எப்பொழுதெல்லாம் எஜமானன் தோட்டத்தைப் பார்வையிடுதற்கு வந்தானோ அப்பொழுதெல்லாம் தன் வேலையை நிறுத்தி வைத்துவிட்டு எஜமானனைப் புகழ்ந்து பேசவும் அவனை வாய்ப்பேச்சால் திருப்திப்படுத்தவும் அந்த முதல் தோட்டக்காரன் வந்து நின்றுகொள்வான். ஆனால் இரண்டாவது தோட்டக்காரனுடைய போக்கோ முற்றிலும் வேறானது. தனக்குச் சேரவேண்டிய சம்பளத்தைப் பற்றி அவன் கண்டிப்பாக ஒன்றும் பேசி முடிவுகட்டவில்லை. வேலை செய்யவேண்டிய நேரத்தைப் பற்றியோ, விடுமுறையைப் பற்றியோ அவன் பேச்சு ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை. காலையிலிருந்து மாலை வரையில் அமைதியாகவும் நிதான மாகவும் ஒழுங்காவும் தன் வேலையைச் செய்துவந்தான். எஜமானன் தோட்டத்துக்கு வந்தபொழுது இந்த இரண்டாவது தோட்டக்காரன் எஜமானனுக்குப் பக்கத்தில் போவதில்லை. அவனோடு உரையாடவும் முற்படவில்லை. தன் வேலையிலேயே அவன் கண்ணுங்கருத்துமாயிருந்தான். எஜமானன் கூப்பிட்டு ஏதாவது விசாரித்தால் மட்டும் கேட்டதற்குப் பதில் சொல்லி விட்டுத் தன் வேலைக்குப் போய்விடுவான். வேலையினின்று தன்னை நெடுநேரம் எஜமானன் தடைப்படுத்தி வைத்திருக்கவும் விரும்பமாட்டான். தன்து தோட்ட வேலையின்கண் தான் விரைவில் சென்றாக வேண்டுமென்று எஜமானனிடம் இரண்டொரு வார்த்தை சொல்லிவிட்டுத் தன் வேலைக்குப் போய்விடுவான். இங்ஙனம் தோட்டக்காரர் இருவரும் அவரவர் இயல்புக்கேற்றவாறு பணிபுரிந்து வந்தார்கள். இவ்விரு தோட்டக்காரர்களுக்கிடையில் யாரிடத்தில் எஜமானனுக்கு அதிகமான அன்பும் அனுதாபமும் உண்டாகும்? யாரிடத்து எஜமானன் முழு நம்பிக்கையை வைப்பான்? வெறும் வாய்ப் பேச்சுப் பேசுபவனிடம் எஜமானனது அபிமானம் அதிகரிக்காது. அவன் கொடுத்துள்ள வேலையைக் கண்ணுங்கருத்துமாகச் செய்பவனிடத்தே எஜமானனுக்கு அபிமானம் மிக உண்டாகும்.

இப்பிரபஞ்சம் பூந்தோட்டத்திற்கு நிகரானது. சர்வேசுவரன் இதற்கு எஜமானன். இவ்வுலகினுள் வந்துள்ள மக்களெல்லாம் தோட்டத்தில் நியமிக்கப்பெற்றுள்ள தோட்டக்காரர்கள். ஈசனு டைய திட்டத்திற்கு ஒப்பத் தொண்டுபுரிகிறவர்களிடத்தே ஈசன்

அன்புமிக்க் கொள்ளுவார். வெறும் வாய்ப்பேச்சால் ஈசனைப் புகழ்ந்து கொண்டிருக்கிறவர்களிடத்து அவர் அதிக அன்பு வைக்கமாட்டார்.

இந்த உபமானக் கதையை சுவாமி விவேகானந்தர் விஷயத்திலும் நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். சுவாமி விவேகானந்தர் இம்மண்ணுலகில் தோன்றி வந்தது தம் பொருட்டு அல்ல. தமது கீர்த்தி உலகில் நிலைபெற்றிருக்க வேண்டுமென்றும் அவர் கருதவில்லை. கீர்த்தியை அவர் எப்பொழுதுமே ஒரு சத்துருவாகக் கருதினார். பேரையும் புகழையும் ஒதுக்கி வைத்துவிட்டுப் பணிவிடையிலேயே அவர் கண்ணுங்கருத்துமாயிருந்தார். அந்தப் பணிவிடைதான் என்ன என்பது கேள்வி. உலகில் ஆங்காங்குள்ள மக்களை நன்மக்களாக்குவது விவேகானந்த சுவாமிகள் புரிந்துவந்த முக்கிய பணிவிடையாம். அவர் அமெரிக்காவிலிருந்தபொழுது அவரிடம் கேள்வி ஒன்று கேட்கப்பட்டது. ஹிந்து மதத்தை இந்த நாட்டில் ஸ்தாபனம் பண்ணுவதற்குத் தாங்கள் இங்கு வந்துள்ளீர்களா? என்பது அவரிடம் கேட்கப்பட்ட கேள்வியாகும். அதற்கேற்ற விடையை அவர் விடுத்தார்: “நான் ஹிந்து மதத்தையோ, பௌத்த மதத்தையோ, ஜைன மதத்தையோ, இஸ்லாமிய மதத்தையோ நிலைநாட்ட இந்நாட்டுக்கு வரவில்லை. மக்களை நன்மக்களாக்கும் பொது மதத்தை நிறுவுவதற்கே இங்கு நான் வந்துள்ளேன்” என்றார். அவர் உலகில் தோன்றி வந்த நோக்கமும் அதுவேயாம். எனவே அவருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதன் வாயிலாக அவர் கொடுத்துள்ள சீரிய செய்தியை மக்களுக்கிடையில் பரப்புதல் நமது முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். ஓராண்டுக்கு நல்வாழ்வு வாழ்ந்துவிட்டுப் பிறகு பழைய போக்குக்குப் போய் விடுவோம் என்று மக்கள் கருதலாகாது. நல்வாழ்வு வாழத் தீர்மானிக்கிறோம். அத்தீர்மானத்தின்படி வாழ்நாள் முழுதிலும் நன்னெறியில் முயன்று வருவது நமது கடமையாகும்.

‘மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு தெய்வப்பற்று வைக்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் நன்மகன் ஆவான்’ என்பது விவேகானந்தரது கோட்பாடு. நாம் தெய்வப்பற்றை வளர்க்குமளவு விவேகானந்தருடைய நூற்றாண்டு விழாவை

நன்கு கொண்டாடுகிறோம். தெய்வப்பற்று ஓராண்டுக்குப் பிறகு நின்றுவிடுவதல்ல. வாழ்நாளெல்லாம் நம்மிடையில் அது வளர்ந்து வரவேண்டும். நல்வாழ்வு வாழத் தீர்மானிப்பவர்கள் எண்ணிக்கை அதிகரிக்குமிடத்து இவ்விழாவின் நோக்கம் நிறைவேறுகிறது. அப்படி நல்வாழ்வில் ஈடுபடுபவர்களைப் பார்த்து மற்றவர்களும் அத்துறையில் இறங்குவார்கள். கேட்டைக் கேடுடையவர்கள் வளர்ப்பது போன்று நலனை நலமுடையார் வளர்த்து வருமிடத்து சுவாமி விவேகானந்தரின் மேலான எண்ணம் பூர்த்தியடைகிறது.

விவேகானந்தர் மற்றோர் அரியகோட்பாட்டை மக்களுக் கிடையில் வழங்கிச்சென்றிருக்கின்றார். 'மனிதனுக்கு மனிதன் உள்ளன்போடு ஏதேனும் ஒருவிதத்தில் பணிவிடை செய்து வருவது சிறந்த பாரமார்த்திகப் பயிற்சியாகும்' எனச் சுவாமிகள் வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். அவரவர்க்காகவென்றே மக்கள் வாழ்ந்துவருகின்ற இக்காலத்தில் முற்றிலும் தனக்கென வாழ்ந் திராது பிறர்க்கெனச் சிறிது பணிவிடை செய்தல் என்னும் பண்பையும் மக்கள் நடைமுறையில் கொண்டுவருவார்களாகில் அதன் வாயிலாக இத்தொல்லுலகம் நல்லுலகமாகத் திருந்தி யமையும். எனவே இந்த நூற்றாண்டுவிழா நமக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது. விவேகானந்தர் செய்தியைச் சொல்லக்கேட்டு அறிந்து கொள்ளவேண்டும். அறிந்து கொண்ட தற்கு ஏற்ப வாழ்வை நல்வாழ்வாக இடையறாது திருத்திய மைத்து வரவேண்டும். மக்களுக்கிடையில் உள்ளன்பையும் ஒற்றுமையையும் வளர்த்து வரவேண்டும். பரஸ்பரம் மக்கள் பணிவிடை செய்து பழகவேண்டும். இத்தகைய நல்லியக் கத்தை யாண்டும் பரப்புதலே நூற்றாண்டு விழாவின் நோக்க மாகும். ஆடவர், மகளிர் ஆகிய உலகமக்கள் எல்லோரும் தங்களை நல்லார்களாக மாற்றியமைத்து வருவார்களானால் நூற்றாண்டு விழாவின் நோக்கம் நிறைவேறியதாகும்.

கேள்வி: *(851)* ஒரு யோகி தன்னுடைய வாழ்க்கையில் ஒரு பெரிய கோயிலைக் கட்டி அந்தக் கோயிலிலேயே பரப்பிரம்மத்தோடு ஐக்கியம் ஆகிவிடுகிறார். பிறகு அவர் அக்கோயிலில் வழிபடக் கூடியவர்களுக்கு எவ்விதத்தில்

நன்மைசெய்து வருகிறார்? உதாரணமாகப் பழநியில் போகர் சமாதியும், திருப்பதியில் கொங்கணவர் சமாதியும் இருப்பதால்தான் அக்கோயில்களுக்கு மகிமை உண்டென சொல்லுகிறார்கள். இது உண்மையா? தயவுசெய்து விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: சான்றோர் ஒருவர் வசித்துவரும் இடத்துக்குப் புனிதம் தானாக ஏற்படுகிறது. பிறகு அந்த இடத்தை விட்டு அவருடைய சரீரம் மறைந்துபட்டுப் போவதால் ஆங்குள்ள புனிதத்துக்குப் பங்கம் வருவதில்லை. பழநி, திருப்பதி போன்ற ஸ்தலங்களுக்குத் துவக்கத்தில் தூய்மையை நல்கியவர்கள் போகர், கொங்கணவர் போன்றவர்கள். அதன்பிறகு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அந்த க்ஷேத்திரங்களுக்குச் சென்று இடையறாது இறைவணக்கம் செய்து வருவதால் ஆங்குள்ள புனிதமும், அருளும் மென்மேலும் வளர்ந்துகொண்டே வருகின்றன. பக்தியைப் பெருக்குதற்கு அத்தகைய புண்ணிய க்ஷேத்திரங்கள் மக்களுக்கு என்றும் நன்கு பயன்பட்டு வருகின்றன. எனவே இதுபற்றிய ஐயம் எழத் தேவையில்லை.

கேள்வி: *(852)* மஹாகவி இரவீந்திரநாத்தாகூர் தமது கவிதைகளில், "கடவுள் கோயிலில் இல்லை; தியானத்தாலோ, அல்லது மனதை ஒருமுகப்படுத்துவதாலோ கடவுளைக் காணமுடியாது; கடவுள் ஏழையிடமும், கல் கொத்தனிடமும் தான் இருக்கிறார்" என்று கூறியிருக்கிறார். இக்கூற்றைப் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளலாமா?

பதில்: கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிற நிறை பொருள். ஆனால் அவர் நீக்கமற நிறைபொருள் என்னும் உண்மையை நிறைஞானியே அறிகிறான். மற்றவர்கள் கடவுள் குறிப்பிட்ட ஒருசில இடங்களில் மட்டும் இருப்பதாகவே உணர்கின்றனர். அவர் சொர்க்கத்தில் அல்லது பரமபதத்தில் வீற்றிருக்கிறார் என்பது பொதுமக்களது கொள்கை. பஞ்ச பூதங்களால் ஆகிய உடலோடு ஆங்குச் செல்ல முடியாது என்பதும் கோட்பாடு. மண்ணுலகிலேயே புண்ணிய க்ஷேத்திரங்களிலும், தேவாலயங்களிலும் அவருடைய சாந்நித்தியத்தை உணரத் தொன்றுதொட்டு மக்கள் முயற்சிசெய்து

வந்திருக்கின்றனர். அம்முயற்சியில் மக்கள் பெரிதும் வெற்றியடைந்திருக்கின்றனர் என்றே இயம்பலாம். நெடுங்காலமாகப் பல்கோடி மக்கள் பக்தியுடனும், பரந்த விசுவாசத்துடனும் சில புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று வழிபாடு செய்திருக்கின்றனர். அதன் விளைவாக சிறந்த தேவாலயங்களில் கடவுளைப்பற்றிய சிந்தனை இயல்பாகவே மனதில் எழுந்து விடுகிறது. இவ்வுண்மையைப் புறக்கணித்து ஆலயங்களில் கடவுள் இல்லையென்று பகர்வது பொருளற்ற கூற்று ஆகும். சமயங்களுக்குப் புத்துயிர் கொடுக்கவந்துள்ள பெரியோர்களெல்லோரும் ஆலய வழிபாட்டைப் பெரிதும் பாராட்டியிருக்கின்றனர். அச்சான்றோர்கள் காட்டியுள்ள செந்நெறியைப் பின்பற்றுவதே நமது கடமையாகும். ஆலய வழிபாடு செய்து வருகின்ற மக்களுக்கிடையில் காண்கிற கடவுள் நம்பிக்கையையும் ஒழுங்குப்பாடான வாழ்க்கையையும் ஆலய வழிபாடு செய்யாதவர்களுக்கிடையில் அவ்வளவு ஏராளமாகக் காணமுடியாது. ஆலய வழிபாடு செய்யாமலேயே ஒருசிலர் மேல்நிலைக்கு வருவதுண்டு. ஆனால் பெரும்பான்மையோருக்கு ஆலயவழிபாடு முற்றிலும் தேவையென்பதை நாம் மறந்து விடலாகாது. இரவீந்திரநாத் தாகூர் ஒரு கவி. ஆனால் அவர் சான்றோர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவரல்லர். கவிஞன் கண்கொண்டு ஏழை எளியவர்களைக் கடவுள் மயமாக அவர் காணமுயலுகிறார். அத்தகைய முயற்சி பாராட்டுதற்குரியதே. ஆனால் அவருடைய கொள்கையும், கோட்பாடும் பொதுமக்களுக்கிடையில் சமயத்தைப் பரப்புவதற்கு உதவாது. மக்கள் எல்லோரையும் கடவுளின் குழந்தைகளாகக் கருதுவது சாலச் சிறந்தது. ஆருயிர்களுக்குச் செய்யும் பணிவிடையே ஆண்டவனுக்குச் செய்யும் பணிவிடையாகிறது. உயிர்களையெல்லாம் உள்ளன்போடு நேசித்துப்பழகுதல் முற்றிலும் அவசியம். பின்பு மனிதனுடைய முயற்சி அத்துடன் நின்றுவிடலாகாது. அண்டகோடிகளனைத்துக்கும் அடிப்படையாகப் பரம்பொருள் ஒருவர் இருக்கிறாரென்றும் அவரைப் போற்றிப் பழகுவது வாழ்க்கைக்குப் பெருநலன் விளைவிக்கிறதென்றும் நாம் அறிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படி அவர் பெருமையை அறிந்து கொள்ளுதற்கு ஆரம்பதசையில் ஆலய வழிபாடு முற்றிலும் அவசியமானதே.

தியானத்தின் மூலம் கடவுளைக் காணமுடியாது என்னும் கொள்கை சான்றோர்க்கு ஏற்புடையதாகாது. அஷ்டாங்க யோகத்தில் ஏழாவது அங்கமாக இருப்பது தியானம். மனதை ஒருமுகப்படுத்துவதே அதன் குறிக்கோள் ஆகும். இசை வல்லுநன் ஒருவன் இசையிலே தனது மனதை ஒருமுகப்படுத்தி அதன் சிறப்பை வெளிப்படுத்துகிறான். எல்லாக் கலைஞானங் களுக்கும் மனதை ஒருமுகப்படுத்துதல் முற்றிலும் அவசியமானது. இவைகளுக்கெல்லாம் மேலாகக் கடவுள் நாட்டத்தில் மனதை ஒருமுகப்படுத்துவது முற்றிலும் அவசியம். மனதை ஒருமுகப் படுத்தும் செயலே தியானம் என்னும் பெயர் பெறுகிறது. கடவுள் நாட்டத்தில் ஈடுபட்டுள்ள பெரியவர்களனைவரும் தியானத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். 'கருவி கரணங்கள் ஓய்ந்த தொண்டர்களிடத்தோ நீ வீற்றிருப்பது' என்பது ஆன்றோர் வாக்கு. அது அவர்களுடைய அனுபவத்தினின்று வந்தது. கடவுளைக்காண தியானம் உதவாது என்று சொல்லுவது பிறவிக் குருடன் சொல்வதற்கு ஒப்பாகும். வெறும் கவி ஒருவனுடைய கூற்று ஆத்மிகத் துறைக்குப் பிரமாணமாகாது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

கேள்வி: *(853)* ஒளவையார் "ஐயம் இட்டு உண்" என்றும், பிறகு "ஏற்பது இகழ்ச்சி" என்றும் அருளிச் செய்துள்ளார். முரண்பட்ட இரு கருத்துக்களை ஏன் வெளியிட்டிருக்கிறார்? இவ்விரு கருத்துக்களுக்கிடையில் உள்ள வித்தியாசம் யாது?

பதில்: பொருள் வேண்டுமென்று யாசிக்கிற அங்கஹீனர் போன்றவர்களுக்கு மனிதன் பொருள் கொடுத்துப் பழகவேண்டும். சோம்பேறிகளாக இருக்கிறவர்களுக்கு யாசகம் கொடுத்து அவர்களைக் கெடுத்துவிடலாகாது. பிறருடைய உதவியைக் கொண்டுதான் பிழைக்கின்ற பரிதாபகரமான நிலையில் பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு ஐயமிட்டு உண். உனக்கு உடல் திட்பமும் உழைக்கின்ற வன்மையும் நல்ல மனபரிபாகமும் இருக்கின்றபொழுது நீ பிறரிடம் ஏற்பது இகழ்ச்சி. இதுவே ஒளவையாரின் கருத்து.

இந்த இரண்டு கோட்பாட்டுக்கும் விதிவிலக்கு ஒன்று

உண்டு. சிவனாரே பிக்ஷை ஏற்று உண்பவராய் இருந்து வருகிறார். முற்றிலும் சிவனைச் சார்ந்திருக்கின்ற துறவியர்கள் பிக்ஷை ஏற்று உண்கின்றனர். தங்களுக்காக அவர்கள் பொருள் தேடுவதில்லை. அப்படி அவர்கள் பிக்ஷை ஏற்பது உடல் அபிமானத்தையும் சமுதாய அந்தஸ்தில் வைத்துள்ள அபிமானத் தையும் அழித்தல் பொருட்டேயாம். அவர்கள் பொருள் தேடுவதில்லையெனினும் யாண்டும் அருளையே தேடி நிற்கின் றனர். அப்படி அவர்கள் தேடுகின்ற அருள் உலகத்தவர்க்கும் எடுத்து வழங்கப்படுகிறது. உலக நன்மையின் பொருட்டுப் பொருளைத் தேடுவதைவிட அதிகமான அருளை அன்னவர் தேடுகின்றனர். அத்தகைய மேலோர்க்கு உணவு அளிப்பது இல்லறத்தானுடைய பெரும் கடமையாகிறது. அருள்துறைக் கென்றே அமைந்துள்ள இந்த அலாதியான அறப்பணியை ஐயமிட்டு உண், ஏற்பது இகழ்ச்சி என்கின்ற இவ்வுலகுக்குரிய நல்ல பழக்கத்தோடு இணைத்து விடலாகாது. திருவள்ளுவர் இதை நன்கு தெளிவுபடுத்தியிருக்கிறார்.

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

பிரம்மச்சரிய ஆஸ்ரமம், வானப்பிரஸ்த ஆஸ்ரமம், சன்யாச ஆஸ்ரமம் ஆகிய மூன்று ஆஸ்ரமத்தில் இருப்பவர்கள் துறந்தவர் ஆகின்றனர். நல்ல ஆறு ஆகிய அருள் துறையிலேயே செல்லுவது அவர்களுடைய இயல்பு. என்வே அவர்கள் நல்லி யல்புடைய மூவர் என்று பகரப்படுகின்றனர். அவர்கள் செல்லுகின்ற நல்லாற்றில் துணைபுரிவது இல்வாழ்பவனுடைய கடமை. துவ்வாதவர்கள் என்பவர் அடுத்தபடியில் வருகின்றனர். உடல் தகுதியற்ற நிலையிலிருந்து வறுமையில் வருந்துகின்ற வர்கள் துவ்வாதவர்கள் ஆகிறார்கள். ஐயமிட்டு உண் என்று ஔவையார் பகர்ந்திருப்பது அலாதியாகத் துவ்வாதவர்களைக் குறித்தேயாம்.

கேள்வி: *(854)* ஸ்ரீமத் பாகவதம் இயற்றப்பட்டதன் காரணம் என்ன? அது விளக்கும் ஆத்ம தத்துவம் யாது?

பதில்: பாகவதத்தை இயற்றியவர் மகரிஷி வியாசராவார்.

அவருடைய உள்ளம் யாண்டும் பாரமார்த்திகப் பெருநிலை யிலேயே ஊறி இருந்தது. சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவர் தன்னடக்கம் பழகி வந்தார். வாழ்நாள் முழுவதும் அவர் தவம் இயற்றிவந்தார். தவம் இயற்றியபொழுது உலகைப்பற்றிய ஞாபகம் அவர் உள்ளத்திலிருந்து அறவே மறைந்துபோயிற்று. பாரமார்த்திகப் பண்பில் அவர் உச்சநிலை அடைந்திருந்தார். தவத்தில் ஆழ்ந்து ஈடுபடுபவர்கள் என்னென்ன காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதற்கு வியாசருடைய வாழ்வு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அவர் வாழ்வில் செய்த தவம் முதன்மையாகிறது. அவர் பலப்பல நூல்களை இயற்றியது அவருடைய வாழ்க்கைக்குரிய இரண்டாவது செயலாகும்.

வியாசருடைய தந்தை பராசர மகரிஷி தவத்தில் ஈடுபட்டு இருந்தார். தவத்தில் தந்தை பராசருக்கு மிக்கவராக வியாசர் விளங்கினார். வியாசருடைய புதல்வர் சுகப்பிரம்மமாவார். வியாசரினும் மிக்கவராகச் சுகப்பிரம்மம் விளங்கினார்.

வியாசர் நான்கு வேதங்களையும் முறையாக வகுத்து வைத்தார். பிரம்ம சூத்திரம் எனப்படும் வேதாந்தச் சூத்திரங் களையும் வியாசர் உருவாக்கினார். பதினெட்டுப் புராணங்களை இயற்றியவரும் வியாசராவார். வியாசர் ஞானத்துறையில் மக்களுக்குச் செய்த பணி ஒப்புயர்வற்றது. இத்தகைய ஞானப் பணி செய்தும் அவருடைய உள்ளம் திருப்தி அடையவில்லை. வேதக் கருத்துக்களைச் சாதாரண மக்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்ற கருணை உள்ளத்துடன் மகாபாரதம் என்னும் இதிகாசத்தை எழுதினார். அவருடைய உள்ளம் யாண்டும் உயிர்களுக்கு நலம் செய்யவேண்டுமென்ற சிந்தனையிலேயே மூழ்கி இருந்தது. எனவே மகாபாரதம் என்னும் அற்புத நூலை எழுதியும் அவருடைய உள்ளம் திருப்தியடையவில்லை. தர்மத்தை முற்றிலும் அறிந்திருந்த வியாசபகவான் புனிதம் நிறைந்த சரஸ்வதி நதிக்கரையில் அமர்ந்து தமக்குத்தாமே ஆழ்ந்து சிந்தித்ததாவது: "பூரண பிரம்மச்சரியம் கடைப்பிடித்து வேதங்களை வினயத்தோடு கற்றேன். பெரியோர்களுக்குப் பணிசெய்தேன். யாகவழிபாடு செய்தேன். பெரியோர்களுடைய உபதேசங்களைப் பின்பற்றினேன். வேதங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை மகாபாரதம் என்ற நூலின் வாயிலாகச் சாதாரண

மக்களும் புரிந்துகொள்ளச் செய்தேன். எல்லா வர்ணத்தார்களுக்கும் உரிய கடமைகளை மகாபாரதத்தில் கூறியுள்ளேன். ஞானத்துறையில் பெரியோர்கள் அடைந்துள்ள நிலையை அடைந்திருந்தும், ஏராளமான ஆன்ம சக்தியைப் பெற்றிருந்தும் பிரம்மத்தோடு ஐக்கியமாகும் நிலையை அடைந்திலேன். பரப்பிரம்மத்தை அடைவதற்குரிய பண்புகளை இன்னும் மக்களுக்கு நான் எடுத்துப் புகட்டவில்லை என்பதை உணருகிறேன்." இங்ஙனம் சிந்தித்தவராய்த் துயர உணர்வுடன் அமர்ந்திருந்தார். அப்பொழுது அங்கு வந்த நாரதரை எழுந்து வரவேற்று வழிபட்டார். நாரதர் பகர்ந்ததாவது: "பராசரருடைய புதல்வரே! போற்றுதற்குரியவரே! உங்களுடைய உள்ளம் சாந்தமும் அமைதியும் பெற்றிருக்கவேண்டும். தாங்கள் மஹாபாரதம் என்ற நூலின் மூலம் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களை எல்லாம் விளக்கி இருக்கிறீர்கள். எனினும் நீங்கள் வாழ்க்கையின் லக்ஷியத்தை இன்னும் அடையாதவர் போன்று வருத்தமாகத் தென்படுகிறீர்கள்." வியாசர் பகர்ந்ததாவது: "நாரத மகரிஷியே! நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. என் உள்ளத்தில் இன்னும் திருப்தி ஏற்படவில்லை. அதற்குக் காரணமும் எனக்குத் தெரியவில்லை. நீங்கள்தான் அதற்குரிய காரணத்தை எனக்குக் கூறவேண்டும். நீங்கள் பிறருடைய மனதை நன்கு அறிவீர்கள். யோக சாதனையின் மூலம் சகுணப் பிரம்மத்தையும், நிர்க்குணப் பிரம்மத்தையும் வேதம் கூறியபடி நான் அறிந்திருந்தும் எனக்குள்ள மனக்குறையை நான் அறிந்து கொள்ள முடியவில்லை. தாங்கள்தாம் என் மனக்குறையைத் தீர்த்து வைக்கவேண்டும்."

நாரதர் பகர்ந்ததாவது: "வியாச மஹரிஷியே! நீங்கள் பரமனுடைய புகழைப் பாடத் தவறிவிட்டீர்கள். அந்தக் குறைதான் உங்களிடம் இருப்பதாக நான் அறிகின்றேன். நீங்கள் தர்மத்தை விளக்கி இருப்பதுபோன்று ஹரியின் புகழை எடுத்துச் சொல்லவில்லை. ஹரியின் புகழ்தான் உலகத்தைப் புனிதப்படுத்தும். உலக வாழ்க்கையிலும், சிற்றின்பத்திலும் மூழ்கிக்கிடக்கின்ற மக்கள் சாதாரண விஷயங்களில் மகிழ்ச்சி அடைகின்றார்கள். தெருவில் அழுகிக் கிடக்கின்ற மக்கள் சாதாரண விஷயங்களில் மகிழ்ச்சி அடைகின்றார்கள். தெருவில் அழுகிக்கிடக்கின்ற

பண்டங்களைத் தின்று காக்கைகள் மகிழ்ச்சி அடைவதுபோன்று சாதாரண தர்ம விஷயங்களைக் கேட்டு லௌகீகர்கள் மகிழ்ச்சி அடைகின்றார்கள். ஆனால் பக்தர்கள் இறைவனுடைய தாமரைத் திருவடிகளில் இருக்கவே விரும்புகிறார்கள். சாதாரண தர்மங்களைக் கேட்பதில் அவர்கள் மகிழ்ச்சி அடைவதில்லை. மக்களுடைய பாபங்களை எல்லாம் துடைத்துத் தள்ளுகின்ற பகவானுடைய மகிமைகளைக் கேட்பதில் அவர்கள் பரமானந்தம் அடைகின்றார்கள். பக்தர்களுடைய மனதை மகிழ்விப்பதற்குப் பகவானுடைய பெருமையைக் கூறும் நூல் ஒன்றைத் தாங்கள் இயற்றியாகவேண்டும். ஆகையால் தாங்கள் ஒருமை மனதுடன் முக்தியை அளிக்கும் பகவானுடைய லீலைகளையும், மஹிமை களையும் நூலாக எழுதி அந்த ஒரு குறையையும் நிவர்த்தி செய்துவிடுங்கள்."

நாரதர் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த வியாச பகவான் பாகவதம் என்னும் அரிய நூலை இயற்றினார். அந்நூலை இயற்றிய பிறகுதான் அவர் மனமும் திருப்தி அடைந்தது.

உலக வாழ்விலிருந்து விடுபடவேண்டுமென்று விரும்பிய பரீக்ஷித்துக்கு வியாசருடைய மகன் சுகர் பாகவதத்தை ஏழுநாள் புகட்டினார். அதைக்கேட்டுப் பரீக்ஷித்து மன்னன் பேரானந்தம் அடைந்து முக்தி என்னும் பெருநிலையைப் பெற்றார். சூதர் நைமிசாரண்யத்தில் ரிஷிகளுக்கு வியாசருடைய பாகவதத்தை எடுத்துக்கூறி அவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டினார்.

பாகவதத்தில் கண்ணனுடைய பெருமைகளும் லீலைகளும் மிக விரிவாகப் பக்தி ததும்பும் முறையில் கூறப்பட்டுள்ளன. பரதத்துவம் முழுவதும் பக்தர்களுக்கு மகிழ்வூட்டும் முறையில் பகவானுடைய லீலைகளாகப் பாகவதத்தைப் பக்தி சிரத்தை யுடன் படிப்பவர்களுக்குப் பகவத் ஞானமும், பகவான் மீது பக்தியும் உண்டாகும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆலயத்தில் அமர்ந்திருந்தபொழுது ஞானக்காட்சி ஒன்றைப் பெற்றார். பகவான் முன்னிலையில் பாகவதம் படிக்கப்பட்டது. அப்பொழுது பகவானிடத்திலிருந்து ஓர் ஒளி கிளம்பி வந்து தம் நெஞ்சையும் பாகவதத்தையும் ஒன்றாகப் பிணைப்பதைக் கண்டார். அந்த ஞானக்காட்சியிலிருந்து பகவான், பக்தர், பாகவதம் இம்மூன்றும்

ஒன்றே என்ற அனுபவத்தைப் பெற்றார். பகவானுக்கு என்ன பெருமையோ அப்பெருமை பாகவதத்துக்கும் உண்டு. அத்தகைய பெருமை பொருந்திய பாகவதத்தை மக்களுக்கு வழங்கிய பிறகுதான் வியாசருடைய உள்ளம் அமைதிபெற்றது. பரதத்துவத்தைத் தெளிவாக விளக்கும் நூல் பகவத்கீதையாகும். ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு அமர்க்களத்தில் புகட்டிய உபதேசமே கீதையாகும். அவர் புக்ட்டியதை உள்ளபடி அறிந்து கொள்ளும் ஞானம் வியாசருக்கு இருந்தது. வியாசர் பகவத் கீதையை எழுதி வைத்தார். வியாசரால் ஞானக்கண் பெற்ற ஸஞ்சயர் அதைத் திருதராஷ்டிரனுக்கு இயம்பினார். வியாச பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் செயல்களைப் பாகவதத்தின் மூலம் விளக்கவே இப்பூலகத்துக்கு வந்தவராவார். பாகவதம் பரதத்துவத்தை விளக்கும் ஒரு பக்தி நூலாகும். கண்ணனுடைய வாழ்க்கையும், லீலையும், பரதத்துவமும் அதில் பக்திச் சுவையுடன் விளக்கப்பட்டிருக்கின்றன. பாகவதம் என்னும் நூலுக்குப் பகவானுக்குக் காட்டும் மரியாதையைக் காட்டி அதைப் பக்தி சிரத்தையுடன் படித்துப் பரமானந்தம் அடைய வியாசரும், கண்ணனும் நமக்கு அருள்புரிவார்களாக.

கேள்வி: *(855)* கிருத, திரேதா, துவாபர, கலியுகாதி வருஷங்களில் தற்போது நடக்கும் கலியுகத்திற்கு 4,32,000 வருஷங்களென்று பஞ்சாங்கங்களில் இருக்கிறது. தற்போது கலியுகம் வருஷம் 5057 தானே நடந்து கொண்டிருக்கிறது. இனி, பிந்திய வருஷங்கள் அதிகமாக இருப்பதாக உள்ளனவே. இவ்வளவு குறுகிய கலியுகத்தில் எத்தனையோ அக்கிரமங்கள் நடைபெற்றிருக்கின்றன. பிந்திய பகுதியாகிய அதிகப்படி இருக்கும் வருஷங்களை நினைக்க மேலும் எத்தகைய அநீதி நடைபெறும் என்று நினைப்பதற்கே மனம் பதறுகிறது. நான்கு யுகங்களும் கூடிய சதுர்யுகம் 12,000 வருஷமென்றுதானே இருக்கிறது. அப்படியிருக்க, கலியுக காலம் மட்டும் இவ்வளவு கூடுதலுக்குக் காரணம் என்ன? விளக்க வேண்டுகிறேன்.

பதில்: சதுர்யுகங்களின் கால அளவையைப் பற்றிப் பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. பெரும்பான்மையோர் புராண

பூர்வமாகக் கொள்ளுகிற நம்பிக்கைப் பிரகாரம் நான்கு யுகங்களும் சேர்ந்து ஐம்பத்து இரண்டு லக்ஷம் வருஷம் எடுத்துக் கொள்கின்றன. அதில் கிருதயுகத்துக்கு இருபத்து ஆறு லக்ஷம் வருஷம். மற்ற யுகங்களுக்குப் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது. கலியுகத்துக்கு சுமார் நான்கு அல்லது ஐந்து லக்ஷம் வருஷம் வருகிறது. இப்படி லக்ஷக் கணக்கில் வருடவைகள் வேறு சிலர் கணக்கில் ஆயிரக்கணக்காகச் சுருங்கி விடுகிறது. வெறும் ஒரு வருஷம் வாழ்ந்து வருகிற வாழ்க்கையை ஓராயிரம் வருஷ வாழ்க்கைபோன்று பெரும்பயன் அளிக்கக்கூடியதாக செய்துகொள்ள மனிதனுக்கு இயலும். அங்ஙனம் அரும்பெரும் வாழ்வு வாழுகிற மனிதனைக் குறித்து அவன் ஓராயிரம் ஆண்டு வாழ்ந்தான் என்று சொல்வது ஒருவிதத்தில் உண்மை. ஒரு வருஷம் வாழ்ந்திருந்தான் என்று சொல்வது மற்றொரு விதத்தில் உண்மை. காலத்தினுடைய நீட்டலும் குறுகலும் வெறும் மனநிலையை ஒத்ததாகும். ஒரு மனிதன் ஐந்து நிமிஷநேரம் கனவு காண்கின்றான். அந்த ஐந்து நிமிஷத்துக்குள் ஐம்பது வருஷகாலம் வாழ்க்கையை அவன் வாழ்ந்துவிட முடியும். ஆதலால் காலத்தின் அளவையை எல்லோர்க்கும் பொதுவாக வைத்து நாம் ஆராய்ச்சி பண்ண வேண்டிய அவசியமில்லை. அவரவருடைய மனநிலைக்கு ஏற்பக் காலம் விரிவடையவும் குறுகவும் செய்கிறது.

இப்பொழுது நடைபெற்று வருவது கலியுகம். ஆனால் மனபரிபாகம் அடைந்துள்ளவர்களுக்கு இந்தக் கலியுகமே கிருதயுகமாய் விடுகிறது. உலகில் நிகழ்கின்ற அக்கிரமங்களைக் குறித்து யாரும் மனக்கலக்கம் அடையவேண்டிய அவசிய மில்லை. நல்லார் ஒவ்வொருவரும் உயர்ந்த மனநிலையிலேயே எப்பொழுதும் இருக்கமுடியும். அத்தகையவர்களுக்குக் கலி யுகம் இல்லாது போய்விடுகிறது. காலத்துக்கு அப்பால் செல்வது நம் குறிக்கோளாய் இருப்பதினால் நான்கு யுகங்களில் எந்த யுகத்தில் நாம் வசித்து வருகிறோம் என்பதை மறந்துவிட்டு எத்தகைய மனபரிபாகத்துடன் நாம் வசித்து வருகிறோம் என்னும் கேள்வியை எடுத்துக் கொண்டால் நான்கு யுகங்களும் நமக்கு சம்மதமானவைகளாய் ஆய்விடுகின்றன. மேலும் இந்த யுகங்களுக்கெல்லாம் அப்பாலும் நாம் போய்விடுகிறோம்.

கேள்வி: (856) உத்திரப் பிரதேச மாநிலத்தில் நிகழ்த்திய உரையொன்றில் பண்டித நேரு அவர்கள் இவ்வாறு கூறினார். "சமய க்ஷேத்திரங்களான பல நகரங்கள் இந்தியாவில் உள்ளன. ஆனால் பெரும் நிர்மாண வேலைத் திட்டங்கள் நடைபெறுகின்ற இடங்களில் பிரவுத்த பாரதத்தின் புதிய க்ஷேத்திரங்கள் உருவாகி வருகின்றன. பக்ராநங்கல், தாமோதர் பள்ளத்தாக்கு, துங்கபத்திரை, விசாகப்பட்டணம், சிந்திரி, பங்களூர் ஆகிய இடங்களில் உள்ள இந்தப் புதிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று தரிசிக்கு மாறும் நவீன பாரதம் உருவாகி வருவதைக் காணுமாறும் மக்களை நான் வேண்டிக்கொள்ளுவேன்." வெறும் பொருளா தாரத் திட்டங்களைப் பாரமார்த்திக ஸ்தலங்களாகக் கொள்ளுவது சரியா?

பதில்:

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பது கோட்பாடு. இக்கோட்பாட்டுக்கு விலக்காகப் புண்ணிய ஸ்தலங்களைத் தங்களுடைய பூலோக வாழ்க்கைக்குப் பயன்படும் ஸ்தலங்களாகச் செய்துவிட்டால் அது அவர்களுடைய அறிவின்மைக்கு எடுத்துக்காட்டாகும். மற்றும் பூலோக வாழ்க்கைக்குப் பயன்படும் செயல் ஒன்றைப் பாரமார்த்திகத்தோடு இணைத்து வைத்துவிட்டால் அது அறிவுடைய செயலாகும். இந்த இரண்டு கோட்பாடுகளையும் மனதில் வைத்துக்கொண்டால் செயல்களையெல்லாம் எப்பாங்கில் செய்தால் மேன்மையுண் டாகும் என்பது நன்கு விளங்கும். கடவுள் வழிபாட்டுக்கென்றே தேவாலயங்களும், புண்ணிய ஸ்தலங்களும் அமைந்திருக்கின்றன. அத்தகைய இடங்களைச் சிலர் வியாபார ஸ்தலங்களாக மாற்றி விடுகின்றனர். அது பாராட்டத்தக்க செயல் அன்று. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். தேவாலயங்களில் சிலர் வியாபாரம் செய்து கொண்டிருந்ததை ஏசுநாதர் கண்டார். கையில் சவுக்கை எடுத்துக்கொண்டு அவர் அவர்களையெல்லாம் விரட்டி யோட்டினார். "என் பிதாவின் புனித ஸ்தலத்தை நீங்கள் வியாபார ஸ்தலமாக மாற்றிவிடவேண்டாம்" என்று அவர்

அவர்களை திரஸ்கரித்தார். புனிதமான இடத்தைக் கீழ்த்தரமான காரியத்துக்குப் பயன்படுத்தக்கூடாது என்பதற்கு இச்செயல் நல்லதொரு சான்று ஆகும்.

இந்திய மக்களாகிய நாம் எல்லாச் செயல்களையும் கடவுளோடு சம்பந்தப்படுத்தக் கற்றுவந்துள்ளோம். அதையே நாம் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம். கிருஷி செய்கின்ற ஒருவன் கடவுளுடைய அனுக்ரஹம் அதற்கு வேண்டுமென்று எண்ணிச்செய்கிறான். வாணிபம் செய்யும் ஒருவன் தன் செயலுக்கும் கடவுள் அனுக்ரஹம் வேண்டுமென்று பிரார்த்திக்கிறான். இவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தில் முதல் பகுதியைக் கடவுள் கைங்கரியத்துக்கென்று இவர்கள் முதலில் ஒதுக்கி வைக்கின்றனர். இத்தகைய மனப்பான்மை பாராட்டத் தக்கது. இவ்வுலக வாழ்க்கைக்குரிய செயல்களை இவர்கள் செய்து வருகிறார்கள் என்றாலும் இச்செயல்களை கடவுளுக்கு அர்ப்பணம் பண்ணுகின்ற முறையில் நிகழ்த்துவதால் இவர்களுக்கு மனபரிபாகம் உண்டாகிறது.

இப்பொழுது நம் நாட்டில் தோற்றுவித்துள்ள பொருளாதாரத் திட்டங்களெல்லாம் மக்களில் பெரும்பான்மையோருக்கு பயன்படவேண்டும் என்னும் எண்ணத்துடன் நிர்மாணிக்கப் பெற்று வருகின்றன. பல உயிர்களுக்கு எது ஆதரவைத் தருகின்றதோ அது பாராட்டத்தக்க செயல் ஆகும். பல உயிர்களை எது பேணுகின்றதோ அது பாராட்டத்தக்க செயல் ஆகும். உயிர்களைப் பேணுதல் கடவுள் வழிபாடு ஆகிறது. கணக்கற்ற பேர்களுக்கு உணவு அளிக்கும் செயலைச் சமாராதனை என்றும், மஹேஸ்வர பூஜை என்றும் பாராட்டி வருவது நம் நாட்டுப் பண்பாகும். இத்தகைய பொருளாதார ஸ்தாபனங்கள் எண்ணிறந்த உயிர்களை ஓம்புமானால், எண்ணிறந்த உயிர்களுக்கு உறுதியான வாழ்க்கையைத் தருமானால் இத்தகைய ஸ்தாபனங்களை தேவாலயங்கள் போன்று கருதுதலில் குற்றமில்லை. அவைகளைத் தேவாலயங்கள் போன்றே நாம் கருதிப் பழகவேண்டும். யாரோ ஒரு சிலருடைய சுயநலத்துக்காகவென்று இந்த ஸ்தாபனங்கள் அமைபவைகள் அல்ல. பலபேரின் நலத்துக்கென்றே இவைகள் அமைக்கப்பெறுகின்றன. அக்காரணத்தை முன்னிட்டும்

இவைகளைப் புண்ணிய ஸ்தலங்களோடு ஒப்பிடுவது முறையாகும்.

கேள்வி: *(857)* கடவுள் வழிபாடு மயமானது தமிழ்நாடு. கடவுள் வழிபாடு மூடநம்பிக்கை என்று கூறியவரைப் பெரியாராக ஏற்றுக்கொண்டது தமிழ்நாடு. அவர் வாழ்க்கையை ஆதாரமாகக்கொண்டு கடவுள் நம்பிக் கையைப் பழிக்கின்றார்களே! இதன் முடிவு என்ன?

பதில்: எல்லாவிதமான கொள்கைகளை உடைய மக்கள், உலகில் எக்காலத்திலும் வாழ்ந்திருப்பார்கள். ஒரே அச்சில் வார்த்தது போன்று ஒரேவிதக் கொள்கை சமுதாயமெங்கும் நிலைபெற்றிருப்பதை எப்பொழுதுமே காணமுடியாது. இனி, கடவுள் கட்புலனாகாத வஸ்து. கடவுளைப் பற்றிய விளக்கங் களோ எண்ணிக்கையில் அடங்கா. கடவுள் இருக்கிறார் என்று சொல்லுகிறவர்கள் தங்கள் கருத்துக்கேற்ற விளக்கங்களைத் தருகின்றனர். கடவுள் இல்லை என்று வாதிக்கிறவர்கள் அதற்கேற்ற விளக்கங்களை விரிவாகச் சொல்லுகின்றனர். பண்டைக்காலத்தில் ஈசுவரவாதம், நிரீசுவரவாதம், சூனியவாதம் ஆகியவைகள் நிலைபெற்றிருந்தன. அதே வாதங்கள் இன்றைக்கும் நிலைபெற்றிருப்பதைக் காண்கின்றோம். எதிர்காலத்திலும் இதேபாங்கில் அபிப்பிராய வேற்றுமைகள் இருந்துவரும்.

நிகழ்ச்சியொன்றை நம் விளக்கத்துக்குச் சான்றாக எடுத்துக் கொள்வோம். நவீனமுறையில் நன்றாகக் கல்வி கற்றுவந்த மாணாக்கனொருவன் சான்றோர் ஒருவரைச் சந்திக்கச் சென்றான். அவரோடு மாணாக்கன் காரசாரமாக வாதாடினான். கடவுள் என்ற வஸ்து ஒன்று இல்லவே இல்லை. அது வெறும் கற்பனை. சமுதாயத்தை ஏமாற்றி வருகின்றவர்களுடைய சூழ்ச்சியே ஈசுவரவாதம் என்னும் பெயர் பெறுகிறது. உலகிலுள்ள பொருள்களைக் கையாள முடிகிறது. உலகிலுள்ள உயிர்களோடு தொடர்பு வைக்கமுடிகிறது. தொடர்பு வைக்கமுடியாத புலி, சிங்கம் போன்ற துஷ்ட மிருகங்களைத் தக்க பாதுகாப்பில் இருந்துகொண்டு பார்க்கலாம். ஆனால் கடவுள் என்னும் பொருள் ஒன்று இருப்பதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. அந்த

மூடநம்பிக்கையைச் சமுதாயத்தினின்று விரட்டி ஓட்ட வேண்டும் என்று தன் கருத்தை விஸ்தரித்து முடித்தான். அவன் பேசி முடித்தவுடனே அந்த மாணாக்கனுடைய கன்னத்தில் சான்றோர் ஓங்கி அறைந்தார். "ஏன் என்னை அடிக்கிறீர்கள்?" என்று மாணாக்கன் தனது ஆட்சேபத்தைத் தெரிவித்தான். 'அடித்தால் என்ன?' என்று சான்றோர் கேட்டார். 'வலிக்கிறது' என்று மாணாக்கன் விடைவிடுத்தான். 'வலியைக் காட்டு பார்க்கலாம்' என்று சான்றோர் கேட்டார். 'அதை எப்படிக் காட்டமுடியும்' என்று மாணாக்கன் மறுமொழி கூறினான். 'மாணவா, உன் அனுபவத்திலிருக்கிற வலியைக் காட்ட உன்னால் இயலவில்லை. மனம், மொழிக்கு எட்டாத பொருளை மொழியால் எப்படி விளக்குவது?' என்று சான்றோர் கூறினார். 'மனம் மொழிக்கு எட்டாதது சூனியந்தானே?' என்றான் மாணாக்கன். 'சவம் ஒன்று கிடக்கிறது. அதற்குப் பக்கத்தில் போரில் காயமானவன் மயங்கிக் கிடக்கிறான். இரண்டுக்கும் வித்தியாசம் எப்படிக் கண்டுபிடிப்பாய்?' என்று சான்றோர் கேட்டார். 'சவம் மூச்சு விடாது. மயங்கி இருப்பவன் மூச்சு விடுவான். உயிர் இருப்பதின் அறிகுறிகள் அவன் முகத்தில் தென்படும்' என்றான் மாணாக்கன். 'நீ இப்பொழுது உயிரோடு இருக்கிறாயா? செத்துப் போய்விட்டாயா?' என்று சான்றோர் கேட்டார். 'நான் உயிரோடு இருக்கிறேன்' என்றான் மாணாக்கன். 'உன் உயிரைக் காட்டமுடியுமா?' என்றார் சான்றோர். 'காட்டமுடியாது' என்று பதில் கொடுத்தான் மாணாக்கன். 'கட்புலனாகாத சூனியந்தானே' என்றார் சான்றோர். 'கட்புலனாகாதிருந்தாலும் உயிர் இருப்பதை நாம் உணர்கின்றோம்' என்றான் மாணாக்கன். 'நீ அறிவு படைத்துள்ளவன் தானே' என்று சான்றோர் கேட்டார். 'ஆம்' என மாணாக்கன் விடை கொடுத்தான். 'அந்த அறிவை எனக்குக் காட்டித்தர முடியுமா?' என்று கேட்டார் பெரியவர். 'முடியாது' என்றான் மாணாக்கன். 'நீ இன்ப சொரூபந்தானே' என்று சான்றோர் கேட்டார். 'ஆம், ஆனந்தம் எனக்குச் சொந்தம்' என்றான் மாணாக்கன். 'அந்த ஆனந்தத்தை எனக்குக் காட்டுவாயா?' என்று பெரியவர் கேட்டார். 'அது சாத்தியமன்று' என்றான் மாணாக்கன். 'நீ உயிர் சொருபம். ஆனால் உன் உயிரைக் காட்ட உனக்கு இயலவில்லை. நீ அறிவு சொரூபம்.

ஆனால் அந்த அறிவைக் காட்ட உனக்கு இயலவில்லை. நீ ஆனந்த சொரூபம். அதையும் காட்ட இயலவில்லை. உன்னிடத்தி லேயே உன் உயிர்க்குயிராய், அறிவுக்கறிவாய், ஆனந்தத்திற்கு இருப்பிடமாய் உள்ளத்தினுள் ஒளிர்ந்து கொண்டிருப்பது கடவுள். அதை மறுக்க உன்னால் முடியுமா?' என்று பெரியவர் கேட்டார். 'இது சிந்தனைக்குரிய விஷயம். மறுக்க முடியாது' என்றான் மாணாக்கன். 'ஆழ்ந்து சிந்தித்துப் பார். அழிந்துபட்டுப் போகும் உடலுக்குள்ளே அழியாத ஆத்மசொரூபம் இருக்கிறது. அதற்கு மரணமில்லை. அது பேரறிவு சொரூபம்; பேரானந்த சொரூபம். உன் உள்ளத்தினுள் இருக்கின்ற அப்பெரிய பொருளை நீ சுட்டிக்காட்ட முடியாது. ஆயினும் அதன் சந்நிதான விசேஷத்தில் நீ உன்னுடைய ஜீவ வியக்தியைப் பெற்றுள்ளாய்' என்றார் சான்றோர். 'இக்கோட்பாட்டை மேலும் மேலும் நான் எண்ணிப் பார்க்கிறேன்' என்றான் மாணாக்கன். 'ஆம், அதுதான் முறை. கடவுள் இல்லை என்று வாதாடாதே. கடவுள் என்னும் மெய்ப்பொருள்தான் இப்பிரபஞ்சத்திலுள்ள இத்தனையுமாய் இலங்கிக்கொண்டிருக்கிறது என்பதைச் சாதனங்கள் புரிந்து நீ அனுபூதியில் அறிந்துகொள்வாயாக' என்றார் சான்றோர். 'எனக்கு இப்பொழுது நல்லறிவு வந்துள்ளது. இந்த மெய்ப்பொருள் ஆராய்ச்சியை இனி நான் முறையாகச் செய்து வருகிறேன்'. என்றான் மாணாக்கன். அன்று முதல் அவன் வாழ்க்கையில் மேலாம் திருப்பம் ஒன்று உண்டாயிற்று. கடவுள் இல்லை என்று வாதாடுகிறவர்கள் சூரியன் இல்லை என்று சொல்லுகிற பிறவிக் குருடர்களுக்கு நிகர் என்ற முடிவுக்கு அந்த மாணாக்கன் வந்தான்.

தத்துவ விசாரம் முறையாகச் செய்கிறவர்களுக்குப் பர வஸ்துவைப் பற்றிய விவேகம் தெற்றென உண்டாகிறது. கடவுள் என்னும் மூர்த்தி நம் போன்று வடிவம் தாங்கி எங்கேயோ மறைந்து உட்கார்ந்திருப்பவர் அல்லர். இத்தனை வடிவங்களில் இலங்குபவர் கடவுள். இந்த வடிவங்களையெல்லாம் கடந்தும் இருக்கிறார். வடிவங்களில் உள்ளும் இருக்கிறார். ஆதலால் அவருக்குக் கடவுள் என்னும் பெயர் வந்துள்ளது. சாதனையின் விளைவாக ஞானக்கண் அமையப் பெறுகிறவர்கள் யாண்டு முள்ள ஒரு பொருளே அனந்தங்கோடி வடிவெடுத்து

விளையாடுகிறது என்ற உண்மையை அறிய வருகின்றனர். அமைதியாகச் சாதனம் புரிவது நம் கடமை. வீண் விவாதத்தால் நாம் எதையும் பெறமுடியாது. அறிவுத்தெளிவு உண்டாகிற பொழுது பரம்பொருளைப் பற்றிய உண்மை தானாக விளங்குகிறது.

பூர்வகாலத்தில் வாழ்ந்திருந்த காட்டுமிராண்டித்தனம் நிறைந்திருந்த மக்களுக்கிடையில் கடவுள் நம்பிக்கை உண்டாயிற்று. ஒவ்வொரு கூட்டத்தாரும் தாங்கள் நம்பி வந்த தெய்வத்தைத் தங்கள் குலதெய்வம் என்று பாராட்டினர். மக்களுக்கிடையில் சண்டை சச்சரவு கிளம்புவது போன்று இந்தத் தெய்வங்களுக்கிடையிலும் இடையிடையே சண்டை சச்சரவுகள் கிளம்பின வென்று அன்னவர் கற்பனை பண்ணினர். வலிவுபடைத்த மக்களுடைய தெய்வம் வலிவில் மேலோங்கியிருந்தது. வலிவற்ற சமுதாயத்தார் கற்பனைபண்ணிய தெய்வம் சண்டையில் தோல்வியுற்றது. இங்ஙனம் மக்களுக்கிடையிலுள்ள பிணக்குகளைத் தெய்வங்களுக்கிடையிலும் பூர்வீக மக்கள் புகுத்தினர். அது அவர்களுடைய அறியாமைக்கு அறிகுறியாகும். அத்தகைய மனப்பான்மை படைத்திருக்கிற மக்களை இக்காலத்திலும் காணலாம். தெய்வங்களை அவர்கள் வலிவு வாய்ந்த வியக்திகளாகக் கற்பனை பண்ணினர். அன்னவர் எக்காலத்திலும் தம் தெய்வம் பெரியது; மற்றவர்களுடைய தெய்வம் சிறியது என்னும் எண்ணத்தில் ஊறி இருப்பார்கள். அந்த எண்ணம் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. பரவஸ்துவானது பஞ்சேந்திரியங்களுக்கு எட்டாதது. மனம், மொழிக்கு எட்டாதது. ஆயினும் அண்டகோடிகளுக்கும், ஜீவ கோடிகளுக்கும் ஆதாரமாயிருப்பது அதுவே. இக்கோட்பாட்டை மக்களுக்குப் படிப்படியாகப் புகட்டுவது அறிஞர்களின் கடமையாகும்.

***கேள்வி: (858)* ஒரு சிலர்க்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. அத்தகையவர்களுக்கு மனச்சோர்வு உண்டாகிறது. அந்தச் சோர்வை அகற்றுவது எப்படி?**

பதில்: கடவுள் நம்பிக்கை படைத்திருக்கிறவர்களுக்கு மனச்சோர்வு வந்தால் அந்தச் சோர்வை அகற்றுவதற்குப் பரமனிடத்துப் பிரார்த்தனை பண்ணவேண்டும் என்று

சொல்கிறோம். பிரார்த்தனை பண்ணிப் பலபேர் தங்களுடைய குறைகளையும், கவலைகளையும் அகற்றி வருகிறார்கள். கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் விசாரித்துப் பார்த்துத் தங்களுடைய குறைகளையும், கவலைகளையும் அகற்றிக்கொள்ளலாம். மனித னொருவனுக்குப் பணம் இல்லை என்னும் மனக்குறைவு உண்டாகிறது. பாடுபட்டால்தான் பணம் கிடைக்கும் என்னும் 'கோட்பாடு எல்லோர்க்கும் பொதுவானது. நேர்மையாக உழைத்துப் பணம் தேடவேண்டும். அது முதல் பாடம். கிடைத்த வருவாயைக்கொண்டு திருப்தியடையவேண்டும், வருவாய்க்கேற்றவாறே செலவு பண்ணவேண்டும். இது இரண்டாவது பாடம். ஆகக் குறைநிலையை உழைப்பாலும் நல்ல மனப்பான்மையினாலும் நீக்கலாம்.

மனக்கவலைக்குக் காரணம் அறியாமை. உற்றார், உறவினர் தன்னைப் புறக்கணித்துவிட்டார்கள் என்னும் கவலை ஒருவ னுக்கு வரக்கூடும். ஏன் புறக்கணித்தார்கள் என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். தன்னிடத்துள்ள பொருந்தாத போக்கைத் தானே திருத்தியமைக்கவேண்டும். புறக்கணித்தவர்களிடத்திலும் அவன் பெருந்தன்மையோடு நடந்து கொள்ளவேண்டும். இப் படிச் செய்வதால் தன்னை அலட்சியப்படுத்தியவர்கள் தாங்களே நல்வழிக்கு வருவார்கள்.

ஆக, கடவுள் நம்பிக்கையில்லாதவர்களும் நல்லறிவைக் கொண்டும், நல்லொழுக்கத்தைக் கொண்டும் தங்களுடைய மனச்சோர்வை அகற்றமுடியும்.

கேள்வி: *(859)* திருப்பதி கோயிலில் முன்பு இருந்தது முருகன் என்றும் பின்பு அத்தெய்வம் திருமாலாக ஆக்கப்பட்டது என்றும் சிலர் சொல்கிறார்கள். இது உண்மையா?

பதில்: திருப்பதி தேவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்தைப்பற்றி மற்றுமோர் கொள்கை மக்களுக்கிடையில் இருந்து வருகிறது. ஆதியில் அந்த ஸ்தலத்தில் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருந்தது அன்னை பராசக்தியாம். கோயிலின் கர்ப்பக்கிருஹத்தின் உட்பகுதியில் கோபுரத்தின் நான்கு மூலை களிலும் சிம்மம் அமைக்கப்பெற்றிருப்பது அதற்குச் சான்று

ஆகிறது. வெள்ளிக்கிழமை தோறும் வாரத்திற்கு ஒருநாள்தான் மூர்த்திக்குத் தீர்த்தம் கொட்டி நீராட்டுவது மற்றொரு சான்றாக இருந்து வருகிறது. மூர்த்தியின் அமைப்பு எப்பொழுதுமே மூடிவைக்கப்பட்டிருக்கிறது. அதைச் சரியாக ஆராய்ச்சி செய்து பார்த்தால் மேலும் சான்றுகள் கிடைக்கக்கூடும். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சிஷ்யராகிய பிரமானந்த சுவாமிகள் தரிசனத் திற்காக எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் அந்தக் கோயிலி னுடைய பூர்வீக வரலாறு ஞானக்காட்சியாக அவருக்குத் தென்படும். தரிசனத்திற்காக அவர் திருப்பதிக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். கோயிலில் தரிசனம் பண்ணிய பிறகு வெளியே வந்து அவர், 'வெங்கடாசலபதியின் தரிசனத்திற்காக என்னை நீங்கள் இங்கே அழைத்து வந்திருக்கிறீர்கள். ஆனால் கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியை அம்பிகையாக நான் ஞானக்காட்சியில் கண்டேன்' என்றார். ஒருகாலத்தில் அது அம்பிகையின் ஆலயமாக இருந்ததற்கு இது சிறந்ததோர் பிரமாணமாகிறது.

வெங்கடாசலபதியைப் பலபேர் பாலாஜி என்று அழைக்கி றார்கள். அம்பிகையின் கோயிலாக இருந்தது நாளடைவில் பாலசுப்ரமணியர் கோயிலாக மாறியமைந்ததாக ஓர் ஐதிகம் இருந்து வருகிறது. பாலசுப்ரமணியத்தைப் பாலாஜி என்று வடக்கேயிருந்து வந்த யாத்திரைவாசிகள் பலர் பகர்ந்தார்கள். ஒருவேளை அந்தப் பாலாஜியை மீண்டும் விஷ்ணுவாகப் பிற்காலத்தில் வந்த பக்தர்கள் மாற்றியமைத்திருக்கலாம்.

ஒரு தெய்வத்தை மற்றொரு தெய்வமாக மாற்றியமைக்கும் செயல் இடையிடையே சில தேவாலயங்களில் நிகழ்ந்து வந்து கொண்டிருக்கிறது. பெயரை மாற்றியமைப்பதில் தோஷம் ஒன்றுமில்லை. வேண்டுமானால் மனிதன் தன் பெயரை மாற்றியமைத்துக் கொள்ளுகிறான். மெய்ப்பொருள் ஒன்று. அதை ஒரு காலத்தில் அம்பிகை என்றும், இன்னொரு காலத்தில் பாலமுருகன் என்றும், மற்றுமொரு காலத்தில் திருமால் என்றும் அழைப்பதில் சான்றோர்க்கு ஆக்ஷேபம் ஏதுமில்லை. எப்பெயரிட்டு அழைத்தாலும் மெய்ப்பொருளின் மகிமை குறைவதில்லை. இடையறா வழிபாட்டின் விளைவாக நெடுங்காலமாக அருள் செறிந்த ஸ்தலமாக அமைந்திருப்பது

திருப்பதி என்பதில் ஐயமில்லை. எனவே ஆங்கு எழுந்தருளி யிருக்கும் மூர்த்தியை எப்பெயரிட்டு அழைத்தாலும் அது வழிபாட்டுக்குரிய மூர்த்தி என்னும் கோட்பாடு யாண்டும் உறுதிபெற்றிருக்கிறது. தெய்வத்தின் பெயரை மாற்றுவது ஹிந்துமத் சம்பிரதாயத்துக்குப் புதியதன்று.

இஸ்லாமிய படையெடுப்பு முன்பு நிகழ்ந்தபொழுது சில கோயில்களில் விக்கிரகங்களை உடைத்துத் தள்ளினார்கள். நாளடைவில் அந்த விக்கிரகங்கள் புதுப்பிக்கப்பட்டன. ஆனால் அந்தந்த ஸ்தலங்களிலிருந்த அருள் நிலையைப் பாழ்படுத்த அவர்களுக்கு இயலவில்லை. கோயில்களில் இத்தகைய நாசகார செயல்கள் நிகழ்கின்ற இடத்தும் கோயில்களின் மகிமை அழிந்துபட்டுப் போகாதிருக்கிறது.

முன்பொரு காலத்தில் மதங்க மகரிஷியின் ஆச்ரமமாக இருந்தது இப்பொழுது ஐயப்பன் கோயிலாக இலங்குகிறது. நாஸ்திகர்கள் சிலர் தீ மூட்டி இதைப் பாழ்படுத்தினார்கள். ஆனால் இதன் அருள்நிலை இன்று பன்மடங்கு அதிகரித்து வருகிறது. இப்படிப் பலவிதங்களில் கோயில்களில் உள்ள தெய்வங்களின் பெயர் மாறுவதும் கோயிலே அழிக்கப்படுவதும் நிகழ்ந்து வருகின்றன. ஆயினும் ஆங்கு அருள்நிலை யாண்டும் வளர்ந்து வருகிறது.

கேள்வி: *(860)* வீட்டில் அனுமனை வைத்து வணங்க லாகாது என்பது சரியா?

பதில்: அனுமன் குரு தத்துவம். அவன் ஸ்ரீ ராமனுடைய பரம பக்தன். இலங்கை வேந்தனாகிய இராவணன் உட்பட அனுமன் சந்தித்தவர்கள் அனைவருக்கும் அவன் நலனே செய்து வந்துள்ளான். "நன்றுடையான் தீயதில்லான்" என்று அவனைப்பற்றிப் பகர்வது முற்றிலும் பொருந்தும். ஆற்றலில் அவன் தலைசிறந்தவன். தனக்கு வாய்த்துள்ள தெய்வீகக் கடமைகளையெல்லாம் இனிது நிறைவேற்றுகிறவன் ஆஞ்ச நேயன். அத்தகைய மூர்த்தியை வீட்டில் வைக்காவிட்டால் அதற்கு நிகரான மற்றொரு மூர்த்தியை எங்குத் தேடிக் கண்டுபிடிப்பது? எனவே, அனுமனைத் தாராளமாக வீட்டில் வைத்து வணங்கலாம்

கேள்வி: (861) மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி இயக்கம் வேகமாகப் பரவி வருகிறது. ஆத்ம சாதகர்கள் அவ்வியக் கத்தோடு எவ்விதத்தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும்?

பதில்: ஓர் இயக்கம் விவேகத்தையும் வைராக்கியத்தையும் வளர்க்குமானால் ஆத்மசாதகர்கள் அவ்வியக்கத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளலாம். விவேகத்தையும், வைராக்கியத் தையும் வளர்க்காது காமியப் பிரார்த்தனைக்கு இடம் தரும் இயக்கத்தோடு இணக்கம் வைப்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உண்மையான ஆன்ம வளர்ச்சி நிஷ்காமியத்தில்தான் அமைந்திருக்கிறது. காமிய வழிபாட்டுக்கும், காமியப் பிரார்த் தனைக்கும் இடம் தரும் இயக்கம் ஆன்மிக முன்னேற்றத் திற்கு உதவிபுரிந்தது ஆகாது.

மக்கள் காமியப் பிரார்த்தனை செய்வதில்தான் நாட்டம் உடையவர்களாக இருக்கிறார்கள். காமியப் பிரார்த்தனைக்கு இடம் தரும் இயக்கத்துக்கு ஏராளமான மக்கள் செல்வார்கள். அவ்வியக்கம் வேகமாகப் பரவிவருவது, சிற்சில சமயம் வீசி இயற்கையை அல்லோலப்படுத்தும் புயல்காற்றுப் போன்று சமயத்துறையில் சிற்சில சமயம் இத்தகைய இயக்கங்கள் தோன்றி ஆர்ப்பாட்டத்தை உண்டுபண்ணும். புயல்காற்று வீசும் பொழுது வலுவற்ற மரங்களெல்லாம் அதற்கு வசப்பட்டு அடியோடு பெயர்ந்து விழுந்துவிடும். புயல்காற்றில் விழாது தாக்குப்பிடிக்கும் மரங்கள் மேலும் உறுதிபெறுகின்றன. அங்ஙனம் இத்தகைய இயக்கங்கள் உண்டாக்கும் ஆர்ப்பாட்டத்தில் மன உறுதியற்றவர்கள் அவற்றிற்கு வசப்பட்டு விடுகின்றனர். மன உறுதியுடையவர்கள் அவற்றிற்கு வசப்படாது மனதுக்கு உறுதி தரும் விவேக வைராக்கியத்தை வளர்க்கும் சாதனையில் தீவிரமாக ஈடுபட்டு மென்மேலும் மனதை உறுதி உடையதாகவும், தூய்மை உடையதாகவும் ஆக்கிக்கொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு செயலிலும் நலம், கேடு ஆகிய இரண்டும் உண்டு. நாம் நலத்தை மட்டும் எடுத்துக்கொண்டு நமக்கு நலம் தராதவைகளை ஒதுக்கிவிடவேண்டும். காமியப் பிரார்த்தனை செய்வதற்கு யாரும் நமக்குச் சொல்லித்தர வேண்டியதில்லை. எனவே நாம் அதற்காக எந்த இயக்கத்தின் துணையையும் நாடவேண்டியதில்லை. பலபேர் ஒன்றுகூடிப் பகவானுடைய

நாமத்தைக் கூறுமிடத்து அருட்சக்தி ஏற்படுகிறது. பகவானிடத்தில் உலகப் பொருள்களை வேண்டுவது பகவானிடத்தில் பக்தியை வளர்ப்பதற்குப் பதிலாக உலகப்பற்றை வளர்க்கும். அதாவது குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்டு வந்ததற்கு நிகராக இறைவனைச் சந்திக்கப்போய் உலகப்பற்றை வளர்த்து வரக்கூடாது. காமியப் பிரார்த்தனைக்கு இடந்தருகின்ற நாம் உலகப்பற்றை வளர்க்கிறோம். மேல்மருவத்தூர் செல்லும் மக்கள் காமியப் பிரார்த்தனை செய்யும் நோக்கத்துடன்தான் செல் கிறார்கள். அங்குச் சென்று வந்தால் தங்களுடைய உலக ஆசை நிறைவேறுகின்ற திருப்தி அவர்களுக்கு ஏற்படுகிறது. தாங்கள் விரும்புகின்ற சொத்து, சுகம், மகப்பேறு ஆகியவற்றைக் கடவுளிடம் பிரார்த்திப்பது காமியப் பிரார்த்தனை எனப்படும். இக்காமியப் பிரார்த்தனை நிறைவேறுமிடமாக மேல்மருவத்தூர் இருந்து வருகிறது. அங்குச் செல்கின்ற மக்கள் இந்த நோக்கத் துடன் செல்கின்ற வரையில் ஆத்ம சாதகர்கள் பக்திப்பேரியக்கம் என்று அதைக் கருதவேண்டியதில்லை. ஆங்குப் போகவேண்டிய நிலை ஏற்பட்டால் ஆங்குச் சிறிது நேரம் ஆழ்ந்து தியானம் செய்துவிட்டு வரலாம். மக்களிடத்தில் தெய்வ நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற நல்ல காரியம் அதன் மூலம் நிகழ்கிறது. அந்த அளவுக்கு அந்த இயக்கத்துக்கு நாம் மதிப்புதரலாம். தெய்வ நம்பிக்கை உடையவர் தெய்வத்தினிடத்தில் உண்மையான பக்தியை வளர்ப்பதற்கு அவ்வியக்கம் துணை செய்கிறது என்று கூறமுடியாது.

கேள்வி: *(862)* "பழைய கொள்கைகள் யாவுமே பெரு நெறிகள் ஆகமாட்டா; புதிய கொள்கைகளிலும் புனிதம் பொலிவதுண்டு." என்ற தர்ம சக்கர அருள்விருந்து கருத்தைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

பதில்: பழைய கொள்கைப்படி மாது ஒருத்தி தன் கணவனைத் தெய்வமாகக் கருதி அவனை வழிபடக் கடமைப் பட்டிருக்கிறாள். ஆனால் அம்மனிதனோ அவள் படைத்துள்ள மனப்பான்மையைத் தானும் பெறாதிருப்பது அவனுக்கு இழுக்கா காது. அவன் மறுமணம் புரிந்து கொள்ளலாம்; மாது ஒருத்தி அங்ஙனம் செய்யலாகாது.

இனி, புதிய ஏற்பாட்டின்படியோ ஸ்ரீராமகிருஷ்ணர் மணந்துகொண்டவளை மனைவியாகக் கருதவில்லை; அன்னை பராசக்தியின் சொரூபமாகவே கருதினார். அங்ஙனம் கருதியது மட்டுமன்றி அந்த வடிவத்தின் வாயிலாகத் தாம் வழிபட்ட தெய்வமாகிய அன்னை பராசக்திக்கு முறைப்படி ஆராதனை செலுத்தினார். எனவே பழைய போக்கில் ஒரு சார்பில் இருந்த மேலாம் மனப்பான்மை இந்தப் புதிய ஏற்பாட்டின்படி இரு சார்பாருக்கும் பொதுவாகிறது. அந்த அளவில் இப்புதியது பழையதைவிட மேலானது என்பது வெளிப்படை.

பழைய கொள்கையின்படி கற்புடைய மாது ஒருத்தி தன் கணவனை இழக்குங்கால் தானும் உடன்கட்டை ஏறுவது பாராட்டத்தக்க பெரிய செயலாகக் கருதப்பட்டது. அப்படிச் செய்ய இயலாத விதவைகள் மொட்டையடித்துக்கொண்டும், மேனியை விகாரப்படுத்திக்கொண்டும் தௌர்பாக்கியத்துக்குச் சின்னமாக வாழ்வை ஏதோ ஒருபாங்கில் கழித்துவந்தார்கள். பரமஹம்சதேவரின் கோட்பாட்டின்படி இது பொருந்தாத செயலாகும். இதுகாறும் மானுடன் ஒருவனுக்கு உட்பட்டிருந்த பெண்பால் இனித் தெய்வத்துக்கு உட்பட்டவளாக வேண்டும் என்றும் மேலான சமுதாய சேவைகள் பல செய்தல் முறைமை என்றும் வழிவகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இக்கோட்பாட்டின்படி மாது ஒருத்தி கைம்பெண்ணாவது தௌர்பாக்கியமன்று. புதிய சௌபாக்கியம் அதில் அவளுக்கு வடிவெடுக்கிறது. சுபகாரியங்களில் அன்னவள் கலந்து கொள்ளுவது அமங்கல்யம் ஆகாது. அவள் வாழ்ந்துவரும் புதிய மேலான வாழ்வே அதற்குப் பிரமாணமாக அமைகிறது. இந்த அருள் விருந்துக்கு இப்புதிய வாழ்க்கை முறைகள் இரண்டும் எடுத்துக்காட்டுகள் ஆகின்றன.

கேள்வி: *(863)* நம்நாட்டில் காணப்படும் வறுமையே கடவுள் வழிபாட்டுக்குக் காரணம் என்பது உண்மையா?

பதில்: வறுமை நோயில் வருந்துகிறவர்கள் அதை அகற்றி அருளவேண்டுமென்று இறைவனிடத்துப் பிரார்த்தனை பண்ணுவது ஒரு சிலருடைய இயல்பாகிறது. ஆனால் வறியவர்கள் எல்லோரும் அதைக்குறித்து இறைவனிடம் பிரார்த்தனை பண்ணுகிறார்கள் என்று கருதுவது பொருந்தாது. வறியர்களில்

பலபேர்க்குக் கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணத்தெரியாது. இன்னும் சிலர் கொடையாளர்களிடம் சென்று கெஞ்சிக் கேட்கின்றார்கள். அவர்கள் கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணுவது இல்லை. இனிக் கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணுகிறவர்களில் தலையாய நிலையில் இருப்பவர்கள் பக்தர்களும் ஞானிகளுமேயாம். இங்ஙனம் பக்தியிலும் ஞானத்திலும் பண்பாடு அடைந்திருக்கிறவர்களுக்கு வறுமை என்பது என்னவென்று தெரியாது. அவர்கள் யாண்டும் நிறைமனது படைத்தவர்களாக இருக்கிறார்கள். பட்டினிகிடந்து சாவதாக இருந்தாலும் அது அன்னவர்கள் உள்ளத்தில் புகுவதில்லை. மேலாம் வழிபாட்டுக்கு அவர்களே தலைசிறந்த சான்றுகளாகின்றனர். ஆதலால் கடவுள் வழிபாட்டுக்கும் பொருளாதார வறுமைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென்பது தேற்றம்.

ஒரு விழா என்றால் பல்லாயிரக்கணக்கான பேர் பங்கு கொள்கின்றனர். அவரவர் தரத்துக்கேற்ற பிரகாரம் அத்தகைய விழாக்களில் பணச்செலவும் செய்கின்றனர். அதினின்றே கடவுள் வழிபாட்டுக்கு முகாமை வறுமை அல்ல என்பது வெளியாகிறது. திருப்பதி போன்ற கோயில்களில் திரவியம் ஏராளமாக வந்து குவிகின்றது. பக்திபூர்வமாகப் பணத்தைக் காணிக்கையாக அவர்கள் செலுத்துகின்றனர். அப்படிச் செலுத்துவதைத் தியாகம் என்று சொல்லவேண்டுமேயொழிய வறுமையோடு இணைக்க முடியாது.

மேன்மையுறுவது மானுட ஜன்மத்தின் குறிக்கோள் என்பதை விவேகிகள் அறியவருகின்றனர். ஜன்மத்தை மேன்மைப் படுத்துவதற்கு உற்ற உபாயமாக இருப்பது கடவுள் வழிபாடாம். ஆதலால் நம் நாட்டில் கடவுள் வழிபாட்டுக்கு முதற்காரணமாய் இருப்பது மானுட ஜன்மம் சாபல்யமாவதன் பொருட்டேயாம்.

கேள்வி: *(864)* பொருந்தாத காம விகாரம் படைத்தவர்கள் கடவுளை அடையமுடியுமா?

பதில்: மக்கள் எல்லோரும் கடவுளை அடைய முடியும். அப்படி அடைதற்கான நிபந்தனையை நிறைவேற்ற ஆத்ம சாதகன் ஒவ்வொருவனும் கடமைப்பட்டிருக்கிறான். காமவிகாரம் என்பது மனதின் பண்பாடடையாத கீழான பாங்காம். காம

விகாரம் தன்னளவில் கேடுடையதன்று. காம நோய்க்கு உட்படா தவனே மக்களுள் தலைசிறந்தவனாகிறான். மற்று மக்களுள் பெரும்பான்மையோர் காமவெறிக்கு அடிமைப்பட்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். முயற்சியின் வாயிலாகக் கீழான இயல்பு களை மேலான இயல்புகளாக மாற்றிக்கொள்ளுவது மனிதனுக்குச் சாத்தியம். இதையொட்டிய கோட்பாடு ஒன்றைப் பௌதிக விஞ்ஞானத்தினின்று மனிதன் கற்றுக்கொள்ளவேண்டும். ஒரு நிலையிலுள்ள விசையை மற்றொரு நிலைக்கு மாற்றுவது விஞ்ஞானத்தின் செயல். மின்சக்தி என்னும் விசையை வெப்ப மாகவும், வெளிச்சமாகவும், ஓசையாகவும் மாற்றுவது நாம் அனைவரும் அறிந்துள்ள விஷயமாகும். அதேவிதத்தில் மனிதன் தன்னிடத்துள்ள காமம், குரோதமாகிய கீழான இயல்புகளைத் தெய்வீகம் நிறைந்த மேலான இயல்புகளாக மாற்றியதற்கு எடுத்துக்காட்டாகச் சான்றோர்களின் ஜீவிதங்கள் அமைந்திருக் கின்றன. அருணகிரிநாதர் ஆரம்பதசையில் காமவெறி பிடித்தவராக இருந்தார். பக்தியின் வாயிலாக அதைத் தெய்வப் பெற்றியாக மாற்றுவது அவருக்குச் சாத்தியமாயிற்று.

'எங்கு ராமன் இருக்கின்றானோ அங்குக் காமன் இல்லை' என்பது பரமஹம்சர் வாக்கு. நல்ல மகன் ஒருவன் தாய் தந்தையர் முன்னிலைக்குப் போகின்றபொழுது அவனுடைய கீழான இயல்புகள் மிக எளிதில் பின்னணிக்குப் போகின்றன. அதேவிதத்தில் கடவுள் பக்தியைத் தன் உள்ளத்தில் ஓங்குவிப் பதற்கு ஏற்பக் காமநோய் தானே தணிகிறது. எனவே உள்ளன்போடு கடவுள் பக்தி பண்ணுவது ஒன்றினாலேயே காமவிகாரத்தைப் பொருத்தமான அருள்நாட்டமாக மாற்றுவது சாத்தியம்.

கேள்வி: *(865)* ஏழை மக்கள் இருக்கும்போது நகை களை விக்கிரகங்களுக்குத் தருவது சரியான செயலா?

பதில்: காலமெல்லாம் எல்லாச் சமுதாயங்களிலும் ஏழை மக்கள் இருப்பது இயற்கையின் பாங்கு. ஏழ்மை உண்மையில் குறைபட்ட மனதினின்று உருவெடுக்கிறது. பொருள்மிகப் படைத்திருப்பதற்கிடையில் மன அமைப்பில் பரம ஏழைகளாக இருப்பவர்களை எல்லாச் சமுதாயங்களிலும் காணலாம். எனவே

உலகம் இருக்கும் வரையில் உலக மக்களுக்கிடையில் உடைமையும், வறுமையும் பக்கம் பக்கம் அமைந்திருப்பது இயற்கையின் கூறு.

நல்ல அரசாங்கம் பொருளாதாரத் துறையில் கீழ்நிலையிலுள்ள ஏழை மக்களுடைய ஏழ்மையை அகற்றி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறது. மக்கள் எல்லோரும் சமுதாய நலனுக்காக உழைத்தே ஆகவேண்டும் என்னும் கோட்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவரலாம். ஏழை மக்களுக்கு ஏற்ற தொழில்களைக் கொடுத்து அவர்களுக்குத் தாராளமாகக் கூலியும், சம்பளமும் கொடுக்கலாம். அவர்கள் சம்பாதித்த பணத்தின் பெரும் பகுதியை உணவிலும், உடையிலும், குடியிருக்கும் வீட்டு அமைப்பிலும் முறையாகச் செலவு செய்யும்படித் திட்டம் வகுப்பது உசிதம். சமுதாயத்திலிருக்கும் மக்கள் எல்லோர்க்கும் போதிய அளவு உணவு, உடை, வீடு முதலியன அமையும்படி செய்தல் வேண்டும். இதற்குமேல் மனதிலுள்ள வறுமையை அகற்ற யாருக்குமே இயலாது. நல்லறிவின் விளைவாகவே மனத்துக்கண் உள்ள ஏழ்மை தானாக அகன்று போகிறது.

நகைகளை அவரவர் விருப்பத்துக்கும் உழைப்புக்கும் ஏற்ப அவரவரே தேடிக்கொள்ளும்படி விட்டுவிடவேண்டும். நகையைத் தானம் பண்ணுவதால் சமுதாயத்தில் நலம் மிக வாய்த்துவிடாது. விலையுயர்ந்த ரத்தினங்களும் பொன்னும் மனிதனுக்குக் கிடைக்கின்றன. அவைகளைத் தாங்களே வைத்து அனுபவிப்பதைவிடக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளை அலங்கரித்து ரசிப்பது மேலானது. நகைகளைத் தாங்களே அணிந்துகொண்டு இன்புற்றிருக்கும் பாங்கு மக்களுக்கிடையில் உண்டு. இதை இரண்டாந்தரமான பாங்கு என்றே நாம் பொருள்படுத்தவேண்டும். தெய்வத்துக்கு நகைகள் தேவையில்லை. மக்களுடைய திருப்திக்காகத் தெய்வங்களின் விக்கிரகங்களை அலங்கரிப்பதில் தோஷமில்லை. வெறும் பொருட்காட்சியில் ரத்தினங்களை வைத்து மக்களுக்குக் காட்டுவதைவிடக் கோயிலில் தெய்வத்தை அலங்கரித்துக் காட்டுவது மேலானது. நல்ல மனப்பான்மையும் மக்களின் நல்வாழ்வுமே சமுதாயத்தின் நோக்கங்களாக இருந்து வரவேண்டும். ✯

ஒரு கையைக் கொண்டு உலகக் கிருத்தியங்களைச் செய்யுங்கள். அடுத்த கையில் இறைவனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். உலகக் கிருத்தியங்கள் முற்றுப்பெற்றான பிறகு இரு கரங்களையும் கொண்டு இறைவனைப் பற்றிப் பிடித்துக்கொள்ளலாம்.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

தர்ம சக்கரம்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவன
திங்கள் வெளியீடு

அறிவு வளர்ச்சிக்கு – ஆன்மீக முன்னேற்றத்திற்கு – இல்லற வாழ்விற்கு இணையற்ற பொக்கிஷம். பல அனுபவ ஆராயச்சக் கட்டுரைகள், ஆன்றோர் அறிவுரைகள் அனைத்தும் தாங்கி 1952 ஜனவரி முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆன்மீகக் கருத்துக்களில் தெளிவுபெற தர்ம சக்கரம் சந்தா தாரராகச் சேர்ந்து பயன்பெறுங்கள்.

